உ

சிவமயம்

# சிவநெறிப்பிரகாசம்

ஸ்ரீ நந்திசிவாக்கிரயோகிகள் உரையுடன்

திருவாவடுதுறை ஆதீனம்

1968

உ

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துப்

பிரதம பரமாசாரியர்

ஸ்ரீ பஞ்சாக்கரதேசிகமூர்த்திகள்

# மகரத்தலைநாட்குருபூஜை விழாமலர்

பிலவங்க - தை - உஉ அசுபதி

5—2—1968

வெளியீடு எண் 233.

உ

சிவமயம்

ஸ்ரீ வீழிச் சிவாக்கிரயோகிகள்

அருளிச்செய்த

# சிவநெறிப்பிரகாசம்

ஸ்ரீ நந்திசிவாக்கிரயோகிகள் உரையுடன்

இது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரியசுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம்

1968

உரிமை பதிவு

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை. —

# இப்புத்தகத்தில் அடங்கியவை


| | பக்க எண் |
|---|---|
| முகவுரை | எ |
| நூலாசிரியர் வரலாறு | கரு |
| இந்நூற்பொருளின் அட்டவணை | உஉ |
| தத்துவ விளக்க அட்டவணை | உஎ |
| சிவநெறிப்பிரகாசம் மூலமும் உரையும் | 1 |
| பாட்டு முதற்குறிப்பு அகராதி | 181 |
| சைவபரிபாஷை அகராதி | 183 |
| சைவபரிபாஷைச் சொற்பொருளகராதி | 189 |
| அருஞ்சொல் அகராதி | 200 |
| தருக்கச்சொல் அகராதி | 208 |
| அருஞ்சொற்களும் சொற்றொடர்களும் | 213 |

உ

சிவமயம்

# குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.



ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்

சிவமயம்

# முகவுரை

"திருமாலிந் திரன்பிரம னுபமனியன்
தபனனந்தி செவ்வே ளாதித்
தருமமுது குரவருக்குந் தனதருளா
லாசிரியத் தலைமை நல்கி
வருமெவர்க்கு முதற்குருவாய் மெய்ஞ்ஞான
முத்திரைக்கைம் மலரும் வாய்ந்த
உருவழகுங் குறுநகையுங் காட்டியருள்
தருஞ்சிவனை யுளத்தில் வைப்பாம்"

சிவநெறிப்பிரகாசம் என்பது சைவசித்தாந்த நூல்களுள் ஒன்று. இதனை அருளிச்செய்தவர்கள் சூரியனார்கோயில் ஆதீனத்து இரண்டாவது குருமகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீ சிவாக்கிரயோகிகளாவார்கள். இந்நூல் 215-திருவிருத்தங்களையுடையது. இதற்கு உரைவரைந்தார் ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் மாணவர்களிற் சிறந்த ஸ்ரீ நந்தி சிவாக்கிரயோகிகள். இவர்கள் நேரே ஆசிரியர் அநுக்கிரகம்பெற்றவர்களாகலின் இந்நூலுக்கு உரைவரைதல் எளிதாயிற்று. இவ்வுரையின்றேல் இக்காலத்திலே இவ்வளவு விளக்கமாகச் சிறந்த உரை எழுதுதல் இயலாததொன்றாம். இவர்கள் வரைந்த உரையிலே 'வைதிக சைவ சுத்தாத்வைதம்' 'வைதிகசைவ சித்தாந்தாத்வைத முத்தி' 'சைவசித்தாந்தம்' என்னும் சொற்றொடர்கள் காணப்படுகின்றன. நூல் வரலாறு சொல்லத்தொடங்கிய உரையாசிரியர் அதன் இறுதியில் 'சிவாகமங்களிற் சாரமாயிருக்கிற வைதிக சைவசித்தாந்தாத்துவயப் பிரதிபாதகமாய்த் திராவிடரூபமாய்ச் சிவநெறிப்பிரகாசம் என்னும் சாத்திரத்தை உபதேசித்தார் எனக் கூறியுள்ளமை காண்க. ஆகலின், இந்நூல் சித்தாந்த சைவ நூல்களில் ஒன்றென்பதில் ஐயமின்று. உரையாசிரியர் 'முக்கியாத்துவிதம்' தம் சந்தானத்தில் உபதேசிக்கப்பட்டதெனக் கூறுவதால் சுத்தாத்வைத சித்தாந்தத்தின் வேறோ இஃது எனக் கொள்ளற்க; இது சித்தாந்த சைவ நூலேயாம் என்பது உறுதி.

இனி, சிவநெறிப்பிரகாசம் என்னும் தொடர்மொழி சிவப்பேற்றினை அடைதற்குச் சாதனமாகிய வழியை விளக்கமாகக் கூறுவது எனப் பொருள் படும். இவ்வுரைகாரர் 'சிவநெறிப்பிரகாசம் என்றது சிவானுபவ மார்க்கத்தைப் பிரகாசிப்பிக்கையால் சிவநெறிப்பிரகாசம்; அஃதன்றியும், சிவநெறிப்

பிரகாச சிவாசாரியராகிய பரமகுருவின் திருநாமத்தாலும் சொல்லப்பட்டது (செய் - 12) என்றருளினர். இந்நூலிலே குருவணக்கம் கூறவந்த ஆசிரியர் பரமேஷ்டிகுரு, பரமகுரு, சொகுரு ஆகியோரை 8-வது செய்யுளில் கூறினர். அவர் சதாசிவதேசிகனுர், சிவநெறித்தேசிகனுர், சிவக்கொழுந்து சிவாசாரியர்களைத் துதித்தார். அதனுடைமையாது 9-ஆம் செய்யுளில் தனியே தமக்குத் திருவடி சூட்டி ஆட்கொண்ட ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகரைத் துதித்துள்ளார்: (ஸ்வகுரு - சொகுரு = தமது ஞானுசாரியர்).

ஸ்ரீ சிவாக்கிர யோகீந்திர சிவாசாரியர் எடுத்துக்கொண்ட பொருள் இடையூறுதீர்ந்து இனிது முடிதற்பொருட்டும், இந்நூல் நின்று நிலவுதற்பொருட்டும் முதற்கண் விநாயகர்துதி செய்தனர். அதன்பின் ஸ்ரீ நடராசர் ஸ்ரீ சிவகாமசவுந்தரி துதிகளையும்; மேல் தமது சந்தானகுரவ தெய்வமான குமரக்கடவுள் துதியையும் செய்தார். ஸ்கந்தபரம்பரையாகலின், அதனையடுத்துத் திருநந்திதேவர், வாமதேவர், சைவாசாரியர், சமயாசாரியர் வணக்கம் செய்த பின்பே குருவணக்கம் கூறுவாராயினர். சதாசிவ சந்தானத்துக்கு ஆதிகுரவர் வாமதேவராகலின் ஒரு செய்யுளால் அவரைத் துதித்துப் பின்பு சந்நியாசம் வானப்பிரத்தம் கிருகத்தம் பிரமசரியம் என்னும் நால்வகை நிலைகளுக்கும் முறையே துருவாசர், அகத்தியர், கவுதமர், ததீசி என்பவர்கள் முதன்மைபெற்ற ஆசிரியர்கள் ஆயினமையின் அந்நால்வரையும்; திருஞானசம்பந்தர், அப்பர்தம்பிரானுர், சுந்தரப்பெருமாள்நாயனுர் ஆகிய தேவார முதலிகள் மூவரையும் மற்றுமுள்ள சிவனடியார்களையும் ஒரு செய்யுளால் துதித்தருளினர்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் சீகண்டபரம்பரைத் திருநந்திமரபு ஸ்ரீ மெய்கண்ட சந்தானம் ஆகலின், தமது ஆதீனம் ஸ்கந்தபரம்பரை வாமதேவசந்தானம் பற்றிக் குருவணக்கம் செய்தருளினர் இவ்வாசிரியர். 'சீகண்டவுருத்திரநாயனுர் அறுமுகக்கடவுளுக்குச் சர்வஞானேத்தரத்தின் ஞானபாதம் செவியறிவுறுத்தருளினுர்.' 'இன்னும், மதமும் மறப்புமாகவைத்து ஓதப்படும் பௌட்கரம்; மதங்கம், மிருகேந்திரம் முதலிய சிவாகமங்கட்குச் சுபக்கம் பொதுவகையாற் கூறிவைத்துப் பலவாற்றானும் பரபக்கங்களை மறுப்பது மாத்திரையே கருத்து என்பதூஉம், அவ்வாகமங்களானே பரபக்கங்களில் உளவாகிய ஐயப்பாட்டின் நீங்கிச் சுபக்கத்தைச் சிறப்புவகையான் அறியலுறுவார்க்குத் தூலாருந்ததி நியாயம் பற்றி அதனைச் சிறந்தெடுத்தோதுதல் உபதேசமாத்திரையான் உணர்த்துவனவாகிய சர்வஞானேத்தரம், தேவிகாலோத்தரம் முதலிய சிவாகமங்கட்குக் கருத்து என்பதூஉம், இங்ஙனமாகலாற் பௌட்கரம் முதலியவற்றின் ஓதப்படும் சுபக்கப்பொருள் சர்வஞானேத்தரம் முதலியவற்றின் பொருள் பற்றியே தெளிந்து கொள்ளப்படும் என்பதூஉம், மாறிக்கொள்ளின் வழுவாம் என்பதூஉம் அவ்வச்சிவாகமங்களின் இயல்புநோக்கி வன்மை

மென்மைபற்றி உணர்ந்துகொள்க' என்று இவ்வாறு இவ்வாதீனத்துத் திராவிடமாபாடியகாரராகிய ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள் கட்டளையிட்டருளினர். எனவே, ஸ்ரீகண்டபரமேஸ்வரன் கந்தமூர்த்திக்கு உபதேசித்தருளியது சர்வஞானோத்தரமும், திருநந்திதேவருக்கு உபதேசித்தருளியது இரௌரவாகமத்தில் எழுந்த சிவஞானபோதநூலும் என அறியக்கிடத்தல் காண்க. திராவிடமாபாடியகாரர் தமது பாடியத்திலே சர்வஞானோத்தரத்தையும், தேவிகாலோத்தரத்தையும் பல இடங்களில் எடுத்தாளுதல் குறிப்பிடத்தக்கது. சிவஞானமாபாடியம் கற்போருக்கு இன்றியமையாது வேண்டப்படுவன சர்வஞானோத்தரமும், தேவிகாலோத்தரமுமாம்.

இனி, இவ்வாதீனத்து அகச்சந்தானகுரவர்: 1. திருநந்திதேவர், 2. சனற்குமாரமுனிவர், 3. சத்தியஞானதரிசனிகள், 4. பரஞ்சோதிமுனிவர் ஆவார். புறச்சந்தானகுரவர்: 1. மெய்கண்டதேவர், 2. அருணந்தி சிவாசாரியர், 3. மறைஞான சம்பந்தநாயனார், 4. உமாபதிதேவநாயனார் என்பவர்கள். இந்த உமாபதிதேவநாயனார்பால் உபதேசம் பெற்றார் அருணமச்சிவாயர். அவர்பால் உபதேசம்பெற்றார் சித்தர் சிவப்பிரகாசர். அவர்பால் உபதேசம்பெற்றார் இவ்வாதீனத்துப் பிரதம பரமாசாரியராகிய ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள். 'குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சிவாய தேவர்' இவர்களே.

நூலாசிரியராகிய ஸ்ரீ — சிவாக்கிரயோகிகள் தமது ஞானாசிரியர் அருளிச்செய்த திருவாக்கும், தம்முடைய அனுபூதிஞானமும், சிவாகமப் பொருளும் பேதமில்லாமல் நன்கு ஆராய்ந்து சிந்தித்துப் பக்குவியாகிய சுவானந்த நாச்சியார் பொருட்டு இந்நூலைச் செய்தருளினர். இந்நூல் சாங்குசித்தர் பொருட்டுமன்று, தேகமே ஆன்மா என்றிருக்கும் பிராகிருதர் பொருட்டுமன்று; மோட்சத்தை அடையும்பொருட்டு ஞானாசாரியன் சன்னிதிப்பட்டுச் சாத்திரங்களைப் படித்தறியும் விநயசீலரான வைநயிகருக்கு மோட்சம் வருவது பொருட்டாகச் செய்யப்பட்டது என இந்தச் சாத்திரம் ஓதும் அதிகாரியைக் குறிப்பிடுகிறார்.

இந்நூலிலே பதி பசு பாசத்தின் இலக்கணங்களும், மூவகை ஆன்மாக்களும், சுத்தமாயை அசுத்த மாயைகளின் இலக்கணமும், கன்ம இலக்கணம், பஞ்சமலங்கள், சூக்கும பஞ்சகிருத்தியம், நால்வகை வாக்குகள், சுத்த தத்துவங்கள், கன்ம சாதாக்கியர், ஸ்ரீ கண்டபரமேசுவரர், தத்துவத் தோற்றங்களும் தொழில்களும், தத்துவங்களின் தேவதைகள், சுத்தாசுத்த அசுத்த தத்துவங்கள், ஐந்தவத்தைகள், புண்ணிய விசேடத்தால் சைவ சமயம் அடைதலும் முத்தி அடைதலும், இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதங்கள், சத்திநிபாதவகை, ஆசாரியமூர்த்தியை அதிட்டித்துச் சிவபிரான் மோட்சங்கொடுத்தல், அத்துவசோதனை, சாம்பவதீட்சை நிருவாண தீட்சைகள், ஆசாரிய பேதங்கள், இலக்கணங்கள், சீவன்முத்தர்,

சிவஞானத்தால் முத்திபெறல், புறச்சமயிகள் கூறும் முத்தியிலக்கணங்கள், வைதிக சைவசித்தாந்த அத்வைத முத்தியிலக்கணம், ஞானநெறி, பிரபத்தி நெறி, அந்தரங்கபக்தி, பாஹ்யபக்திகள் முதலியனவெல்லாம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. உரையாசிரியர் இச்செய்திகளையெல்லாம் நன்கு தெளிவாக விளக்கிக் கூறியிருப்பதும் காண்க.

சிவநெறிப்பிரகாச நூலாசிரியராகிய ஸ்ரீ வீழி - சிவாக்கிரயோகிகள் வடமொழிச் சிவஞான போதத்துக்குப் பாடியமும், சிற்றுரையும் இயற்றியருளினர்; சிவஞான சித்தியாருக்கு ஒருரையும் இயற்றினர். இவர்கள் காலத்துக்கு முற்பட்ட ஆசிரியர்களாகிய ஸ்ரீ மெய்கண்ட தேவர், ஸ்ரீ அருணந்திசிவம், ஸ்ரீ உமாபதிசிவம் அருளிய நூல்களினும் சிவாகமங்களினும் தெளிந்து கைவந்த ஞானமே பக்குவான்மாக்கள் பொருட்டு இந்நூலாகப் பரிணமித்தது. சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய நூல்களைக் கற்கப்புகுமுன் சிவநெறிப்பிரகாசத்தைக் கற்றுணர்வாராயின் பல செய்திகளும், சைவசம்பிரதாயங்களும் தெளிவாக உணர்தல் கூடும்.

இனி, இந்நூல் சிவஞானசித்தியார் சுபக்கம் ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் உரையுடன் அச்சிட்ட காலத்திலேயே ஆராய்ந்துவைக்கப்பெற்றது. இதனை ஆராய்தற்குத் துணையாய் நின்ற நூல்களில் தலைமை பெற்றுவிளங்கியது 1936ஆம் ஆண்டிலே சென்னைப்பல்கலைக் கழகத்துத் தமிழ் ரீடராக இருந்த திரு. S. அநவரத விநாயகம் பிள்ளை, M. A., L. T., அவர்களால் பரிசோதித்து அச்சிடப்பெற்ற சிவநெறிப்பிரகாசம் - உரையுடன் என்ற புத்தகம்—1.

இந்த ஆதீனத்து அடியார் கூட்டத்தில் ஒருவரும், ஆதீனம் காறுபாறும் ஆகிய ஸ்ரீ சுந்தரலிங்கத்தம்பிரான் சுவாமிகளுடைய (கி. பி. 1892) காகிதக் கையெழுத்துப் பிரதி 1.

சூரியனார்கோயில் ஆதீனத்துக் குருமகாசந்நிதானமாக இருந்து விளங்கியவர்களும், முன்பு ஒப்பிட்டுக்கொள்ளும் பொருட்டு திரு. அநவரத விநாயகம்பிள்ளை அவர்களுக்குக் காகிதப் பிரதியைக்கொடுத்து உதவியவர்களும், என்னுடைய ஞானாசாரியர்களும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிக சுவாமிகள் கொடுத்த காகிதப் பிரதி 1.

ஷ ஆதீனத்து அடியார் கூட்டத்தில் ஒருவராயிருந்து சிவபரிபூரணமான ஸ்ரீ முத்துக்குமரத் தம்பிரான் சுவாமிகள் எழுதிவைத்திருந்த காகிதப் பிரதியைப் பார்த்து அடியேன் மீனாட்சிதமிழ்க் காலேஜில் (1930) பயின்ற காலத்துச் சிதம்பரம் மெய்கண்ட வித்தியாசாலையில் வைத்துச் செய்து கொண்ட காகிதப்பிரதி 1.

ஆகிய இவைகளேயாம். மூல ஏடு எங்கும் இதுவரை கிடைத்திலது. சுமார் 380 ஆண்டுகளுக்கு முற்பட்டு மூலமும் உரையும் எழுதப்பட்ட ஏடுகளோ அதன் பிரதியாகவுள்ள ஏடுகளோ கிடைப்பது அரிதெனக் கூறவும் வேண்டுமோ? திருவருளால் பலர் அதனைக் கையெழுத்துக் காகிதப் பிரதியாகச் செய்து வைத்தமையும் பெரிதும் வியக்கத்தக்கதே. காகிதப் பிரதிகள் எல்லாம் ஒன்றைப் பார்த்துச் செய்த பிரதிகளேயாம் என்பதிலும் ஐயமில்லை. பிரதிசெய்தோர் நல்ல புலமையுள்ளவர்களாதலின் எழுத்துப் பிழைகள் சிறிதுமில்லை.

இந்நூலை முன்பு அச்சிட்ட ஸ்ரீமான் பிள்ளையவர்கள் தமது பரிசோதனையில் அகப்பட்ட பல விவரங்களையும் தெளிவாகக் கூறியுள்ளார்கள்; அப்புத்தகத்திலே அவைகளைக் காணலாம்.

இந்நூற்பதிப்பில் பத்திகள் நன்கு பொருள் புலப்படும்படி பிரித்துப் பதிக்கப்பட்டுள்ளன. அன்றியும், நூலுரையின் அவதாரிகையிலே கூறிய கருத்துக்களைப் பொருளடக்கத்திலும், நூலுரையின் பின்பு தொடர்ந்து பாட்டு முதற்குறிப்பு அகராதி, அருஞ்சொல் குறிப்புகளின் அகராதி, சைவ பரிபாஷை அகராதி, சைவ பரிபாஷைச் சொற்பொருள் அகராதி, அருஞ்சொல் அகராதி, தருக்கச்சொல் அகராதி, அருஞ்சொற்களும் சொற்றொடர்களும் முதலியனவும் புதிதாக என்னால் எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளன.

இத்திருவாவடுதுறை ஆதீனத்திலே இப்போது குருமகாசந்நிதானமாக வீற்றிருந்து வழக்கம்போலவே குருக்ஷேத்திர – சிவக்ஷேத்திர பரிபாலனங்களையும், நடைபெற்று வரும் மாநாடுகளையும், புத்தக வெளியீடுகளையும் செவ்வே நடைபெறுமாறு அருள்புரிந்து வரும் 22-வது ஸ்ரீ - ல - ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி இவ்வாண்டு மகரத்தலைநாட் குருபூசை விழாவிலே சிவநெறிப் பிரகாசம் மூலமும் உரையுமாக வெளியிடப்பெறுகிறது.

இங்ஙனம்,

*சித்தாந்த சைவமணி —*

**த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,**

*ஆதீனவித்துவான்.*

*திருவாவடுதுறை*

*24—1—68*

உ

## குருவணக்கம்

"பண்ணிசைவெம் பரிதிமதி திலதயிலம்
தீயிரும்பு பாணி யுப்பு
விண்ணநில முடலுயிர்நீர் நிழலுச்சிப்
பளிங்குபகல் விளக்குப் பானீர்
கண்ணிரவி யுணர்வொளிபோற் பிரிவரிய
அத்துவிதக் கலவி காட்டித்
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச்
சிவாயகுரு சரணம் போற்றி"

—ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள்.

# நூலாசிரியர் வரலாறு

திருக்கயிலாயத்திலே ஸ்ரீகண்டபரமேசுவரனால் அநுக்கிரகம் செய்யப்பெற்று வைதிக சைவசித்தாந்தச் செந்நெறியைப் பக்குவான்மாக்களுக்கு உபதேசிக்கும் ஆசிரியத்தலைமை எய்தினோர் ஸ்ரீகந்தகுரு, நந்திகுரு, முதலியோராவார். கந்தகுருவால் உபதேசம் பெற்றுவந்த பரம்பரை 'கந்தபரம்பரை' எனவும், திருநந்தி குருவால் உபதேசம்பெற்றுவந்த பரம்பரை 'நந்திபரம்பரை' எனவும் அவ்வவர் பெயர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. நந்திபரம்பரை சீகண்டபரம்பரை எனவும் வழங்கப்படும். நந்திமரபு திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனங்கள். இந்த நந்திதேவர் மரபில் வந்ததே ஸ்ரீமெய்கண்ட சந்தானம். இதனை,

" கயிலாய பரம்பரையில் சிவஞான<br>
  போதநெறி காட்டும் வெண்ணெய்<br>
புயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்<br>
  கோர் மெய்ஞ்ஞான பாநுவாகிக்<br>
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்<br>
  குருநமச்சி வாய தேவன்<br>
சயிலாதி மரபுடையோன் திருமரபு<br>
  நீடூழி தழைக மாதோ "

என்ற செய்யுள் நன்குதெளிவிக்கும்.

சிவநெறிப்பிரகாசம் என்னும் இந்த நூலை அருளிச்செய்தவர்கள் ஸ்ரீசிவாக்கிர யோகிகளாவார். இவர்கள் கந்தபரம்பரையிலே வந்த ஞானாசாரியர். இந்த ஞானாசாரியர் 'அதிவர்ணாச்சிரம ஆசாரியவரிய சைவசமய பரிபாலக சிவாக்கிர யோகீந்திர ஞான சிவாசாரிய சுவாமிகள்' எனப் பாராட்டப் பெறுவார்கள். இப்பரம்பரை ஸ்ரீவாமதேவ சந்தானம் என வழங்கப்படும்.

ஸ்ரீ வாமதேவமுனிவர், குமாரசிகரத்திலே ஸ்ரீ கந்த பரமாசாரியர் சந்நிதியை அடைந்து வணங்கித் துதித்து நின்று, சுவாமீ! அடியேனுக்குச் சுத்தாத்துவித நிலையின் உண்மையையும், பிரணவார்த்தத்தையும் உபதேசித்தருளவேண்டும் எனக் குறையிரந்து விண்ணப்பம் செய்தனர். அதனைக்கேட்ட குமாரக்கடவுள் கருணைகூர்ந்து சுத்தாத்துவிதத்தின் உண்மையைப் போதிக்கும் 'சர்வஞானோத்தரம்' என்னும் திவ்விய ஆகமத்தையும், பிரணவ பஞ்சாக்கரங்களின் உண்மையையும், கந்தகாலோத்தரம்

முதலிய சிவாகமங்களையும் உபதேசித்தருளி, 'இவற்றைப் பக்குவான்மாக்களுக்குப் போதிப்பாயாக' எனத் திருவாய்மலர்ந்து ஆசாரியத் தலைமையும் கொடுத்தருளினர்.

ஸ்ரீ வாமதேவமுனிவர் ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியருக்கும், அவர் காசி மணிகர்ணிகா தீரத்தில் பெரிய மடத்திலிருந்த விசுவேசுர சிவாசாரியருக்கும், அவர் சதாசிவ சிவாசாரியருக்கும், அவர் சிவமார்க்கப்பிரகாச தேசிகருக்கும், அவர் சிவாக்கிரயோகிகள் என்னும் ஸ்ரீ சிவக்கொழுந்த சிவாசாரியருக்கும் பரம்பரையாக உபதேசித்து அபிடேகம்செய்து முறையே ஆசிரியத் தலைமையும் தந்தருளினர்.

ஸ்ரீ சிவக்கொழுந்த சிவாசாரியர் சூரியனார்கோயில் தெற்குவீதியிலே ஆதீன ஸ்தாபனம்செய்து தாம் தமது ஆசிரியர்பால் பெற்ற ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஞானநடராச, ஸ்ரீ காளத்தீசுவரசுவாமி பூஜை முதலியன செய்துகொண்டு, தம்மைச் சரணடைந்த பக்குவான்மாக்களுக்கும் சுத்தாத்துவித சித்தாந்தசைவ ஞானோபதேசஞ்செய்து வீற்றிருந்தருளினர்.

திருவாவடுதுறையிலே ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக பரமாசாரிய சுவாமிகள் தமது ஞானாசாரியர் கட்டளையிட்டருளியபடி அவர் வகுத்த அறையிலிருந்து, வரும் பக்குவர்களுக்குச் சிவஞானோபதேசம் செய்துகொண்டிருந்தனர். இங்ஙனமாக, ஒருநாள் சூரியனார்கோயில் ஆதீனம் ஸ்கந்த பரம்பரையில் ஞானாசாரியராய் விளங்கும் ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் சிவஞான அநுபவ விசாரணை செய்யும்பொருட்டு ஸ்ரீ நமசிவாய தேசிகமூர்த்திகளைக் காண வேணவாக்கொண்டு திருவாவடுதுறைக்கு எழுந்தருளினார்கள். நேரமோ நண்பகல். அப்பொழுது ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளின் சீடர்களில் சிலர், சமயாசார சீலர்கள் வீட்டில் பிச்சையேற்று நின்றனர். ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் எழுந்தருளி வருவதை அச்சீடர்கள் கண்டு மிக்க பரபரப்புடன் கையிலிருந்த பிட்சா பாத்திரத்தை ஒரு திண்ணையின்மேல் வைத்துவிட்டு ஓடோடிவந்து தண்டாகாரமாக நிலத்திலே விழுந்து வணங்கித் துதித்தனர். சீடர்கள் நிலையினைக் கண்ட யோகிகள், ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளிடம் தொண்டு பூண்டிருந்தும் இவர்கட்குச் சைவாசாரசீலம் கைவரவில்லையே! என இரங்கிச் சென்றனர்.

ஸ்ரீ சிவாக்கிரயோகிகள், ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளுடனிருந்து திருமடத்தில் ஞானவிசாரணை செய்து அளவளாவி மகிழ்ந்து சூரியனார் கோயிலுக்குத் திரும்பினர். அப்போது சீடர்களுக்கு இன்னும் ஆசாரசீலம் திருந்தாமையை நமசிவாயதேசிகரிடம் தெரிவித்தனர். அதனைக்கேட்ட ஞானாசாரியர் சீடர்களைநோக்கி, 'ஆசாரியனைக் கண்டவுடனே ஒருவர் இடத்தையோ காலத்தையோ நிலையையோ நோக்காமல் அடியற்ற மரம் போல அன்றே விழுந்து வணங்குதல்வேண்டும்; அவ்வாறின்றிப் பிட்சா

பாத்திரத்தை ஒரு இடம் தேடி வைத்தற்கும் அபிமானமல்லவோ காரணமாயிற்று' என இரங்கினர். அச்சொல்லைக்கேட்ட யோகிகள் இத்தகைய ஞானமூர்த்திகளை எவ்வாறு பிரிந்து உறைந்திருப்பது என்று பெரிதும் வருந்திச் சிலநாட்கள் திருவாவடுதுறையிலேயே தங்கியிருந்து சிவானுபவ நிலையில் திளைத்து அளவளாவிப் பின்பு தம்முடைய திருமடத்துக்குச் சென்றார்கள். இங்ஙனமாக,

அக்காலத்திலே தொண்டைநாட்டிலே பிராமண குலத்திலே அவதரித்துச் சகலகலைகளிலும் வல்லவராகிய ஒருவர் ஞானசாரியரைத் தேடிச் சிவ தலயாத்திரை செய்துகொண்டு காவிரி ஆற்றின் வடகரையிலுள்ள சிவத்தலங்களையெல்லாம் தரிசனம் செய்துகொண்டு வருவாராயினர்.

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர், வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' எனத் தாயுமானவ சுவாமிகள் அருளியவாறு ஸ்ரீ சிவக்கொழுந்த சிவாச்சாரிய சுவாமிகளது சிவாநுபூதி விளக்கத்தைக் கேள்வியுற்றார். அவ்வந்தணர் குலத்தோன்றல் ஞானசாரியசுவாமிகளைத் தரிசிக்க வேணவாவுற்றார். அந்த வேணவா தீவிரதர பக்குவம்வாய்ந்த அவ்வான்மாவை விரைந்து உந்த ஞானசாரியர் சந்நிதியை அடைந்தார். ஞானசாரியரது சிவவேடப் பொலிவையும், சிவாநுபவ விளக்கத்தையும், பெருங்கருணைத் திருநோக்கத்தையும் கண்டார். தம் வசமழிந்தார்; மொழி தடுமாறினார்; மெய்ம்மயிர் சிலிர்த்தார்; கண்ணீர் மாறாதுபொழிய ஆனந்தபரவசமுற்றார்; ஆசாரியர் திருவடிகளில் அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கினார்; துதித்துநின்றார்; அடியேனுடைய பிறப்பினை அறுத்து ஆட்கொண்டருளவேண்டும் என்று கூறிப் பன்முறை இரந்தார். ஞானசாரிய சுவாமிகள் இவரது தீவிரதர சத்திநிபாதத்தையும், பத்தி விநய விசுவாசங்களையும், வித்தியா விலாசத்தையும் கண்டு பெருமகிழ்வுற்றார். ஞானவதியால் நிருவாண தீட்சை செய்தருளினார், சைவ சந்நியாசமும் கொடுத்தார். தமது ஞானபரம்பரை நிலவுலகத்திலே நின்று நிலவுமாறு தமக்குக்கிடைத்த பிரணவார்த்தத்தையும், சர்வஞானோத்தர ஆகமத்தையும் உபதேசித்தருளினார். ஞானசாரிய அபிடேகமும் செய்து 'சிவாக்கிரயோகி' என்னும் தம்முடைய பட்டாபிதானத்தையும் அவருக்குச் சூட்டி, இரண்டாங்குரவராகத் தமதாதீனத்தில் இருக்கச்செய்தார்.

இவ்வாறு ஞானசாரியர்பால் அநுக்கிரகம்பெற்ற துவிதீயகுரவர், தமது ஆசிரியர் அருளியவாறே சிந்தித்துத்தெளிந்து, பரமான்மாவாகிய சிவமும் தாமும் வேறறவிளங்கும் சிவானந்த நிட்டையிலே இடையறாது வீற்றிருந்து வர்ணாச்சிரமாதீதராக விளங்குவாராயினர் ஆகலின், 'அதிவர்ணாச்சிரம சிவாக்கிர யோகிகள் எனப் பெயர்பெற்றனர். இந்த ஆசிரியர்களது பெருமையைப்பலராலும் கேள்வியுற்ற அக்காலத்திருந்த தஞ்சை

அரசன் சூரியனூர் கோயிலுக்கு வந்தான். உபயகுரவரையும் தரிசித்து வணங்கினான். ஆசாரியரது அநுமதிபெற்று, இரண்டாங்குரவராகிய ஸ்ரீ சிவாக்கிர யோகிகளைச் சிவிகையில் எழுந்தருளப் பண்ணித் தஞ்சைக்கு அழைத்துச்சென்றான். ஆசாரியரைத் தனியாக ஒரு மடத்திலிருத்தி உபசரித்தான். அவ்வாசிரியரைக் கொண்டு சைவசமய பரிபாலனமும் செய்வித்திருந்தான்.

அக்காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவராகிய மணவாள மாமுனி என்பவர் தமது சீடர்களோடு அரசனிடம் சென்றார். ஸ்ரீ வைணவ சமயத்தை இந்த நாடெங்கும் பரவச் செய்யவேண்டும் என்று கூறினார். அரசன் அதற்கு உடன்பட்டிலன். அதனால்; மணவாளமாமுனிகள் 'சிவாக்கிர யோகிகளோடு வாதம் செய்து வென்று எமது வைணவமதத்தை நிலை நாட்டுவேன்; அதற்கு அநுமதி கொடுத்தல்வேண்டும்' என்று மீட்டும் அரசனிடம் கூறினார்.

அரசனும் இதனை ஸ்ரீ சிவாக்கிரயோகிகளுக்குத் தெரிவித்தான். ஆசாரியர் உடன்பாடு பெற்றான். வாதசபையைக்கூட்டினான். "பதினெட்டு நாட்களுள் வாதத்திலே தோற்றவர் தம் சமயத்தைவிட்டு வென்றவர் சமயத்தில் சேர்ந்து விடுதல் வேண்டும்' என்று உத்தரவளித்தான். இரு திறத்தாரும் அவ்வாறே சபதம் செய்து கொண்டு வாதம் செய்தனர். பதினேழுநாட்கள்வரை மணவாள மாமுனிக்குத் தோல்வியே வந்தது. ஆகலின், பதினேழாம் நாள் இரவில் சிவாக்கிரயோகிகள் இருந்த திரு மடத்தில் சுற்றிலும் அவர் தீக்கொளுவிச் சென்றார்.

இந்தச் செய்தியை மறுநாட்காலையில் ஊர்காப்போரால் அரசன் அறிந்தான். மனம் மிகவும் பதைபதைத்தான் திருமடத்துக்கு விரைந்து சென்றான். அக்கினி மத்தியில் திருமேனிக்குத்தீங்கின்றி, சிவயோகத்திலே அமர்ந்திருந்த ஆசாரியரைத்தரிசித்தான். அச்சமும் ஆச்சரியமும் அடைந் தான். எதிரிலே வணங்கிநின்றான். 'குரவர் சிகாமணியே! இந்தப் பழியைக் காண்பதற்கோ தேவரீரை இங்கே எழுந்தருளுவித்தேன். என் பிழையைப் பொறுத்தருள்புரிக' என்று பன்முறை இரந்து வணங்கினான். ஞாசாரிய ருடைய பெருமையை எண்ணி எண்ணி மகிழ்ந்து இறுமாப்புற்றான். தீக் கொளுவிய மணவாளமாமுனிகள் மறைந்து ஓடாமல் அங்கே இருந்தலை அறிந்து அரசன் அவரைத் தண்டித்தான். மணவாளமாமுனிகள் காலம் கி. பி. 1370—1443. என்பர்.

பின்பு, சிவாக்கிரயோகிகள் 'அரசே! திருவீழிமிழலையில் வசிக்க விரும்புகிறோம். அத்தலம் சைவ சமயாசாரியர்கள் பன்னெடுநாள் எழுந் தருளியிருந்து சைவசமய பரிபாலனம் செய்யப்பெற்றது. திருமால் தமது தாமரைக்கண்ணைச் சிவபெருமான் திருவடிகளில் இட்டு அருச்சித்துச்

சக்கரம்பெற்றது. மற்றும் மிக மிக அற்புதமான மகிமைகள் பல வாய்ந்தது என்றார். அரசன் ஆசாரியரது திருவுளக் குறிப்பின்படியே திருவீழிமிழலையில் ஒரு திருமடம் கட்டுவித்தான். அதில் இரண்டாம் குரவராகிய சிவாக்கிரயோகிகளை எழுந்தருளுவித்து உபசரித்து வந்தான்.

சிவாக்கிரயோகிகள் திருவீழிமிழலையில் சைவ சந்நியாசிகளாகிய பலமாணவர்கள் சூழ வீற்றிருந்து, சைவசமயத்தை வளர்த்துவந்தார். இதனால், இவ்வாசிரியர் வீழிச் சிவாக்கிரயோகிகள் என வழங்கப்பெற்றார்.

இங்ஙனம் நிகழும் நாட்களில் ஸ்மிருதிவழி ஒழுகும் சிலருக்கும், சிவாகமநெறி ஒழுகும் சிலருக்கும் சந்நியாச விஷயமான விவாதம் உண்டாயிற்று. இருதிறத்தாரும் அரசனிடம்சென்று, தங்கள் விவாதத்தைக்கூறி முடிவுசெய்யவேண்டும் எனத்தெரிவித்தனர். இச்செய்தியை அரசன் திருவீழிமிழலையில் இருக்கும் ஆசாரியர்பால் தெரிவித்தான். ஞானாசாரியர் இந்த விவாதத்தைத் தக்க பிரமாணவாயிலாகச் சமாதானம்செய்து நான்காம் வருணத்தவருக்கும் சந்நியாசம் உண்டு என்பதை நிரூபித்தார். அவர்கள் அநுட்டிக்கவேண்டிய ஸ்நானம், சந்தி, பூஜை, தீக்ஷை, சந்நியாசம் முதலியவற்றை விரித்து விளக்கும் எட்டுப் படலங்களையுடைய சைவசந்நியாச பத்ததி என்ற நூலையும் செய்துகொடுத்தனர். ஆசாரியர் அருளிய சைவசந்நியாச பத்ததியில் தஞ்சை அரசனைச் சிறப்பித்துப் பாயிரமும் செய்தனர்.

அதன்பின் சூரியனார் கோயிலுக்குச்சென்று தம் ஞானகுரவரைத் தரிசித்துவருங் காலத்தில் ஆசாரியர் கட்டளையிட்டருளிய வண்ணம் வடமொழிச் சிவஞானபோதத்துக்குச் சங்கிரக வியாக்கியானம் என்னும் ஒரு சிற்றுரையும், சிவாக்கிரபாஷ்யமென ஒரு பேருரையும் செய்தருளினர். சிவாக்கிரபாஷ்யத்திலே தமது ஸ்கந்தபரம்பரையிலே உபதேசிக்கப்பெற்று வரும் சர்வஞானோத்தர ஆகமத்தின் ஞானபாதத்துக்கு ஸ்ரீ அகோர சிவாசாரியர் செய்த சிவசமவாத உரையையும் மறுத்தனர்.

அதன் பின்பு, சிவாக்கிரபாஷ்யம் கற்கும் மாணாக்கர்கள் அதற்கு முன்பு ஒருதலையாக அறிந்து கொள்ளற்பாலனவாகிய சித்தாந்தப் பொருள்களைச் சுருக்கி விளக்கும் வசனரூபமான சைவ பரிபாஷை என்னும் நூலை வடமொழியிலே செய்தருளினர். அந்நூல் ஐந்து பரிச்சேதங்களையுடையது. இதனை அன்றிச் சர்வஞானோத்தரம், தேவிகாலோத்தரம், ஹரதத்தாசாரியர் செய்த சுருதி சூக்திமாலை முதலிய நூல்களுக்குத் தமிழுரையும் செய்து முடித்தனர். இவைகள் அச்சாகவில்லை; கிடைக்கவுமில்லை.

புறச்சந்தான குரவர்களில் இரண்டாவது குரவராகிய ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் அருளிச்செய்த சிவஞானசித்தியார் பரபக்க சுபக்கங்களுக்குப்

ப்ரமத ஸ்வமதப் பிர்மாண வசனங்கள் காட்டி உரையிட்டருளினர். இவற்றுள், சுபக்கத்துக்கு சிவாக்கிரயோகிகள் உரை முன்பு இந்த ஆதீனத்து 200-வது வெளியீடாக என்னால் அச்சிடப்பட்டுள்ளது. சித்தியார் பரபக்கத்துக்கு இவ்வாசிரியர் அருளிய உரையும் இதுவரை கிடைத்திலது. திருவருள் கூட்டுமாயின் அவைகளை ஆராய்ந்து வெளியிடும் கருத்துடையேன்,

பின்பு, சுவானந்த நாச்சியார் என்னும் ஒரு பக்குவியின் பொருட்டு இந்தச் சிவநெறிப் பிரகாச நூலை அருளிச்செய்தார்கள். இந்த நூலுக்கு ஸ்ரீ சிவாக்கிர யோகிகள் மாணவர் நந்திசிவாக்கிர யோகிகள் உரை வரைந்தனர்; அவ்வுரையே இவ்வுரைப் புத்தகம். சிவாக்கிரயோகிகள் வடமொழியிலே மிகப்பெரு வல்லுநராயிருந்தும் இந்நூலை நல்ல செந்தமிழ் நடையிலே அருளிச் செய்திருக்கிறார்கள். நந்தி சிவாக்கிரயோகிகள் இந்நூலுக்குச் செய்தவுரை பெரிதும் மணிப்பிரவாள நடையாக உள்ளமை காண்க. இந்நூலுரையையும், சிவஞானசித்தியார் உரையையும் கற்போர் நல்ல வடமொழிப் பயிற்சியும் வேண்டுமளவு பெறவேண்டும் என்பதை ஒருமுறை இவ்வுரைகளைப் படிப்போரும் நன்கு அறிவர்

ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் இரு மொழிகளிலும் பல நூல்களையும் உரைகளையும இயற்றியருளிச் சைவசமய பரிபாலனம் செய்து வீற்றிருந்தார். அந்த நாளிலே தமது ஞானகுரவராகிய ஸ்ரீ சிவக்கொழுந்த சிவாச்சாரியர் சிவபரிபூரணம் அடையுங்காலம் சமீபித்திருப்பதை அறிந்து சூரியனார் கோயிலுக்கு எழுந்தருளினார்; ஆசிரியர் பரிபூரணம் தரிசித்தார். அரசனால் கோயில் கட்டுவித்து, ஆசிரியரது திருவுருவத்தைப் பதிட்டைசெய்தார். குரு ஆராதனம் செய்து தம்முடைய மாணாக்கர் பலருள்ளும் சிறந்திருந்த நந்தி சிவாக்கிரயோகிகளுக்கு இரண்டாங்குரவராக அபிஷேகம் செய்து ஆசிரியராக நியமித்தார். சிலகாலம் சூரியனார்கோயிலிலே தங்கிக் குருமூர்த்தம் தரிசித்திருந்தார். பின், திருவீழிமிழலைக்கே சென்று தாம் அங்கேயே வசிக்க விரும்பினார். அத்தலத்தில் சிலகாலம் தங்கியிருக்கும் பொழுது தமது பரிபூரணகாலத்தை நந்தி சிவாக்கிரயோகிகளுக்கு அறிவித்தார். அவர் தஞ்சை அரசன் முதலியோருடன் திருவீழிமிழலைக்குச் சென்று ஆசிரியருடைய பரிபூரணம் தரிசித்தார். அங்கே அரசனால் கட்டுவிக்கப்பட்ட கோயிலிலே தமது ஞானாசாரியருடைய திருவுருவத்தைப் பதிட்டை செய்து குருபூசை மகேசுரபூசை முதலியவைகளை மிகச் சிறப்பாக நடத்தினார். பின்பு தாம் சூரியனார் கோயிலுக்கு எழுந்தருளி ஞான பீடத்திலமர்ந்து ஆதீன கர்த்தராக வீற்றிருந்தருளிச் சைவசமய பரிபாலனம் செய்துகொண்டிருந்தார்.

இந்த அதிவர்ணாச்சிரம ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் சின்னப்பட்டமாகத் திருவீழிமிழலையிலேயே இருந்தமையால் அது முதலாகச் சூரியனார்

கோயில் ஆதீனத்துக்குத் திருவீழிமிழலையே சின்னப்பட்டத்தினர் பீடமாக அமைந்தது.

ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளாகிய ஸ்ரீ பஞ்சாக்கரதேசிக பரமாசாரியர் காலம் முதல் சூரியனார் கோயில் ஆதீன குரவர்கள் யாவரும் திருவாவடுதுறை ஆதீனத்துடன் பெரிதும் தொடர்பு பூண்டொழுகினர். தமது ஞானதீனத்துக்கு வேண்டுங் காலங்களிலெல்லாம் திருவாவடுதுறையில் உள்ள முனிபுங்கவர்களில் ஒருவரையே ஞானசாரியர் அநுமதிபெற்றுத் தமது ஆதீனகுரவராகச்செய்து வருவது வழக்கமாயுள்ளது அவ்வழக்கம் இடையறாது நாளதுவரையில் நடைபெற்றுவருவது கண்கூடேயாம்.

திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்குச் சிறுபருவத்திலே வித்தியா குருவாக விளங்கிக் 'கம்பரந்தாதி' முதலிய நூல்களைப் பாடஞ்சொல்லிய ஸ்ரீ அம்பலவாண முனிவர், திருவாவடுதுறை ஆதீனத்து 15-வது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீ அம்பலவாணதேசிக மூர்த்திகளிடத்துப் பிற்காலத்தில் (1862-ஆகஸ்டு) அநுமதிபெற்றுச் சென்று சூரியனார்கோயில் ஆதீனத்துப் பண்டாரச் சந்நிதிகளாயினர்.

அதனையடுத்து ஸ்ரீ முத்துக்குமாரதேசிகர், இவ்வாதீனத்திலே மகாவித்துவான் — பிள்ளையவர்களிடத்திலும், 16-வது மேலகரம் — ஸ்ரீசுப்பிரமணியதேசிக மூர்த்திகளிடத்திலும், சின்னப்பட்டம் — பேட்டை — ஸ்ரீ நமசிவாயதேசிக மூர்த்திகளிடத்திலும் தமிழ்க்கல்வி வடமொழிக் கல்விகளுடன் சித்தாந்த சைவ சாஸ்திரங்களையும் முறையாகப் பாடங்கேட்டுப் பெரிதும் பயின்றவர்கள். அக்காலத்திலே முத்துக்குமார தேசிகருடன் பாடங்கேட்டுச் சிறந்தவர்கள அடியார் கூட்டத்திலுள்ள ஆதீனவித்துவான் ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான்சுவாமிகள். இவர்கள் 1888-ல் குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமலை ஆதீனத்திலே தலைவர்களாக நியமனம் பெற்றார்கள். திருவாவடுதுறை ஸ்ரீ பரமசிவத்தம்பிரான் சுவாமிகளுடைய தம்பியாகிய ஸ்ரீ முத்துக்குமார தேசிக மூர்த்திகள் கயத்தாற்றிலே கார்காத்த வேளாளர் மரபிலே தோன்றியவர்கள். இவர்கள் சூரியனார்கோயில் ஆதீனகர்த்தராக நியமனம் பெற்று நாற்பது ஆண்டுகள் ஞான அரசு செலுத்தினார்கள்.

ஆதீன வித்துவானாக இருந்த ஸ்ரீ குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் கல்வி அறிவு ஒழுக்கங்களிலும் துறவற ஒழுக்கத்திலும் மேம்பட்டு விளங்கினார்கள். அவர்களிடத்திலே 16-வது மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் தனித்த பேரன்பு வைத்திருந்தார்கள். இவர்கள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிறந்த மரபிலே தோன்றியவர்கள் ஆகலின்,

காசிவாசி ஸ்ரீ இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் வேண்டுகோளின்படி (கி. பி. 1880—1894) திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவராக நியமிக்கப் பட்டார்கள்.

சிதம்பரம் ஈசானமடம் ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள், சிலேடைப்புலி பிச்சு ஐயர், சின்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் முதலியோர்கள் ஸ்ரீ முத்துக்குமார தேசிக மூர்த்திகளுடன் திருவாவடுதுறையிலேயே இருந்து பாடங்கேட்டவர் ஆவார்கள்.

ஸ்ரீ முத்துக்குமார தேசிக மூர்த்திகளுக்குப் பின் பட்டத்துக்குவந்து 29 ஆண்டுகள் பட்டத்திலிருந்த ஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிக சுவாமிகள் சேற்றூர்க் கவிராயர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் முன்னோ ராகிய மீனாட்சிசுந்தரக் கவிராயர் குவலயானந்தத்தைத் தமிழிலே மொழி பெயர்த்தியற்றினவர்கள்.

ஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிக சுவாமிகளுக்குப் பின்பு பட்டத்தில் (கி-பி 1947-59) வரை அமர்ந்திருந்து பரிபூரணமடைந்த ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகரும்; அவர்களுக்குப் பின்பு (கி-பி 1959 - 67) வரை பட்டத்தில் அமர்ந்திருந்து பரிபூரணமடைந்த ஸ்ரீ முத்துக்குமார தேசிகரும்; அவர் களுக்குப் பின்பு (கி-பி1967) முதல் இப்போது பட்டத்தில் உள்ளவர்களும் திருவாவடுதுறை ஆதீனத்துத் தம்பிரான்களே.

ஸ்ரீ முத்துக்குமார தேசிக மூர்த்திகளுடைய மாணவர்கள் பலர். அவருள் வடமொழி தமிழ் மொழிகளில் பெரும் புலமை பெற்றுச்சிறந்து தமது ஞானாசாரியரைப்போலவே சைவசமய பரிபாலனம் செய்துவந்தவர் கள் ஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் என்பது மிக மிகக் குறிப் பிடத் தக்கது. கிரியாதீபிகை, சிவாக்கிரபாடியம் முதலியன இவர்களால் பரிசோதித்து அச்சிடப்பெற்றன. கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூலிலும், பின்பு அரசினர் கல்லூரியிலும் தமிழாசிரியராக இருந்து காலஞ்சென்ற மணலூர் இராமாநுஜாசாரியர் முத்துக்குமாரதேசிக மூர்த்திகளிடம் கல்வி பயின்றவர்களே.

## சூரியனார்கோயில் ஆதீனத்து ஞானகுரவர்கள்

ஸ்ரீகண்டபரமசிவன்
ஸ்ரீ ஸ்கந்தசுவாமி
ஸ்ரீ வாமதேவமகரிஷி
ஸ்ரீ நீலகண்டசிவாசாரியர்
ஸ்ரீ விசுவேசுரசிவாசாரியர்

ஸ்ரீ சதாசிவசிவாசாரியர்
ஸ்ரீ சிவமார்க்கப்பிரகாசசிவாசாரியர்
ஸ்ரீ சிவாக்கிரயோகிகள்
(ஸ்ரீ சிவக்கொழுந்தசிவாசாரியர்)
ஆதினஸ்தாபகர்
ஸ்ரீ வீழி - சிவாக்கிரயோகிகள்
ஸ்ரீ நந்தி சிவாக்கிரயோகிகள
ஸ்ரீ சிவக்கொழுந்துதேசிகர்
ஸ்ரீ சொக்கலிங்கதேசிகர்
ஸ்ரீ சிதம்பரநாததேசிகர்
ஸ்ரீ வைத்தியலிங்கதேசிகர்
ஸ்ரீ சண்முகதேசிகர்
ஸ்ரீ நமச்சிவாயதேசிகர்
ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் (1855 — 1862)
ஸ்ரீ அம்பலவாணதேசிகர் (1862 — 1883)
ஸ்ரீ மாணிக்கவாசகதேசிகர் (1884 — 1887)
ஸ்ரீ முத்துக்குமாரதேசிகர் (1888 — 1918)
ஸ்ரீ மீனாட்சிசுந்தரதேசிகர் (1918 — 1947)
ஸ்ரீ சிவக்கொழுந்துதேசிகர் (1947 — 1959)
ஸ்ரீ முத்துக்குமாரதேசிகர் (1959 — 1967)

இப்போது பட்டத்திலிருப்பவர்கள்
ஸ்ரீ வேலப்பதேசிகர்

# இந்நூற்பொருளின் அட்டவணை

[எண் - செய்யுள் எண்]

நூல்வரலாறு பக்கம் எண் 1
விநாயகர் துதி 1
சிவபெருமான் சுவரூப தடத்த இலக்கணம் 2
சத்திதுதி 3
குமாரவணக்கம் 4
நந்திகேசுரர் வணக்கம் 5
வாமதேவ மகரிஷி துதி 6
சைவாசாரிய சமயாசாரியர் தோத்திரம் 7
குருவணக்கம் 8
சொகுரு வணக்கம் 9
அவையடக்கம் 10
புறனடை 11
ஓதும் அதிகாரி 12
நூல்விடயம், பிரயோசனம், அதிகாரம், சம்பந்தம் 13
தன்ம முதலியன 14
பொருட்பால் காமப்பால்கள் 15
மோட்சம் 16
பிரமாணவகை 17
இலக்கணத்தின் சொரூபம் 18
உத்தேச இலக்கண பரீட்சைகட்கு இலக்கணம் 19
சைவ சித்தாந்தத்துக்குப் பிரமாணம் சிற்சத்தி 20
சிற்சத்திப் பிரமாணத்துக்கு அபிவியத்திக் கரணம் 21
பிரத்தியட்சம் மூன்றுவகை 22
இந்திரியப்பிரத்தியட்ச மானதப்பிரத்தியட்சங்களின் சொரூபம் 23
சிற்பிரத்தியட்சம் இருவகை 24
ஐயந்திரிவுகளுடைய சொரூபம் 25
அநுமானப் பிரமாணம் 26
சுவார்த்த பரார்த்த அநுமானங்களும், ஆகமப்பிரமாணமும் 27
ஏத்துவாபாசம் 28
பதியின் ஸ்வரூப இலக்கணம் 29
அப்பொருள் சுவானுபவவேத்தியம் 30
தடத்த இலக்கணம் 31
பிரபஞ்சம் கர்த்தாவையுடையது 32
கர்த்திருத்துவம் கூடும் எனல் 33

சிவனுக்குச்சந்நிதிமாத்திர கர்த்திருத்துவம் 34
நின்மலனாகிய சிவன் சமவாயசத்தியால் தனுவாதியை உண்டாக்குதல் 35
மாயாகன்மங்களுக்குச் சங்காபரிகாரம் 36
பசுஇலக்கணம் 37, 38
ஆன்மாக்களுக்கு மூன்றவத்தை 39
சகலர் இலக்கணம் 40
பிரளயாகலர் இலக்கணம் 41
விஞ்ஞானகேவலர் இலக்கணம் 42
எண்ணிறந்த ஆன்மாக்கள் உண்டு 43, 44, 45
ஆணவம், திரோதாயி இலக்கணம் 46
ஆணவமல அங்கீகார நியாயம் 47
ஆன்மஞானத்தைத் திரோதான சத்தி தடுக்காது 48
கன்மமலமும் ஆன்மஞானத்தைத் தடாது 49
ஆன்மஞானத்தை ஆணவமே மறைக்கும் 50
மாயை ஆன்மஞானத்தை விளக்குவதொழிந்து மறையாது 51
அஞ்ஞானம் ஞானத்தினுடைய இல்லாமை என்பது குற்றம் 52
சர்வஞ்ஞதையைத்தடுப்பது ஆணவமலம் 53
ஆணவம் ஆன்மாவின் ஞானேச்சாக்கிரியைகளைத் தடுக்கும் 54
சுத்தமாயா இலக்கணம் 55
சுத்தமாயை உண்டு என்பதற்குரிய நியாயம் 56
அசுத்தமாயா இலக்கணம் 57
கன்ம இலக்கணம் 58
கன்மங்கள் பந்தமாக ஏறும்வகை 59
கன்மபலன்கள் இம்மையிலும் மறுமையிலும் பொருந்தும் 60
கன்மம் புத்தியிலே நின்று பரிபாகமானபொழுது புசிப்பிக்கும், இருவினையொப்பில் கெடும் 61
பஞ்சமலங்களின் தொகை 62
பாசங்கள் ஆன்மாவைப் பந்திக்கும், சர்வவியாபியாகிய சிவனை வாதியா 63
அதற்குப்புறனடை 64, 65
பாசங்கள் பெத்தான்மாவையே வருத்தும் 66
சத்தி-சிவம், ஆன்மா-சிவம், ஆன்மா-பாசம், ஆன்மா-பிரபஞ்சம் இவைகளுக்குள்ள சம்பந்தங்கள் 67
சிவனே சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களைப் பண்ணுவர் 68
ஆன்மாவின் ஞானேச்சாக்கிரியைகளுக்கும், சிவனுடைய ஞானேச்சாக்கிரியைகளுக்கும் உள்ளபேதம் 69
ஆன்மாக்களுக்கு ஈசுவரன் தன்மை முன்னிலே படர்க்கையால் உணர்த்துதல் 70
பரையாதி பஞ்சசத்திகளின் தோற்றமும் தொழிலும் 71—3
சத்தியின் இலக்கணமும் அவர் கிருத்தியமும் 74—84
தாம்பண்ணும் சூக்கும பஞ்சகிருத்தியம் 75

சத்தருடைய சமவாயசத்தி முதலியன 76
அம்பிகாதிசத்தி உதிக்கும் முறை 77
பைசந்தி முதலிய வாக்குகள் உதிக்கும் முறையும் புறனடையும் 78—9
அகாராதி அட்சரங்களுக்குத் தேவதைகள் 80
வாக்குகள் ஆன்மாக்களைப் பந்தித்தலும் நீங்குதலும் 81
சுத்ததத்துவங்களின் உற்பத்திக்கிரமம் 82
சிவன் ஷடத்துவவியாபியாய் நிற்றல் 83
சதாசிவத்துக்கு நாயகர் கன்மசாதாக்கியர் 84
சதாசிவர் ரூபாரூபமாய் நிற்கும் முறை 85
சதாசிவர் தனுவாதிகளுடன் கூடிப் பஞ்சகிருத்தியம் பண்ணுதல் 86
சதாசிவருடைய கிருத்தியம் 87—91
பதி தியான பூசா நிமித்தம் ரூபம் ரூபாரூபம் அரூபம் ஆகிய திருமேனி கொள்ளுதல் 92
பதி பிரபஞ்சத்தில் நிற்கும் முறைமை 93
கன்ம சாதாக்கியரிடத்து மகேசுவரரும், அவரிடத்துப் பிரமாதி தேவர்களும் உற்பத்தியாதல் 94—5
சீகண்ட பரமேசுவரன் உற்பத்தியும், கிருத்தியமும் 96
சீகண்டருத்திரர் சகலருக்குப் பரதத்துவர் 97
மகேசுரர் பிரளயாகலருக்குப் பரம மோட்சம் கொடுத்தல், உருத்திரான்மாக்களாகச் செய்தல் 98
ஈசுரசத்தி பிரபஞ்ச கிருத்தியம் நடத்தும் முறைமை 99
மகேசுரர், சீகண்டர்களின் பிரபஞ்ச கிருத்தியம் 100
கலாதி பஞ்சதத்துவங்களின் கிருத்தியம் 101
புருட தத்துவோற்பத்தியும் தொழிலும் 102
சீகண்டர், பிரம விஷ்ணு ருத்திரர்களைக் குண அதிட்டிதராக்குதல் 103
சித்தம் புத்தி தத்துவங்களின் உற்பத்தியும் கிருத்தியங்களும் 104
புத்தி பாவாஷ்டகமும் பேதங்களும் 105—6
ஆன்மாக்களின் கன்மானுகுணமாகக் குணங்களின் ஏற்றக் குறைச்சல் முதலாயின 107—8
புத்தி தத்துவத்திலே அகங்காரம் தோன்றுதல் முதலியன 109
தைசத அகங்காரத்திலே தோன்றும் மனம்·ஞானேந்திரியங்களின் கிருத்தியம் 110
சங்கையும் உத்தரமும் 111
வைகாரி அகங்காரத்தில் கன்மேந்திரியமும், பூதாதி அகங்காரத்தில் தன்மாத்திரையும் உற்பத்தியாதல் - அவற்றின் கிரியைகள் 112
புரியட்டக தேகத்தால் ஆன்மாக்கள் போக்குவரவு புரிதல், தூல தேகம் உண்டாதல் 113—4
ஆகாசாதிகள் ஒன்றிலொன்று தோன்றும் கருத்து 115—6
பிருதிவியாதி பஞ்சபூதங்களின் கிரியை குணங்கள் 117—8
பஞ்சபூதங்களின் பஞ்சீகரணம், தேகபேதம், அண்டங்களின் முறைமை 119 - 20

பஞ்சபூதங்கள் வியாபித்து நிற்றல், அதிதேவதை, பஞ்சகலைகள் முதலியன 121—2
சத்தி சிவர்கள், தத்துவங்களில் அநுப்பிரவிஷ்டராய் நின்று பிரேரித்தல் 123
ஞானேந்திரிய கன்மேந்திரியங்களில் தேவதைகள் பொருந்தி நின்று செலுத்துதல் 124
அந்தக்கரணம் குணம் இவைகளில் தேவதைகள் பொருந்திநின்று கிரியைகளைச் செய்வித்தல் 125
இராக தத்துவ முதலிய ஆறனையும் தேவதைகள் பிரேரித்தல், கிருத்தியங்களைச் செய்வித்தல் 126
காரிய மாயையை ஈசுரசத்தி அதிட்டித்தல் 127
சுத்தவித்தை ஈசுவரம் சாதாக்கியங்களில் அதிட்டித்தல் 128
தத்துவங்களைத் தேராகக்கொண்டு ஆன்மா சுகதுக்கங்களைப் புசித்தல், துரியத்தை அடைதல் 129
சாதாரண, அசாதாரண தத்துவங்கள் 130
தாத்துவிகபேதம் 131—2
சுத்த தத்துவங்களைச் சிவசத்திகள் அதிட்டித்தல் 133
சுத்தாசுத்தம் 134
அசுத்தம் 135
பிரேரககாண்டம், போகசயித்துருகாண்டம், போகபோக்கிய காண்டங்கள் 136
சத்தியும் சிவமும் மாதா பிதாக்கள் 137
சிவன் பஞ்சகோசங்களைச் சுத்த மாயாதிகளில் உண்டாக்குதல் 138—9
சூக்கும பஞ்சபூத காரியமான தாத்துவிகங்கள் 140—1
அஞ்ஞானிகள் நிற்குந்தன்மை 142
கேவலாவத்தை 143
சகலாவத்தை 144
சுத்தாவத்தை 145
கேவல சாக்கிராதி 146—8
சகலத்தில் துரியாதீயாதி பஞ்சாவத்தை 149
புண்ணிய விசேடத்தினால் சைவசமயத்தைச் சார்ந்து முத்தி அடைதல் 150—4
இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதங்கள் 155
சத்திநிபாதம் வருவதற்கு உபாயம் 156
மந்தாதியான நான்கு சத்திகள் 157
சத்திநிபாதமுடைய ஆன்ம கிருத்தியம் 158
சிவன் ஆசாரியமூர்த்தியை அதிட்டித்து நின்று அநுக்கிரகித்தல் 159
சத்தி நிபாதாநுகுண அத்துவசோதனை 160—1
சத்தியோ நிருவாணதீட்சை 162
சாம்பவதீட்சை, இருவகை நிருவாணதீட்சை 163—4
ஞானசாரியன், போதகாசாரியன், சாதகாசாரியர் உபதேசக் கிரமம் 165

| | |
|---|---|
| லோகதர்மிணி சிவதர்மிணி தீக்கை | 169 |
| ஒளத்திரிதீக்கை, மானததீக்கைகள் | 167 |
| நாலு வருணத்தவரும் ஆசாரியராதல் | 168 |
| ஆசாரியர் பேதம், ஆசிரமாதிகம், தீட்சாக்கிரமங்கள் | 169 – 174 |
| சிவஞானுதிக்கத்தால் ஆசாரியனுதல் | 175 |
| சிஷ்யர் பரிபாக சோதனையும் தீட்சையும் | 176—7 |
| ஆறத்துவாக்கள் | 178 |
| மந்திராதிகள் லயித்தல், ஆன்மாவைச் சிவத்திலே யோசித்தல், பின் பிராரத்த தேகத்தில் நிறுத்துதல் | 179—183 |
| ஆசாரியானுக்கிரகம் பெற்றோர் நிலை | 184 |
| அநாதி நித்தியமான ஆணவம் கெட்டும் கேடில்லாதிருத்தல் | 185 |
| ஆணவாதி பந்தம் நீங்கில் சர்வஞ்ஞத்துவாதி குணங்கள் விளங்காமைக்குக் காரணம் | 186—7 |
| சீவன்முத்தர் தேகாந்தத்தில் பரமமுத்தி அடைதல் முதலியன | 188 |
| சிவஞானமுடையராய்ச் சிவானுபவம் பெற்று நிற்றலே சிறப்பாம் | 189 |
| நின்மல சாக்கிராதி பஞ்சாவத்தா லட்சணம் | 190 |
| சைவரல்லாத சமயிகள் கூறும் பெத்தமுத்தி இலக்கணம் | 194 – 9 |
| பாஞ்சராத்திரிகளின் பந்தமுத்தி இலக்கணம் | 200—2 |
| சாங்கியனுடைய பெத்த முத்திகள் | 203 |
| மாயாவாதியின் பெத்த முத்திகள் | 204—5 |
| வாமதட்சிண மார்க்கத்தர் பிசாசபதம் அடைதல் | 206 |
| சமாவேசவாதி, சமுற்பத்திவாதி, சங்கிராந்தவாதி, அபிவியத்தி வாதி, சிவாத்துவைதிகள் முத்திகள் பரமுத்தியல்ல | 207 |
| வைதிக சைவ சித்தாந்தாத்வைத முத்தியிலக்கணம் | 208—10 |
| மோட்சோபாயங்களில் ஞானநெறி | 211 |
| பிரபத்திநெறி | 212—3 |
| அந்தரங்கபக்தி வரும் முறை | 214 |
| பாஹ்யபக்திநிலை | 215 |

# தத்துவ விளக்க அட்டவணை

| பூதம் | வடிவம் | பீசம் | குறி | அபிமான தெய்வம் | சூக்கும பூத அதிதெய்வம் | நிறம் | குணம் | வியாபக அளவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பிருதிவி | நாற்கோணம் | ல | வச்சிரம் | இந்திரன் | பிரமன் | பொன் | தரித்தல் | ஆகாயம்வரை |
| 2 அப்பு | பிறை | வ | தாமரை | வருணன் | மால் | வெண்மை | இளக்குதல் | பிரகிருதிவரை |
| 3 தேயு | முக்கோணம் | ர | சுவத்திகம் | அக்கினி | உருத்திரன் | சிவப்பு | சுடுதல் | சுத்தவித்தைவரை |
| 4 வாயு | அறுகோணம் | ய | ஆறுபுள்ளி | வாயு | ஈசுவரன் | கருமை | சலித்தல் | சதாசிவதத்துவம்வரை |
| 5 ஆகாயம் | வட்டம் | ஹ | விந்து | வியோமரூபி | சதாசிவர் | புகை | இடங்கொடுத்து நிற்றல் | விந்துதத்துவம் வரை |

| கன்மேந்திரியம் | தொழில் | தெய்வம் | ஞானேந்திரியம் | தன்மாத்திரை | தெய்வம் |
|---|---|---|---|---|---|
| 1 வாக்கு | வசனம் | அக்கினி | 1 செவி | 1 சத்தம் | திக்குப்பாலகர் |
| 2 பாதம் | கமனம் | இந்திரன் | 2 தோல் | 2 பரிசம் | வாயு |
| 3 பாணி | தானம் | விஷ்ணு | 3 கண் | 3 ரூபம் | சூரியன் |
| 4 பாயு | விசர்க்கம் | இயமன் | 4 நாக்கு | 4 இரசம் | வருணன் |
| 5 உபத்தம் | ஆனந்தம் | பிரமன் | 5 மூக்கு | 5 கந்தம் | அச்சுவினிதேவர் |

# தத்துவங்கள் — 36

பூதம் 5, தன்மாத்திரை 5, ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5 ஆக 20.

21 மனம் = சந்திரன்
22 அகங்காரம் = விமேசர்
23 புத்தி = புத்திசத்தி
24 சித்தம் = குணம் 3 (மால், பிரமன், நீலவுருத்திரன்.)
25 புருடன் = (பிரகிருதி) } = இராகேசர்
26 அராகம்
27 வித்தை = வித்தியாதேவி
28 கலை = கலாதேவி
29 நியதி } = காலேசர்
30 காலம்
31 மாயை = மாயாதேவி
32 சுத்தவித்தை = விமலவித்தியாதேவி
33 ஈசுரம் = மகேசுரர்
34 சாதாக்கியம் = சதாசிவர்
35 விந்து = சத்தி
36 நாதம் = சிவம்

## உருவகம்

கன்மேந்திரியம் } = குதிரைகள்
ஞானேந்திரியம்
அந்தக்கரணம் = உருளை
முக்குணம் = தேர்
காலாதி தத்துவங்களில் உண்டான புருடன் = தேர்ப்பாகன்
ஏழுகுணம் = பரிசனம்
ஆன்ம உணர்வு = அரசன்
பிருதிவியாதி = பூமி

அரசன் இவ்வாறு பவனிவந்து துரியத்தை அடைவன் என்பர்.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவநெறிப்பிரகாசம்

## மூலமும் உரையும்

---

### நூல்வரலாறு

பவநெறியை மாற்றியன்பர்க் கருளான் முத்தி
பாலிக்கப் புவிமீதில் வந்தபர குருவே
அவநெறியே செறிந்துநெடுங் காலமுழன் றதனா
லல்லலே நன்மையொன்று மான தில்லை
தவநெறியைச் சார்கிலே னேனு முன்றன்
றனாசையெனுங் கருணையினாற் சாற்ற வேண்டும்
சிவநெறியை நன்றாகச் சிறியேன் றேர்ந்தே
சேர்வரிதாஞ் சிவானுபவஞ் சேரு மாறே.

நன்றுநன் றிங் குன்மொழிதா னாசமிலா ஞானநெறி
ஒன்றுமன்றோ வென்று முறுதுணைதான் - மன்றுள்
உறைவான்சொல் லாகமத்தி னுண்மை தமிழால்
அறைவா முணர்ந்திடுவன் பால்.

ஸ்ரீமத்தாயிராநின்ற மகாமேரு மத்தகத்திற் கயிலாயத்திலே உமையுடன்கூடியிருக்கின்ற ஸ்ரீகண்ட பரமசிவன் தேவரிஷிகணங்கள் சேவிக்க எழுந்தருளியிருக்குஞ்சமயத்திலே, குமாரசிகரத்தினின்றும் குமாரர் எழுந்தருளி ஸ்ரீகண்ட பரமேசுவரனையும் உமாதேவியாரையும் மூன்றுபிரகாரம் பிரதக்ஷிணம்பண்ணிப் பன்னிரண்டுபிரகாரம் நமஸ்கரித்துத் திருவோலக்கஞ்சேவித்துக்கொண்டிருந்தார். தேவரிஷிகள் பிரசங்காப் பிரசங்கமாகத் தத்துவம் துவிதமோ விசிட்டாத்துவிதமோ அத்துவிதமோ என்று பிரசங்கிக்கக் குமாரர் எழுந்திருந்து சுவாமியை நமஸ்கரித்து, தேவரீரனுக்கிரகம் பண்ணின ஆகமங்கள்தாமே யுக்தியுக்தமாகத் துவிதம் விசிட்டாத்துவிதம் அத்துவிதம் இவைகளைச் சொல்லுகின்றன. ஆகையால் தத்துவம் நிச்சயமாக அனுக்கிரகிக்கவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்ய, அப்பொழுது

ஸ்ரீகண்ட பரமேசுவரன் மிகவும் கிருபையுடையராய்த் திருநோக்களித்துச் சிரசிலே ஸ்ரீஹஸ்தம்வைத்து, 'இராசத தாமதகுணத்தினலே மூடராயிருக்கிற பெயர்க்கு அதிகாரத்துக்குத் தக்கதாகத் துவிதமும் விசிட்டாத்துவிதமும் சில ஆகமங்களிலே சொன்னேம்; சத்தியம் சத்தியம் புனர்சத்தியம் அத்து விதமே முக்கியம்' என்று முக்கியாதிகாரியாயிருக்கிற குமாரருக்குப் பிரண வார்த்தத்தையும் சர்வஞ்ஞானேத்தரம் என்கின்ற ஆகமத்தையும் வாமதேவர் சனகர் முதலான ரிஷிகளும் கூடிக்கேட்க அனுக்கிரகித்தார்.

பின்பு குமாரர் அத்துவிதமே சித்தாந்தமென்ற அனுபவத்துக்கு வர அறிந்து சுவாமியை நமஸ்கரிக்கச் சுவாமி ஈசுவரியை விலாசத்துடனே பார்த்துக் குமாரரை ஆலிங்கனம் பண்ணி உச்சியை மோந்துகொண்டு கிருபைபண்ணி அனுப்பக் குமாரரும் அனுப்பிக்கொண்டு குமாரசிகரமே எழுந்தருளினர்.

பின்பு வாமதேவ மகரிஷியும் சுவாமிசன்னிதியில் அனுப்பிக்கொண்டு குமாரசிகரத்திலே குமாரருடைய சன்னிதியிலே வந்து மூன்று பிரகாரம் பிரதக்ஷிணம் பண்ணிப் பன்னிரண்டு பிரகாரம் நமஸ்காரம் பண்ணி, 'சுவாமி! அடியேனுக்கு முக்கியாத்துவிதத்தையும் பிரணவார்த்தத்தையும் விளங்க உபதேசிக்கவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, குமாரர் வாமதேவ மகரிஷியைப் பார்த்து, 'சகலமாயிருக்கிற ரகசியமும் நீர் சிவனிடத்திலே நின்று அறிந்திருக்கிறீர்; நீர் அறியாததாக ஒன்றுமில்லை; வாமதேவர் முத்தரென்று வேதத்திலே சொல்லப்படுகிறவர்; பஞ்சாக்ஷரத்துக்கு ஆதிரிஷியாயிருக்கிறவர்' என்று அநேகமாகத் திருவுளம் பற்ற, அதற்கு வாமதேவமகரிஷி 'கிஞ்சிஞ்ஞராய் மலபெத்தராய் இருக்கிற செந்துக்கள் அடியேங்கள்; தேவரீர் நின்மலராய்ச் சர்வஞ்ஞராய் இருக்கிற பதி' என்று விண்ணப்பஞ்செய்ய, குமாரர் அதற்கு, நம்முடைய இடத்திற் சினேகத்தினலே சொல்லுகின்றீரென்று மிகவும் கிருபையுடையராய் முக்கியாத்துவிதமாகப் பிரணவார்த்தத்தையும் சர்வஞ்ஞானேத்தரமென்கிற ஆகம இரகசியத்தையும் உபதேசித்து, 'இதைப் பக்குவான்மாக்களுக்குப் போதியும்' என்று அனுக்கிரகித்தார். அவர் பிரணவ பஞ்சாக்கரங்களுடைய அர்த்தத்தையும் சர்வஞ்ஞானேத்தரத்தையும் பின்னையும் அத்துவிதமாகச் சொல்லுகிற ஆகமார்த்தங்களையும் நீலகண்ட சிவாசாரியருக்கு உபதேசிக்க, அவர் சிவராசதானியாகிற காசியிலே மணிகர்ணிகா தீரத்திலே பெரிய மடத்தில் நயிட்டிகவரியரான விசுவேசுர சிவாசாரியருக்கு உபதேசிக்க, அவர் ஆரியப் பிராமண வங்கிசத்திலே அவதரித்துச் சைவசன்னியாசியான சதாசிவ சிவாசாரியருக்கு உபதேசிக்க, அவர் கன்னடதேசத்திற் சிவமார்க்கப் பிரகாச சிவாசாரியருக்கு உபதேசிக்க, அவர் சோழதேசத்திலே மருதாந்த சோழபுரத்தில் அவதரித்தருளின சிவாக்கிரயோகிகள் என்னும் சிவக்கொழுந்து சிவாசாரியருக்கு உபதேசிக்க, அவர், தொண்டைமண்டலத்தில் அவதரித்தருளிச் சிவாகமங்களில் ஞானபாதத்திலே நாலுலட்சம் கிரந்தம் அத்தியயனம் பண்ணின அதிவர்ணுசிரம ஆசாரியவரிய சைவபரிபாலக சிவாக்கிரயோகிக்கு அனுக்கிரகிக்க, அவர், சுவாந்தநாச்சியார் 'செனன மரணேபாதி

நீங்கச் சிவானன்னிய சாக்ஷாத்காரம் விளங்க அனுக்கிரகிக்கவேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்ய, மிகவும் கிருபையாய்ச் சிவாகமங்களிற் சாரமாயிருக்கிற வைதிக சைவசித்தாந்தாத்வயப் பிரதிபாதகமாய்த் திராவிடரூபமாய்ச் சிவநெறிப்பிரகாசம் என்னும் சாத்திரத்தை உபதேசித்தார். இதன்பொருளை அளப்பரிதாயினுஞ் சமுத்திரகலச நியாயமாக நான் அறிந்த அளவு உரையிடுகின்றேன். இதைப் பெரியோர்கள் நோக்கிப் பிழைதீர்த் தருளுவர்.

## கணபதி துதி

**அவதாரிகை :** மேல் இந்தச் சாத்திரம் நிர்விக்கின பரிசமாப்தியின் பொருட்டும் சிஷ்யவசனதானுபிவியத்தியின்பொருட்டும் இந்தச் சாத்திரம் உலகத்திற் பிரகாசிக்கையின் பொருட்டும் சிவாக்கிர யோகீந்திர சிவாசாரியர் ஆதியிலே பண்ணின விநாயகர் துதி.

1. சீராருஞ் செம்மேனித் திகழ்வு மானைத்
திருமுகமுங் கண்மூன்றுஞ் செய்ய தாளும்
ஏராரு மங்குசமும் நீள்பா சத்தோ
டிலட்டுகமு மெழுதுமெழிற் கொம்பு மென்றும்
நேராக வைத்ததிருக் கரங்க ணான்கும்
நின்மலமா மும்மதமு முள்ள நித்தன்
காராருங் கண்டனுமை களிக்க வந்த
கணபதியி னிருபதங்கள் கருதல் செய்வாம்.

**இதன் பொருள் :** சீர் ஆரும் செம்மேனி திகழ்வும் - நித்திய விபூதி யுடைய சிவந்த திருமேனியொளியையும்; ஆனை திருமுகமும் - கயமுகாசுரனைச் சங்கரிக்கவேண்டி யானைமுகம்போன்ற முகத்தையும்; கண் மூன்றும் - சோமசூரியாக்கினி ரூபமாகிய மூன்று நயனங்களையும்; செய்யதாளும் - சிவந்த சீர்பாதங்களையும்; ஏர் ஆரும் அங்குசமும் - அழகு பொருந்திய தோட்டியும்; நீள் பாசத்தோடு - நீண்ட கயிறும்; இலட்டுகமும் - மோதகமும்; எழுதும் எழில் கொம்பும் - மகாமேருவில் மகாபாரதம் எழுதுவது நிமித்தமாகப் பிரகாசியாநின்ற ஒரு கொம்பும்; என்றும் - எப்பொழுதும்; நேராக வைத்த திருக்கரங்கள் நான்கும் - மேற்பாகத்தில் வலப்புறத்தில் அங்குசமும் இடப்புறத்தில் பாசமும் கீழ்ப்பாகத்தில் இடப்புறத்தில் மோதகமும் வலப்புறத்தில் கொம்பும் இப்படி நேராக வைக்கப்பட்ட ஸ்ரீஹஸ்தங்கள் நான்கையும்; நின்மலம் ஆம் மும்மதமும் உள்ள - நின்மலமாகிய இச்சா ஞானக் கிரியா ரூபமாகிய மூன்று மதத்தையுமுடைய; நித்தன் - நித்தியனாய் அழிவற்றிருக்கின்றவன்; கார் ஆரும் கண்டன் உமை களிக்க வந்த - கறுத்தகண்டத்தை யுடைய ஸ்ரீகண்ட பரமேசுவரனும் உமாதேவியாரும் கூடிக்களிக்கத் திருவவதாரஞ்செய்த; கணபதியின் இருபதங்கள் - கணங்களனைத்தினுக்கும் சுவாமியாகிய விக்னேச்சுவரனுடைய இரண்டு திருவடிகளையும்; கருதல் செய்வாம் - தியானம் பண்ணுவாம் என்றவாறு. (க)

## சிவபெருமான் துதி

அ - கை: மேல் இச்சாத்திரத்தில் சொல்லப்படாநின்ற சிவபெருமானைச் சுவரூப தடத்த இலக்கணத்தால் துதிக்கின்றது.

2. சத்தியஞா னனந்த மயமாய் நின்ற
தற்பரனே சத்தனென வருவ னாகிப்
பத்தியினு னினைந்தேத்த வருவ ரூபப்
பான்மையா யுத்தியுத்தப் பரிச தாகிப்
புத்தியா னதுவுமுத்தி தானு நல்கப்
பொருந்துபிர விருத்தகனு மியல்ப தாகி
நித்தியமாஞ் சத்தியுருத் தரித்து மன்று
ளின்றுநடஞ் செய்வோன்ற னினைதல் செய்வாம்.

இ - ள்: சத்தியஞான ஆனந்தமயமாய் நின்ற தற்பரனே - அசத்தியமல்லாமலும் அசித்தல்லாமலும் அனானந்தமல்லாமலும் இப்படி அதத்வியாவிருத்தியாவதொழிந்து இதுவென்று சொல்லப்படாத சச்சிதானந்தமான தற்பரனே, கர்த்தாவென்கின்ற அவத்தாதீதமான பரப்பிரமமே;

இது சுவரூப இலக்கணம்; இதற்குப் பிரமாணம் அசிந்தியவிசுவசாதாக்கியத்திற் கண்டுகொள்க.

சத்தன் என அருவன் ஆகி - யாதோ ஒரு காரணத்தால் பரையாதி பஞ்ச சத்திகளில் ஞானசத்தியே திருமேனியாக உத்தியோகமற்றிருக்கிற சத்தியை உடைய சத்தன் என அருபியாய்; பத்தியினால் நினைந்து ஏத்த அருவரூபப் பான்மையாய் உத்தியுத்தப் பரிசது ஆகி - யோகிகளாலும் ஞானிகளாலும் மந்திரங்களைச் செபிக்கிறவர்களாலும் பத்தியுடனே தியானித்துப் பூசிப்பதுநிமித்தமாக அருபமாயிருக்கின்ற பரையாதி பஞ்சசத்திகள் ரூபமான கலைகளுடனே கூடியிராநின்ற சுத்தமாயையிற் பதிந்தபொழுது உண்டான ஈசானாதி பஞ்சமந்திரங்களைத் திருமேனியாக உடையவராகையாலே அருபரூபமாய்க் காரியம்பண்ண உத்தியோகித்திருக்கிற சத்தியையுடையவரதனால் உத்தியுத்தரென்னும் அவத்தையையுடைய சதாசிவமூர்த்தியாய்; புத்தியானதுவும் முத்திதானும் நல்க பொருந்து பிரவிருத்தகன் ஆம் இயல்பது ஆகி - பிரளயாகலருக்குப் போகமும் மோக்ஷமும் பொருந்தக் காரியங்களைப் பண்ணுநின்ற சத்திகளையுடையராகையால் பொருந்தப்பட்ட பிரவிருத்தர் என்னும் அவத்தையை இயல்பாகவுடைய மகேச்சுவரராய்; நித்தியம் ஆம் சத்தி உருத்தரித்து மன்றுள்நின்று நடம் செய்வோன் தான் நினைதல் செய்வாம் - தனது சமவாய சத்தியே திருமேனியாகத் தரித்துக்கொண்டு சகல ஆன்மாக்களுக்கும் அனுக்கிரக காரணமாகக் கனகசபையிலே நிருத்தம்பண்ணுநின்ற சிதம்பரேச்சுவரனுடைய பாதபதுமங்களைத் தியானம் பண்ணுவாம் எ - று.

இது தடத்த இலக்கணம்; இதற்குப் பிரமாணம் வாதுளம், பவுட்கரம், மிருகேந்திரம் இவற்றிற் கண்டுகொள்க. (௨)

## சத்திதுதி

அ - கை : மேல் இந்தச் சிவபெருமானுடைய அக்கினிக்கு உட்டிணம் போலப் பிரிவற்றிருக்கும் சத்தியைத் துதிக்கின்றது.

3\. பரையாதி யிச்சையறி வியற்ற லென்னும்
பான்மையாய்ப் பரநாத விந்து வாகித்
தரையாதி யாக்கியளித் தழித்தல் செய்யுஞ்
சத்தியாய் மனோன்மனியாய் மகேசை யாகி
வரையான்செய் தவப்பயனு முமையா ளாகி
மன்றினடம் புரிவோன்றன் வாமங் கொண்டாள்
விரையாரு மலர்ப்பாதஞ் சென்னி மீதும்
விழிமீதும் வைத்துளத்தில் விரும்பு வாமே.

இ - ள்: பரை ஆதி இச்சை அறிவு இயற்றல் என்னும் பான்மையாய் - பரமசிவனிடத்திலே அக்கினிக்கு உட்டிணம்போலப் பிரிவற்றிருக்கின்ற அருட்சத்தியானது பஞ்சகிருத்திய நிமித்தமாகத் தொழில் வேற்றுமைகளால் பரையாதி பஞ்சசத்திகளாம். பரமசிவனிடத்தில் ஆயிரத்துள் ஒருகூறாக ஆன்மாக்களை அனுக்கிரகிக்க வேண்டுமென்று அருண்முகிழ்த்தது பராசத்தி. அந்தப்பராசத்தியில் ஆயிரத்துள் ஒருகூறாக உண்டாய் ஆன்மாக்களுக்கு விடயசுகத்தைப் பண்ணும் ஆதிசத்தி. அந்த ஆதிசத்தியில் ஆயிரத்துள் ஒருகூறாக உண்டாகி உபாதானத்திரயங்களிலே நின்று சிருட்டியாதிகளைப் பண்ணவேண்டுமென்னும் இச்சையையுடையது இச்சாசத்தி. இச்சாசத்தியில் ஆயிரத்துள் ஒருகூற்றில் உண்டாகிச் சருவ ஆன்மாக்களுடைய கன்மங்களையும், மலபரிபாகங்களையும், அவற்றுக்கிடாகச் சுத்தம் மிச்சிரம் அசுத்தம் என்னும் மூன்று அத்துவாவில் தனு கரண புவன போகங்களை விந்து மோகினி மான் என்னும் உபாதானத்திரயங்களிலே நின்றும் உண்டாக்குமதையும் இஃதின்னபடியென்று தன்னிலே தானே உள்ளபடி எல்லாவற்றையும் அறியும் ஞானசத்தி. அந்த ஞானசத்தியில் ஆயிரத்துள் ஒருகூறாக உண்டாய்க் கிருத்தியங்களைப்பண்ணும் கிரியாசத்தி — இப்படிப் பஞ்ச சத்திகளாம் இயல்பாய்;

பரநாத விந்து ஆகி - சுத்தமாயா சொரூபமான அபரநாதம் அபர விந்துக்களுக்குத் தாரகமாம் பரநாதம் பரவிந்துவுமாய்; தரை ஆதி ஆக்கி அளித்து அழித்தல் செய்யும் சத்தியாய் - பிருதிவி முதலானவைகளை உண்டாக்கிப் பாலனம்பண்ணிச் சங்கரிக்கும் ஜனனி, ரோதயித்திரி, ஆரணி என்னும் சத்தித் திரயங்களுமாய்; மனோன்மனியாய் - பரையாதி பஞ்ச சத்தியில் பத்தில் ஒன்றிலுண்டான சிவசாதாக்கியமுதலான பஞ்ச சாதாக்கிய

ரூபமான சதாசிவ தேவர்க்கு மனோன்மனியென்னும் போக சத்தியுமாய்; மகேசையாகி - கன்மசாதாக்கியத்தில் ஆயிரத்துள் ஒரு கூருக உண்டான சகளரான மகேசுரருக்குப் போகசத்தியான கவுரி என்னும் சத்தியுமாய்; வரையான் செய் தவப்பயன் ஆம் உமையாள் ஆகி - மகேச்சுவரமூர்த்திக்கு ஆயிரத்துள் ஒருகூற்றில் உண்டான உருத்திரமூர்த்திக்குப் பருவதராசனை இமவான் தவம்பண்ண ஒரு காரணத்தால் அத்தவப்பலமாய் இமவானிடத்திலே திருவவதாரம் செய்தருளிய பார்வதியார் என்னும் போகசத்தியுமாய்; மன்றில் நடம் புரிவோன்றன் வாமம் கொண்டாள் - கனகசபையிலே பரமானந்தத் தாண்டவம் பண்ணும் பரமசிவனுடைய வாமபாகத்தைப் பெற்ற சிவகாமசவுந்தரியினுடைய; விரை ஆரும் மலர்ப்பாதம் சென்னி மீதும் விழிமீதும் வைத்து உளத்தில் விரும்புவாம் - வாசனை நிறைந்திருக்கின்ற தாமரைமலர்போன்றிராநின்ற சீர்பாத பதுமங்களைச் சிரத்திலும் கண்களிலும் இதயத்திலும் தரித்து வணங்குவாம் எ - று.

இதற்குப் பிரமாணம் வாதுளாகமத்திற் கண்டுகொள்க. (ங)

## குமாரர் துதி

**அ - கை:** மேல் தமது சந்தானகுரவதெய்வமான குமாரவணக்கங் கூறுகின்றது.

4. வேதசிவா கமமங்க மாதி யான
மெய்ந்நூல்க ளனைத்தினையும் விரித்து நன்ரு
ஓதியிட அகத்தியரை முதலா யுள்ள
வுயர்முனிவோர்க் கருள்புரிந்த வொருமை யாளன்
சீதமதி முடியோனு முமையு மீன்ற
திருமதலை யறுமுகனுஞ் செல்வன் பாதம்
ஏதமற வெஞ்சிரத்து முளத்தும் வைத்தே
யேத்திவினை யனைத்தினையு மிழித்து வாழ்வாம்.

**இ - ள்:** வேதம் சிவாகமம் அங்கம் ஆதியான மெய் நூல்கள் அனைத்தினையும் விரித்து நன்ரு ஓதியிட அகத்தியரை முதலாயுள்ள உயர் முனிவோர்க்கு அருள் புரிந்த ஒருமையாளன் - நான்கு வேதங்களையும், இருபத்தெட்டுத் திவ்வியாகமங்களையும், ஆறங்கங்களையும் இவை முதலாகிய சத்திய மார்க்கத்தைச் சொல்லும் இன்னுமுள்ள சாத்திரங்களையும் வித்தாரமாக ஐயம் திரிபு இன்றி ஓதத் தக்கதாக அகத்தியர் முதலாயுள்ள பரம இருடிகளுக்கு அனுக்கிரகம் பண்ணும் ஒருமைப்பாட்டை உடையவன்; சீதமதி முடியோனும் உமையும் ஈன்ற திருமதலை அறுமுகன் ஆம் செல்வன் பாதம் - குளிர்ந்த சந்திரனைச் சிரத்திலே தரித்திருக்கின்றவனும் உமாதேவியாரும் கூடிப் புணரத் திருவவதாரஞ்செய்த அழகுபொருந்திய சண்முகராம் பரம ஐசுவரியத்தை உடையவரது சீர்பாதங்களை; ஏதம் அற எம்

சிரத்தும் உளத்தும் வைத்தே ஏத்தி வினை அனைத்தினையும் இழித்து வாழ்வாம் - ஆணவாதி மறைப்பாகிய குற்றமற எம்முடைய சிரத்திலும் இதயத்திலும் தியானித்துத் தோத்திரம் பண்ணிச் சருவமாயிருக்கின்ற சஞ்சிதம் முதலான கன்மங்களை நீங்கிச் சிவானுபவம்பெற்று வாழ்வாம் எ - று. (ச)

## நந்திகேசுரர் துதி

அ - கை: மேல் நந்திகேசுரர் வணக்கம் கூறுகின்றது.

5. கர நான்குங் கறைமிடறு மூன்று கண்ணுங்
கங்கைமதிச் சடைமுடியுங் கரங்க டம்மில்
விரவாரை வெல்மழுவு மானு மிக்க
விறற்சுரிகை பொற்பிரம்பும் விளங்கி யோங்க
அரனார்தம் அருளதனாற் பெற்றே நாளு
மபரபர மேசுரனென் றறைய வுண்டாய்த்
திரமேவு திருநந்தி தேவன் பொற்றாள்
சிந்தையினுஞ் சிரத்தினிலுஞ் சேர்த்தல் செய்வாம்.

இ - ள்: கரம் நான்கும் - நான்கு ஸ்ரீஹஸ்தங்களையும்; கறை மிடறும் - காள கண்டத்தையும், மூன்று கண்ணும் - மூன்று திருநயனங்களையும்; கங்கை மதி சடைமுடியும் - கங்காநதியும் இளம்பிறையும் பொருந்திய சடா மகுடத்தையும்; கரங்கள் தம்மில் விரவாரை வெல் மழுவும் மானும் மிக்க விறல் சுரிகை பொன் பிரம்பும் விளங்கி ஓங்க - நான்கு ஸ்ரீ ஹஸ்தங்களிலும் சத்துருக்களைச் சயிக்கும் மழுவும் மான்கன்றும் மிகுந்த வெற்றிப்பாட்டையுடைய சுரிகையும் பிரகாசிக்கின்ற பிரம்பும் விளங்கி மேலோங்கும்படியாக; அரனார் தம் அருள் அதனால் பெற்றே நாளும் அபரபரமேசுரன் என்று அறைய உண்டாய் - பரமேசுரனுடைய அனுக்கிரகத்தினாலே எந்நாளும் சிவசாரூப்யபதத்தைப் பெற்று இரண்டாம் பரமேசுரனென்று பிரம விட்டுணுவாதிகளாற் சொல்லப்பெற்ற; திரம் மேவு திரு நந்திதேவன் பொன் தாள் சிந்தையினும் சிரத்தினிலும் சேர்த்தல் செய்வாம் - நித்தியத்துவத்தைப் பெற்றிருக்கிற ஸ்ரீ நந்திகேசுவர பகவானுடைய பிரகாசம் பொருந்திய சீபாதங்களை இதயத்திலும் சிரத்திலும் தரித்துக்கொள்வாம் என்றவாறு. (ரு)

## வாமதேவர் துதி

அ - கை: இது வாமதேவ மகரிஷியைத் துதிக்கின்றது.

6. அருளதனா லரகிலுள்ளோ ரனைத்து முய்ய
வஞ்செழுத்தை யறைந்தொருகா லவர்க ளெல்லாம்
இருணிரயந் தனினின்று மேறச் செய்தோ
னெந்தைசிவன் திருநாம வெழுத்தஞ் சுக்கும்

குருவெனவே பிரமாதி யோதப் பெற்ற
கோமானெஞ் சந்தான குரவ ஞன
திருமருவு முனிவாம தேவன் பாதஞ்
சிந்தையினுஞ் சிரமீதும் சேர்த்தல் செய்வாம்.

இ - ள்: அருள் அதனுல் நரகில் உள்ளோர் அனைத்தும் உய்ய அஞ்செழுத்தை அறைந்து ஒருகால் அவர்கள் எல்லாம் இருள் நிரயம் தனில் நின்றும் ஏறச்செய்தோன் - சருவலோகங்களிலும் திருவுலாப் புறஞ் செய்துவருங் காலத்தில் நரகத்திலே யாதனைப்படும் ஆன்மாக்களைக் கண்டு கிருபையினுலே அவர்களெல்லாரும் பிழைக்க ஒருகால் பஞ்சாக் கரத்தை உச்சரித்து அவர்களெல்லாரும் இருண்ட நரகங்களில்நின்றும் சிவலோகத்தை அடையச்செய்த பரம கிருபாளு; எந்தை சிவன் திரு நாம எழுத்து அஞ்சுக்கும் குரு என பிரமாதி ஓதப்பெற்ற கோமான் - எமது சுவாமியான சிவனுடைய திருநாமமாகிய ஸ்ரீபஞ்சாக்கரத்துக்கு இருஷி யென்று பிரமாதிகளால் சிரசில் நேசித்துச்சொல்லப்பட்ட சுவாமி; எம் சந்தான குரவன் ஆன திரு மருவு முனி வாமதேவன் பாதம் சிந்தையினும் சிரமீதும் சேர்த்தல் செய்வாம் - எம்முடைய சதாசிவசந்தானத்துக்கு ஆதி குருவான ஞான ஐசுவரியத்தைப் பொருந்தியிருக்கிற வாமதேவ மகரிஷியி னுடைய ஸ்ரீபாதங்களை இதயத்திலும் சிரத்திலும் தரிப்பாம் எ - று. (௬)

## சைவாசாரிய சமயாசாரிய வணக்கம்

அ - கை: மேல் சைவத்தில் நாலாச்சிரமத்தில் ஆசாரியர்களையும் சமயாசாரியர்களையும் தோத்திரம் பண்ணுகின்றது.

7. துருவாச ரகத்தியர்நற் கவுதமர்சொற் றதீசி
தூய்நெறியாஞ் சைவசம யக்குரவர் பதங்கள்
திரமாக வுளத்தினிலுஞ் சிரத்தினிலுந் தரித்தே
சிவனருள்சேர் மதலையாய்த் திருவவதா ரஞ்செய்
கரவாத திருஞான சம்பந்தர் பதமும்
கன்மிதப்பாய் வந்தோர்தங் கழலிணையுங் கருதி
அரனுரைத் தூதேவு மவர்பதமு மற்று
மரனுர்தம் மடியார்தம் மடிமலரு நினைவாம்.

இ - ள்: துருவாசர் அகத்தியர் நல் கவுதமர் சொல் ததீசி தூய் நெறியாம் சைவசமய குரவர் பதங்கள் - சுத்தமார்க்கமான சைவசமயத்தில் சன்னியாசம், வானப்பிரத்தம், கார்கத்தியம், பிரமசரியம் என்னும் இந்த நாலு ஆச்சிரமத்துக்கும் அடைவிலே துருவாசர், அகத்தியர், கவுதமர், ததீசி என்னும் பெயருடைய முதன்மை ஆசாரியர்களான இந்நால்வர் சீர்பாதங்களையும்; திரம் ஆக உளத்தினிலும் சிரத்தினிலும் தரித்து - திட மாக இதயத்திலும் சிரத்திலும் தரித்து; சிவன் அருள் சேர் மதலையாய்

திரு அவதாரம்செய் கரவாத திருஞான சம்பந்தர் பதமும் - சிவன் அனுக்கிரகத்தைத் திருமுலைப்பாலுண்டு பெற்ற சிறுபிள்ளையாய்த் திருவவதாரஞ் செய்த கபடமற்ற திருஞானசம்பந்தப் பெருமானுடைய சீர்பாதங்களையும்; கல் மிதப்பாய் வந்தோர்தம் கழல் இணையும் கருதி - சைனராசா நம் மதத்தை விட்டுச் சிவசமயத்திற் புக்கார் என்னுங் கோபத்தால் அநேக வாதைகள் செய்து கல்லுடன் பிணைத்துச் சமுத்திரத்திலே போடச் சிவானுக்கிரகத்தால் அந்தக் கல்லே தெப்பமாக மிதந்து கரையேறி வந்த அப்பர் தம்பிரானுர் இரண்டு சீர்பாதங்களையும் தியானித்து, அரனுரைத் தூது ஏவும் அவர் பதமும் மற்றும் அரனுர்தம் அடியார்தம் அடிமலரும் நினைவாம் - பரவைநாச்சியார் கிருகத்துக்குச் சிவனைத் தூதாக அனுப்பின சுந்தரப்பெருமாள்நாயனுர் சீர்பாதங்களையும் மற்றுமுள்ள சிவனடியார்களுடைய சீர்பாதங்களையும் தியானம்பண்ணுவாம் எ - று. (எ)

## குருவணக்கம்

**அ - கை:** மேல் பரமேஷ்டிகுரு, பரமகுரு, சொகுரு வந்தனங் கூறுகின்றது.

8. உத்தமமா மாரியதே யத்து நல்ல
வுயர்மறையோர் குலத்துதித்தே யுணர்ந்தி யாவும்
சத்தியமாஞ் சைவத்துட் சந்நி யாச
தாபதராஞ் சதாசிவதே சிகனுர் தாளும்
சித்திதருஞ் சிவநெறித்தே சிகனுர் தாளுஞ்
சிரத்திருத்திச் சிவக்கொழுந்தா யெம்மை யாண்டு
முத்திதர வெழுந்தருளுங் கோமான் பாத
முடிமேல்வைத் துளத்திலென்று முன்னு வாமே.

**இ - ள்:** உத்தமம் ஆம் ஆரிய தேயத்து நல்ல உயர் மறையோர் குலத்து உதித்து உணர்ந்து யாவும் - தேசங்களுக்கெல்லாம் உத்தமமாயிருக்கின்ற இமவற்பருப்பதத்திற்கும் விந்தியத்துக்கும் நடுவுபட்ட 'ஆரியாவர்த்த புண்ணிய பூமி' என்று சொல்லப்பட்ட ஆரியதேசத்தில் உயர்ந்த பிராமணர் வங்கிசத்திலே திருவவதாரஞ்செய்து புராணம் இதிகாசம் வேதம் வேதாங்கங்கள் இருபத்தெட்டுத் திவ்வியாகமங்கள் மற்றுமுண்டான கலைஞானங்கள் யாவையும் அறிந்து; சத்தியம் ஆம் சைவத்துள் சந்நியாச தாபதராம் சதாசிவ தேசிகனுர் தாளும் - மெய்யாயிருக்கின்ற வைதிக சைவ சந்நியாச தாபதரான சதாசிவ ஆசாரியருடைய திருவடிகளையும்; சித்தி தரும் சிவநெறித் தேசிகனுர் தாளும் சிரத்து இருத்தி - சிவஞானமாகிய சித்தியையும் எட்டுச் சித்திகளையும் கொடாநின்ற சிவநெறித் தேசிகனுருடைய சீபாதங்களையும் சிரசிலே தரித்துக்கொண்டு; சிவக்கொழுந்தாய் எம்மை ஆண்டு முத்தி தர எழுந்தருளும் கோமான் பாதம் முடி மேல்

வைத்து உளத்தில் என்றும் முன்னுவாம் - அகண்டாகார சச்சிதானந்த மான பரமசிவனே எம்மை இரக்ஷிப்பது நிமித்தமாகக் கிருதகாடின்னியம் போலச் சிவக்கொழுந்து சிவாசாரியரென்று எமக்கு மோக்ஷங்கொடுக்க எழுந்தருளின சுவாமியுடைய ஸ்ரீ பாதாரவிந்தங்களைச் சிரசிலே தரித்துக் கொண்டு எந்நாளும் வேறறப் பாவிப்பாம் எ - று. (அ)

## சொகுரு வணக்கம்

அ - கை: மேல் சொகுருவை விசேடித்துத் துதிக்கின்றது.

9. ஐயமறப் பதிபசுபா சத்தி னுண்மை
யடைவுணர்த்தி யடியேனைப் பொருள தாக
மையல்செயு மாயைவினை யாண வத்தின்
மயக்கறத்தன் பதமலரெஞ் சென்னி வைத்தே
துய்யையுனை யினிவினைகள் சூழா வென்றே
சுத்தமுத்தி யளித்தசிவக் கொழுந்தோன் றுய்ய
செய்யமலர்ப் பதமிரண்டுஞ் சென்னி மீதுஞ்
சிந்தையினும் வைத்துகந்து சிறந்து வாழ்வாம்.

இ - ள்: ஐயம் அற பதி பசு பாசத்தின் உண்மை அடைவு உணர்த்தி அடியேனை பொருளது ஆக மையல் செய்யும் மாயை வினை ஆணவத்தின் மயக்கு அற தன் பதமலர் எம் சென்னி வைத்து - தீவிரதர சத்தி நிபாதமு மில்லாமே ஒன்றுக்கும் பற்றாத என்னைக் கிருபா விசேஷத்தாலே ஒரு பொருளாகக்கொண்டு பதி பசு பாச ரகசியத்தையுணர்த்தி, ஆன்ம ஸ்வரூப மல்லாத தேகேந்திரியாதிகளில் நானென்று மயக்கத்தைப் பண்ணுவிக்கும் மாயையினுடையவும் இதாகிதத்தாற் சுகதுக்கங்களை உண்டாக்கும் கன்மத்தி னுடையவும் ஆன்மாவின் ஞானக் கிரியா சத்திகளைத் தடுக்கும் ஆணவத்தி னுடையவும் மயக்கமானது போகத் தம்முடைய ஸ்ரீபாதாரவிந்தங்களை எமது சிரசில் வைத்து; துய்யை உனை இனி வினைகள் சூழா என்று சுத்த முத்தி அளித்த சிவக்கொழுந்தோன் துய்ய செய்ய மலர்ப்பதம் இரண்டும் சென்னி மீதும் சிந்தையினும் வைத்து உகந்து சிறந்து வாழ்வாம் - ஆணவம் மாயை கன்மம் என்னும் மலத்திரயங்களில்லாத நித்திய வியாபக சித்துரூபமான சுத்த சைதன்னியம் உனது ஸ்வரூபம், உன்னை இனி ஆணவாதி அற்றிருக் கையால் பிராரத்தம் சஞ்சித ஆகாமியம்போலத் தீக்கை சிவபாவனைகளால் நீங்காது, புசித்துத் தொலையவேண்டிய பிராரத்த கன்மபலம் புசிக்கும் பொழுது அனிச்சையாலாதல் பரேச்சையாலாதல் புசிப்பதன்றிச் சிவஞானம் விஷய இச்சைகளைப் பண்ணாது இப்படிப் பிராரத்தகன்ம போகத்தால் ஏறும் ஆகாமியமாய் வந்து சூழாது என்று சச்சிதானந்தாத்துவய பரிபூரண சிவானன்னியானுபவமான மோக்ஷத்தைக் கொடுத்த ஆனந்த ரூபியான சிவக்கொழுந்து சிவாசாரியருடைய சிவஞானமாகிய மணத்தையும் கருணை யாகிய குளிர்ச்சியையும் பரமானந்தமாகிய தேனையும் முத்தான்மாக்களாகிய

வண்டுகளையுமுடைய செந்தாமரை போன்ற நின்மல ஞான ஸ்வரூப சத்தி சிவாகாரமான ஸ்ரீபாதங்கள் இரண்டையும் சிரசிலும் இதயத்திலுந்தரித்துக் கொண்டு சருவத்திர சிவதரிசனத்தாற் பரமானந்தத்தைப்பெற்று அகம்பிரம மென்னுஞ் சிறப்புடனே வாழ்வாம் எ - று. (கூ)

## அவையடக்கம்

அ - கை: மேல் அவையடக்கம் கூறுகின்றது.

10. தந்தைதாய் தஞ்சிறுவர் மழலைச் சொல்லைத்
தாமுகந்து கேட்டதனைப் பிறர்க்கு நன்றாச்
சிந்தையார் வுறும்படியாய்த் தெளியக் கூறுஞ்
செய்கைபோற் சிதானந்த மேனி யான
எந்தைதா ளிணைமறவா வியல்பி னோர்க
ளெம்முரையை யுகந்துபிறர்க் கிசைப்ப ரென்றே
பந்தமா திகளறியாச் சிறியே னாசைப்
பகுதியாற் சைவநெறி பகர லுற்றேன்.

இ - ள்: தந்தை தாய் தம் சிறுவர் மழலை சொல்லை தாம் உகந்து கேட்டு அதனை பிறர்க்கு நன்றா சிந்தை ஆர்வு உறும்படியாய் தெளியக் கூறும் செய்கை போல் - உலகத்திலே பிதாமாதாக்கள் தமது சிறுபிள்ளை மழலை வார்த்தையைச் சந்தோஷத்துடனே கேட்டு அதனைப் பிறர்க்கு நன்றாகச் சித்தம் சந்தோஷமாகும்படி நமது சிறுபிள்ளை இப்படிச் சொல்லுகிறான் என்று வியத்தமாகச் சொல்லுமாப்போல; சிதானந்த மேனியான எந்தை தாள் இணை மறவா இயல்பினோர்கள் எம் உரையை உகந்து பிறர்க்கு இசைப்பர் என்றே - ஞானானந்தமே திருமேனியாகிய எம்முடைய சுவாமியான பரமசிவன் ஸ்ரீபாதங்களிரண்டையும் மறவாமலிருக்கின்ற இயல்பையுடைய சிவஞானிகள் இச்சாத்திரத்தைப் பார்த்துச் சந்தோஷித்து முமுட்சுக்களுக்கு உபதேசிப்பார்களென்று கொண்டு; பந்தம் ஆதிகள் அறியாச் சிறியேன் ஆசைப் பகுதியால் சைவநெறி பகரலுற்றேன் - இலக்கண இலக்கியங்களை அறியாத சிறியேன் ஆதரவு மிகுதியால் சைவமார்க்கத்தைச் சொல்லுகின்றேன் எ - று.

பந்தமென்ற பதத்துக்குப் பெயர் இலக்கணமாம். (ய)

அ - கை: மேலதற்கொரு புறனடை.

11. குருசரண ரருள்புரிந்த வாக்கு மெம்பாற்
கூடுமனு பவந்தானு மாக மத்தே
வருபொருளும் பேதமற்றோர் வகையே யாக
மதித்துரைத்த லாற்பொருட்பான் மருவா குற்றம்

தருவவுள வேற்குற்ற மெழுத்துடன்சொல் யாப்புத்
தக்கவலங் காரத்திற் ருன்ஞான நிறைவாம்
பெருமையுடை யோரிதனை யாய்ந்துபிழை தீர்த்தே
பிறர்க்குரைப்பா ரருளினு லிதன்பொருளும் பெறவே.

**இ - ள் :** குரு சரணர் அருள் புரிந்த வாக்கும் எம்பால் கூடும் அனுபவந்தானும் ஆகமத்தே வரு பொருளும் பேதம் அற்று ஓர் வகையே ஆக மதித்து உரைத்தலால் பொருட்பால் மருவா குற்றம் - குருசரணர் அருளிச் செய்த திருவாக்கும் எம்மிடத்தில் கூடிய அனுபூதியும் சிவாகமத்திலுள்ள அருத்தமும் பேதமன்றியிலே ஐகமத்தியம் பண்ணி விசாரித்துச் சொல்லுகையால் பொருளிற் குற்றங்கள் பொருந்தமாட்டா; தருவ உளவேல் குற்றம் எழுத்துடன் சொல் யாப்பு தக்க அலங்காரத்தில் தான் - இச்சாத்திரத்து எழுத்து சொல் யாப்பு அலங்காரம் என்னும் இவையிற்றுட் குற்றமேயில்லை, உண்டாயின்;

ஞானம் நிறைவாம் பெருமை உடையோர் இதனை ஆய்ந்து பிழை தீர்த்து பிறர்க்கு உரைப்பார் அருளினுல் இதன் பொருளும் பெற - நிறைந்த ஞானத்தையுடைய ஞாதாக்கள் இச்சாத்திரத்தை ஆராய்ந்து பார்த்துப் பிழைதீர்த்து முமுட்சுக்களுக்குக் கிருபையால் இதன் அருத்தம் விளங்க அருளிச்செய்வார்கள் எ - று. (கக)

**அ - கை :** மேல் இச்சாத்திரம் ஓதும் அதிகாரியைக் கூறுகின்றது.

12. முன்னையருந் தவத்தினு லவ்வறிவு விடாதே
முளைத்ததோர் சாங்குசித்தர் பிராகிருத ராகித்
தன்னையுணா ரார்க்கன்றி முத்தி யெய்தச்
சற்குருவை யடைந்தோதி யுணர்தல் செய்யும்
அன்னநெறி வைநயிகர்க் காக வுன்னி
யருட்குருவி னருளதனு லறிந்த வாறிங்
குன்னலுறுஞ் சிவநெறிப்ர காச மென்றே
யுரைத்திடுவா மாகமத்தி னுட்பொருளி னூடே.

**இ - ள் :** முன்னை அரும் தவத்தினுல் அ அறிவு விடாதே முளைத்ததோர் சாங்குசித்தர் - முற்சனனத்தில் அரிய தவத்தால் முற்சன்மத்தறிவுடன் சனித்த சாங்குசித்தர்; பிராகிருதர் ஆகித் தன்னை உணரார்க்கு அன்றி - பிராகிருதரென்னும் தங்கள் சுவரூபத்தை அறியாமல் பிரகிருதி காரியமாகிய தேகமே ஆன்மா என்றிருக்கும் பிராகிருதருக்குமல்லாமல்; முத்தி எய்தச் சற்குருவை அடைந்து ஓதி உணர்தல் செய்யும் அன்னநெறி வைநயிகர்க்கு ஆக உன்னி அருட்குருவின் அருளினுல் அறிந்த ஆறு இங்கு - மோட்சத்தை யடைவதற்காக ஞானசாரியன் சன்னிதிப்பட்டுச் சாத்திரங்களைப் படித்தறியும்

வினையசிலரான வைநயிகர்க்கு மோட்சம் வருவதுபொருட்டு அருளே திருமேனியாயுடைய எமது ஆசாரியர் கிருபையால் யாம் அறிந்தமாத்திரம்;

உன்னலுறும் சிவநெறிப் பிரகாசம் என்றே உரைத்திடுவாம் ஆகமத்தின் உட்பொருளின் ஊடே - விசாரிக்கப்படாநின்ற சிவநெறிப்பிரகாசம் என்று பெயரை உடைய சாத்திரம் சிவாகமத்தில் உள்ள அருத்தத்துடன் சொல்லுவாம் எ - று.

சிவநெறிப்பிரகாசம் என்றது சிவானுபவ மார்க்கத்தைப் பிரகாசிப்பிக்கையால் சிவநெறிப்பிரகாசம். அதன்றியும் சிவநெறிப்பிரகாசசிவாசாரியராகிய பரமகுருவின் திருநாமத்தாலும் சொல்லப்பட்டது. (கஉ)

அ - கை : மேல் சாத்திரமுகத்திற் கூறவேண்டும் விடயம் பிரயோசனம் அதிகாரம் சம்பந்தம் என்னும் இந்நால்வகையும் கூறுகின்றது.

13. விடயமிதற் காவதுதான் பதிபசுபா சத்தின்
விதியுணர்த்த லாகியிடு மேற்பயன்றான் முத்தி
அடைவதுவா மதிகாரி யாரென்னின் முன்னே
அறைந்தனம்வை நயிகரென வவரே யாகும்
தொடையுடைய சம்பந்த மேதிங் கென்னிற்
சொலற்குரிய பொருளுமதன் சொலவு மாகும்
மடையுடைநீர் போற்சிவன்பா லன்பு வைத்த
மதியுடையோர்க் கிவையுரைக்கும் வாய்மை தானே.

இ - ள் : விடயம் இதற்கு ஆவது தான் பதி பசு பாசத்தின் விதி உணர்த்தல் ஆகி இடும் - இச்சாத்திரத்துக்கு விடயமாவது ஏதென்னில் பதி பசு பாசக்கிரமத்தை அறிவிக்கிறதாய் நிற்கும்; மேல் பயன் தான் முத்தி அடைவது ஆம் - மேற் பிரயோசனமாவது மோட்சத்தைப் பொருந்துவதாகும்;

அதிகாரி யார் என்னில் முன்னே அறைந்தனம் வைநயிகர் என அவரே ஆகும் - இச்சாத்திரம் ஓதுதற்கு அதிகாரி யாரென்னில் முன்சொன்னோம் வைநயிகரென்று,அவரேயாகும்; தொடையுடைய சம்பந்தம் ஏது இங்கு என்னில் சொலற்குரிய பொருளும் அதன் சொலவும் ஆகும் - தொடர்ச்சியை உடைத்தாயிருக்கிற சம்பந்தம் ஏதென்றால் இச்சாத்திரத்திற் சொல்லவுரித்தாயிருக்கிற திரிபதார்த்தமும் திரிபதார்த்தத்தைச் சொல்லும் சொலவுமாகும்; மடை உடை நீர்போல் சிவன்பால் அன்புவைத்த மதி உடையோர்க்கு இவை உரைக்கும் வாய்மை தானே - அணையுடைந்த சலம்போல மிகவும் சிவனிடத்தில் நேசத்தையுடைய புத்திமான்களுக்கு இந்நால்வகையும் போதிக்கும் சுபாவமாம் எ - று. (கந)

அ - கை: மேல் தன்மார்த்த காம மோட்சம் என்ற நால்வகைப் புருடார்த்தத்தில், மோட்சஞ்சொல்லுவது நிமித்தமாகத் தன்மமுதலான வைகளைத் தொகுத்துக்கூறுகின்றது.

14. தருமமுடன் பொருள்காம முத்தி யென்று
சதுவிதமாம் பயனுயிர்க டங்கட் கிங்ஙன்
மருவியிடு மதிற்றரும மறையி னீதி
வன்னத்தோர் நால்வோரும் வழுவி லாதே
பரிவினொடும் புரிந்துபர தருமஞ் செய்யாப்
பான்மையோர் பரகதியை யடைவர் நன்றாய்
ஒருவியுளோர் தமக்குரிய தருமந் தன்னை
யுற்றிடுவர் தீவினையென் றுரைக்கு நூலே.

இ - ள்: இங்ஙன் உயிர்கள் தங்கட்கு தருமமுடன் பொருள் காமம் முத்தி என்று சதுவிதமாம் பயன் - இவ்விடத்து ஆன்மாக்களுக்குத் தருமத்துடன் அருத்தம் காமம் மோட்சம் என்று நால்வகையாகப் பிரயோசனம்; மருவியிடும் அதில் தருமம் மறையின் நீதி வன்னத்தோர் நால்வோரும் வழுவிலாதே பரிவினொடும் புரிந்து பரதன்மம் செய்யாப் பான்மையோர் பரகதியை அடைவர் நன்றாய் - பொருந்தியிடும் நால்வகைப் பிரயோசனங்களில் முந்தத் தருமமாவது வேதத்தில் சொன்னபடி பிராமணர் அரையர் வைசியர் சூத்திரர் என்னும் நாலுவகை வன்னத்தவர்களும் தப்பாமல் தங்கள் தங்கள் வன்னச்சிரமத்துக்குச் சொன்ன தருமத்தைச் செய்து ஒரு வன்னச்சிரமத்தவர்க்குச் சொன்ன தருமத்தைப் பின்னையொரு வன்னச்சிரமத்தவர்கள் செய்யாமலிருக்கிற பெருமை உடையோர் நல்ல கதியாய்த் தன்மபலமான சுவர்க்கத்தையடைவர்; தமக்கு உள தருமந்தன்னை ஒருவியுளோர் தீவினை உற்றிடுவர் என்று உரைக்கும் நூல் - தங்களுக்கு உரிய தருமத்தை வழுவினோர்கள் நரகத்தில் துக்கங்களைப் பொருந்துவார்கள் என்று சாத்திரங்கள் சொல்லும் எ - று.

ஏகாரம் ஈற்றசை.

இந்தத் தன்மத்தின் விரிவு "தருமமிரு விதமாகும்" [106] என்னும் விருத்தத்திற் கண்டுகொள்க. (கச)

அ - கை: மேல் பொருட்பால் காமப்பால்களைக் கூறுகின்றது.

15. பரபொருளுக் காசையுற லின்றித் தத்தம்
பான்மையினாற் பொருடேடிப் பகிர்ந்தா றாகக்
கரவறவே தென்புலத்தோ ராதி நாலு
கணத்தவர்க்குங் கொடுத்திருபால் கைக்கொண் டேதன்

மரபிலுளோ ருடனருந்தல் பொருளாங் காம
மகப்பெறுதற் பொருட்டாய்த்தன் வனிதை யோடு
புரைவறவே கூடிடுத லல்லா ரோடு
பொருந்திடுதல் பாவமாம் புகலுங் காலே.

இ - ள் : பரபொருளுக்கு ஆசை உறல் இன்றி தம் தம் பான்மையினல் பொருள் தேடி - பரதிரவியங்களுக்கு ஆசைப்படாமல் தங்கள் தங்கள் வன்னத்துக்கு வேதசிவாகமங்களிற் சொன்னமுறையில் திரவியந் தேடி;

பிராமணர் முதலானோர் திரவியம் தேடும்படியாவது: பிராமணருக்கு அத்தியயனம் பண்ணுவிக்கை, தானம் வாங்குதல் முதலாயினவாம்; அரையர்க்கு உயுத்தத்திற் சத்துருக்களைச் சயித்துத் தம் தேசத்துச் சனங்களை இரட்சித்து ஆறிலொரு கடமைகொண்டு தம்மைப்போல யானை குதிரை காலாட்களை இரட்சிப்பது; வைசியர்க்குப் பயிரிட்டுப் பொய் சொல்லாமல் செட்டுப்பண்ணிப் பசுக்களை இரட்சிப்பது; சூத்திரர்க்கு எல்லாவருணர்க்கும் உபகரித்துப் பெறும் வேதனம்.

பகிர்ந்து ஆறு ஆக கரவு அறவே தென்புலத்தோர் ஆதி நாலு கணத்தவர்க்கும் கொடுத்து இருபால் கைக்கொண்டே தன் மரபிலுளோருடன் அருந்தல் பொருளாம் - இம்முறையிற்றேடிய திரவியத்தை ஆறு பங்கிட்டுத் தென்புலத்தோர் முதலாகிய நால்வர்க்கும் குற்றமற நாலுபங்கு கொடுத்து நின்ற இரண்டு பங்குகொண்டு தமது சுற்றத்துடன் கூடப் புசிப்பது அருத்தமென்னும் பிரயோசனம்; காமம் மகப்பெறுதல் பொருட்டாய்த் தன் வனிதையோடு புரைவு அறவே கூடிடுதல் அல்லாரோடு பொருந்திடுதல் பாவம் ஆம் புகலுங்கால் - காமமாவது புத்திரனைப் பெறுதல் நிமித்தமாக அக்கினி சாட்சியாகக் கலியாணம் பண்ணின தனது மனைவியுடன் குற்றமறப்பொருந்துதல், பரஸ்திரீயுடன் பொருந்துதல் பாவமென்று சாத்திரங்கள் சொல்லும் எ - று. (கரு)

அ - கை : மேல் நாலாம் புருஷார்த்தமான மோட்சங்கூறுகின்றது.

16. மாயையுட னிருவினையு நீங்கா ஞான
மறைப்பான வாணவமா மாசு தானும்
தூயையாம் பராசத்தி தன்னு னீங்கச்
சுத்தமாய் நித்தமாய்ச் சுகமாய் ஞான
ஞேயமாய்ப் பிரிவிலதா யேக மான
நிமலசிவத் துடனுதல் முத்தி முத்திக்
காயவேண் டிடும்பொருள்கள் மூன்றே யாகு
மவையுரைக்கிற் பதிபசுபா சங்க ளாமே.

இ - ள் : மாயையுடன் இரு வினையும் நீங்கா ஞான மறைப்பான ஆணவமாம் மாசுதானும் தூயையாம் பராசத்தி தன்னால் நீங்க - சுத்தா சுத்தமாயையுடன் புண்ணியபாபாத்மகமாய் இரண்டான கன்மமும் அழுக்கா யிருக்கின்ற ஆணவமலமும் பரிசுத்தையாயிருக்கிற பராசத்தியால் நீங்க;

சுத்தமாய் நித்தமாய் சுகமாய் ஞான ஞேயமாய் பிரிவிலதாய் ஏகமான நிமல சிவத்துடன் ஆதல் முத்தி - பரிசுத்தமாய் அழிவற்றதாய்ச் சுகரூபமாய் வேறற நின்று ஞானத்தால் அறியப்படுமதாய்ப் பிரிவற்று ஒன்றாயிருக்கிற நின்மல சிவத்துடன் வேறற நிற்பது மோட்சம்; முத்திக்கு ஆய வேண்டிடும் பொருள்கள் மூன்றே ஆகும் அதை உரைக்கில் பதி பசு பாசங்கள் ஆம் - மோட்சத்துக்கு அறியவேண்டிடும் பொருள்கள் மூன்று, அவைகளைச் சொல் லின் பதி பசு பாசங்களாம் எ - று. (கசு)

அ - கை : மேல் பிரமாணாதீனமாயிருக்கும் பிரமேயமென்பது கூறு கின்றது.

17. எப்பொருட்கு மிலக்கணங்கள் பிரமா ணங்க
ளில்லையே லிசையாதென் றியம்ப லாலே
முப்பொருட்கு மிலக்கணங்கள் பிரமா ணங்கள்
மொழிந்திடுவா முத்தேச மிலக்க ணம்பின்
தப்பறவே சோதித்த லென்று மூன்றுந்
தவறிலாப் பிரமாணந் தானு நன்றாய்
அப்பொருள்க ளனைத்தினுக்கும் பொதுச்சிறப்ப தென்றே
யாய்ப்பிரியு மிலக்கணங்க ளிருவகையா மவைதாம்.

இ - ள் : எப்பொருட்கும் இலக்கணங்கள் பிரமாணங்கள் இல்லையேல் இசையாது என்று இயம்பலால் முப்பொருட்கும் இலக்கணங்கள் பிரமாணங் கள் மொழிந்திடுவாம் - உலகத்திலுள்ள எல்லாப்பொருட்கும் இலக்கணமும் அளவையும் இல்லாதிருக்கில் அந்தப் பொருளே சித்தியாதென்னும் நியா யத்தால் பதி பசு பாசம் என்னும் மூன்று பொருட்கும் இலக்கணத்தையும் அளவையினையும் சொல்லுவாம்; உத்தேசம் இலக்கணம் பின் தப்பு அறவே சோதித்தல் என்று மூன்றும் - உத்தேசம் இலக்கணம் பரீக்ஷை என்று மூன்றும்;

தவறு இலா பிரமாணந்தானும் நன்றாய் - குற்றமற்றிருக்கிற பிரமா ணந்தானும் நன்றாக; அப்பொருள்கள் அனைத்தினுக்கும் பொது சிறப்பு என்றேயாய் பிரியும் இலக்கணங்கள் இருவகையாம் அவைதாம் - அந்தப் பொருள்களெல்லாவற்றிற்கும் பொதுவென்றும் சிறப்பென்றுமாகிப் பிரிந்த இலக்கணங்கள் இரண்டாம் எ - று. (கஎ)

அ - கை: மேல் இலக்கணத்தின் சொரூபம் கூறுகின்றது.

18. தன்னியல்பும் பொதுவுமென விரண்ட தாகச்
சாற்றுமிலக் கணந்தான்றன் னியல்பைக் கூறில்
அன்னியமாஞ் சாதியையுந் தற்சாதி யதுவு
மகன்றதோர் குறியுளதா யறைத லாகும்
மன்னியிட வன்னியசா தியைத்தவிர்ந்த குறிகள்
மருவியிடுந் தற்சாதி யனைத்தினுக்கும் வாய்க்க
உன்னியுரைத் திடுவதுவே பொதுவ தாகு
முணரிவிவை யெப்பொருட்கு முள்ள வாமே.

இ - ள்: தன் இயல்பும் பொதுவும் என இரண்டதாகச் சாற்றும் இலக்கணந்தான் தன் இயல்பைக்கூறில் - தனக்கே இயல்பான அசாதாரண மென்றும் எல்லார்க்கும் பொதுவான சாதாரணமென்றும் இரண்டாகச் சொல்லப்படும் இலக்கணந்தான், அவற்றில் அசாதாரண இலக்கணத்தைச் சொல்லில்; அன்னியமாம் சாதியையும் தன்சாதியதுவும் அகன்றது ஓர் குறி உளதாய் அறைதலாகும் - தனக்கு அன்னியமாகிய சாதியையும் தன் சாதி யையும் விட்டிருக்கின்ற அடையாளத்தையுடையதாகச் சொல்லுதலாம்;

இதற்கு உதாரணம்: பசுவுக்குச் சாதாரண இலக்கணம் நாலு காலும், வாலும், குட்டேறும், குளம்பும், அண்ணரும், கொம்பும் முதலானவைகள்; மோழை, நாரை, புள்ளி, கூழைவாலன் முதலானவை பசுக்களுக்கு அன்னிய சாதியாகிய குதிரை எருமை மரை முதலானவைகளுக்குமில்லாமல் தன் சாதி யாகிய பசுக்களெல்லாவற்றுக்குமில்லாமலிருக்கையால் அன்னிய சாதியையும் தன் சாதியையும் அகன்றிருக்கிறது அசாதாரணவிலக்கணம்.

மன்னியிட அன்னிய சாதியைத் தவிர்ந்த குறிகள் மருவியிடும் தன் சாதி அனைத்தினுக்கும் வாய்க்க உன்னி உரைத்திடுவது பொதுவது ஆகும் - பொருந்தியிட வேறொரு சாதிக்கில்லாத அடையாளங்கள் பொருந்தியிடுந் தன் சாதியிலே உள்ள எல்லாவற்றுக்கும் உண்டாயிருக்க விசாரித்துச் சொல்லுவது பொதுவிலக்கணமாம்;

இதற்கு உதாரணம்: பசுவுக்குப் பொதுவிலக்கணம் நாலு காலும், வாலும், அண்ணரும், கொம்பும், குட்டேறும், குளம்பும் முதலானவற்றை உடைத்தாயிருக்கை.

உணரில் இவை எப்பொருட்கும் உள்ளவாம் - விசாரிக்குமிடத்து இவை உலகத்திலுள்ள பொருள்களுக்கெல்லாம் உள்ளனவாம். இப்படிப் பதி பசு பாசம் என்னும் பொருள்கட்கு வருந்தோறும் கண்டுகொள்க என்றவாறு. (கஅ)

அ - கை : மேல் உத்தேச இலக்கண பரீக்ஷைகட்கு இலக்கணம் கூறுகின்றது.

19. உத்தேசம் வத்துவின்பே ருரைத்த லாகு
மொன்றுகுறை யாதுரைத்த துள்ள தெல்லாம்
சித்தமுமா யன்னியத்தி லில்லை யாகத்
தெரிப்பதிலக் கணஞ்சோதித் திடுத ருன்மேல்
வத்துவா மிலக்கியத்தே யிலக்க ணங்கள்
வாய்த்திடுதல் வாயாதல் மதித்த லாகும்
இத்தகையா லிவையுளவா மென்றே நன்ரு
வேதுமுத லியம்பல்பிர மாண மீதே.

இ - ள் : உத்தேசம் வத்துவின் பேர் உரைத்தல் ஆகும் - உத்தேசமாவது பொருளுடைய பேரைச்சொல்லுவது; ஒன்று குறையாது உரைத்தது உள்ளது எல்லாம் சித்தமுமாய் அன்னியத்தில் இல்லையாகத் தெரிப்பது இலக்கணம் - ஒன்று குறையாமல் சொல்லப்பட்ட குறிகளெல்லாம் உண்டாய்ப் பின்னை ஒன்றுக்கும் அந்தக் குறிகளில்லாமல் விளக்குவது இலக்கணமென்றுசொல்லப்படும்; சோதித்திடுதல்தான் மேல் வத்துவாம் இலக்கியத்தே இலக்கணங்கள் வாய்த்திடுதல் வாயாதல் மதித்தல் ஆகும் - மேல் பரீக்ஷையாவது தான் வத்துவாக நிற்கிற இலக்கணத்தை உடையதிலே இந்த இலக்கணம் பொருந்துமோ பொருந்தாதோ என்று விசாரிப்பது; இத்தகையால் இவை உளவாம் என்று நன்ரு ஏது முதல் இயம்பல் பிரமாணம் ஈதே - இந்தப் பிரகாரத்தால் இந்த வத்துக்கள் உண்டாகவேண்டுமென்று நன்ருக ஏது பக்க சாத்தியங்களுடனே சொல்லுதல் பிரமாணமென்னும் இது எ - று.

அ - கை : மேல் சைவசித்தாந்தத்துக்குப் பிரமாணம் சிற்சத்தியென்பது கூறுகின்றது.

20. ஐயமுடன் றிரிவின்றி முன்னினைவு மின்றி
ஐம்பொறிபோ லொன்ருென்றே யறித லின்றி
மையலறு காட்சியனு மானமுறை மூன்றின்
வகையனைத்தும் வியாத்தியாய் மதிப்ப தாகிப்
பொய்யதுவாய் ஞேயமாம் பொருள்களிலின் ருகிப்
புந்திக்கு மேலான போத மாகிச்
செய்யசிவ சத்திதுணை யாய்விளங்குஞ் சீவ
சிற்சத்தி பிரமாண மெனத்தெரிப்பர் தெரிந்தோர்.

இ - ள் : ஐயமுடன் திரிவு இன்றி முன் நினைவும் இன்றி ஐம்பொறிபோல் ஒன்று ஒன்றே அறிதல் இன்றி - இதுவோ அதுவோ என்னுஞ் சந்தேகமும் ஒன்றனை ஒன்ருகக் காணும் பிராந்தியும் முன் அனுபவித்ததை

நினைப்பதும் இல்லாமல் பஞ்சேந்திரியங்களைப்போல் ஒவ்வொரு விஷயங்களையே அறிகிறதல்லாமல்; மையல் அறு காட்சி அனுமானம் உரை மூன்றின் வகை அனைத்தும் வியாத்தியாய் மதிப்பதாகி - குற்றமற்றிருக்கும் பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் என்னும் மூன்று பிரமாண பேதங்களிலெல்லாம் வியாபித்து விசாரிப்பதாகி; பொய்யதுவாய் ஞேயமாம் பொருள்களில் இன்றாகி - அசத்தியமாய் அறியப்படுவனவாகிய வத்துக்களில் இல்லாததாய்; புந்திக்கு மேலான போதமாகி - புத்திதத்துவத்துக்கு மேற்பட்ட அறிவாய்; செய்ய சிவசத்தி துணையாய் விளங்கும் சிவசிற்சத்தி பிரமாணம் எனத் தெரிப்பர் தெரிந்தோர் - சுத்தமாகிய சிவசத்தி சகாயமாய்ப் பிரகாசியா நிற்கும் ஆன்மஞானசத்தி பிரமாணமென்று சொல்லுவார்கள் சிவாகமத்தை அறிந்தோர் எ - று.

மேல் இதற்கு விதப்புரை வருமாறு :— ஐயமுடன் திரிவின்றி முன்நினைவுமின்றி ...... விளங்குஞ் சிவசிற்சத்தி பிரமாணம் - ஐயந்திரிவு முன்னினைவன்றியிலே யதார்த்தமாயிருக்கிற பிரமை பிரமாணம். ஐயந்திரிவு முன்னினைவற்றிருக்கிற சிற்சத்தி பிரமாணம் என்று அருளிச்செய்த ஆசாரியர் திருவுள்ளக்கிடை,

ஸமூஹாதிவிநிர்முக்தா வ்ருத்திர் ப்ரமாணமுச்யதே அகுக

என்னும் பவுட்கர வசனத்தை அனுசரித்தது. அந்தப் பவுட்கர வசனத்துக்குப் பொருள் சமுசயம் முதலானவை அற்றிருக்கிற புத்தி விருத்தியுடையதென்று.' இருதயம் அல்லது சிற்சத்தி சமுசயம் முதலானவைகளுடைய தாதான்மியமற்றிருக்கையால் சமுசயம்முதலானவையற்ற சிற்சத்தி பிரமாணமென்பது தேவையில்லை. சமுசயாதி தாதான்மியமற்ற புத்திக்குச் சமுசயாதி தாதான்மியம் அற்ற புத்தி விருத்தியுடன் கூடின பிரமையே பிரமாணமென்று சித்தம். இந்தப்படிக்கு அருத்தம் ஆசாரியர் * சிவஞானபோத வியாக்கியானத்தில் அருளிச்செய்தது கண்டுகொள்க. இதனுல் அந்த அந்த அருத்தத்தில் மட்டிடப்பட்டிருக்கிற சிற்சத்தி அந்த அந்த அருத்தத்திலே பிரமை என்றது. இது கடமென்கிற பொருளிலே சம்பந்தித்திருக்கிற கடத்தையுடைய (?) சிற்சத்தி அந்தக்கடமென்கிற பொருளிலே பிரமை, மெய்யாயிருக்கிற அறிவு; அதுவே பிரமாணம். பிரமிதி பிரமாணமென்னும் பாவவிற்பத்தியால் சித்தம்.

இப்படியாகிறபொழுது எந்நேரமும் ஞானப்பிரகாசமாயிருக்கவேண்டுமெனில், அப்படியன்று; கண் முதலானவைகளைக் கரணமாகவுடைய சிற்சத்திக்குக் கரணமில்லாதபோது மல ஆவரணத்தால் விஷயசம்பந்தமானது இல்லாமைக்கு ஒத்திருக்கையால். புத்திவிருத்தியுண்டான காலத்திலே மல நிவிர்த்தியால் ஆவரணமற்ற விஷய சம்பந்தமுண்டாகையால் எப்போதும்

* சிவஞானபோதம் - சிவாக்கிரபாடியம் 97.

விஷயம் பிரகாசிக்கவேண்டுமென்பதில்லை. ஐம்பொறிபோல் ஒன்றொன்றே அறிதலின்றி - நையாயிகர் பிரமைக்குக் கரணம் பிரமாணமென்று கரண விகற்பத்தால் பஞ்சேந்திரியங்களுமே பிரமாணம் என்பார்கள். ஆகையால் அதுவன்று என்றது. (உ0)

அ - கை : மேல் சிற்சத்தி என்னும் பிரமாணத்துக்கு அபிவியத்தியைப்பண்ணும் கரணங்களைக் கூறுகின்றது.

21. கூறிடுமிப் பிரமாணந் தனக்கபிவெஞ் சகமாய்க்
குறித்திடுவர் காண்டலனு மானவுரை தன்னை
வேறுமுவ மானமுதற் பலவுரைப்ப ரவைகள்
வேறல்ல விம்மூன்றின் விரித்த லாகும்
மாறிலாக் காட்சிமுதன் மூவகைக்கு மிதனில்
வரும்பேத வகைகளுக்கு மருவுமிலக் கணங்கள்
தேறும்வகை சிவாகமத்தே யாங்கண்ட படியே
தெரித்திடுவாந் தொகையாகச் சிந்தை செய்தே.

இ - ள் : கூறிடும் இப்பிரமாணந்தனக்கு அபிவெஞ்சகமாய்க் குறித்திடுவர் காண்டல் அனுமான உரை தன்னை - சொல்லப்படாநின்ற சிற்சத்தி என்னும் பிரமாணத்துக்கு விளக்கத்தைப்பண்ணுகின்றதாக விசாரிப்பார்கள் பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் என்னும் இம்மூன்றையும்;

இதற்குப் பிரமாணம் * ஆகமத்திற் கண்டுகொள்க;

வேறும் உவமானமுதல் பல உரைப்பர் அவைகள் வேறல்ல இம்மூன்றின் விரித்தலாகும் - பல சமயிகள் இந்தப் பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் என்னும் இம்மூன்று பிரமாணமுமல்லாமல் உவமானமென்றும் அருத்தாபத்தி என்றும் அபாவமென்றும் பாரிசேடமென்றும் சம்பவமென்றும் ஐதியமென்றும் இயல்பென்றும் இவை முதலாகப் பின்னையும் அநேக பிரமாணம் சொல்லுவார்கள், உவமானம் முதலான இந்தப் பிரமாணங்களெல்லாம் இந்தப்பிரத்தியட்ச முதலானமூன்றுபிரமாணங்களிலும் வேறல்ல; இந்த மூன்று பிரமாணங்களுடைய விரிவே; மாறு இலாக் காட்சி முதல் மூவகைக்கும் இதனில் வரும் பேத வகைகளுக்கும் மருவிய இலக்கணங்கள் தேறும் வகை சிவாகமத்து யாம் கண்டபடி தெரித்திடுவாம் தொகையாகச் சிந்தைசெய்து - குற்றமற்றிருக்கிற பிரத்தியட்சமுதலான மூன்று பிரமாணங்களுக்கும் இவற்றிலே வருகிற பேதவகைகளுக்கும் பொருந்திய இலக்கணங்கள் நன்றாக நிச்சயம்பெறச் சிவாகமத்திலே நாம் கண்டபடியிலே தொகையாகச் சொல்லுவாம் எ - று. (உக)

---

* ப்ரத்யக்ஷாநுமாநாகமா: ஸாமாந்யேந

— சிவஞானபோதம் - சிவாக்கிரபாடியம் 108.

**அ - கை :** மேல் பிரத்தியட்சம் மூன்றுவகை என்பது கூறுகின்றது.

22. பொறியைந்தால் மானதத்தா லவித்தை கூடாப்
போதத்தாற் காட்சியோர் மூன்ருகப் புகலும்
செறியுமதி லனுமானம் பொருளதனு லுரையாற்
செப்பியிடு மிருவகைத்தாந் திகழுமா கமந்தான்
அறியுங்காற் றந்திரமு மந்திரமு மதன்மே
லளிக்குமுப தேசமென மூவகைய தாகப்
பிறியுமிவை யனைத்தினையும் விரிக்கிலவை பெருகும்
பெற்றிமையாற் குவித்துரைப்பா மிதன்பொருளும் பெறவே.

**இ - ள் :** பொறி ஐந்தால் மானதத்தால் அவித்தை கூடா போதத்தால் காட்சி ஓர் மூன்ருகப் புகலும் - சுரோத்திராதி பஞ்சேந்திரியங்களினுலும் மனத்தினுலும் அஞ்ஞானமற்றிருக்கிற சிவஞானத்தினுலும் பிரத்தியட்சமானது மூன்று வகையாகப் பிரியும் என்று ஆகமங்கள் சொல்லும்;

இதற்குப் பிரமாணம் † பவுட்கரம்.

செறியும் அதில் அனுமானம் பொருளதனுல் உரையால் செப்பியிடும் இரு வகைத்தாம் - பிரமாணங்களுக்குள்ளே பொருந்திய அனுமானம் அருத்தானுமானம் என்றும் சத்தானுமானம் என்றும் இரண்டு வகையாகச் சொல்லப்படாநிற்கும்; திகழும் ஆகமந்தான் அறியுங்கால் தந்திரமும் மந்திரமும் அதன்மேல் அளிக்கும் உபதேசம் என மூவகையதாகப் பிறியும் - பிரமாணத்திரயங்களில் சுதந்திரமாக விளங்காநின்ற ஆகமப்பிரமாணமானது தந்திரகலையென்னும் கருமகாண்டம் எனவும் மந்திரகலை என்னும் உபாசனுகாண்ட மெனவும் சிவஜீவர்களுடைய அத்துவிதத்தை உபதேசிக்கும் ஞானகாண்டமெனவும் மூவகையாகப் பிரியாநிற்கும்; இவை அனைத்தினையும் விரிக்கில் அவை பெருகும் பெற்றிமையால் குவித்து உரைப்பாம் இதன் பொருளும் பெற - இவை எல்லாவற்றையும் விரிவாகச்சொல்லில் வித்தாரமாகும், அதனுல் சொல்லிலே சங்கோசமாக அருத்தங்களில் அதிகமாகக்கொண்டு வித்தாரமாகச் சொல்லியிருக்கிற அருத்தங்கள் எல்லாம் இந்தச் சுருக்கத்திலே அடங்கச்சொல்லுவாம் எ - று. (உஉ)

**அ - கை :** முன்தொகுத்துக்கூறிய இந்திரியப்பிரத்தியட்சம் மானதப் பிரத்தியட்சம் சிற்பிரத்தியட்சமென்னும் மூன்றில் இந்திரியப்பிரத்தியட்ச மானதப்பிரத்தியட்சங்களுடைய சொரூபம் கூறுகின்றது.

---

† வஎதவெ௫நிபஸாலெவக்ஷ௦ நிரலெவக்ஷ௦ தயெயவ ௨ |
ஸ௩்கூாணஸாலெவக்ஷமிதி த்ரியமிஷ்யதெ || அசுஎ

23. கலையாதி யால்விளங்கு ஞான மந்தக்
கரணத்தி னுடன்கூடக் காற்றுடனே மனந்தான்
நலமாரு நேத்திரத்தை யாதிபொறி யைந்தை
நண்ணவவை யுருவாதி யாகியே நண்ணும்
புலனுய பொருளடைந்தே யையமுடன் றிரிவும்
பொருந்தாம லறிதல்புறக் காட்சியாப் புகல்வர்
அலமாரும் பொறிவழியால் வந்தவிட யத்தை
யகத்தினுள்ளே சிந்தித்த லாயிடுமா னதமே.

இ-ள்: கலையாதியால் விளங்கும் ஞானம் அந்தக்கரணத்தினுடன் கூடக் காற்றுடனே மனந்தான் நலம் ஆரும் நேத்திரத்தை ஆதி பொறி ஐந்தை நண்ண - ஆணவ கேவலாவத்தையில் மைக்குழம்பினுள் மணி போலப் பிரகாசியாமலிருந்த ஞானமானது சிவசத்தி பிரேரிதமான கலை வித்தை அராகம் முதலான ஈசுவர தத்துவங்களினுல் விளங்காநின்ற ஞானமாய்ச் சித்தம் முதலான அந்தக்கரணங்களுடனே கூடிப் பிராணுதி வாயுக்களுடனேயுங்கூடி மனத்துடனே காசமற்றிருக்கிற கண் முதலான பஞ்சேந்திரியங்களைப் பொருந்த; அவை உரு ஆதி ஆகியே நண்ணும் புலனுய பொருள் அடைந்தே ஐயமுடன் திரிவும் பொருந்தாமல் அறிதல் புறக் காட்சியாப் புகல்வர் - கண்முதலானவை ரூபமுதலாகப் பொருந்தும்விஷயங்களாகிற பொருள்களைப் பொருந்தி ஐயந்திரிபற அறிவது பாகியேந்திரியப் பிரத்தியட்சம் என்று சிவாகமத்தை அறிந்தோர்கள் சொல்லுவார்கள்;

இதற்குப் பிரமாணம் * பவுட்கரம்.

அலமாரும் பொறி வழியால் வந்த விடயத்தை அகத்தினுள்ளே சிந்தித்தல் ஆயிடும் மானதம் - அமைவு பெருமலிருக்கிற பஞ்சேந்திரியங்களினுலும் அனுபவித்த விடயத்தை உள்ளே விசாரிப்பது மானதப் பிரத்தியட்சமாக நிற்கும் எ-று. (உரு)

இதற்குப் பிரமாணம் † பவுட்கரம்.

---

* அர்த்தேந்த்ரியஸாபேக்ஷம் ஸ்யாத்பாஹ்யநிவ்ருத்தயே |
இந்த்ரியாபேக்ஷயா ஜ்ஞாநம் தத்க்ராஹ்யேணார்த்தவீக்ஷணம் || அகூகூ

† அந்த:கரணஸாபேக்ஷம் ஸாபேக்ஷேந்த்ரியஜம் து யத் |
அந்த:கரணஸாபேக்ஷம் விஜ்ஞேயம் ஸம்மதி: || அளய

**அ - கை :** மேல் சிற்பிரத்தியட்சம் விஞ்ஞானப்பிரத்தியட்சமென்றும் சிவஞானப்பிரத்தியட்சமென்றும் இருவகைப்படும் என்பது கூறுகின்றது.

24. புறக்கருவி தனை நீங்கி யுட்கருவி யான
புத்திமன மாங்காரம் பொருந்த லின்றிச்
சிறப்புடைய யோகத்தா லாணவத்தை நீங்கித்
திரிகாலத் தியல்புணர்தல் விஞ்ஞானக் காட்சி
அறப்பெரிய ஞானத்தா லான்மாவுஞ் சிவனு
மனனியமாய் அனுபவத்தா லறிந்திடுத லதுவும்
துறப்பரிதாம் சிவஞானக் காட்சி யென்று
சொல்லிடுவர் சிவஞானத் தூய்மை யோரே.

**இ - ள் :** *புறக்கருவிதனை நீங்கி உட்கருவியான புத்தி மனம் ஆங்காரம் பொருந்தல் இன்றி* - புறத்து இயற்கருவியான சுரோத்திரம் முதலாகியவைகளை விட்டு உட்கருவிகளான மனோகங்கார புத்திகளையும் கூடாமல் விட்டு; *சிறப்பு உடைய யோகத்தால் ஆணவத்தை நீங்கித் திரிகாலத்து இயல்பு உணர்தல் விஞ்ஞானக்காட்சி* - சிறப்புடைய யோகாப்பியாசத்தால் ஆணவ மலத்தை நீங்கிச் செல்காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் மூன்று காலத்திலுள்ள பொருள்களையெல்லாம் ஏககாலத்தில் அறிகிறது விஞ்ஞானப் பிரத்தியட்சம்; *அற பெரிய ஞானத்தால் ஆன்மாவும் சிவனும் அனனியமாய் அனுபவத்தால் அறிந்திடுதல் அதுவும் துறப்பரிதாம் சிவஞானக் காட்சி என்று சொல்லிடுவர் சிவஞானத் தூய்மையோரே* - மிகவும் பரிபூரணமான ஞானத்தால் ஆன்மசொரூபமும் சிவசொரூபமும் வேறற்றிருப்பதைச் சுவானுபவத்தால் காண்பது ஒருக்காலும் விடுதற்கரிதாயிருக்கிற சிவஞானப் பிரத்தியட்சம் என்று சொல்லாநிற்பர்கள் சிவஞானசுத்தராய் இருக்கின்ற ஞாதாக்கள் எ - று.

*இதற்குச் சம்மதி * பவுட்கரம்.* *(உச)*

**அ - கை :** மேல் ஐயந்திரிவுகளுடைய சொரூபம் கூறுகின்றது.

25. இருபொருட்குச் சமமான குறியையொரு பொருளி
லிசைந்திடக்கண் டிதுவெதுவோ வென்பதைய மாகும்
ஒருபொருளைக் கண்டதனை மற்றொன் றாக
வுன்னிடுத றிரிவாகு மொன்றிதெனக் காண்டல்

---

* தஜெ்த்ருநியாநவெகூஷநு ஸஹ்யா த்ருக்ஷவெந்யா |
விஷக்த்ராநந்யொமாஷு வொமஃ ஸாஸாவிகொ உதஃ ‖ அசஅ

மருவியிடு நிருவிகற்பக் காட்சி யாகு
மற்றதனைப் பேராதி யால்மதித்தல் விகற்பந்
தருமுணர்வா மையமுடன் றிரிவு மின்றித்
தானறிதல் குற்றமிலாக் காட்சி தானே.

இ - ள் : இரு பொருட்கு சமமான குறியை ஒரு பொருளில் இசைந்திட கண்டு இது எதுவோ என்பது ஐயம் ஆகும் - இரண்டு வத்துவுக்குச் சரியாயிருக்கிற தன்மத்தை ஒரு வத்துவில் பொருந்தியிருக்கக் கண்டு இதுவோ அதுவோ என்பது ஐயம்;

இதற்கு உதாரணம் : கட்டைக்கும் புருஷனுக்கும் சரியாயிருக்கிற உயர்ந்திருக்கிற அடையாளத்தைக் கண்டு இது கட்டையோ புருஷனோ என்று சந்தேகப்படுவது ஐயமென்று சொல்லப்படும்.

ஒரு பொருளை கண்டு அதனை மற்றொன்றாக உன்னிடுதல் திரிவு ஆகும் - ஒரு வத்துவைக்கண்டு விசேஷ தரிசனமில்லாதிருக்கையால் பின்னையொருவத்துவாக விசாரிப்பது திரிவென்னும் விபரியயம்;

இதற்கு உதாரணம் : கிளிஞ்சிலென்னும் பொருளைக் கண்டு அடியிலிருக்கிற கறுப்பை முக்கோணமாயிருப்பதை யறியாமலிருக்கையால் வெள்ளி என்கிற பொருளாக விசாரிப்பது.

ஒன்று இது என காண்டல் மருவியிடும் நிருவிகற்பக்காட்சியாகும் - ஒரு வத்து இது என்று சிறுபிள்ளைகள் அறிவுபோலும் ஊமைகள் அறிவு போலும் பொருந்தப்படாநிற்பது நிருவிகற்பப் பிரத்தியட்சமாம்; மற்று அதனை பேராதியால் மதித்தல் விகற்பந்தரும் உணர்வாம் - நிருவிகற்பமாக அறிந்த வத்துவைப் பேர் சாதி குணம் கன்மம் பொருள் என்னும் ஐந்து வகையால் விசாரித்து விகற்பித்து அறிவது சவிகற்பப் பிரத்தியட்சம்; ஐயமுடன் திரிவும் இன்றி தான் அறிதல் குற்றம் இலா காட்சிதான் - இப்படி ஐயந்திரிபு அற அறிவது குற்றமற்றிருக்கின்ற நிருவிகற்பப் பிரத்தியட்சம் என்றவாறு.

இதற்குச் சம்மதி * பௌட்கரம். இதற்கு விதப்புரை வருமாறு:- † ......

---

* स्थाणूर्ध्वसामान्यदृष्टेः सतो नाकारस्फुरणात् ।
विशेषस्यानवधारणात् तत् संशय इष्यते ॥ अ१२५
विकल्पयोगात् सा शुक्तिरूप्यविपर्यय उच्यते ॥ अ१२६
वस्तुमात्रस्य ग्रहणं निर्विकल्पकम् ।
नामजात्यादिसम्बन्धसहितं सविकल्पकम् ॥ अ१२२

† கிடைத்த பிரதிகளில் இப்பகுதி காணப்படவில்லை.

அ - கை: மேல் அனுமானப்பிரமாண சொரூபம் கூறுகின்றது.

26. குறைவிலா வியாத்தியால் மறைபொருளைக் காண்டல்
கூறியிடு மனுமான மிதன்பேதங் கூறில்
மறைவான தருமிதனைத் தருமத்தா லறிதல்
மதித்திடுதல் காரியத்தாற் காரணத்தை யங்ஙன்
திறனுகுங் காரணத்தாற் காரியத்தைத் தெரிதல்
செப்பியிடு முவமானத் தாற்பொருளைத் தெரிதல்
முறைதேரிற் பக்கநிகர் பக்கமலாப் பக்க
மூன்றுகு மன்னுவய மாதியுமோர் மூன்றே.

இ - ள்: ‡ குறைவிலா வியாத்தியால் மறைபொருளை காண்டல் கூறியிடும் அனுமானம் - குறைவற்று உபாதியற்ற சம்பந்தமென்னும் வியாத்தியால் மறைந்திருக்கிற பொருளை அறிவது அனுமானம்;

இதற்கு உதாரணம்: புகையினுடையவும் வன்னியினுடையவும். வன்னியைவிட்டுப் புகையிராது என்னும் வியாத்தியால் புகையைக்கண்டு நெருப்பைக் காணுதிருக்கவும் இந்த மலை நெருப்பையுடையதென்று காண்பது முதலானவை.

இதன் பேதம் கூறில் மறைவான தருமிதனை தருமத்தால் அறிதல் - தருமத்தால் தருமியை அறிகிறது என்னும் தருமாத்தருமியையறிவது தருமியனுமானம்;

இதற்கு உதாரணம்: உள்ளே குளிரென்னும் தருமத்தைக் கண்டு புறத்தில் பனியென்று அறிவது.

மதித்திடுதல் காரியத்தால் காரணத்தை அங்ஙன் - தருமத்தால் தருமியை அறிந்தாற்போலக் காரியத்தால் காரணத்தை அறிவது காரியாத்காரணுனுமானம்;

இதற்கு உதாரணம்: ஆற்றிற் கலங்கிச் சிவந்து மிகவும் அதிகமாய் வருகிற தண்ணீராகிய காரியத்தைக் கண்டு, குடகில் மழைபெய்தது என்னுங் காரணத்தை அறிவது இது முதலானவை.

திறனுகும் காரணத்தால் காரியத்தை தெரிதல் - உற்கிருஷ்டமாகிய காரணத்தினுலே காரியத்தை அறிவது காரணுத்காரியானுமானம்;

இதற்கு உதாரணம்: கறுத்து மின்னுடனே கூடியிருக்கிற மேகவியத்தியென்னும் காரணத்தைக் கண்டு இனிமேல் மழை பெய்யப்போகிறது என்னும் காரியத்தை அறிவது இது முதலானவை.

‡ अनुमानं व्याप्त्या परोक्षार्थावबोधकम् । அளரு

செப்பியிடும் உவமானத்தால் பொருளை தெரிதல் - சொல்லப்படா நின்ற உவமானத்தால் பொருளை நிச்சயிப்பது உவமானுனுமானம்;

இதற்கு உதாரணம்: நாட்டிலிருக்கிறவன் காட்டில் மரையைத் தேடிப் போம்பொழுது காட்டில் எப்பொழுதும் சஞ்சரிக்கிறவன் எதிர்ப்பட, அவனை மரை எப்படியிருக்கும் என்று கேட்க, உங்கள் நாட்டில் பசுவைப்போல இருக்கும் என்று சொல்ல, அதைக் கேட்டு நினைத்துக்கொண்டு சென்ற நாடன் காட்டில் மரையைக் கண்டு பசுவுக்கொத்தது மரை என்றறிவது முதலானவை.

முறை தேரில் பக்கம் நிகர்பக்கம் அலாப்பக்கம் மூன்று ஆகும் அன்னு வயம் ஆதியும் ஓர் மூன்று - இந்த அனுமானக்கிரமத்தை விசாரிக்கில் பக்கம் சபக்கம் விபக்கமென்னு மூன்றையுமுடைத்தாய்க் *கேவலான்னுவயி, கேவல வெதிரேகி, அன்னுவயவெதிரேகி என்று மூவகையாம் எ - று.

† பக்கமாவது சந்தேகப்பட்டிருக்கிற சாத்திய தருமத்தை உடையது. இதற்கு உதாரணம்: இந்தப் பருவதம் வன்னியையுடையது என்பது. சந்தித்தமான வன்னி சாத்திய தருமத்தையுடைத்து ஆகையால் பருவதம் பக்கம்.

இனி, சபக்கமாவது நிச்சயிதமாயிருக்கிற சாத்திய தன்மத்தையுடைத் தாயிருப்பது. இதற்கு உதாரணம்: பருவதம் வன்னியையுடையது புகை யுடைத்தாகையால் என்னும் அனுமானத்தில் அடுக்களை சபக்கம்; அடுக்களை யில் புகையைக் கண்டபோதெல்லாம் வன்னியை நிச்சயமாகக் காண்கையால் அடுக்களை நிச்சயிக்கப்பட்ட வன்னி என்னும் சாத்தியத்தையுடைய சபக்கம்.

இனி, விபக்கமாவது நிச்சயித சாத்திய தன்மமில்லாததை உடையது. இதற்கு உதாரணம்: பருவதம் வன்னியையுடையது புகையையுடையதென் னும் அனுமானத்தில் வெதிரேக வியாத்தியாக யாதொன்று வன்னியை உடையதன்று அது புகையை உடையதுமன்று, நீர்மடுவைப்போல் என்னு மிடத்து விபக்க சாத்தியமாயிருக்கிற அக்கினி என்னும் தன்மமானது தண்ணீர் நிறைந்திருக்கிற மடுவில் ஒருக்காலுமில்லாதிருக்கையால் மடு விபக்கம். இன்னும் இப்படிக் கண்டுகொள்க.

---

* 𑌅𑌨𑍍𑌵𑌯𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍀𑌤𑌿 𑌕𑍇𑌵𑌲𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌿 𑌚 ।
𑌕𑍇𑌵𑌲𑌾𑌨𑍍𑌵𑌯𑌿𑌰𑍂𑌪𑍇𑌣 𑌤𑍍𑌰𑍈𑌧𑌾 𑌪𑌰𑌿𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ அஅஉ

† 𑌸𑌾𑌧𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 𑌪𑌕𑍍𑌷𑌃 𑌸𑌪𑌕𑍍𑌷𑌸𑍍𑌸𑌾𑌧𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌕𑌃 ।
𑌤𑌦𑍍𑌵𑌿𑌰𑍋𑌧𑍀 𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍... ॥ அஅச

* இனி, கேவலான்னுவயியாவது விபக்கமில்லாதிருக்கிற ஏது. இதற்கு உதாரணம்: காரியமாகிய எல்லாப் பிரபஞ்சமும் ஒரு கர்த்தாவால் அதிட்டிக்கப்பட்டதாகல்வேண்டும், வத்து ஆகையால், குலாலனை அபேட்சிக்கிற மண்ணுண்டையாகிய காரியம்போல. இதற்குக் கர்த்தாவையன்றியிலே ஒரு காரியமும் இல்லாதிருக்கையால் விபக்கமில்லை.

கேவல வெதிரேகியாவது சபக்கமன்றியிலே இருக்கிற ஏது. எல்லாக் காரியமும் சத்தே பண்ணப்படுகையால் யாதொன்று சத்தன்று அது பண்ணப்படுகிறதுமன்று, முயற்கொம்புபோல் என்னுமிடத்துச் சகல காரியமும் பக்கமாகையால் சபக்கமில்லை.

அன்னுவயவெதிரேகியாவது பிரதிக்கினை, ஏது, உதாரணம், உபநயம், நிகமனம் என்னும் பஞ்சாவயவத்தோடும் கூடியிருக்கிற ஏது. இதற்கு உதாரணம்: பருவதமானது வன்னியையுடையது, புகையையுடைத்தாகையால், அடுக்களைபோல; யாதொன்று வன்னியையுடையதன்று அது புகையையுடையதுமன்று மடுவைப்போல் என்பது.

இந்த அன்னுவயவெதிரேகியனுமானத்துக்குப் † பக்க தன்மத்துவம் சபக்கேசத்துவம், விபக்காத்வியாவிருத்தி, அபாதிதவிஷயத்துவம், அசற்பிரதிபக்கத்துவம் என ஐந்துரூபமுண்டு. பக்கதன்மத்துவமாவது பக்கத்திலிருக்கை: பருவதமாகிற பக்கத்தில் புகை இருக்கையால் பக்கதன்மத்துவமுண்டு. சபக்கேசத்துவமாவது சபக்கமாகிய அடுக்களையில் புகையிருக்கையால் சபக்கேசத்துவமுண்டு. விபக்காத்வியாவிருத்தியாவது விபக்கத்தில்லாமலிருக்கை; விபக்கமாகிய மடுவில் புகையில்லாமலிருக்கையால் விபக்காத்வியாவிருத்தியுண்டு. அபாதித விஷயத்துவமாவது தூமத்தால் வன்னியுண்டு என்கிறதற்குப் பின்னை ஒரு பிரமாணத்தால் உபாதியற்றிருக்கை. அசற்பிரதிபக்கத்துவமாவது சாத்தியமாகிய வன்னிக்கு விபரீதமாயிருக்கிறதைச் சாதிக்கத் தக்கதாக வேறே ஒரு ஏதுவற்றிருக்கை.

இதற்குச் சம்மதி பவுட்கரம். (௨௯)

---

* நிர்விபக்ஷோ(அ)ந்வயீ ஹேதுஸ்ஸபக்ஷவ்யாபக: பர: ॥ ௮௮௫
ஸாத்யோபஸம்ஹ்ருதைர்த்ருஷ்டாந்தைர்யா ரவஸதீ யதா ।
கேநாப்யதிஷ்டிதம் விஶ்வம் கார்யம் ஸ்யாத்வஸ்துபாவத: ॥ ௮௮௬
யதா குலாலஸாபேக்ஷா ம்ருத்திவைஷோ(அ)ந்வயீ பர: ।
ஸதேவோத்பத்யதே கார்யம் க்ரியமாணத்வஹேதுத: ॥ ௮௮௭
அஸந்தவத்வம் க்ரியதே யந்நாம் ஶஶஶ்ருங்கவத் । ௮௮௮

† பக்ஷதர்மஸ்ஸபக்ஷே ஸத் வ்யாவ்ருத்திஶ்ச விபக்ஷத: ॥
அபாதிதோ(அ)ஸத்ப்ரதிபக்ஷோ வ்யதிரேகாந்வயாத்மக: । ௮௮௯

அ - கை : இங்ஙனம் கூறுகின்ற அனுமானம் சுவார்த்தம், பரார்த்தம் என்று இருவகைப்படும் என்பதும் ஆகமப்பிரமாண இலக்கணமும் கூறுகின்றது.

27. சொல்லியிடு மனுமானந் தனக்கென்றும் பிறர்க்குச்
சொல்லுதலு மெனவிரண்டாந் தொகையிவைக ளனைத்தும்
புல்லியிட வகையிவைக்குப் பொருள்விரித்துக் கொள்க
போற்றியிடு மாகமத்தி னிலக்கணந்தான் புகலில்
எல்லையிலா வறிவுதொழி லனுக்கிரக னாகி
யெவ்வுயிர்க்கு முயிராகி யிச்சைவெறுப் பின்றி
அல்லினுடன் பகலுமிலா வரனருள்வாக் கியங்க
ளவையறியில் வேதசிவா கமங்க ளாமே.

இ - ள் : சொல்லியிடும் அனுமானம் தனக்கென்றும் பிறர்க்கு சொல்லுதலும் என இரண்டாம் தொகை - கீழ்ச் சொல்லிப்போந்த அனுமான மானது தான் அறியும்படி அடுக்களை முதலானவற்றில் வியாப்தியைக் கிரகித்ததற்குப் பின்பு பருவதமுதலானவற்றில் வியாப்தியையுடைய புகையைக்கண்டு வன்னியுண்டு என்று அனுமதிப்பது சுவார்த்தானுமானமென்றும், * தான் புகையால் வன்னியை அனுபவித்துக்கொண்டு பரன் அறியத் தக்கதாகப் பிரதிக்கினை, ஏது, உதாரணம், உபநயம், நிகமனம் என்ற பஞ்சாவயவத்துடன் பிறர்க்குப் போதிக்கும் பரார்த்தானுமானமென்றும் இருவகைத்தாம்;

பஞ்சாவயவத்தில் பிரதிக்கினையாவது இஷ்டார்த்தத்தைச் சொல்லுவது; ஏதுவாவது சாத்தியத்துடன் வியாப்தியை உடைத்தாய்ப் பஞ்சமியந்தமாயிருக்கிற வசனம்; உதாரணமாவது திட்டாந்தத்தில் வியாப்தியுடன் கூடியிருக்கிற ஏதுவை வியாத்தியையுடைத்தாகச் சொல்லுவது; உபநயமாவது திட்டாந்த பக்கங்களுக்கு வியாப்தியைப் பிரதரிசிப்பது; நிகமனமாவது மீளவும் பிரதிக்கினை ஏதுவுடன் நியமிப்பது. இதற்கு உதாரணம்: பருவதம் வன்னியையுடையது, புகையையுடைத்தாகையால்; யாதொன்று யாதொன்று புகையையுடையது, அது அது வன்னியையுடையது; அப்படியே இதுவும் புகையையுடையது ஆகையால் வன்னியையுடையதே.

---

* தத்ர பஞ்சாவயவம் ப்ரதிஜ்ஞா ஹேதுரேவ ச || ௪௭௫
த்ருஷ்டாந்தோபநயாவேதௌ நிகமஶ்சாபி பஞ்சக: |
இஷ்டார்த்தோக்தி: ப்ரதிஜ்ஞா து ஹேது: ஸாத்யாவிநாபவ: || ௪௭௬
த்ருஷ்டாந்தோ த்விவிதோ யத்ர ஹேதுஸாத்யத்வ தர்ஶ்யதே |
த்ருஷ்டாந்தாபேக்ஷயா வ்யாப்த்யா பக்ஷோபநயோ பவேத் || ௪௭௭
புந: ப்ரதிஜ்ஞாநியமோ நிகமஸ்ஸ்யாத்ஸஹேதுக: | ௪௭௮

இவைகள் அனைத்தும் புல்லியிட வகை இவைக்கு பொருள்விரித்துக் கொள்க - இப்பொழுது சொல்லிப்போந்தவைகளெல்லாம் வகைபொருந்தத் தக்கனவாகக் கீழ்ச் சொல்லிப் போந்தவற்றிற்கு அருத்தம் வித்தாரமாக அறிந்துகொள்க; போற்றியிடும் ஆகமத்தின் இலக்கணந்தான் புகலில் - பிரமாணமென்று சொல்லப்படாநின்ற ஆகமத்தினுடைய இலக்கணத்தைச் சொல்லுமிடத்து; எல்லையிலா அறிவு தொழில் அனுக்கிரகன் ஆகி எவ்வுயிர்க்கும் உயிராகி இச்சை வெறுப்பு இன்றி அல்லினுடன் பகலும் இலா அரன் அருள் வாக்கியங்கள் - சர்வஞ்ஞனுமாய்ச் சர்வகர்த்தாவுமாய்ச் சர்வானுக்கிரகம் பண்ணுவானுமாய்ச் சர்வான்மாக்களுக்கும் உயிருமாய் விருப்பு வெறுப்பு அற்றவனுமாய்க் கேவல சகலமற்றிருக்கிறவனுமாய்ப் பரமாத்தனுமிருக்கிற சிவனுடைய அருள்பொருந்திய வாக்கியம்; அவை அறியில் வேத சிவாகமங்களாம் - சிவவாக்கியத்தை அறியுமிடத்து வேதங்களும் சிவாகமங்களுமாம் என்றவாறு.

இதற்குச் சம்மதி பவுட்கரம். (உஎ)

அ - கை : மேல் அனுமானத்தின் குற்றமான ஏத்துவாபாச சொரூபம் கூறுகின்றது.

28. அனுமானந் தனக்கடையுங் குற்ற முண்டிங்
கறையுங்கா லசித்தனுடன் விருத்தனனை காந்தன்
பினுமுரைக்கு மனத்தியவ சாய னென்றும்
பேசியிடில் வாதிதமாம் விடய னென்றும்
மனுமேலும் விபரீதந் திட்டாந்த விரோத
மறுதலையோன் பழிக்கத்தர் ஞேல்வியெனு மாறும்
எனுமிவற்றி னிலக்கணங்க ளுதாரணங்க ளெல்லா
மெணிவிரித்துப் பொருளுரைப்ப ரியல்பி ஞேரே.

இ - ள் : அனுமானம் தனக்கு அடையும் குற்றம் உண்டு இங்கு அறையுங்கால் அசித்தனுடன் விருத்தன் அனைகாந்தன் பின்னும் உரைக்கும் அனத்தியவசாயன் என்றும் பேசியிடில் வாதிதமாம் விடயன் என்றும் - அனுமானத்தின் குற்றம் அசித்தனென்றும் விருத்தனென்றும் அனைகாந்தன் என்றும் அனத்தியவசாயன் என்றும் பாதிதவிடயன் என்றும் ஐந்து வகைப்படும்;

இவற்றுள் அசித்தனாவது * ஏதுவுக்குப் பக்கதன்ம மில்லாதிருக்கை; இந்த அசித்தன்தான் சொரூபாசித்தன் என்றும், பாகாசித்தன் என்றும், ஆசிரயாசித்தன் என்றும், விசேஷணாசித்தன் என்றும், விசேஷியாசித்தன்

* ஹேதோர் நாம் பக்ஷணாந்ருத்த வஜ்ஞாதா நி ஶிவாமஸே || அஅஅ

என்றும், உபயாசித்தன் என்றும், ஏத்துவஞ்ஞானுசித்தன் என்றும், அதிகரஞ்ஞஞ்ஞானுசித்தன் என்றும், அன்னியதராசித்தன் என்றும், வியாப்பியத்துவாசித்தன் என்றும் பத்துவகைப்படும். அவற்றுள் வியாப்பியத்துவாசித்தனும் இருவகைத்தாம்; இதில் ஒன்று வியாப்தியைக் கிரகிக்கிற பிரமாணமன்றியிலே இருக்கையாலும் பின்னையொன்று உபாதியுண்டாயிருக்கையினுலும். ஆக அசித்தன் பதினெரு பேதம்.

அவற்றுள் சொரூபாசித்தனுக்கு உதாரணம் : கடாதிகள் பரமாணுரூபமாகவேண்டும், அநித்தியமாகையால், பாஞ்சராத்திரிமதத்தில் ஆன்மாவைப்போல என்கிற இடத்தில் (உபயவாதி சம்பந்தமாக) அநித்தியமாகிய கடத்தில் நித்தியமாயிருக்கையாலென்கிற ஏதுஸ்வரூபம் சித்தியாமலிருக்கையால் சொரூபாசித்தன்.

இனிப் பாகாசித்தனுவது சீவனும் தேகமும் அநித்தியமாகவேண்டும், காரியமாகையால், கடம்போல என்கிற இடத்தில் காரியமாகையால் என்கிற ஏதுவானது பக்கமாய்ப் பண்ணப்பட்ட சீவதேகங்களுக்குள்ளே சீவன் என்கிற பாகத்தில் சித்தியாமலிருக்கையால் பாகாசித்தன்.

இனி ஆசிரயாசித்தனுவது ஆகாயத்துத் தாமரைப்பூ வாசனையை உடையது, தாமரைப் பூவாகையால், ஓடையில் தாமரைப்பூப்போல என்கிற இடத்திலே ஆகாயத்திலே தாமரைப்பூவாகிற ஆசிரயம் அசித்தமாகையால் ஆசிரயாசித்தன்.

விசேஷணுசித்தனுவது சத்தம் அநித்தியமாகவேண்டும், கண்ணுற் காணப்படும் குணமாகையால், ரூபம்போல என்னுமிடத்தில் கண்ணுல் காணப்படுமென்னும் விசேஷணம் ஏதுவில்லாதபடியால் விசேஷணுசித்தன்.

விசேஷியாசித்தனுவது சத்தம் அநித்தியமாகவேண்டும், அப்பிரமேயமாய்த் திரவியமாகையால், கடம்போல என்னுமிடத்தில் விசேஷியமாயிருக்கிற திரவியம் அசித்தமானபடியால் விசேஷியாசித்தன்.

உபயாசித்தனுவது கடம் அநித்தியமாகவேண்டும், குணமாய் அதீந்திரியமாயிருக்கையால் என்னுமிடத்து ஏதுவில் குணமென்கிற விசேஷணமும் காணப்படாமலிருக்கும் என்னும் விசேஷியமும் இரண்டுமில்லாமலிருக்கையால் உபயாசித்தன்.

---

𑌅𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 𑌆𑌶𑍍𑌰𑌯𑌸𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌾 𑌹𑍇𑌤𑍋𑌃 𑌪𑌕𑍍𑌷𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌰𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑌾𑌧𑌨𑍇 𑌹𑍇𑌤𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑌃 ॥ ௮௮௯
𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 𑌤𑌤𑍍𑌤𑌦𑌾𑌖𑍍𑌯𑌕𑌾 । ௮௯௰

ஏத்துவஞ்ஞானசித்தனாவது தேவதத்தன் அநேகம் தனத்தையுடையனாகவேண்டும், ஐசுவரியத்துக்கேதுவான அதிட்டத்தை உடையவனாகையால், எக்கியதத்தனைப்போல் என்னுமிடத்திலே அதிட்டத்தையுடையவன் என்கிற ஏது நம்மால் அறியப்போகாதாகையால் ஏத்துவஞ்ஞானசித்தன்.

அதிகரணாஞ்ஞானசித்தனாவது இப்போது இந்த ஆகாயத்தில் பரமாணுவானது திரவியாரம்பகமாகவேண்டும், பரமாணுவாகையால், கடாரம்பகப் பரமாணுவைப்போல் என்னுமிடத்து ஆகாசாதிகரணமா யிருக்கின்ற ஏதுவுக்கு ஆசிரயமானுயிருக்கிற பரமாணுவை விஷயீகரித்துக்கொண்டு ஞானமற்றிருக்கையால் அதிகரணாஞ்ஞானசித்தன்.

அன்னியதராசித்தனாவது அநித்தியம் சத்தம், கிருதகமாகையால், கடம்போல் என்னுமிடத்தில் அன்னியதரனாயிருக்கிற மீமாஞ்சன் மதத்தில் கிருதகத்துவம் என்கிற ஏது அசித்தமாகையால் அன்னியதராசித்தன் என்கிற ஏத்துவாபாசன்.

வியாப்பியத்துவாசித்தனாவது சர்வமும் க்ஷணிகமாகவேண்டும், அசத்தாகையால், நீர்க்குமிழிபோல் என்னுமிடத்து அசத்துவம் என்கிற ஏதுவுக்கும் க்ஷணிகம் என்கிற சாத்தியத்திற்கும் வியாப்தியைக் கிரகிக்கப் பிரமாணமற்றிருக்கையால் வியாப்பியத்துவாசித்தன்.

ஔபாதிக வியாப்பியத்துவாசித்தனாவது கருப்பத்திலே இருக்கிற பிள்ளை கறுப்பனாகவேண்டும், மித்திரையின்பிள்ளை ஆகையால், மித்திரை என்கிறவளுடைய பூர்வத்திற் பிள்ளையைப்போல என்னுமிடத்துக் கறுப்பாகவேண்டும் என்று சாதிக்குமிடத்தில் சாகம் முதலான ஆகாரபரிணாமம் உபாதியாயிருக்கையால் ஔபாதிகவியாப்பியத்துவாசித்தன். ஆக அசித்தன் பதினொன்று.

மேல் * விருத்தவேத்துவாபாசனாவது சாத்திய விபரீத வியாப்தனாயிருக்கிற ஏது, சாதன விபரீத வியாப்தனாயிருக்கிற ஏது என இரண்டு. அவற்றுள், சாத்தியவிபரீதவியாப்தனாவது சத்தம் அநித்தியமாகவேண்டும், காரியமாகையால், ஆகாசம்போல் என்னுமிடத்துக் காரியத்துவம் என்கிற ஏதுவானது தன்னுடைய சாத்தியமான நித்தியமாயிருக்கிறதற்கு விபரீதமான அநித்தியமாயிருக்கிறதனோடே வியாப்தமாகையால் சாத்திய விபரீதமென்னும் ஏத்துவாபாசன்.

சாதனவிபரீதவியாப்தனாவது மனம் அநித்தியமாகவேண்டும், சேதனமாகையால், ஆன்மாவைப்போல் என்னுமிடத்து அனித்தியத்துவமானது சாதனமான சேதனத்துவத்துக்கு விபரீதமான அசேதனத்துடன் வியாப்தமாகையால் சாதனவிபரீதவியாப்தன்.

---

* साध्येतरो विरुद्धस्स्यात् हेतुः पक्षविपक्षयोः ॥ अत्र
व्यापकोऽव्यापको भेदात् वृत्तिर्हेतुतः । अत्र

இனி, * அநைகாந்திகனாவது வியபிசாரத்துடனே கூடின ஏது. அது தான் சாதாரணாநைகாந்திகன் என்றும், அசாதாரணாநைகாந்திகன் என்றும் இருவகைத்தாம். அவற்றுள், சாதாரணாநைகாந்திகனாவது பக்க சபக்க விபக்கங்களிலிருக்கிற ஏது. உதாரணம்: ஆன்மா நித்தியனாகவேண்டும், பிரமேயமாகையால், ஆகாசம்போல் என்னுமிடத்தில், பிரமேயமாகையால் என்னும் ஏது பக்கமாயிருக்கிற ஆன்மாவினிடத்திலும் சபக்கமாயிருக்கிற ஆகாயத்தினிடத்திலும் விபக்கமாயிருக்கிற கடத்தினிடத்திலும் இருக்கையால் சாதாரணாநைகாந்திகன்.

அசாதாரணாநைகாந்திகனாவது பக்கமாத்திரத்தி லிராநின்ற ஏது. உதாரணம்: பூமியானது நித்தியமாகவேண்டும், கந்தத்தையுடைத்தாகையால் என்னுமிடத்திலே கந்தத்தையுடைத்தாகையால் என்ற ஏதுவானது சபக்கமாயிருக்கிற ஆகாசாதிகளினும் விபக்கமாயிருக்கிற சலாதிகளினும் இல்லாமல் பக்கமாயிருக்கிற பூமிமாத்திரத்திலிருக்கையால் அசாதாரணாநைகாந்திகன்.

ஏதுவிருக்க யோக்கியமல்லாத பக்கத்திலிருந்த ஏது அநைகாந்திகன் என்பது ஒக்கும், பக்கமாத்திரத்திலிருக்கிற ஏது அநைகாந்திகன் என்பது எப்படி என்னில், ஏதுவிருக்க யோக்கியமல்லாத விபக்கத்திலிருக்கிற ஏது அநைகாந்திகனாகிறதுபோல இருக்க யோக்கியமான சபக்கத்திலிராமல் பக்கமாத்திரத்திலேயிருக்கிற ஏதுவும் வியபிசார ஏதுவே.

இனி, † அநத்தியவசிதனென்னும் ஏத்துவாபாசனாவது சாத்திய நிச்சயத்தைப் பண்ணுவிக்கமாட்டாதிருக்கிற ஏது. இதற்கு உதாரணம்: விசுவமானது சந்ததமிருக்கும், வத்துவாகையால் என்னுமிடத்தில், வத்துவாகையாலென்கிற ஏது எப்பொழுதுமிருப்பதென்னும் தனது சாத்தியத்தை நிச்சயிக்கமாட்டாதாகையால் அநத்தியவசிதனென்னும் ஏத்துவாபாசன்.

மேல் ‡ பாதித விஷயனென்னும் ஏத்துவாபாசனாவது பெலத்தையுடைய பிரமாணாந்தரத்தால் பாதிக்கப்பட்ட ஏது. இதற்குக் காலாத்தியயாபதிட்டனென்றும் பெயர். இது பரமதங்களாயிருக்கிற பிரமாண பேதத்தால்

---

* பக்ஷாதித்ரிதயே வர்த்தீ ஸோऽநைகாந்திக உச்யதே ॥ அ ௧௧௧
ஆத்மா நித்ய: ப்ரமேயத்வாதித்யாத்யாஹ்ருதயோ மதா: । அ ௧௧௨

† ஸாத்யாப்ரயோஜக: பக்ஷ அநவாப்த்யவஸாயிக: ॥ அ ௧௧௨
ஸந்தத்யா வர்த்ததே விஶ்வம் வஸ்துத்வாதித்யுதாஹ்ருத: । அ ௧௧௩

‡ காலாதீதஸ்து பக்ஷஸ்ய பக்ஷே பாதவிரோதத: ॥ அ ௧௧௩
நிர்பாதாநகம் விஶ்வம் கார்யமாத்ராந்தக்ருத்த: । அ ௧௧௪

பிரத்தியட்சபாதிதன் என்றும், அனுமானபாதிதன் என்றும், ஆகமபாதிதன் என்றும், அருத்தாபத்திபாதிதன் என்றும் பேதப்படும். அவற்றுள்:

பிரத்தியட்ச பாதிதனுவது அக்கினியானது உஷ்ணமுடையதன்ருக வேண்டும், பதார்த்தமாகையால், கடம்போலென்னுமிடத்து அக்கினியானது உஷ்ணமாய்ப் பிரத்தியட்சமாய்க் காணப்படுதலால் பிரத்தியட்ச பாதிதன்.

அனுமான பாதிதனுவது எல்லாக்காரியங்களும் உபாதானமில்லாதன, ஒரு காலத்திலே வருகையால் என்னுமிடத்துக் காரியமெல்லாம் உபாதானத்தையுடையனவாக அனுமானசித்தமாகையால் காரியம் நிருபாதானம் என்பது அனுமான பாதிதன்.

ஆகம பாதிதனுவது யாகமுதலானவைகள் சுவர்க்கசாதனமல்ல, கிரியைகளாகையால், பிரயோசனமற்ற தண்ணீரையடிப்பது முதலான கிரியையைப் போலென்னுமிடத்து 'யாகஞ் சுவர்க்கசாதனம்' என்னும் வேதத்தால் சுவர்க்க சாதனமன்று என்பது பாதிக்கப்படுகையால் ஆகம பாதிதன்.

அருத்தாபத்தி பாதிதனுவது நூறு வருஷம் சீவித்திருக்கிற தேவதத்தனுனவன் கிருகத்திலுமில்லை வெளியிலுமில்லை, பிரத்தியட்சமாகக் காணப்படாதிருக்கையால் என்னுமிடத்துச் சோதிட சாத்திரத்தால் நூறு வருஷம் சீவித்திருக்கிறவன் உள்ளே இல்லாமலிருந்தால் புறத்திலிருப்பன் என்பது அர்த்தாத் சித்தமாகையால் அருத்தாபத்தி பாதிதன். இவ்வைந்தும் ஏத்துவாபாசன்.

இதற்குச் சம்மதி பவுட்கரம்.

மனு மேலும் விபரீதம் திட்டாந்த விரோதம் மறுதலையோன் பழிக்கத் தன்தோல்வி எனும் ஆறு எனும் இவற்றில் இலக்கணங்கள் உதாரணங்கள் எல்லாம் எண்ணி விரித்துப் பொருள் உரைப்பர் இயல்பிேைர் - பொருந்தப் படாநிற்கிற விபரியயச்சொல்லென்றும் திட்டாந்தாபாசனென்றும் பிரதிவாதியாயிருக்கிறவன் தூஷிக்கத் தூஷணப்படும் நிக்கிரகத்தானமென்றும் குற்றங்கள் உண்டு; இவையிற்றினுடைய இலக்கணப் பிரமாணங்களையெல்லாம் விசாரித்து வித்தாரமாக அருத்தஞ்செய்வார்கள் சுபாவசீலராயிருக்கிறவர்கள் எ-று.

விபரீதச் சொல்லாவது அன்னுவய திட்டாந்தத்துக்கும் வெதிரேக திட்டாந்தத்துக்கும் வித்தியாசமாகச் சொல்லுகையென்றும், அன்னுவய வெதிரேக வியாத்திகளுக்கு வித்தியாசமாகச் சொல்லுகையென்றும், அன்னுவயவெதிரேக வியாத்திகளிலே சாத்திய சாதனங்களுக்கு வித்தியாசமாகச் சொல்லுகையென்றும், சாத்தியத்துக்குச் சாதனமாகச் சொல்லுகையென்றும், சாதனத்துக்குச் சாத்தியமாகச் சொல்லுகையென்றும் அன்னுவயானுமானத்தில் ஐந்துவகை. இப்படியே வெதிரேக அனுமானத்திலும். உத்தி

விபரீதம் ஆகப் பத்துவகை. இவைகளுக்கு உதாரணம்: திட்டாந்த விபரியயோத்தியாவது வஹ்நிமாந் தூமவாந் யதா மஹாநஸ: என்கிற அனுமானத்தில் எங்கெங்கே தூமம் அங்கங்கே வன்னி யுண்டென்று அன்னுவய வியாத்தியைச் சொல்லித் தண்ணீர்மடுவைப்போலென்பது. அந்த அனுமானத்தினின்றே எங்கேயெங்கே வன்னி உள்ளது அங்கேயங்கே புகையுள்ளது என்று வியாத்தியைச்சொல்லி அடுக்களையைப்போலென்பது வியாத்திவிபரியயம். அந்த அனுமானத்திலேதானே பருவதம் தூமவான் வன்னியையுடைத்து ஆகையால் அடுக்களைபோலென்பது சாத்திய சாதன விபரியயத்துக்குத் திட்டாந்தம். இதுவே சாத்திய விபரியயத்துக்கும் சாதன விபரியயத்துக்கும் திட்டாந்தம். வெதிரேகத்திலும் இப்படி ஐந்து விதம் கண்டுகொள்க.

திட்டாந்தம்போலிருந்து திட்டாந்தமாகாதது * திட்டாந்தாபாசன். அது எட்டு வகைப்படும். சாதன்மிய திட்டாந்தத்துக்குச் சாத்திய வைகலியம், சாதன வைகலியம், சாத்திய சாதனங்களுடைய உபய வைகலியம், சொரூப வைகலியம் என்று நாலுவிதமாம். வைதன்மிய திட்டாந்தத்துக்கும் சாத்தியாபாவமில்லாதிருக்கை, சாதனுபாவமில்லாதிருக்கை, சாத்திய சாதன உபயாபாவமில்லாதிருக்கை, ஆசிரயாபாவமில்லாதிருக்கை என்று நாலுவிதமாம்.

அன்னுவயதிட்டாந்தத்தில் சாத்திய வைகல்லியத்துக்கு உதாரணம்: காரியம் காரியமல்ல என்று சந்தேகப்பட்டிருக்கிற வத்துவானது காரியமாகவேண்டும், பிரத்தியட்சமாகையால், ஆன்மாவைப்போலென்னுமிடத்துச் சாத்தியமாயிருக்கிற காரியத்துவம் ஆன்மாவினிடத்தி லில்லாதிருக்கையால் சாத்தியமான இதனிலும் திட்டாந்தாபாசம். இதுவே வெதிரேக திட்டாந்தத்தில் சாத்தியாபாவவிகலன்.

அன்னுவய திட்டாந்தத்தில் சாதன வைகலியத்துக்கு உதாரணம்: சந்தித்தமாயிருக்கிறது காரியமாக வேண்டும், பிரத்தியட்சமாகையினாலே, அதிட்டம்போல. இவ்விடத்தில் அதிட்டமான திட்டாந்தமானதிலே பிரத்தியட்சமென்கிற சாதனமில்லாதிருக்கையால் சாதனவிகல திட்டாந்தத்துக்கு உதாரணம். இதுவே வெதிரேக திட்டாந்தத்தில் சாதனு பாவ வைகல்லியத்துக்கும் உதாரணம்.

உபய வைகல்லியத்துக்கு உதாரணம்: சந்தித்தமாயிருக்கிறது காரியமாகவேண்டும், பிரத்தியட்சமாகையால், மாயையைப்போல் என்னுமிடத்துச் சாத்தியமான காரியமாகையும் சாதனமாயிருக்கிற பிரத்தியட்சத்துவமும் இல்லை. இதுவே வைதன்மிய திட்டாந்தத்துக்கும் உதாரணம்.

---

* நித்ய: ஶப்தோ விமூர்த்தத்வாத் யதா கர்மேதி கீர்த்திதே ॥ அ௬௭
த்ருஷ்டாந்தஸ்ய ஸ்வஸாத்யவிகலத்வம் தயா ஸ்ம்ருதம் । அ௬அ

சொரூபவைகல்லியத்துக்கு உதாரணம் : சந்தித்தமாயிருக்கிறது காரியமாகவேண்டும், பிரத்தியக்ஷமாகையால் ஆகாயப்பூப்போல என்னுமிடத்து இந்தத் திட்டாந்தமான ஆகாயப்பூவே இல்லையாகையால் ஸ்வரூப வைகல்லியனென்னும் திட்டாந்தாபாசன். இதுவே வெதிரேக திட்டாந்தத்துக்கும் உதாரணம். ஆகத் திட்டாந்தாபாசன் எட்டு.

இதற்குச் சம்மதி பவுட்கரம்.

மேல் நிக்கிரகத்தான இலக்கணம். தத்துவாப்பிரதிபத்தி யென்று சாமானிய இலக்கணம். இந்த நிக்கிரகத்தானந்தான் பிரதிஞ்ஞாஹானி, பிரதிஞ்ஞாந்தரம், பிரதிஞ்ஞாவிரோதம், பிரதிஞ்ஞாசன்னியாசம், ஏத்துவந்தரம், அர்த்தாந்தரம், நிரர்த்தகம், அவிஞ்ஞாதார்த்தம், அபார்த்தகம், அப்பிராப்தகாலம், ந்யூனம், அதிகம், புனருத்தி, அநநுபாஷணம், அஞ்ஞானம், அப்பிரதிபை, விக்ஷேபம், மதானுஞ்ஞை, பரியநுயோச்சியோபேட்சணம், நிரநுயோச்சியாநுயோகம், அபசித்தாந்தம் என்று இருபத்தொரு பேதம்.

இதில் பிரதிஞ்ஞாஹானி என்றது முந்திச் சொன்னதுக்குப் பரன் தூஷித்துள்ளளவில் கதா நிருவாகத்தைப் பாராமலிருக்கிறவனுலே திரும்பத் தான் சொன்னத்தை விடுகிறது. இதற்கு உதாரணம்: சத்தம் நித்தியமாக வேண்டும், இந்திரியத்தால் கிரகிக்கப்படுகையால், கடம்போல் என்றுள்ளளவிலே பிரதிவாதியானவன் இந்திரியத்தால் கிரகிக்கப்படுஞ் சாமான்னியம் அநித்தியமாகக் காணப்பட்டதென்று வியபிசார தோஷத்தைச் சொல்லுமளவிலாகில் சத்தம் அநித்தியமாகிறது என்பது பிரதிஞ்ஞாஹானி.

இனிப் பிரதிஞ்ஞாந்தரமாவது, விசேஷணமில்லாமல் தான் சொன்ன சாத்தியத்துக்குப் பரன் தூஷணமுண்டாக்கியுள்ளளவில் அந்தத் தூஷணம் போகவேண்டி ஒரு விசேஷணத்தை வைத்துக்கொண்டு முன் சொன்ன சாத்தியத்தையே சொல்லுகிறது. இதற்கு உதாரணம்: நித்தியங்கள் வன்னம், கேட்கப்படுகையால், சத்தத்துவமென்னுஞ் சாமானியம்போல் என்றுள்ளளவில் தொனியிலே வியபிசார தூஷணஞ் சொல்லியுள்ளளவிலாஞல் தொனியுடனேகூட வன்னங்கள் அநித்தியம் என்பது பிரதிஞ்ஞாந்தரம்.

ஏககர்த்திருகமான அவாந்தர வாக்கியங்களுக்காவது பதங்களுக்காவது ஒன்றுக்கொன்று வியாகாதமாயிருக்கிறது பிரதிஞ்ஞாவிரோதமென்னும் நிக்கிரகத்தானம். இதற்கு உதாரணம்: குணத்துக்கு வேருயிருக்கிறது திரவியம், குணத்தைக் காட்டிலும் அன்னியமாகாமலிருக்கையால், ரூபத்தைப்போலென்றது. குணவியதிரித்தமென்கிற பிரதிஞ்ஞைகளுக்குக் குணத்தைக் காட்டிலும் வேருகாமலிருக்கையாலென்பது வியாகாதமாகையால் இது பிரதிஞ்ஞாவிரோதம்.

பிரதிஞ்ஞாசன்னியாசமாவது தான் சொன்னதைத் தான் சொல்லவில்லை யென்று விடுவது. இதற்கு உதாரணம்: சத்தமானது நித்தியமாக

வேண்டும், வியாபாரத்தால் உண்டாகையால், ஆகாசம்போல் என்ற அளவிலே அநித்தியத்துவத்துடன் வியாப்தியுடைய வியாபாரத்தாலுண்டாகையால் அது நித்தியமாகிறதற்கு எப்படி ஏதுவாம் என்று பரன் தூஷித்த காலத்தில் நித்தியமென்கிறத்திலே வியாபாரத்தால் உண்டாகை ஏது என்று நான் சொல்லவில்லையென்று தான் சொன்னத்தைத் தானே சொல்லவில்லை என்பது பிரதிஞ்ஞாசன்னியாசம்.

ஏதுவுக்குச் சாதிக்கிற அம்சம் தூஷிக்கப்பட்டுள்ளளவிலே அந்தத் தோஷம் போகவேண்டி மீளவும் ஏதாகிலும் ஒரு விசேஷணத்தைக் கூட்டிக் கொள்ளுதல் ஏத்துவந்தரம். இதற்கு உதாரணம்: சத்தமானது அநித்தியமாகவேண்டும், நம் பாகிய இந்திரியத்தால் கிரகிக்கப்படுகையால் என்று வாதி சொல்லியுள்ளளவிலே இந்த ஏது நித்தியமாகிய சத்தத்துவ சாதியுடன் வியாப்தமாகையால் அனைகாந்திகனென்று பரன் தூஷித்துள்ளளவில் சாதாரணத்தை உடைத்தாயிராநின்றுகொண்டு என்னும் விசேஷணத்துடன் அந்த ஏதுவைச் சொல்லுவது ஏத்துவந்தரம்.

அருத்தாந்தரமாவது உபக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற ஏதுவினுடைய தூஷணத்துக்கு யாதொன்று உபயோகமற்றதோ அதைச் சொல்லுவது, இதற்கு உதாரணம்: சத்தமானது அநித்தியம், இந்திரியத்தால் கிரகிக்கப்படுகையால், கடத்தைப்போல என்று இந்த அனுமானத்துக்கு ஏதுவான இந்திரியத்தால் கிரகிக்கப்படும் என்கிற ஏதுவானது நித்தியமாயிருக்கிற கடத்துவசாதியுடன் வியபிசாரியென்று பரன் சொல்லியுள்ளளவிலே இந்தச் சத்தம் ஆகாயத்தினுடைய குணம், ஆகாயத்தினால் கிரகிக்கப்படும், சமவாய சம்பந்தத்தினாலே, அந்தச் சமவாய சம்பந்தமும் நித்தியமே என்று பிரகிருதத்துக்குபயோகியல்லாத வாக்கியத்தைப் பிரயோகிப்பது அருத்தாந்தரம்.

அவாசகமாயிருக்கிற பதத்தைப் பிரயோகியாநின்ற வாதிக்கு நிரர்த்தகம் என்னும் நிக்கிரகத்தானம். இதற்கு உதாரணம்: வடோ நித்யஃ அகார ககார யகார ரேபாத்மகமாயிருக்கிற சத்தமானது அகாரியரூபமாய் இருக்குமென்னும் பிரகிருதார்த்தத்தைச் சொல்லமாட்டாது அசத்தத்தைப் பிரயோகிக்கை நிரர்த்தகம்.

அவிஞ்ஞாதார்த்தமாவது வாதியினால் மூன்று பிரகாரஞ்சொல்லப்பட்டிருக்கையிலும் சபையிலிருக்கிறவர்களாலும் பிரதிவாதியினாலும் அருத்தந் தெரியாத சத்தத்தைப் பிரயோகிக்கை. இதற்கு உதாரணம்: ஶ்வேதோ தாவதி என்கிற வாக்கியத்துக்குச் சுவா என்கிற நாய் இங்கிருந்து போகின்றது என்றும், சுவேதமாய் வெளுத்திருக்கிற குதிரை போகின்றதென்றும், சுவேதன் என்கின்ற புருஷன் போகின்றான் என்றும் நிச்சயிக்கப்போகாதிருக்கிற அர்த்தத்தைப் பிரயோகிக்கை.

அபார்த்தகமாவது பத சமூகங்கள்தாம் வாக்கிய சமூகங்கள்தாம் விசேஷண விசேஷியமாகக் கொண்டு அன்னுவயம்பண்ண யோக்கிய

மன்றியிலும் ஒன்றுக்கொன்று ஆகாங்க்ஷை யோக்கியதை சந்நிதியற்றிருக்கிற பதங்களுடைய சமூக ரூபமான வாக்கியத்தையும் தூர தூர இருக்கிற வாக்கியத்தையும் பிரயோகிப்பது. இதற்கு உதாரணம்: பத்து மாதுளம் பழம், ஆறப்பம், ஒரு குழி ஆட்டுத்தோல், மாங்கிசவுண்டை, இந்தச் சல்லடம் குமாரி, இது ஸ்வைர்யகிருபனென்கிற புருஷனுடைய பிதா பிராதிசீமன், என்றும் அசனம் ஓடையிலே உண்டு குளித்துப்போகிறான் என்னும் வசனம் போலே ஒத்த வாக்கியத்தைச் சொல்லுகை.

*பிரதிஞ்ஞையாதி அவயவங்களையும் அவற்றின் அம்சங்களையும் கிரமந்தப்பி முன் பின்னாகச் சொல்லது அப்பிராப்தகாலம் என்னும் நிக்கிரகத்தானம். அஃதாவது புகையினால் அடுக்களையைப்போல மலையினும் நெருப்புண்டு என்பதுபோலச் சொல்லும் வசனங்கள்.

பிரதிஞ்ஞை முதலிய அவயவங்களுட் சிறிது சொல்லி மற்றவை சொல்லாமை ந்யூனமென்னும் நிக்கிரகத்தானம். மலை நெருப்புள்ளது, புகையினால், அடுக்களைபோல என்று சொல்லி மற்றது சொல்லாமை.

உபயோகமாயும் கூட்டரவுடையனவாயுமிருக்கிற சொற்களைப் புனருத்தமாகச் சொல்லுதல் அதிகம் என்கிற நிக்கிரகத்தானம். அஃதாவது பர்வதமானது அக்கினியையுடையது, புகையையும் வெளிச்சத்தையுமுடைத்தாகையால். எப்படி? அடுக்களை கொல்லுலைக்கூடம் இவைபோல.

வெளியாயிருக்கிற அர்த்தத்தைப் பிரயோசனமில்லாமல் திரும்பியும் வேறே ஒரு சத்தங்கொண்டு இரட்டித்துச் சொல்லுதல் புனருத்தி என்கிற நிக்கிரகத்தானம். அஃது இரண்டுவிதமாயிருக்கும், சத்தபுனருத்தி அர்த்தபுனருத்தியென. அவற்றுள் முந்தியது அநித்திய சத்தம் அநித்தியசத்தம். இரண்டாவது அநித்திய சத்தம் நாசமாய்ப்போம்.

வாதியினாலே சொல்லப்பட்டு அறிவுடையவனாலே அறியப்பட்ட அர்த்தத்தையுடைய சத்தத்தை மூடனாயிருக்கிறவன் சொன்னபடி திரும்பச்சொல்ல அறியாமலிருத்தல் கூடச்சொல்லாமையென்கிற நிக்கிரகத்தானம். இதுவே அநநுபாஷணம். வாதியாற் சொல்லப்பட்டு மத்தியஸ்தராற் பொருளறியப்பட்டு மறுபடி வாதியினாற் சபையாராற் சொல்லப்பட்டும் சொல்லக்கூடியதாயுமிருக்கிற சொல்லுக்குப் பதில் சொல்லாமை அநநுபாஷணம் என்னும் நிக்கிரகத்தானமென்பதும் ஒன்று.

வாதியினாலே சொல்லப்பட்டு அறிவுடையவன் அறிந்திருந்தாலும் வாதியினுடைய வாக்கியார்த்தத்தை எப்படி தெரிந்ததில்லை என்று பிரதிவாதி சொல்லுதல் அஞ்ஞானமென்கிற நிக்கிரகத்தானம்.

---

* இதற்கு மேலுள்ள நிக்கிரகத்தானங்களின் விபரம் பிரதிகளில் விடப்பட்டது. ஸ்ரீ சிவாக்கிரயோகிகளது சித்தியாருரையிலிருந்து அப்பாகம் பூர்த்தியண்ணப்பட்டது.

வாதி மூன்றுதரஞ்சொல்லி மத்தியஸ்தர் பொருளறிந்திருக்கையிலும் எப்போது பிரதிவாதி நான் அறியவில்லையென்று தன் அறியாமையை வெளிப்படுத்துகிருனோ அப்போது அவனுக்கு அப்பிரதிபை யென்னும் நிக்கிரகத்தானம். அஃதாவது தேவதாத்தியானம் செய்வோர்போற் பேசாதிருக்கை, இராஜகார்யஞ்சொல்லுகை, சுலோக முதலானவை படித்தல், மயிராற்றுதல், ஆகாசம்பார்க்கை, தரையிலெழுதுகை முதலியவைகளைச் செய்கை.

வாதம் பண்ணவேண்டும் என்று வந்த வாதி பிரதிவாதிகளில் ஒருவன் வாதம் ஆரம்பித்தபின்பு காலதாமசம் பண்ணத்தக்கதாக மத்தியஸ்தராயிருக்கிற வித்துவாமிசர் வரவில்லை என்றும், சபைக்கு நாயகனுயிருக்கிற இராஜா வரவில்லை அவன் வருதற்கு ஏதுவாகிய எக்காளையின் சத்தமும் கேளாம் என்றும் காலக்ஷேபம் பண்ணுவது விக்ஷேபமென்னும் நிக்கிரகத்தானம்.

தனது சித்தாந்தத்தில் எதிராளி சொன்ன தோஷத்தை நீக்காமல் எதிரிக்கு அநிஷ்ட புத்தியினல் தனதிஷ்டத்தைக் காட்டல் மதாநுஞ்ஞை என்னும் நிக்கிரகத்தானம். அஃதாவது, சிலர் தனக்குச் சோரத்தன்மையை ஒப்புக்கொண்டு பிரதிவாதியைப் பார்த்துப் புருஷனுகையால் சோரத்தன்மை உனக்கு உண்டு என்று சொல்ல, அவ்வேதுவினல் நீயும் சோரனென்று சொல்லுகை.

பிரதிவாதியானவன் நிக்கிரகயோக்கியமான வாக்கியத்தைப் பிரயோகித்திருக்கையிலும் அஃதை அறிந்தாதல் அறியாமையாதல் நிக்கிரகித்துப் பரியாசம்பண்ணுதிருப்பது பரியநுயோச்சியோபேட்சணம் என்னும் நிக்கிரகத்தானம்.

வாதியானவன் நிக்கிரகத்தானத்திற்கு யோக்கியமல்லாமல் தகுந்த வாக்கியம் சொல்லியிருக்கவும் ஆபாசமாக நிக்கிரகத்தைச் சொல்லிப் பரியாசம்பண்ணுகை நிரநுயோச்சியாநுயோகம் என்னும் நிக்கிரகத்தானம்.

யாதாவதொரு சாஸ்திரத்தின் சித்தாந்தத்தைக் குறித்து வாதமுண்டாயிருக்கையில் நடுவில் சித்தாந்த விரோதமான அர்த்தத்தை ஒப்புக்கொள்ளல் அபசித்தாந்தமென்னும் நிக்கிரகத்தானம். அஃதாவது, மகத் ஆதியாயிருக்கிற விகாரங்கள் ஏகப் பிரகிருதியில் உண்டானவைகள் ஏகரூபமாகக் காண்கையின், ஏக ஜாதியாயிருக்கிற மண்ணுண்டையிலுண்டான கடம் மண்ணினது விகாரமாயிருக்குமாப்போல என்ற சாங்கியனைப்பிரகிருதியாவது ஏது? விகாரமாவது ஏது? என்று கேட்டுழி, யாதொன்றிலிருந்து அசத்துக்களாயிருக்கிற விகாரங்கள் உண்டாகின்றன அது பிரகிருதி, யாவை சில உற்பத்தியும் நாசமும் உண்டாயிருக்கின்றன அவை விகாரங்கள் என்று உத்தரம் சொன்னுகில் அவனுக்கு அசத்கார்யாங்கீகாரமாகிய அபசித்தாந்தம் என்னும் நிக்கிரகத்தானம். (உஅ)

**அ - கை :** மேல் மோட்ச ஏதுவாகச் சொல்லப்பட்ட பதி பசு பாசங்களில் பதிக்கு ஸ்வரூப இலக்கணமென்றும் தடத்த இலக்கணமென்றும் இருவகைப்படும். அவற்றுள் ஸ்வரூபவிலக்கணம் கூறுகின்றது.

29. அறிவரிதாய்ச் சச்சிதா னந்த மாகி
யகண்டமாய் நித்தியமா யனுதி யாகிப்
பொறிகரணங் குறிகுணங்கள் விகார மின்றய்ப்
பூரணமா யொப்பிலதா யமல மாகிச்
செறிவரிதாய் மிகச்சிறிதாய்ப் பெரிது மாகிச்
சித்தசித்தா யுள்ளதனைச் சேட்டித் தொன்றய்ப்
பிறிவிலதாய்ப் பேரொளியாய்ப் பெண்ணலியா ணன்றய்ப்
பெறும்பொருளாம் பதிசொருபம் பேசுங் காலே.

**இ - ள் :** சச்சிதானந்தம் ஆகி - சத்தும் சித்தும் ஆனந்தமுமாகி; சத்தாவது முயற்கொம்புபோல் அசத்தல்லாமல் எப்பொழுதும் உள்ளதாய் இருப்பது. சித்தாவது சடமல்லாமல் நிருவிகற்பஞான சொரூபமாயிருப்பது ஆனந்தமாவது துக்கமல்லாமற் சுகமாயிருப்பது. இங்ஙனம் சச்சிதானந்தம் என்பது சொரூப இலக்கணம். இனி அறிவரிதாய் என்பது முதலானவைகள் அந்த வத்து அப்படிப்பட்டது என்று சொல்லுதல்;

அறிவரிதாய் - பாச பசு ஞானங்களால் அறியப்படாததாய்; அகண்டமாய் - கால தேச வத்துக்களால் கண்டிக்கப்படாததாய் ; நித்தியமாய் - எல்லாக்காலத்திலும் அழிவற்றதாய்; அநாதியாய் - ஒருகாலத்தில் உண்டானதல்லாமல் அநாதியே உளதாய்; பொறி கரணம் குறி குணங்கள் விகாரம் இன்றய் - பொறி என்னும் விடயங்கள், கரணம் என்னும் ஞானேந்திரிய கன்மேந்திரிய அந்தக்கரணங்கள், குறி என்னும் பஞ்சவன்னுதி அடையாளங்கள், குணமென்னும் சர்வஞ்ஞத்துவாதி குணங்கள், விகாரம் ஆகிய இவைகள் இல்லாததாய்; பூரணமாய் - எள்ளுக்குள் எண்ணெய்போல எங்கும் பரிபூரணமாய்; ஒப்பிலதாய் - ஒப்பற்றதாய்; அமலமாகி - அநாதியே ஆணவாதி பாசங்களற்றதாய்; செறிவரிதாய் - பரிபாககாலத்தில் பராசத்தி யோகத்தாலல்லது பொருந்துதற்கு அரிதாய்; மிகச்சிறிதாய் - இந்திரியாந்தக்கரணங்களால் அறிதற்கு அரிதாகையால் அணுவுக்கணுவாய் மிகவும் சூக்குமமாய்; பெரிதும் ஆகி - சருவவியாபியாயிருக்கையால் மகத்துக்கு மகத்தாய்;

சித்து அசித்தாயுள்ளதனைச் சேட்டித்து ஒன்றய் - சித்தாகிய ஆன்மாவையும் அசித்தாகிய பிரபஞ்சத்தையும் தன் சன்னிதிமாத்திரத்தால் சேட்டிப்பித்து ஒருமுதலாயிருப்பதாய்; பிறிவு இலதாய் - சடசிதான்மகப் பிரபஞ்சத்துடன் பிறிவற்றதாய்; பேரொளியாய் - பரஞ்சோதியாய் ; பெண் அலி ஆண் அன்றய் - ஆண் பெண் அலி என்னும் மூவகை உருவமல்லாததாய்; பெறும் பொருளாம் - பரிபாககாலத்தில் அடையத்தக்க பொருளாயிருப்பது;

பதி சொருபம் பேசுங்கால் - இப்படிப்பட்டது பதிஸ்வரூபம் சொல்லுமிடத்து எ - று. (உகூ)

அ - கை : இப்படிப்பட்ட அந்தப் பொருள் சத்தேயன்றி அசத்தன்று, சுவானுபவவேத்தியமென்பது கூறுகின்றது.

30. மோகமற்றிவ் வுரைவாக்கு மனவுணர்வுக் கெட்டா
முதல்வனுள னென்றலென மொழியாக் கொண்ணீ
யாகமத்தாற் பதியுளனென் றறிந்தோ மேலு
மனுமானத் தாலுமங்க னுணர்ந்து முத்தித்
தாகமுற்றுச் சற்குருவை யடைந்து பாசந்
தனைநீங்கிச் சச்சிதா னந்த மான
போகமுற்றே யேகமிரண் டென்ன வொண்ணுப்
புணர்ச்சியும்பெற் றேமதனற் பொய்யலவப் பொருளே.

இ - ள் : மோகம் மற்று இ உரை வாக்கு மன உணர்வுக்கு எட்டா முதல்வன் உளன் என்றல் என மொழியாக்கொள் நீ - இப்படி வாக்கு மனத்துக்கு எட்டாததொரு பொருள் உண்டென்பது மோகப்பிராந்தியென்று நீ சொல்லாதே; ஆகமத்தால் பதி உளன் என்று அறிந்தோம் - வேத சிவாகமங்களால் செகத்கர்த்தா ஒருவன் உளன் என்று அறிந்தோம்; மேலும் அனுமானத்தாலும் அங்கன் உணர்ந்து - இதன்றியில் மேலும் செகத்காரிய ஏதுவால் கர்த்தா உண்டென்று அறிந்தோம்; முத்தித்தாகம் உற்றுச் சற்குருவை அடைந்து பாசந்தனை நீங்கிச் சச்சிதானந்தமான போகம் உற்றே ஏகம் இரண்டு என்ன ஒண்ணுப் புணர்ச்சியும் பெற்றேம் - மோட்சத்திலே ஆசைபொருந்தி ஞானசாரியரை அடைந்து ஆணவாதி பாசங்களை நீங்கிச் சச்சிதானந்த சொருபமான பரபோகத்தைப்பொருந்தி ஒன்றென்றும் இரண்டென்றும் சொல்லப்போகாத பொருந்துதலைப் பெற்றேம்; அதனல் பொய்யல அப்பொருள் - ஆகையால் அந்தப்பொருள் பொய்யல்ல எ - று. (ஙல)

அ - கை : மேல் தடத்த இலக்கணம் கூறுகின்றது.

31. மந்திரமே தனுவான சதாசி வேசர்
மகேசருருத் திரர்திருமால் மலரோன் மூர்த்தி
யைந்தினையு மதிட்டித்தே சிருட்டி யாதி
யைந்தொழிலு மவர்களைக்கொண் டாக்கி யென்றும்
பந்தமிலா மெய்ஞ்ஞான வடிவே யாகிப்
பரமறநின் றிடல்தடத்தப் பரிச தாகும்
இந்தவிறை யேனுலக மியல்பே யென்னி
லேதுமுத லானவைமே லியம்பக் கேளே.

இ - ள்: மந்திரமே தனு ஆன சதாசிவேசர் - பஞ்ச மந்திரமே திரு மேனியாகவுடைய சதாசிவ தேவர்; மகேசர் - மகேச்சுரதேவர்; உருத்திரர் - உருத்திர தேவர்; திருமால் - இலக்குமி பொருந்திய விஷ்ணு, மலரோன் - பிரமா; மூர்த்தி ஐந்தினையும் அதிட்டித்து சிருட்டி ஆதி ஐந்தொழிலும் அவர்களைக்கொண்டு ஆக்கி - மூர்த்திகள் ஐந்தையும் அதிட்டித்துச் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்களையும் அவர்களைக்கொண்டு செய்வித்து; என்றும் பந்தம் இலா மெய்ஞ்ஞான வடிவே ஆகிப் பரம் அற நின்றிடல் தடத்தப் பரிசது ஆகும் - அனவரதமும் தகைதலற்ற ஞானமே திருமேனியாகிப் பற்றுதலின்றிப் பிரபஞ்சாதீதமாய் நிற்பது தடத்தராயிருக்கிற வத்துவின் இயல்பாம்; இந்த இறை ஏன் உலகம் இயல்பே என்னில் - இப்படிப்பட்ட இந்தக்கர்த்தா உண்டென்பது எதற்காக, பிரபஞ்சம் நித்தியம் சுபாவம் என்னில்; ஏது முதலானவை மேல் இயம்பக் கேள் - அப்படி மேலே ஏது முதலானவை சொல்லக்கேள் எ - று. (௩௧)

அ - கை: மேல் பிரபஞ்சம் காரியமாகையால் கருத்தாவையுடைய தென்று கூறுகின்றது.

32. கடபடங்கள் முதலான வுருவுக் கெல்லாங்
காரியகர்த் தாத்தனை நாங் காண்கை யாலே
சடமதுவாய் உருவமுமாய்த் தரணி யோடுந்
தனுவாதி தோன்றிநின்றே யழிதல் தன்னால்
திடமுடைய மெய்ஞ்ஞானச் செயல்க ளுண்டாய்ச்
சித்தசித்தெல் லாத்தினையுஞ் சேட்டிப் பித்தே
உடனதுவாய் நின்றுயிரின் தன்மை தன்பா
லுறுதொருவ னுலகாக்க வுளனென் றேரே.

இ - ள்: கட படங்கள் முதலான உருவுக்கு எல்லாம் காரியகர்த்தாத் தனை நாம் காண்கையால் - கடபடாதி உருவங்களுக்கெல்லாம் காரிய கர்த்தாவாகிய குலாலன் தந்துவாயன் முதலான பேரை நாம் பிரத்தியட்சமாகக் காண்கையால்; சடமதுவாய் உருவமும் ஆய்த் தரணியோடும் தனுவாதி தோன்றி நின்று அழிதல் தன்னால் - சடமாய் உருவமாயிருக்கிற தனு கரண புவன போகங்கள் சிருட்டி திதி பெற்று அழிகையால்; திடமுடைய மெய்ஞ் ஞானச் செயல்களுண்டாய் சித்து அசித்து எல்லாத்தினையும் சேட்டிப்பித்து உடனதுவாய் நின்று உயிரின் தன்மை தன்பால் உறுது ஒருவன் உலகு ஆக்க உளன் என்று ஓர் - திடத்தைப் பொருந்திய மெய்ஞ்ஞானச் செயல்க ளாகிய சருவஞ்ஞத்துவாதி குணங்களுடையனுமாய்ச் சித்தாயிருக்கிற ஆன் மாக்கள் அசித்தாயிருக்கிற பிரபஞ்சமெல்லாவற்றையும் பிறிவறக் கூடிநின்று பிரேரிப்பது எள்ளுக்குளெண்ணெய்போல் உடனதுவாய் நின்று ஆன்மாக் களின் தன்மையாகிய சுகதுக்கமோகாதிகள் தன்னிடத்திற் பொருந்தாதிருக் கிறவனைப் பிரபஞ்சத்தை உண்டாக்க ஒரு கர்த்தா உண்டு என்று அறி எ - று.

செகத் கர்த்தாவைச் சாதிக்கும் பூதாதி தனுகரணாதி ரூபமாயிருக்கிற செகத்தானது ஒரு கர்த்தாவை உடையது, சடமாய்க் காரியமாய்க் காணப் படுகையால்; யாதொன்று யாதொன்று காரியமோ அது அது கர்த்தாவை உடையது, குலாலன் முதலான கர்த்தாவையுடைய கடாதிகளைப்போல; அதற்குக் கர்த்தா பிரபஞ்சோபாதான காரணமாகிய மாயையும் காரிய காரணமாகிய கன்மமும் சடமாகையாலும், பசுக்கள் கிஞ்சிஞ்ஞராகையாலும் இவையிற்றைப் பிரவிருத்தி பண்ணுவிக்கைக்குச் சீவான்மாக்களுடைய கன்ம மனைத்தினையும் அதற்குப் பண்ணும் பலன்களையும் விந்து மோகினி மான் என்னும் உபாதானத் திரயங்களையும் அவையிற்றிலுண்டாகிய சாதாரண மாகிய தத்துவ தாத்துவிகங்களையும் அசாதாரணமாகிய தனு கரண புவன போக பதார்த்தங்களையும் ஏக காலத்தில் யதாவத்தாகக் காணும் சர்வஞ்ஞ னுமாய்ச் சர்வகர்த்தாவுமாய்ச் சர்வவியாபியுமாய்ச் சிருட்டியாதியைச் சுவேச் சையால் கர்த்தும் அகர்த்தும் அன்னியதாகர்த்தும் சுவதந்திர கர்த்தாவாகிய பதி சித்தம். (௩௨)

**அ - கை :** மேல் தேக இந்திரிய குண நாமமில்லாதவனுக்குக் கர்த் திருத்துவம் கூடாதென்னக் காலாதிகளுக்குப்போலக் கர்த்திருத்துவங் கூடும் என்பது கூறுகின்றது.

33. உருவாதி குணங்கிரியை யொன்று மில்லா
னுலகாக்கு மாறெங்ங னெனினுரைப்போ முணர்நீ
தருவானோர் காயாதி காயவா னென்னிற்
றானவற்குத் தனுவாதி தருவான் வேண்டும்
வருமாறிவ் வாறவத்தை முடிவின் றாகும்
வாய்மையினாற் காலந்தான் வடிவின் றாகித்
திரிகாலத் துற்பத்தி திதிநா சத்தைத்
தெரிவித்தல் போலாகுஞ் சிவன்செயலுந் தேரே.

**இ - ள்:** உரு ஆதி குணம் கிரியை ஒன்றும் இல்லான் உலகு ஆக்கு மாறு எங்ஙன் எனின் - தேகம் இந்திரியம் குணம் நாமம் இவை முதலாக ஒன்றுமில்லாதவன் எப்படிப் பிரபஞ்சத்தை உண்டாக்கும் பிரகாரமென்னில்; உரைப்போம் நீ உணர் - உண்டாக்கும் பிரகாரத்தை நாம் சொல்லுகிறோம் நீ கேள்; காயாதி தருவான் ஓர் காயவான் என்னில் தான் அவற்குத் தனுவாதி தருவான் வேண்டும் - தனு கரண புவன போகாதிகளைத் தரும் கருத்தா ஒப்பற்ற தேகத்தையுடையவனென்னில் அவனுக்குத் தேகேந்திரி யாதிகளை உண்டாக்க வேறே ஒரு தேகியாகிய கர்த்தா வேண்டும், அவ னுடைய தேகத்தை உண்டாக்க வேறே ஒரு தேகியாகிய கர்த்தா வேண்டும் என்று; வருமாறு இவ்வாறு அவத்தை முடிவின்றாகும் வாய்மையினால் - இந்தப்படி வரும் பிரகாரத்தால் அவத்தை முடிவில்லை என்னும் அனவத்தை வருமாகையால்;

கர்த்தா தேகத்தை உடையனல்லவாகிலும் தேகமில்லாதவன் எப்படிக் கர்த்தா ஆவன்? என்னில்,

காலந்தான் வடிவு இன்று ஆகித் திரி காலத்து உற்பத்தி திதி நாசத்தை தெரிவித்தல்போல் ஆகும் சிவன் செயலும் தேர் - காலமானது அருபியாயிருந்து செல்காலம் நிகழ்காலம் வருகாலம் என்னும் மூன்று காலங்களில் இன்னகாலத்தில் இன்னது உண்டாம் இன்னது திதி பெற்றிருக்கும் இன்னது நசிக்கும் என்பதைப் பண்ணுவது போலச் சிவனும் சிருட்டியாதிகளைப் பண்ணுவர் என்று அறி எ - று. (௩௩)

அ - கை: மேல் சிவனுக்குச் சன்னிதிமாத்திர கர்த்திருத்துவம் கூறுகின்றது.

34. காலம்போல் வடிவிலதா யுருவாதி யாக்கிக்
காயவனல் போல்வினையின் கணங்கள் தம்மை
ஏலவே பாகமுறச் செய்து காயத்
தெழிற்கிரியை யான்மாக்க ளியற்றல் தன்னைப்
போலவே சராசரங்க டம்மு ணின்று
புரிந்திடுவன் பிரேரகத்தைப் புனிதன் றானுஞ்
சீலமோ திரிவில்லை கதிரோன் முன்னர்ச்
செய்திகம லாதிகள்போற் றெரிந்து கொள்ளே.

இ - ள்.: காலம் போல் வடிவு இலதாய் உரு ஆதி ஆக்கி - இந்தக் காலம் போல் அருபியாயிருந்து தேகாதியை உண்டாக்கி; காய அனல் போல் வினையின் கணங்கள் தம்மை ஏல பாகம் உறச்செய்து - உதராக்கினி போல அருபியாயிருந்து புண்ணிய பாவ கன்ம சமூகங்களைச் சுகதுக்க ஏதுவாகப் பக்குவம் பொருந்தச்செய்து; ஆன்மாக்கள் காயத்து எழில் கிரியை இயற்றல் தன்னைப்போல சராசரங்கள் தம்முள் நின்று புரிந்திடுவன் பிரேரகத்தைப் புனிதன் தானும் - வேறேயொரு தேகமில்லாத ஆன்மா தேகத்தில் உயர்ச்சி பொருந்திய கிரியையாகிய கால் கை அசைத்தல் முதலானவற்றைப் பண்ணுமாறு போலத் தாவர சங்கமமாய்ச் சிதசிதாத்மகமாயிருக்கிற பிரபஞ்சத்தைப் பின்னமறக் கூடிநின்று தனது சமவாய சத்தியால் சேட்டிப்பித்து இப்படி நின்மலனாகிய சிவன் கிருத்தியம் நடத்துவர்;

இங்ஙனம் அந்நியோந்நிய விரோதமாகிய கிருத்தியஞ்செய்யில் விகாரியாவன் என்னில்,

சீலமோ திரிவு இல்லை - விகாரியாகான்;

விகாரவான்களுக்கே கர்த்திருத்துவம் காண்கையால் விகாரரகிதனுக்கு எப்படிக் கர்த்திருத்துவம் கூடும் என்னில் கர்த்திருத்துவமானது

கரணவியாபாரத்துடன் கூடினதென்றும் சங்கற்பமாத்திரம் என்றும் இரு வகைத்தாம்; இதில் கரணவியாபாரத்துடன் பண்ணுவது குலாலாதிகளுக்கு; சங்கற்ப கர்த்திருத்துவம் மனோசங்கற்பமென்றும் சன்னிதியென்றும் இரு வகைத்தாம்; இதில் மனோவியாபார கர்த்திருத்துவம் பிரமாதிகளுக்கு; ஈசுவரகர்த்திருத்துவமாவது சன்னிதிமாத்திரமே.

கதிரோன் முன்னர்ச் செய்தி கமலாதிகள் போல் தெரிந்துகொள் - சன்னிதிமாத்திரம் கர்த்திருத்துவம் எப்படியென்னில், சூரியன் சன்னிதிமாத்திரத்தில் தாமரை அலர்தலும் ஆம்பல் குவிதலும் சேறு இறுகுதலும் வெண்ணெய் இளகுதலும் சூரிய காந்தக்கல் அக்கினியை உமிழ்தலுமாதல் போலச் சிவசன்னிதி மாத்திரத்தில் விசித்திரமாகப் பஞ்சகிருத்தியங்களுமாம் என்று அறிந்துகொள் எ - று. (௩௪)

அ - கை : மேல் ஆதிசிருட்டியில் நின்மலனாகிய சிவன் அன்னியமாகி விந்து, மோகினி, மான் என்னும் உபாதானத்திரயங்களில் தனது சமவாய சத்தியால் தனுவாதியை உண்டாக்குவரென்பது கூறுகின்றது.

35. அன்னியமா யனைத்துயிர்க்கு மமலதையாற் சிவன்றா
னனைத்தினையும் வியாபிக்கு மதனாற்றா னதுவாய்ப்
பின்னமற நின்றுயிரின் றன்மைதனக் கின்றாய்ப்
பெறுவிப்பன் வினைக்கீடாய்ப் பிறிவிலதாஞ் சத்தி
தன்னையோர் கரணமாய் மாயைதனி லுயிர்க்குத்
தனுவாதி நான்கினையுந் தானென்போ லென்னில்
மன்னியிடக் காற்றதுதான் விசையுடனே கடற்பால்
வந்துதிக்குந் திரையாதி யாறுபோல் மதியே.

இ - ள் : அனைத்து உயிர்க்கும் அமலதையால் அன்னியமாய் சிவன் தான் அனைத்தினையும் வியாபிக்கும் அதனால் தான் அதுவாய் - ஆகையால் ஆதிசிருட்டியில் மலத்தையுடைய ஆன்மாக்களுக்குத் தான் நின்மலனாயிருக்கையால் அன்னியமாய், எட்குள் எண்ணெய்போலப் பிறிவற்றுக் கூடியிருக்கையால் வேறற்றவனுமாயிருக்கிற சிவன்தான்; பின்னம் அற நின்று உயிரின் தன்மை தனக்கு இன்றாய் வினைக்கு ஈடாய் மாயைதனில் பிறிவிலதாம் சத்தி தன்னை ஓர் கரணமாய் உயிர்க்குத் தனு ஆதி நான்கினையும் பெறுவிப்பன் - வேறற நின்று ஆன்மாவின் தன்மையில்லாதவனாய் அவரவர்கள் பண்ணுங் கன்ம பரிபாகத்துக்கீடாக விந்து மோகினி மான் என்னும் முதற்காரணங்கள் மூன்றிலும் ஒப்பற்ற கரணமாகிய தனது கிரியாசத்தி இவைகளைக் கலக்கிக் கூடிநின்றவளவில் ஆன்மாக்களுக்குத் தனுவாதிகளுண்டாகும்படி சன்னிதிமாத்திரத்தாற் செய்வர்; தான் என்போல் என்னில் - அதுதான் என்போல என்னில்;

காற்றதுதான் கடற்பால் விசையுடனே மன்னியிட திரையாதி வந்து உதிக்குமாறு போல - வாயுவானது சமுத்திரத்திலே மோதிச் சலத்துடன் கூடிநின்ற அளவில் நுரை திரை முதலானவைகள் வந்து உண்டாகுமாறு போல, மதியே - ஆகையால், தேகம்முதலான உபாதி ஒன்றுமற்றிருக்கிற சத்தரே ஆதி கர்த்தா, அநந்தேசுராதிகள் இரும்பு சுடுகிறது என்பதுபோல இவர் ஏவல்செய்யும் கருத்தாக்களென்று அறிக - று. (௩௫)

அ - கை : மாயாகன்மங்களுக்கு அன்னியோன்னியாசிரய தோஷம் என்னும் சங்காபரிகாரம் கூறுகின்றது.

36. இருவினைகட் கீடாகத் தனுவாதி யிறைவ
னிசைத்திடுவன் மாயையிலென் றீர்வினைக ளெல்லாம்
வருவதுவு மனமாதி மாயாகா ரியத்தான்
மற்றிவற்றுள் முன்னாக மருவியதே தென்னில்
ஒருவாத ஞானத்தே யிச்சைதொழி லொக்க
வுள்ளதா லனாதியா லுடன்மாயை வினைகள்
கருவாகி யதனாலே சகச மாகிக்
காரியமும் பயன்களுமாங் கருதிக் காணே.

இ - ள் : மாயையில் இருவினைகட்கு ஈடாகத் தனு ஆதி இறைவன் இசைத்திடுவன் என்றீர் - மாயையிலே புண்ணிய பாபாத்மக கன்மத்துக்கு ஈடாகத் தேகம் முதலானவைகளை ஈச்சுவரன் உண்டாக்குவனென்று சொன்னீர், எப்படிக்கூடும்; வினைகளெல்லாம் வருவதுவும் மனம் ஆதி மாயா காரியத்தால் - கன்மங்கள் வருவதெல்லாம் மாயாகாரியமாகிய மனோவாக்குக் காயங்களால் உண்டாக வேண்டும்;

மனோவாக்குக் காயங்கள் கன்மத்துக்கீடாக உண்டாகவேண்டும், தனுகரணமுண்டாகிறத்தில் கன்மமும், கன்மம் உண்டாகிறத்தில் தனுகரணமும் வேண்டுகையால் அன்னியோன்னியாசிரய தோஷம் வருகையால்;

மற்று இவற்றுள் முன்னாக மருவியது ஏது என்னில் - இவைகளுக்கு முந்த உண்டானது ஏதென்னில், ஒக்கும்; ஒருவாத ஞானத்தே இச்சை தொழில் ஒக்க உள்ளதால் - தவறுபடாத ஆன்மசொரூபத்தின் விருத்தியான ஞானத்தில் இச்சாகிரியைகளிலே ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலமும் நெல்லினுக்குத் தவிடும் உமியும் முளையும்போல் அநாதியே கூடியிருக்கையால், இந்தச் சங்கைக்கிடமில்லை; அநாதியால் - மாயாகன்மங்கள் அநாதி ஆகையால்; உடன்மாயை வினைகள் கருவாகியதனாலே சகசமாகி - மாயையுடன் புண்ணிய பாபாத்மகமான காரணம் கருவாகியிருக்குமதனாலே சகசமாகிக்கொண்டிருக்குமாகையால்; காரியமும் பயன்களும் ஆம் கருதிக் காண் - காரியமும் அதன் பயன்களுமாயிருக்கும், மூலகன்மத்தின் காரியமான புண்ணிய பாபரூபமான காரியகன்மத்திற்கும் மாயாகாரியமான

மனேவாக்குக் காயங்களுக்கும் ஒன்றுக்கொன்று கொட்டை முந்தினதோ பனே முந்தினதோ என்பதுபோல மயங்கிலும் கன்மமுண்டாகிறதற்கும் தனுவாதி உண்டாகிறதற்கும் ஓர் இடையூறில்லையாகையால் குற்றமில்லையாகிலும் மாயை முந்தினதோ கன்மம் முந்தினதோ என்று விசாரித்தறி எ - று. (௩௬)

அ - கை : மேல் பசுவிலக்கணம் கூறுகின்றது.

37. பசுக்களுக்குப் பொதுவென்றுந் தன்னியல்ப தென்றும்
பகருமீ ரிலக்கணமுண் டதிற்பொதுவைப் பகரில்
நசித்திடா ஞானத்தை யாணவத்தாற் றடுக்க
நலந்தீங்கை யுணராதே நானகா ரதையாம்
புசிப்பின்றி நித்தமா யெண்ணிலதாய் விபுவாய்ப்
பொருந்தியது தானகிப் புந்திமுத லின்ருய்
வசிப்பதுமாய் மாயையிலே கலைமுதல்க ளாகி
வந்ததுதா னணவத்தின் மறைப்பொதுக்கச் சிறிதே.

இ - ள் : பசுக்களுக்குப் பொது என்றும் தன்னியல்பது என்றும் பகரும் ஈர் இலக்கணமுண்டு அதில் பொதுவைப் பகரில் - ஆன்மாக்களுக்கு இலக்கணம் சாதாரணமென்றும் அசாதாரணமென்றும் இருவகைத்தாம், அதில் பொதுவிலக்கணத்தைச் சொல்லுமிடத்து; நசித்திடா ஞானத்தை ஆணவத்தால் தடுக்க - நாசமற்றதாகிய விருத்திஞானத்தைச் சிவசத்தி ஆணவமலத்தால் தடுக்க; நலம் தீங்கை உணராதே - அனாதி அஞ்ஞான விருதனகையால் சுபாசுபங்களை அறியாதவனய்; நானகாரதையாம் புசிப்பு இன்றி - நானவிதமாகிய போகமற்றவனகி; நித்தமாய் - அழிவற்றவனகி;

எண் இலதாய்-எண்ணிறந்ததாகி; விபுவாய்-விபுவாகி; பொருந்தியது தான் ஆகி - எந்தப்பொருளுடன் கூடினன் அந்தப் பொருள்மயமாக நிற்கிறவனுமாகி; புந்தி முதல் இன்ருய் - புந்தி முதலாகிய தத்துவங்களில்லாதவனகி; மாயையிலே வசிப்பதுமாய் - அசுத்தமாயையிலே இருக்கிறவனுமாகி; கலைமுதல்களாகி வந்ததுதான் ஆணவத்தின் மறைப்பு ஓதுக்கச் சிறிது - அசுத்தமாயையில் முந்தின விகாரமாகி வந்த கலையாதிகள் ஆணவத்தின் மறைப்பைச் சிறிது நீக்க எ - று. (௩௭)

அ - கை : மேலும் அதற்கோர் புறனடை.

38. ஞானமுட னிச்சைதொழி லண்ணியிட வதன
னபோ கங்களையு நாடியே நானென்
மானமதா லிருவினையும் வளர்ந்திடவே யதனல்
வானமொடு பூமிகீழ் மருவிப் போந்தே

ஈனமுறத் திரிகாலத் திருவினையு மொக்க
விறைசத்தி பதிந்தபோ திறைகுருவாய் வந்தே
தானவனும் படிசெய்யத் தத்துவங்கள் வினைக
டமோமயமு நீங்கியிடத் தற்சிவமாந் தானே.

இ - ள் : ஞானமுடன் இச்சை தொழில் நண்ணியிட - ஞானத்துடன் இச்சாகிரியைகள் பொருந்த; அதனால் நானாபோகங்களையும் நாடியே நான் என் மானமதால் இருவினையும் வளர்ந்திட - இச்சாஞானக் கிரியைகள் பொருந்துகையால் பலவிதமான போகங்களையும் கருதி யான் எனது என்னும் அபிமானத்தால் இதாகித ரூபமான புண்ணிய பாவங்கள் வர்த்திக்க; அதனால் வானமொடு பூமிகீழ் மருவிப்போந்து ஈனமுறத் திரிகாலத்து - அந்தப் புண்ணிய பாவங்களால் சுவர்க்கம் பூமி நரகம் என்னும் புவனங்களில் பொருந்திப் போந்து குற்றமுறச் சரிக்குங்காலத்து;

இருவினையும் ஒக்க இறைசத்தி பதிந்தபோது இறை குருவாய் வந்து தான் அவனும்படி செய்ய - புண்ணிய பாவங்கள் சமனாகப் பொருந்தச் சிவ சத்தியாகிய நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி யென்னும் சத்திகள் பதிந்தகாலத்தில் சச்சிதானந்த சொரூபமான பிரமம் ஆசாரிய மூர்த்திமானாகிவந்து பாசத்தைநீக்கித் தானாகச்செய்ய; தத்துவங்கள் வினைகள் தமோமயமும் நீங்கியிடத் தற்சிவமாம் தானே - அந்த ஆசாரியருக்கு அன்னியனாகையால் சுத்தம் மிசிரம் அசுத்தம் என்னும் தத்துவங்களும் புண்ணிய பாபாத்மகமான கன்மமும் அஞ்ஞான சொரூபமாகிய ஆணவமும் இப்படி மும்மலங்களும் நீங்கத் தற்பதவாச்சியமான சச்சிதானந்தப் பிரமமாவான் என்றவாறு. (௩அ)

அ - கை : மேல் இந்த ஆன்மாக்களுக்கு அவத்தை மூன்றுமென்பது கூறுகின்றது.

39. அவத்தைகே வலசகல சுத்தமென மூன்று
யடையுமா ணவமாயை யருட்சத்தி யதனால்
இவற்றுட்கே வலமுயிர்க்குச் சகச மாகு
மிறைவன்றான் மாயையினிற் கலாதிகளை யிசைக்கப்
பவத்துவக்காஞ் சகலமா மிருவினையு மொத்த
பருவத்தே பராசத்தி பதிந்தருளி னாலே
சிவத்துடனு மதுசுத்தஞ் செப்பியவிம் மூன்றுந்
தேருங்கா லைவைந்தாய் மூவைந்தாய்த் திகழும்.

இ - ள் : அவத்தை கேவலம் சகலம் சுத்தம் என மூன்றாய் ஆணவம் மாயை அருட்சத்தியதனால் அடையும் - இந்த ஆன்மாவுக்குக் கேவல சகல சுத்தமென அவத்தை மூன்றும், இதில் கேவலம் ஆணவத்தினாலும் சகலம் மாயையினாலும் சுத்தம் கிருபாசத்தியினாலும் வரும்; இவற்றுள் கேவலம்

உயிர்க்குச் சகசமாகும் - இம்மூன்றவத்தைகளில் கேவலாவத்தை ஆன்மாக்களுக்குச் சகசமாய் அநாதிசித்தமாயிருக்கும்; இறைவன் தான் மாயையினில் கலாதிகளை இசைக்கப் பவத்துவக்காம் சகலமாம் - சிவன் தமது சத்தியால் மாயையிலுண்டாக்கிய கலாதிகளை ஆன்மாக்களுக்குக் கூட்டின காலத்தில் சனன மரண ஏதுவான சகலாவத்தை விட்டுப் பற்றுய்வரும்; இருவினையும் ஒத்த பருவத்தே பராசத்தி பதிந்து அருளினாலே சிவத்துடன் ஆம் அது சுத்தம் - புண்ணிய பாபங்கள் சமனாகப் பொருந்திய அவசரத்திற் பராசத்தி பதிந்தகாலத்தில் கிருபையால் சிவத்துடன் அனன்னியமாய்ச் சிவமாய் விளங்குவது சுத்தாவத்தை; செப்பிய இம்மூன்றும் தேருங்கால் ஐவைந்தாய் மூவைந்தாய்த் திகழும் - இந்தப்படி சொல்லிய கேவல சகல சுத்தமென்னும் மூன்றவத்தைகளையும் விசாரிக்கும்பொழுது ஒவ்வொன்று ஐவைந்தாகப் பதினைந்து பேதப்பட்டும் விளங்கும் எ - று.

கேவல சகல சுத்தமென்னும் இந்த அவத்தைகளுக்கும் இவற்றைப் பொருந்துமவர்க்கும் இலக்கணம் சிருட்டிக்கிரம முடிந்தவிடத்திற் கூறுவாம்.

அ - கை: பசுக்களுக்குச் சாதாரண இலக்கணம் கூறி மேல் அசாதாரண இலக்கணத்தில் சகலரிலக்கணம் கூறுகின்றது.

40. இனிச்சகல ரிலக்கணந்தா னாண வத்தோ
டிருவினைகள் மாயேய மிசைந்து போகம்
உனிப்பலவும் பிராகிருத தேகந் தன்னை
யுற்றவத்தை யைந்தினையும் உடைத்தாய் நாளும்
சனித்திறந்து தேவருடன் மனிதர் நாகர்
தானவாதி சராசரங்கள் யோனி பேத
மனைத்தினிலும் வினைக்கீடாய்ச் சுழன்று முத்தி
யடைவரிரு வினையொப்பி னருட்குருவி னாலே.

இ - ள்: இனி சகலர் இலக்கணம் தான் - இனி இந்த ஆன்மாக்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்று மூவகைப்படும், இவற்றுள் சகலரிலக்கணமானது; ஆணவத்தோடு இருவினைகள் மாயேயம் இசைந்து - ஆணவத்தால் தடைப்பட்ட ஞானேச்சாக்கிரியையுடையராய் அந்த ஞானக் கிரியை ஏகதேசத்திற் பிரகாசிப்பிக்கிறதுநிமித்தம் மாயாகாரியமான கலாதி பெந்தத்தை உடையருமாய்ச் சுக துக்க போகத்தின்பொருட்டுக் கன்மம் பெற்றவருமாய்; போகம் பலவும் உன்னிப் பிராகிருத தேகந்தன்னை உற்று அவத்தை ஐந்தினையும் உடைத்தாய் - நானாவிதமான போகம் வேண்டும் என்று விசாரித்துச் சூக்கும தூல தேகத்துடனுங்கூடிச் சாக்கிரம் முதலான ஐந்தவத்தை உடையராய்; நாளும் சனித்து இறந்து - எந்நாளும் சனன மரணங்களைப் பொருந்தி; வினைக்கு ஈடாய் தேவருடன் மனிதர் நாகர் தானவாதி சராசரங்கள் யோனிபேதம் அனைத்தினிலும் சுழன்று - கன்மத்துக் கீடாகத் தேவர் மானிடர் நாகர் அசுராதிகள் பசு பக்ஷி முதலான ஜங்கமங்கள்

விருக்ஷம்முதலான தாவரங்கள் இப்படி எண்பத்துநான்குநூறாயிரம் யோனி பேதங்களிலும் சுழன்று; இருவினை ஒப்பின் அருட்குருவினாலே முத்தியடைவர் - புண்ணிய பாவங்கள் சமனாகப் பொருந்தின காலத்தில் ஞானாசாரியனாலே மோக்ஷத்தை அடைவார்கள். (சம)

அ - கை: மேல் பிரளயாகலர் இலக்கணம் கூறுகின்றது;

41. மண்ணாதி மானாந்தத் துள்ளவிரு வினைகள்
மாயும்வகை புசித்தாதல் மாதவத்தா லாதல்
புண்ணியமாந் தீர்த்தங்க ளாடியதா னூலிற்
புகன்றபடி பரிகாரம் புரிதலினாற் குருவால்
நண்ணுமிரு கலைசோதித் திடுதலினா லாத
னாசமுற முதற்கலைக ளிரண்டின்வினை நன்றாய்ப்
பெண்ணொருபா கன்னருளாற் கலாதிகடம் வசமாய்ப்
பெற்றிருப்போர் பிரளயா கலரென்னப் பெறுமே.

இ - ள்: மண் ஆதி மான் அந்தத்து உள்ள இருவினைகள் மாயும் வகை புசித்தாதல் - பிருதிவிமுதல் பிரகிருதி ஈறான அசுத்தாத்துவாவிலுள்ள புண்ணிய பாவங்கள் புசிப்பது தொலைந்ததினாலேயாதல்; மா தவத்தால் ஆதல் - அரிய தவத்தினாலேயாதல்; புண்ணியமாம் தீர்த்தங்கள் ஆடியதால் - புண்ணியமான தீர்த்தங்கள் ஆடியதனாலேயாதல்; நூலில் புகன்றபடி பரிகாரம் புரிதலினால் - சாத்திரங்களில் சொன்னபடி பிராயச்சித்தம் பண்ணியதனாலேயாதல்; குருவால் நண்ணும் இரு கலை சோதித்திடுதலினால் ஆதல் - ஆசாரியரால் ஆன்மாவைப் பந்தித்திருக்கும் பஞ்சகலைகளில் நிவிர்த்தி பிரதிட்டை என்னும் இரண்டு கலையும் சோதிக்கப்பட்டதினாலேயாதல்; முதற்கலைகள் இரண்டின் வினை நன்று நாசம் உற - முதற்கலைகளாகிய நிவிர்த்தி, பிரதிட்டை என்னும் இரண்டுகலையில் கன்மங்களும் நன்றாக நசிக்க; பெண் ஒருபாகன் அருளால் கலாதிகள் தம்வசமாய்ப் பெற்றிருப்போர் - மகேசுவரருடைய அனுக்கிரகத்தால் கலாதிகளைத் தங்கள் வழித்தாகப் பெற்றிருக்கிறவர்கள்; பிரளயாகலர் எனப்பெறும் - பிரளயாகலர் என்று சொல்லப்படுவார்கள் எ - று. (சக)

அ - கை: மேல் விஞ்ஞானகேவலர் இலக்கணம் கூறுகின்றது.

42. சன்னியாசத் தால்யோக சாதனையாற் றவத்தால்
சற்குருவால் முக்கலையிற் சாரும்வினை யனைத்தும்
மன்னாது சோதனைசெய் திடுதலினா லாதல்
மாயவிரு வினையனைத்து மாயையுநீங் கிடவே

இன்னுத வாணவத்தாற் றடைப்பட்ட ஞான
வியல்பினரா யறிவின்றி யிருந்துமல பாகத்
தந்நாளி லரனருளால் முத்தியினை யடைவா
ரறியிலிது விஞ்ஞான கலரதிலக் கணமாம்.

இ - ள்: சன்னியாசத்தால் - சன்னியாசத்தினலேயாதல்; யோக சாதனையால் - கன்மயோக சாதனையாலாதல்; தவத்தால் - தவத்தினலேயாதல்; சற்குருவால் முக்கலையில் சாரும் வினை அனைத்தும் மன்னுது சோதனை செய்திடுதலினுல் ஆதல் - ஞானசாரியனுல் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை எனும் மூன்று கலைகளில் பொருந்தும் கன்மங்களெல்லாம் இவனுக்குப் போகவேதுவல்லாமல் சோதிக்கப்படுதலினுலேயாதல், இவைகளில் எதனுலாகிலும் ஒன்றினுல்; இருவினை அனைத்தும் மாய - சகலமான புண்ணிய பாவங்களும் நசிக்க; மாயையும் நீங்கிட - மாயையும் நீங்கத்தக்கதாக; இன்னுத ஆணவத்தால் தடைப்பட்ட ஞான இயல்பினராய் - மாயாகன்மங்கள் நீங்கியிருக்கிலும் நீங்காமலிருக்கிற ஆணவமலத்தினுலே தடுக்கப்பட்ட ஞானவியல்பை உடையவர்களாய்; அறிவின்றி இருந்து - ஞானமற்றிருந்து; மலபாகத்து அந்நாளில் அரனருளால் முத்தியினை அடைவார் - மலபரிபாகம் வந்தகாலத்தில் சிவனுலே அனுக்கிரகிக்கப்பட்டுச் சுத்தாத்துவாவை அடைந்து அபர முத்தராயிருந்து தீவிரதரசத்திநிபாதத்தில் பரமோட்சத்தை அடைவார்கள்;

விஞ்ஞான கேவலர்க்கு மலம் ஒன்றேயென்னில் கன்மத்தினுல் தனு கரண புவன போகங்கள் மாயையில் உண்டாகவேண்டும், கன்ம சாமியத்தில் சத்திநிபாதமுளதாய் அனுக்கிரகத்தைப் பெற்று மோக்ஷத்தை அடையவேண்டும், கன்மமும் மாயையும் விஞ்ஞானகலர்க்கு இல்லை, ஆகையால் மோட்சம் கூடாது, சுத்தாத்துவாவிலிருக்கிற விஞ்ஞானகலர்க்குச் சுத்தாத்துவாவிலே கன்மமானதில்லை, போகம் உண்டு என்பது எப்படி? சுத்தாத்துவாவில் சுத்தமான போகங்களுண்டு, கன்மமில்லை என்று தேவரீர் வாக்கியந்தானே திருவுளம் பற்றப்பட்டது, அந்தச் சுத்தமாயா புவனங்களில் இருக்கிற விஞ்ஞானகலராகிய ஆன்மாக்களுக்குப் போகமுண்டு கன்மமில்லையென்பது ஆச்சரியம், இதனைத் தெளியத் திருவுளம் பற்றவேண்டும் பரமேசுவரனே என்று ரிஷீசுவரர் கேட்ப, இதற்கு உத்தரமாக ஸ்ரீகண்டபரமேசுவரன் வாக்கியம்: சுத்தாத்துவாவிலே இருக்கிற ஆன்மாக்களுக்கு விசுத்தமாயுள்ள போகத்திலே கன்மம் காரணமல்ல, விசித்திரமாயிருக்கிற மலபரிபாகமே அவ்விடத்தில் காரணம், அந்த மலபரிபாகம் யாதொருத்தருக்கு உத்தமமாயுண்டாயிற்றே அவர்கள் போகதத்துவமென்று பெயரையுடைய சதாசிவதத்துவத்திலிருந்து நல்ல போகத்தைப் புசிப்பார்கள்; மந்த மலபரிபாகத்தையுடையவர்கள் ஈசுவர தத்துவத்திலிருந்து சதாசிவ தத்துவத்திற் போகத்திற்கு அற்பங்குறைச்சலான போகத்தைப் புசிப்பார்கள்; அற்பமல பரிபாகத்தை உடையவர்கள் சுத்தவித்தியாதத்துவத்திலிருந்து அவ்விடத்துள்ள போகத்தைப் புசிப்பார்கள்; இவ்வகைப் போகங்கள் கன்மத்தை இச்சியாமல் சிவேச்சாசத்தியாற் கூடும்.

அந்தப் போகங்கள் எவ்வாறென்னில் சிவதத்துவம், சத்திதத்துவம், சாதாக்கியதத்துவம், ஈசுவரதத்துவம், சுத்தவித்தியாதத்துவம் இந்த ஐந்து தத்துவங்களிலும் பெரியோராயிருக்கிற உருத்திரர் முதலான ஆன்மாக் களுக்கு விசித்திரமாயிருக்கிற மாட கூடப் பிராசாத கோபுர மண்டபாதிகளை யுடைய திவ்ய புரசமூகங்கள் சிவேச்சையால் உண்டாக்கப்பட்டன. அந்த அந்தப் புவனங்களில் அந்த அந்தப் புவனங்களில் உண்டான தேகேந்திரி யாந்தக்கரணங்களையும் போகவிஷயங்களாகிய திவ்ய நாரி முதலாயுள்ள வஸ்துக்களையும் சுத்தவித்தியா தத்துவங்களில் ஒன்றுக்கொன்று சுத்தமும் சூக்குமமும் அதிகமுமாகச் சற்றும் துக்கமற்றதாக விஞ்ஞானகலரில் சிவா னுக்கிரகம் பெற்றுச் சிவரூபமான பெயர்க்குச் சிவேச்சையாற் பண்ணப் பட்டது. கன்மசாமியத்தையும் மந்தம் மந்ததரம் என்னுஞ் சத்திநிபாதத்தாற் செய்யும் குரு லிங்க சங்கமங்களிடத்திற் பூசாதிகளாகிய அடையாளங்களை யும் ஆசைப்படாமல் விஞ்ஞான கேவலரையும் பிரளயாகலரையும் ஆணவ மல பரிபாகத்தினுல் சிவன் கருணைசெய்தருளுவர்; கால கலாதி தத்துவங்க ளெல்லாம் அசுத்தமாயையிலே போலச் சுத்தமாயையிலும் உண்டு; அந்தத் தத்துவங்கள் விந்துவில் உண்டாகையால் சுத்தமாயிருக்கும்; கலாதிபந்தத் தால் சகலரேயென்னில் விஞ்ஞானகலர்க்குச் சுத்தமாயையில் கலாதிதத்துவ யோகம் உண்டானுலும் கலாதி பரதந்திரரன்றிக் கலாதிபஞ்சதத்துவங்களைச் சுவாதீனமாகக்கொண்டு நடக்கையால் அவர் கலையுடன் கூடினராகிலும் அகலரே. விஞ்ஞானகலரில் பக்குவரைச் சிவன் அனுக்கிரகம்பண்ணிச் சுத்தமாயா புவனுதிபர்களாகப் பண்ணுவராகையால் விஞ்ஞானகலர்க்கு விசித்திரமாகப் போகமோட்சம் கூடும்;

அறியில் இது விஞ்ஞானகலரது இலக்கணமாம் - விசாரிக்கில் இது விஞ்ஞானகலர் இலக்கணம் எ - று. (சஉ)

அ - கை : மேல் சிவனுக்கும் பிரபஞ்சத்துக்கும் அன்னியமாக எண் ணிறந்த ஆன்மாக்கள் உண்டென்பது கூறுகின்றது.

43. ஈசனையு முலகினையு மன்றி வேறே
யெண்ணிலுயி ருண்டென்ப தெவ்வா றென்னில்
மாசதனுற் சிற்றறிவாய் வினைகள் செய்து
வரம்பிகந்த தேகங்கள் மன்னி வேருய்
ஏசியே நீநானென் றியம்ப லாலு
மெய்துசுக துக்கத்தின் பேதத் தாலும்
தேசறிவுஞ் சிற்றறிவு மாத லாலுஞ்
சிற்றுயிர்க ளனேகமாந் தேரி லின்னும்.

இ - ள்: ஈசனையும் உலகினையும் அன்றி வேறே எண் இல் உயிர் உண்டு என்பது எவ்வாறு என்னில் - சித்தாயிருக்கிற சிவனையும் அசித்தா யிருக்கிற பிரபஞ்சத்தையுமல்லாமல் எண்ணிறந்த ஆன்மாக்கள் உண்டென் கிறது எப்படியென்னில்; மாசதனுல் சிற்றறிவாய் வினைகள் செய்து வரம்பு

இகந்த தேகங்கள் மன்னி - ஆணவாதி பாசங்களுடன் கூடியிருக்கையால் அற்ப அறிவினவாகிப் புண்ணிய பாபங்களைப் பண்ணி எண்ணிறந்த தேகங்கள் எடுத்து; வேருய் ஏசியே நீ நான் என்று இயம்பலாலும் - வெவ் வேருகக்கொண்டு ஏசி நீ என்றும் நான் என்றும் பேசுகையினுலும்,எய்து சுக துக்கத்தின் பேதத்தாலும் - ஒருத்தனுக்குச் சுகமும் ஒருத்தனுக்குத் துக்கமு மாய்ப் பொருந்தும் சுகதுக்க பலமானது பேதமாய் வருகையினுலும்; தேசு அறிவும் சிற்றறிவும் ஆதலாலும் - ஒருத்தனுக்கு அதிக அறிவும் ஒருத்த னுக்கு அற்ப அறிவுமாய் வருகையினுலும்; சிற்றுயிர்கள் அநேகம் ஆம் - பிர பஞ்ச சிவான்னியமாக எண்ணிறந்த ஆன்மாக்களுண்டு; தேரில் இன்னும் - இன்னமும் விசாரிக்கில் ஏது உண்டு எ - று. (சங)

அ - கை: மேலும் அதற்கு ஒரு புறனடை.

44. மண்ணுதி யாக்கியதிங் காருக் காக
மற்றதற்கே யெனிற்சடமா மன்றியுமா நிலமேல்
உண்ணுது தன்னைத்தா னெருபொருளு மிறைக்கே
யுறுமென்னிற் பூரணனு லுண்டிடவேண் டுவதில்
நண்ணுதிங் கெவர்க்குமரன் விளையாட்டே யென்னின்
ஞானவுரு வோன்பயனை நாடாது புரியான்
எண்ணுது நீயுரைத்தாய் பரிசேடத் தாலே
யெண்ணிலுயி ரிருவினையா லிறைபுரிவா னென்னே.

இ - ள்: மண் ஆதி ஆக்கியது இங்கு ஆருக்காக - பிருதிவி முதலான பிரபஞ்சத்தை உண்டாக்கியது சிவன் எவர்க்காக என்னில்; மற்று அதற்கே என்னில் சடமாம் - அந்தப் பிரபஞ்சத்துக்கே என்னில், அந்தப் பிரபஞ்சம் சடமாகையாலும்; அன்றியும் - இதல்லாமலும்; மா நிலமேல் - பிரபஞ்சத்தில்; ஒரு பொருளும் தன்னைத்தான் உண்ணுது - ஒருபொருளும் தன்னைத்தானே புசியாது;(ஆகையினுல் பிரபஞ்சத்துக்கல்லாமல்)இறைக்கே உறும் என்னில்- சிவன் தனக்குப் புசிக்கச்செய்துகொண்டானென்னில்; பூரணனுல் உண் டிட வேண்டுவது இல் - பரிபூரணனுகி எப்பொழுதும் அமைவுபெற்றிருக்கிற சிவனுல் புசிப்பது கூடாது; நண்ணுது இங்கு எவர்க்கும் அரன் விளை யாட்டே என்னில் - இவ்விடத்தில் ஒருத்தருக்கும் பொருந்தாமற் போகிறதும் சிவன் விளையாட்டுக்குப் பண்ணுகிருரென்னில்; ஞான உருவோன் பயனை நாடாது புரியான் - எல்லாவற்றையும் அறிந்திருக்கிற சிவன் பயனை விசாரி யாமல் பண்ணுர்; எண்ணுது நீ உரைத்தாய் பரிசேடத்தாலே எண் இல் உயிர் - ஆகையால் விசாரியாமல் சொன்னுய், பாரிசேடப் பிரமாணத்தால் சிவனுக்கும் பிரபஞ்சத்துக்கும் அன்னியமாக எண்ணிறந்த ஆன்மாக்கள் உண்டென்று சித்தம்; இருவினையால் இறைபுரிவான் என்னே - ஆகையால் ஆன்மாக்கள் கன்மத்துக்கு ஈடாகச் சிவன் தேகாதி பிரபஞ்சத்தை ஆன் மாக்களுக்கு உண்டாக்குவனென்று அறியப்படுமது எ - று. (சச)

45. ஆதலினு லுலகினுக்குஞ் சிவனுக்கும் வேரு
யனேகமுயி ருளதென்றே யனுமானத் தாலும்
ஓதியிடு மாகமத்தி னுலுமுயிர் சித்த
முலகினையுஞ் சிவன்றனையு முணர்வதுமவ் வுயிரே
பேதமற நின்றசிவன் றன்னையறி யாது
பேதைமைசெய் பாசங்கள் பேதமுமே லுரைப்பாம்
போதமுற வுணர்ந்திருளைப் போக்கியருள் புணர்ந்து
பொருவிலனு பூதியினைப் பொருந்திடுதற் பொருட்டே.

இ - ள்: ஆதலினுல் உலகினுக்கும் சிவனுக்கும் வேருய் அனேகம் உயிர் உளது என்றே அனுமானத்தாலும் ஓதியிடும் ஆகமத்தினுலும் உயிர் சித்தம் - ஆகையால் பிரபஞ்சத்துக்கும் சிவனுக்கும் அன்னியமாக அனுமானத்தினுலும் சொல்லும் ஆகமத்தினுலும் அனேக ஆன்மாக்கள் உண்டென்று சித்தித்தது; அவ்வுயிரே உலகினையும் சிவன்தனையும் உணர்வதும் - இப்படிச் சித்தித்திருக்கிற ஆன்மாக்களே சகலாவத்தையில் பிரபஞ்சத்தையும் சுத்தாவத்தையில் சிவனையும் அனுபவிக்கிறவர்கள், இப்படி ஆன்ம இலக்கணம்; பேதம் அற நின்ற சிவன் தன்னை அறியாது பேதைமை செய் பாசங்கள் பேதமும் மேல் உரைப்பாம் - இனி, ஆன்மாவுடன் சிவன் பிரிவற்றிருக்கையிலும் சிவனைத் தெரியாமல் மறைத்திருக்கும் பாச பேதங்களுக்கு இலக்கணம் மேற்சொல்லுவாம்; போதம் உற உணர்ந்து இருளைப் போக்கி அருள் புணர்ந்து பொருவில் அனுபூதியினைப் பொருந்திடுதல் பொருட்டே - சிவ ஞானம் பொருந்தப் பாசம் எய்துமென்று அறிந்து பாசத்தை நீக்கி அருளைப் புணர்ந்து சிவானந்தானுபவம் பொருந்துதற்பொருட்டு எ - று.

ஏகாரம் ஈற்றசை. (சடு)

அ - கை: பாச இலக்கணம் பொதுவென்றும் சிறப்பென்றும் இருவகைத்தாகும், அவற்றுள் பொதுவிலக்கணம் மிகவும் சடமாய் ஆன்மஞான திரோதாயிகமாயிருக்கை; இந்தப் பாசம் ஆணவம், திரோதாயி, சுத்த மாயை, அசுத்தமாயை, கன்மம் என்று ஐவகைப்படும்; இவ்வைவகையில் மேல் ஆணவத்திற்கும் திரோதாயிக்கும் இலக்கணம் கூறுகின்றது.

46. ஏகமா யனேகமாஞ் சத்தியுள தாகி
யெண்ணிலுயிர் ஞானத்தைத் தடுப்ப தாகி
மோகமுத லேழ்குணங்க ளுடைய தாகி
முடிவிலதா யனுதியுமாய் முத்தியுயிர்க் காகப்
பாகமாம் படியாதி சத்தியது பண்ணைப்
படுவதுமாய்ப் பக்குவத்தை யடையுயிர்கள் பாலில்
ஆகமா திகள்யாவு மடையாது முத்தி
யடைவதற்குத் தானீங்கு மாணவமென் றறியே.

இ - ள் : ஏகமாய் - எண்ணிறந்த ஆன்மாக்களுக்குந் தான் ஒன்ருய்; எண்ணில் உயிர் ஞானத்தைத் தடுப்பது ஆகி அநேகமாம் சத்தி உளதாகி - எண்ணிறந்த ஆன்மாக்களுடைய எண்ணிறந்த ஞானக்கிரியாசத்திகளை அறிவது செய்வது பண்ணுதபடி தடுக்கும் எண்ணிறந்த தனது சத்திகளை யுடையதாய்; மோகம் முதல் ஏழ்குணங்கள் உடையது ஆகி - மோகம், மதம், ராகம், விஷாதம், சோஷம், வைசித்திரியம், ஹர்ஷம் என்னும் ஏழு குணங் களையுடையதாகி; முடிவு இலதாய் - நாசம் அற்றதாய்; அநாதியுமாய் - அநா தியே உள்ளதுமாய்; உயிர்க்கு முத்தி ஆக ஆதிசத்தி பாகமாம்படி பண்ணப் படுவதுமாய் - ஆன்மாக்களுக்கு மோக்ஷம் வர ஆதிசத்தி பரிபாகம் பண்ணப் பக்குவப்படுத்துவதுமாய்;

இந்த ஆணவம் சடமாகையால் பிரவிருத்தி நிவிருத்தி கூடாதாகை யால் இந்தத் திரோதான சத்தி இந்த மல பக்குவமாம்படி சேட்டித்துப் பரி பாகப் படுத்துமாகையால் கள்வர்க்குக் குருக்களானவரைக் கள்ளக்குருக்கள் என்பதுபோல் ஆதிசத்தி ஆணவத்தைச் சேட்டிக்கையால் அந்த ஆதிசத்தி யும் மலமென்று உபசாரமாகச் சொல்லப்படும்; இவ்வாறு ஒரு முதலுமாய் நித்தியமுமாகில் ஆன்மாக்களுக்கு மோக்ஷம் கூடாதென்னில்;

பக்குவத்தை அடை உயிர்கள் பாலில் ஆகம் ஆதிகள் யாவும் அடை யாது முத்தி அடைவதற்குத் தான் நீங்கும் - பக்குவத்தைப் பொருந்திய ஆன்மாக்களிடத்தில் தேகாதி சகல உபாதிகளும் பொருந்தாதபடி விட்டு மோக்ஷமடைவதற்குத் தான் நீங்கும்; ஆணவம் என்று அறி - இப்படிப் பாவரூபமான பொருளை ஆணவமென்று அறி எ - று. (சகூ)

அ - கை : மேல் எண்ணிறந்த ஆன்மாக்கள் ஞானேச்சாக்கிரியை களைத் தடுக்க ஆணவம் என்ற ஒன்று அங்கீகரிப்பானேனென்ன, வேண்டும் என்பது கூறுகின்றது.

47. ஏதுக்கா வாணவமுண் டென்ன வேண்டு
மெனிலுயிர்கள் ஞானத்தைத் தடுப்பதொன்றிங் கிலேயேல்
மாதுக்க முருவுயிர்க ளெவ்வறிவு மெல்லா
வல்லமையுஞ் சுதந்திரமு மருவியிடும் பிறப்பாந்
தீதுற்று வருந்தாது ஞானவுரு வாமாற்
சிவன்போல வேநிற்குஞ் சிற்றறிவு மாகா
கோதற்ற முத்தியென்ப தேதுவிடி லென்றே
குறித்திடிலிவ் வாணவமாங் கூறுங் காலே.

இ - ள் : ஏதுக்கா ஆணவம் உண்டு என்ன வேண்டும் எனில் - ஏது காரணமாக இப்படியொரு ஆணவமலம் உண்டென்று சொல்லவேண் டும் என்னில்; உயிர்கள் ஞானத்தைத் தடுப்பது ஒன்று இங்கு இலேயேல் - ஆன்மாக்கள் எண்ணிறந்த ஞானக் கிரியா சத்திகளைத் தடுப்பதாக ஆணவ

மென்று ஒருபொருள் இல்லையாகில்; உயிர்கள் ஞான உருவாம் ஆல் - ஆன்மாக்கள் ஞானஸ்வரூபி ஆகையால்; சிவன் போலவே நிற்கும் - சிவனைப் போலவே நிற்குமாகையால்; பிறப்பு ஆம் தீது உற்று வருந்தாது - சனன மரணமான துக்கங்களைப் பொருந்தாதன; மா துக்கம் உரு - மிகவும் பெரிய துக்கங்களைப் பொருந்தா; சிற்றறிவும் ஆகா - அற்ப அறிவினவும் ஆகா; எவ் அறிவும் எல்லா வல்லமையும் சுதந்திரமும் மருவியிடும் - எல்லாம் அறிவதாகிய சருவஞ்ஞதையும் எல்லாவற்றையும் செய்வதாகிய சர்வகர்த்திருத்துவதையும் சர்வசுதந்திரதையும் பொருந்துவன, இவையன்றியும்; கோது அற்ற முத்தி என்பது ஏது விடில் என்றே குறித்திடில் இவ் ஆணவம் ஆம் கூறுங்கால் - ஒன்றினுலே விடப்பட்டதற்கு மோட்சம் என்று பேர், உபாதியற்ற மோக்ஷம் என்பது எந்தப் பொருளினுலே விடப்பட்டது என்று விசாரிக்கில் இந்த ஆணவமலமாமென்று சொல்லுங்காலத்து அறி எ - று. (சஎ)

அ - கை: மேல் ஆதிசத்தியாகிய திரோதானசத்தி ஆன்மஞானத்தைத் தடாதாகையால் ஆணவம் தடுக்குமென்பது கூறுகின்றது.

48. சாற்றியிடுந் திரோதான சத்தி தானே
தடுத்திடுமான் மாவறிவை யென்னச் சாலும்
போற்றுவதெ ணுணவந்தான் றடுக்கு மென்றே
புகன்றிடினீ * யவ்வாறு பொருந்தா தாகும்
மாற்றலிலா மெய்ஞ்ஞான வடிவாஞ் சத்தி
மறைத்தல்செயா தறிவறிவுக் காகா வாதை
ஊற்றமிகு முணர்வதனை யுணர்வுதடா தென்று
முணர்வினுக்குச் சடம்வாதை யாகுமென வுணரே.

இ - ள்: ஆணவந்தான் தடுக்கும் என்று போற்றுவது என் சாற்றியிடும் திரோதான சத்திதானே ஆன்மா அறிவை தடுத்திடும் என்னச் சாலும் நீ புகன்றிடில் அவ்வாறு பொருந்தாது ஆகும் - ஆணவமலம் தடுக்கும் என்று சொல்லுவது ஏன்? சொல்லியிடும் திரோதானசத்தி தானே ஆன்மஞானத்தைத் தடுக்குமென்னப் போதும் என்று நீ சொல்லிடில், அவ்வாறு கூடாது; மாற்றல் இலா மெய்ஞ்ஞான வடிவாம் சத்தி மறைத்தல் செயாது - தகைதல் இல்லாத சத்தியஞான சொருபமாகியசத்தி மறைத்தலைச்செய்யாது; அறிவு அறிவுக்கு வாதை ஆகா - ஞானத்துக்கு ஞானம் பகையாகாது; ஊற்றம் மிகும் உணர்வதனை உணர்வு தடாது என்றும் உணர்வினுக்குச் சடம் வாதையாகும் என உணர் - ஆகையால் மிகவும் விருத்தியாயிருக்கிற ஞானத்தை ஞானம் தடாது, என்றும் மெய்ஞ்ஞானத்தைத் தடுப்பது ஞான விரோதியாகிய சடமாயிருக்கிற ஆணவமலமாகுமென்று அறி எ - று. (சஅ)

---

* புகன்றிடனீ - பாடபேதம்.

அ - கை : புண்ணியபாபாத்மகமான கன்மமும் ஆன்மஞானத்தைத் தடாதென்பது கூறுகின்றது.

49. பாவமே யிருள்வடிவாய் மறைக்குமுயி ரறிவைப்
பண்ணியிடும் புண்ணியந்தான் வெளியுருவாய் விளக்கும்
ஆவதனு லிருவினையே யுயிரறிவை மறைத்து
மறியாமை தனைநீத்து மடைந்துநிற்கு மென்னில்
மேவலுறு மிருவினையு மறிவியற்ற லாலே
விளைந்திடுமவ் வினைப்பயனும் வினவிலறி வாலே
ஏவமுற வேபுசிக்கு மாதலினு லென்று
மிருவினைக டடையாகா வுயிரறிவுக் கென்னே.

இ - ள் : பாவமே இருள் வடிவாய் மறைக்கும் உயிர் அறிவைப் பண்ணியிடும் புண்ணியந்தான் வெளியுருவாய் விளக்கும் ஆவதனுல் இரு வினையே உயிரறிவை மறைத்தும் அறியாமைதனை நீத்தும் அடைந்துநிற்கும் என்னில் - கன்மம் புண்ணியபாபாத்மகம், அதில் பாபம் அஞ்ஞானரூபமாய் ஆன்மஞானத்தை மறைக்கும், செய்யும் புண்ணியமானது பிரகாசரூபமாய் ஆன்மஞானத்தை விளக்கும், ஆகையால் பாப புண்ணியாத்மகமான கன்மமே ஆன்மஞானத்தை மறைத்தும் அஞ்ஞானத்தை நீக்கியும் பொருந்தி நிற்கும், ஆணவம் வேண்டாம் என்னில், அது கூடாது;

மேவல் உறும் இரு வினையும் அறிவு இயற்றலாலே விளைந்திடும் - ஆன்மஞானத்தை மறைப்பது நிமித்தமாய்ப் பொருந்துதலையுறும் புண்ணிய பாபங்கள் ஆன்மஞானக் கிரியைகளால் உண்டாகும்; வினவில் அவ்வினைப் பயனும் அறிவாலே ஏவம் உற புசிக்கும் - இஃதன்றியும் விசாரிக்கில் அந்தப் போக ஏதுவாயிருக்கிற புண்ணிய பாபப்பலன்களும் போகரூபமாயிருக்கிற ஞானத்தால் எவ்வம் பொருந்தப் புசிக்கும்; ஆதலினுல் என்றும் இரு வினைகள் உயிரறிவுக்கு தடையாகா என் - ஆகையால் எந்நாளும் இருவினைகள் ஆன்மஞானத்தை விளக்குவதொழிந்து ஆன்மஞானத்தை மறைக்கமாட்டா என்று அறி எ - று. (சகூ)

அ - கை : மேல் ஆன்மாக்கள்குணம் அறியாமை அல்ல ஞான ஸ்வரூபி, ஆன்மஞானத்தை ஆணவமே மறைக்குமென்பது கூறுகின்றது.

50. அறியாமை யான்மாக்கள் குணமே யென்னி
லறிவுதொழி லாற்போக மருந்து மாற்ருல்
செறியாது நீசொன்ன குணமென்கை யுயிர்பாற்
சித்தினுக்குக் குணமென்றுஞ் சித்தே யாகும்

குறியாக்கொள் ஆன்மாவைச் சடம தாகக்
கூறியவவ் வாணவத்தின் குணமறியா மையதாம்
நெறியாலே யாணவந்தா னான்மாக்க ளறிவை
நிகழாத வகைதடுக்கு மென்றுநீ * தெளியே.

இ - ள்: அறியாமை ஆன்மாக்கள் குணமே என்னில் அறிவு தொழிலால் போகம் அருந்துமாற்ருல் - அறியாமை ஆன்மாக்களுக்குக் குணமே ஆகையால் அறியாதபடிக்கு மறைப்பதாக ஒரு பொருள் உண்டு என்று சொல்லத் தேவையில்லை என்னில், அது கூடாது. ஆன்மா ஒன்றனை இது வேண்டுமென்று இச்சித்து அறிந்து செய்து போகங்களைப் புசிக்கும் பிரகாரமாகையால்; நீ சொன்ன குணம் என்கை உயிர்பால் செறியாது - அறியாமை ஆன்மாக்களுக்குக் குணம் என்று நீ சொன்னது ஆன்மாவினிடத்துப் பொருந்தாது; அறியாமை இயல்பல்ல ஆகையால்;

சித்தினுக்குக் குணம் என்றும் சித்தே ஆகும் - ஞான சொரூபியாய் இருக்கிற ஆன்மாவுக்கு என்றும் ஞானமே குணமாகுமல்லால் சடமாயிருக்கிற அஞ்ஞானம் குணமல்ல; ஆன்மாவைச் சடமதாக குறியாக்கொள் - ஆன்மாவைச் சடமதாக விசாரியாதே, ஆன்மா ஞானசொரூபியே; கூறிய அவ் ஆணவத்தின் குணம் அறியாமையதாம் - இப்படிச் சொல்லிய இந்த ஆணவமலத்தின் குணமே அஞ்ஞானம்; நெறியாலே ஆணவந்தான் ஆன்மாக்கள் அறிவை நிகழாதவகை தடுக்கும் என்று நீ தெளி - திரோதான சத்தி பிரேரணையால் இந்த ஆணவமலந்தானே ஆன்மாக்கள் ஞானத்தைப் பிரகாசியாதவகை தடுக்கும் என்று நீ அறி எ - று. (ரு௰)

அ - கை: மேல் ஒளியாய் விளங்கும் கலாதிகளுக்குக் காரணமாகிய மாயை ஆன்மஞானத்தை விளக்குவதொழிந்து மறையாதென்பது கூறுகின்றது.

51. இருள்வடிவாய் மூலகா ரணமான மாயை
யெண்ணிலான் மாக்களறி விச்சையினை மறைக்கும்
மருவியிடு மாயையினிற் காரியங்க ளொளியாய்
மன்னுமுணர் விச்சைதொழில் வளர்க்கு மென்னில்
ஒருபொருடா னொளியுமிரு ளுருவு மாகா
வுணர்ந்திடுநீ தீபகா ரணமான வன்னி
கருமையல வொளியாகு மதுபோல மாயை
காண்மறைத்த லாணவமாய்க் கருதி டாயே.

இ - ள்: மூல காரணமான மாயை இருள் வடிவாய் எண் இல் ஆன்மாக்கள் அறிவு இச்சையினை மறைக்கும் - பிரபஞ்ச உபாதான காரணமான

* நினையே – பாடபேதம்.

மாயை அஞ்ஞான ரூபமாய் எண்ணிறந்த ஆன்மாக்களின் ஞானத்தையும் இச்சையையும் மறைக்கும்; மாயையினில் மருவியிடும் காரியங்கள் ஒளியாய் மன்னும் உணர்வு இச்சை தொழில் வளர்க்கும் என்னில் - மாயையில் பொருந்தும் காரியமாகிய கலாதிகள் பிரகாச ரூபமாய்க்கொண்டு பொருந்தும், ஞானேச்சாக் கிரியைகளை விளக்கும், ஆணவமலம் என்றென்றும் வேண்டா என்னில், அது கூடாது;

ஒரு பொருள் தான் ஒளியும் இருளுருவும் ஆகா - ஒருவஸ்துத்தானே பிரகாசரூபமும் இருளுருவமுமாகாது, அஃது எவ்வாறு என்னில்; உணர்ந்திடு நீ தீபகாரணமான வன்னி கருமையல ஒளியாகும் அதுபோல மாயை காண் - பிரகாசமாயிருக்கிற விளக்குக்குக் காரணமாகிய வன்னி இருளாயிராது ஒளியாகவே இருக்கும் என்று நீ அறி, அந்த அக்கினியைப்போல ஒளியாய்விளக்கும் கலாதிகளுக்குக்காரணமாகிய மாயையும் அறிவு தொழிலை விளக்குவதொழிந்து மறைக்கமாட்டாது என்றறி; மறைத்தல் ஆணவமாய்க் கருதிடாய் - ஆகையால் அறிதொழிலை மறைப்பது ஆணவம் என்றே அறிந்திடு எ - று. (ருக)

**அ - கை :** மேல் ஞானசொரூபியாகிய ஆன்மாவுக்கு அஞ்ஞானம் ஞானத்தினுடைய இல்லாமை என்பது குற்றம் என்பது கூறுகின்றது.

52. அஞ்ஞான மென்பதோர் பொருளே யில்லை
அறைகின்ற ஞானத்தி னபாவ மென்னில்
எஞ்ஞான்று மபாவமோ முன்னோ பின்னோ
வியம்பியிடு மத்தியந்தா பாவமெனிற் சடமாம்
மெய்ஞ்ஞானு பாவந்தான் முன்னென்னிற் பின்னர்
மேவுவதா மெய்ஞ்ஞானு பாவம்பின் னென்னி
லுஞ்ஞானம் பின்னொருகா லுண்டாகா ஞான
வுருவுயிருக் கிவ்வாறிங் கோதல்பழு துணரே.

**இ - ள் :** அஞ்ஞானம் என்பதோர் பொருளே இல்லை அறைகின்ற ஞானத்தின் அபாவம் என்னில் - அஞ்ஞானம் என்று உளதாக ஒருபொருள் இல்லை, சொல்லப்பட்ட ஞானத்தினுடைய இல்லாமையே அஞ்ஞானம் என்னில்; எஞ்ஞான்றும் அபாவமோ முன்னோ பின்னோ - அந்த ஞானத்தினுடைய இல்லாமை ஆகாசத்துக்கு ரூபமில்லாததுபோல் எப்பொழுதும் ஞானமில்லாமையோ, கடத்தினுடைய முன்னில்லாமை மண்ணுயிருந்தது போல ஞானம் முன்னில்லாமை அஞ்ஞானமோ, கடமுடைகிறது முன்னில்லாமல் ஒரு காலத்தில் உண்டானாற்போல ஞானம் பின்னில்லாமை இருக்கையோ; இயம்பியிடும் அத்தியந்தாபாவம் என்னில் சடமாம் - இப்படிப்பட்ட மூன்று இல்லாமையில் முதற்சொன்ன எப்போதும் இல்லாமை என்கிறது கூடாது, எப்பொழுதும் ஞானம் ஆன்மாவுக்கு இல்லையாகில் ஆன்மாச் சடமாவன்; இஃதன்றியும் அபாவம் ஒரு தொழிலையும் பண்ணமாட்டாது, கடத்தினுடைய இல்லாமை தண்ணீரை எடுத்துவர மாட்டாததுபோல;

மெய்ஞ்ஞானுபாவந்தான் முன்என்னில் பின்னர் மேவுவதாம் - மெய்ஞ் ஞானத்தினுடைய முன்னபாவம் அஞ்ஞானம் என்னில் குடத்தினுடைய முன்னில்லாமை மண்குடத்தை உண்டாக்குவதுபோல ஞானத்தினுடைய முன்னில்லாமையே அஞ்ஞானமானல் அஞ்ஞானமே ஞானத்தை உண்டாக்க வேண்டும்; மெய்ஞ்ஞானுபாவம் பின்னென்னிலும் ஞானம் பின் ஒருகால் உண்டாகா - மெய்ஞ்ஞானத்தினுடைய பின்னில்லாமை அஞ்ஞானமென்னில் குடமுடைந்தால் அந்தக் குடம் உண்டாகாதது போல ஆன்மாவுக்குப் பின்னொருக்காலும் ஞானம் உண்டாகாமல் அற்றுப்போகவேண்டும்; ஞான உரு உயிருக்கு இவ்வாறு இங்கு ஓதல் பழுது உணர் - ஆகையால் ஞான சொரூபியாகிய ஆன்மாவுக்கு அஞ்ஞானம் ஞானத்தினுடைய இல்லாமை என்று இவ்விடத்துச் சொல்லுதல் குற்றமென்று அறி எ - று. (ருஉ)

அ - கை : ஆன்மாவுக்குச் சிற்றறிவு இயல்பல்ல, சருவஞ்ஞதையே இயல்பு; இதனைத் தடுப்பதாக ஆணவமலம் என்ற ஒரு பொருள் உண்டு என்பது கூறுகின்றது.

53. சிற்றறிவே யான்மாக்க ளியல்ப தென்னிற்
றேசத்தி லெவ்வுயிர்க்குஞ் செறியுமறி வொன்றும்
பெற்றறிவைப் பெரிதாக முத்திபெற மறைதான்
பேசியிடு மாதலினாற் பேரறிவே யியல்பாம்
மற்றறிவை யாணவந்தான் றடுக்கவத னாலே
மறைப்புண்டு மாயையினாற் சிற்றறிவா யருளால்
உற்றறிவு சிவன்போல முத்த னாகு
முயிரதுவா லாணவமென் றோர்பொருளுண் டுணரே.

இ - ள் : சிற்றறிவே ஆன்மாக்கள் இயல்பது என்னில் - ஆன்மாக்களுக்கு அற்பமறிகிறதே எப்பொழுதுமியல்பு, எல்லாவற்றையும் அறிகிறதன்று, எல்லாம் அறியாதபடி மறைப்பதாக ஒரு ஆணவமலத்தைச்சொல்லத் தேவையில்லை என்னில், அது கூடாது; தேசத்தில் எவ்வுயிர்க்கும் செறியும் அறிவு ஒன்றும் - ஆன்மாவுக்கு அற்ப அறிவு இயல்பானல் தேசத்திலே எல்லா ஆன்மாக்களுக்கும் ஏற்றக்குறைச்சலன்றியில் ஒருபடித்தாக அறியுந் தன்மை உண்டாகியிருக்கவேண்டும், அப்படியன்றியிலே ஒருத்தன் அற்பமாக அறியவும் ஒருத்தன் அதிலும் அதிகமாக அறியவும் காண்கிறோம்;

மறைதான் முத்திபெறப் பெற்ற அறிவைப் பெரிதாகப் பேசியிடும் - ஆகமமானது பரமோட்சத்தைப் பெறப் பெற்ற ஞானமெல்லாவற்றையும் அறியுந்தன்மையாகச் சொல்லும்; ஆதலினல் பேரறிவே இயல்பாம் - ஆகையால் இவனுக்கு எல்லாம் அறியுந்தன்மையே சுபாவம்; மற்று அறிவை ஆணவந்தான் தடுக்க அதனலே மறைப்புண்டு - எல்லாம் அறியுந்தன்மையை ஆணவமலம் தடுக்க அதனல் மறைக்கப்பட்டு அறிவற்றிருந்து; மாயையினல் சிற்றறிவாய் - மாயா காரியமாகிய கலாதிகளால் அற்பம் அறிகிறவனய்;

அருளால் உற்ற அறிவு சிவன்போல முத்தனுகும் உயிர் - திருவருளைப்பெறப் பரமோட்சத்தில் சிவனைப்போலப் பாசமில்லாதவனாய் எல்லாவற்றையும் அறிகிறவனுவன் ஆன்மா; அது ஆணவமென்று ஓர் பொருள் உண்டு உணர் - அது ஆணவமென்ற ஒரு பொருள் உண்டென்று விசாரி எ - று. (ருங)

அ - கை : மேல் ஆணவம் ஆன்மாவின் ஞானேச்சாக்கிரியைகளைத் தடுக்கும் என்பது கூறுகின்றது.

54. அறைந்தவிந்த ஆணவந்தா னான்மாவை முழுது
மாவரிக்கு மோஞான வுருவொளியா யென்றும்
உறைந்ததனை யொழிக்குமோ வென்னிலொளி யுருவா
லொளியழியி லுயிருமழிந் திடுவதா மெங்கும்
நிறைந்துளவான் மாவதனை யாவரித்தல் கூடா
நிகழ்த்தியிடிற் சொரூபத்தின் விருத்தியாய் நிகழ்ந்தே
சிறந்துளதா ஞானேச்சாக் கிரியையினைத் தடுக்குந்
தீவெம்மை தடுத்திடுமந் திரசத்தி செயலில்.

இ - ள் ; அறைந்த இந்த ஆணவம் தான் ஆன்மாவை முழுதும் ஆவரிக்குமோ - இப்படிச் சொல்லப்பட்ட ஆணவமலந்தான் ஆன்மாவைச் சற்றும் தெரியாதபடி மூடிக்கொள்ளுமோ; ஞான உரு ஒளியாய் என்றும் உறைந்ததனை ஒழிக்குமோ என்னில் - ஆன்மாவினுடைய ஞான சொரூபமாகிய ஒளியாய் எங்கும் பிரகாசித்ததைக் கெடுக்குமோ என்னில், இதில் இரண்டாவது சொன்னதும் கூடாது; ஒளியுருவால் ஒளி அழியில் உயிரும் அழிந்திடுவதாம் - ஞான சொரூபியாகிய ஆன்மாவுக்கு ஞானப்பிரகாசங் கெடில் ஆன்மாவுக்கு நாசம் வரும், இனி முதற்சொன்னதும் கூடாது; எங்கும் நிறைந்துள ஆன்மாவதனை ஆவரித்தல் கூடா - எங்கும் நிறைந்திருக்கிற ஆன்மாவை மூடிக்கொள்வது கூடாது, பின்னை எப்படி யென்னில்; நிகழ்த்தியிடில் சொரூபத்தின் விருத்தியாய் நிகழ்ந்தே சிறந்துளதாம் ஞான இச்சாக்கிரியையினை தீ வெம்மை தடுத்திடும் மந்திரசத்தி செயலில் தடுக்கும் - சொல்லியிடிற் சொரூபஞானத்தினுடைய விருத்தியாய் நிகழ்ந்து விளங்கிய ஞானேச்சாக்கிரியைகளை, அக்கினியினுடைய சுடுகிற சத்தியைச் சுடாதபடி தடுக்கும் மந்திரசத்தியின் செயல்போல, அறியவும் இச்சிக்கவும் பண்ணவுமொட்டாமல் தடுக்கும் ஆணவமலம் என்று அறி. (ருச)

அ - கை : மேல் சுத்தமாயா லட்சணம் கூறுகின்றது.

55. அறிவிலதாய்ச் சுத்தமா யனுதியாய் நாத
மாதியாந் தத்துவங்க ளக்கரங்கள் பதங்கள்
பிறிவிலாச் சூக்குமையை முதல்வாக்கு யாவும்
பிறப்பிடமாய் விஞ்ஞான கலர்க்குருவ மாதி

நெறியுளதாய்ப் பரமான முத்தியினிற் ருனு
நீங்குவதாய் நித்தமாய் வியாபியா யெங்கும்
செறிசிவற்குப் பரிக்கிரக சத்தி யாகிச்
சேர்ந்துளது விந்துவெனத் தெரிக்கு நூலே.

இ - ள் : அறிவிலதாய் - அறிவற்றதாய்; சுத்தமாய் - அதோமாயையைப்போல மயக்குவதன்றிச் சருவான்மாக்களுக்கும் ஞானத்தை விளக்குவதாகையால் சுத்தமாய்; அனுதியாய் - அனுதியே உள்ளதுவுமாய்; நாதம் ஆதியாம் தத்துவங்கள் அக்கரங்கள் பதங்கள் பிறிவு இலாச் சூக்குமையை முதல் வாக்கு யாவும் பிறப்பிடமாய் - பொருளுருவான நாதமுதலாகிய சுத்த தத்துவம் ஐந்துக்கும், சத்தரூபமாகிய நாத விந்து அகர முதலாகிய அக்கரங்கள் ஐம்பத்தொன்றுக்கும், வியோமவியாபி முதலாகிய பதம் எண்பத்தொன்றுக்கும், ஈசாதி பதினொரு மந்திரங்களுக்கும், மூன்று அத்துவாவிலுள்ள ஆன்மாக்களுக்கும், பந்தமாகிய சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நாலு வாக்குக்களுக்கும், அநாசிருத புவனம் முதலான முப்பத்து மூன்று புவனங்களுக்கும், நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்திய தீதை என்னும் பஞ்சகலைகளுக்கும் முதற்காரணமாய்;

விஞ்ஞானகலர்க்கு உருவம் ஆதி நெறி உளதாய் - சுத்தாத்துவாவிலிருக்கும் விஞ்ஞானகலர்க்குத் தனு கரண புவன போகங்களுக்கு ஏதுவாய், சிவனுக்கு லய போக அதிகாரம் என்னும் மூன்றவத்தைகளுக்கும் ஏதுவாய், அனந்தேசுராதிகள் தனுகரணுதிகளுக்கு ஏதுவாய், அனந்தேசர் முதலான அதிகார கர்த்தாக்களுக்கு விகற்பஞான மன்றியில் அசுத்தாத்துவா கிருத்தியம் கூடாதாகையால் அவருடைய விகற்ப ஞானத்துக்கும், மூவகையான்மாக்களுக்குச் சத்தமின்றி ஞானம் பிரகாசியாமையால் சத்தத்துடன் அபர ஞானம் பிரகாசிக்கையால் மூவகை ஆன்மாக்கள் விகற்ப அறிவுக்கும் காரணமாய், இஃது என்றற் பண்ணப்படுமென்னும் நிச்சயம்பண்ணும் புத்திக்குச் சத்தமன்றியில் நிச்சயம் பண்ணுவது கூடாதாகையால் அந்தச் சத்தத்துக்கும் காரணமாய், சத்தகோடி மகாமந்திரங்கள் அட்டவித்தியேசுரர் அணுசதாசிவர் பரை முதலான சத்திகள் இவர்களுடைய தனுகரணுதிகளுக்குக்காரணமுமாய், அசுத்தமாயையையும் கன்மத்தையும் நீங்கிச் சிவசாயுச்சியத்தைப் பெற்ற அபரமுத்தர்க்கு விஞ்ஞானந்த கோசரூபமான பந்தமுமாகி;

நித்தமாய் - நித்தியமுமாய்; வியாபியாய் - நாதம் முதல் பிருதிவியீருன தன்னுடைய காரியங்களையும் அசுத்தமாயையின் காரியங்களையும் வியாபித்திருப்பதாய்; எங்கும் செறி சிவற்குப் பரிக்கிரக சத்தியாகி - தான் சடமாதலினுல் சிற்சத்திபோலச் சமவாய சம்பந்தம் கூடாதாகையால் மண் குயவனிடத்தில் சமவாய சம்பந்தமாய் இராததுபோலச் சர்வ வியாபியாயிருக்கிற சத்தர்க்குப் பரிக்கிரக சத்தியாயிருப்பதாய்; பரமான முத்தியினில் தானும் நீங்குவதாய் - சிவதரிசனத்தில் ஆணவமலத்துடன் தானும்சுத்தமாக

நீங்குவதாய்; சேர்ந்துளது விந்து எனத் தெரிக்கும் நூல் - யாதொன்று நீங்கினால் பரமோட்சம், யாதொன்று ஆன்மாவுக்குப் பரமபெந்தம், அது குடிலையென்றும் குண்டலினியென்றும் விந்துவென்றும் மகாமாயையென்றும் பெயரையுடையதாகச் சிவாகமங்கள் சொல்லும் எ - று. (௫௫)

அ - கை : மேல் சிவனுடைய கிரியாசத்தியும் அசுத்தமாயையுமே நாதம் முதலான சர்வப் பிரபஞ்சத்துக்கும் காரணமென்ன, அதை மறுத்துச் சுத்தமாயை உண்டென்று அங்கீகரிக்க வேண்டுமென்பது கூறுகின்றது.

56. விந்துவென் சிவசத்தி தானே யெல்லா
விசுவமுமா மெனிற்சித்திங் கசித்தாகி விளையா
பந்தமுமா காதுயிர்க்கு ஞானவுரு வாமாற்
பரிக்கிரக மேசிவற்குப் பானைகட்கு மண்போல்
மந்திரங்கள் மந்திரே சுரர்கள்சதா சிவர்கள்
மற்றுமுள்ள சத்திகட்கு வடிவாதி நான்கும்
தந்திடுமவ் விந்துவென வறிய வேண்டுஞ்
சாற்றுவமே லதோமாயை தனதியல்புங் கேளே.

இ - ள் : விந்து என் சிவசத்தி தானே எல்லா விசுவமுமாம் எனில் - இப்படி விந்துவென்று ஒன்றைச் சொல்லுவது என், சிவனுடைய கிரியா சத்திதானே நாதமுதல் சர்வப்பிரபஞ்சமுமாமென்னில், அது கூடாது; சித்து இங்கு அசித்தாகி விளையா - இவ்விடத்துச் சித்துச் சடமாகியுண்டாகாது, சடத்துக்குக் காரணம் சடமேயாகவேண்டும், ஆகில் அசுத்தமாயை தான் நாதமுதலான சப்தார்த்தப் பிரபஞ்ச காரணமாகவொண்ணாதோ என்னில்; ஞான உருவாம் ஆல் உயிர்க்குப் பந்தமும் ஆகாது - அது மயக்குகிற சொரூபமாகையால் ஞானப்பிரகாச சொரூபமான சுத்தாத்துவாவிலிருக்கிற ஆன்மாக்களுடைய விஞ்ஞானப் பிரகாசமான தனுகரணாதி பந்தங்களுக்கும் காரணமாகாது;

இதுவன்றியிலும் அந்த அசுத்தமாயைதான் கலக்கப்பட்டே கலாதிகளுக்குக் காரணமாம், தன்னைக் கலக்குதல்பண்ணும் அனந்தேசுரர் தேகமில்லாமல் கலக்கமாட்டார், குலாலனைப்போல் ஏவல்செய்கிற கர்த்தாவாகையால் இவருடைய திருமேனிக்குத் தான் காரணமாகமாட்டாது;

பரிக்கிரகமே சிவற்குப் பானைகட்கு மண்போல் - ஆகையால் ஞானமே திருமேனியாகிய சத்தர்க்குப் பரிக்கிரக சத்தியாகிய சுத்தமாயை கடத்துக்கு மண்ணுண்டைபோல் உபாதான காரணம்; மந்திரங்கள் மந்திரேசுரர்கள் சதாசிவர்கள் மற்றுமுள்ள சத்திகட்கும் வடிவு ஆதி நான்கும் விந்து தந்திடும் என அறியவேண்டும் - சத்தகோடி மகாமந்திரங்கள், புவன நாயகரான மந்திரமகேசுரர், மந்திரேசுவரர்கள், அணுசதாசிவர்கள், மற்றுமுண்டான சத்திகளுக்கெல்லாம் தனு கரண புவன போகங்கள் நான்கையும் அந்த உபாதான காரணமாகிய விந்துக் கொடுக்கும் என்று அறியப்படுமது;

ஈது உண்டு என்கிறதற்குப் பிரமாணம்: இங்ஙனம் கூறிய காரியங்கள் காரணமின்றியில் உண்டாகாதென்பது. ஆகையால் சுத்தமாயையென்னும் உபாதானம் அசுத்தாத்துவ கர்த்தாவாகிய அனந்தேசுவரருடையவும் சுத்தாத்துவாவிலிருக்கும் அணுசதாசிவர்களுடையவும் மந்திரங்களுடையவும் தனுகரணாதிகள் உண்டாகிறத்திலும் அனந்தேசுரருக்கு விகற்பஞானத்துக்கு ஏதுவாகிய சூக்குமை முதலாகிய சுத்த சத்தங்கள் உண்டாகிறத்திலும் நிவிர்த்தியாதி கலைகள் உண்டாகிறத்திலும் உபாதானமாகச் சித்தம், சுத்தாத்துவாவில் இருக்கிறவர்களுக்கு இடங்கொடுப்பதற்கு ஏதுவாகவும் சுத்தமாயை என்று அங்கீகரிக்கவேண்டும்;

சாற்றுவம் மேல் அதோமாயை தனது இயல்பும் கேள் - மேல் அசுத்தமாயாலக்ஷணம் சொல்லுகிறோம், அதன் சுபாவத்தையும் கேள் எ - று. (ருசு)

அ - கை: மேல் அசுத்தமாயா லக்ஷணம் கூறுகின்றது.

57. இருவினைசேர் சகலருடன் பிரளயா கலர்க
எிருவகைக்கும் தனுவாதி யீரிரண்டா யரனுல்
வருவதற்குப் பிறப்பிடமாய்ச் சடமாகி யுயிர்க்கு
மயக்கறிவைப் பண்ணுவதாய் மலம தாகி
அருவமுமா யனுதியாய் வியாபி யாகி
யமலனுக்கோர் சத்தியா யாதிநடு முடிவில்
திரிவிதமா முயிர்களெலா மருவிடமாய் நித்தத்
திறமதுவா மதோமாயை தேருங் காலே.

இ - ள்: இருவினைசேர் சகலருடன் பிரளயாகலர்கள் இருவகைக்கும் தனு ஆதி ஈர் இரண்டாய் அரனுல் வருவதற்குப் பிறப்பிடமாய் - புண்ணிய பாவங்களைப்பொருந்திய சகலர் பிரளயாகலர் என்னும் இரண்டுவகை ஆன்மாக்களுக்கும் அனந்தேசுரரால் உண்டாக்கப்படும் தனு கரண புவன போகமான கலாதி பிருதிவியந்தமான தத்துவங்களுக்கும் தாத்துவிகங்களுக்கும் முதற்காரணமாய்; சடம் ஆகி - சடமும் ஆகி; உயிர்க்கு மயக்கு அறிவைப் பண்ணுவதாய் - ஆன்மாக்களுக்கு ஆன்மாவல்லாதவற்றை ஆன்மா என்பது முதலாக மயக்குகிற அறிவைப் பண்ணுவதாய்; மலமது ஆகி - மலமுமாய்; அருவமும் ஆய் - காணப்படாத ரூபமுமாய்; அனுதியுமாய் - அனுதியுமாய்; வியாபி ஆகி - தன்னுடைய கலை முதலாகிய காரியங்களை வியாபித்திருப்பதுவுமாய்; நித்தத் திறமதுவாம் - நித்தியம் என்னும் திறத்தையுடையதுவுமாய்; அமலனுக்கு ஓர் சத்தியாய் - நின்மலராயிருக்கிற சிவனுக்கு ஒப்பற்ற பரிக்கிரக சத்தியுமாய்; ஆதி நடு முடிவில் திரிவிதமாம் உயிர்கள் எல்லாம் மருவு இடமாய் - தன்னுடைய அடியிலும் நடுவிலும் முடிவிலும் சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என்னும் இந்த மூவகை ஆன்மாக்களுக்கும் இருப்பிடமாய்ப் பிரளயத்தில் கன்மத்திற்கு இருப்பிடமாய் ஒரு வத்துரூபமாய் இருப்பது; அதோமாயை தேருங்கால் - விசாரிக்குமிடத்து அசுத்தமாயை எ - று.

இப்படி ஒரு மாயை உண்டு என்பதற்குப் பிரமாணம்: கடமானது காரியமாகையால் அதற்குக் கர்த்தாவாகக் குலாலனையும் முதற்காரணமாக மண்ணையும் அபேட்சிக்குமாறுபோலப் பிரபஞ்சம் காரியமாகையால் ஒரு கர்த்தா உண்டு என்பதுபோல ஒரு உபாதான காரணத்தை உடையதாக வேண்டுமென்று உபாதான காரணமாக மாயை சித்திக்கும். இதல்லாமலும் சுத்தமாயை கன்மத்துக்கு மேற்பட்டதாகையினாலும் ஆன்மாக்கள் சடமாயிருக்கிற கன்மத்துக்கு இருப்பிடமாகில் விகாரியாவர் ஆகையாலும் புத்தி தத்துவம் போகம் கிரகிக்கப்பட்டுப்போகையாலும் மகாசங்காரத்தில் கன்மத்துக்கு யாதொன்றிருப்பிடம் அது மாயையென்று அசுத்தமாயை அங்கீகரிக்க வேண்டும். மாயை நித்தியமென்பது பிரளயத்தில் மாயை அன்றிக் கன்மத்துக்குப் பின்னையொன்றும் இருப்பிடம் இல்லை என்பதே யுத்தி. (ருஎ)

**அ - கை :** மேல் கன்ம லக்ஷணம் கூறுகின்றது.

58. அனாதியே யாணவத்தின் குணங்கள் கூடு
மான்மாக்க ளறிவிச்சை தொழில்க ளாலே
மனாதியாற் புரிவதனாற் கன்ம மென்று
மருவாகட் காகையினா லதிட்ட மென்றும்
உனாதுபுரி யாதிருக்கிற் பரிகா ரத்தை
யுண்ணாம லொழியாம லுறுவ தாகித்
தனாதியந்தம் புரிதலினாற் புசிப்பினா லாகித்
தானிற்குங் கன்மமின்னுஞ் சாற்றக் கேளே.

**இ - ள் :** அனாதியே ஆணவத்தின் குணங்கள் கூடும் ஆன்மாக்கள் அறிவு இச்சை தொழில்களாலே மன ஆதியால் புரிவதனால் கன்மம் என்றும் - அனாதியிலே ஆணவத்தின் குணங்கள் கூடியிருக்கும் ஆன்மாக்களுடைய ஞானேச்சாக்கிரியைகளினாலே மனோவாக்குக் காயங்களால் செய்கையால் கன்மமென்றும்; மருவா கட்கு ஆகையினால் அதிட்டம் என்றும் - சட்சு இந்திரியத்துக்குப் பொருந்தாதபடியால் அதிட்டமென்றும்; உன்னாது புரியாதிருக்கில் பரிகாரத்தை உண்ணாமல் ஒழியாமல் உறுவதாகி - பிராயச்சித்தப் பிரதிபாதக சாத்திரத்தில் இன்ன பாபத்துக்கு இன்ன பிராயச்சித்தமென்று விசாரித்துப் பிராயச்சித்தம் பண்ணாதிருந்தால் புசியாமல் நசியாததாய்ப் பொருந்துகிறதாகி; தன் ஆதி அந்தம் புரிதலினால் புசிப்பினால் ஆகி - தனக்கு ஆதியும் அந்தமும் மனோவாக்காய சன்னியமாகையால் ஆதியும் அந்தப் பலன்களைப் புசித்துத் தொலைக்கையினாலே அந்தமும் உடையதாகி; தான் நிற்கும் கன்மம் - இப்படிக் கன்மமானது தான் நிற்கும்; இன்னும் சாற்றக் கேள் - இன்னமும் கன்ம ஸ்வரூபத்தைச் சொல்லக் கேள் எ - று. (ருஅ)

**அ - கை :** மேல் புண்ணிய பாப ஸ்வரூபமாயிருக்கிற கன்மங்கள் பந்தமாக ஏறும் வகை கூறுகின்றது.

59. மந்திரங்கள் பதங்களுடன் வன்னங்க ணன்ருய்
மதித்துரைத்தல் மதியாத வாசகத்தி னுலும்
சுந்தரமாம் புவனேசர் பூசாபூ சையினுற்
சுருதிவழித் தருமத்தாற் றவறுசெய்த லாலும்
சிந்தனைசெய் மனமாதி தத்துவங்க ளாலே
சீவர்களுக் கிதமகிதஞ் செய்தமையி னுலும்
பந்தமுறு மிருவினைக ளொன்றென்று லழியாப்
பான்மையுமாய்ப் பரிகாரப் படுநெறியு முளதே.

இ - ள்: மந்திரங்கள் பதங்களுடன் வன்னங்கள் நன்ருய் மதித்து உரைத்தல் மதியாத வாசகத்திஞலும் - மந்திரங்களை உரக்க மெல்ல மானசமாகத் தப்பாமல் நன்ருக விசாரித்து உச்சரித்தால் புண்ணியமும் விசாரியாமல் தப்பாக உச்சரித்தால் பாபமும், வியாகரணத்தை அறிந்து பதங்களைப் பிரித்ததினுல் புண்ணியமும் அறியாதே பிரித்தால் பாபமும், வன்னங்களை ஹ்ரஸ்வ தீர்க்க புலுதமாக வழுவாமல் தம் தம் தானங்களிலே உச்சரித்தால் புண்ணியமும் அல்லாக்கால் பாபமும்; சுந்தரம் ஆம் புவனேசர் பூசா பூசையினுல் - அழகை உடைத்தாகிய புவன நாயகரைப் பண்ணின பூசைகளினுலே புண்ணியமும் திரவிய அபகார நிந்தாதிகளினுலே பாபமும்; சுருதிவழி தருமத்தால் தவறு செய்தலாலும் சிந்தனை செய் மனம் ஆதி தத்துவங்களாலே சீவர்களுக்கு இதம் அகிதம் செய்தமையினுலும் இருவினைகள் பந்தம் உறும் - வேதாகமோக்த மார்க்க தன்மத்தின்படி நடந்தால் புண்ணியமும் அதற்கு மாறுபாடாகச் செய்தால் பாபமும், சிந்தனை முதலான தொழில்களைப் பண்ணும் அந்தக்கரணங்கள் ஞானேந்திரியம் கன்மேந்திரியங்களினுலே பரற்குப் பண்ணின உபகாரத்திஞலும் விசிட்டத்திரவிய போக்கியத்திஞலும் புண்ணியமும் பரற்குப் பண்ணின அபகாரத்திஞலும் நிஷித்த திரவிய போக்கியத்திஞலும் பாபமும், இப்படிப் புண்ணிய பாப சொரூபமாக ஆன்மாக்களுக்குப் பந்தமுமாகப் பொருந்திநிற்கும்; ஒன்று ஒன்ருல் அழியாப் பான்மையுமாய் பரிகாரப்படு நெறியும் உளதே - இந்தக் கன்மமானது புண்ணியத்திஞலே பாபமும் பாபத்திஞலே புண்ணியமும் அழியாத சொரூபமாய்ப் பாபத்தைப் பண்ணினவன் பச்சாத்தாபயுக்தனுய் இன்ன பாபத்துக்கு இன்னபடி செய்ய என்று சுருதியை அனுசரித்த வைதிக சைவ சாத்திரத்திலே சொன்னபடி. பிராயச்சித்தம் பண்ண நீங்கும் வழியும் உள்ளதாம் எ - று. (ருகூ)

அ - கை: மேல் இந்தக் கன்ம பலன்கள் இம்மையிலும் மறுமையிலும் பொருந்தும் என்பது கூறுகின்றது.

60. இம்மையிலே சிலவினைக்குப் பயன்க ளிங்கே
யெய்தலுமாம் பரத்திலே யிசைந்திடலு மாகுஞ்
செம்மைசெயு நல்வினைதீ வினைகளெலா மிங்கே
சிதைந்ததிலே யதிட்டமெனச் சிவனருளா லுண்டாய்ப்

பொய்ம்மையிலாப் பயனெந்தப் புவனத்தே யங்கே
பொருந்தியிடும் வாதனையும் புந்தியினிற் பொருந்து
மம்மையுட னப்பனுயிர்க் காமிறைவன் றானே
யந்தந்தப் பயனுயிர்கட் காக்கிடுவ னறிந்தே.

இ - ள்: இம்மையிலே சில வினைக்குப் பயன்கள் இங்கே எய்தலும் ஆம் - இம்மையிலே செய்த ஆயுசு விருத்திகரமான கௌருச்சி? [குளுச்சி - சீந்தில்] யோம புத்திரகாமேட்டியாதியான சில கன்மங்கட்குப் பலன் இகத்திலேதானே பொருந்த உண்டாகும்; பரத்திலே இசைந்திடலுமாகும் - சில கன்மபலன்கள் தேகாந்தத்திலே சுவர்க்கத்திலேயாதல் நரகத்திலேயாதல் புனர்சன்மத்திலேயாதல் பொருந்த உண்டாகும்;

செம்மைசெயும் நல்வினை தீவினைகளெல்லாம் சிதைந்ததிலே அதிட்டமெனச் சிவனருளால் உண்டாய்ப் பொய்மை இலாப் பயன் எந்தப் புவனத்தே அங்கே பொருந்தியிடும் வாதனையும் புந்தியினில் பொருந்தும் - செவ்விதாகச் செய்யும் புண்ணிய கன்மங்கள் மாறுபாடாகச் செய்யும் பாப கன்மங்கள் எல்லாம் செய்தவிடத்திலே தானே தூல கன்மம் நசித்ததிலே அதிட்டமென்று சிவாக்கினையினுலே உண்டாய் இன்ன கன்மத்துக்கு இன்ன பலன் இன்ன புவனம் என்று யதார்த்தமாகச்சொல்லப்படும் புண்ணியபாப பலன்கள் எந்தப் புவனத்திலே பலவத்தாமோ அந்தப்புவனத்தே பொருந்த உண்டாகும், அவ்விடத்திலே வாசனுன்மகமாக இருக்கிற கன்மமும் புத்தி தத்துவத்தில் பொருந்தும்; அம்மையுடன் அப்பன் உயிர்க்கு ஆம் இறைவன் தானே அந்த அந்தப் பயன் உயிர்கட்கு ஆக்கிடுவன் அறிந்து - ஆன்மாக்களுக்கு உமையுடன் தந்தையாய் நின்ற கர்த்தாத்தானே அந்த அந்தக் கன்மானுகுணமாக உண்டான சுக துக்க பலன்களை அறிந்து பொருந்தும்படி உண்டாக்குவன் எ - று. (சுய)

அ - கை: மேல் இந்தச் சனனத்திலே புசிக்கும்பொழுது இதாகிதமாக ஏறின கன்மம் மேல் வரும் சனனத்தொடர்ச்சிக்குப் புத்தியிலே வித்தாய் நின்று பரிபாகமான பொழுது புசிப்பிக்கும், அப்படிப் புசிக்கையிலே இருவினையொப்பு வந்தகாலத்தில் புசியாமற் கெடும் என்பது கூறுகின்றது.

61. அருந்தியிடப் பலமாகி மேலைக்கு வித்து
மாகியிடுந் தேமாவை யாதி போலப்
பொருந்தியிடும் புண்ணியபா வப்பயன்க ளொன்றாய்ப்
புசிப்பதற்குச் சுகதுக்க மாகிப் போந்தே
திருந்தவிரு வினைமேலுஞ் செய்வ தாக
செய்தவினை வாதனைகள் சேர்ந்து புந்தி
வருந்தொடர்ச்சி யாகவே யிருவினையு மொக்கில்
மாய்வதுவாம் புசியாமல் மறித்துதியா வாறே.

இ - ள்: அருந்தியிடப் பலமாகி மேலைக்கு வித்தும் ஆகியிடுந் தேமா வையாதி போல - தேமாம்பழம் முதலானவைகள் அப்பொழுது புசிப்புமாய் மேலைக்குப் பின்னையும் பழத்தை உண்டாக்க விதையுமாயிருப்பது போல; புண்ணிய பாவப் பயன்கள் சுகதுக்கமாகிப் போந்து நன்ருய்ப் புசிப்பதற்கு பொருந்தியிடும் - புண்ணிய பாபப் பலன்கள் சுக துக்கமாகிப் போந்து நன்ருகப் புசிக்கப்படுவதுமாய்ப் புசிக்குமிடத்து இதாகிதமாகக் கொண்டு மேலைக்குச் சுக துக்க ஏதுவாய்ப் பொருந்தும்; செய்தவினை வாதனைகள் புந்தி சேர்ந்து மேலும் திருந்த இருவினை செய்வதாக தொடர்ச்சியாக வரும் - பண்ணின கன்மவாதனைகள் புத்தியிற்பொருந்தியிருந்து பின்னையும் நன்ருகப் புண்ணிய பாபங்களைப் பண்ணச்செய்யும், இப்படித் தொன்றுதொட்டுப் பிரவாகானுதியென்னும் ஆற்றுநீரொழுக்கம்போலப் பந்தித்திருக்கும்; இருவினையும் ஒக்கில் மறித்து உதியாவாறு புசியாமல் மாய்வதுவாம் - புண்ணிய பாபங்களெல்லாம் சரியாகப் பக்குவமாகில் ஆன்மாவுக்குச் செனன ஏதுவல்லாமல் புசியாமற் கெடுவதாம் எ - று.

இன்னணம் கூறிய புண்ணிய பாபரூபமான கன்மம் உண்டென்கிறத்தில் பிரமாணம் ஏது என்னில், இரண்டுபேர் ஓத்த நிலத்தில் கோளாறு சரியாகப் பயிரிட்டு இருக்கையால் ஒருத்தனுக்கு விளைகிறது, ஒருத்தனுக்கு விளையாமலே போகிறது. இதற்கு யாதொன்று ஏது அது கன்மம். பூலோகத்தில் புசிக்குந்தன்மை சரியாக இராதிருக்கையாலும் சுவர்க்கத்தில் சுகத்தை அனுபவிக்கிருன் ஒருத்தன், நரகத்தில் துக்கத்தை அனுபவிக்கிருன் ஒருத்தன், இதற்கு யாதொன்று காரணமோ அது கன்மம்.

இப்படிப்பட்ட கன்மம் பிரகிருதியில் உண்டானது என்று சொல்லவொண்ணுதோ எனில், அஃது அப்படி அன்று. பிரகிருதி புசிக்கப்படுகிறதாயிருக்கையால் புசிப்பிக்கிறதாகாது. யாதொன்று புசிக்கப்படுகிறது அது புசிப்பிக்கிறதன்று, ஆகையால் கன்மம் வேறு. பிரகிருதியிலுண்டான புத்திதன்மமான கன்மம் பாபரூபமாய்ப் புசிக்கப்படுகிறதாயிருக்கும்; கன்மரூபமாய்க்கொண்டு புசிக்கிறதாயிருக்கும் என்னில், புத்திதன்மத்திற்குப் பாபரூபமாகவே இருப்பதன்றிக் கன்மரூபமாயிருப்பது கூடாது. அதுவல்லாமலும் புத்திதன்மங்கள் எல்லார்க்கும் சரியாயில்லாமல் ஏற்றக் குறைச்சலாயிருக்கையால் அவற்றினுடைய ஏற்றக்குறைச்சலுக்குக் காரணம் அவை தாமே தம்மைப் பண்ணிக்கொள்ளா ஆகையால் அது கன்மம். இந்தக் கன்மத்திற்கு மூலகாரணமாயிருக்கிறது கார்மணம் என்று சொல்லப்படுவதாய் ஆணவம் மாயையைப்போல ஆன்மாவின் இச்சாஞானக்கிரியா சத்தியுடன் அனுதியே கூடியிருக்கும். சிருட்டியாதியில் பக்குவமாய்ச் சிருட்டிகாலத்தில் தனுகரணுதியை உண்டாக்குகிறதற்கேதுவாய்ச் சங்காரகாலத்தில் மாயையிலிருப்பதாகக் கன்மம் என்று ஒரு பாசம் ஆன்மாவுக்குப் பந்தமென்பது சித்தம். (கூக)

அ - கை: மேல் பஞ்சமலங்களின் தொகை கூறுகின்றது.

62. அறிவுதொழி லிச்சையினைத் தடுக்குமா ணவமொன்
றதைச்செலுத்தி யான்மாவி னிடத்தருளி னாலே
பிறிவறவே பாகஞ்செய் யாதிசத்தி யொன்று
பெறுவிக்கும் பெரும்போக விந்து வொன்று
செறிவுற்றுப் புண்ணியபா வத்திரட்சி யாகச்
சிந்தைமனக் காயத்தின் செயலான தொன்று
குறியுற்ற காயாதிக் காமாயை யொன்று
கூறியிடி லைந்தாகும் பாசத்தின் குலமே.

இ - ள்: அறிவு தொழில் இச்சையினைத் தடுக்கும் ஆணவம் ஒன்று - ஆகையால் ஆன்மாவின் இச்சாஞானக் கிரியைகளைத் தடுக்கும் ஆணவமல மென்று ஒன்று: ஆன்மாவினிடத்து அதைச் செலுத்தி அருளினால் பிறிவு உறப் பாகம் செய் ஆதிசத்தி ஒன்று - ஆன்மாவினிடத்து அந்த மலத்தைக் கொண்டு பக்குவம் வருந்தனையும் மறைத்துக் கிருபையால் பக்குவம் வந்த காலத்தில் அனுக்கிரகம் பண்ணுகின்ற திரோதான சத்தியென்று ஒன்று; பெறுவிக்கும் பெரும்போக விந்து ஒன்று - நாதமுதலான தத்துவங்களுக்கு ஏதுவாய் எல்லாவற்றையும் அறியுந்தன்மை முதலானவற்றை உண்டாக்கித் துக்கமின்றிச் சுகமாகவே இருக்கும் மிகுந்த போகத்தை உண்டாக்கும் சுத்த மாயை என்று ஒன்று; குறியுற்ற காய ஆதிக்கு ஆம் மாயை ஒன்று - குறியைப் பொருந்திய தனு கரண புவன போக ஏதுவாயிருக்கும் அசுத்தமாயை என்று ஒன்று; செறிவுற்றுப் புண்ணிய பாவத் திரட்சியாகச் சிந்தை மனம் காயத்தின் செயலானது ஒன்று - மனவாக்குக் காயத்தால் உண்டாகும் புண்ணிய பாபத் திரட்சிக்கு மூலமான ஆதிகன்மமென்று ஒன்று; கூறியிடில் ஐந்து ஆகும் பாசத்தின் குலம் - சொல்லுமிடத்து இப்படிப்பட்ட பாச வர்க்கம் ஐந்துவகையாம் எ - று. (சுஉ)

அ - கை: மேல் இந்தப் பாசங்கள் ஆன்மாவைப் பந்திக்கும், ஆன்மாக்களிடத்தில் எள்ளுக்குள் எண்ணெய் போலச் சர்வ வியாபியாகிய சிவனை வாதியா என்பது கூறுகின்றது.

63. போற்றியிடும் பதிவிபுவா யான்மாவு மதனைப்
பொருந்தியென்றும் பிரியாமை புகன்று பின்னுஞ்
சாற்றுவதெ னணவந்தா னாதி பாசஞ்
சாருமுயிர் தனைச்சிவனைச் சாரா தென்னிற்
காற்றதுதான் வானத்தைப் பிரியா தேனுங்
கந்தமுடன் வெம்மைதட்பஞ் சலன மெய்து
மேற்றிகழா காசத்தி லிவைபொருந்தா வாறு
மேலுமோ ருவமானம் விளம்பக் கேளே.

இ - ள்: போற்றியிடும் பதி விபுவாய் ஆன்மாவும் அதனைப்பொருந்தி என்றும் பிரியாமை புகன்று - இப்படிச் சொல்லியிடும் பதி விபுவாயிருப்பன், ஆன்மாவும் இங்ஙனம் கூறிய ஆணவாதி பாசங்களைப் பொருந்தி எந்நேரமும் பிரியாமலிருப்பன் என்று சொல்லி, பின்னும் ஆணவந்தான் அனாதி பாசம் உயிர்தனைச் சாரும் சிவனைச் சாராது என்று சாற்றுவது என் என்னில் - பின்னையும் அனாதி பாசமாகிய ஆணவமலம் ஆன்மாக்களைப் பந்திக்கும், அந்த ஆன்மாவினிடத்தில் எள்ளுக்குள் எண்ணெய்போலச் சிவனைக் கூடியிருக்கும் சிவனை வாதியாது என்று சொல்லுவதென், வாதியாதென்பது எப்படிக் கூடுமென்னில்; காற்று அதுதான் வானத்தைப் பிரியாதேனும் கந்தமுடன் வெம்மை தட்பம் சலனம் எய்தும் மேல் திகழ் ஆகாயத்தில் இவை பொருந்தாவாறும் - காற்றானது தான் ஆகாசத்தை விட்டு நீங்காமல் கூடியிருந்தாலும் காற்றினிடத்திலிருக்கும் உட்டிணம், குளிர்ச்சி, அலைச்சல் முதலானவைகள் காற்றுடன் பிறிவற்று விளங்காநிற்கிற ஆகாசத்தில் எப்படிப் பொருந்தவில்லையோ அப்படிப்போல் ஆன்மாவை இரண்டறக் கலந்திருக்கும் ஆணவம் சிவனைச் சாராது; மேலும் ஓர் உவமானம் விளம்பக் கேள் - இதன்றியும் இந்தவிடத்தில் மேலும் ஒரு உவமானம் சொல்லுகிறோம், கேள் எ - று. (கூங)

**அ - கை:** மேலும் அதற்கு ஒரு புறனடை.

64. அலைகடனீ ருப்பதுதா னகல நீள
வாழமா யந்நீருக் கவகாசங் கொடுத்த
நிலையதுவா முவர்க்கடலுக் கின்றாமந் நீர்மை
நீடுயிரின் மலமாயை நிமலன்பா லடையா
தொலைவில்மிகு மெய்ஞ்ஞானச் சுடரொளியாஞ் சிவன்றான்
றுணையிலா வஞ்ஞான விருளினுக்குப் பகையா
யுலைவறவவ் விருபொருளு மோரிடத்தே நிற்ப
துரையுமெமக் கெனிலுரைப்பா முள்ளபடி யுணரே.

இ - ள்: அலைகடல் நீர் உப்பது தான் அகலம் நீளம் ஆழமாய் அ நீருக்கு அவகாசம் கொடுத்த நிலையதுவாம் உவர்க்கடலுக்கு இன்றாம் அ நீர்மை - அகலமும் நீளமும் ஆழமுமாய் அலையையும் உடைய உப்புத்தண்ணீர்க்கு இடங்கொடுத்திருக்கும் உவர்க்கடலுக்கு அந்த நீரிலிருக்கும் உப்பானது எப்படி இல்லையோ அப்படிப்போல; நீடு உயிரின் மல மாயை நிமலன்பால் அடையா - அனாதியாயிருக்கும் ஆன்மாவினுடைய ஆணவ மாயா கன்மங்கள் சிவனிடத்துப் பந்தித்திரா; தொலைவில் மிகும் மெய்ஞ்ஞானச் சுடரொளியாம் சிவன்தான் துணை இலா அஞ்ஞான இருளினுக்குப் பகையாய் உலைவு அற அவ் இருபொருளும் ஓரிடத்தே நிற்பது உரையும் எமக்கு எனில் - நாசமற்ற விபுவாய் சத்தியஞானப் பிரகாச ரூபமான சிவனானவர் ஒப்பற்ற இருளுருவாகிய அஞ்ஞானத்துக்குப் பகையாயிருக்க

அந்தச் சிவனும் பாசமும் நாசமற்ற ஆன்மாக்களிடத்தில் எப்படிக் கூடியிருக்கும் எனக்குச் சொல்லவேண்டுமென்றால்; உரைப்பாம் உள்ளபடி உணர் - சிவனும் பாசமும் ஆன்மாக்களிடத்தில் நிற்கிற உபாயத்தைச் சொல்லுகிறோம், நீ யதார்த்தமாகக் காண் எ - று. (கூச)

அ - கை : மேலும் அதற்கு ஒரு புறனடை.

65. திருவிடமும் விடமுமொரு முதலாய் நின்றும்
திருவிடந்தா னவ்விடத்தை நீக்கா முன்னம்
மருவிடத்தை யொருவரருந் திடவதற்கு மாற்றா
யளித்திடவந் திருவிடந்தா னவ்விடத்தை நீக்குங்
கருவிடந்தா னுண்டமணி கண்டனர னுயிரின்
கண்ணடைந்த வஞ்ஞானங் கழிப்பனரு ளாலே
பெருவிடந்தா னரவிடத்தி லிருந்துமதை வருத்தா
பெருங்கடவு ளிடத்திலிரு ளிருந்துமந்தப் பேறே.

இ - ள் : திருவிடமும் விடமும் ஒரு முதலாய் நின்றும் திருவிடந்தான் அவ்விடத்தை நீக்கா - திருவிடமும் பச்சைநாவியும் ஒருமரத்திலிருந்தாலும் திருவிடமானது பச்சைநாவி விஷத்தைப் போக்காது; முன் அ மருவிடத்தை ஒருவர் அருந்திட அதற்கு மாற்றாய் அளித்திட அ திருவிடந்தான் அவ்விடத்தை நீக்கும் - முந்த அந்தப் பச்சைநாவியை ஒருத்தர் தின்னத் தின்றவரிடத்தில் திருவிடத்தை மாற்றாகக் கொடுத்தால் அந்த திருவிடம் பச்சைநாவி கொல்லாதபடி போக்கும்படிபோல; கருவிடம் தான் உண்ட மணி கண்டன் அரன் உயிரின்கண் அடைந்த அஞ்ஞானம் அருளாலே கழிப்பன் - சிவன் ஆன்மாவில் பந்தித்துப் பக்குவமான பாசங்களைத் தமது சத்தியாற் போக்குவர், இதுவன்றியிலும்; பெரு விடந்தான் அரவிடத்தில் இருந்தும் அதை வருத்தா - பொல்லாத விஷமானது பாம்பினிடத்தில் இருந்தாலும் அப்பாம்பை வருத்தாமல் பாம்பால் கடியுண்டவனை வருத்துதல் போல; பெருங்கடவுளிடத்தில் இருள் இருந்தும் அந்தப் பேறு - சகலதேவ நாயகராகிய சிவனிடத்தில் பாசங்கள் இருந்தாலும் பாசபந்தனுகிய ஆன்மாவை வருத்துவதொழிந்து சிவனை வருத்தா எ - று. (கூரு)

அ - கை : மேலும் இந்தப் பாசங்கள் சிவனை வருத்தாது பெத்தாத்துமாவையே வருத்துமென்பது கூறுகின்றது.

66. இன்னமுங்கே ளிங்குமற்றோர் தருவினிட விறக்கு
மிறவாதவ் விங்குவினை தருமதுமவ் வியல்பே
முன்னமுரைத் திடுமாயை மலமாதிக் கெல்லா
முதல்வனிடத் தவகாச மாயினுமம் முறையே

மன்னுசிவன் சத்தியிவை யனைத்தினையும் விரித்தும்
மற்றதனை யொடுக்கியுந்தன் வசமாகச் செயலாற்
றுன்னுமுயிர் தனைத்தொடக்கு மன்றி யந்தச்
சுதந்திரனுஞ் சோதிபாற் றொடக்கறியா சடமே.

இ - ள் : இன்னமும் கேள் இங்கு மற்று ஓர் தருவினிட இறக்கும் - இதுவன்றியிலும் இந்த அர்த்தத்தில் இன்னமொரு திட்டாந்தம் சொல்லுகிறேம் கேள், பெருங்காயமானது மற்றொரு மரத்திலிட்டால் அந்த மரத்தைப் படப்பண்ணும்; இறவாது அவ் இங்கு விளைதரும் அதும் அவ்வியல்பே - அது ஒழிந்து தான் உண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் பெருங்காயத்தைத் தான் அதிலிருந்தும் பட்டுப்போகப் பண்ணுதபடி போல; முன்னும் உரைத்திடும் மாயை மலம் ஆதிக்கு எல்லாம் முதல்வனிடத்து அவகாச மாயினும் அம்முறையே - முன் சொல்லப்பட்ட ஆணவம் மாயை கன்மங்களுக்கெல்லாம் சிவனிடத்தில் இருப்பானலும் அந்தப் பிரகாரமே; மன்னு சிவன் சத்தி இவை அனைத்தினையும் விரித்தும் மற்று அதனை ஒடுக்கியும் தன்வசமாகச் செயலால் - அக்கினிக்கு உஷ்ணம்போலப் பிரிவற்றிருக்கும் சிவசத்தியானது இந்த ஆணவாதி பாசங்களை மறைப்பது முதலான தந்தந் தொழில்களைச் செய்வித்தும் அந்த அந்தத் தொழில்களைச் செய்யாதபடி ஒடுக்கியும் தனது வசம் பண்ணிக்கொள்ளுகையால்; துன்னும் உயிர்தனை தொடக்கும் - தனக்கெனச் செயலற்று விபுவாய் இருக்கும் ஆன்மாவையே ஆதிசத்தி பிரேரணையால் வாதிக்கும்; அன்றி சடம் அந்தச் சுதந்திரனும் சோதிபால் தொடக்க அறியா - அன்றியும் ஆணவம் சடமாகையால் அந்தச் சுதந்திர ஞானசொரூபியாயிருக்கிற சிவனை வாதிக்கமாட்டாது எ - று. (௬௬)

அ - கை : மேல் சத்திசிவர்களுக்குச் சமவாயம் என்றும், ஆன்மா சிவர்களுக்குத் தாதான்மியம் என்றும், ஆன்மா பாசங்களுக்கு அனுதி சையோகம் என்றும், ஆன்மா பிரபஞ்சத்துக்குச் சையுத்த சமவாயம் என்றும் சம்பந்தம் கூறுகின்றது.

67. சாற்றியிடுஞ் சம்பந்த மானதுதான் பதிக்குஞ்
சத்திக்குஞ் சமவாயம் பதிக்குமுயிர் தனக்கும்
போற்றியிட வேறெனவே பொறுப்பதுமாய்ப் பிரியாப்
புணர்ச்சியினு லேதாதான் மியமாகப் புகலும்
மாற்றியிடச் சிவனருளாற் பசுக்கள்பாற் பாச
மாறுவதா லனுதியாஞ் சையோக மாகும்
மேற்றிகழு முலகுக்கு முயிர்க்குஞ்சம் பந்த
மேவியிடுஞ் சையுத்த சமவாய மெனவே.

இ - ள் : சாற்றியிடும் சம்பந்தமானதுதான் பதிக்கும் சத்திக்கும் சமவாயம் - சொல்லப்பட்ட பதி பசு பாசங்களில் பதியாகிய சிவனுக்கும்

அவருடையசத்திக்கும்சம்பந்தமானது சமவாயம், சமவாயமாவது ஒருகாலும் பிரிவற்றிருக்கையாதலால் சிவத்தைவிட்டுச்சத்தியும் சத்தியைவிட்டுச்சிவமும் இரா ஆகையால் சத்தி சிவரது சம்பந்தம் சமவாயமென்று சொல்லப்படும்; பதிக்கும் உயிர்தனக்கும் போற்றியிட வேறு எனவே பொறுப்பதுமாய்ப் பிரியாப்புணர்ச்சியினாலே தாதான்மியமாகப் புகலும்-ஆன்மாவுக்கும் சிவனுக்கும் சம்பந்தம் இவன் மலத்தோடே கூடினவனும் அவன் நின்மலனுமாகையால் பேதத்தைச் சொல்லப் பொறுப்பதுவுமாய்ப் பிறியாமைக்கூடி இரண்டு ஞான ஸ்வரூபமே ஆகையால் அபேதமாய்த் தாதான்மியமாகச் சொல்லப்படும்;

தாதான்மிய சம்பந்தமாவது சுவரூபம் இரண்டற்று ஒருபாதியால் வேறென்று சொல்வதைப் பொறுக்கும் பொருள்களுடைய கூட்டரவு.

மாற்றியிடச் சிவன் அருளால் பசுக்கள்பால் பாசம் மாறுவதால் அனாதியாம் சையோகம் ஆகும் - இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் வந்தகாலத்தில் ஆசாரிய கடாட்சத்தால் ஆன்மாவைவிட்டுப் பாசங்கள் நீங்குகையால் பாசத்துக்கும் ஆன்மாவுக்கும் அனாதிசையோகம்;

சம்பந்தம் விட்டுநீங்காமலிருக்கிற சமவாய சம்பந்தமானால் ஆன்மாவுக்கு மோட்சமின்றியிலேபோம் ஆகையால் சையோகம் என்னவேண்டும், சையோகமாவது இரண்டு திரவியங்களுக்குக் கூட்டரவு வருவது, முன் சுத்தனாயிருக்கிற ஆன்மாவுக்கு ஒருகாலத்திலே பாசம் கூடினால் மோக்ஷம் அடைந்ததற்குப் பின்னும் வந்து கூடவேண்டும், அப்பொழுது யானை குளித்தது போலாகுமாகையால் அனாதியே கூடியிருக்கிறதென்று சொல்ல வேண்டும்;

மேல் திகழும் உலகுக்கும் உயிர்க்கும் சம்பந்தம் மேவியிடும் சையுத்த சமவாயம் என - மேல் மாயாகாரியம் விளங்கும் பிரபஞ்சத்துக்கும் ஆன்மாவுக்கும் சம்பந்தமானது சையுத்த சமவாயம்; சையுத்த சமவாயமாவது ஆன்மாவினுடன் அனாதியே கூடியிருக்கு மாயையில் இந்தப் பிரபஞ்சம் விட்டு நீங்காமலிருக்கையால் பிரபஞ்சத்துக்கும் ஆன்மாவுக்கும் சையுத்த சமவாய சம்பந்தமெனப் பொருந்தும் எ - று. (சுள)

**அ - கை :** மேல் மாயாகன்மங்கள் சடமாகையாலும் ஆன்மாக்கள் தடைபட்ட ஞானக்கிரியை உடையவர்களாகையினாலும் சிவனே சிருட்டியாதி பஞ்ச கிருத்தியங்களைப் பண்ணுவரென்பது கூறுகின்றது.

68. சடமாக மாயைவினை யிருத்த லானுஞ்
சாற்றுமுயிர் சிற்சத்தி தடையி னாலே
திடமாகச் சுதந்திரமா மறிவுதொழி லின்றாற்
சிவனுடைய சிற்சத்தி கலாதியிவற் றொன்றி

னிடமாக அறிவுதொழில் விளக்கு மாற்ரு
லெவ்வுயிர்க்குந் தனுவாதி யிறைவன்வினைக் கீடாய்க்
கடனுக மாயையிலே முறைபிறழா தாக்கிக்
காத்துமறைத் தழிப்பனிவை கருணை [1]காணே.

இ - ள் : சடமாக மாயை வினை இருத்தலானும் - பிரபஞ்சோபாதான காரணமான மாயையும் துணைக்காரணமான கன்மமும் சடமாயிருக்கையினு லும்; சாற்றும் உயிர் சிற்சத்தி தடையினுலே திடம் ஆகச் சுதந்திரம் ஆம் அறிவு தொழில் இன்ருல் - சொல்லும் ஆன்மாவின் ஞானேச்சாக்கிரியா சத்தி கள் ஆணவத்தால் தடைப்பட்டு அறிய இச்சிக்கப்பண்ணத் தனக்கெனச் சுதந்திரமற்று இருக்கையினுலும், இந்தப் பாரிசேடத்தால்; சிவனுடைய சிற் சத்தி கலா ஆதி இவற்று ஒன்றினிடமாக அறிவு தொழில் விளக்கும் ஆற் ருல் - சிவனுடைய ஞானசத்தியாலே கலாதிகள் இவையிற்றில் பொருந்த அதனுல் ஞானேச்சாக்கிரியைகள் விளங்குமாகையால்; எவ் உயிர்க்கும் இறைவன் வினைக்கு ஈடாய்க் கடனுக மாயையில் தனுவாதி முறை பிறழாது ஆக்கிக் காத்து மறைத்து அழிப்பன் இவை கருணைகாண் - இந்தப் பிரகாரத் தால் சர்வான்மாக்களுக்கும் செகத்கர்த்தாவான ஈசுவரன் கன்மானுகுண மாகத் தமது கடனுக மாயையினின்றும் தனுகரணுதிகளை முறைமைதப்பாமல் உண்டாக்கி இரட்சித்துச் சங்காரம்பண்ணி மறைத்து அனுக்கிரகித்தல் என்னும் பஞ்சகிருத்தியங்களைப் பண்ணுவரென்று அறி எ - று. (சுஅ)

அ - கை : ஆன்மாசிவர்களுடைய ஞானேச்சாக்கிரியைகளுக்குப்பேத முண்டு என்பது கூறுகின்றது.

69. எண்போதி லறிவிச்சை [2]தொழில்களெல்லா
மீசனைப்போ லுயிர்க்குளதே [3]யென்று செப்பில்
கண்போலக் காணுமொளி யுயிர்களறி வாகுங்
கதிர்போலக் காட்டுமொளி கடவுண் ஞானம்
உண்போமென் றிடலுயிர்க ளிச்சை யாகு
மூட்டுவோ முயிர்க்கென்கை யுயரீச னிச்சை
பண்புறவே பலதொழில்கள் பண்ணுமுயிர்க் கிரியை
பண்ணுவிக்கை சிவன்கிரியைப் பரிச தாமே.

இ - ள் : எண்போதில் அறிவு இச்சை தொழில்கள் எல்லாம் ஈசனைப் போல் உயிர்க்கு உளதே என்று செப்பில் - விசாரிக்குங்காலத்தில் ஆன்மா வும் ஞானேச்சாக்கிரியைகளை உடையவன் சிவனும் ஞானேச்சாக்கிரியைகளை உடையவன் ஆதலின் இரண்டுபேரும் சரியோவென்னில், அஃது அப்படி யன்று, பேதமுண்டு; கண்போலக் காணும் ஒளி உயிர்களறிவாகும் கதிர்

---

[1] தானே - பாடபேதம். [2] செயல்க - பாடபேதம். [3] லென்று - பாடபேதம்.

போலக் காட்டும் ஒளி கடவுள்ஞானம் - ஆன்மாவின் அறிவு கண் போலக் காணுந்தன்மை உடையது, சிவனுடைய அறிவு சூரியனைப்போலக் காட்டுந் தன்மை உடையது; உண்போம் என்றிடல் உயிர்கள் இச்சையாகும் உயிர்க்கு ஊட்டுவோம் என்கை உயர் ஈசன் இச்சை - இவனுடைய இச்சை புசிக்கவேண்டுமென்பது, அவனுடைய இச்சை இவனுக்குப் பரிபாகம்வரப் புசிப்பிக்க வேண்டுமென்பது; பண்புற பலதொழில்கள் பண்ணும் உயிர்க் கிரியை பண்ணுவிக்கை சிவன் கிரியைப்பரிசு அது - இவனுடைய தொழில் முறைமையுறப் பலதொழிலும் பண்ணுவது, அவனுடைய தொழில் பண்ணு விப்பது எ - று. (௬௯)

அ - கை: மேல் ஆன்மாக்களுக்கு ஈசுவரன் தன்மை முன்னிலை படர்க்கையால் உணர்த்தும்முறைமை கூறுகின்றது.

70. தன்மைமுன் னிலைபடர்க்கை மூன்றுவிதத் தாலே
சாருமுயிர்க் கறிவிப்ப னிறைவனதிற் றன்மை
தொன்மையவா ஞானத்தைத் தடுத்திடுமா ணவத்தைத்
துரந்தெவையு முள்ளபடி தோற்றுவித்த லுளத்தே
நன்மையுடன் றீமையினை யவரவையா லறிய
நல்குவது முன்னிலையா நரகசொர்க்க மாதி
பன்மையதாம் பரலோக பாவபுண் ணியத்தின்
பலமதனை நூலினு லுணர்த்திடுதல் படர்க்கை.

இ - ள்: இறைவன் தன்மை முன்னிலை படர்க்கை மூன்று விதத்தாலே சாரும் உயிர்க்கு அறிவிப்பன் - இனிச் சிவன் தன்மை முன்னிலை படர்க்கையென்னும் மூன்று விதத்தால் ஆன்மாக்களுக்கு அறிவிப்பன்; அதில் தன்மை - அந்த மூன்றுவகையில் முதற்சொன்ன தன்மையாவது; உளத்தே தொன்மைய ஆம் ஞானத்தைத் தடுத்திடும் ஆணவத்தைத் துரந்து எவையும் உள்ளபடி தோற்றுவித்தல் - இவனிடத்தில் நின்று தானே அநாதியே ஞானத்தைத் தடுத்திருக்கும் ஆணவத்தை நீக்கிப் பெத்தத்தில் விஷயங்களையும் முத்தியில் தன்னையும் அறிவிப்பது; நன்மையுடன் தீமையினை அவர் அவையால் அறிய நல்குவது முன்னிலையாம் - முன்னிலையாவது அவன் அவர் அது முன்னிலையாகப் பெத்தத்திலும் முத்தியிலும் தீமை நன்மைகளை அறிவிக்கிறது; நரக சொர்க்கம் ஆதி பன்மையதாம் பரலோக பாவ புண்ணியத்தின் பலம் அதனை நூலினுல் உணர்த்திடுதல் படர்க்கை - படர்க்கையாவது நரக சுவர்க்க முதலாகிய பரலோகத்தில் பாவ புண்ணியங் களால் வரும் துக்க சுக ரூபமாகிய பலன்களை வேதாகம புராணங்களால் அறிவிப்பது எ - று. (௭௰)

அ - கை: மேல் சிருட்டி வரும்படி பரையாதி பஞ்சசத்திகள் தோற்றமும் தந்தம் தொழிலும் மூன்று விருத்தங்களாற் கூறுகின்றது.

71. இறந்துபிறந் துழலுயிர்க ளிளைப்பாற விறைவ
னிலயஞ்செய் துலகனைத்து மேகனென நின்றே
பிறந்துவினைப் பலம்புசிக்கி லல்லால் முத்தி
பெற்றிடா வுயிர்களுக்குப் பேறளிப்ப மென்றே
சிறந்தவருள் முகிழ்த்ததுவே பராசத்தி மலத்தைச்
செலுத்தல்செய லாதிசத்தி சிருட்டி யாதி
யறந்திகழ வுன்னியதே யிச்சா சத்தி
யனைத்தினையு நோக்கிடுதல் ஞானசத்தி யாமால்.

இ - ள்: இறந்து பிறந்து உழல் உயிர்கள் இளைப்பு ஆற இறைவன் உலகு அனைத்தும் இலயம்செய்து ஏகன் என நின்று - மேல் இப்படிப்பட்ட சிவனுடைய பரை ஆதி இச்சை ஞானம் கிரியை என்னும் பஞ்ச சத்திகளில், ஜனன மரணங்களில் துக்கப்பட்ட ஆன்மாக்கள் இளைப்பாறும்படிக்குச் சகல பிரபஞ்சத்தையும் சங்கரித்து எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டு தான் ஒருத்தனேயாக இருந்து; பிறந்து வினைப்பலம் புசிக்கில் அல்லால் முத்திபெற்றிடா உயிர்களுக்குப் பேறு அளிப்பம் என்று சிறந்த அருள் முகிழ்த்ததுவே பராசத்தி - இப்படி மகாசங்காரத்தைப் பண்ணித் தான் ஒருத்தனுயிருந்த கருத்தா இந்த ஆன்மாக்கள் திரும்பச் செனித்துக் கன்ம பலன்களைப் புசித்தாலொழிய மோட்சம் அடையார், இவர்களுக்கு மோட்சம் கொடுப்போமென்று கிருபை அங்குரித்ததே பராசத்தி; மலத்தைச் செலுத்தல் செயல் ஆதிசத்தி - ஆணவமலத்தை மறைக்கத்தக்கதாகப் பண்ணுவித்துக் கொண்டிருக்கிறது திரோதானசத்தி யென்ற பெயரையுடைய ஆதிசத்தி; சிருட்டி ஆதி அறம் திகழ உன்னியதே இச்சாசத்தி - சிருட்டியாதி தொழிலைப் பண்ணவேண்டும் என்று இச்சித்தது இச்சாசத்தி; அனைத்தினையும் நோக்கிடுதல் ஞானசத்தியாம் - எல்லாவற்றையும் பார்க்கிறது ஞானசத்தி யாம் எ - று. (எக)

72. நினைத்தபடி செய்வதற்குப் பிரவிருத்தி யாக
நிகழ்த்தல்கிரி யாசத்தி நிமலனுக்கிவ் வைந்தும்
தனைப்பிரிவி லாச்சத்தி யொன்றே யைந்தாய்ச்
சாற்றியது கருமபே தத்தினுற் ருனும்
முனைப்பொருவில் பராசத்தி முத்தியுயிர்க் களிக்கு
மூலமலந் தனில்மோக மாதிகுணஞ் சத்தி
அனைத்தினையும் விரித்துயிர்ப்பா லனேகவித மாக
வணைத்தாக்கும் பாகத்தை யாதிசத்தி அருளால்.

இ - ள்: நினைத்தபடி செய்வதற்குப் பிரவிருத்தியாக நிகழ்த்தல் கிரியாசத்தி - நினைத்தபடி செய்யத்தக்கதாகப் பிரவிருத்தியாய் விளங்குகிறது கிரியாசத்தி; நிமலனுக்கு இவ் ஐந்தும் தனைப் பிரிவிலாச் சத்தி ஒன்றே

கருமபேதத்தினுல் ஐந்தாய்ச் சாற்றியது தானும் - நின்மலனுயிருக்கிற சிவ னுக்கு இந்தப் பஞ்சசத்திகளும் அக்கினிக்கு உட்டணம்போலப் பிரிவற்றிருக் கிற ஒரு சத்திதானே தொழிற்பேதத்தால் ஐந்து பேதமாகச் சொல்லப்பட்ட தாம்; இனி இவ்வைந்து சத்திகளுக்கும் தொழில் சொல்லுமிடத்து;

முனைப்பொருவு இல் பராசத்தி முத்தி உயிர்க்கு அளிக்கும் - பரம சிவத்தில் ஆயிரத்தில் ஒரு கூறுயுண்டாகிய பராசத்தி ஆன்மாக்களுக்கு அனுக்கிரகத்தைப்பண்ணும்; மூலமலந்தனில் மோகம் ஆதி குணம் சத்தி அனைத்தினையும் விரித்து உயிர்ப்பால் அனேகவிதமாக அணைத்துப் பாகத்தை அருளால் ஆக்கும் ஆதிசத்தி - ஆன்மாக்களுக்கு அனுக்கிரகத்தைப் பண் ணும் அந்தப் பராசத்தியில் நின்றும் ஆயிரத்தில் ஒரு கூருக ஆதிசத்தி உண் டாய் ஆணவகுணமாகிய மோகாதிகளையும் அவற்றின் சத்தி அனைத்தையும் விரித்து ஆன்மாவினிடத்து அநேகவிதமாகப் பந்திப்பித்து மலபரிபாகத் தைக் கிருபையால் பண்ணும் ஆதிசத்தி எ - று. (எஉ)

73. உலகனைத்து மாக்கியளித் தொழிப்ப தாக
வுன்னல்செயு முயரிச்சா சத்தி தான்மேல்
இலகுபுகழ் விஞ்ஞான கலர்மலபா கத்துக்
கேற்றவுரு வாதியா மீரிரண்டா மவையும்
அலகில்வினை புரிசகலர் பிரளயா கலர்கட்
கவ்வினைக ளதற்கேற்ற வாக்கை யாதி
நிலவுவகை யுங்காணு ஞான சத்தி
நிச்சயித்த படிசெய்யுங் கிரியை நேரே.

இ - ள்: உலகனைத்தும் ஆக்கி அளித்து ஒழிப்பதாக உன்னல் செயும் உயர் இச்சா சத்திதான் - அந்தச் சத்தியின் ஆயிரத்தில் ஒரு கூருக இச்சாசத்தி உண்டாகிச் சகல பிரபஞ்சத்தையும் சிருட்டி திதி சங்காரம் பண் ணத்தக்கதாக விசாரத்தைப் பண்ணும் இச்சாசத்தி; மேல் இலகுபுகழ் விஞ் ஞானகலர் மலபரிபாகத்துக்கு ஏற்ற உரு ஆதியா ஈர் இரண்டாம் அவையும் அலகில் வினைபுரி சகலர் பிரளயாகலர்கள் அவ்வினைகள் அதற்கு ஏற்ற ஆக்கை ஆதி நிலவுவகையும் காணும் ஞானசத்தி - மேல் இச்சாசத்தியின் ஆயிரத்தில் ஒருகூருக ஞானசத்தி உண்டாய் விந்து மோகினி மான் என் னும் உபாதானத் திரயங்களில் நின்று மூவகை ஆன்மாக்களுள் புகழைப் பொருந்திய விஞ்ஞானகலர்க்கு மலபரிபாகத்துக்கு ஈடாகத் தனு கரண புவன போகங்களையும், கன்மங்களைப்பண்ணும் பிரளயாகலர் சகலர்க்குக் கன்மத்துக்கு ஈடாகத் தனுகரணுதிகளையும் உண்டாக்கத் தக்கதாக அறியும் ஞானசத்தி; நிச்சயித்தபடி செய்யும் கிரியை நேரே - ஞானசத்தியின் ஆயி ரத்திலொருகூருகக் கிரியாசத்தி உண்டாகி இதற்கு இது உபாதானமென்று இந்தப் பிரகாரத்தில் அறிந்தபடி தேகாதிகளை உண்டாக்கும் கிரியாசத்தி எ - று.

இவ்வாறு சிவனே அபின்ன நிமித்த உபாதானமாகப் பஞ்சசத்திகளையும் தோற்றுவிப்பர். சிவத்தில் ஆயிரத்திலொன்று பராசத்தி என்றும், பராசத்தியில் ஆயிரத்திலொன்று ஆதிசத்தி என்றும், நின்ற இந்தச் சத்திகளும் அந்த அந்தச் சத்திகளில் ஆயிரத்தில் ஒரு கூறாக ஒன்றிலொன்று உற்பவிக்கும் என்றும் சொல்லுகையால் அக்கூறு உடைத்தாகை பரிச்சின்ன வத்துவுக்கன்றி இல்லையாகையால் அச்சிவமும் பரிச்சின்னவத்துவாம், பரிச்சின்னவத்துவெல்லாம் சடமும் நாசவத்துவுமாம் என்னில், அப்படியல்ல கால தேசவத்துக்களினால் பரிச்சின்னமாய் அதினால் அனுக்கிரக திரோதான சங்கார திதி சிருட்டி என்னும் கிருத்திய தாரதம்மியத்தால் அந்தக் கிருத்தியங்களைப் பண்ணும் சத்திகளையும் தாரதம்மியமாகச் சொன்னது. (எங)

அ - கை: மேல் 'சத்தியின்றன் பேதத்தால்' என்னும் விருத்தந் தொடங்கிப் பத்து விருத்தங்களால் சத்தியினிலக்கணமும் அவர் செய்யும் கிருத்தியமும் கூறுகின்றது.

74. சத்தியின்றன் பேதத்தாற் சிவனு மங்ஙன்
சத்தனோ டுத்தியுத்தன் றானாகி மேலும்
புத்திமுத்தி யுதவுபிர விருத்த னென்றும்
பொருந்தியிடு மிலயமொடு போகமதி காரம்
இத்தகைய மூவரிலே சத்தரரு வாகி
யெழின்ஞான மேவடிவா யிச்சைதொழி லிசைந்து
சுத்தமாங் காலாதி தோற்றுமுன மிலயத்
தொலைவதனிற் புரிவரருட் சூக்குமவைந் தொழிலே.

இ - ள்: சத்தியின்றன் பேதத்தால் சிவனும் - இங்ஙனம் கூறிய பரையாதி பஞ்சசத்திகளுடைய பேதத்தால் சிவனும்; அங்ஙன் சத்தனோடு உத்தியுத்தன்றானாகி மேலும் புத்தி முத்தி உதவு பிரவிருத்தன் என்றும் - அவ்விடத்தில் சத்தர்என்றும் உத்தியுத்தர்என்றும் தாமேயாகி மேலும் ஆன்மாக்களுக்குப் போக மோட்சங்களைக் கொடுக்கும் பிரவிருத்தரென்றும் மூன்று பேதத்தை உடையவர்; பொருந்தியிடும் இலயமொடு போகம் அதிகாரம் - சத்தர்க்கு லயரென்றும் சாந்தரென்றும், உத்தியுத்தர்க்குப் போகரென்றும் சதாசிவரென்றும், பிரவிருத்தர்க்கு அதிகாரரென்றும் ஈசுவரரென்றும் பெயர்கள் பொருந்தியிடும்; இத்தகைய மூவரில் சத்தர் அரு ஆகி - இந்தப் பிரகாரத்தில் சத்தர் உத்தியுத்தர் பிரவிருத்தர் என்னும் மூன்று கர்த்தாக்களில் உத்தியோகிப்பது செய்வது அற்றிருக்கிற சத்திகளை உடையராகையால் சத்தரென்னும் பெயரையுடைய கர்த்தா நிட்களராகித் தூல சூக்கும சூனிய ரூபமொன்றும் அற்றவராகி; எழில் ஞானமே வடிவு ஆய் - பரையாதி பஞ்ச சத்திகளுள் உயர்ந்த ஞானசத்தியே திருமேனியாய்; இச்சை தொழில் இசைந்து - உத்தியோகம்பண்ணுதல் அற்றிருக்கிற இச்சா ஞானக்கிரியைகளை உடையவராய்க்கொண்டு; இலயத்தொலைவு அதனில் சுத்தம் ஆம் காலாதி தோற்றுமுனம் அருள் சூக்கும ஐந்தொழில்புரிவர்-மகாசங்காரத்தின்

முடிவில் சுத்த மாயா காரியமான சுத்த காலாதி தத்துவம் தோற்றுவதற்கு முன் கிருபையால் சூக்கும பஞ்சகிருத்தியம் பண்ணுவர் எ - று. (எச)

அ - கை: மேல் தாம் பண்ணும் சூக்கும பஞ்சகிருத்தியம் கூறுகின்றது.

75. பக்குவான் மாக்களுக்குப் பரமுத்தி யருளிப்
பருவமிலார் தமைமறைத்துப் பலவுயிர்செய் வினையால்
தொக்குளது பருவமுறச் செய்து மாயா
தூலசூக் குமசத்தி தோன்றும்வகை நோக்கி
மிக்கதோர் விந்துவினிற் றமதுதொழிற் சத்தி
மேவியதைக் கலங்கல்செய்து வேறறநின் றேதான்
அக்கரங்க ணாதாதி யனைத்தினையுண் டாக்கு
மடைவுதனை யாகமத்தே யறிந்தபடி யறைவாம்.

இ - ள்: பக்குவ ஆன்மாக்களுக்குப் பரமுத்தி அருளி - விஞ்ஞான கலரில் மலபரிபாகத்தையுடைய ஆன்மாக்களை அனுக்கிரகித்துப் பரமோட்சத்தைக் கொடுத்தும்; பருவம் இலார் தமை மறைத்து - பக்குவமில்லாதவர்களை மறைத்தும்; பல உயிர் செய் வினையால் தொக்குளது பருவம் உறச் செய்து - சருவ ஆன்மாக்கள் பண்ணின கன்மங்களைத் தேகாதி சுக துக்க ஏதுவாகப் பரிபாகம் பண்ணி; மாயா தூல சூக்கும சத்தி தோன்றும் வகை நோக்கி - தூல சூக்குமமாகிய மாயாசத்திகளைப் புவனுதாரமாகவும் ஆன்ம ஞானக்கிரியைகளை விளக்குகிறதாகவும் மாயையினின்றும் விளங்க யோக்கியங்களாகப் பண்ணுநின்று சுத்தாசுத்தப் பிரபஞ்ச வத்துக்களை எது எது எவ்வாறிருக்கவேண்டுமோ அது அது அவ்வாறிருக்கும்படி திருவுளத்தடைத்து; மிக்கது தமது தொழிற்சத்தி ஓர் விந்துவினில் மேவி அதைக் கலங்கல் செய்து வேறு அற நின்று தான் அக்கரங்கள் நாதாதி அனைத்தினை உண்டாக்கும் அடைவுதனை - மிகுந்த தம்முடைய கிரியாசத்தி பிரபஞ்ச சிருட்டிக்குக் காரணமாயிருக்கிற விந்துவை அதிட்டித்துநின்று அந்த விந்துவைக் காரியோன்முகமாகப் பண்ணித் தாம் வேறற நின்று அட்சரான்மாவாயிருக்கிற சத்தப் பிரபஞ்சத்தையும் நாததத்துவம் முதலான அந்தப் பிரபஞ்சங்கள் எல்லாவற்றையும் உண்டாக்கும் கிரமங்களை; ஆகமத்தே அறிந்தபடி அறைவாம் - சிவாகமங்களிலே நாம் அறிந்தபடி சொல்லுவாம் எ - று. (எரு)

அ - கை: மேல் சத்தருடைய சமவாய சத்தி பிரபஞ்சத்துக்கு யோனியென்றும், விந்து உபாதானமென்றும், சிவன் நிமித்தமென்றும் கூறுகின்றது.

76. சத்தருடைச் சமவாய சத்திதான் விந்துத்
தனையடைந்து கலங்கல்செய்து தானிற்கும் போதில்
அத்தகைய சிற்சத்தி யோக மாயை
யாம்பெயரும் புனைந்தவைக்கு மாகியிடும் யோனி

நித்தனுந்தான் சொற்பொருள்க ளுதிப்பிக்கு மாறு
நிமித்தனு குவன்விந்து நேருமுபா தானம்
இத்தகையாற் சுத்தமா யையினுத விந்து
விசைவதனைச் சிவன்சத்தி யிருவரதிட் டிப்பார்.

இ - ள்: சத்தருடைச் சமவாய சத்திதான் விந்துத்தனை அடைந்து கலங்கல்செய்து தான் நிற்கும்போதில் - சத்தருடைய சமவாய சத்தியானது சுத்தமாயையை அதிட்டித்துக் காரியோன்முகம் பண்ணித் தான் நிற்கும் பொழுதிலே; அத்தகைய சிற்சத்தி யோக மாயையாம் பெயரும் புனைந்து எவைக்கும் ஆகியிடும் யோனி - அந்த விந்துவை அதிட்டித்து நிற்கிற சிற்சத்தியானது யோகமாயை என்கிற பெயரையும் பொருந்தி எல்லாப் பிரபஞ்சத்துக்கும் யோனியாகும்படியும் நிற்கும்; நித்தனும் தான் சொல் பொருள்கள் உதிப்பிக்குமாறு நிமித்தனுகுவன் விந்து நேரும் உபாதானம் - நித்தியனுயிருக்கிற சிவன் தானும் சத்தார்த்தப் பிரபஞ்சங்களை உண்டாக்கும் பொழுது நிமித்தகாரணம் ஆகுவன், சுத்தமாயையும் உபாதானமாகப் பொருந்தும்; இத்தகையால் சுத்தமாயையில் நாதம் விந்து இசைவதனைச் சிவன் சத்தி இருவர் அதிட்டிப்பார் - இந்த முறைமையினுலே சுத்தமாயையி லுண்டான நாத விந்துக்களைச் சிவன் சத்தி என்னும் இருவரும் பிரேரிப் பார்கள் எ - று. (எசு)

அ - கை: மேல் சத்தப் பிரபஞ்சத்துக்கும் காரணமாயிருக்கிற அம்பிகாதி சத்தி உதிக்கும்முறை கூறுகின்றது.

77. விந்துவதோ பாகத்தே யம்பிகைதன் னுதயம்
விளங்குமவர் பால்வாமை சேட்டைரவுத் திரிதான்
தந்திடுமேற் சயையாதி நாலு சத்தி
தருநிவிர்த்தி சத்திமுத லீராறு தனையும்
இந்தவகை சயையாதி யீரெட்டாஞ் சத்தி
யெவற்றினையும் வியாபிக்கு மிவராலாம் வன்னம்
முந்தவுதித் திடுநாதம் விஞ்ஞான வொளியாய்
மொழியெவைக்கு முதலாகிச் சூக்குமையா முன்னில்.

இ - ள்: விந்து அதோபாகத்தே அம்பிகை தன் உதயம் விளங்கும் அவர்பால் வாமை சேட்டை ரவுத்திரிதான் - சுத்தமாயாதோபாகத்தே அம் பிகா சத்தியானது தான் உதிக்கும், அந்த அம்பிகா சத்தியினிடத்திலே வாமை சேட்டை ரவுத்திரி என்னும் சத்திகள் பிரகாசிக்கும்; தந்திடும் மேல் சயை ஆதி நாலு சத்தி தரும் நிவிர்த்தி சத்திமுதல் ஈராறுதனையும் - மேலும் சயை விசயை அசிதை பராசிதை என்னும் நாலுசத்திகளும், உதியாநின்ற நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, வியோமருபை, அனந்தை, அனுதை, அனுசிருதை என்னும் சத்திகளும் ஆகப் பதினுறு சத்திகளும் உண்டாகியிடும்; இந்த வகை சயை

ஆதி ஈரெட்டாம் சத்தி எவற்றினையும் வியாபிக்கும் இவரால் ஆம் வன்னம் - இந்த முறையையுடைய சயை யென்னும் சத்தி முதலாயிருக்கிற பதினாறு சத்திகளும் எல்லாப் பிரபஞ்சத்தையும் வியாபிக்கும், அகாராதியாயிருக்கிற அட்சரங்களும் இந்தச் சத்திகளாலுண்டாகும்; முந்த உதித்திடும் நாதம் விஞ்ஞான ஒளியாய் மொழி எவைக்கும் முதலாகிச் சூக்குமையாம் முன்னில் - இன்னமும் விசாரிக்குமிடத்தில் சிருட்டியில் முந்த உதிக்கப்பட்ட நாத மானது விஞ்ஞானப் பிரகாசமாய்ப் பைசந்தியாதி வாக்குக்களுக்குக் காரண மாகிச் சூக்குமை என்னும் பெயரையுடையதாம் எ - று. (எஎ)

அ - கை : மேல் பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்குக்கள் உதிக்கும் முறைமை கூறுகின்றது.

78. சூக்குமமே பைசந்தி யெனவிருத்தி யாகுஞ்
சொல்லிலது விந்துவாந் தொனியாகி மேலே
ஆக்கியிடும் பலவன்ன மயிலண்ட நீர்தா
னவையெவையுந் தோன்றுதோர் நிறமேயா மதுபோல்
நீக்கமிலா வன்னங்க ளனைத்தினையு மடக்கி
நிற்குமணி யோசைபோல் மேலிதனி னிகழும்
வாக்கதுதான் மத்திமையாம் வன்னங்கள் வேறாய்
வருமவைகள் வருமாறும் வகுத்துரைப்பா மதியே.

இ - ள் : சூக்குமமே பைசந்தி என விருத்தி ஆகும் - முன்சொன்ன சூக்கும வாக்குத்தானே பைசந்தி என்னும் வாக்கு விருத்தி ரூபமாம்; சொல்லில் அது விந்து ஆம் - அந்தப் பைசந்தியைச்சொல்லுமிடத்து விந்து என்னவும் ஆம்; தொனி ஆகி மேலே ஆக்கியிடும் பல வன்னம் மயில் அண்டம் நீர்தான் அவை எவையும் தோன்றுது ஓர் நிறமேயாம் அதுபோல் - உண்டாகியிடும் பலவிதமாயிருக்கிற வன்னங்களையுடைய மயில் முட்டை நீரானது அந்த வர்ணங்களெல்லாவற்றையும் தோற்றுவியாமல் ஒருநிறமே யாமதுபோல மேல் தொனிரூபமாகி; நீக்கம் இலா வன்னங்கள் அனைத்தி னையும் அடக்கி நிற்கும் மணி ஓசைபோல் - பிரிக்கப்படாமல் வசனிக்கப் பெற்ற அக்ஷரங்களெல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு மணியோசை போலப் பைசந்திவாக்கானது நிற்கும்;

மேல் இதனில் நிகழும் வாக்கது தான் மத்திமையாம் வன்னங்கள் வேறாய் வரும் அவைகள் வருமாறும் வகுத்துரைப்பாம் மதி - மேல் இந்தப் பைசந்திவாக்கிலே விளங்காநிற்கிற வாக்கானது தான் மத்திமை என்னும் பெயராய் அக்ஷரங்கள் வெவ்வேறாய்வரும், அவைகள் வருமாறு பகுத்துச் சொல்லுவாம் விசாரித்தறி எ - று. (எஅ)

அ - கை : மேலும் அதற்கோர் புறனடை.

79. அகரமுத லேவாமை சேட்டைரவுத் திரியை
யாகமாய்க் கொண்டுதிக்கு மதைப்பிரம மெனவும்
பகருவர் வேதாதிக் குபாதான மான
பரிசதனல் விரிந்துமேற் பதினை ந் தாகிக்
ககரமுதன் முப்பதுமோ ரைந்து மாகிக்
காண்பதுவா மீரெட்டுச் சத்திகளாற் கருதில்
தகவதுவே மத்திமையாஞ் சத்தமுட னத்தந்
தான்விளங்கச் சாற்றிடுதல் வைகரியாந் தானே.

இ - ள்: அகரம் முதலே வாமை சேட்டை ரவுத்திரியை ஆகமாய்க் கொண்டு உதிக்கும் அதைப் பிரமம் எனவும் பகருவர் - முந்தி அகாராட்சர மானது வாமை நித்திரைபண்ணுகிற சர்ப்பம் போலக் குண்டலாகாரையா யிருக்கும், சேட்டை தண்டாகாரையாயிருக்கும், ரவுத்திரி இரண்டு கலைக் கொம்பு போலவும் கேகயமாய்க்கொண்டு? உண்டாம், அந்த அகாராட் சரத்தைப் பிரமமென்றும் சொல்லுவர்; வேதாதிக்கு உபாதானமான பரிசு அதனல் விரிந்து மேல் பதினைந்தாகிக் ககரமுதல் முப்பதும் ஓர் ஐந்தும் ஆகிக் காண்பதுவாம் ஈர் எட்டுச் சத்திகளால் கருதில் தகவு அதுவே மத்திமையாம் - அந்த அகாராட்சரமானது வேதாகமங்களுக்கு உபாதான காரணமான சுபாவத்தினலே விரிந்து உயிரெழுத்தென்று ஆகாராதியாகப் பதினைந்தாகவும் ககாராதியாக முப்பத்தைந்தாகவும் இப்படி முன்சொல்லப் பட்ட சயையாதி பதினறு சத்திகளாற் காண்கின்ற தன்மையாயிருக்கின்ற அந்த முறைமையையுடைய மத்திமைவாக்காம்; சத்தமுடன் அத்தந்தான் விளங்கச் சாற்றிடுதல் வைகரியாம் - சத்தத்துடன் அத்தமானது விளங்கப் பிறர்செவிக்குக் கேட்கச் சொல்லுதல் வைகரிவாக்காம் எ - று. (எகூ)

அ - கை: மேல் அகாராதி அக்ஷரங்களுக்குத் தேவதைகள் கூறு கின்றது.

80. ஏற்றியிடு மீரெட்டா யகாராதி யுயிரை
யீறில்சிவ னதிட்டிப்ப னிவ்வுயிர்கட் குடலாய்ப்
போற்றியிடுங் ககாராதி முப்பத் தைந்தைப்
பொருந்தியதிட் டித்திடுவர் சத்தியிவர் புணரத்
தோற்றியிடும் வாக்காதி யனைத்து மாமாற்
றாயோன்பேர் வாகீச ரென்று சொல்வர்
சாற்றிடுவா கீசுரியாம் பேரு மந்தச்
சத்திக்கா மைங்கலைக டனிலுமுள தானே.

இ - ள்: ஏற்றியிடும் ஈரெட்டாய் அகாராதி உயிரை ஈறில் சிவன் அதிட்டிப்பன் - பதினறுகச் சொல்லப்பட்ட அகாராதி உயிரெழுத்தை நித்திய மாயிருக்கிற சிவன் அதிட்டிப்பன்; இ உயிர்கட்கு உடலாய்ப் போற்றியிடும்

ககாராதி முப்பத்தைந்தைப் பொருந்தி சத்தி அதிட்டித்திடுவர் - இந்த உயிரெழுத்துக்கு உடலாகச் சொல்லப்பட்ட ககாராதி முப்பத்தைந்தைச் சத்தியானவர் பொருந்தி அதிட்டித்திடுவர்; இவர் புணரத் தோற்றியிடும் வாக்காதி அனைத்தும் ஆமால் தூயோன் பேர் வாகீசர் என்று சொல்வர் சாற்றிடு வாகீசுரியாம் பேரும் அந்தச் சத்திக்கு ஆம் - இந்தச் சத்திசிவர்கள் அதிட்டிக்கச் சூக்குமைவாக்கு முதலான சகல பிரபஞ்சமும் உண்டாகும், ஆகையால் நின்மலராயிருக்கிற சிவனுக்குப் பேர் வாகீசரென்று பெரியோர்கள் சொல்லுவார்கள், வாகீசுவரி என்று சொல்லப்படாநின்ற பெயரும் அந்த வாகீசுவரனென்று சொல்லப்பட்ட சிவனுடைய சத்திக்காம்; ஐங்கலைகள் தனிலும் உள - இந்த வாக்குகள் நிவிர்த்தியாதி பஞ்சகலைகளிலுண்டாயிருக்கின்றவைகள் எ - று.

வாக்குக்களைச் சிவசத்தி அதிட்டித்து நிற்கையால் உயர்திணையாகச் சொன்னது என அறிக. (அ௰)

**அ - கை :** மேல் இந்த வாக்குக்கள் ஆன்மாக்களைப் பந்தித்துநின்று நீங்கும் முறை கூறுகின்றது.

81. உரைசெய்த வாக்குகடா நாலுநிவிர்த் தாதி
யோரைந்து கலைகளுள வுயிர்கடமக் குணர்வாய்த்
திரையுந்தண் கடலதுவாம் போலுளத்தே யுதித்துச்
சித்தாதி யிற்றிகழ்தல் செய்யுமிது பந்தம்
கரையின்றி விளங்குசிவ ஞானமுயிர்ப் பேருங்
காலமுறி லாணவத்தின் களிம்புடனே தானும்
பரையின்றன் பேரறிவா மொளியதனு னீங்கும்
பரிதிமுன ருடுவொளியு மிருளுமறும் பரிசே.

**இ - ள் :** உரைசெய்த வாக்குகள் தாம் நாலும் நிவிர்த்தாதி ஓர் ஐந்து கலைகள் உள - சொல்லப்பட்ட இந்த வாக்குகள் நாலும் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்சகலைகளினும் தூலதரம், தூலம், மத்திமை, பைசந்தி, சூக்குமை என்னும் ஐந்து உண்டாகி நிற்கும்; உயிர்கள் தமக்கு உணர்வாய்த் திரையும் தண் கடலதுவும் போல் உளத்து உதித்துச் சித்தாதியில் திகழ்தல் செய்யும் இது பந்தம் - ஆன்மாக்களுக்கு அறிவுருபமாய்க் கருமை பொருந்திய கடலில் திரையுண்டானது போல விருத்திஞானம் விளங்குகிறதற்கு இடமாகிச் சித்தம் முதலான தத்துவங்களில் விளங்குதல் செய்யும் இந்த வாக்கானது பிரதமபந்தம் என நிற்கும்; கரையின்றி விளங்கு சிவஞானம் உயிர்ப்பேரும் காலம் உறில் ஆணவத்தின் களிம்புடனே தானும் பரையின்தன் பேரறிவாம் ஒளியதனுல் நீங்கும் - மட்டில்லாமல் விளங்காநின்ற சிவஞானத்தை ஆன்மாப் பெறுங் காலம் பொருந்தினபொழுது ஆணவபந்தத்துடனே இந்த வாக்குத்தானும்

பராசத்தி உண்டாகாநின்ற சிவனுடைய வியாபகமாயிருக்கிற ஞானத்தி னலே நீங்கும்; பிரகாசத்தினலே அந்தகாரம் நீங்கும், பிரகாச ரூபமாய் இருக்கிற வாக்கானது பிரகாசத்தினலே எப்படி நீங்குமெனில்; பரிதி முனர் உடு ஒளியும் இருளும் அறும் பரிசு - சூரியன்சன்னிதானத்திலே நட்சத்திரப் பிரகாசமும் அந்தகாரமும் நீங்குகின்றமை சுவபாவம் அத்தன்மைபோல் என்றவாறு. (அக)

அ - கை : மேல் சுத்த தத்துவங்களுடைய உற்பத்திக்கிரமம் கூறு கின்றது.

82. சிவன்சத்தி நாதவிந்துத் தனையதிட்டித் திடவே
சேருமதன் பெயர்தமக்குந் தம்பெயரு மதற்காய்ப்
பவன்சுத்த காலமுட னியதிகலை யாதி
பலவாக்கிப் புவனங்கள் பதினைந் தாக்கித்
தவம்பெற்றுச் சிவசமனு மபர முத்தி
தனையடைவோர்க் கவ்விடத்திற் றனுவாதி யாக்கி
யவம்பற்றி லணுசதா சிவர்களுறை வாக
வாக்குவர்சா தாக்கியத்தை விந்துவினி லருளால்.

இ - ள் : சிவன் சத்தி நாதம் விந்துதனை அதிட்டித்திட - சிவனுடைய சத்தியானது நாத விந்துக்களைப் பிரேரித்திடவே; சேரும் அதன் பெயர் தமக்கும் தம் பெயரும் அதற்காய் - அந்த நாத விந்துக்களின் பெயர் சிவ னுக்கும் சத்திக்கும் பேராய்த் தம்முடைய பெயராயிருக்கிற சிவன் சத்தி என் னும் பெயர் நாத விந்துக்களுக்காகி; பவன் அருளால் விந்துவினில் சுத்த காலமுடன் நியதி கலை ஆதி பல ஆக்கிப் புவனங்கள் பதினைந்து ஆக்கி - ஆன்மாக்களுக்குத் தனு கரணதிகளை உண்டாக்குகையால் பவனென்னும் நாமத்தையுடைய சிவன் கிருபையினலே சுத்தமாயையிலே சுத்தகால தத்து வத்துடனே நியதி கலை முதலான தத்துவங்களையும் தாத்துவிக ரூபமாயிருக் கிற திவ்ய ஸ்திரீ திவ்யபோகம் முதலானவற்றையுமுண்டாக்கிப் பதினைந்து புவனங்களையும் உண்டாக்கி; தவம் பெற்றுச் சிவசமனும் அபரமுத்திதனை அடைவோர்க்கு அவ்விடத்தில் தனு ஆதி ஆக்கி - தவத்தைப்பண்ணிச் சிவ னைப்போல அபரமுத்தித்தானமாகிய சிவதத்துவம் சத்திதத்துவங்களிலே யிருக்கிற ஆன்மாக்களுக்கு அந்தத் தத்துவங்களில் தனுகரணதிகளை உண் டாக்கி; அவம் பற்று இல் அணுசதாசிவர்கள் உறைவு ஆக ஆக்குவர் சாதாக் கியத்தை - துக்கமில்லாத அணுசதாசிவர்கள் என்னும் ஆன்மாக்களுக்கு இருக்குமிடமாகச் சாதாக்கிய தத்துவத்தை உண்டாக்குவர் எ - று. (அஉ)

அ - கை : மேல் சிவன் சடத்துவ வியாபியாய் நிற்பரென்பது கூறு கின்றது.

83. இந்தவகை தத்துவங்க ளனைத்தினிலுஞ் சிவன்று
னிசைந்தந்தத் தொழில்களெலாஞ் சத்தியா லியற்றும்
அந்தவகை யாலதன்பேர் சத்திக் காக
வப்பெயருந் தனக்காக வடைவன்றன் னருளால்
சுந்தரமாஞ் சத்தியோர் தத்துவத்தே யதிகத்
தோற்றரவாற் சத்தியென்றே சொல்வர்சிவன் றானும்
மந்திரங்கள் பதங்களுடன் வன்னபுவ னாதி
மற்றெவற்றும் பிரிவறவே மருவிநிற்பன் றானே.

இ - ள் : இந்த வகை தத்துவங்கள் அனைத்தினிலும் சிவன்றான் இசைந்து அந்தத் தொழில்கள் எலாம் சத்தியால் இயற்றும் - சிவனானவர் இப்படிச் சொல்லப்பட்ட தத்துவங்களெல்லாவற்றினையும் பொருந்தி அந் தந்தத் தத்துவங்களுடைய கிருத்தியங்கள் எல்லாவற்றினையும் சத்தியினாற் பண்ணுவர்; அந்த வகையால் அதன் பேர் சத்திக்கு ஆக அ பெயரும் தனக்கு ஆக அடைவன் தன் அருளால் - அந்தச் சத்தித் துவாரா பண் ணுகையால் அந்தத் தத்துவங்களுடைய பெயர் சத்திக்காகவும் அந்தச் சத்தி யினுடைய பெயர் சத்திமானாகிய தமக்காகவும் கிருபையினாலே பெறுவர்; இங்ஙனம் தத்துவங்களினுடைய பெயர் சத்திக்கும் சத்தியினுடைய பெயர் சிவனுக்கும் சொல்லப்பட்டது, இந்த அருத்தத்தால் சிவதத்துவங்களுக்கும் சத்திதானே தேவதையாகச் சொல்லுவானேனென்னில்; சுந்தரம் ஆம் சத்தி ஓர் தத்துவத்தே அதிகம் தோற்றரவால் சத்தியென்றே சொல்வர் - மனோகர மாயிருக்கிற சிவசத்தியானது ஒவ்வொரு தத்துவங்களிலே ஆதிக்கமாக விளங்குகையால் அந்தத் தத்துவங்களுக்கும் சத்திதானே தேவதையென்று அறிவுடையோர் சொல்லுவார்கள், ஆகில் சிவனுக்கு ஆதிக்கமில்லையோ வெனில் ; சிவன் தானும் மந்திரங்கள் பதங்களுடன் வன்ன புவனாதி மற்று எவற்றும் பிரிவு அற மருவி நிற்பன் - சிவனும் மந்திர பத வன்ன புவன தத்துவம் கலையென்னும் எல்லாப் பிரபஞ்சத்திலும் நீங்காமல் பொருந்தி நிற்பன் எ - று. (அ௩)

அ - கை : மேல் சதாசிவத்துக்கு நாயகராகக் கன்மசாதாக்கியர் உற்பத்தி கூறுகின்றது.

84. பஞ்சசத்தி விந்துவினிற் பதியுங் காலைப்
பரிதியொளி காந்தத்தே பதிந்த போழ்தில்
விஞ்சுசுட ருதித்ததுபோற் கலாசத்தி யைந்தை
வேறறவே யீசானி யாதி யைந்தாம்
எஞ்சலிலாப் பஞ்சமந் திரசத்தி யுதிக்கு
மிவைதனுவாக் கருமசா தாக்கியந்தா மிசைந்தே
தஞ்சமா யனைத்துயிர்க்குங் கருணை செய்யச்
சதாசிவதத் துவத்திறையாய்த் தரிப்பர் தாமே.

இ - ள் : பஞ்ச சத்தி விந்துவினில் பதியுங்காலை - பரையாதி பஞ்ச சத்திகள் சுத்தமாயையை அதிட்டித்தபொழுது; பரிதி ஒளி காந்தத்து பதிந்த போழ்தில் விஞ்சு சுடர் உதித்ததுபோல் - சூரியகாந்தத்திலே சூரிய கிரணமானது பதிந்தபொழுது மிகுந்த அக்கினி உண்டாவதுபோல; கலா சத்தி ஐந்தை வேறு அறவே ஈசானியாதி ஐந்தாம் எஞ்சல் இலாப் பஞ்ச மந்திர சத்தி உதிக்கும் - சாந்தியதீதாதியாயிருக்கிற கலாசத்தி ஐந்தையும் பின்னமறவே ஈசானியாதியாயிருக்கிற ஐந்து சத்திகள் சுவரூபமாய்க் குறை வில்லாத ஐந்து மந்திர சத்திகள் உதிக்கும்; இவை தனுவாக் கரும சாதாக் கியர் தாம் இயைந்து தஞ்சமாய் அனைத்து உயிர்க்கும் கருணை செய்யச் சதாசிவதத்துவத்திறையாய்த் தரிப்பர் - இந்தப் பஞ்சமந்திர சத்திகளைத் திருமேனியாகக் கன்மசாதாக்கியராகப்பொருந்தி எல்லா ஆன்மாக்களுக்கும் தம்மைச் சரணமாக அடையக் கிருபைபண்ணிச் சதாசிவ தத்துவத்துக்கு நாயகராகிப் பொருந்துவர் எ - று. (அச)

அ - கை : மேல் சதாசிவர் ரூபாரூபமாய் நிற்கும் முறைமை கூறு கின்றது.

85. உருவுளதாம் விந்துவிலே யுருவ தில்லா
உயர்சத்தி யோரைந்து முற்றுண் டாக்க
வருவதனுல் மந்திரங்க ளருவா ரூவாய்
மதித்திடுவ ரவைதனுவா மன்ன லாலே
திருமருவு சதாசிவர்தா முருவா ரூபஞ்
சிவனவரை வேறறவே திகழ்ந்து நின்று
பொருவிலருள் புரிந்திடுவ ருத்தி யுத்தர்
போகத்த ரெனும்பெயரும் பொருந்தி நின்றே.

இ - ள் : உரு உளதாம் விந்துவிலே உருவது இல்லா உயர் சத்தி ஓரைந்தும் உற்று உண்டாக்க - உருவங்களையுண்டாக்காநின்ற சுத்தமாயை யிலே அரூபமாயிருக்கிற வளர்ச்சியையுடைய பரையாதி பஞ்ச சத்திகளும் பொருந்தி உண்டாக்க; வருவதனுல் மந்திரங்கள் அருவாரூவாய் மதித்திடு வர் - இப்படிப் பஞ்ச மந்திரங்கள் வருதலால் அதை ரூபாரூபமாக விசாரித் திடுவர்; அவை தனுவா மன்னலாலே திருமருவு சதாசிவர் தாம் உருவா ரூபம் - அந்த மந்திரங்களைத் திருமேனியாகப் பொருந்துதலாலே அழகு பொருந்தியிருக்கும் சதாசிவர் ரூபாரூபமாவார்; சிவன் அவரை வேறு அறவே திகழ்ந்து நின்று பொருவில் அருள் புரிந்திடுவர் - சிவன் அந்தச் சதாசிவரை வேறற விளங்கநின்று ஆன்மாக்களுக்குக் குற்றமில்லாத அனுக்கிரகத்தைப் பண்ணுவர்; உத்தியுத்தர் போகத்தர் எனும் பெயரும் பொருந்தி நின்று - அவர் உத்தியுத்தரென்றும் போகத்தரென்றும் பெயரைப் பொருந்திநிற்பர் எ - று. (அரு)

அ - கை : மேல் சதாசிவர் தனுவாதிகளுடன் கூடிநின்று ஆன்மாக் களுக்குப் பஞ்சகிருத்தியம் பண்ணுவரென்பது கூறுகின்றது.

86. ஈசானி யாதியைந்தும் தனுவ தாக
இச்சையறி வியற்றிடலுட் கரண மாகத்
தேசான வாரணியை முதலா மூன்று
திகழ்சத்தி முக்குணமாத் திருந்தக் கொண்டே
வாசாம கோசரமாஞ் சிவன்ருன் றூய
வாமாதி நவசத்தி மருங்கே சூழ
ஆசான வாணவத்தின் பருவ நோக்கி
ஐந்தொழில்கள் புரிபவனுன் மாக்கட் காயே.

இ - ள்: ஈசானி ஆதி ஐந்தும் தனுவது ஆக - ஈசானி முதலான ஐந்து சத்திகளும் திருமேனியாகவும்; இச்சை அறிவு இயற்றிடல் உள் கரணம் ஆக - இச்சாஞானக்கிரியைகள் அந்தக்கரணமாகவும்; தேசு ஆன ஆரணியை முதலா மூன்று திகழ் சத்தி முக்குணமாத் திருந்தக்கொண்டு - பிரகாசரூபமான ஆரணி செனனி ரோதயித்திரி என்னும் விளங்காநின்ற மூன்று சத்திகளும் சாத்துவிக ராசத தாமத குணங்களாகவும் நன்ருகக் கொண்டு; வாசாமகோசரம் ஆம் சிவன்ருன் - வாக்கு மனக் காயங்களுக்கு எட்டாத சிவனுனவர்; தூய வாமாதி நவசத்தி மருங்கு சூழ - பரிசுத்தையாயிருக்கிற வாமை, சேட்டை, ரவுத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி, மனோன்மணி என்னும் ஒன்பது சத்திகளும் பக்கங்களிலே சூழ்ந்திருக்க; ஆசு ஆன ஆணவத்தின் பருவம் நோக்கி ஐந் தொழில்கள் புரிவன் ஆன்மாக்கட்காய் - அஞ்ஞான ரூபமாயிருக்கிற ஆணவத்தினுடைய பரிபாகத்தைத் திருநோக்களித்து ஆன்மாக்களுக்குப் பஞ்ச கிருத்தியங்களைப் பண்ணுவர் எ - று. (அசு)

அ - கை: மேல் ஐந்து விருத்தங்களால் சதாசிவருடைய கிருத்தியம் கூறுகின்றது.

87. மருவுசா தாக்கியத்தே யீசுரதத் துவத்தை
வருவித்து மற்றதனிற் சுத்த வித்தை
தருவதுஞ்செய் திம்மூன்று தத்துவங்க டமிலே
தருபுவன மூவாறு தானு மாக்கி
இருவினைக டாமாய்ந்து மாயையுநீங் கிடவே
யிசைந்திடுமா ணவமொன்றே யியல்ப தாகி
உருவமுடன் குணங்கிரியை யாதி யின்றி
யுற்றுடைய விஞ்ஞான கேவலர்தம் பாலே.

இ - ள்: மருவு சாதாக்கியத்தே ஈசுர தத்துவத்தை வருவித்து - அந்தச் சதாசிவர் பொருந்தியிருக்கிற சாதாக்கிய தத்துவத்திலே ஈசுவர தத்துவத்தை உண்டாக்கி; மற்று அதனில் சுத்தவித்தை தருவதும் செய்து - அந்த ஈசுவர தத்துவத்திலே சுத்தவித்தியா தத்துவத்தை உண்டாகும்படி

செய்து; இமூன்று தத்துவங்கள் தமிலே தருபுவனம் மூவாறு தானும் ஆக்கி- சாதாக்கியம் ஈசுவரம் சுத்தவித்தை என்னும் இந்த மூன்று தத்துவங்களிலே முறைமையாகப் பதினெட்டுப் புவனங்களையும் உண்டாக்கி; இருவினைகள் தாம் மாய்ந்து மாயையும் நீங்கிட - புண்ணிய பாப சுவரூபமாயிருக்கின்ற கன்மங்கள் நசிக்க மாயையும் நீங்கிடவே; இசைந்திடும் ஆணவம் ஒன்றே இயல்பது ஆகி - பொருந்தியிருக்கும் ஆணவமலம் ஒன்றுமே சுவரூபமாகி; உருவமுடன் குணம் கிரியை ஆதி இன்றி உற்றுடைய விஞ்ஞானகேவலர் தம்பால் - தேகேந்திரிய அந்தக்கரணங்கள், சாத்துவிகாதி குணங்கள், கர சரணுதி சேட்டைகள் முதலானவையெல்லாம் இல்லாமல் இப்படிப்பொருந்தி யிருக்கின்ற விஞ்ஞானகேவலரென்னும் ஆன்மாக்களிடத்தில் எ-று. (அஎ)

88. சேர்ந்திடிற்றீ விரதரமாஞ் சத்தி பாதம்
சிவமாகப் பரமுத்தி சேர்ப்பனவர்க் கன்றே
சார்ந்தவர்கள் தீவிரமாம் சத்தி பாதம்
தானைந்து பேதமா மதிலுயர்ந்தோர் தம்மைப்
போந்திடவே யபரமுத்தித் தானத்தே பொருத்திப்
புனிதமா ஞானமுடன் முதன்மையெலாம் பொருந்தி
வாய்ந்திடவச் சிவசமமா மன்ன வைப்பன்
மற்றவருக் கிளம்பருவ மன்னி ஞேர்க்கே.

இ - ள் ; சேர்ந்திடில் தீவிரதரமாம் சத்திபாதம் சிவமாகப் பரமுத்தி சேர்ப்பன் அவர்க்கு அன்று - தீவிரதரமென்னும் சத்திநிபாதம் என்பது பொருந்தியிடில் அப்பொழுது சிவமாம்படி பரமோக்ஷத்தைக் கொடுப்பர்; சார்ந்தவர்கள் தீவிரமாம் சத்திபாதம் - தீவிரசத்திநிபாதம் பொருந்தினவர் களுக்கு; தான் ஐந்து பேதமாம் அதில் உயர்ந்தோர்தம்மைப் போந்திட அபரமுத்தித் தானத்தே பொருத்தி - அந்தச் சத்திநிபாதமானது நூனம் அதிலும் அதிகம் என்று சொல்லத்தக்கதாக ஐந்து பேதமாம், அதிலே உயர்ந்த சத்திநிபாதத்தையுடைய ஆன்மாக்களை இப்படிச் சத்திநிபாதம் வரவே அபரமுத்தித் தானமான சிவதத்துவத்திலே இருக்கப்பண்ணி; புனிதமா ஞானமுடன் முதன்மை எலாம் பொருந்தி வாய்ந்திட அ சிவ சமமா மன்ன வைப்பன் - பரிசுத்தமாய் முந்தினதாயிருக்கிற சருவஞ்ஞதை திருப்தி அநாதிபோதம் சுவதந்திரதை அலுப்தசத்தி அநந்தசத்தி என்னும் ஷாட்குண்ணியங்களை விளங்கப்பண்ணி நன்ருகச் சிவ துல்லியராகப் பொருந்தவைப்பன்; மற்று அவருக்கு இளம்பருவம் மன்னிஞேர்க்கு - அவர் களுக்கு நூனமான மலபரிபாகத்தைப்பொருந்தின ஆன்மாக்களுக்கு எ - று.

89. இருளொழித்திட் டெவ்வறிவு முதலா வுள்ள
இருமூன்று குணம்விளங்கி யெங்கு மாக
அருள்புரிந்து விந்துவாந் தத்து வத்தே
யமர்விப்ப ரளவிறந்த போக மாரப்

பருவத்தே யவர்க்கீன மாகப் பெற்ற
பான்மையோர் மூவகையோர் பாச நீக்கி
உருவத்தை யுடைத்தாய சதாசி வேச
ருருத்திரர்க ளாகவறி வோங்கச் செய்தே.

இ - ள் : இருள் ஒழித்திட்டு எவ் அறிவு முதலா உள்ள இருமூன்று குணம் விளங்கி எங்கும் ஆக அருள்புரிந்து - ஆணவமல சத்தியை நீங்கப் பண்ணிச் சருவஞ்ஞத்துவாதி குணங்கள் விளங்கி வியாபகமாகநிற்க அனுக்கிரகம்பண்ணி; விந்து ஆம் தத்துவத்தே அமர்விப்பர் அளவு இறந்த போகம் ஆர - மட்டில்லாத போகம் பொருந்த விந்து என்னும் தத்துவத்திலே வைப்பர்; பருவத்தே அவர்க்கு ஈனமாகப் பெற்ற பான்மையோர் மூவகையோர் பாசம் நீக்கி - சத்தி தத்துவத்தில் இருக்கிறவர்களுக்குச் சாதாக்கிய தத்துவத்தில் இருக்கிறவர்கள் நூனம், சாதாக்கிய தத்துவத்தில் இருக்கிறவர்களுக்கு ஈசுவர தத்துவத்தில் இருக்கிறவர்கள் நூனம், ஈசுவர தத்துவத்தில் இருக்கிறவர்களுக்குச் சுத்தவித்தியா தத்துவத்தில் இருக்கிறவர்கள் நூனம், இப்படிப் பரிபாக தாரதம்மியத்தைப் பெற்ற முறைமையுடைய மூன்று பேதமாயிருக்கிற ஆன்மாக்களுக்கு அஞ்ஞானத்தை நீக்கி; உருவத்தை உடைத்தாய சதாசிவேசர் உருத்திரர்களாக அறிவு ஓங்கச் செய்து - தேகேந்திரிய அந்தக்கரணங்களையுடைய அணுசதாசிவர் ஈசுரர் உருத்திரர் என்று கிரமத்திலே பெயரையுடைய ஆன்மாக்களுக்கு ஞானம் விளங்கப்பண்ணுவர் எ - று. (அகூ)

90 விஞ்ஞான கலர்தமக்கு வினைக ளின்றால்
மேவுமல பரிபாக விதத்துக் கீடாய்
அஞ்ஞான மல்லாத காய மாதி
யாக்கிடுவ ரவரவர்கட் காகு மாறே
எஞ்ஞான்று மின்பமே துன்ப மின்றி
யிசைந்திருக்கச் சுத்தவித்தை யீசர்சதா சிவத்தே
மெய்ஞ்ஞானம் பெற்றிருந்து பிரளயகா லத்தே
மேவிடுவர் பரமுத்தி யிவரெனவே விளம்பும்.

இ - ள் : விஞ்ஞானகலர் தமக்கு வினைகள் இன்றால் மேவு மலபரிபாக விதத்துக்கு ஈடாய் அஞ்ஞானம் அல்லாத காயம் ஆதி ஆக்கிடுவர் அவரவர்கட்கு ஆகுமாறு - விஞ்ஞானகலராயிருக்கிற ஆன்மாக்களுக்குப் புண்ணிய கன்மங்கள் இல்லாதபடியால் பொருந்தும் மலபரிபாகத்துக்கீடாக அந்தந்த ஆன்மாக்களுக்குத் தனுகரணாதிகள் எவ்வாறு உண்டாமோ அவ்வாறே பிரகாசரூபமாயிருக்கிற தனுகரணாதிகளை உண்டாக்குவர்; எஞ்ஞான்றும் இன்பமே துன்பமின்றி இசைந்திருக்கச் சுத்தவித்தை ஈசர் சதாசிவத்தே - எப்பொழுதும் துக்கமில்லாமல் சுகமே பொருந்தியிருக்கச் சுத்தவித்தை, ஈசுவரம், சதாசிவம் என்னும் தத்துவத்திலே; மெய்ஞ்ஞானம் பெற்றிருந்து

பிரளயகாலத்து மேவிடுவர் பரமுத்தி இவர் எனவே விளம்பும் - சிவஞானத்தைப் பெற்றிருந்து பிரளயகால முடிவிலே சிருட்டியாதியிலே பரமோக்ஷத்தை விஞ்ஞானகலர்கள் பொருந்துவார்கள் என்று சிவாகமஞ்சொல்லும் எ - று. (௯௰)

91. அஞ்சுமுகத் தால்வேத மாக மாதி
அருள்புரிந்திட் டனைவோர்க்கு மவர்க டம்முள்
விஞ்சுதொழின் ஞானவனந் தேசர் தம்மை
மேவுவித்து மகேசுரதத் துவத்ததிப ராக
எஞ்சவிலா வதிகார சத்தியவர் பாலி
விருத்தித்தா னிரண்டறவே யிசைந்து நின்று
நஞ்சனைய வதோமாயா காரியத்தைப் புரிய
நண்ணிடுவர் பிரவிருத்த ரெனவருளா ணுமம்.

இ - ள்: அஞ்சு முகத்தால் வேதம் ஆகமம் ஆதி அருள்புரிந்திட்டு அனைவோர்க்கும் - சதாசிவர் சத்தியோசாத முகத்திலேநின்றும் இருக்கு வேதமும், வாமதேவமுகத்தில் நின்றும் எசுர்வேதமும், அகோரமுகத்தில் நின்றும் சாமவேதமும், தற்புருட முகத்தில் நின்றும் அதர்வண வேதமும், ஈசான முகத்தினின்றும் அஷ்டாதச புராண இதிகாசாதிகளும், சத்தியோசாத முகத்திலே நின்று காமிகாதி ஐந்தும், வாமதேவ முகத்திலேநின்றும் தீப்தம் முதலான ஐந்தும், அகோரமுகத்திலே நின்றும் விசயம் முதலான ஐந்தும், தற்புருட முகத்திலேநின்றும் இரவுரவமுதலான ஐந்தும், ஈசான முகத்திலேநின்றும் புரோற்கீதமுதலான எட்டும் ஆக இருபத்தெட்டு ஆகமங்களையும் எல்லா ஆன்மாக்களுக்கும் மகௌகப் பிரகாரமாகவும் பிரதிசங்கிதாப் பிரகாரமாகவும் அனுக்கிரகம்பண்ணினர்;

அனைவோர்க்கும் என்னும் உம்மையால் பிரணவாதி சிவர்கள் பத்துப் பேருக்கும் அநாதிருத்திரராதியான ருத்திரர் பதினெட்டுப் பேருக்கும் ஆக இருபத்தெட்டுப் பேருக்கும் நாலு வேதங்களையும் புராணாதிகளையும் காமிகாதி வாதுளாந்தமான ஆகமம் இருபத்தெட்டையும் பிரதிசங்கிதாப் பிரகாரமாக அருளினால் கிரமத்திலே அனுக்கிரகம்பண்ணினர்.

கிரமமாவது: பிரணவசிவனுக்குக் காமிகம் பரார்த்தகிரந்தம், மூன்று பேதம். சுதாக்கிய சிவனுக்கு யோகஜம் இலக்ஷம் கிரந்தம், ஐந்து பேதம். சுதீப்தசிவனுக்குச் சிந்தியம் இலக்ஷம் கிரந்தம், ஆறு பேதம். காரண சிவனுக்குக் காரணம் கோடி கிரந்தம், ஏழு பேதம். சுசிவசிவனுக்கு அசிதம் நியுதகிரந்தம், நான்கு பேதம். ஈசசிவனுக்குத் தீப்தம் நியுதகிரந்தம், ஒன்பது பேதம். சூக்கும சிவனுக்குச் சூக்குமம் பத்ம கிரந்தம், ஒரே பேதம். காலசஜ்ஞ சிவனுக்குச் சகச்சிரம் சங்ககிரந்தம், பத்துப் பேதம். அம்புசஜ்ஞ சிவனுக்கு அஞ்சுமான் ஐந்து லக்ஷம் கிரந்தம், பன்னிரண்டு பேதம். தசேச சிவனுக்குச் சுப்பிரபேதம் மூன்றுகோடி கிரந்தம், பேதமில்லை. ஆகப் பத்து.

அநாதிசஜ்ஞருத்திரனுக்கு விசயம் மூன்றுகோடி கிரந்தம், எட்டுப் பேதம். தசார்ணருத்திரனுக்கு நிச்சுவாசம் கோடி கிரந்தம், எட்டுப் பேதம். நிதன ருத்திரனுக்குச் சுவாயம்புவம் ஒன்றரைக்கோடி கிரந்தம், மூன்று பேதம். வியோமருத்திரனுக்கு அனலம் முப்பதினுயிரம் கிரந்தம். தேஜருத்திரனுக்கு வீரம் நியுதகிரந்தம், பதின்மூன்று பேதம். பிராம்மணேச ருத்திரனுக்கு ரௌரவம் எட்டு அற்புத கிரந்தம், ஆறு பேதம். சிவாக்கிய ருத்திரனுக்கு மகுடம் இலக்ஷம் கிரந்தம், இரண்டு பேதம். சூவிருத்திரனுக்குப் புரோற் கீதம் மூன்று லக்ஷம் கிரந்தம், பதினுறு பேதம். சர்வாத்மகருத்திரனுக்கு விமலம் மூன்று லக்ஷம் கிரந்தம், பதினுறு பேதம். அனந்தருத்திரனுக்குச் சந்திரஞானம் மூன்றுகோடி கிரந்தம், பதினன்கு பேதம். பிரசாந்த ருத்திர னுக்கு விம்பம் இலக்ஷம் கிரந்தம், பதினைந்து பேதம். ஆலயருத்திரனுக்கு லளிதம் எண்ணுயிரம் கிரந்தம், மூன்று பேதம். விந்து ருத்திரனுக்குச் சித்தம் ஒன்றரைக்கோடி கிரந்தம், நான்கு பேதம். சிவநிஷ்டருத்திரனுக்குச் சந் தானம் ஆறுயிரம் கிரந்தம், ஏழு பேதம். சோமருத்திரனுக்குச் சர்வோக்தம் இரண்டு லக்ஷம் கிரந்தம், ஐந்து பேதம். ஸ்ரீதேவிக்குப் பாரமேசுவரம் பன்னிரண்டு லக்ஷம் கிரந்தம், ஏழு பேதம். தேவவிபவ ருத்திரனுக்குக் கிரணம் ஐந்துகோடி கிரந்தம், ஒன்பது பேதம். சிவருத்திரனுக்கு வாதுளம் இலக்ஷம் கிரந்தம், பன்னிரண்டு பேதம், ஆகப் பதினெட்டு.

இப்படி இருபத்தெண்மர்களுக்கும் இருபத்தெட்டு ஆகமங்களையும் ஒவ்வொருத்தருக்கு ஒவ்வோராகமமாக அனுக்கிரகம்பண்ணினுர்.

அவர்கள் தம்முள் விஞ்சு தொழில் ஞான அனந்தேசர் தம்மை மேவு வித்து மகேசுர தத்துவத்து அதிபர் ஆக - மகௌகப் பிரகாரமாக அனுக் கிரகம் பெற்ற அட்ட வித்தியேசுவரர்க்குள்ளே மிகுந்த ஞானேச்சாக் கிரியை களையுடைய அனந்தேசுவரரை மகேசுவர தத்துவத்துக்கு நாயகராகப் பண்ணி; எஞ்சல் இல்லா அதிகார சத்தி அவர்பாலில் இருத்தி - குறைவில் லாத தம்முடைய அதிகாரசத்தியை அவரிடத்திலே நிறுத்தி; தான் இரண்டு அறவே இசைந்து நின்று - தாம் பேதமறவே பொருந்தி நின்று; நஞ்சு அனைய அதோமாயா காரியத்தைப் புரிய நண்ணிடுவர் பிரவிருத்தர் என அருளால் நாமம் - மிகவும் சுத்தமாயிருக்கின்ற அதோமாயையினுடைய காரியப் பிரபஞ்சத்தைக் கிருபையினுலே செய்யப் பிரவிருத்தர் என்னும் பெயரைப் பொருந்தி நின்றிடுவர் எ - று. (கூக)

அ - கை : மேல் இந்தப் பதி சகலராகிய ஆன்மாக்களுக்குத் தியான பூசாநிமித்தம் ரூபமாகவும் ரூபாரூபமாகவும் அரூபமாகவும் திருமேனி கொண்டாரென்பது கூறுகின்றது.

92. ஞானமே வடிவாமாற் சத்தரரு வாகும்
ஞானமுடன் கிரியையொத்து நண்ணியிடும் வடிவ
மானதா லுத்தியுத்தர் ரூபா ரூப
மாயிடுவர் கிரியைதா னதிக மாகி

ஊனமா ஞானமுட னுதித்த வாற்ற
லுருவமாம் பிரவிருத்த ருணரின் மூன்றும்
ஈனமா நம்பாச மொழிக்கப் பாவித்
திடப்பூசித் திடவணங்கி யேத்த வென்றே.

இ - ள் : ஞானமே வடிவாம் ஆல் சத்தர் அருவாகும் - சத்தர் என்னும் பதி ஞானசத்தியே ஆகையால் அரூபமாவர்; ஞானமுடன் கிரியை ஒத்து நண்ணியிடும் வடிவம் ஆனதால் உத்தியுத்தர் ரூபாரூபம் ஆயிடுவர் - உத்தியுத்தரென்னும் பதி ஞானசத்தி கிரியாசத்தி இரண்டும் சமமாக நின்ற திருமேனி ஆகையால் ரூபாரூபமாகப் பொருந்திடுவர்; கிரியைதான் அதிகம் ஆகி ஊனம் ஆம் ஞானமுடன் உதித்த ஆற்றல் உருவம் ஆம் பிரவிருத்தர் - பிரவிருத்தரென்னும் பதி ஞானசத்தி கொஞ்சமும் கிரியாசத்தி அதிகமுமாகத் திருமேனி உண்டாகையால் ரூபமாவர்; உணரில் மூன்றும் ஈனமாம் நம் பாசம் ஒழிக்கப் பாவித்திடப் பூசித்திட வணங்கி ஏத்த என்று - இந்தப் பதியினுடைய மூன்றவத்தையையும் விசாரிக்கில், நம்முடைய பொல்லாதாகிய பாசம் நீங்கும் நிமித்தம் தியானம்பண்ண அரூபமாகவும், தியான பூசாதி நிமித்தமாக ரூபாரூபமாகவும், தோத்திர நமஸ்காரம் பண்ணும் நிமித்தம் ரூபமாகவும் திருமேனிகொண்டார் எ - று. (கூஉ)

அ - கை : இந்த மூன்றுவிதமாக நின்ற பதி பிரபஞ்சத்தில் நிற்கும் முறைமை கூறுகின்றது.

93. ஈசருல கனைத்தினையு முருவ மாக
இசைந்துலகுக் குயிருமா யிருப்பர்சதா சிவராம்
தேசருல கனைத்தினுக்கும் பரமகா ரணமாய்ச்
சிந்திக்கப் படுமவராந் திகழுஞ்சிற் றுயிர்கள்
நேசவருட் சத்தருல கனைத்தினுக்கு மதீத
நிலையாக நின்றிடுவர் நினைப்பவரி தாயே
மாசரிதை யறியாமற் றேவரிலே யொருவன்
மாதேவ னென்றுரைக்கும் வாய்மைபழு தாமால்.

இ - ள் : ஈசர் உலகு அனைத்தினையும் உருவமாக இசைந்து உலகுக்கு உயிருமாயிருப்பர் - பிரவிருத்தர் என்னும் பதி எல்லாப் பிரபஞ்சத்தையும் திருமேனியாகப்பொருந்தி அந்தப்பிரபஞ்சத்துக்குப் பிராணனுமாயிருப்பர்; சதாசிவராம் தேசர் உலகு அனைத்தினுக்கும் பரமகாரணமாய்ச் சிந்திக்கப் படுமவராம் திகழும் சிற்றுயிர்கள்-பிரகாசரூபமாய் நின்ற சதாசிவர் என்னும் பதி எல்லாப் பிரபஞ்சத்துக்கும் மேலான காரணமாய் விளங்காநின்ற ஞான சொரூபமான ஆன்மாக்களுக்குத் தியானம் பண்ணப்படுமவராய் இருப்பர்; நேச அருள் சத்தர் உலகு அனைத்தினுக்கும் அதீதநிலையாக நின்றிடுவர் நினைப்ப அரிதாய் - தயையே கிருபையாய்நிற்கும் சத்தரென்னும் பதி எல்லாப் பிரபஞ்சத்துக்கும் கடந்த சுவரூபமாக ஆன்மாக்களுக்குத் தியானம்

பண்ணுதற்கரியராயிருப்பர்; மாசர் இதை அறியாமல் தேவரிலே ஒருவன் மாதேவன் என்று உரைக்கும் வாய்மை பழுதாம் ஆல் - இப்படியிருக்கிற பதி சுவரூபத்தை அறியாமல் அஞ்ஞானிகள் தேவதைகளுக்கு மேலாயிருக்கிற சிவனைப் பிரமாதி தேவர்களுக்குள்ளே ஒருவரென்று சொல்லும் முறைமை குற்றமாம் எ - று. (கூங)

அ - கை : மேல் கன்மசாதாக்கியரிடத்திலே நின்றும் மகேசுவரர் உற்பத்தியும் அவரிடத்திலேநின்றும் பிரமாதி தேவர்கள் உற்பத்தியும் இரண்டு விருத்தங்களால் கூறுகின்றது.

94. கருமசா தாக்கியத்தே யிருபத் தைந்தாய்க்
கருதுமகே சுரருதிப்ப ரவர்தங் கண்ணே
வருவருருத் திரனயன்மா லிதயந் தன்னில்
வலமதனில் வாமத்தில் மருவியிட வடைவே
உருவொளியா மருக்கன்மதி வன்னி தானு
முதிப்பரவர் நேத்திரங்க ளொருமூன்றி னிடத்தே
சுருதிசிவா கமமுதலா மபர ஞானந்
தோன்றுமவர் வாக்கிடத்தே சுவாசத்தே காற்றும்.

இ - ள் : கரும சாதாக்கியத்தே இருபத்தைந்தாய்க் கருது மகேசுரர் உதிப்பர் - கருமசாதாக்கியரிடத்திலே நின்றும் ஆயிரத்தொரு வங்கிசமாக இருபத்தைந்து பேதமாகச் சொல்லும் மகேசுவரர் உண்டாவர்; அவர் தங்கண்ணே வருவர் உருத்திரன் அயன் மால் இதயந்தன்னில் வலமதனில் வாமத்தில் மருவியிட அடைவே - அந்த மகேசுரருடைய இதயத்தில் உருத்திரதேவரும், வலதுபாகத்தில் பிரமாவும், இடப்பாரிசத்தில் விஷ்ணுவும் கிரமத்தில் பொருந்தியிட உண்டாவர்கள்; உரு ஒளியாம் அருக்கன் மதி வன்னிதானும் உதிப்பர் அவர் நேத்திரங்கள் ஒரு மூன்றினிடத்து - பிரகாச ரூபமாய் நின்ற சூரியன் அவருடைய வலது கண்ணிலும், சந்திரன் இடது கண்ணிலும், அக்கினி நெற்றிக்கண்ணிலும், இப்படி மூன்று தானத்திலும் உண்டாவர்கள்; சுருதி சிவாகமம் முதலாம் அபரஞானம் தோன்றும் அவர் வாக்கிடத்தே சுவாசத்தே காற்றும் - அவருடைய வாக்குத்தானத்திலே நின்று வேதசிவாகம முதலான அபரஞானமும் சுவாசத்திலேநின்று வாயு பகவானும் உண்டாவர் எ - று.

இருபத்தைந்து பேதமாவன: சோமதாரி, உமாயுதர், ரிஷபாரூடர், நிருத்தரூபகர், வைவாகியர், பிட்சாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, ஜலந்தராரி, கேசாரி, வீரபத்திரர், அரியர்த்தர், அர்த்தநாரீசர், கிராதர், கங்காளர், சண்டேசுரானுக்கிரகர், விஷாபகரணர், சக்கரதானரூபர், விக்கினப்பிரசாதனர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, மகேசர் என்று இப்படிக் கூறுகின்றது. (கூச)

95. களமதனி லுதித்திடுவர் கணேசரறு முகராங்
கந்தரித யத்துதிப்பர் கன்னந் தன்னில்
உளவதுவாங் கீலகந்தான் முனிவர் கோடி
யுதித்திடுவ ருரோமங்க டம்மி லோங்க
வளநிலவு தேவர்களைம் பதுவாங் கோடி
வந்திடுவ ருதரத்தே மற்றி வற்றால்
அளவிறந்த வுலகுடல்க ளாதிக் கீச
னபின்னமா னிமித்தவுபா தான மாவன்.

இ - ள் : களம் அதனில் உதித்திடுவர் கணேசர் - அவருடைய கண்டத்தில் நின்றும் கணபதி உண்டாவார்; அறுமுகராம் கந்தர் இதயத்து உதிப்பர் - இதயத்தானத்திலேநின்று ஆறுமுகத்தையுடைய சுப்பிரமணியர் உண்டாவார்; கன்னம் தன்னில் உள அதுவாம் கீலகம் தான் - கபோலங்களில் கீலகமந்திரங்களுண்டாகும்; முனிவர் கோடி உதித்திடுவர் உரோமங்கள் தம்மில் ஓங்க - ரோம கூபங்களிலே பிரகாசிக்கக் கோடி முனீச்சுரர் உண்டாவார்கள்; வளம் நிலவு தேவர்கள் ஐம்பது ஆம் கோடி வந்திடுவர் உதரத்தே - உதரத்திலே நன்றாக விளங்கும் ஐம்பதுகோடி தேவர்கள் உண்டாவார்கள்; மற்று இவற்றால் அளவு இறந்த உலகு உடல்கள் ஆதிக்கு அபின்னம் ஆல் ஈசன் நிமித்த உபாதானம் ஆவன் - அல்லாமல் சொன்ன அர்த்தத்தால் மட்டில்லாத பிரபஞ்சங்களுக்கும் தனுகரணாதிகளுக்கும் பின்னமற நிற்கையால் மகேசுவரன் நிமித்த உபாதான காரணமாவன் எ - று.

இந்த விருத்தத்திலே ஈசுவரன் சித்துருபமும் பிரபஞ்சம் சடருபமுமாயிருக்கக் கடத்துக்குக் குலாலன் நிமித்தகாரணம் என்று சொன்னது போலப், பிரபஞ்சத்துக்குச் சிவன் நிமித்தகாரணம் என்று சொல்லாமல் அபின்ன நிமித்தோபாதானகாரணம் என்று சொன்னது விரோதமென்னில், பிரபஞ்சத்துக்குச் சிவன் நிமித்தகாரணமென்றால் அவருக்கு வியாபகமில்லாமலிருக்கையும் ஏகதேசித்துவமும் அநித்தியதையும் வரும்; அல்லாமலும் சிவன் எப்போதும் பஞ்சகிருத்தியம் பண்ணுவரென்பதும் திரிபதார்த்தம் நித்தியமென்பதுவும் ஆன்மாக்கட்குப் போக மோட்சங்களைக் கொடுப்பரென்பதுவுமில்லாமல் பிரபஞ்சம் சூனியகற்பமேயாம். ஆகையால் காரண சொருபத்தை அறியாதவர்கள் இப்படிச் சொல்லுவார்கள், அது கூடாது.

ஈசுவரன் பிரபஞ்சத்துக்குத் திலதயிலம் போல நிற்கையால் அபின்னதையும், சமவாயிகாரணமும் அல்லாமல் அசமவாயிகாரணமும் அல்லாமல் காரணமாய் நின்ற குலாலன் கடத்துக்கு நிமித்தமாய் நின்றது போலப் பிரபஞ்சம் சடமும் ஈசுவரன் சித்து ரூபமுமாகப் பேதமாய் நிற்கையால் நிமித்தமும், கடமென்னும் காரியத்துக்குக் குலாலனுடைய கிரியாசத்தி உண்டாக்குகையால் கடகாரியமாமென்பதுபோல ஈசுவரசத்தி காரியோன்முக விஜ்ரும்பணமானால் பிரபஞ்சம் காரியமாமென்கையாலும் கடகாரியத்தை மிருத்பிண்டம் விடாமல் நின்றதுபோல ஈசுவரசத்தி பிரபஞ்சகாரியத்தை

விடாமனின்று ஜனிப்பிக்கையால் யோனியென்றும் பெயராக நிற்கையால் உபாதானதையுமாகையால் ஈசுவரனுக்கு அபின்ன நிமித்தோபாதான காரணத்துவம் சித்தம்.

இதற்குச் சம்மதி: [பவுட்கரம். 9-15]

தெஷாஂகாரணயொநிதாஜ்ஜகதஃ பரமெஶ்வரஃ ।
நிமித்தஂ சொபாதாநஂ ச விஜ்ஞெயஃ ॥

என்பது முதலான சிவாகமங்களிலும், சிவஞானசித்தியில் "காரிய காரணங்கள்" என்னும் [1, 18] விருத்தத்திலும் கண்டுகொள்க. (கூரு)

அ - கை : மேல் ஸ்ரீகண்ட பரமேசுவரன் உற்பத்தியும் அவர் பண்ணும் கிருத்தியமும் கூறுகின்றது.

96. சேர்ந்திடவே சுத்தவித்தைக் கிறைவ ராகச்
சிறீகண்ட வுருத்திரரைத் திகழ நோக்கி
வாய்ந்திடவே யவராலே கலையதனில் வித்தை
மற்றுமதி லவ்வியத்தங் குணங்க ளெல்லாம்
ஆய்ந்தவரால் வேதமுட னுக மாதி
யயன்திருமால் முதலோர்க ளவனி மீதே
போந்துலகி லுள்ளோர்கட் குரைக்க வன்னோர்
புனிதமாம் போதத்தைப் பொருந்தத் தானே.

இ - ள் : சேர்ந்திட சுத்தவித்தைக்கு இறைவராகச் சிறீகண்ட உருத்திரரைத் திகழ நோக்கி - மகேச்சுவரரானவர் சுத்தவித்தியா தத்துவத்துக்கு நாயகராகிப் பொருந்த ஸ்ரீகண்டருத்திரரை விளங்க உண்டாக்கி; வாய்ந்திட அவராலே கலையதனில் வித்தை மற்றும் அதில் அவ்வியத்தம் குணங்கள் எல்லாம் - அந்த ஸ்ரீகண்ட பகவானுலே கலாதத்துவத்தினுலே வித்தியா தத்துவமும் அந்தக் கலையில் பிரகிருதியும் சாத்துவிகாதி குணவிகற்பங்களும் பொருந்த உண்டாக்கி; ஆய்ந்து அவரால் வேதமுடன் ஆகமாதி அயன் திருமால் முதலோர்கள் அவனிமீது போந்து உலகில் உள்ளோர்கட்கு உரைக்க அன்னோர் புனிதமாம் போதத்தைப் பொருந்தத்தான் - அந்த ஸ்ரீகண்டபகவானுலே வேதாகமாதிகளை விசாரித்துப் பிரமா அழகையுடைய விஷ்ணு முதலானவர்களுக்கு அனுக்கிரகம் பண்ண அவர் பூமியின்கண்ணே உலகத்திலே உண்டான ஆன்மாக்களுக்குப் பரிசுத்தமாயிருக்கிற ஞானம் பிரகாசிக்கத்தக்கதாக அனுக்கிரகிக்க நின்றவராம் எ - று. (கூசு)

அ - கை : மேலே இந்த ஸ்ரீகண்ட உருத்திரரே சகலராகிய ஆன்மாக்களுக்குப் பரதத்துவர் என்பது கூறுகின்றது.

97. இந்தவருட் சீகண்ட உருத்திரரே சகலர்க்
கீறில்பர தத்துவமென் றியம்புவது மிவரே
வந்தருளி யெவ்விடத்து மவரவர்செய் பூசை
வகையனைத்து நோக்கியே மாசிலரு ளாலே
தந்திடுவர் புத்தியுடன் சித்தி முத்தி
சாலோக சாமீப சாரூ பங்கள்
சிந்தைசெயி லிவரிடத்தே யாகு மிக்க
தேவர்முனி வோர்க்கருள்செய் தேசிகனித் தேவே.

இ - ள்: இந்த அருள் சீகண்ட உருத்திரரே சகலர்க்கு ஈறில் பர தத்துவம் என்று இயம்புவதும் - இந்தக் கிருபையையுடைய சீகண்டவுருத்திர பகவானே சகலரென்னும் ஆன்மாக்களுக்கு நித்தியமாயிருக்கிற பரதத்துவமென்று சொல்லுவதும்; இவரே வந்தருளி எவ்விடத்தும் அவரவர்செய் பூசைவகை அனைத்தும் நோக்கி - இந்தச் சீகண்டவுருத்திரரே அந்தந்த ஆன்மாக்கள் பண்ணும் பூசாவிதிகளெல்லாவற்றையும் கண்டு உவந்து சந்தோஷித்து; மாசு இல் அருளாலே தந்திடுவர் புத்தியுடன் சித்தி முத்தி - குற்றமில்லாத கிருபையினுலே போகத்துடன் அணிமாவாதி சித்தியையும் மோக்ஷத்தையும் கொடுப்பர்; சாலோக சாமீப சாரூபங்கள் சிந்தை செயில் இவரிடத்தே ஆகும் - விசாரிக்குமிடத்தில் இவரிடத்திலே சாலோக சாமீப சாரூபமாகிய பதமுத்திகளுமாம்; மிக்க தேவர் முனிவோர்க்கு அருள்செய் தேசிகன் இ தேவே - இந்தத் தேவனே மிகுந்த தேவர்களுக்கும் முனீசுரர்களுக்கும் அனுக்கிரகம்பண்ணும் ஆசாரியனுமாம் எ - று.

இவ்விடத்தில் சகலராகிய ஆன்மாக்களுக்குக் கன்ம சாதாக்கியரிடத்திலே பூசை சொல்லியிருக்க அவருடைய சாலோக சாமீப சாரூபங்களை அடைவரென்று சொல்லாமல் சீகண்டபரமேசுவரனுடைய சாலோகாதிகளை அடைவரென்று சொல்லுவானேனென்னில், கன்மசாதாக்கியர் சுத்தாத்துவ வாசியராகையால் சகலர் மல மாயா பத்தராகையால் சுத்தாத்துவா போகங் கூடாதபடியால் கன்மசாதாக்கியருடைய அதிகாரசத்தி மகேச்சுவரரையதிட்டிக்கச் சீகண்டபகவான் அந்த மகேசுவரராலே அதிட்டிக்கப்பட்டுக்கொண்டு அசுத்தாத்துவாபதியாய் நிற்கையால் அவருடைய சாலோகாதிகளை அடைவார்களென்று சொன்னது. (கூஎ)

அ - கை: மேல் மகேச்சுவரர் பிரளயாகலர்க்கு மல கன்மங்களை நீக்கிப் பரமமோக்ஷத்தைக் கொடுப்பரென்றும், இருவினையொப்பு மலபரிபாகம் அற்பம் பொருந்தினவர்களுக்கு வினையை ஒழித்து உருத்திரர் அணுக்களாகப் பண்ணுவரென்பதும் கூறுகின்றது.

98. மிக்கதோர் பக்குவத்திற் பிரளயா கலர்க்கும்
வினையொழித்துப் பரமுத்தி மேவு வித்தே
ஒக்கவிரு வினையனைத்து மலபாக மிகவு
முருதற்ப முற்றவர்கட் கொழித்துவினை யனைத்தும்

தக்கவதி காரமல மாத்திரமே நிறுத்தித்
தாவிலுருத் திரராகத் தானருளைப் புரிந்தே
துக்கமிலாப் புவனேச ராகச் செய்வர்
தொலைகால முலகமெலாஞ் சுத்தமுத்தி யிவர்க்கே.

இ - ள்: மிக்கதோர் பக்குவத்தில் பிரளயாகலர்க்கும் வினை ஒழித்துப் பரமுத்தி மேவுவித்து - மிகுந்த பிரளயாகலர்க்குத் தீவிரதர சத்தி நிபாதத்தில் மலகன்மங்களை நீக்கிப் பரம மோக்ஷத்தைக் கொடுத்தும்; ஒக்க இருவினை அனைத்தும் மலபாகம் மிகவும் உறாது அற்பம் உற்றவர்கட்கு ஒழித்து வினை அனைத்தும் - இருவினையெல்லாம் சமமாய் மலபரிபாகம் மிகவும் பொருந்தாமல் அற்பம் பொருந்தினவர்களுக்குப் புண்ணிய பாப கன்மங்களெல்லாம் நசிக்கப்பண்ணி; தக்க அதிகார மலம் மாத்திரமே நிறுத்தித் தாவில் உருத்திரராகத் தான் அருளைப் புரிந்து - மலபரிபாகத்துக்குத் தக்க அதிகாரமலமாத்திரமே நிறுத்திச் சுத்தவித்தியா தத்துவத்திலே உருத்திரர் அணுக்களாகக் கெடுதலில்லாத அனுக்கிரகத்தைப்பண்ணி; துக்கம் இலாப் புவனேசர் ஆகச் செய்வர் - சுகமாத்திரமேயாயிருக்கப் புவன பதிகளாகப் பண்ணுவர்; தொலை காலம் உலகம் எல்லாம் சுத்தமுத்தி இவர்க்கே - பிரபஞ்சநாசமாகிற காலத்திலே இந்த ருத்திரான்மாக்களுக்குப் பரமோக்ஷத்தைக் கொடுப்பர் எ - று. (கூஅ)

அ - கை: மேல் ஈசுரசத்தி அதோமாயையைப் பொருந்தி ஆன்மாக்களுக்குத் தனுவாதியைப் பண்ணுநின்ற மாயை காலமாதியான அசாதாரண தத்துவங்களையும் சாதாரண தத்துவங்களையும் தாத்துவிகங்களையும் உண்டாக்கிப் பிரபஞ்சகிருத்தியம் நடத்தும் முறைமை கூறுகின்றது.

99. எண்ணிலுயி ரிருவினைகட் கீட தாக
வீசசத்தி யதோமாயை யிசைந்துதனு முதல்கள்
பண்ணியிடு மாயையுடன் கால மாதி
பலவுயிர்க்கும் வெவ்வேறும் படியுமிது வன்றி
நண்ணியிடும் புவனங்கட் காதார மாக
நலந்திகழ்சா தாரணமாந் தத்துவங்க டமையும்
தண்ணியதாந் தாத்திகங்க டமையு மாக்கிச்
சகமதனை நடத்தியிட றனையுமினி யுரைப்பாம்.

இ - ள்: எண்ணில் உயிர் இருவினைகட்கு ஈடது ஆக ஈசசத்தி அதோமாயை இசைந்து - ஈசுரசத்தி எண்ணிறந்த ஆன்மாக்களினுடைய புண்ணியபாபங்களுக்கீடாக அதோமாயையை அதிட்டித்து; தனுமுதல்கள் பண்ணியிடும் மாயையுடன் காலம் ஆதி பல உயிர்க்கும் வெவ்வேறும் படியும் - எல்லா ஆன்மாக்களுக்கும் தேகம் முதலாயினவற்றைச் செய்யாநிற்கின்ற மாயையுடனே காலமுதலான தத்துவங்கள் எல்லா ஆன்மாக்களுக்கும் அசாதாரணமாக உண்டாம்படியும்; இது அன்றி நண்ணியிடும் புவனங்

கட்கு ஆதாரம் ஆக நலம் திகழ் சாதாரணமாம் தத்துவங்கள் தமையும் - இதுவல்லாமல் புவனுதாரமாகப் பொருந்த நன்மை விளங்கச் சாதாரண மான தத்துவங்களையும்; தண்ணளியதாம் தாத்திகங்கள் தமையும் ஆக்கி - தத்துவங்களுடைய காரியமாயிருக்கிற தாத்துவிகங்களையும் உண்டாக்கி; சகம் அதனை நடத்தியிடல் தனையும் இனி உரைப்பாம் - பிரபஞ்ச சிருட்டி யைப் பண்ணும் முறைமையினையும் மேற்சொல்லுவாம் எ - று. (கூகூ)

அ - கை: மேல் மகேசுரருடைய பிரபஞ்ச கிருத்தியமும் சீகண்ட பகவானுடைய பிரபஞ்ச கிருத்தியமும் கூறுகின்றது.

100. ஈசர்சத்தி யால்மாயை கலங்கல் செய்த
விடமாயா தத்துவமா மிதிற்கால நியதி
தேசுருவாங் கலையுதிக்கு முற்பிற்பா டின்றிச்
சேர்ப்பரிதிற் புவனங்க டமையருளாற் சிறக்க
ஆசிலருட் சீகண்ட வுருத்திரர்தாங் கலையி
லவ்வியத்தம் பிரதானம் பிரகிருதி யாகப்
பேசியிடும் பரியாய நாமமுறு மாலைப்
பிறப்பிப்பர் வித்தையையும் பினைராகந் தனையும்.

இ - ள்: ஈசர் சத்தியால் மாயை கலங்கல் செய்த இடம் மாயாதத் துவமாம் - மகேசுவரர் தம்முடைய சத்தியினுலே மாயையைக் காரியோன் முகம் பண்ணினவிடம் மாயாதத்துவமென்று பெயராம்; இதில் காலம் நியதி தேசு உரு ஆம் கலை உதிக்கும் முற்பிற்பாடு இன்றி - இந்த மாயா தத்துவத் தினின்றும் ஏக காலத்திலே காலம், நியதி, பிரகாச ரூபமான கலை என்னும் தத்துவங்கள் உண்டாகும்; சேர்ப்பர் இதில் புவனங்கள் தமை அருளால் சிறக்க - இந்தத் தத்துவங்களிலே கிருபையினுலே புவனங்களை அழகாக உண்டாக்குவர்; ஆசில் அருள் சீகண்ட உருத்திரர்தாம் - குற்றமில்லாத கிருபையையுடைய சீகண்டருத்திரரானவர்; கலையில் அவ்வியத்தம் பிரதா னம் பிரகிருதி ஆகப் பேசியிடும் பரியாய நாமம் உறும் மாலைப் பிறப்பிப்பர் வித்தையையும் பின்னை ராகந்தனையும் - கலாதத்துவத்திலே நின்றும் அவ் வியத்தம் என்றும் பிரதானம் என்றும் பிரகிருதியென்றும் பரியாயப்பேர் பொருந்தச் சொல்லப்பட்ட மாலை உண்டாக்குவர், பின்பு அந்தக் கலையிலே நின்றும் வித்தியாதத்துவத்தையும் அராகதத்துவத்தையும் உண்டாக்குவர் என்றவாறு. (ர)

அ - கை: மேல் கலாதி பஞ்ச தத்துவங்களுடைய கிருத்தியம் கூறு கின்றது.

101. காலந்தான் வியாபியா யருவ மாகிக்
கழிகால நிகழ்காலம் வருங்கால மென்றே
ஏலுந்தான் பலவுயிர்க ளியற்றுமிரு வினையா
லிசைந்தபல மவரவர்கட் கேயிசைக்கு நியதி

மேலுந்துங் கலையாண வத்தைச் சற்றே
விடநீக்கி யான்மாவி னறிவுதொழில் விளக்கும்
மாலுந்தும் புலனறிவை யாக்கும் வித்தை
மாசதனி லாசையது ராகத்தால் வருமே.

இ - ள் : காலம் தான் வியாபியாய் அருவமாகிக் கழிகாலம் நிகழ் காலம் வரும்காலம் என்றே ஏலும் - காலதத்துவமானது தான் வியாபகமாய் அருபமாய் இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமாகப் பொருந்தும்; தான் பல உயிர்கள் இயற்றும் இருவினையால் இசைந்த பலம் அவர் அவர்கட்கே இசைக்கும் நியதி - நியதி தத்துவமானது தான் சகலராகிய எல்லா ஆன் மாக்களும் பண்ணுகின்ற புண்ணியபாபங்களாற் பொருந்தப்பட்ட சுகதுக்க பலன்களை அந்த அந்த ஆன்மாக்களுக்கு இராசாக்கினையைப் போலப் பொருந்தப்பண்ணும்; மேல் உந்தும் கலை ஆணவத்தைச் சற்று விட நீக்கி ஆன்மாவின் அறிவு தொழில் விளக்கும் - மேல் பொருந்தும் கலாதத்துவ மானது ஆணவமறைப்பைச் சற்றுவிட்டு நீங்கப்பண்ணி ஆன்மாவினுடைய ஞானேச்சாக்கிரியைகளை விளக்கும்; மால் உந்தும் புலன் அறிவை ஆக்கும் வித்தை - வித்தியாதத்துவமானது ஆன்மஞானத்துக்கு மயக்கம் பொருந்தி யிருக்குஞ் சத்தாதி விடயங்களைத் தரிசிப்பிக்கும்; மாசு அதனில் ஆசையது ராகத்தால் வரும் - அந்த ஆன்மஞானத்துக்கு அஞ்ஞான சொரூபியாயிருக் கிற விஷயத்திலே ஆசையானது அராகதத்துவத்தினாலேவரும் எ - று. (௱க)

அ - கை : மேல் புருட தத்துவோற்பத்தியும் அதனுடைய தொழி லும் கூறுகின்றது.

102. எண்ணெயுடன் றிரியங்கி யிசைந்த போதங்
கெரிசுடராம் விளக்கான தென்ன வேதான்
பண்ணமருங் காலாதி யவித்தை கூடப்
பஞ்சகஞ் சுகமென்னும் பரிசதனை யுடைத்தாய்
நண்ணியிடும் புருடனுந் தத்துவமே லதனு
னவின்றிடுவ ரான்மாவைப் புருடனென நாளும்
உண்ணவரும் வினைப்பயனுக் கீடாகக் கால
வுருத்திரர்தம் புவனமள வுயிரினைக்கொண் டுழலும்.

இ - ள் : எண்ணெயுடன் திரி அங்கி இசைந்தபோது அங்கு எரி சுடர் ஆம் விளக்கு ஆனது என்ன - எண்ணெயும் திரியும் அக்கினியுங்கூடின போது அவ்விடத்தில் பிரகாசமாயிருக்கிற விளக்கானதுபோல; தான் பண் அமரும் காலம் ஆதி அவித்தை கூடப் பஞ்சகஞ்சுகம் என்னும் பரிசு அதனை உடைத்தாய் நண்ணியிடும் புருடனும் தத்துவம் - முறைமை பொருந்தியிருக் கும் காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் ஐந்து தத்துவமும் பிர கிருதியில் அவித்தையுங்கூடப் பஞ்சகஞ்சுகமென்று சொல்லும் சுபாவத்தை

உடைத்தாய்ப் புருடதத்துவமானது தான் பொருந்தியிடும்; மேல் அதனுல் நவின்றிடுவர் ஆன்மாவைப் புருடன் என நாளும் - மேல் அந்தப் புருட தத்துவ பந்தத்தால் ஆன்மாவை எப்பொழுதும் புருடன் என்று சொல்லு வார்கள்; உண்ண வரும் வினைப்பயனுக்கு ஈடாகக் கால உருத்திரர் தம் புவனம் அளவு உயிரினைக் கொண்டு உழலும் - அந்தப் புருடதத்துவம் புசிக்கவரா நின்ற புண்ணியபாப சுகதுக்க பலன்களுக்கீடாகக் காலாக்கினி ருத்திர புவனமளவாக முடவனைக் குருடன் கொண்டு திரியுமாறு போல ஆன்மாவைக் கொண்டு திரியும் எ - று. (௱உ)

அ - கை : மேல் சீகண்ட பரமேசுவரன் பிரகிருதியிற் குணங்களை உண்டாக்கிப் பிரம விஷ்ணு ருத்திரர்களைக் குணவதிஷ்டிதராகச் செய்ய அவர் சிருட்டி திதி சங்காரங்களைப் பண்ணுவர் என்பது கூறுகின்றது.

103. பிரகிருதி தனின்மூன்று குணங்களையும் விரித்தே
பிரமன்மா னீலவுருத் திரர்க்களிப்பன் பிஞகி
தரையிறுதி யாதியுள தத்துவங்க ளனைத்துந்
தாழ்வறவே யாக்கியளித் தழியுமெனச் சாற்ற
நிரை நிரையே யிராசதத்தைச் சாத்திகதா மதத்தை
நித்தலுந்தா னதிட்டித்து நின்று கொண்டே
உரமுறவே யுலகனைத்து மாக்கியளித் தழிப்ப
ருண்டாகும் படியுமினி மேற்றெரிய வுரைப்பாம்.

இ - ள் : பிரகிருதிதனில் மூன்று குணங்களையும் விரித்து பிரமன் மால் நீல உருத்திரர்க்கு அளிப்பன் பிஞகி - சீகண்ட பகவான் அந்தப் பிரகிருதி மாயையிலே மூன்று குணங்களையும் விரித்துப் பிரம விஷ்ணு நீலருத்திரர்க் குக் கொடுத்து; தரை இறுதி ஆதி உள்ள தத்துவங்கள் அனைத்தும் தாழ்வு அறவே ஆக்கி அளித்து அழியும் எனச் சாற்ற - சித்தம் ஆதியாகப் பிருதிவி அந்தமாயுள்ள தத்துவங்கள் எல்லாவற்றையும் குறைவறவே சிருட்டி திதி சங்காரங்களைப் பண்ணுங்கள் என்று அனுக்கிரகம் பண்ண; நிரை நிரையே இராசதத்தைச் சாத்திக தாமதத்தை நித்தலுந்தான் அதிட்டித்து நின்று கொண்டு . கிரமத்திலே இராசத குணத்தைப் பிரமாவும், சாத்துவிக குணத்தை விஷ்ணுவும், தாமத குணத்தை நீலருத்திரரும் எப்பொழுதும் அதிட்டித்துக்கொண்டு நின்று; உரம் உற உலகு அனைத்தும் ஆக்கி அளித்து அழிப்பர் - திடம் பொருந்த எல்லாவுலகங்களையும் உண்டாக்கி இரட்சித்துச் சங்கரிப்பார்கள்; உண்டாகும்படியும் இனிமேல் தெரிய உரைப் பாம் - இனிப் பிரகிருதியிலேநின்று தத்துவங்களும் கிரியைகளும் உண்டாம் படி மேல் தெரியச் சொல்லுவாம் எ - று. (௱௩)

அ - கை : மேல் சித்தம் புத்தி என்னும் தத்துவங்களுடைய உற் பத்தியும் கிருத்தியமும் கூறுகின்றது.

104. மானதனி லதோபாகஞ் சித்த மாகி
மன்னியிடுஞ் சிந்தனையை மற்றதனிற் குணங்கள்
தானிரண்டைச் சாத்துவிக மடக்கி நிற்கத்
தனிலுதிக்கும் புத்தியாந் தத்துவந்தா னதுவும்
ஊனமற நிச்சயஞ்செய் யுருவ மென்று
முயிர்வினையின் வாதனைக ளுறுவ தென்றும்
ஆனவிவை யிரண்டாகுங் குணங்க ளாலே
யைம்பதாம் பாவங்க ளடையுந் தானே.

இ - ள்: மான் அதனில் அதோபாகம் சித்தம் ஆகி மன்னியிடும் சிந்தனையை - சாத்துவிக இராசத தாமதம் என்று பிரிக்கப்படாமலிருக்கிற முக்குணங்கள் சரியாய்க் கூடிநிற்கும் அவதரம் மான், அந்த மான் என்பதற்குப் பரியாயநாமமாகும் பிரகிருதி, அந்தப் பிரகிருதியிலே நின்று சீகண்ட பரமேசுவர சத்தியாற் கலக்கப்பட்ட அதோபாகம் சாத்துவிக இராசத தாமதமென்று பிரிக்கப்பட்டுச் சரியாகக் கூடின அவதரம் குணதத்துவம், அது சித்தமென்னும் பேராகி ஆன்மாக்களுக்குப் போக சிந்தனையைப் பண்ணுவிக்கும்; மற்று அதனில் குணங்கள்தான் இரண்டைச் சாத்துவிகம் அடக்கி நிற்கத் தனில் உதிக்கும் புத்தியாம் தத்துவந்தான் - அல்லாமல் அந்தச் சாத்துவிக ராசத தாமத குண சொரூபமாய் நின்ற அதோபாகத்தில் தாமத இராசதங்கள் அடங்கிச் சாத்துவிகம் ஆதிக்கமாகி நின்றபொழுது புத்திதத்துவமானது உண்டாகும்; அதுவும் ஊனம் அற நிச்சயம் செய் உருவம் என்றும் உயிர்வினையின் வாதனைகள் உறுவது என்றும்ஆன இவை இரண்டாகும் - அந்தப் புத்திதத்துவமும் பழுதில்லாமல் ஆன்மாக்களுக்கு விஷய நிச்சயத்தைப் பண்ணுகையால் நிச்சய ஆன்மாவென்றும், ஆன்மாக்கள் பண்ணுங் கன்மங்கள் தூலங்கெட்டு வாசனான்மாவாகப் பொருந்தி நிற்கையால் வாசனான்மாவென்றும் இரண்டு விதமாம்; குணங்களாலே ஐம்பதாம் பாவங்கள் அடையும் தான் - அந்தப் புத்திதத்துவமானது குண பேதங்களினாலே அடையும் பாவங்கள் ஐம்பது பேதமாம் எ - று. (௱௪)

அ - கை: மேல் இரண்டு விருத்தங்களால் புத்தி பாவாஷ்டக சொரூபமாய் ஐம்பது பேதமாய் நிற்கும் என்பது கூறுகின்றது.

105- சாத்திகத்தா லேதரும ஞானமுடன் விடயந்
தனில்வயிராக் கியமாகுஞ் சாற்றுமிரா சதத்தால்
மாத்திரமில் லாச்செல்வத் திச்சையுட னியற்றல்
வந்தணையுந் தாமதத்தால் மருவியிடு மதன்மம்
காத்திரந்தா னென்றல்மூத லஞ்ஞான விடயக்
கண்ணரியினிற் பட்டுழன்று கவற்சி கொள்ளும்
சோத்திரத்தை யாதிவழி துறத்த லின்மை
தொகுசெல்வ மின்மையுமாஞ் சொல்லிற் றுலோ.

இ - ள் : சாத்திகத்தாலே தருமஞானமுடன் விடயந்தனில் வயிராக்கிய மாகும் - சாத்துவிக குணத்தினுலே தருமமும், ஞானமும், சத்தாதி விடயங் களிற் செல்லாமனிற்கும் வயிராக்கியமும் ஆகிய மூன்றும் உண்டாகும்; சாற் றும் இராசதத்தால் மாத்திரம் இல்லாச் செல்வத்து இச்சையுடன் - சொல்லப் பட்ட இராசதத்தால் மட்டில்லாத ஆசையுடனே செல்வமானது உண்டாம்; இயற்றல் வந்து அணையும் தாமதத்தால் மருவியிடும் அதன்மம் காத்திரம் தான் என்றல் முதல் அஞ்ஞான விடயக் கண்ணியினில் பட்டு உழன்று கவற்சிகொள்ளும் சோத்திரத்தை யாதிவழி துறத்தல் இன்மை தொகு செல் வம் இன்மையுமாம் சொல்லில் தானே - பூர்வ ஜன்மங்களிற் பண்ணின பாபங்கள் பந்தமாக வந்து கூடியிருக்குந் தாமத குணத்தினுலே அதர்மமும், தேகேந்திரியாந்தக்கரணுதிகளை ஆன்மா வென்று சொல்லுகிற அஞ்ஞான மும், சத்தாதி விஷயமாகிற கண்ணியிலே பொருந்திச் சுழன்முனையிலே அழுந்துதல் செய்யுஞ் சுரோத்திரேந்திரியாதி வழியாய் வரும் விஷயங்களை நீங்குதலில்லாமையான அவைராக்கியமுமுண்டாம் எ - று. (௱ரு)

106. தருமமிரு விதத்தாகு ஞானமோ ரைந்தாஞ்
சாற்றும்வயி ராக்கியமு மீரைந் தாகும்
மருவியிடு செல்வமிரு நான்க தாகு
மற்றதன்ம மோரிரண்டா மாச தாகத்
துரிசதுறு மஞ்ஞான மோரைந் தாகும்
துறப்பிலதோர் பத்தாகச் சொல்லுஞ் செல்வம்
கருதலிலா தோரெட்டா மாகவிவை யெல்லாங்
கணக்கிடுங்கா லைம்பதாய்க் கழறு நூலே.

இ - ள் : தருமம் இருவிதத்து ஆகும் - தருமமானது இயமம் என்றும் நியமம் என்றும் இரண்டு விதமாம்; ஞானம் ஓர் ஐந்து ஆம் - ஞானமானது *லௌகிகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்த்ரம் என்னும் ஐந்தாய்ப் பின்னும் அது புத்தி விகற்பத்தாற் பத்து விதமாம்.

அவையாவன : (க) சாருவாகர் தேகமே ஆன்மாவென்னும் ஞான மொன்று, (உ) சோதிடர் பஞ்சபூதமே உள்ளதென்னும் ஞானமும், கௌளர் பஞ்சபூதான்மாவாயிருக்கிற சத்தியென்னும் ஞானமும், வாமதக்ஷிண மார்க்க ராகிய சாத்தர் காபாலிகர் காளாமுகர்கள் ஈசுவரனுண்டென்று சொல்லி வேதவிருத்தாசாரஞ் செய்யும் ஞானமும் பௌதிக பேதமாகையால், இந்த மூன்றுவித ஞானமும் ஒன்று, (ங) பௌராணிக ஸ்மார்த்தர் பஞ்சதன்மாத் திரையே பிரமமென்னும் ஞானமொன்று, (ச) இந்திரியான்மவாதிகள் இந் திரியமே ஆன்மாவென்னும் ஞானமொன்று, (ரு) நியாயவாதிகள் மனசு

* லௌகிக முதலிய ஐந்தும் சைவசமயநெறி, பொது, 338, உரையில் சாத் திரங்க ளெனப்பட்டன. அவை வினையெனச் சிவஞானபோதச் சிவாக்கிர பாடி யத்து [பக்கம் 400] ஓதப்பட்டது. காமிகத்துத் தந்திரமெனப்பட்டது.

பரியந்தமே தத்துவமென்னும் ஞானமொன்று, (கூ) வைசேஷிகர் அகங்காரமே ஆன்மாவென்னும் ஞானமொன்று, (எ) பௌத்தர் புத்தியே ஆன்மாவென்னும் ஞானமொன்று, (அ) ஆருகதர் குணமே ஆன்மாவென்னும் ஞானமொன்று, (கூ) பாஞ்சராத்திரிகள் விஷ்ணுதுல்லியமா யிருக்கிறதே மோக்ஷமென்னும் ஞானமொன்று, (ய) சாங்கியர் பிரகிருதியை நீங்கி நிற்பதே மோக்ஷமென்னும் ஞானமும், மாயா வாதிகளும் பிரதானத்துக்கு அன்னியமான புருஷன் தான் என்றறிகின்றதே மோட்சமென்னும் ஞானமும், கன்ம யோகிகளும் இப்படியே, இவர்கள் மூன்று பேர்களுக்கும் பிராப்யத்தானம் ஒன்ருகையால் இந்த மூன்றுவித ஞானமும் ஒன்று ஆகப் பத்து;

*சாற்றும் வயிராக்கியமும் ஈரைந்தாகும்* - சொல்லப்பட்ட வைராக்கியம் பத்துவிதமாகும்.

அவையாவன: (க) வியாதி பீடையால் வரும் வைராக்கியம் ஒன்று, (உ) தன்னுடைய தேக தோஷத்தைக்கொண்டு வரும் தேக வைராக்கியம் ஒன்று, (ங) ஐசுவரிய வைராக்கியம் ஒன்று, (ச) தாபத்திரயங்களினுல் வரும் பிரபஞ்ச வைராக்கியம் ஒன்று, (ரு) திரவிய வைராக்கியம் ஒன்று, (கூ) மாதா பிதா பிரிந்ததனுல் வரும் சங்க வைராக்கியம் ஒன்று, (எ) ஸ்திரீயினிடத்திலே ஒரு தோஷத்தைக் கண்டுவரும் வைராக்கியம் ஒன்று, (அ) அன்னபானுதிகள் புசிப்பினுல் திருப்தியாகாதென்னும் புசிப்பு வைராக்கியமொன்று, (கூ) தானத்துக்குப் போய்த் தள்ளுண்டதனுல் வருந் தான வைராக்கியமொன்று, (ய) இகத்திலே ஒரு ஏதுவுமில்லாமல் பூர்வஜன்ம பூசாபல புண்ணிய பலத்திஞலேயே தேகாதியான சர்வ பதார்த்தங்களிலும் வரும் வைராக்கியமொன்று ஆகப் பத்து;

*மருவியிடு செல்வம் இருநான்கது ஆகும்* - பொருந்தப்படா நின்ற செல்வமானது அணிமாவென்றும், மகிமாவென்றும், கரிமாவென்றும், லகிமாவென்றும், பிராப்தியென்றும், பிராகாமியமென்றும், ஈசித்துவமென்றும், வசித்துவமென்றும் எட்டு விதமாம்; *மற்று அதன்மம் ஓர் இரண்டாம்*-அதர்மமாவது இரண்டாம், அவையாவன: அயமமென்றும் அநியமமென்றும் இரண்டு விதமாம்; *மாசு அது ஆகத் துரிசு அது உறும் அஞ்ஞானம் ஓரைந்து ஆகும்* - குற்றம் பொருந்தியிருக்கிற அஞ்ஞானமானது தமசு மோகம் மகாமோகம் தாமிசிரம் அந்ததாமிசிரம் என்று ஐந்து விதமாம்.

*துறப்பு இலது ஓர் பத்தாகச் சொல்லும்* - விஷயங்களில் துறவில்லாத அவைராக்கியமானது (க) வியாதி பீடையினுலே வரும் துக்கத்தில் அழுந்தி நிற்கும் அவைராக்கியம் ஒன்று, (உ) தன்னுடைய தேக தோஷத்தைக் காணுமல் தேகந்தானுய்நிற்கும் அவைராக்கியமொன்று, (ங) ஐசுவரியங்களில் அனுபவிக்கிற காலத்தில் அழுந்திநிற்கும் அவைராக்கியமொன்று, (ச) ஆத்தியான்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம் என்னும் தாபத்திரயங்களில் வரும் சுகதுக்கங்களில் அழுந்திநிற்கும் அவைராக்கியமொன்று, (ரு) அருத்தத்தைத் தேடுகிறதினுலும் இரட்சிக்கிறதினுலும் துக்கங்காணுமல் நிற்கும் அவைராக்கியமொன்று, (கூ) மாதா பிதாக்கள் முதலான ஜனங்கள் பிரிந்

தினுல் வைராக்கியம் வாராமல் துக்கத்திலழுந்திநிற்கும் அவைராக்கிய மொன்று, (எ) தன்னுடைய ஸ்திரீயினிடத்தில் குறைதோஷங்களைக் கண்டும் கேட்டும் நீங்காமலிருக்கும் அவைராக்கியமொன்று, (அ) அன்னபானுதிகள் எத்தனை புசித்தாலும் திருப்தி அடையாதென்று அறியாமல் நிற்கும் அவை ராக்கிய மொன்று, (கூ) தானத்துக்குப் போய்த் தள்ளுண்டு வந்தும் அதில் விரத்தி வராமல் நிற்கும் அவைராக்கியமொன்று, (ம) பூர்வ ஜன்மத்தில் பூசாதி புண்ணியமில்லாமல் தேகாதியான சர்வப்பிரபஞ்சத்தில் விரத்தி வராமனிற்கும் அவைராக்கியமொன்று ஆக இப்படிப் பத்துவிதமாம்;

செல்வம் கருதல் இல்லாது ஓர் எட்டாம் - செல்வம் வேண்டுமென்று நினைத்தலில்லாமையான அனைசுவரியமானது அநணிமா அமகிமா அலகிமா அகரிமா அப்பிராப்தி அப்பிராகாமியம் அநீசித்துவம் அவசித்துவம் என்று எட்டு விதமாம்;

ஆக இவை எல்லாம் கணக்கிடுங்கால் ஐம்பதாய்க் கழறும் நூல் - புத்திபேதமாய் நின்ற இவைகள் எல்லாவற்றையும் தொகையிடுங்கால் ஐம்பது பேதமாகச் சிவாகமங்களிலே சொல்லும்.

இந்தப் பஞ்சாசத்பாவங்களுடைய சொரூபங்களும் இவற்றின் பேதங் களும் சிவஞானசித்தியார் வியாக்கியானத்திற் கண்டுகொள்க. எ-று. (நகூ)

அ - கை : மேல் இரண்டு விருத்தங்களினுலே ஆன்மாக்களினுடைய கன்மானுகுணமாகக் குணங்களின் ஏற்றக்குறைச்சலினுல் ஆறு குணம் உண்டாமென்பது கூறுகின்றது.

107. முக்குணங்க டம்மிலொரு குணமொருத்தர் பாலே
முழுவதுநின் * றிடாவினையின் முறைமை யாலே
அக்குணங்க ளிரண்டையொன் றடக்கவத னுலே
யாறுகுண முதிக்குமுணர் மூன்றுகுண மதனில்
இக்குணங்கள் கூட்டத்தா லெண்ணில்குண முளவா
மியம்பிலது பெருகுமினி யிருமூன்று குணங்கள்
புக்கபடி யுரைத்திடுவா மிவற்றி னுள்ளே
பொல்லாத செயற்குணங்கள் பொருந்தா வாறே.

இ - ள் : வினையின் முறைமையாலே முக்குணங்கள் தம்மில் ஒரு குணம் ஒருத்தர் பாலே முழுவதும் நின்றிடா - ஆன்மாக்கள் பண்ணின கன்மத்தினுடைய வழியாலே சாத்துவிக ராசத தாமத மென்னுங் குணங்களிலே ஒரு குணமானது ஓர் ஆன்மாவி னிடத்திலே ஒரு குணமாய் நில்லாமல் மூன்று குணங்களும் ஏற்றக் குறைச்சலாய் நிற்கும்; அக்குணங்கள்

* றிடா வுயிர்கள் வினையின்முறை யாலே - பாடபேதம்.

இரண்டை ஒன்று அடக்க அதனாலே ஆறுகுணம் உதிக்கும் - அந்தச் சாத்து விக ராசத தாமத குணங்கள் இரண்டு குணத்தை ஒவ்வொரு குணம் அடக்க அதனால் ஆறு குணங்க ளுண்டாகும்; மூன்று குணம் அதனில் இக்குணங்கள் கூட்டத்தால் எண் இல் குணம் உள ஆம் உணர் - சாத்து விக ராசத தாமதமாய் நின்ற அவற்றிலே இந்த ஆறு குணங்களுடைய சமூகத்தாலே எண்ணிறந்த குணங்களுண்டாகும், இந்தக் குணவிகற்பங்க ளெல்லாம் விரிந்த சாத்திரங்களில் அறி; இயம்பில் அது பெருகும் - குண பேதங்களெல்லாம் சொல்லில் இந்தச் சாத்திரம் விரிந்து போம்; இனி இருமூன்று குணங்கள் புக்கபடி உரைத்திடுவாம் இவற்றின் உள்ளே பொல்லாத செயல் குணங்கள் பொருந்தா ஆறு - மேல் இந்தக் குணபேதங் களுக்குள்ளே குற்றத்தைச் செய்யாநின்ற குணங்களை ஆன்மாக்கள் அடை யாதவாறு ஆறு குணங்களுண்டாம் பிரகாரஞ் சொல்லுகிறோம் எ - று. (௱௭)

108. தருமநெறி சாத்துவிகந் தாமதரா சதத்தைத்
தானடக்கத் தோன்றியிடும் பிரகாசம் லகுதை
வரும்வகைரா சதமதுதான் சாத்திகதா மதத்தை
மறைத்தொளிர வுவட்டம்பஞ் சலனமிவை வருமால்
பொருவிலொளி சாத்துவிக ராசதந்தான் புதையப்
பொருந்தியிடிற் றமதந்தான் புந்தி தன்னில்
குருவென்னுங் குணத்துடனே வரணகமுந் தோற்றுங்
கூறிலிவை யாறுகுங் குணங்க டாமே.

இ - ள்: தரும நெறி சாத்துவிகம் தாமத ராசதத்தைத் தான் அடக்கத் தோன்றியிடும் பிரகாசம் லகுதை - தன்ம மார்க்கத்தைச் செய்யா நின்ற சாத்துவிக குணமானது இராசத தாமதங்களை யடக்கித் தான் மேலிட் டிருந்த பொழுது பிரகாசம் என்னும் குணமும் லகுதை யென்னும் குணமும் உண்டாகும்; வரும் வகை ராசதம் அது தான் சாத்திக தாமதத்தை மறைத்து ஒளிர உவட்டம்பம் சலனம் இவை வரும் ஆல் - வாராநின்ற வகையையுடைய ராசத குணமானது சாத்துவிக தாமதங்களை யடக்கித் தான் மேலிட்டிருந்தபொழுது உபஷ்டம்பம் என்னும் குணமும் சலனம் என்னும் குணமும் உண்டாகும்; பொருவில் ஒளி சாத்துவிக ராசதந்தான் புதையப் பொருந்தியிடில் தாமதம் தான் புந்திதன்னில் குரு என்னும் குணத்துடனே வரணகமும் தோற்றும் - குற்றமில்லாத பிரகாசமாயிருக்கிற சாத்துவிக ராசத குணங்களடங்கத் தாமத குணமானது தான் ஆதிக்க மாகக் கூடிநின்ற விடத்திலே குருவென்னுங் குணமும் வரணகமென்னுங் குணமும் உண்டாகும்; கூறில் இவை ஆறு ஆகும் குணங்கள் தாம் - இந்தக் குணங்கள் தாம் சொல்லுமிடத்து ஆறு குணங்களாகும் எ-று. (௱அ)

அ - கை: மேல் புத்திதத்துவத்திலே அகங்காரம் தோன்றிக் குணவிகற்பத்தால் மூன்றுபேதமாம் என்பது கூறுகின்றது,

109. புந்திதனி லகங்கார ந் தோன்றியே மனந்தான்
பொறியதனுற் பற்றுபொருள் கைக்கொள்வ தாகிப்
பந்தமுற யானெனதென் றேயபிமா னத்தைப்
பண்ணுவதாய் வாயுக்கள் பலவினையு மியற்றிச்
சந்தமுறுங் குணமூன்ருல் மூன்ற தாகுந்
தைசதவை காரியுடன் பூதாதி தானென்
றிந்தவகங் காரங்கள் மூன்றினிட மாயே
யினியுதிக்குந் தத்துவங்க ளியல்பினையு முரைப்பாம்.

இ - ள்: புந்திதனில் அகங்காரம் தோன்றியே மனந்தான் பொறியதனுல் பற்று பொருள் கைக்கொள்வது ஆகி - புத்தி தத்துவத்திலேநின்றும் அகங்கார தத்துவமுண்டாகி மனமானது இந்திரியங்கள் வழியாகப் பற்றின விடயங்களைக் கைக்கொள்ளுகிற சொரூபமாகி; பந்தம் உற யான் எனதென்று அபிமானத்தைப் பண்ணுவதாய் - பந்தம் பொருந்த என்னது யான் என்று அபிமானம் பண்ணுகின்ற சொரூபமாய்; வாயுக்கள் பலவினையும் இயற்றி - பிராணுதி வாயுக்களுடைய பலவிதமான தொழிலையும் பிரேரிக்கிறதாய்; சந்தம் உறும் குணம் மூன்ருல் மூன்றது ஆகும் தைசத வைகாரியுடன் பூதாதி தான் என்று - எப்பொழுதும் பொருந்தியிருக்கும் மூன்று குணங்களாலே தைசத வகங்காரமென்றும், வைகாரி யகங்காரமென்றும், பூதாதியகங்காரமென்றும் மூன்று விதமாகும்; இந்த அகங்காரங்கள் மூன்றினிடமாயே இனி உதிக்கும் தத்துவங்கள் இயல்பினையும் உரைப்பாம் - இங்ஙனம் சொல்லப்பட்ட அகங்காரங்கள் மூன்றினிடமாகவே மேல் உண்டாகுந் தத்துவங்களுடைய சுவபாவத்தையுஞ் சொல்லுகிறேம். எ - று (௱௯)

அ - கை: மேல் தைசத வகங்காரத்திலே மனமும் ஞானேந்திரியமும் உற்பத்தியாவதும் அவற்றின் கிருத்தியமும் கூறுகின்றது.

110. முந்தமனம் தைசதத்தே முளைக்கும் பின்னர்
முளைப்பதாஞ் சோத்திரத்தை முதலா வைந்தும்
அந்தமனங் காகத்தின் விழியே போல
அகத்தினிலும் புறத்தினிலு மடைந்துபொறிக் கெதிராய்
வந்தவிட யங்கடமைப் பற்றி யுள்ளு
மன்னியதைப் பாவிக்கும் வகைய தாகும்
சிந்தைசெயிற் செவிதோல்க ணுக்கு மூக்குச்
சேர்சத்த மாதியைந்தைத் தெரிவிக்கு முயிர்க்கே.

இ - ள்: முந்த மனம் தைசதத்தே முளைக்கும் - தைசதவகங்காரத்தினின்றும் ஞானேந்திரியம் உற்பத்தியாகுமுன் மனம் உண்டாகும்; பின்னர் முளைப்பதாம் சோத்திரத்தை முதலா ஐந்தும் - மன தத்துவமுண்டாகியதற்குப் பின்பு சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்ஙுவை ஆக்கிராணம் என்னும்

ஞானேந்திரியம் ஐந்தும் உண்டாகும்; அந்த மனம் காகத்தின் விழியே போல அகத்தினிலும் புறத்தினிலும் அடைந்து பொறிக்கு எதிராய் வந்த விடயங்கள் தம்மைப் பற்றி உள்ளும் மன்னியதைப் பாவிக்கும் வகையது ஆகும் - முந்தியுண்டான மனமானது காக்கைக் கண்ணானது உள்ளும் புறம்புஞ் சஞ்சரிப்பது போல இந்திரியத்தின் முன்னாக வந்து சத்தாதி விடயங்களைப் பற்றி அந்தப் பற்றின விடயங்களை உள்ளேயும் பாவிக்கிற சொரூபமாய் நிற்கும்; சிந்தைசெயில் செவி தோல் கண் நாக்கு மூக்கு சேர் சத்தமாதி ஐந்தைத் தெரிவிக்கும் உயிர்க்கு - சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்ஙுவை ஆக்கிராணம் என்னும் பஞ்சேந்திரியங்களை விசாரிக்குமிடத்தில் ஆன்மாவுக்குப் பொருந்தியிருக்கிற சத்தப் பரிச ரூப ரச கந்தம் என்னும் விடயங்கள் ஐந்தையும் அறிவிக்கும் எ - று. (௱ய)

அ - கை: மேல் ஞானேந்திரியங்கள் ஐந்தும் பஞ்ச பூதங்களிலே தோன்றுமென்று சொல்ல, நீர் அகங்காரத்திலே தோன்றுமென்று சொல்லுவானேன் என்னும் சங்கையும் அதற்கு உத்தரமும் கூறுகின்றது.

111. பொறியைந்தும் பூதங்க டம்மிற் றோன்றிப்
பூதங்கள் குணமான புலன்க டம்மை
நெறியொன்றப் புணருமகங் காரந் தன்னி
னீர்பொறிக ளுதிக்குமென்று நிகழ்த்தா தென்னில்
குறியனலி னயனங்க *ளுதிக்கு மாகிற்
குளிர்புனலுட் பொருள்கவர்தல் கூடு மெங்ஙன்
செறிபொழுதி னீரினுள்ளே சாந்த மாமாற்
றேர்ந்திடுமற் றவைகளுமிச் செய்கை யென்றே.

இ - ள்: பொறி ஐந்தும் பூதங்கள் தம்மில் தோன்றிப் பூதங்கள் குணமான புலன்கள் தம்மை நெறி ஒன்றப் புணரும் - சுரோத்திராதி இந்திரியங்கள் ஐந்தும் ஆகாசாதி ஐந்து பூதங்களிலே உண்டாகி அந்தப் பூதங்களின் குணமான சத்தாதி விடயங்களை ஒவ்வோரிந்திரியம் ஒவ்வோரிந்திரியத்தைக் கிரகிக்கு முறைமையைப் பொருந்தக்கூடும்; நீர் அகங்காரந்தனில் பொறிகள் உதிக்கும் என்று †நிகழ்த்தாது என்னில் - நீர் அகங்கார தத்துவத்திலே நின்றும் இந்திரியங்கள் உதிக்குமென்று சொல்லுகிறது கூடாதென்னில்; குறி அனலில் நயனங்கள் உதிக்கும் ஆகில் குளிர் புனலுள் பொருள் கவர்தல் எங்ஙன் கூடும் செறி பொழுதில் நீரினுள்ளே சாந்தம் ஆம் ஆல் - ரூபமாகிய தேயு பூதத்திலே சட்சு இந்திரியங்களுண்டாமாகில் குளிர்மை பொருந்தின சலத்திற்குள் ளிருக்கின்ற பொருளைக் கிரகிக்கிறது எப்படிக் கூடும்? தேயு பூதகாரியமான சட்சு இந்திரியமானது அப்பு பூத காரியமான சலத்துக்குள்ளே பொருந்துகிறபொழுது அக்கினிக்கும்

* ளுதித்த தாகிற் - பாடபேதம். † நிகழ்த்தலாகாது என்பதன் மரூஉ.

சலத்துக்கும் பகையாதலின் நசித்துப்போம், ஆகையால் பூதங்களிலே நின்றும் ஞானேந்திரியங்களுண்டா மென்பது கூடாது; தேர்ந்திடு மற்றவைகளும் இச்செய்கை என்று - நின்ற நாலு இந்திரியங்களும் இப்படியென்று விசாரித்தறி எ-று. (௱௰௧)

அ - கை : மேல் வைகாரியகங்காரத்தில் கன்மேந்திரியங்களுற்பத்தியும், பூதாதியகங்காரத்தில் தன்மாத்திரைக ளுற்பத்தியும், அவற்றின் கிரியைகளும் கூறுகின்றது.

112. தொழில்செய்யு மிந்திரியம் வாக்காதி யைந்துந்
தோன்றியே வைகரியிற் சொலவாதி புரியும்
இழிவிலாச் சத்தமுடன் பரிச ரூப
விரதகந் தங்களென வியம்பியவிவ் வைந்தும்
கழிவிலாக் காரணதன் மாத்திரைக ளிதற்குக்
காரணமாம் பூதாதி கருதிலிவை யைந்தும்
வழிமுறையே மனம்புத்தி யகங்காரங் கூட
மருவுபுரி யட்டகமாய் மன்னியிடு முயிர்க்கே.

இ - ள் : தொழில் செய்யும் இந்திரியம் வாக்காதி ஐந்தும் தோன்றியே வைகரியில் சொலவு ஆதி புரியும் - வைகாரி யகங்காரத்திலே நின்றுங் கிரியை பண்ணு நிற்கிற வாக்குப் பாத பாணி பாயு உபத்தம் என்னும் ஐந்து இந்திரியங்களு முண்டாகி வசன கமன தான விசர்க்க ஆனந்தம் என்னும் ஐந்து கிரியைகளையுஞ் செய்யும்; இழிவு இலாச் சத்தமுடன் பரிச ரூப இரத கந்தங்களென இயம்பிய இவ் ஐந்தும் கழிவு இலாக் காரண தன் மாத்திரைகள் இதற்குக் காரணம் ஆம் பூதாதி - காரணமாய் நின்ற பூதாதி யகங்காரத்திலே நின்று குற்றமில்லாத சத்தப் பரிச ரூப ரச கந்தமென்று சொல்லப்பட்ட இவ்வைந்தும் நீங்காமல் நின்ற தன்மாத்திரைகளென்று சொல்லப் பெறும்; கருதில் இவை ஐந்தும் வழிமுறையே மனம் புத்தி அகங்காரம் கூட மருவு புரியட்டகம் ஆய் மன்னியிடும் உயிர்க்கு - விசாரிக்கில் இந்தச் சத்தப் பரிச ரூப ரச கந்த மென்னுந் தன்மாத்திரைக ளைந்தும் கிரமமாகி நின்ற மனம் புத்தி அகங்காரமுங் கூடப் புரியட்டக தேகமாகி ஆன்மாக்களுக்குப் பந்தமாய்ப் பொருந்தும் எ - று. (௱௰௨)

அ - கை : மேல் ஆன்மாக்கள் வினைக்கீடாகப் புரியட்டக தேகத்தாற் போக்குவரவைச் செய்யுமென்றும், இதிலேநின்றுந் தூலதேக முண்டாகு மென்றுங் கூறுகின்றது.

113. பொருந்தியிடும் புரியட்ட சூக்குமரூ பத்தாற்
போக்குவர வனைத்தினையும் புரியுமுயிர் வினையால்
அருந்தியிடுஞ் சுவர்க்கநர காதிகளை யடைந்தே
யறம்பாவத் தாலின்ப துன்பங்க ளவற்றைத்

தெரிந்திடவே தூலமாந் தேகந் தானுஞ்
சேருமிந்தச் சூக்குமதே கத்திலெனத் தேர்க
வருந்தனியே வானாதி சத்தாதி தன்னில்
வருமுறைமே லாகமத்தின் வழிமுறையே யுரைப்பாம்.

இ - ள்: உயிர் வினையால் பொருந்தியிடும் புரியட்ட சூக்கும ரூபத்தால் போக்கு வரவு அனைத்தினையும் புரியும் - ஆன்மாக்கள் செய்யுங் கன்மத்துக் கீடாகப் பொருந்தப்பட்ட புரியட்டகமாய் நின்ற சூக்குமதேகத்தால் யாதாயாதங்களைச் செய்யும்; உயிர் அறம் பாவத்தால் சுவர்க்க நரகாதிகளை யடைந்தே இன்பதுன்பங்க ளவற்றை அருந்தியிடும்-ஆன்மாக்கள் செய்யும் புண்ணிய பாவங்களால் சுவர்க்க நரக பூலோகங்களை யடைந்து சுகதுக்கங்களைப் புசிக்கும்; தெரிந்திடவே தூலமாம் தேகம் தானும் இந்தச் சூக்கும தேகத்தில் சேரும் எனத் தேர்க - இந்தச் சூக்கும தேகத்திலே நின்று சுக துக்கங்களை யனுபவிக்கத் தக்கதாகத் தூல தேகமானது உண்டாகு மென்றறிக: தனியே வரும் வானாதி சத்தாதி தன்னில் வரும் முறை மேல் ஆகமத்தின் வழி முறையே உரைப்பாம் - வெவ்வேறாய் வந்த ஆகாசாதி பூதங்களும் சத்தாதி காரண தன்மாத்திரைகளிலே உண்டாகும் கிரமத்தை மேல் ஆகமத்திற் சொன்னபடி கிரமத்திலே சொல்லுவாம் எ - று. (௱௰௩)

114. வானதுதா னுற்பூத சத்தத்திற் றோன்றும்
வாயுவனுற் பூதசத்த வுற்பூத பரிச
மானவற்றிற் றோன்றுமனுற் பூதசத்தப் பரிச
மாகியிடு முற்பூத ரூபத்தே யனலும்
ஊனமதாஞ் சத்தமுடன் பரிச ரூப
வுற்பூத விரதத்தி லப்புதிக்கு மேல்மண்
தானதுவு மனுற்பூத சத்தாதி நான்காய்த்
தளர்விலா வுற்பூத கந்தத்தாந் தானே.

இ - ள்: வானது தான் உற்பூத சத்தத்தில் தோன்றும் - உற்பூத சத்த தன்மாத்திரையிலே ஆகாசமானது உண்டாகும்; வாயு அனுற்பூத சத்த உற்பூத பரிசம் ஆன அவற்றில் தோன்றும் - அநுற்பூத சத்த உற்பூத பரிச சுவரூபமாயிருக்கிற பரிச தன்மாத்திரையிலே ஆகாயத்தைத் துவந்தித்து வாயுவானது தோன்றும்; அனுற்பூத சத்தப் பரிசம் ஆகியிடும் உற்பூத ரூபத்தே அனலும் - அநுற்பூத சத்தப் பரிச உற்பூத ரூப சுவரூபமாயிருக்கிற ரூப தன்மாத்திரையிலே வாயுவைத் துவந்தித்துக் கொண்டு தேயு உண்டாகும்; ஊனமதாம் சத்தமுடன் பரிச ரூப உற்பூத இரதத்தில் அப்பு உதிக்கும் - அநுற்பூத சத்தப்பரிச ரூப உற்பூத ரச சுவரூபமாயிருக்கிற ரச தன்மாத்திரையிலே தேயுவைத் துவந்தித்துக்கொண்டு அப்பு உண்டாகும்; மேல் மண்தான் அதுவும் அனுற்பூத சத்தாதி நான்காய்த் தளர்வு இலா உற்பூத கந்தத்து ஆம் தான் - மேல் அநுற்பூத

சத்தப் பரிச ரூப ரச உற்பூத கந்த சுவரூபமாயிருக்கிற கந்த தன்மாத்திரையிலே அப்புவைத் துவந்தித்துக்கொண்டு பிருதிவியுண்டாகும் எ-று. (௱௰௪)

அ-கை: மேல் வேதத்திலே ஆன்மாவினிடத்திலே நின்றும் ஆகாசாதிகள் ஒன்றில் ஒன்று தோன்றுமென்னுஞ் சங்கைக்கு உத்தரங் கூறுகின்றது.

115. சாற்றியிட வேதத்தே யான்மாவில் வானந்
தானதனிற் கால்தீநீர் தரணி தானும்
தோற்றியிடு மொன்றிலொன்ரு யென்றே நீர்தாஞ்
சொல்லியதிங் கென்னையெனிற் சொல்லு வாங்கேள்
மாற்றரிய காரணத்தின் குணங்க டாமே
வந்திடுமேற் காரியத்தே யெனும்வழக்கி னுலே
காற்றனனீர் மட்குணங்கள் வானந் தன்னிற்
கண்டதிலை யால்வானங் காரணமன் றென்னே.

இ-ள்: சாற்றியிட வேதத்தே ஆன்மாவில் வானம் தான் அதனில் கால் தீ நீர் தரணி தானும் தோற்றியிடும் ஒன்றில் ஒன்ருய் என்றே - வேதத்திலே ஆன்மாவினின்றும் ஆகாசமும் அந்த ஆகாசத்திலே வாயுவும் வாயுவிலே தேயுவும் தேயுவிலே அப்புவும் அப்புவிலே பிருதிவியும் இப்படி ஒன்றிலே ஒன்ருக வுண்டாகுமென்று சொல்லியிருக்க; நீர்தாம் சொல்லியது இங்கு என்னை எனில் சொல்லுவாம் கேள் - நீர்தாம் இங்கே பூதாதியகங்காரத்திலே தோன்றின பஞ்ச தன்மாத்திரைகளிலே பஞ்ச பூதங்கள் உண்டாகும் என்று சொன்ன தென்ன வென்னில், சொல்லுகிருேம் கேள்; மாற்ற அரிய காரணத்தின் குணங்கள் தாமே வந்திடும் மேல் காரியத்தே என்னும் வழக்கினுலே - நீங்குதற்கரிய காரணத்தினுடைய குணங்கள் காரியத்திலே வரவேண்டுமென்னும் நியாயத்தினுலே; காற்று அனல் நீர் மண் குணங்கள் வானந்தனில் கண்டதிலையால் வானம் காரணம் அன்று என் - வாயுவாதி நாலு பூதங்களுடைய பரிச ரூப ரச கந்தமென்னும் நாலு குணங்களும் ஆகாயத்தினிடத்திலே காணுதபடியால் ஆகாசங் காரணமல்லவென்று சொல் எ-று. (௱௰௫)

அ-கை: மேல் வேதத்திலே ஆன்மாவிலேநின்றும் ஆகாசாதிகள் ஒன்றிலே ஒன்ருகத் தோன்றுமென்ற வசனத்துக்கு உத்தரங் கூறுகின்றது.

116. ஆங்கார நானுனென் றறைவ தாக
வனைத்துயிர்க்கு *மண்ணியதா யடைந்து †கொண்டே
ஓங்கா நின் றுள்ளதா லான்மா வென்றே
யுரைத்ததா மிலக்கணையா வுதித்ததனின் பாலே

* மன்னியதா: பாடபேதம். † நின்றே: பாடபேதம்.

பாங்கார்தன் மாத்திரையி லாவ தாகும்
பாராதி யசித்துதிக்குஞ் சித்திலென்கை பழுதாம்
நீங்காது வானதனை வாயு வாதி
நின்றுகுணஞ் சார்தலினு னிகழ்த்தியதா நினையே.

இ - ள்: அனைத்து உயிர்க்கும் ஆங்காரம் அண்ணியதாய் அடைந்து கொண்டு நான் நான் என்று அறைவதாக ஓங்கா நின்று உள்ளதால் ஆன்மா என்று இலக்கணையா உரைத்ததாம் - எல்லா ஆன்மாக்களுக்கும் அகங்காரமானது கிட்டிப் பொருத்திக்கொண்டு நிற்கையால் நான் நான் என்று சொல்லுவதாக வளராநின்றுள்ளது ஆன்மாவென்று ஆதார இலக்கணையாகச் சொன்னதாம்; உதித்து அதனின்பால் பாங்கார் தன் மாத்திரையில் பாராதி ஆவது ஆகும் - அந்த அகங்காரத்தினிடத்திலே முறையாகவுண்டான பஞ்ச தன்மாத்திரையில் பிருதிவியாதி பஞ்ச பூதங்கள் உண்டாவதாகும்; சித்தில் அசித்து உதிக்கும் என்கை பழுதாம் - இப்படி யல்லாமல் சித்துரூபமாயிருக்கிற ஆன்மாவினிடத்திலே சடரூபமாயிருக்கிற பிருதிவியாதி பூதங்க ளுண்டாகு மென்னில், ஆன்மாவும் ஆகாசம் போலச் சடமும் விகாரியுமாம்; வான் அதனை வாயு ஆதி நீங்காது நின்று குணம் சார்தலினால் நிகழ்த்தியதா நினையே - வாயு ஆதி நாலு பூதங்களும் ஆகாச பூதத்தை விடாமல் நின்று வாயு சத்தப் பரிச குணங்களையும், தேயு சத்தப் பரிச ரூப குணங்களையும், அப்பு சத்தப் பரிச ரூப ரச குணங்களையும், பிருதிவி சத்தப் பரிச ரூப ரச கந்த குணங்களையும் பொருந்துகையால் வேதத்திலே ஒன்றிலே ஒன்று தோன்றுமென்று சொன்னதென அறி எ - று.

அ - கை: மேல் இரண்டு விருத்தத்தால் பிருதிவியாதி பஞ்ச பூதங் களுக்குக் கிரியைகளுங் குணங்களுங் கூறுகின்றது.

117. வானருவாய் வியாபியாய்ச் சத்தகுண மாகி
மற்றுள நாற் பூதங்கட் கவகாச மாகும்
தானதனிற் சலிப்பதா யுருவா ரூபத்
தன்மையாய் நீலமுமாய்ச் சத்தமுடன் பரிச
மானகுணா முடைத்தாகி வாயு நிற்கும்
அனலதுதான் சத்தமுடன் பரிச ரூபம்
ஊனமற வுடைத்தாகிச் செம்மை யாகி
யுறும்பொருளைச் சுடுவதா யோங்குந் தானே.

இ - ள்: வான் அருவாய் வியாபியாய்ச் சத்தகுணம் ஆகி மற்று உள நாற் பூதங்கட்கு அவகாசம் ஆகும்-ஆகாசமானது அரூபமாய் வியாபியாய்ச் சத்தத்தைக் குணமாக வுடையதாகி மற்றும் உண்டான வாயு ஆதி நாலு பூதங்களுக்கும் இடங் கொடுக்கிற சொரூப மாகும்; வாயு தான் அதனில் சலிப்பதாய் உருவாரூபத் தன்மையாய் நீலமுமாய்ச் சத்தமுடன் பரிசம்

ஆன குணமுடைத்தாகி நிற்கும் - வாயு பூதமானது தான் அந்த ஆகாசத்திலே சஞ்சரிப்பதாய் ரூபாரூப சொரூபமாய் நீல நிறமுமாய்ச் சத்த பரிசமென்னுங் குணங்களையு முடைத்தாகி நிற்கும்; அனலதுதான் சத்தமுடன் பரிச ரூபம் ஊனம் அற உடைத்தாகிச் செம்மை ஆகி உறும் பொருளைச் சுடுவதாய் ஓங்கும் - தேயு பூதமானது தான் சத்த பரிச ரூப மென்னுங் குணங்களைக் குறைவற வுடைத்தாகிச் சிவந்த நிறத்தை யுடையதாகித் தன்னைப் பொருந்தின பொருளைச் சுடுவதாய் விளங்கா நிற்கும் எ-று.(௱௰எ)

118. இரதமுரு வப்பரிச சத்தமெனு மிந்த
வீரிரண்டு குணமுடைத்தா யெல்லாத் திக்கும்
பரவுவதாய் வெண்மையாய் நெகிழ்ச்சி யாகும்
பான்மையா மப்பதுதான் பார்க்கிற் பாரும்
உரமதுவாய்த் தாரகமாய்க் கந்த மாதி
யோரைந்து குணமுடைத்தாய்ப் பொன்மை யாகித்
திரமதுவாம் பாகத்தா ஞறு வன்னஞ்
சேர்வதுமா யறுசுவையாய்த் திகழுந் தானே.

இ-ள்: இரதம் உருவப் பரிச சத்தம் என்னும் இந்த ஈரிரண்டு குணமுடைத்தாய் எல்லாத் திக்கும் பரவுவதாய் வெண்மையாய் நெகிழ்ச்சி ஆகும் பான்மையாம் அப்பு அதுதான் - அப்பு பூதமானது தான் இரச ரூப பரிச சத்தமென்னும் இந்த நாலு குணங்களையுடையதாய் எல்லாத் திக்கிலும் பரவி நிற்கிற சுவரூபமாய்த் தவள நிறமாய் இளகின முறைமையுமாய் நிற்கும்; பார்க்கில் பாரும் உரமதுவாய்த் தாரகமாய்க் கந்தம் ஆதி ஓரைந்து குணம் உடைத்தாய்ப் பொன்மை ஆகித் திரம் அதுவாம் பாகத்தால் நாறு வன்னம் சேர்வதுமாய் அறுசுவையாய்த் திகழும் - பிருதிவி பூதத்தையும் விசாரிக்கில் கடின ஸ்வரூபமாய்ச் சராசரங்களைத் தரிக்கிறதாய்க் கந்த இரச ரூப பரிச சத்தம் என்னும் ஐந்து குணங்களுடையதாய்ச் சுவர்ண நிறமாய்த் திடம் பொருந்தியிருக்கிற பாகபேதத்தினாலே பலவிதமான நிறத்தைப் பொருந்துவதாய் ஆறு இரசங்களையுடையதாய்ப் பிரகாசித்து நிற்கும் எ-று.

அ-கை: மேல் இந்தப் பஞ்சபூதங்கள் பஞ்சீகரணமாய் நின்று தேகங்கள் பேதமானதும், அந்தப் பிரகாரம் அண்டங்களுமா மென்னு முறைமையுங் கூறுகின்றது.

119. கருதியிடும் பூதங்க ளைந்தும் பஞ்சீ
கரணமா யொன்றையொன்று கலந்து நின்றே
மருவியிடுங் காயங்க ளாயே மற்று
மன்னியிடு மண்டங்க டாமுமிந்த வகையே

தருவதுதா ளரகர்க்குப் பூத காயஞ்
சடுதியிலாஞ் சூக்குமத்தே பரிணும நரர்க்குத்
திருமருவு மிமையோர்க்குப் பூத சார
தேகமா மக்கணமே திருந்தியசூக் குமத்தே.

இ-ள்: கருதியிடும் பூதங்கள் ஐந்தும் பஞ்சீகரணமாய் ஒன்றை ஒன்று கலந்து நின்று மருவியிடும் காயங்களாய் - சொல்லப்பட்ட பஞ்ச பூதங்களும் ஒரு பூதம் இரண்டு பாகமாய் ஒரு பாகம் அந்தப் பூதமாயிருக்க நின்ற பாகம் நாலாய் நின்று நாலு பூதங்களிலும் அன்னியோன்னியம் வியாபித்திருப்பது இப்படிப் பஞ்சீகரணமாய் நின்று தேகங்களாகவே பொருந்தியிடும்; மற்று மன்னியிடும் அண்டங்கள் தாமும் இந்த வகையே - அல்லாமல் அண்டங்களும் இந்தப் பஞ்சீகரணப் பிரகாரமாகவே பொருந்தும்; அந்தத் தேகம் மூன்று விதமாம், அவையாவன - தருவது தான் நரகர்க்குப் பூதகாயம் சடுதியில் ஆம் சூக்குமத்தே - நரகலோக வாசிகளுக்குத் தரா நின்ற சூக்கும தேகத்திலே நின்றுஞ் சீக்கிரத்திற் பூததேக முண்டாகும்; பரிணும் நரர்க்கு - பூவுலக வாசிகளாயிருக்கிற மனிதர்க்கு அந்தச் சூக்கும தேகத்திலே நின்றும் பரிணும சரீர முண்டாகும்; திரு மருவும் இமையோர்க்குப் பூதசார தேகம் ஆம் அக்கணமே திருந்திய சூக்குமத்தே - அழகு பொருந்திய தேவலோக வாசிகளாயிருக்கிற தேவர்களுக்குத் திருத்தமாய் நின்ற சூக்கும தேகத்திலே அந்த க்ஷணமே பூதசார சரீரம் உண்டாம். எ-று.

120. மண்ணது நாற் கோணமாம் பிறைபோலு மப்பு
வன்னியோர் முக்கோணம் வாயுவறு கோணம்
விண்ணதுதான் வட்டமாம் லவரயஹவ் வாக
மேவியிடும் பீசங்கள் குறிக டாமும்
நண்ணியிடும் வச்சிரமு நளினசுவத் திகமு
நாடுமறு புள்ளியுடன் விந்துவாய் நவிலும்
எண்ணியிடி விந்திரனும் வருணனெரி வாயு
விசைவியோம ரூபியுமா மிதற்கபிமா னிகளே.

இ-ள்:- மண்ணது நாற்கோணமாம் ல பீசம் குறி வச்சிரம் இந்திரன் அபிமானி - பிருதிவியானது நாலு கோணமும் லகார பீசமும் குறி வச்சிரமும் அபிமான தேவதை இந்திரனும் இவைகளை யுடைத்தாய் நிற்கும்; பிறைபோலும் அப்பு வ பீசம் குறி நளினம் வருணன் அபிமானி - அப்புவானது அர்த்த சந்திரனைப்போலுங் கோணமும் வகார பீசமும் குறி பதுமமும் அபிமான தேவன் வருணனும் இவைகளை யுடைத்தாய் நிற்கும்; வன்னி ஓர் முக்கோணம் ர பீசம் குறி சுவத்திகம் எரி அபிமானி - தேயுவானது முக்கோணமும் ரகார பீசமும் குறி சுவத்திகமும் அபிமான தேவன் அக்கினியும் ஆகிய இவைகளை யுடைத்தாய் நிற்கும்; வாயு அறுகோணம் ய பீசம் குறி அறுபுள்ளி வாயு அபிமானி - வாயுவானது அறுகோணமும் யகார

பீசமும் குறி அறுபுள்ளியும் அபிமான தேவன் வாயுவும் இவைகளை யுடைத்தாய் நிற்கும்; விண்ணாது தான் வட்டமாம் ஹ பீசம் குறி விந்து இசை வியோமரூபி அபிமானி - ஆகாசமானது கோணம் வட்டமும் ஹகார பீசமும் குறி விந்துவும் தேவதை வியோமரூபியுமாகிய இவைகளை யுடைத்தாய் நிற்கும்; அப்படிப் பஞ்சபூதங்களும் கிரமமாகப் பொருந்திநிற்கும் எ-று.

அ - கை: மேல் இரண்டு விருத்தங்களால் பஞ்சபூதங்கள் வியாபித்து நிற்கும் முறைமையும் அவற்றிற்கு அதிதேவதைகளும் பஞ்ச கலைகளும் இவ்வாறு நிற்குமென்பதும் ஆன்மாக்கள் செய்யுங் கன்மத்துக்கீடாகப் பலத்தைக் கொடுப்பார்களென்பதுங் கூறுகின்றது.

121. மண்ணதுதான் சூக்குமமாய் வானளவு மாகி
மருவுமதிற் புவனங்கட் காதார மாகும்
தண்ணெனுநீர் சூக்குமமாய் மானளவு மாகுந்
தழலதுதான் சுத்தவித்தை தன்னளவு மாகும்
நண்ணியிடுஞ் சதாசிவத்தே விமல வாயு
நவில்சத்த குணமுடைய வாகாய நாடில்
புண்ணியமாம் விந்துவள வுள்ள தாகும்
பூதமிவை யைந்துக்குந் தேவதைமேற் புகல்வாம்.

இ - ள்: மண்ணதுதான் சூக்குமமாய் வானளவுமாகி மருவும் அதில் புவனங்கட்கு ஆதாரமாகும் - பிருதிவியானது சூக்கும ரூபமாய் ஆகாசமளவும் வியாபியாய் அதிற் பொருந்தியிருக்கும் புவனங்களுக்கு ஆதாரமாய் நிற்கும்; தண் என்னும் நீர் சூக்குமமாய் மான் அளவும் ஆகும் - குளிர்ச்சி பொருந்திய அப்புவானது சூக்கும ரூபமாய்ப் பிரகிருதி பரியந்தம் வியாபித்து நிற்கும்; தழல் அது தான் சுத்த வித்தை தன் அளவும் ஆகும் - தேயுவானது சூக்கும ரூபமாய்ச் சுத்தவித்தியா தத்துவ பரியந்தம் வியாபித்து நிற்கும்; நண்ணியிடும் சதாசிவத்தே விமலவாயு - சுத்தமாயிருக்கிற வாயுவானது சதாசிவ தத்துவ பரியந்தம் வியாபித்து நிற்கும்; நவில் சத்த குணமுடைய ஆகாயம் நாடில் புண்ணியம் ஆம் விந்து அளவு உள்ளதாகும்-சொல்லப்பட்ட சத்தத்தைக் குணமாகவுடைய ஆகாயத்தை விசாரிக்குமிடத்தில் பரிசுத்தமாயிருக்கிற விந்து தத்துவ பரியந்தம் வியாபித்து நிற்கும்; பூதம் இவை ஐந்துக்கும் தேவதை மேல் புகல்வாம் - மேல் இந்தப் பஞ்ச பூதங்களுக்கும் தேவதைகளைச் சொல்லுவாம் எ - று. (௱உக)

122. போற்றியிடுஞ் சூக்குமமாம் பூதங்கட் கடைவே
பூமிக்குப் பூமகனும் புனலதற்கு மாலும்
சாற்றுமெரிக் குருத்திரரும் வாயுவுக்கீ சுரருஞ்
சதாசிவர்மேல் வானினுக்குந் தானதிதே வதையாய்

வீற்றிருந்து நிவிர்த்தாதி கலைகளிலிவ் வாறே
மேவுமுயிர் புரிதல்செயும் வினையனைத்துங் கண்டே
மாற்றிடவவ் வினைகடமைச் சுகதுக்க போக
மருந்துகளை யருந்துவிப்ப ரருள்சேரு மாறே.

இ - ள் : போற்றியிடும் சூக்குமமாம் பூதங்கட்கு அடைவே - சொல்லப்பட்ட சூக்கும மாகிய பஞ்சபூதங்களுக்குங் கிரமத்திலே; பூமிக்குப் பூமகனும் புனலதற்கு மாலும் சாற்றும் எரிக்கு உருத்திரரும் வாயுவுக்கு ஈசுரரும் சதாசிவர்மேல் வானினுக்கும் தான் அதிதேவதையாய் வீற்றிருந்து - பிருதிவிக்கு பிரமாவும், அப்புவுக்கு விஷ்ணுவும், தேயுவுக்கு உருத்திரரும், வாயுவுக்கு மகேசுரரும், ஆகாயத்துக்குச் சதாசிவரும் அதிதேவதைகளாய் இருப்பார், அங்ஙனம் வீற்றிருந்து; நிவிர்த்தாதி கலைகளில் இவ் ஆறே மேவும் - நிவிர்த்தியாதி கலைகளினும் இந்தப் பிரகாரமே பொருந்தும்; உயிர் புரிதல்செய்யும் வினை அனைத்தும் கண்டு மாற்றிட அவ் வினைகள் தம்மைச் சுகதுக்க போக மருந்துகளை அருந்துவிப்பர் அருள் சேருமாறு - பஞ்சகலைகளிலும் பொருந்தியிருக்கின்ற ஆன்மாக்களுக்குத் தொழில் செய்யாநின்ற எல்லாக் கன்மங்களையுங் கண்டு அந்தக் கன்மங்களைப் போக்குவதாகச் சுகதுக்க போகமாகிற ஔஷதங்களைப் பஞ்சகாரணேசுரரைச் சிவன் அதிட்டித்துநின்று அனுக்கிரகம்பண்ணு நிமித்தமாகப் புசிப்பிப்பர் எ - று. (௱௨௨)

அ - கை : மேல் சத்தி சிவர்கள் தத்துவங்களிலே அனுப்பிரவிஷ்டராய் நின்று மூன்று பேதமாகப் பிரேரிப்பரென்பது கூறுகின்றது.

123. தத்துவங்கள் சடமாகி யறிவுதொழி லின்றாற்
சத்திசிவ னனுப்பிரவே சித்திடுவர் சாற்றில்
சுத்ததத் துவமதனிற் சுயமேதோய்ந் திடுவர்
சொலுஞ்சுத்தா சுத்தத்திற் றோய்வரவற் றிடமாய்ச்
சித்தமுத லானவற்றிற் றேவர்கள்பாற் சேர்ந்தே
செறிந்திடுவ ரிவ்வாறு மூவகையாய்ச் சிவன்றான்
ஒத்துறுதல் செய்தருளாற் றத்து வத்துக்
குணர்வுதொழி லாக்கியிட லுணர்த்திடுவா முணரே.

இ - ள் : தத்துவங்கள் சடம் ஆகி அறிவு தொழில் இன்றால் சத்தி சிவன் அனுப்பிரவேசித்திடுவர் - தத்துவங்கள் சடரூபமாகி ஞானக் கிரியைகளில்லாதனவாகையால் சத்தியுஞ் சிவனும் அந்தத் தத்துவங்களிலே அனுசூதமாய் நின்று பிரேரித்திடுவர்கள்; சாற்றில் சுத்ததத்துவம் அதனில் சுயமே தோய்ந்திடுவர் - அந்தப் பிரேரகத்தைச் சொல்லுமிடத்துச் சுத்த தத்துவங்களிலே தாமே நின்று பிரேரிப்பார்கள்; சொலும் சுத்தாசுத்தத்தில் தோய்வர் அவற்று இடமாய் - சொல்லப்பட்ட சுத்தாசுத்தமாகிய ஏழு தத்துவங்களை அந்தச் சுத்ததத்துவ மிடமாக நின்று பிரேரிப்பார்கள்; சித்தம்

முதலானவற்றில் தேவர்கள்பால் சேர்ந்தே செறிந்திடுவர் - சித்தம் முதலான இருபத்து நான்கு தத்துவங்களையும் மேற் சொல்லப்போகிற தேவதைக ளிடமாகப் பொருந்திநின்று பிரேரிப்பார்கள்; இவ்வாறு மூவகையாய்ச் சிவன் தான் ஒத்துறுதல் செய்து அருளால் - இப்படி மூன்று பிரகாரமாகச் சிவன் கிருபையினலே; தத்துவத்துக்கு உணர்வு தொழில் ஆக்கியிடல் உணர்த்திடுவாம் உணர் - தத்துவங்களுக்கு அறிவையும் தொழிலையும் உண் டாக்கின முறைமையை அறிவிக்கிறேம். நீ அறிவாயாக. எ - று. (௱உ௩)

அ - கை : மேல் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களைத் தேவதைகள் பொருந்திநின்று விஷயங்களில் செலுத்தும் முறைமை கூறுகின்றது.

124. வன்னியுட னிந்திரனு முபேந்திரனு மறலி
மாமலரோன் றானுமிவர் வாக்காதி யைந்தைத்
துன்னியிருந் தேவசன கமன தானஞ்
சொல்விசர்க்கா னந்தமைந்தாந் தொழில்புரிவித் திடுவர்
உன்னியிடிற் செவிதோல்கண் ணுக்கு மூக்கி
லுற்றிருந்தெண் டிசைத்தேவர் வாயுவினன் வருணன்
அன்னியமி லாவிருவ ரசுவினிதே வதைக
ளடைந்தறிவிப் பார்சத்த மாதியைந்து மடைவே.

இ - ள் : வன்னியுடன் இந்திரனும் உபேந்திரனும் மறலி மாமல ரோன் தானும் இவர் வாக்கு ஆதி ஐந்தைத் துன்னியிருந்து வசனம் கமனம் தானம் சொல் விசர்க்கம் ஆனந்தம் ஐந்து ஆம் தொழில் புரிவித்திடுவர் - வாக்கிந்திரியத்தை அக்கினியும், பாதம் என்னும் இந்திரியத்தை இந்திரனும், பாணி என்னும் இந்திரியத்தை விஷ்ணுவும், பாயு வென்னும் இந்திரியத்தை யமனும், உபத்த மென்னும் இந்திரியத்தைப் பிரமாவும் ஆகிய இவர்கள் இவ்வைந்தையும் பொருந்திநின்று வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என்னும் ஐந்து கிரியைகளையுஞ் செய்விப்பார்கள்; உன்னியிடில் செவி தோல் கண் நாக்கு மூக்கில் உற்று இருந்து எண் திசைத் தேவர் வாயு இனன் வருணன் அன்னியம் இலா இருவர் அசுவினி தேவதைகள் அடைந்து சத்தம் ஆதி ஐந்தும் அடைவே அறிவிப்பார்கள் - விசாரிக்குமிடத்தில் சுரோத்திரத்தைத் திக்குப் பாலகரும், துவக்குவை வாயுவும், சட்சுவைச் சூரியனும், சிங்நுவையை வருணனும், கிராணத்தை இருவராயிருக்கிற அச்சு வினி தேவர்களுமாகிய இவர்கள் ஐந்து இந்திரியங்களையும் பொருந்தி நின்று சத்தப் பரிச ரூப ரச கந்தமென்னும் ஐந்து விஷயங்களையும் கிரமத் திலே அறிவிப்பார்கள் எ - று. (௱உ௪)

அ - கை : மேல் மனம் முதலான அந்தக்கரணங்களிலும் குணங் களிலும் தேவதைகள் பொருந்திநின்று கிரியைகளைப் பண்ணுவிப்பார்க ளென்பது கூறுகின்றது.

125. மனமதனிற் சந்திரனு மகங்கார மதனின்
மன்னியே வீமேசர் புந்தியினிற் புத்தி
யெனவுரைக்குஞ் சத்தியாங் குணங்களொரு மூன்றி
லிசைந்துமல ரோன்மாலு நீலவுருத் திரரும்
உனல்பற்றல் கைக்கொண்டே யகங்கரித்தே யோங்க
லுற்றதனைப் பகுத்தறித லுயர்தன்மா திகளாய்ப்
பனவுளதாம் பஞ்சாசத் பாவகந்தா னாகப்
பண்ணிடுவ ரிப்பரிசே மேலுளதும் பகர்வாம்.

இ-ள்: மனமதனில் சந்திரனும் அகங்காரம் அதனில் மன்னியே வீமேசர் புந்தியினில் புத்தியென உரைக்கும் சத்தியாம் - மனத்துக்குச் சந்திரனும், அகங்காரத்துக்கு வீமேசரும், புத்திக்குப் புத்தியென்று சொல்லப்பட்ட சத்தியும்; குணங்கள் ஒரு மூன்றில் இசைந்து மலரோன் மாலும் நீலஉருத்திரரும் - சாத்துவிக குணத்துக்கு விஷ்ணுவும், இராசத குணத்துக்குப் பிரமாவும், தாமத குணத்துக்கு நீலருத்திரரும் இப்படி அதிட்டித்துநின்று; உன்னல் பற்றல் கைக்கொண்டே அகங்கரித்தே ஓங்கல் உற்றதனைப் பகுத்தறிதல் - சிந்தித்தல், சங்கற்ப விகற்பமாகப் பற்றுதல், எனது யான் என்று வளருதல், பொருந்திய விஷயத்தை நிச்சயம் பண்ணுதல்; உயர் தன்மாதிகளாய்ப் பன்ன உளதாம் பஞ்சாசத் பாவகம் தான் ஆகப் பண்ணிடுவர் - உயர்ந்த தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம் என்னும் இந்தப் பாவாஷ்டகமாகிப் பலவிதமாய்ப் பஞ்சாசத் பாவகமாக வுண்டாகப் பண்ணுவிப்பார்கள்; இப்பரிசு மேலுளதும் பகர்வாம் - இந்த முறைமையாக மேலுண்டான தத்துவங்களுக்குஞ் சொல்லுவோம் எ-று. (௧௨௫)

அ-கை: மேல் இராக தத்துவமுதல் ஆறு தத்துவங்களையும் தேவதைகள் பிரேரித்து நின்று கிருத்தியங்களைப் பண்ணுவிப்பார்களென்பது கூறுகின்றது.

126. எண்ணரிதா மிராகத்தி லிராகேச ரிசைந்தே
யியற்றிடுவர் புருடனையு மிச்சையையு முணர
நண்ணரியிட விடயத்தே செய்யும் வித்தை
நண்ணிடுவர் வித்தியா தேவிநல மாரப்
பண்ணரியிட வறிவுதொழில் விளங்கியிடக் கலைக்கே
பதிந்திடுவர் கலாதேவி யெனப்பகர்வர் காலத்
தண்ணல்கா லேசரணந் தாக்கியளித் தழித்த
லாவனவுந் தோற்றுவித்தே நியமனயாக் கிடுவர்.

இ-ள்: எண்ண அரிதாம் இராகத்தில் இராகேசர் இசைந்து புருடனையும் இச்சையையும் உணர இயற்றிடுவர் - புருஷ தத்துவத்தையும்

இராக தத்துவத்தையும் நினைத்தற்கு அரிதாகிய இராகேசர் அதிட்டித்து நின்று விஷயபோக ஐகமத்தியத்தையும் விஷயவிச்சையையும் அறியச் செய் விப்பர்; நண்ணரியிட விடயத்தே செய்யும் வித்தை நண்ணிடுவர் வித்தியா தேவி நலம் ஆர - நலம் பொருந்திய வித்தியாதேவியானவர் வித்தியா தத்துவத்தை விஷயத்திலே பொருந்தியிடச் செய்யும்படி அதிட்டிப்பார்; பண்ணியிட அறிவு தொழில் விளங்கியிடக் கலைக்கே பதிந்திடுவர் கலாதேவி எனப்பகர்வர் - கலாதேவியானவர் ஆன்மாக்களுடைய ஞானேச்சாக்கிரியை கள் விளங்கப்பண்ணியிடக் கலாதத்துவத்தைப் பிரேரிப்பரென்று சொல்லு வார்கள்; காலத்து அண்ணல் காலேசர் அணைந்து ஆக்கி அளித்து அழித் தல் ஆவனவும் தோற்றுவித்தே நியமனம் ஆக்கிடுவர் - நியதி தத்துவத்தை யும் கால தத்துவத்தையும் கர்த்தாவாகிய காலேசுவரர் அதிட்டித்து நின்று சிருட்டி திதி சங்காரமானவற்றை யுண்டாக்கியும் கன்மானுகுணமாக வந்த சுகதுக்க பலன்களை விடயம் சுகமென்று அதிகமாகப் புசிக்க வொட்டா மலும் துக்கமென்று விடவொட்டாமலும் இராசாக்கினைபோல நியமனஞ் செய்தும் புசிப்பிப்பர் எ - று. (௱௨௬)

அ - கை: மேல் காரியமாயையை ஈசுவர சத்தி அதிட்டித்து நின்று பிரபஞ்ச கிருத்தியத்தைப் பண்ணுவிக்கும் என்பது கூறுகின்றது.

127. கரையிறந்த சத்தியுடன் காரியரூ பாகிக்
கலங்கியே நின்றுள்ள காரியமா யையின்கண்
புரைவறவே யீசர்சத்தி புணர்ந்ததனை வடிவாய்ப்
போற்றிடமா யாதேவி யெனும்பெயரும் புனைந்தே
திரைநுரைக டிவலைகடாங் கடற்பா லாகுஞ்
செய்கைபோற் றனுவாதி சிறக்கச் செய்தும்
தரையிறுதி கலையாதி தத்துவத்தா ருயிர்க
டாமயங்கச் செய்யுமெனச் சாற்றிடுமா கமமே.

இ - ள்: கரை இறந்த சத்தியுடன் காரியரூபாகிக் கலங்கி நின்றுள்ள காரியமாயையின்கண் - எண்ணிறந்த சத்தியுடன் காரிய சொரூபமாகி க்ஷோபித்து நின்ற காரியமாயையினிடத்திலே; புரைவு அறவே ஈசர் சத்தி புணர்ந்து அதனை வடிவாய்ப் போற்றிட மாயாதேவி யெனும் பெயரும் புனைந்து - மகேசுவரருடைய சத்தியானது பின்னமற அதிட்டித்துநின்று அந்த மாயாசத்தி திருமேனி யென்று சொல்லத்தக்க தாக மாயாதேவி யென்னும் பெயரையும் பெற்று; திரை நுரைகள் திவலைகள் தாம் கடற்பால் ஆகும் செய்கைபோல் - கடலினிடத்திலே வாயுவானது அறையத் திரை நுரை குமிழி திவலைகளாயினவை உண்டாகு முறைமைபோல; தனு ஆதி சிறக்கச் செய்தும் தரை இறுதி கலை ஆதி தத்துவத்தார் உயிர்கள் தாம் மயங்கச் செய்யும் என ஆகமம் சாற்றிடும் - தனு கரண புவன போகங்களை நன்றாக வுண்டாக்கியும் கலைமுதலாகப்

பிருதிவியீறான தத்துவங்களி லிருக்கும் ஆன்மாக்களைப் பொய்யை மெய் யென்னும்படி மயங்கப் பண்ணுவிக்குமென்று சிவாகமங்கள் சொல்லும் எ - று. (௱உஎ)

அ - கை: மேல் சுத்தவித்தை ஈசுவரம் சாதாக்கியம் என்னும் தத்துவங்களில் தேவர்கள் அதிட்டித்து நின்று கிருத்தியம் பண்ணுங் கிரமங் கூறுகின்றது.

128. சுத்தவித்தை தனைவிமல வித்தியா தேவி
சொல்லீசர் தத்துவத்தை மகேசர்சதா சிவத்தை
அத்தர்சதா சிவர்பொருந்தி யவ்வவற்று லனைத்து
மாக்குவர்க ளந்தந்தத் தத்துவத்தி னடைவும்
இத்தகைய தத்துவங்கட் கீசுரர்தம் வடிவு
மிசைந்திடுசத் திகள்வடிவு மியம்பில்விரி வாகும்
நித்தனுயிர்க் குயிராகிச் சராசரங்க ளவற்றி
னின்றனைத்துஞ் சேட்டிக்கு நிலைமையுணர் வரிதே.

இ - ள்: சுத்த வித்தைதனை விமல வித்தியாதேவி - நிர்மலையாயிருக்கிற வித்தியா தேவியானவள் சுத்தவித்தியா தத்துவத்தையும்; சொல்லீசர் தத்துவத்தை மகேசர்-சொல்லுமிடத்தில் மகேசுவரர் ஈசுவர தத்துவத்தையும்; சதாசிவத்தை அத்தர் சதாசிவர் பொருந்தி - கர்த்தாவாகிய சதாசிவர் சாதாக்கிய தத்துவத்தையும் அதிட்டித்து நின்று; அவ் அவற்றால் அனைத்தும் ஆக்குவர்கள் - அந்த அந்தத் தத்துவங்களால் ஆன்மாவுக்குத் தனு கரணாதிப் பிரபஞ்சங்களைச் சிருட்டிப்பார்கள்; அந்த அந்தத் தத்துவத்தின் அடைவும் - இன்னும் அந்த அந்தத் தத்துவங்களுடைய வித்தாரங்களும்; இத்தகைய தத்துவங்கட்கு ஈசுரர் தம் வடிவும் இசைந்திடு சத்திகள் வடிவும் இயம்பில் விரிவு ஆகும் - இந்த முறைமையையுடைய தத்துவ நாயகருடைய ஸ்வரூபமும் அவர்கள் பொருந்தியிருக்கும் சத்திகளுடைய ஸ்வரூபமும் சொல்லுமிடத்தில் வித்தாரமாகும்; நித்தன் உயிருக்கு உயிராகிச் சராசரங்களவற்றில் நின்று அனைத்தும் சேட்டிக்கும் நிலைமை உணர்வு அரிதே - ஆகையால் நித்தியமாயிருக்கிற சிவன் ஆன்மாக்களுக்கு உயிராகிச் சடசிதான்மகப் பிரபஞ்சத்தில் நின்று சகலபிரபஞ்சத்தையும் பிரேரிக்குந்தன்மை அறியவரியது எ - று. (௱உஅ)

அ - கை: மேல் ஆன்மாக்கள் தத்துவங்களைத் தேராகநின்று சுகதுக்கங்களைப் புசித்து மீண்டுந் துரியத்தை யடைவரென்பது கூறுகின்றது.

129. இந்திரியம் பரியாநாற் கரணங்கள் சகடா
விசைந்திடுமுக் குணங்கடா மிரத மாக
முந்துகா லாதியிலாம் புருடன்சா ரதியா
மோகாதி யேழ்குணமுஞ் சூழவதோ முகமாய்

உந்தியிடான் மாவுணர்வே யரச னாக
வோதியிடும் வானாதி யைந்துநிலம் பொருந்தச்
சுந்தரமாம் பவனிவந்தே சத்தாதி யான
சுகதுக்கங் கொண்டுமீண் டடையுமுளாந் துரியம்.

இ - ள்: இந்திரியம் பரியா நாற்கரணங்கள் சகடா - ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் குதிரைகளாகவும் அந்தக் கரணங்கள் நான்கும் உருளைகளாகவும்; இசைந்திடும் முக்குணங்கள் தாம் இரதம் ஆக - பொருந்தியிருக்கிற இராசத தாமத சாத்துவிக குணங்கள் தேராகவும்; முந்து காலாதியில் ஆம் புருடன் சாரதியா - முந்தின காலாதி தத்துவங்களிலுண்டான புருஷதத்துவமானது தேர்ப்பாகனாகவும்; மோகாதி ஏழ் குணமும் சூழ அதோமுகமாய் உந்தியிடு ஆன்மா உணர்வே அரசன் ஆக - மோகம், மதம், ராகம். விஷாதம், சோஷம், வைசித்திரியம், ஹர்ஷம் என்னும் ஏழு குணங்களும் சூழ்ந்திருக்கிற பரிசனங்களாகவும் விஷயோன்முகமாய்ப் பொருந்தியிடும் ஆன்ம அறிவே இராசனாக நின்று: ஓதியிடும் வானாதி ஐந்தும் நிலம் பொருந்த - சொல்லப்பட்ட பிருதிவியாதி ஐந்து தத்துவங்களும் பூமியாகப்பொருந்த; சுந்தரம் ஆம் பவனி வந்து சத்தம் ஆதி ஆன சுகம் துக்கம் கொண்டு மீண்டு அடையும் உளம் துரியம் - நன்றாகச் சஞ்சாரம் பண்ணி ஆன்மவிருத்திஞானமானது சத்தப் பரிச ரூப ரச கந்த ஸ்வரூபமாய் நின்ற சுகதுக்க போகங்களைப் புசித்துச் சுகதுக்க பாவத்தினால் மீளவுந் துரியாவஸ்தையே யடையும் எ - று. (ஈஉகூ)

அ - கை: மேல் தத்துவங்கள் சாதாரணமாகவும் அசாதாரணமாகவும் நிற்குமென்பது கூறுகின்றது.

130. நாதமுதற் றரையந்த முப்பத்தாறு
நவின்றுடைய தத்துவங்க ளாடிக் காணில்
பேதமா யவரவர்கட் குறுவ தாகும்
பெரிதாகி யுயிர்களெல்லாம் பெறும்பதங்க ளாக
ஓதலுறும் புவனங்கட் காதார மாகி
யுறுஞ்சுத்த மோரைந்து மாயை யிலோ ரைந்தும்
போதமுறுங் குணம்புத்தி யகங்கார மூன்றும்
பூதங்க ளோரைந்தும் பொதுவாயும் புகலும்.

இ - ள்: நாதம் முதல் தரை அந்தம் முப்பத்தாறு நவின்றுடைய தத்துவங்கள் நாடிக் காணில் - சிவதத்துவமுதல் பிருதிவிதத்துவ மீறாகச் சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களையும் விசாரித்துப் பார்க்குமிடத்தில்; பேதமாய் அவர் அவர்கட்கு உறுவது ஆகும் - பின்னமாய் அந்த அந்த ஆன்மாக்களுக்குச் சாதாரணமாகப் பொருந்திநிற்கும்; பெரிதாகி உயிர்கள் எல்லாம் பெறும் பதங்கள் ஆக ஓதலுறும் புவனங்கட்கு ஆதாரம்

ஆகி உறும் - வியாபகமாகி நின்று ஆன்மாக்களெல்லாம் அடையுந் தானங்களாகச் சொல்லப்பட்ட புவனங்களுக்கு ஆதாரமாகிப் பொருந்தும்; சுத்தம் ஓரைந்தும் மாயையில் ஓரைந்தும் போதம் உறும் குணம் புத்தி அகங்காரம் மூன்றும் பூதங்கள் ஓரைந்தும் பொதுவாயும் புகலும் - சுத்த தத்துவங்கள் ஐந்தும், அசுத்தமாயா தத்துவங்கள் ஐந்தும், பிரகாசம் பொருந்தியிருக்கும் சித்தம் புத்தி அகங்காரம் என்னும் மூன்று தத்துவங் களும், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் ஐந்து தத்துவங்களும், ஆகப் பதினெட்டுத் தத்துவங்களும் அசாதாரணமாகவுஞ் சொல்லப்படும் என்றவாறு. (௱௩௰)

அ - கை: மேல் இரண்டு விருத்தங்களால் தாத்துவிக பேதங் கூறுகின்றது.

131. மண்முதல் மலைம ரங்கள் மழைகட லாதி நீர்கள்
விண்முதற் பூத மைந்தில் விளைதொனி மின்கள் மேகம்
ஒண்முக வடவை யாதி யுருவெரி யோரெண் டிக்குக்
கண்முதல் வீசுங் காற்றும் கனகமோ டிரும்புஞ் செம்பும்.

இ - ள்: மண்முதல் மலை மரங்கள் மழை கடல் ஆதி நீர்கள் - பூமி மலை மரங்கள் முதலானவைகளும், மழை ஏழுகடல் இவற்றின் சலங்களும்; விண் முதல் பூதம் ஐந்தில் விளை தொனி மின்கள் மேகம் ஒண்முக வடவை ஆதி உரு எரி ஓர் எண்திக்கு - ஆகாய முதலான ஐந்து பூதங்களிலும் உண்டான சத்தமும், மின்னல்களும், மேகங்களும், பிரகாசமான வடவாமு காக்கினி முதலான ரூபீகரித்திருக்கிற அக்கினியும், எண்ணப்பட்ட திக்குக் களும்; கண்முதல் வீசும் காற்றும் கனகமோடு இரும்பும் செம்பும் - கண் முதலான அவயவப் பிரகாசங்களும், வீசாநின்ற காற்றும், சுவர்ணமும், இரும்பும், செம்பும் எ - று. (௱௩௧)

132. நவமணி தாதோ ரேழு நரர்சுரர் நாக ராதி
அவயவம் வாயுப் பத்து மறிந்திடிற் றாத்தி கங்கள்
உவமமில் கதிரோ னாதி யொளிபதி யுருவே யாகும்
தவமிலா ருள்ளம் போலத் தாவிருள் பாசந் தானே.

இ - ள்: நவமணி தாது ஓர் எழும் நரர் சுரர் நாகர் ஆதி அவயவம் வாயுப் பத்தும் அறிந்திடில் தாத்திகங்கள் - நவரத்தினங்களும், சத்த தாதுக் களும், மனுஷியர் தேவர்கள் நாகலோகர் முதலானவர்களுடைய தேகாதி அவயவங்களும், பிராணாதி வாயுக்கள் பத்தும் இவைகளை அறியுமிடத்துத் தாத்திகங்களென்று சொல்லப்படும்; உவமமில் கதிரோன் ஆதி ஒளிபதி உருவே ஆகும் - ஒப்பில்லாத சூரியன் முதலானவர்களுடைய பிரகாசங்களுஞ் சிவனுடைய பிரகாசங்களே ஆகும்; தவம் இலார் உள்ளம்போலத் தா இருள் பாசம் தானே - அஞ்ஞானிகளுடைய இதயம்போலப் பொருந்தப்பட்ட இருளானது பாச பந்தமாம் எ - று. (௱௩௨)

அ - கை: மேல் சுத்த தத்துவங்களைச் சிவசத்திகள் அதிட்டித்து நிற்கையால் சித்தென்று சொல்லப்பெறுமென்பது கூறுகின்றது.

133. தத்துவ முப்பத் தாறிற் சத்திக டாமோ ரைந்தும்
சுத்தமாந் தத்து வங்க ளைந்தையுந் தோய்ந்து நின்றே
நித்தமும் பிரேரிக் கின்ற நிலைமையாற் சித்த தாகும்
வித்தக விஞ்ஞா னர்க்குத் தனுவாதி யாகி மேவும்.

இ - ள்: தத்துவம் முப்பத்தாறில் சத்திகள் தாம் ஓரைந்தும் சுத்தமாம் தத்துவங்கள் ஐந்தையும் தோய்ந்து நின்று - முப்பத்தாறு தத்துவங்களுக்குள்ளே சுத்தமாகி நின்ற நாதாதி தத்துவங்களைந்தையும் சிவனுடைய பரையாதி பஞ்ச சத்திகள் பொருந்திநின்று; நித்தமும் பிரேரிக்கின்ற நிலைமையால் சித்தது ஆகும் - எப்போதும் கிரமத்திலே பிரேரித்து நிற்கிற தன்மையினாலே சித்தென்று சொல்லவுமாகும்; வித்தக விஞ்ஞானர்க்குத் தனு ஆதி ஆகி மேவும் - அல்லாமலும் பிரகாசமாய் நின்ற விஞ்ஞானகலர்க்குத் தனு கரண புவன போகமாகியும் நிற்கும் எ - று. (௱௩௩)

அ - கை: மேல் அசுத்தமாயா தத்துவங்கள் ஏழையும் சிவ சத்திகள் சுத்த தத்துவங்களைக்கொண்டு பிரேரிக்கையாற் சுத்தாசுத்தமாம் என்பது கூறுகின்றது.

134. நாதாதி காய மாக நண்ணுசத் திகடம் மாலே
தீதான மாயா தோற்ற மேழையுஞ் சேட்டிப் பிக்கை
ஓதா நின் றுள்ள தாலே யுறுஞ்சுத்தா சுத்தப் பேரை
ஈதாகுங் காய மாதி யிலயமாங் கலையி னோர்க்கே.

இ - ள்: நாதம் ஆதி காயம் ஆக நண்ணு சத்திகள் தம்மால் தீது ஆன மாயா தோற்றம் ஏழையும் சேட்டிப்பிக்கை - சிவசத்திகள் நாதாதி பஞ்ச தத்துவங்களைத் திருமேனியாக அதிட்டித்துநின்று அந்த அந்தத் தத்துவங்களினாலே அசுத்த மாயையிலே உண்டான ஏழு தத்துவங்களையும் பிரேரிப்பிக்கையால்; ஓதா நின்று உள்ளதாலே உறும் சுத்தாசுத்தப் பேரை - சிவாகமங்கள் சொல்லுகிற துள்ளதாகையாலே சுத்தாசுத்தமென்னும் நாமத்தைப் பொருந்தும்; ஈது ஆகும் காயம் ஆதி இலயம் ஆம் கலையினோர்க்கு - இந்த ஏழு தத்துவங்களும் வசீகரணமாய் நின்ற கலையையுடைய பிரளயாகலரென்னும் ஆன்மாக்களுக்குத் தனுகரணாதிகளாக உண்டாகும். (௱௩௪)

அ - கை: மேல் ஆன்மதத்துவம் இருபத்துநாலையும் அசுத்த மாயா காரியமான தேகத்தையுடைய தேவதைகள் பிரேரிக்கையால் அசுத்தமென்பது கூறுகின்றது.

135. இவ்வாறிங் கசுத்த மாயா தோற்றமாங் காயத் தோரே
முவ்வாறு மாறு மாக முளைத்ததத் துவங்க டம்மை
அவ்வாறே சேட்டிப் பிப்பா ராகையா லசுத்த மேயாம்
ஒவ்வாறு செய்திம் மூன்றி னுறுதொழிற் பெயரு முண்டோர்.

இ - ள்: இவ்வாறு இங்கு அசுத்தமாயா தோற்றமாம் காயத்தோர் - இந்தப் பிரகாரம் இவ்விடத்தில் அசுத்த மாயையிலே உண்டான தேகத்தையுடைய தேவதைகள்; மு ஆறும் ஆறுமாக முளைத்த தத்துவங்கள் தம்மை அவ்வாறு சேட்டிப்பிப்பார் ஆகையால் அசுத்தமேயாம் - ஆன்மதத்துவம் இருபத்துநாலாக உண்டான தத்துவங்களைச் சிவசத்திகள் பிரேரகமும் தத்துவங்கள் பிரேரியமுமாய் நின்றதுபோலச் சிவசத்திகளினுல் அதிட்டிக்கப்பட்டு நின்று பிரேரிப்பார்களாகையால் அசுத்தமென்று பெயராம்; ஒவ்வு ஆறு செய்து இம்மூன்றின் உறு தொழில் பெயரும் உண்டு ஓர் - ஒத்திருக்கிற கிரியையினுலே இந்த மூன்றுவிதமாய் நின்ற பெயரையுடைய தத்துவங்களுக்கு மேலும் விசாரிக்கில் தொழிலினுலே பொருந்தப்பட்ட பெயரும் உண்டாகுமென்று அறிவாய் எ - று. (௱௩௫)

அ - கை: மேல் சகலராகிய ஆன்மாக்களுக்குத் தத்துவங்கள் பிரேரககாண்டமென்றும், போகசயித்திருகாண்டமென்றும், போகபோக்கிய காண்டமென்றும் பெயராமென்பது கூறுகின்றது.

136. சாற்றிய சுத்த மைந்துஞ் சகலர்க்குப் பிரேர காண்டம்
தோற்றிடுஞ் சுத்தா சுத்தஞ் சொலிற்புசிப் பிக்குங் காண்டம்
மேற்றிகழ் கரண நான்கும் வினைவிளைத் திடுநா லைந்தும்
போற்றிடும் போக போக்ய காண்டமாப் புகலு நூலே.

இ - ள்: சாற்றிய சுத்தம் ஐந்தும் சகலர்க்குப் பிரேர காண்டம் சகலராகிய ஆன்மாக்களுக்குச் சொல்லப்பட்ட சுத்த தத்துவங்கள் ஐந்தும் பிரேரக காண்டமென்றும்; தோற்றிடும் சுத்தாசுத்தம் சொலிற் புசிப்பிக்குங் காண்டம் - சுத்தாசுத்தமென் றுண்டான தத்துவங்களைச் சொல்லுமிடத்துப் போகசயித்திரு காண்டமென்றும்; மேற்றிகழ் கரணம் நான்கும் வினை விளைத்திடும் நாலைந்தும் போற்றிடும் போகபோக்ய காண்டமாய்ப் புகலும் நூலே - மேல் விளங்காநின்ற அந்தக்கரணங்கள் நாலும் தொழிலை உண்டாக்கா நின்ற கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஞானேந்திரியங்களைந்தும் தன்மாத்திரைகளைந்தும் பூதங்களைந்துமாக இருபத்துநான்கு தத்துவங்களையும் சொல்லப்பட்ட போக போக்கிய காண்டமென்றும் சிவாகமங்கள் சொல்லும் எ - று. (௱௩௬)

அ - கை: மேல் ஆன்மாக்களுக்குச் சத்தியும் சிவனும் மாதா பிதாவென்பது கூறுகின்றது.

137. காயாதிக் குபாதா னங்க ளாகியே கருதுஞ் சுத்த
மாயாதி தன்னி லீசர் சத்திதான் மருவி நிற்கத்
தோயாது மாயை யீசன் றோய்ந்துரு வாக்கு மாற்றால்
தாயாகுஞ் சத்தி யீசன் றந்தையா முயிர்கட் கன்றே.

இ - ள் : காயம் ஆதிக்கு உபாதானங்களாகியே கருதும் சுத்த மாயாதி தன்னில் - ஆன்மாக்களுடைய தனுகரணாதிகளுக்கு உபாதான காரணமாகக் கருதப்பட்ட சுத்த மாயை முதலானவைகளிலே; ஈசர் சத்திதான் மருவி நிற்கத் தோயாது மாயை ஈசன் தோய்ந்து உரு ஆக்கும் ஆற்றால் - சிவ சத்தியானது அதிட்டித்துநிற்கச் சிவன் மாயா பந்தமில்லாமல் பரமறநின்று தனுகரணாதிகளை உண்டாக்குமாகையால்; தாய் ஆகும் சத்தி ஈசன் தந்தை யாம் உயிர்கட்கு அன்றே - அனாதியே ஆன்மாக்களுக்குச் சிவசத்தி மாதா வாகவும் சிவன் பிதாவாகவுமாம் எ - று. (௱௩௭)

அ - கை : மேல் சிவன் சர்வான்மாக்களுக்கும் பஞ்ச கோசங்களைச் சுத்த மாயாதிகளிலே உண்டாக்குவர் என்பது கூறுகின்றது.

138. எவ்வுயிர்க்கு மானந்தம் விஞ்ஞான மென்றே
யிருகோச மிறைசுத்த மாயையினி லிசைப்பன்
அவ்வுயிர்க்கு மேலுமதோ மாயையினிற் கலாதி
யானதோர் மனோமயமு மாக்குவன்பின் னாகச்
செவ்விதினிற் பிராணமய கோசமுமுண் டாக்கிச்
சேர்த்திடுவ ரன்னமய கோசத்தைத் திகழ
வெவ்வுயிர்க ளைங்கோச பந்தத்தை யுற்றே
வினைவிளைக்கு மன்னமயம் வருமாறு விரிப்பாம்.

இ - ள் : எவ்வுயிர்க்கும் ஆனந்தம் விஞ்ஞானம் என்றே இருகோசம் இறை சுத்த மாயையினில் இசைப்பன் - சிவன் சர்வான்மாக்களுக்குஞ் சுத்த மாயையிலே விஞ்ஞானமய கோசம் ஆனந்தமய கோசம் என்னும் இரண்டையும் உண்டாக்குவர்; அவ்வுயிர்க்கு மேலும் அதோ மாயையினில் கலா ஆதி ஆனதோர் மனோமயமும் ஆக்குவன் - அந்த ஆன்மாக்களுக்கு மேலும் அசுத்த மாயையிலே கலாதத்துவ முதலான ரூபமாகிய மனோமய மென்னும் ஒருகோசத்தை யுண்டாக்குவர்; பின்னாகச் செவ்விதினில் பிராணமய கோசமும் உண்டாக்கிச் சேர்த்திடுவர் அன்னமய கோசத்தைத் திகழ - செவ்வையாக நின்ற இந்த மாயையிலே பிராணமய கோசத்தையு முண்டாக்கி அன்னமய கோசத்தையும் விளங்க உண்டாக்குவர்; வெவ்வுயிர்கள் ஐங்கோச பந்தத்தை உற்றே வினை விளைக்கும் அன்னமயம் வருமாறு விரிப்பாம் - ஆகையால் சர்வான்மாக்களும் பஞ்சகோச பெத்தராய்ப் பொருந்திநின்று தொழிலைச்செய்யும் அன்னமய கோசம் வருங் கிரமத்தை மேல் விரித்துச் சொல்லுவாம் எ - று. (௱௩௮)

139. முன்னைவினைக் கீடாகச் சூக்குமரூ பத்தால்
முதற்றந்தை யிடம்புகுந்து மோகமிக வாகி
அன்னைவயிற் றிற்றந்தை சுக்கிலத்தோ டணைந்திட்
டவ்விடத்துச் சுரோணிதத்தோ டாகி நிற்கப்
பின்னையதைப் பிரியாது சூக்குமகா யத்தே
பிறப்பதுவாந் தூலவுடல் பிரமனரு ளாலே
தன்னைவிரித் துரைக்கிலது பெருக்கு முன்னஞ்
சாற்றியசூக் குமபூதத் தாக்கியிடுந் தனுவே.

இ-ள்: முன்னை வினைக்கு ஈடாகச் சூக்கும ரூபத்தால் முதல் தந்தை யிடம் புகுந்து மோகம் மிக ஆகி - பூர்வ ஜன்மங்களிலே பண்ணின புண்ணிய பாபாநுகுணமாகச் சூக்குமதேகி ரூபியாய் முந்தப் பிதாவினுடைய உதரத்துப் புகுந்து மோகாதிக்கமாகி; அன்னை வயிற்றில் தந்தை சுக்கிலத்தோடு அணைந்திட்டு அவ்விடத்துச் சுரோணிதத்தோடு ஆகிநிற்க - பிதாவினுடைய வீரியத்துடனே கூடி மாதாவினுடைய வயிற்றிலே விழ அந்த மாதாவினுடைய சுரோணிதத்தோடே கூடி நிற்க; பின்னை அதைப் பிரியாது சூக்குமகாயத்து பிறப்பதுவாம் தூல உடல் பிரமன் அருளால் - பிறகு அந்தச் சுக்கில சுரோணிதங்களைப் பிரியாமல் நின்று சூக்கும சரீரத்திலே பிரமாவினுடைய ஆக்கினையினாலே தூலசரீரமுண்டாம்; தன்னை விரித்து உரைக்கில் அது பெருக்கும் முன்னம் சாற்றிய சூக்கும பூதத்து ஆக்கியிடும் தனு - சூக்கும தேகத்திலே நின்றும் தூலதேகம் பரிணமிக்கிற விதியை விரித்துச் சொன்னால் அது வித்தாரமாகு மாகையால் முன்சொன்ன சூக்கும பூதத்தினின்றும் தூலதேக முண்டாகும் என்றவாறு. (௱௩௯)

அ-கை: மேல் இரண்டு விருத்தங்களால் சூக்கும பஞ்சபூத காரியமான தாத்துவிகங்களைக் கூறுகின்றது.

140. என்புதோ னரம்புமயிர் தசைக ளெல்லா
மிசைந்திடுத றரணியின்ற னிடத்தே யாகும்
புன்புலா னாறுநீர் செந்நீர் மற்றும்
புல்கின்ற நெகிழ்ச்சியெலா மப்பி னாகும்
அன்புசெயுந் தீபனபா சனங்க ளாதி
யானவைதாஞ் சூக்குமமா மனலி னாகும்
வன்புடைய பிராணாதி வாயுப் பத்தும்
வருவதுவுஞ் சூக்குமமாம் வாயுவிட மாயே.

இ-ள்: என்பு தோல் நரம்பு மயிர் தசைகள் எல்லாம் இசைந்திடுதல் தரணியின்றன் இடத்து ஆகும் - சூக்குமப் பிருதிவியிலே நின்றும் என்பு, தோல், நரம்பு, மயிர், தசை இவைகளெல்லாம் பொருந்த வுண்டாகும்; புன்புலால் நாறுநீர் செந்நீர் மற்றும் புல்கின்ற நெகிழ்ச்சி எல்லாம் அப்பின்

ஆகும் - சூக்குமபூத அப்புவினிடத்திலே நின்றும் பொல்லாததாகிய புலால், துர்க்கந்தமாகிய நீர், இரத்தம், மற்றுமுண்டான பொருந்தப்பட்ட நெகிழ்ச்சியான வெல்லாம் உண்டாகும்; அன்பு செய்யும் தீபன பாசனங்களாதியானவைதாம் சூக்குமம் ஆம் அனலின் ஆகும் - சூக்குமபூதத் தேயுவினிடத்திலே நின்றும் சுகத்தைப் பண்ணுகின்ற தீபனம், பதார்த்தங்களைப் பக்குவம் பண்ணுதல் முதலானவைகளுண்டாகும்; வன்புடைய பிராணன் ஆதி வாயு பத்தும் வருவதுவும் சூக்குமம் ஆம் வாயுவிடம் ஆய் - சூக்கும பூதமான வாயுவினிடத்திலே நின்றும் பலமுடைய பிராணாதி வாயுக்கள் பத்துமுண்டாவதுமாம் எ - று. (ாசம)

141. உடம்பினி னுடி யுள்ளு முதரத்தி னுள்ளு மெங்கும்
இடம்பெற வாயு வாதிக் கிசைதல்செய் தேபு றம்புந்
திடம்பெற நவத்து வாரஞ் சேர்வதாம் வானந் தன்னில்
மடம்படுந் தூல காயம் வளர்ந்திடு மிந்த வாறே.

இ - ள்: வானம் தன்னில் உடம்பினில் நாடியுள்ளும் உதரத்தினுள்ளும் எங்கும் இடம்பெற வாயு ஆதிக்கு இசைத்தல் செய்தே - சூக்கும பூத ஆகாயத்திலே நின்றும் தேகத்திலேயுள்ள நாடிகளுடைய உள்வெளியும் வயிற்றில் உள்வெளியும் பிராணாதி வாயுக்கள் சஞ்சாரத்துக்கு வெளியாய் நிற்கப் பொருந்தச் செய்தலும்; புறம்பும் திடம்பெற நவத்துவாரம் சேர்வதாம் - தேகத்துக்குப் புறம்பேயும் திடம் பொருந்த நின்ற நவத்துவாரவெளி உண்டாகும்; மடம் படும் தூலகாயம் இந்தவாறு வளர்ந்திடும் - இந்தப் பிரகாரம் அறிவில்லாத தூலகாயமானது வளராநிற்கும் எ - று. (ாசக)

அ - கை: மேல் அஞ்ஞானிகள் நிற்கும் தன்மை கூறுகின்றது.

142. காயமே தாமென் றெண்ணிக் கருமங்கள் பலவுஞ் செய்து
மாயமே யான போகம் வாய்த்திடும் வழியே யுன்னித்
தோயமே போன்ற கான ரேய்ந்திடச் செல்வார் போலப்
பேயைநேர் போத ராகிப் பெற்றிடார் பிறப்பில் பேறே.

இ - ள்: காயமே தாம் என்று எண்ணிக் கருமங்கள் பலவும் செய்து - தேகமே தமது ஸ்வரூபமென் றெண்ணிப் பலவிதமான தொழில்களைச் செய்து; மாயமே ஆன போகம் வாய்த்திடும் வழியே உன்னி - மயக்கம் உண்டாக்கப்பண்ணும் போகம் பொருந்தும் வழியை விசாரித்து; தோயமே போன்ற கானல் தோய்ந்திடச்செல்வார்போல - ஜலம்போலநின்ற கானலைத் தண்ணீரென்று குளிக்கப் போகிறவர்களைப் போல; பேயை நேர் போதர் ஆகி பிறப்பில் பேறு பெற்றிடார் - பிராந்தனுக்கொத்த அறிவையுடையராகச் செனன மரணமில்லாத முத்தியை அடையமாட்டார்கள் எ - று. (ாசஉ)

அ - கை : மேல் கேவலாவத்தை கூறுகின்றது.

143. அறிவிச்சை செயல்க ளின்ரு யலர்விழி யிருளின் கண்போல்
குறியற்றுக் குணங்க ளின்றிக் குறைவிலா நிறைவு மாகிச்
செறிவுற்ற போக மின்றிச் சேர்புலன் கரண மின்றிப்
பிறிவற்ரு ணவத்தி ஞேடே நிற்பது கேவ லம்பின்.

இ - ள் : அறிவு இச்சை செயல்கள் இன்ருய் அலர்விழி இருளின் கண்போல் - ஞானேச்சாக்கிரியைகளில்லாமல் இருளுக்குள் விழித்திருக்கிற கண்போல; குறி அற்றுக் குணங்கள் இன்றிக் குறைவு இல்லா நிறைவும் ஆகி - குறைவில்லாமல் வியாபகமாயிருக்கிற ஆன்மா சரீரங்களுமில்லாமல், சாத்துவிகம் ராசதம் தாமதம் என்னும் குணவிகற்பங்களில்லாமல்; செறிவு உற்ற போகம் இன்றிச் சேர் புலன் கரணம் இன்றி - கன்மானுகுணமாக வரப்பட்ட போகமில்லாமல் பொருந்தப்பட்ட விஷயங்களும் கரணங்களும் இல்லாமல்; பிறிவு அற்று ஆணவத்திஞேடு நிற்பது கேவலம் - இப்படிப் பிரிவில்லாமல் நின்ற ஆணவத்துடனே அநாதியே கூடிநிற்பது கேவலாவத்தை; பின் - மேல் சகலாவத்தை சொல்லுவாம் எ-று. (௱௪௩)

அ - கை : மேல் சகலாவத்தை வருமாறு கூறுகின்றது.

144. ஈசனுர் சத்தி யான திசைத்திடக் கலாதி தன்னைக்
காசமா மாண வத்தின் கனவிருள் சற்று நீங்கி
மாசதாங் காய மாதி வந்திட வினைகள் மன்னி
ஊசலாம் பிறப்பி றப்பை யுற்றிடல் சகல மென்ருேர்.

இ - ள் : ஈசனுர் சத்தியானது கலாதி தன்னை இசைத்திட - அனந்தேசுவரருடைய சத்தியானது கலாதி தத்துவங்களைப்பொருத்த; காசம் ஆம் ஆணவத்தின் கன இருள் சற்று நீங்கி - ரூபவிஷயத்தையுடைய கண்ணுக்கு மறைப்பாகி நின்ற காசம்போல நின்ற ஆணவத்தினுடைய மிகுந்த விருளானது பாசி படர்ந்த தண்ணீரில் கோல்பட ஏகதேசம் நீங்குவது போல ஏகதேசம் நீங்கி; மாசு அது ஆம் காயம் ஆதி வந்திட வினைகள் மன்னி - பொல்லாததா யிருக்கிற தனுகரணுதி போகங்கள் வந்திடப் புண்ணிய பாப ஸ்வரூபமாயிருக்கிற கன்மங்களைப் பொருந்தி; ஊசல் ஆம் பிறப்பு இறப்பை உற்றிடல் சகலம் என்று ஓர் - ஊஞ்சலைப்போலச் சனன மரணங்களை ஆன்மாப் பொருந்திநிற்கின்றது சகலாவத்தையென்று விசாரித்தறி என்றவாறு. (௱௪௪)

அ - கை : மேல் சுத்தாவத்தை வருமாறு கூறுகின்றது.

145. வினையனைத்துந் துலையொப்ப மலபரிபா கந்தான்
மேவியிடச் சத்திபதிந் திடுமவ் வேளை
தனையொருத்த ரிணையில்லாச் சிவன்குருவாய் வந்தே
தாரணியி லருள்புரியத் தமோரூ பங்கள்

பிணைவருத்தா தேயொழியப் பேரின்பந் தானே
பெற்றிடுதல் சுத்தமெனப் பேசு நூல்கள்
முனமுரைத்த விருவகைக்கு மிதற்கும் பேத
மொழிந்திடிலை வைந்தாகி மூவைந்தா முறையே.

இ - ள்: வினை அனைத்தும் துலை ஒப்ப மல பரிபாகம் தான் மேவி யிடச் சத்தி பதிந்திடும் - எல்லாப் புண்ணிய பாபங்களுடைய பலமான திரண்டும் ஏக காலத்திலே சுவர்க்கத்திலும் நரகத்திலும் புசிக்கவும் சேஷமா யுள்ள சர்வகன்ம பக்குவமும் மலபரிபாகமானபொழுது மலங்களைச்செலுத்தி வந்த திரோதான சத்தியானது ஏககாலத்திலே சமமாக இந்த விரோதி யாகிய பலத்தைப் புசிக்கமாட்டாதாகையால் பரமேசுவரனுடைய சத்தி திரோதானத்தை யொழித்து அனுக்கிரக சத்தியாய் ஆன்மாவினிடத்திலே பொருந்தும்—

சில சாத்திரங்களிலே பிரமகத்தி மகாபாதகபலமும் அசுவமேத மகா யாக பலமும் ஏக காலத்திலே சரியாகப் பக்குவமான காலத்திற் சத்தி நிபாத மென்று சொல்லியிருக்கத் தேவரீர் விருத்தமான இரண்டு கன்மசாமியமும் சர்வகன்ம பக்குவமும் ஆணவமலமும் பரிபாகமானபொழுது சத்தி நிபாத மென்று திருவுளம்பற்றினது என்னையோ எனில்? உள்ளது; கன்மமானது திட்டசென்ம போக்கிய மென்றும், அதிட்டசென்ம போக்கிய மென்றும், நியதகால போக்கிய மென்றும் மூன்று விதமாம், இவையிற்றுள்திட்டசென்ம போக்கியமாவது இந்தச் சென்மத்திலே பலிக்கின்ற ஆயுள்விருத்திகரமான கௌநச்சியோமம் புத்திரகாமேஷ்டியாதிகள். அதிட்ட சென்ம போக்கியமா வது தேகாந்தத்திலே நரக சுவர்க்கத்திலேயாதல் புனர்ச்சன்மத்திலேயாதல் பலிப்பது. நியதகால போக்கியமாவது மகா புண்ணியங்களுக்குள்ளே பிர தானமான அசுவமேதம், மகா பாதகத்துக்குள்ளே பிரதானமான பிரமகத்தி;

நின்ற கன்மமெல்லாம் நியதகால போக்கியமல்லவோவெனில், ஒக்கும்; அசுவமேத துவிசவதகன்ம பரிபாகமல்லாத காலத்திலே இதர கன்மபரிபாக மானால் அந்தக் கன்ம பலத்தையே புசிப்பிக்கும், இவைகள் பரிபாகமான காலத்திலே இதர புண்ணிய பரிபாகமாகிற பலாதிக்கத்தினாலே இதர புண்ணிய பாபங்களைத்தள்ளித் தம்முடைய பலத்தைப் புசிப்பிக்குமாகையால் இவைகளே நியதகால போக்கியம். இதர புண்ணிய பாபங்களினுடைய பலமாகப் புண்ணிய பாபபோகம் காலாந்தரம் புசிப்பிக்கும் அந்த இரண்டி னுள்ளே ஒன்று துர்ப்பலமும் ஒன்று பிரபலமுமாகில் துர்ப்பலத்தைத் தள்ளிப் பிரபலத்தைப் புசிப்பிக்கும். இரண்டும் சமபலமாகிற புண்ணியத் துக்குப் புண்ணியமாகுதல் பாபத்துக்குப் பாபமாகுதல் தற்காலத்திலே பக்குவமாயிருந்தால் சகாய பலத்தினாலே அசகாயத்தைத் தள்ளித் தன் னுடைய பலத்தையே புசிப்பிக்கும்: இரண்டும் சமபலமாய்ச் சமகாலமுமாகில் இதர கன்மங்கள் பரிபாகமாகாமலிருந்தால் இந்த இரண்டு கருமங்களும் சுந்தோபசுந்த நியாயமாக நசிக்க இதர கருமபலங்கள் கிரமத்திலே புசிக் கப்படும். சர்வகருமங்களும் ஏக காலத்திலே பரிபாகமாய் ஆணவமலம்

பக்குவமாகாமலிருந்தால் சர்வ கருமங்களும் நசிக்க விஞ்ஞானகேவலனுவன்; ஆணவ மலமும் பக்குவமாகிற் சத்தி பதியும்; அசுவமேத துவிசவத மென்றது சுவர்க்க நரக ஏதுவாய் அன்னியோன்னிய விருத்தமாய்ச் சம பலமாயிருக்கிற ஆமுஷ்மிக புண்ணிய பாபங்களுக்கு உபலக்ஷணம். இகத்திலும் நபும்சகனுகிறதற் கேதுவான பாபமும் புருடனுகிறதற் கேதுவான புண்ணியமும் அன்னியோன்னிய விருத்தம்; இவ்வாறு கண்டுகொள்க.

அவ்வேளை தன்னை ஒருத்தர் இணை இல்லாச் சிவன் குருவாய் வந்து தாரணியில் அருள் புரிய - அந்தக் காலத்தில் தமக்கு ஒருத்தரு மொப்பில்லாத சிவன் கிருபையினுலே பூமியின்கண் ஆசாரிய மூர்த்தமாகி யெழுந்தருளி வந்து அனுக்கிரகம்பண்ண; தமோரூபங்கள் பின்னை வருத்தாதே யொழியப் பேரின்பம் தான் பெற்றிடுதல் சுத்தம் எனப் பேசும் நூல்கள் - மலமாயா கன்மங்களெல்லாம் பிறகு பீடை பண்ணுமல் நீங்க அந்த மலங்களினுல் பொருந்தின கிஞ்சிஞ்ஞதையும் ஏகதேசத்துவதையும் ஒரித்து சர்வஞ்ஞத்துவாதிகளுண்டாய் ஆன்ம நாயகனுகிய சிவனுடனே இரண்டற்றுச் சிவானுபவியாக நிற்பது சுத்தாவத்தை யென்று சிவாகமங்கள் சொல்லும்; முன்னம் உரைத்த இருவகைக்கும் இதற்கும் பேதம் மொழிந்திடில் ஐவைந்து ஆகி மூவைந்தாம் முறையே - முன் சொன்ன கேவலாவத்தை சகலாவத்தை இரண்டிற்கும் இந்தச் சுத்தாவத்தைக்கும் காரியத்தால்பேதஞ் சொல்லுமிடத்தில் கிரமத்திலே ஒவ்வொன்று ஐவைந்தாகப் பதினைந்தவத்தையாம் எ - று. (௱௪௫)

**அ - கை :** மேல் மூன்று விருத்தங்களாலே கேவலசாக்கிராதி வருமாறு கூறுகின்றது.

146. தத்துவங்க ளாருறுந் தாத்திகமூ வைந்துந்
தளர்வின்றி நின்றிடவே சாற்றுமுள மவையோ
டொத்துமுகத் தேநின்றே யுணர்ந்திடுதல் சகல
முயிர்தனக்குப் போகத்துக் குறுவினையி னெழிவால்
சுத்ததத் துவமைந்து மாயாதி யேழுந்
தொகுபூத மோரைந்துந் தொழில்களொழிந் திடவே
நித்தமா முளநின்ற முப்பதுநா லுடனே
நின்றிடருன் கேவலசாக் கிரமாக நிகழ்த்தும்.

**இ - ள் :** தத்துவங்கள் ஆறு ஆறும் தாத்திகம் மூவைந்தும் தளர்வு இன்றி நின்றிட - முப்பத்தாறு தத்துவங்களும், பிராணுதிவாயுக்கள்பத்தும் வசனுதிகள் ஐந்தும் ஆகத் தாத்திகம் பதினைந்தும் திடம் பொருந்தி நிற்க; சாற்றும் உளம் அவையோடு ஒத்து முகத்தே நின்று உணர்ந்திடுதல் சகலம் - சொல்லப்பட்ட ஆன்மஞானமும் தத்துவ தாத்துவிகங்களுடனே கூடி முகத்தானத்திலே நின்று சத்தாதி விஷயங்களை அறிகிறது சகலாவத்தை;

உயிர்தனக்குப் போகத்துக்கு உறுவினையின் ஒழிவால் சுத்ததத்துவம் ஐந்தும் மாயாதி ஏழும் தொகு பூதம் ஓரைந்தும் தொழில்கள் ஒழிந்திட -

ஆன்மாக்களுக்குப் போகம் புசிக்கப் பொருந்துங் கருமமில்லாதபடியால் சுத்ததத்துவங்களைந்தும் மாயை முதலான ஏழு தத்துவங்களும் தொகுத்துச்சொல்லப்பட்ட பூதங்களைந்தும் ஆகப் பதினேழு தத்துவங்களினுடைய தொழில்கள் நீங்க; நித்தமாம் உளம் நின்ற முப்பது நாலுடனே நின்றிடல் தான் கேவல சாக்கிரம் ஆக நிகழ்த்தும் - நித்தியமாய் நின்ற ஆன்ம விருத்தி ஞானமானது ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும். காரண தன்மாத்திரைகளைந்தும், அந்தக்கரணங்கள் நான்கும், பிராணாதி வாயுக்கள் பத்தும். வசனாதிகளைந்தும் ஆக முப்பத்துநாலுடனுங் கூடி முப்பத்தைந்தாய் முகத்தானத்திலே நிற்கப் பிரேரக காண்டமும் போக சயித்திரு காண்டமும் நிருவியாபார மாகையால் ஆணவமலம் மேலிட்டு அதனாலே விழித்திருக்கையிலுங் கண்டுங் காணாமல் கேட்டுங் கேளாமல் மயங்கியிருக்கும் அவதரம் கேவல சாக்கிரமென்று சிவாகமஞ் சொல்லும், இது அப்பிரதிபா சாக்கிரமென்று சொல்லவும் பெறும் எ - று. (௱சசு)

147. அறிவிக்கும் தத்துவங்கள் செயல்களொழிந் திடவே
ஆணவமே லிடுதலினா லறிவுவிளங் காதாம்
நெறியுற்றங் கறிகருவி தொழிற்கருவி பத்து
நீங்கியிட விருபத்தைந் தாய்க்களத்தே முன்னே
செறிவுற்ற விடயங்க ணினைவையுந்தற் காலஞ்
சேர்விடயந் தனையுமனு பவித்திடுஞ்சொற் பனத்தே
பிறிவற்ற சித்தமுடன் பிராண னுள்ளம்
பெறும்போக மிலாதுளத்தே யுறல்சுழுத்தி பின்னே.

இ - ள்: அறிவிக்கும் தத்துவங்கள் செயல்கள் ஒழிந்திட ஆணவம் மேலிடுதலினால் அறிவு விளங்காதாம் - பிரேரகமாய் நின்றறிவிக்கின்ற தத்துவங்களுடைய தொழில்கள் நீங்க ஆணவம் மேலிடுதலினாலே ஞானேச் சாக்கிரியைகள் விளங்காமல் நின்று; நெறியுற்று அங்கு அறிகருவி தொழிற்கருவி பத்தும் நீங்கியிட - செவ்வையாக நின்ற ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்தும் நீங்க; இருபத்தைந்தாய்க் களத்தே - காரண தன்மாத்திரைகள் ஐந்தும், அந்தக்கரணங்கள் நான்கும், பிராணாதி வாயுக்கள் பத்தும், வசனாதிகள் ஐந்தும், ஆன்மஞானமுங்கூட ஆக இருபத்தைந்தாய்க் கண்டத்தானத்திலே நின்று; முன்னே செறிவு உற்ற விடயங்கள் நினைவையும் தற்காலம் சேர் விடயந்தனையும் அனுபவித்திடும் சொற்பனத்தே - சகலசாக்கிரத்தில் விடயங்களைக் கூடிப் புசித்த நினைவையும் அந்தக்காலத்திற் சூக்கும தேகத்திலே பொருந்தின விடயங்களையும் அனுபவிக்கிறது சுவப்பனவத்தை.

பிறிவு அற்ற சித்தமுடன் பிராணன் உள்ளம் பெறும் போகம் இலாது உளத்தே உறல் சுழுத்தி - நீக்கமில்லாத சித்த தத்துவத்துடன் பிராண வாயுவும் ஆன்மவிருத்திஞானமும் ஆக மூன்றாய் இருதயத் தானத்திலே சூக்குமதேக போகமுமில்லாமல் நிற்பது சுழுத்தியவத்தை: பின்னே - மேல் விருத்தத்தில் எஞ்சியவற்றைச் சொல்லுகிறோம் எ - று. (௱சஎ)

148. விழித்தினிது துயின்றேமென் றுணர்வ தாகு
மேற்றுரியஞ் சித்தமுநீங் கிடவுந்தி மேவி
யழித்தொழியா தேயுடலைப் பிராணனொன்றே யுயிர்ப்ப
வவ்விடத்தே யுறங்குவதா மறிவேது மின்று
யொழித்துமூ லாதாரத் துற்றிடுத லதீத
முணரிலிது நித்தகே வலமாக வுரைப்பர்
இழித்தபடி யேமேலே யேற்றியிடும் வினையா
லிறைவரருட் சத்தியென்றே யியம்பு நூலே.

இ - ள் : விழித்து இனிது துயின்றேம் என்று உணர்வது ஆகும் - சுழுத்தியினின்று விழித்தபின்பு நன்றாக நித்திரை பண்ணினேமென்று அறிவதாகும்—என்பது கணிகான்மவாதி சுழுத்தியில் ஆன்மநாசமும் புனருற்பத்தியு மென்றுசொல்லும், அவனைக் குறித்து அப்படியல்ல ஆன்மா நித்திய னென்பதற்காகச் சொன்னதென வறிக;

மேல் துரியம் சித்தமும் நீங்கிட உந்தி மேவி அழித்து ஒழியாதே உடலைப் பிராணன் ஒன்றே உயிர்ப்ப அவிடத்தே உறங்குவதாம் - மேற் சித்தமும் நீங்க நாபித்தானத்தைப் பொருந்திப் பிராணவாயுவுடனே தேகங் கெடாமல் உச்சுவாச நிச்சுவாசம் ஒழியாமல் ஆன்மவிருத்தி ஞானத்துடன் அந்தத் தானத்திலே தானே நித்திரையடைந்து நிற்பது துரியாவத்தை;

அறிவு ஏதும் இன்றாய் ஒழித்து மூலாதாரத்து உற்றிடுதல் அதீதம் உணரில் இது நித்தகேவலமாக உரைப்பர் - விடயசம்பந்தமான அறிவு சற்றுமில்லாமல் தத்துவ தாத்துவிகங்கள் சர்வமும் நீங்க ஆணவமலத்துடன் ஆன்மவிருத்திஞானம் மூலாதாரத்திலே பொருந்தி நிற்பது துரியாதீதம், இந்தத் துரியாதீதத்தை அறியுமிடத்து நித்திய கேவலமாகப் பெரியோர்கள் சொல்லுவார்கள்; இழித்தபடியே மேலே ஏற்றியிடும் வினையால் இறைவர் அருட்சத்தி என்றே இயம்பும் நூல் - ஈசுவரனுடைய கிருபா சத்தியானது ஆன்மாக்கள் கன்மானுகுணமாக அறிவைக் கீழ்நோக்கினபடியே மேல்நோக்கும்படி பிரேரிக்கு மென்று சிவாகமஞ் சொல்லும் எ-று. (ரசஅ)

அ - கை : மேல் சகலத்தில் துரியாதீதாதி பஞ்சாவத்தை கூறுகின்றது.

149. திடுக்கிடவோ ருரைகேட்டுப் பிராண வாயுச்
சீவியா துணராது திகைத்தலதீ தம்பின்
நடுக்குறுத றுரியமாங் கேதந் தன்னை
நண்ணுமனு பவஞ்சுழுத்தி நாடியதை வியந்தே
அடுத்ததுவே யாகிநிற்றல் கனவ தாகும்
அடைந்தவிந்த விதமனைத்து மறுத்து நன்றாய்
விடுத்துநல்ல வுணர்வாகி நிற்ற றானே
மேவியிடுஞ் சாக்கிரமா விளம்பு நூலே.

இ-ள்: திடுக்கிட ஓர் உரை கேட்டுப் பிராணவாயு சீவியாது உணராது திகைத்தல் அதீதம் - ஆன்மா முகத்தானத்திலே நின்று முப்பத்தாறு தத்துவ தாத்துவிகங்களுடனுங் கூடி விடயானுபவம் பண்ணுங் காலத்தில் புத்திர தாராதி மரணமுதலிய வார்த்தை திடுக்கிடக் கேட்டதனுலேயாகுதல், கல்லெறிபடுதல் முதலானவற்றினுலே யாகுதல், மூர்ச்சை வந்து பிராணவாயுச் சீவியாமல் ஒரு விஷயத்தையும் அறியாமல் அந்த முகத்தானத்திலே நிற்பது துரியாதீதம்; பின் நடுக்குறுதல் துரியமாம் - அதீதம் அடைந்தபின்பு பிராணவாயுச் சற்றே சீவிக்கத் தேகம் அசைவைப் பொருந்துதல் துரியமாம்; கேதம் தன்னை நண்ணும் அனுபவம் சுழுத்தி - பிராணவாயுவும் சித்தமுங் கூடிக் கேதமாத்திரமாகப் பொருந்து மனுபவம் சுழுத்தி; நாடி அதை வியந்து அடுத்து அதுவேயாகி நிற்றல் கனவது ஆகும் - பிராணுதி வாயுக்கள் பத்தும், வசன முதலான விஷயங்களைந்தும், பொருந்தப்பட்ட அந்தக்கரணங்கள் நான்கும், சத்தாதி விஷயங்களைந்தும் ஆக இருபத்து நாலுடனுங் கூடி அந்தத் துக்கத்தை விசாரித்து இன்னதனுலே வந்ததென்று கிட்டி அந்தத் துக்கந்தானுகி நிற்பது சுவப்பனமாம்; அடைந்த இந்த விதம் அனைத்தும் அறுத்து நன்ரு விடுத்து நல்ல உணர்வு ஆகி நிற்றல்தானே மேவியிடும் சாக்கிரமா விளம்பும் நூல் - ஆன்ம தத்துவம் இருபத்துநாலும், சுத்தாசுத்த தத்துவம் ஏழும், சுத்ததத்துவம் ஐந்தும் ஆக முப்பத்தாறு தத்துவங்களும் தாத்துவிகங்களுடனுங் கூடிப் பொருந்திநின்ற இந்தத் துக்க மெல்லாவற்றையும் நீங்கி நன்ருக விட்டு நல்லறிவாகி நிற்பது பொருந்தப்பட்ட சாக்கிராவத்தையா மென்று ஆகமஞ் சொல்லும் எ-று. (௱சசஅ)

அ-கை: மேல் ஐந்து விருத்தங்களால் ஆன்மாக் கேவல சகலங்களைப் பொருந்திச் சனன மரணப்பட்டுத் துக்கத்தையடைந்து நிற்கிற காலத்திலே மலாநுகுணமாக அன்னிய சமயத்தை யடைந்து, அதிலே பண்ணின புண்ணிய விசேஷங்களினுலே சைவசமயத்தை யடைந்து சரியை கிரியை யோகங்களைக் குறைவற அனுட்டித்து முத்தியை அடைவனென்பது கூறுகின்றது.

150. இப்படி யவத்தை யீரைந் தெய்தியே பிறப்பி றப்பாம்
வெப்புறுங் காலந் தன்னில் வேதத்தின் வழிய தன்றிப்
பொய்ப்பொருட் சமயந் தன்னிற் புரிந்திடுந் தவத்தினுலே
தப்பிலா வேதஞ் சொன்ன சமயத்தைச் சார்ந்து நின்றே.

இ-ள்: இப்படி அவத்தை ஈரைந்து எய்தி பிறப்பு இறப்பு ஆம் வெப்பு உறும் காலம் தன்னில் - இந்தப்பிரகாரம் ஆன்மாக்கள் கேவல சகலமாகிய பத்து அவத்தைகளையும் பொருந்திச் சனன மரணப்பட்டுத் துக்கத்தைப் பொருந்திநிற்குங் காலத்தில்; வேதத்தின் வழியது அன்றிப் பொய்ப்பொருள் சமயந்தன்னில் புரிந்திடும் தவத்தினுலே - வேத சாத்திரத்தின் வழியன்றிப் பொய்யாகிய பொருளையுடைய சமயத்தில் நின்று செய்யுந்

தபோபலத்தினலே; தப்பு இலா வேதம் சொன்ன சமயத்தைச் சார்ந்து நின்று - பரமேசுவரன் யதாவத்தாகத் திருவுளம்பற்றின வேதோக்தா சாரமான சமயத்தைப் பொருந்திநின்று எ - று. (௱௫௰)

151. வன்னமோர் நான்கி னுக்கு மாசிலாச் சிரமங் கட்கும்
சொன்னவா றிடரி லாதே செய்தவர் சுவர்க்கந் துய்த்துப்
பின்னை மா நிலத்தின் வந்து சிவதன்மம் பெரிதென் றெண்ணி
முன்னையா கமங்கள் சொன்ன படிதவ முயல்வ மென்றே.

இ - ள்: வன்னம் ஓர் நான்கினுக்கும் மாசு இல் ஆச்சிரமங்கட்கும் சொன்னவாறு இடர் இலாதே செய்தவர் சுவர்க்கம் துய்த்து - பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர ரென்னும் நாலு வருணத்துக்கும் குற்றமில்லாத பிரமசரிய கிருகத்த வானப்பிரத்த சன்னியாச மென்னும் நாலாச்சிரமத் துக்கும் வேதத்திலே சொன்னபடி தவறில்லாமல் புண்ணிய கன்மங்களைப் பண்ணினவர்கள் சுவர்க்கலோகத்தைப் பொருந்திச் சுகத்தைப் புசித்து; பின்னை மா நிலத்தின் வந்து சிவதன்மம் பெரிது என்று எண்ணி - பின்பு பூமியின்கண்ணே வந்து செனித்து முன் பண்ணின புண்ணிய விசேடங்க ளினலே சிவாகமோக்த தன்மம் அதிகமென்று அறிந்து; முன்னை ஆகமங் கள் சொன்னபடி தவம் முயல்வம் என்று - அநாதியே பரமேசுவரன் திரு வுளம்பற்றின சிவாகமோக்தப் பிரகாரமான சைவ சமயத்தை யடைந்து தவத்தைப் பண்ண உத்தியோகிப்போம் என்று எ - று. (௱௫௧)

152. எண்ணியோர் குருவைச் சேர்ந்தே யெழில்பெறு சமய தீக்கை
நண்ணியே சரியை தன்னை நவையற வியற்றி யத்தால்
புண்ணிய சிவலோ கத்தைப் பொருந்தியங் குள்ள போகம்
அண்ணலா ரருளப் பெற்றங் கருந்திமே லவனி மீதே.

இ - ள்: எண்ணி ஓர் குருவைச் சேர்ந்து எழில் பெறு சமயதீக்கை நண்ணி - விசாரித்து ஒரு ஞானசாரியரை யடைந்து அழகையுடைத்தாகிய சமயதீக்கையைப்பெற்று; சரியை தன்னை நவை அற இயற்றி - சமயதீக்காதி காரமான சிவாலயத்தில் அலகிடுதல், கோமயத்தால் மெழுகுதல், சிவபூசைக் குப் புட்பமெடுத்து மாலைகட்டுதல், திருவிளக்கேற்றுதல், திருநந்தவனஞ் செய்தல், சிவபக்தர்களைப் பூசித்தல், பஸ்ம ருத்திராக்ஷ தாரணஞ்செய்தல் இவை முதலான சரியைத் தொழிலைத் தோஷமறச் செய்து; அத்தால் புண் ணிய சிவலோகத்தைப் பொருந்தி அங்கு உள்ள போகம் அண்ணலார் அருளப் பெற்று அங்கு அருந்தி மேல் அவனிமீது - அந்த அனுட்டான மான சிவபுண்ணியத்தினலே சிவலோகத்தை யடைந்து கர்த்தாவாகிய சிவ னல் அவ்விடத்தி லுள்ள போகங்களைக் கொடுக்கப் பெற்று அங்கிருந்து அவற்றைப் புசித்துத்தொலைத்து அதற்குமேற் பூமியின்கண்ணே வந்து என்றவாறு. (௱௫௨)

153. உதித்தருள்சேர் குருவாலே விசேட தீக்கை
யுற்றுணர்ந்து சிவபூசை யூனமறச் செய்தே
துதித்திடுநற் சாமீபஞ் சிவன்பாற் பெற்றுத்
துய்த்திடுவர் பெரும்போகந் தொலைந்த காலை
நதிச்சடையா னருளாலே புவியி னண்ணி
நாடரிய சிவயோக மியற்றி நன்றாத்
திதிக்கொழிவாங் காலமுறு மளவு மந்தச்
சிவனுடைய சாரூபஞ் செறிந்து நின்றே.

இ - ள்: உதித்து அருள் சேர் குருவால் விசேட தீக்கை உற்று உணர்ந்து சிவபூசை ஊனம் அறச் செய்து - செனித்து ஞானசாரியராலே விசேடதீக்கையைப் பெற்று விசேடதீக்காதிகாரமான ஆகமாத்தியயனம் சிவபூசை முதலானவற்றைக் குருமுகமாக நன்றாக அறிந்து நூனாதிக மில்லாமல் செய்யுங் கிரியாபாதாநுட்டானத்தாலே; துதித்திடும் நல் சாமீபம் சிவன்பால் பெற்றுத் துய்த்திடுவர் பெரும் போகம் தொலைந்த காலை - துதிக்கப்பட்ட நன்மையாகிய சிவனுடைய சமீபத்தை யடைந்து அவ்விடத்துள்ள மகாபோகங்களைப் புசிப்பார்கள், அந்தப் போகம் புசித்து நீங்கின பொழுது; நதிச்சடையான் அருளாலே புவியில் நண்ணி நாட அரிய சிவயோகம் இயற்றி நன்றா - கங்கையைத் தரித்த சடாமகுடத்தையுடைய சிவனுடைய ஆஞ்ஞையினாலே பூமியின்கண்ணே செனித்துச் சஞ்சித ஆகாமிய கன்மங்களெல்லாம் நசிக்கும்படிக்கு அட்டாங்கமாய் நின்ற அரிதாகிய சிவயோகத்தைக் குருமுகமாக நன்றாக அறிந்து அனுட்டித்து, அந்த யோகபாதாநுட்டானத்தாலே; திதிக்கு ஒழிவு ஆம் காலம் உறும் அளவும் அந்தச் சிவனுடைய சாரூபம் செறிந்து நின்று - திதிகாலத்துக்கு நாசம் வருமளவும் அந்தச் சிவனுடைய சாரூபத்தைப் பொருந்திநின்று அவ்விடத்திலுள்ள மகா போகத்தைப் புசிக்கிற காலத்தில் எ - று. (௱௫௩)

154. ஆகத்தி லாசையில ராகிச் சற்று
மளவிறந்து மேன்மேலு மடைவ தான
போகத்திற் பற்றிலரே யாகிலுல கெல்லாம்
பொன்றிடுங்கா லிவர்தாமும் பொருந்திடுவர் முத்தி
மோகத்தைத் தவிராதோர் பிணைச்சிருட்டி கால
முளைத்துலகிற் குருவாலே முத்திபெற மலத்தின்
பாகத்தை யடைந்ததனாற் சத்திபதிந் திடவே
பரஞானத் தால்முத்தி பலிக்குமவர் பாலே.

இ - ள்: ஆகத்தில் ஆசை இலராகிச் சற்றும் அளவு இறந்து மேல் மேலும் அடைவதான போகத்தில் பற்று இலரே ஆகில் - தேகாபிமானமாகிய இச்சையில்லாதவர்களாகி மட்டிலாது மேலே மேலே பொருந்தாநின்ற போகங்களிலே சற்றும் இச்சையில்லாதவர்களாகில்; உலகு எல்லாம்

பொன்றிடுங்கால் இவர் தாமும் முத்தி பொருந்திடுவர் - சகலப் பிரபஞ்ச மும் நசிக்கும் காலத்தில் விஞ்ஞானகலர் பிரளயாகலர்போல இவர்களும் மோக்ஷத்தை அடைவார்கள்; மோகத்தைத் தவிராதோர் பின்னைச் சிருட்டி காலம் முளைத்து உலகில் குருவாலே முத்தி பெற - விஷயமாய் நின்ற போகங்களிலே மயக்கத்தை விடாதவர்கள் சங்கார காலத்துக்குப் பின்பு உண்டான சிருட்டிகாலத்தில் பூலோகத்தில் செனித்து ஆசாரியராலே மோட்சமடைய; மலத்தின் பாகத்தை யடைந்ததனுல் சத்தி பதிந்திடவே பர ஞானத்தால் அவர்பால் முத்தி பலிக்கும் - மலத்தினுடைய பரிபாகத்தைப் பொருந்தியதனுலே சிவசத்தியானது பிரகாசிக்கச் சிவஞானத்தினுலே அவர் களிடத்திலே மோட்சஞ் சித்திக்கும் எ - று. (௱டுச)

அ - கை : மேல் சரியை கிரியை யோகங்களை யனுட்டித்த தவத் தினுலே, இருவினையொப்பும், மலபரிபாகமும், சத்தி நிபாதமுமா மென்ப தும் அந்தச் சத்தி நிபாதம் நாலுவிதமா மென்பதுங் கூறுகின்றது.

155. இப்படியே விசேடமாஞ் சிவதருமச் சரிதை
யெழிற்கிரியை யோகமிவை யியற்றியிடுந் தவத்தால்
தப்பறவே யொன்றையொன் றங் கொழிப்ப தாகத்
தரும்பாவ புண்ணியங்கள் சமனுகப் பொருந்த
அப்பொழுதே வினையனைத்தும் பருவ மாகி
யாணவமும் பக்குவத்தை யடைதல் செய்ய
ஒப்புயர்வொன் றில்லாத சிவன்சத்தி பதியு
முணரிலிது மந்தாதி நால்விதமா யுரைப்பார்.

இ - ள் : இப்படியே விசேடமாம் சிவதருமச் சரிதை எழில் கிரியை யோகம் இவை இயற்றியிடும் தவத்தால்- இந்தப்பிரகாரம் விசேடமாயிருக்கிற சிவபுண்ணியச் சரிதை, வளராநின்ற சிவபூசாதி கிரியை, சிவயோகம் இவை களைச்செய்யும் தவத்தினுலே; தப்பு அற ஒன்றை ஒன்று அங்கு ஒழிப்பதாகத் தரும் பாவ புண்ணியங்கள் சமனுகப்பொருந்த - தப்பாமல் ஒன்றையொன்று தள்ளத்தக்க முறைமையை உடைய புண்ணிய பாபங்கள் சமபலமாகப் பொருந்த; அப்பொழுதே வினை அனைத்தும் பருவம் ஆகி ஆணவமும் பக்கு வத்தை அடைதல்செய்ய ஒப்பு உயர்வு ஒன்று இல்லாத சிவன் சத்தி பதியும் - அந்தக் காலத்தில் சர்வகன்மமும் பரிபக்குவமாய் ஆணவமலமும் பரிபாகத் தைப் பொருந்தச்செய்யும்பொழுது உவமையில்லாதவராகிய பிரமாதி தேவர் களுக்கு உத்கிருஷ்டரான சிவனுடைய சத்தியானது பதியும் - சத்திநிபாத மாவது ஆன்மஞானத்தைத் தடுக்கும் ஆணவசத்தி அதிகார நிவிர்த்திக்குப் பக்குவம்வந்து நழுவுகிற அவதரத்திலே முற்பிற்பாடறச் சகதேக பந்துவான சிவனுடைய சத்தியானது பதிந்து ஆன்மாவினுடைய நித்திய ஞானக் கிரியையை அபிவியத்தியாக்குவது; உணரில் இது மந்தாதி நால்விதமாய் உரைப்பார் - இந்தச் சத்திநிபாதத்தை அறியுமிடத்து மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என்று நாலுவிதமாக அறிவுடையோர்கள் சொல்லு வார்கள் எ - று. (௱டுடு)

அ - கை : மேல் சத்திநிபாதம் வருவதற்கு உபாயம் கூறுகின்றது.

156. சத்திதா னிவிர்த்திபதிந் திட்ட போது
தரும்விரத்தி பொய்வாழ்விற் சாற்றிலதே மந்தம்
முத்திதனை யிச்சித்து விரத்திநிலை செய்யு
மொழிபதிட்டா சத்தியது முனின்மந்த தரமாம்
சுத்தமாம் விஞ்ஞானம் விளக்கும் வித்தை
தோய்ந்ததனுற் சத்திபெயர் தீவிரமாச் சொல்வார்
சித்திக்க வுபசாந்தி செறிசத்தி சாந்தி
சேர்ந்திடிற்றீ விரதரமாச் செப்புமிதன் பெயரே.

இ - ள் : சத்தி தான் நிவிர்த்தி பதிந்திட்டபோது தரும் விரத்தி பொய் வாழ்வில் சாற்றில் அதே மந்தம் - நிவிர்த்திசத்தியானது ஆன்மாவினிடத்திலே பிரகாசித்தபொழுது அசத்தியமாயிருக்கிற சரீராதிப் பிரபஞ்சத்திலே வைராக்கியம் வருமதைச் சொல்லுமிடத்தில் மந்த சத்திநிபாதமாம்; முத்திதனை இச்சித்து விரத்தி நிலைசெய்யும் மொழி பதிட்டா சத்தி அது முன்னில் மந்ததரமாம் - சொல்லப்பட்ட பிரதிட்டா சத்தியானது மோட்சத்தை அபேக்ஷித்துவந்த வைராக்கியத்தைத் திரம்பெறச்செய்யும், அதை விசாரிக்குமிடத்தில் மந்ததர சத்திநிபாதம்: இவ்விடத்தில் தரப்புப் பிரத்தியயம் நூனத்திலே; சுத்தம் ஆம் விஞ்ஞானம் விளக்கும் வித்தை தோய்ந்ததனுல் சத்தி பெயர் தீவிரமாச் சொல்வார் - வித்தியாசத்தியானது ஆன்மஞானத்திலே பதிந்து சுத்தமாகிய விஞ்ஞானத்தைப் பிரகாசிப்பிக்குமாகையால் தீவிரசத்தி நிபாதமென்று அறிவுடையோர் சொல்லுவார்கள்; சித்திக்க உபசாந்தி செறி சத்தி சாந்தி சேர்ந்திடில் தீவிரதரமாச் செப்பும் இதன்பெயர் - சாந்திசத்தியானது ஆன்மஞானத்திலே பதிந்திடில் உபசாந்தியானது உண்டாகுமாகையால் இதற்குப் பெயர் பொருந்தப்பட்ட தீவிரதர சத்திநிபாதமென்று சிவாகமம் சொல்லும்: இவ்விடத்துத் தரப்புப் பிரத்தியயம் அதிகத்திலே என்றவாறு. (௱ருகூ)

அ - கை : மேல் ஆன்மஞானத்தைத் தாரதம்மியமாக உதிப்பிக்கையால் அந்தச் சிவசத்திக்கு மந்தாதியான நாலு பெயர் உண்டாமென்பது கூறுகின்றது.

157. மந்தமாய் மெய்ஞ்ஞான முதிப்பிக்கு மதனுல்
மந்தசத்தி யெனப்பெயரா மற்றதனி னதிகம்
உந்திடமெய்ஞ் ஞானத்தை யுதிப்பிக்கு மதனு
லுரைத்திடுவர் மந்ததர சத்தியென வுணர்ந்தோர்
சிந்தையார் விஞ்ஞானஞ் சடுதியுதிப் பிக்குஞ்
செயலதனுற் றீவிரமாஞ் சத்தியெனத் தெரிப்பார்
அந்தமா திகளில்லாச் சிவஞான மிகவு
மாக்கறீ விரதரமாஞ் சத்தியென வறைவார்.

இ - ள் : மந்தமாய் மெய்ஞ்ஞானம் உதிப்பிக்கும் அதனல் மந்தசத்தி எனப் பெயர் ஆம் - ஆன்மஞானத்திற் கொஞ்சமாகச் சிவஞானத்தை உண்டாக்குமாகையால் மந்த சத்தியென்று பெயராம்; மற்று அதனின் அதிகம் உந்திட மெய்ஞ்ஞானத்தை உதிப்பிக்கும் அதனல் உணர்ந்தோர் மந்ததர சத்தியென உரைத்திடுவர் - அந்த மந்தத்திலும் சற்று அதிகமாகப் பொருந்தச் சிவஞானத்தை உண்டாக்கும் ஆகையால் மந்ததர சத்தியென்று அறிவுடையோர் சொல்லுவார்கள்; சிந்தையார் விஞ்ஞானம் சடுதியில் உதிப்பிக்கும் செயலதனல் தீவிரமாம் சத்தியெனத் தெரிப்பார் - சிந்திக்குந் தன்மை பொருந்தின ஆன்மஞானத்திலே சிவஞானத்தைச் சடிதியிலுண்டாக்குஞ் செய்கையினலே தீவிர சத்தியாமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்; அந்தம் ஆதிகள் இல்லாச் சிவஞானம் மிகவும் ஆக்கல் தீவிரதரமாம் சத்தி என அறைவார் - ஆதி நடு அந்தமில்லாத சிவஞானத்தை மிகவும் ஆன்மாவுக்கு உண்டாக்குதல் தீவிரதர சத்தியாமென்று சிவஞானத்தையுடைய பெரியோர்கள் சொல்லுவார்கள் எ - று. (௱௫௭)

அ - கை : மேல் சத்தி நிபாதமுடைய ஆன்மாக்களிடத்திலே நிகழுங் கிருத்தியங் கூறுகின்றது.

158. சத்திநிபா தம்பிறந்த தேகிசிவன் பாலுந்
தற்பத்தர் பாலுமிகத் தளர்வொன் றில்லாப்
பத்திசெய்தே சத்தாதி விடயந் தன்னைப்
பகையாக நோக்கிமுனம் புரியு மெட்டுச்
சித்திமுத லனைத்துலகில் வாழ்வு மெத்தச்
சிறிதாக நினைந்தருளே சிந்தை யாய்நல்
முத்திநெறி யேதெமக்குப் பாசந் தன்னை
மோசிப்பா ராரென்று முயலுங் காலே.

இ - ள் : சத்திநிபாதம் பிறந்த தேகி சிவன்பாலும் தன் பத்தர்பாலும் மிகத் தளர்வு ஒன்று இல்லாப் பத்தி செய்து - முன்சொன்ன சத்திநிபாதமுண்டான ஆன்மாவானவன் சிவனிடத்திலும் அந்தச் சிவனுடைய பக்தர்கள் இடத்திலும் மிகவும் நழுவுதலில்லாத பக்தியைப் பண்ணி; சத்தாதி விடயம் தன்னைப் பகையாக நோக்கி முன்னம் புரியும் எட்டுச் சித்தி முதல் அனைத்து உலகில் வாழ்வு மெத்தச் சிறிதாக நினைந்து - சத்த முதலான விடயங்களை நமக்குச் சனன மரணங்களைப் பண்ணுகையால் பகையென்று கண்டு முன் இனியவாகச் சொல்லப்பட்ட அணிமாதி எட்டுச் சித்தி முதலாயின வெல்லாவற்றையும் உலகத்தில் புத்திர மித்திர களத்திராதியா யிருக்கிற வாழ்வு மிகுதியும் சிறிதாகையாற் பிரயோஜனமில்லை யென்று விசாரித்து; அருளே சிந்தையாய் நல் முத்தி நெறி ஏது எமக்குப் பாசந்தன்னை மோசிப்பார் ஆர் என்று முயலுங்கால் - சிவனுடைய கிருபை எப்போது வருமென்னும் நினைவுடையவனாய் நமக்குச் சத்திய மோட்சத்தை அடைவதற்கு ஏது வழி, பாசபந்தத்தை விடுவிப்பார் யார் என்று இப்படி உத்தியோகம் பண்ணி நிற்குங் காலத்தில் எ - று. (௱௫௮)

அ - கை : மேலே சிவன் கிருபையினுலே ஆசாரிய மூர்த்தியை அதிட்டித்துநின்று சத்திநிபாதமுடைய ஆன்மாக்களுக்கு அனுக்கிரகித்து மோட்சத்தைக் கொடுப்பரென்பது கூறுகின்றது.

159. அனைத்துயிர்க்கு முயிராகி நின்றே யென்று
மாருறு தத்துவத்துக் கதீத ஞகி
நினைப்பரிய ஞயசிவன் கருணை யாலே
நீடுலகிற் சற்குருவா நிமலன் றேகம்
தனைப்பொருந்தி யவன்ருனே யாகி நின்று
சத்திநிபா தத்தையுள்ளோர் தங்கள் பாச
வினைத்தொகுதி யொழிந்திடவே நோக்கித் தீண்டி
விளம்பவுத் திரியாதி யாலளிப்பன் வீடே.

இ - ள் : அனைத்து உயிர்க்கும் உயிராகி நின்று என்றும் ஆருறு தத்துவத்துக்கு அதீதன் ஆகி நினைப்ப அரியஞய சிவன் கருணையாலே - எல்லா ஆன்மாக்களுக்கும் பிராணஞகி நின்று எப்போதும் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்தவராய் வாக்கு மனங்களுக் கெட்டாதவராயுள்ள சிவன் கிருபையினுலே; நீடு உலகில் சற்குருவாம் நிமலன் தேகம் தன்னைப் பொருந்தி அவன் தானே ஆகி நின்று - விசாலமாய் நின்ற பூமியின்கண் உக்தலட்சண லட்சிதராகிய ஞானசாரியர் தேகத்தை அதிட்டித்து அவரே தாமாகி நின்று; சத்திநிபாதத்தை உள்ளோர் தங்கள் பாசவினைத் தொகுதி ஒழிந்திடவே நோக்கித் தீண்டி விளம்பு அவுத்திரியாதியால் வீடு அளிப்பன் - சத்திநிபாதத்தையுடைய ஆன்மாக்களுக்கு ஆணவ மாயா கன்மங்கள் நீங்கத்தக்கதாக விடந்தீண்டினவனை விடம் நீங்க விடகாரியானவன் விடவைரியான கருடப்பார்வையாகப் பார்த்ததுபோலச் சிஷ்யனுடைய அஞ்ஞானம் நீங்குமாறு அஞ்ஞான வைரியாகிய சிவபாவனையாகப் பார்த்தும்,இரும்பைப் பொன்னுக்கும் பரிசவேதிபோலச் சிஷ்யனுடைய பிரமரந்திரத்திலே சிவ அத்தம் வைத்தும், எல்லா மந்திரங்களுக்கும் நாயகமாகி விளங்கும் பஞ்சாட்சரத்தை உபதேசித்தும் இப்படி ஓமத்துடன் கூடின ஔத்திரி முதலான தீட்சைகளைப் பண்ணி அதனுலே ஞானத்தைப் பிறப்பித்து மோட்சத்தைக் கொடுப்பன் எ - று. (௱௫௯)

அ - கை : மேல் இரண்டு விருத்தங்களால் நாலு சத்திநிபாதானுகுணமாக அத்துவா சோதனை பண்ணுங் கிரமங் கூறுகின்றது.

160. மந்தமாஞ் சத்திநிபா தர்க்கருளாற் குருவு
மாய்த்தருளி யிருகலையின் மருவுவினை யனைத்தும்
சுந்தரமாம் பிரகிருதி தனக்கு மேலாய்ச்
சொல்லுபுவ னங்கடமிற் ருெக்கிருக்க வளிப்பன்

சிந்தையார் மந்ததர சத்திபதி போதிற்
சிதைந்திடமுக் கலையின்வினை யனைத்து மாயா
பந்தமா னதுமறவே சுத்த மான
பந்தானத் தேசுத்த வித்தைதனிற் பதிப்பன்.

இ-ள்: மந்தம் ஆம் சத்திநிபாதர்க்கு அருளால் குருவும் மாய்த்தருளி இருகலையின் மருவு வினை அனைத்தும் - ஆசாரியர் கிருபையினாலே மந்தசத்தி பதிந்த ஆன்மாக்களுக்கு நிவிர்த்தி பிரதிட்டை என்னும் இரண்டு கலையிற் பொருந்தியிருக்கும் கன்மங்களெல்லாம் கெடச்சோதித்து; சுந்தரம் ஆம் பிரகிருதி தனக்கு மேலாய்ச் சொல்லு புவனங்கள் தம்மில் தொக்கு இருக்க அளிப்பன் - பிரகிருதிக்கு மேலாயிருக்கிற கலாதத்துவத்திலே அழகாகச் சொல்லப்பட்ட புவனங்களிலே தங்கியிருக்கப் பண்ணுவர்; சிந்தையார் மந்ததர சத்தி பதிபோதில் சிதைந்திட முக் கலையின் வினை அனைத்தும் மாயா பந்தம் ஆனதும் அறவே - ஆன்மாக்களுக்கு மந்ததர சத்திநிபாதம் பொருந்தின காலத்தில் நிவிர்த்தி பிரதிட்டை வித்தை என்னும் மூன்று கலைகளிற் பொருந்தியிருக்குங் கன்மங்களெல்லாம் கெட மாயா பந்தமானதுங் கெடச் சோதித்து; சுத்தம் ஆன பந்தானத்தே சுத்த வித்தைதனில் பதிப்பன் - சுத்தாத்துவாவிற் சுத்தவித்தியா தத்துவத்திற் பொருந்தியிருக்கப் பண்ணுவர் எ-று. (௱௬௰)

161. பெற்றிடிற்றீ விரமாகுஞ் சத்தி பாதம்
பேசியிடுஞ் சாந்திகலைப் பாச நீக்கி
உற்றிடவே சிவசமமா முத்தி யென்றே
யுரைசெய்யு மபரமுத்தித் தானமுற வளிப்பன்
பற்றிடுமிப் பதமுத்தி மூவகையோர் தமக்குப்
பரமுத்தி பிரளயத்தே பரமனளித் திடுவான்
சற்றுமோபற் றில்லாத்தீ விரதரமாஞ் சத்தி
தான்பதியிற் சத்தியோ நிருவாணந் தானே.

இ-ள்: பெற்றிடில் தீவிரம் ஆகும் சத்திபாதம் பேசியிடும் சாந்தி கலைப் பாசம் நீக்கி - ஆன்மாக்களுக்குத் தீவிர சத்திநிபாதம் உண்டாகிற் சொல்லப்பட்ட சாந்திகலையிற் பொருந்தியிருக்கும் ஆணவமல பந்தத்தைச் சோதித்து; உற்றிடவே சிவசமம் ஆம் முத்தியென்றே உரைசெய்யும் அபர முத்தித் தானம் உற அளிப்பன் - அபரமுத்தித் தானமாகிய சத்தி தத்துவஞ் சிவ தத்துவங்களிலே பொருந்திச் சிவசாமியமாக இருக்கப் பண்ணுவர்; பற்றிடும் இப் பத முத்தி மூவகையோர் தமக்குப் பரமுத்தி பிரளயத்து பரமன் அளித்திடுவான் - இந்தப் பதமுத்தியிலே யிருக்கிற மூவகை ஆன்மாக்களுக்கும் திதிகால முடிவிலே பிரளயாதியிலே பரமசிவன் அனுக்கிரகம் பண்ணிப் பரமமோட்சத்தைக் கொடுப்பர்; அப்பொழுது அனுக்கிரகத்துக்குப் பருவமில்லாத பெயர்கள் சிருட்டிகாலம் வருமளவும் நிருமல சுழுத்

தியை யடைந்திருந்து சிருட்டிக்குப் பின்பு பரிபாகாநுகுணமாகப் போகத்தைப் புசித்திருந்து திதிகாலமுடிவிலே சங்காராதியிலே அனுக்கிரகத்தைப் பெற்றுப் பரம மோக்ஷத்தை யடைவார்கள்; சற்றும் ஓர் பற்றில்லாத் தீவிர தரமாம் சத்திதான் பதியில் சத்தியோநிருவாணம் தானே - ஒரு விடயத்திலும் சற்றும்பற்றில்லாத தீவிரதர சத்தியாகப் பதியிற் சத்தியோநிருவாண தீட்சை எ - று. (௱௬௧)

அ - கை: மேல் சத்தியோநிருவாண தீட்சை பண்ணுங் கிரமங் கூறுகின்றது.

162. சத்தியோ நிருவாணஞ் சஞ்சிதமாம் வினைக
டம்முடனே பிராரத்த வினைகடனு வாதி
யத்தனையு மொழித்தருளி யகண்டாகா ரதையா
யளவிறந்த வானந்த மாகிச் சுத்த
சித்துருவாய் நித்தமாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழுமொளி யாய்மனத்தாற் சிந்திக் கொண்ணு
நித்தனுடன் வேறறவே நிறுத்த லென்றே
நிகழ்த்தியிடுஞ் சித்தாந்த முத்தியிந்த நிலையே.

இ - ள்: சத்தியோநிருவாணம் சஞ்சிதம் ஆம் வினைகள் தம்முடனே பிராரத்த வினைகள் தனு ஆதி அத்தனையும் ஒழித்தருளி - சத்தியோநிருவாண தீட்சையென்றது வெகுசன்ம காரணமாய் நின்ற சஞ்சித கன்மங்கள் புசித்தாலொழிய நீங்கா வென்னும் பிராரத்த கன்மங்களுக் கீடாக நின்ற தனு கரண புவன போகங்க ளெல்லாவற்றையும் நீக்கி அனுக்கிரகித்து; அகண்டகாரதையாய் - காலதேச வத்துக்களிலே கண்டிக்கப் படாததாய்; அளவு இறந்த ஆனந்தமாகிச் சுத்த சித்துருவாய் நித்தமாய் - மட்டில்லாததாகிய ஆனந்த ஸ்வரூபமாகி நின்மல சிற்சொரூபமாய் நித்தியமாய்; சிறிதாகிப் பெரிதாய்த் திகழும் ஒளியாய் மனத்தால் சிந்திக்க ஒண்ணு நித்தனுடன் வேறு அற நிறுத்தல் - அத்தியந்த சூக்குமமாகி வியாபகமாய் விளங்கா நின்ற பரஞ்சோதியாய் வாக்கு மனங்களுக்கு எட்டாததாய் இப்படி நித்தியனாய் நின்ற சிவனுடன் அபேதமாக யோசிப்பது; என்று நிகழ்த்தியிடும் சித்தாந்த முத்தி இந்த நிலையே - சித்தாந்த முத்தி இந்தப்பிரகாரமேயென்று சிவாகமஞ் சொல்லும் எ - று. (௱௬௨)

அ - கை: மேல் இரண்டு விருத்தங்களாலே சாம்பவ தீட்சைபண்ணும் கிரமமும், நிருவாண தீட்சை இரண்டுவிதமாகப் பண்ணும் கிரமமும் கூறுகின்றது.

163. மந்திரங்கள் மருந்துகளோர் தொழில்க ளின்றி
வாய்த்திடவே கருடபா வனைமனத்தி னுலே
சிந்தவிட மானதுதான் றீர்க்கும் பார்வைச்
செயலெனவே சிவஞானத் தேசி கன்ருன்

பந்தமறுத் தாணவத்தின் பாச நீங்கப்
பார்த்தருளிப் பரிசத்தால் மாயையறப் பார்த்தே
முந்துவினை கலைகள்சோ தனையாற் போக
முளைக்கும்வினை யொழித்தற்கு மூலமனு மொழிவான்.

இ - ள்: மந்திரங்கள் மருந்துகள் ஓர் தொழில்களின்றி வாய்த்திட கருடபாவனை மனத்தினலே சிந்த விடமானது தான் தீர்க்கும் பார்வைச் செயல் என - மந்திரங்கள் ஔஷதங்கள் ஒரு தொழில்களும் இல்லாமல் மனத்திலே கருடபாவனை கைவந்தவன் விடந்தீண்டினவனுக்கு விடமானது நீங்கப் பார்க்குஞ் செய்கைபோல; சிவஞானத்தேசிகன் தான் பந்தம் அறுத்து ஆணவத்தின் பாசம் நீங்கப் பார்த்தருளி - சிவமயமாய் நின்ற ஞானசாரியன் ஆணவ பந்தத்தைப் போக்கிப் பாச வாதனையும் நீங்கக் கிருபையாகப் பார்த்து; பரிசத்தால் மாயை அறப்பார்த்து - பரிசத்தினலே மாயாபந்தம் அறப்பார்த்து; முந்து வினை கலைகள் சோதனையால் போகம் முளைக்கும் வினை ஒழித்தற்கு மூலமனு மொழிவான் - கன்மங்கள் பொருந்தியிருக்கிற கலைகளைச் சோதிக்கையால் போகத்தை உண்டாக்கும் கன்மங்கள் போவதற்கு மூலமந்திரத்தை உபதேசிப்பர் எ - று. (ாகூங)

164. சாம்பவமா மித்தீக்கை நிருவாண தீக்கை
தான்கிரியை ஞானமென விரண்டாகு மவைதாம்
ஆம்படிதான் மண்டபமுங் குண்டத் தோடே
யழகுபெற நூன்முறையே யமைத்துச் சற்றும்
சோம்பலிலாக் கிரியையுடன் மந்திரங்க ளுரைத்துச்
சுத்தமாம் பொருளானல் சொன்னபடி யழலு
ேைம்புவதாங் கிரியையிவை மனத்தி னலே
யுறச்செய்தல் ஞானமென வுரைக்கு நூலே.

இ - ள்: சாம்பவம் ஆம் இ தீக்கை - இத்தீக்கை சாம்பவ தீக்கை யென்று சொல்லப்படும்; நிருவாண தீக்கைதான் கிரியை ஞானம் என இரண்டாகும் - நிருவாண தீக்கையானது கிரியாவதி என்றும் ஞானவதி என்றும் இரண்டுவிதமாகும்; அவைதாம் ஆம்படி தான் மண்டபமும் குண்டத்தோடே அழகுபெற நூல்முறையே அமைத்து - அந்த இரண்டுவிதமான தீக்கையானதுதான் உண்டாகும் கிரமங்கள் சிவாகமத்திலே சொன்ன விதிப்படியே மண்டபத்தையும் குண்டத்தையும் நூனதிகமில்லாமல் அழகு பெறச்செய்து; சற்றும் சோம்பல் இலாக் கிரியையுடன் மந்திரங்களுரைத்து - சற்றுகிலும் கிரியாலோபம் இல்லாமல் உக்தப்பிரகாரமாகக் கிரியைகளையும் பாவனைகளையுமுடைய உதாத்த அனுதாத்தப் புலுத மந்திரங்களைச் சொல்லி; சுத்தமாம் பொருளால் நூல் சொன்னபடி அழல் தான் ஓம்புவதாம் கிரியை - சிவாகமத்திலே சொன்னபடி சுத்தமாயிருக்கிற ஓமயோக்கியமான திரவியங்களால் சிவாக்கினியில் ஆகுதி செய்வது கிரியாவதி என்னும் தீக்கை; இவை

மனத்திஞலே உறச்செய்தல் ஞானம் என நூல் உரைக்கும் - இந்தக் கிரியைகளை மனத்திஞலே பொருந்தப் பாவித்துப் பண்ணுகிறது ஞானதீக்கை என்று சிவாகமம் சொல்லும் எ - று. (௱௬௪)

அ - கை: மேல் ஞானுசாரியன், போதகாசாரியன், சாதகாசாரியன் இவர்கள் உபதேசிக்கும் கிரமம் கூறுகின்றது.

165. ஏதமிலாச் சாம்பவமாந் தீக்கை செய்வோ
னெழின்ஞான குருவாகு மிவ்வா றில்லாப்
போதகன்ரு னவுத்திரியால் விணைக ணீக்கிப்
போதிப்ப ஞகமத்தின் பொருள்க டம்மைச்
சாதகன்ருன் கருமதீக் கையிணைப் பண்ணிச்
சாற்றிடுவன் தந்திரமந் திரங்க டம்மைப்
பேதமின்றிச் சிவானுபவம் பெற்று வாழ்வார்
பெறற்கரிய சற்குருவைப் பெற்ற பேரே.

இ - ள்: ஏதம் இல்லாச் சாம்பவமாம் தீக்கை செய்வோன் எழில் ஞான குரு ஆகும் - கேவலம் சிற்சத்தி மாத்திரத்திஞலே குற்றமில்லாத சாம்பவ தீக்கையைப் பண்ணுகிறவர் பெருமையையுடைய ஞானுசாரியராம்; இவ்வாறு இல்லாப் போதகன் தான் அவுத்திரியால் விணைகள் நீக்கி ஆகமத்தின் பொருள்கள் தம்மைப் போதிப்பன் - இவ்வாறில்லாத ஞான சாதகஞய் நின்ற ஆசாரியன் ஔத்திரி தீக்கையிஞலே கன்மபேதங்களை நீக்கி ஆகமார்த்தங்களை உபதேசிப்பன்; சாதகன் தான் கருமதீக்கையிணைப் பண்ணித் தந்திர மந்திரங்கள் தம்மைச் சாற்றிடுவன் - சாதகாசாரியன் கரும தீக்ஷையைப்பண்ணி தந்திர மந்திரங்களைப் போதிப்பன்; பேதம் இன்றிச் சிவானுபவம்பெற்று வாழ்வார் பெறற்கு அரிய சற்குருவைப்பெற்ற பேர் - ஆகையால் பெறுகிறதற்கரிய ஞானுசாரியரை அடைந்தவர் பேதம் இல்லாத அநன்னிய சாக்ஷாத்காரமான சிவானுபவத்தை அடைந்திருப்பார்கள் எ - று. (௱௬௫)

அ - கை: மேல் இந்த நிருவாண தீக்கை லோகதர்மிணி என்றும் சிவதர்மிணி என்றும் இரண்டு விதமாமென்பது கூறுகின்றது.

166. நிருவாண முலகசிவ தருமிணிக ளென்று
நிர்ப்பீசம் பீசங்க ளெனவுநிகழ்த் திடுநூல்
மருவாது பொய்ப்போகத் தாசைதணைத் துறவே
மன்னினார்க்குச் சிவதரும தீக்கை யாகும்
ஒருவாது பொய்வாழ்வை முத்தியிஞு மிச்சை
யுண்டாஞேர் தமக்குலக தருமிணியா யுரைக்கும்
பெருநோயர் விருத்தர்மட வார்பாலர் தமக்குப்
பெறுவிக்கை நிர்ப்பீச தீக்கையெனப் பேசும்.

இ - ள்: நிருவாணம் உலக சிவதருமிணிகள் என்றும் - நிருவாண தீக்கையானது லோகதர்மிணி என்றும் சிவதர்மிணி என்றும்; நிர்ப்பீசம் பீசங்கள் எனவும் நூல் நிகழ்த்திடும் - இந்த இரண்டும் நிர்ப்பீச லோகதர் மிணி என்றும் சபீசலோகதர்மிணி என்றும், நிர்ப்பீச சிவதர்மிணி என்றும் சபீசசிவதர்மிணி என்றும் பேதமாய் நிற்குமென்று சிவாகமம் சொல்லும்; மருவாது பொய்ப்போகத்து ஆசைதனைத் துறவே மன்னினர்க்குச் சிவதரும தீக்கை ஆகும் - பொய்யாய் இருக்கிற போகங்களிலே ஆசை வாராமல் வைராக்கியம் பொருந்தி நின்றவர்களுக்குச் சிவதர்மிணி தீக்ஷையாகும்; ஒருவாது பொய் வாழ்வை முத்தியினும் இச்சை உண்டானோர் தமக்கு உலக தருமிணியாய் உரைக்கும் - பொய்யாகிய உலக வாழ்வை விடாமல் போகத் திலும் முத்தியிலும் வாஞ்சையுடையராய் நின்றவர்களுக்கு லோகதர்மிணி தீக்ஷையாம் என்று சிவாகமம் சொல்லும்; பெருநோயர் விருத்தர் மடவார் பாலர் தமக்குப் பெறுவிக்கை நிர்ப்பீச தீக்கை எனப் பேசும் - பொல்லாத வியாதியையுடையவர், எழுபத்தைந்து வயதுக்குமேற்பட்ட விருத்தர், மாதர், பத்து வயதளவுமான பாலர் இவர்களுக்கு நிர்ப்பீச தீக்ஷை பண்ணலாம் என்று சிவாகமம் சொல்லும்.

இந்த நிர்ப்பீசதீக்ஷை அதிகாரிகளைச்சொன்னது லோகதர்மிணியிலும் சிவதர்மிணியிலும் பொருந்தும். சபீச தீக்ஷையும் இவ்வாறும் எ - று. (௱௬௬)

**அ - கை:** மேல் பிராமணர் முதலான நான்கு வருணத்தவர்க்கும் அனுலோமர்க்கும் ஔத்திரி முதலான தீக்கையாம், சங்கர சாதியர்க்கு மானத திக்கையும், மானத பூசையும், பாஷா சாஸ்திரத்திலே ஞானமுமாம் என்பது கூறுகின்றது.

167. அந்தணரே முதலான நால்வ ருக்கு
மனுலோமர்க் குந்தீக்கை யௌத்திரியா திகளாம்
செந்தழலை யோம்பிடுதல் சிவபூசை புரிதல்
சிவாகமத்தாற் சிவஞானம் தெரிதலுமா மிவர்க்கே
வந்தடைந்த சங்கரசா தியர்தமக்குத் தீக்கை
மானதமே சிவபூசை தானுமந்த வாறே
இந்தவகை யோர்க்குரைக்கு மந்திரமைந் தெழுத்தே
யெழின்ஞானம் பாடாசாத் திரத்தாத லியல்பே.

**இ - ள்:** அந்தணரே முதலான நால்வருக்கும் அனுலோமர்க்கும் தீக்கை ஔத்திரி ஆதிகள் - பிராமணர் க்ஷத்திரியர் வைசிரியர் சூத்திரர் முதலான நால்வருக்கும், ஸவர்ணன், நிஷாதன், பாரசவன், மாகிஷ்யன், தவுஷ்யந்தியன், உக்கிரன் என்று உயர்ந்த பீசமுந்தாழ்ந்த யோனியுங்கூடி உண்டான இந்த ஆறு அனுலோமர்க்கும் ஔத்திரி முதலான தீக்ஷையாகும்; செந்தழலை ஓம்பிடுதல் சிவபூசை புரிதல் சிவாகமத்தால் சிவஞானம் தெரிதலும் ஆம் இவர்க்கு - செம்மை பொருந்தின சிவாக்கினியில் உக்தப்பிர காரமாக ஆகுதிபண்ணுதல் சிவபூசைபண்ணுதல் சிவாகமாத்தியயனத்தால்

பதி பசு பாச விவேக புரஸ்ஸரமாகச் சிவஞானத்தை அறிதலும் இந்தப் பிராமணுதி பதின்மருக்குமாம்; வந்தடைந்த சங்கரசாதியர் தமக்குத் தீக்கை மானதமே சிவபூசை தானும் அந்தவாறே - ஆசாரியரிடத்தில் வந்தடைந்த சங்கரசாதியரானவர்களுக்குத் தீக்ஷை மானச தீக்ஷையே, சிவபூசை பண்ணுவதும் அந்தப்படி மானச பூசையே; இந்த வகையோர்க்குரைக்கும் மந்திரம் ஐந்து எழுத்தே எழில் ஞானம் பாடா சாத்திரத்து ஆதல் இயல்பே - இந்த விதத்தையுடைய சங்கர சாதியர்க்கு உபதேசிக்கும் மந்திரமும் ஈசுவர பஞ்சாக்ஷரமே, உயர்ச்சி பொருந்திய ஞானப்பியாசமும் திராவிட முதலான பாஷா சாஸ்திரத்திலேலே போதிப்பது ஸ்வபாவமாம் எ - று. (௱சு௭)

அ - கை: மேல் பிராமணர் முதலான நாலு வருணத்தவரும் ஆசாரியராய் இருந்து அனுக்கிரகிக்கும் முறைமை கூறுகின்றது.

168. சாற்றியிடுஞ் சைவநெறிக் குரவ ராவார்
தாமறையோ ரரையருடன் வணிகரவர் தம்பின்
றோற்றியிடுஞ் சுத்தசூத் திரர்நால்வ ரிவரிற்
சொலுமறையோர் நால்வர்க்கா மூவர்க்கா மரையர்
மேற்றிகழும் வணிகரிரு வர்க்காகுங் குரவர்
விளம்பியிடுஞ் சூத்திரர்தாஞ் சூத்திரர்க்கு மேலும்
ஏற்றியிடுஞ் சங்கரசா தியர்க்கு மாகு
மியம்பியிடுஞ் சங்கரர்தா மெவர்க்குமலர் குருவே.

இ - ள்: சாற்றியிடும் சைவநெறிக் குரவர் ஆவார் தாம் மறையோர் அரையருடன் வணிகர் அவர் தம் பின் தோற்றியிடும் சுத்த சூத்திரர் நால்வர்- சொல்லப்பட்ட சைவ சமய மார்க்கத்துக்கு ஆசாரியராகிறவர்கள் தாம் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், அவர்களுக்குப் பின்பு உண்டான உபய குலசுத்தராய் அபேயபாநுதி ரகிதரான சற்சூத்திரரென்னும் நால்வர்; இவரில் சொல்லும் மறையோர் நால்வர்க்காம் - இந்த நால்வர்க்குள் சொல்லப்பட்ட பிராமணர் பிராமணர் முதலான நால்வருக்குங்குரு; அரையர் மூவர்க்காம் - க்ஷத்திரியர் க்ஷத்திரியர் முதல் மூவர்க்குங் குரு; மேல் திகழும் வணிகர் இருவர்க்கு ஆகும் குரவர்-மேல் விளங்கா நின்ற வணிகர் வணிகர் முதலான இருவர்க்கும் குரவராவர்; விளம்பியிடும் சூத்திரர் தாம் சூத்திரர்க்கும் மேலும் ஏற்றியிடும் சங்கர சாதியர்க்கும் ஆகும் - சொல்லப்பட்ட சூத்திரர் சூத்திரருக்கும் மேலும் சொல்லப்பட்ட சங்கர சாதியர்க்கும் குரு; இயம்பியிடும் சங்கரர் தாம் எவர்க்கும் குரு அலர் - சங்கரசாதியர்கள் தாம் ஒருவருக்கும் குரவரல்லர் எ - று, (௱சு௮)

அ - கை: மேல் ஆசாரியர் பேதமும், ஆசிரமங்களில் ஒன்றுக்கொன்று அதிக மென்பதும், அவர்கள் பண்ணுந் தீக்ஷாக்கிரமங்களும் இரண்டு விருத்தங்களிலேலே கூறுகின்றது.

169. குரவரிரு வகையினராம் விரத்தருடன் குடும்பி
கூறுமிரு வரில்விரத்தன் விசேடமாங் குரவன்
திரமுறுநல் லாசென்மப் பிரம சாரி
செப்பியவவ் விரத்தனினுஞ் சிறந்தோ னாகும்
வரமுடையன் குடும்பியினும் வனத்த னுவான்
மற்றிவரிற் குடும்பிதான் குருவாம் வாய்மை
விரதம்விடு பிரமசா ரிக்கும் போக
மேவியிடும் குடும்பிக்குந் தானுக விளம்பும்.

இ - ள்: குரவர் இருவகையினராம் விரத்தருடன் குடும்பி - விரத்தா சாரிய ரென்றும் கிருகத்தாசாரிய ரென்றும் ஆசாரியர் இருவகைப்படுவர்; கூறும் இருவரில் விரத்தன் விசேடமாம் குரவன் - சொல்லப்பட்ட அவ்விரு வரில் விரத்தாசாரியர் விசேடமாவர்; திரம் உறும் நல் ஆசென்மப் பிரமசாரி செப்பிய அவ்விரத்தனினும் சிறந்தோன் ஆகும் - திடம் பொருந்திய நல்ல ஆஜன்மப் பிரமசாரியானவர் சொல்லப்பட்ட விரத்தாசாரியரிலும் உத் கிருஷ்ட ஆசாரியராம்; வரம் உடையன் குடும்பியினும் வனத்தன் ஆவான் - கிருகத்தாசாரியரிலும் சிரேட்டரானவர் வானப்பிரத்தாசாரியராம்; மற்று இவரில் குடும்பிதான் குருவாம் வாய்மை - இவர்களுக்குள் கிருகத்த ஆசாரியர் தாம் ஆசாரியராக விருக்குந் தன்மை; விரதம் விடு பிரமசாரிக்கும் போகம் மேவியிடும் குடும்பிக்கும் தானுக விளம்பும் - விரதசமாப்தி செய்யப்போகிற பிரமசாரிக்கும் போகத்தைப் பொருந்தியிருக்குங் கிருகத்தனுக்குமாமென்று சிவாகமஞ்சொல்லும் எ - று. (௱சுகூ)

170. வனத்துறைவன் னுச்சிரமி மூவர்க்கும் குரவன்
மாசற்ற துரியவாச் சிரமியிவர் குருவே
எனத்தகுவ னுல்வர்க்கு மியம்பியவிவ் வெவர்க்கு
மேசில்குரு வதிவன்னுச் சிரமியென வியம்பும்
தனைப்பொருவி லதிவன்னுச் சிரமிசெயுந் தீக்கை
சாம்பவமாஞ் சன்னியாசி மனத்தியற்ற ருனும்
முனைப்புகன்ற கிருகத்த னவுத்திரியாந் தீக்கை
மொழிந்தனம்வன் னுச்சிரமங் குணங்களுமேல் மொழிவாம்.

இ - ள்: வனத்துறை வன்னுசிரமி மூவர்க்கும் குரவன் - வானப் பிரத்த ஆச்சிரமத்தில் நின்றவர் வானப்பிரத்தன் கிருகத்தன் பிரமசாரி என்னும் மூன்று பேர்களுக்கும் ஆசாரியன்; மாசு அற்ற துரிய ஆச்சிரமி இவர் குருவே எனத் தகுவன் நால்வர்க்கும் - குற்றமில்லாத சன்னியாச ஆச்சிரமத்தினின்றவர் சன்னியாசி வானப்பிரத்தன் கிருகத்தன் பிரமசாரி என்னும் நால்வருக்கும் சிரேட்டமான ஆசாரியரென்னும் தகைமையையுடை யவர்; இயம்பிய இவ் எவர்க்கும் ஏசில் குரு அதிவன்னுச்சிரமியென இயம்பும்-

சொல்லப்பட்ட இவர்கள் எல்லார்க்கும் குற்றமில்லாத ஆசாரியன் அதிவன்ஞச்சிரமியென்று சிவாகமம் சொல்லும்; தன்னைப் பொரு இல் அதிவன்ஞச்சிரமி செய்யும் தீக்கை சாம்பவம் ஆம் சன்னியாசி மனத்து இயற்றல் தானும்- தனக்கு உவமையில்லாத அதிவன்ஞச்சிரமி செய்யுந்தீட்சையானது சாம்பவ தீட்சையாம், சன்னியாசி தீட்சை மனோபாவனையினலே பண்ணுந் தீட்சையாம்; முன்னை புகன்ற கிருகத்தன் அவுத்திரியாம் தீக்கை மொழிந்தனம் வன்ஞச்சிரமம் குணங்களும் மேல் மொழிவாம் - முன் சொன்ன கிருகத்தன் ஔத்திரிதீக்ஷை பண்ணலாமென்று வன்ஞச்சிரமானுகுணமாகச் சொன்னேம், மேல் இலட்சணங்களையும் குணங்களையும் சொல்லுவாம் எ-று. (௱எ௰)

171. எண்ணியிடு நாலெட்டா மிலக்கணங்க ளிசைந்தே
யெழிலினனு யீனங்க மதிகாங்க மிலனய்
நண்ணியிடும் பெருநோய்க ளில்லா ஞகி
நகந்தந்தஞ் சொத்தையில்லா நலமு முண்டாய்த்
திண்ணியநெஞ் சுடையனய்த் தவங்கள் செய்யத்
திடம்பெற்ற தேகியாய்ச் சிறந்தே யோங்கும்
புண்ணியமாந் தேசத்தே தருமஞ் செய்யும்
புனிதர்குலத் துதித்தோங்கிப் புகழுண் டாயே.

இ - ள்: எண்ணியிடும் நாலெட்டாம் இலக்கணங்கள் இசைந்து எழிலினனய் ஈன அங்கம் அதிக அங்கம் இலனய் - கைகள் கண்கள் நாசி இதயம் முழங்கால் இவைகள் ஐந்தும் பெருமையும் நீளமுமா யிருக்கை, களம் முழங்காலுக்குக் கீழாயிருக்கிற ஜங்கை பீஜம் மேட்ரமென்னும் சிசினம் இவைகள் நான்குங் குறுகியிருக்கை, நகம் மயிர்க்கால் தந்தம் விரல்கள் கணுக்கள் இவைகள் ஐந்தும் சிறுத்திருக்கை, வயிறு கழுத்து தோட்பட்டைகள் நாசிகையின்நுனி அக்குள் நெற்றி இவையாறும் உயர்ந்திருக்கை, கண்கள் தாலு சிசினம் உதடு உள்ளங்கை உள்ளங்கால் நகம் இவைகள் ஏழும் சிவந்திருக்கை, தொப்புளுக்குக் கீழாயிருக்கிற ஜகனம் மூன்றுவிதம் விசாலம் இரண்டுவிதம் இப்படி யெண்ணப்பட்ட முப்பத்திரண்டு இலக்கணங்களும் பொருந்தின அழகை யுடையனய்க் குறைந்த அங்கங்கள் அதிகமான அங்கங்கள் இல்லாதவனய்; நண்ணியிடும் பெருநோய்கள் இல்லான் ஆகி நகம் தந்தம் சொத்தை இல்லா நலமும் உண்டாய்- பொருந்தியிருக்கும் பெரிதாகிய வியாதியில்லானகி நகங்கள் தந்தங்கள் இவைகளில் சொத்தை இல்லாமல் சொன்ன இலக்கணத்தின்படி யுள்ளவனய்; திண்ணிய நெஞ்சு உடையவனய்த் தவங்கள் செய்யத் திடம்பெற்ற தேகியாய் - சலன மில்லாத மனத்தை யுடையனகித் தவங்கள் பண்ணத் திடம்பொருந்தின தேகத்தை யுடையவனய்; சிறந்து ஓங்கும் புண்ணியமாம் தேசத்து தருமம் செய்யும் புனிதர் குலத்து உதித்து ஓங்கிப் புகழ் உண்டாய் - மிலேச்ச தேசங்களிலல்லாமல் சிறப்பு மிகுந்த ஆரியாவர்த்த முதலான புண்ணிய தேசத்திலே வேதாகமோக்த தருமங்களைச் செய்யும் சுத்தரானகுலத்தில் ஜனித்து வளரும்புகழ்ச்சியையுடையவனய் எ-று. (௱எக)

172. கொல்லாமை பொய்யுரைகள் கூருமை பொறுமை
கூறுமுயி ரனைத்தினுக்குந் தயைநலமே கூறல்
புல்லாமை பொய்ப்புலனைப் புசியாமை தீதைப்
பொருந்தாமற் சிறியருடன் பத்தருடன் பொருந்தல்
செல்லாமை தீநெறியாங் கருமத்திற் சிந்தை
சிவபத்தி குருபத்தி திடம தாகை
கல்லாமை பசுநூலைச் சிவநூலே கருதிக்
கற்றுணர்த லவ்வாறே கருமஞ்செய் திடலே.

இ-ள்: கொல்லாமை பொய்யுரைகள்கூருமை பொறுமை - விதியுக்த மல்லாத இம்சைபண்ணுமலிருக்கை, சிவகாரியாதிக்கு ஆனி வந்த விடங்க ளிலல்லாமல் மற்ற விடங்களிலே அசத்தியஞ் சொல்லாமலிருக்கை, பிறர் மிகுந்த குற்றங்களைத் தனக்குச் செய்தாலும் பொறுமையுடையனுயிருக்கை; கூறும் உயிர் அனைத்தினுக்கும் தயை நலமே கூறல் - சொல்லப்பட்ட எல்லா ஆன்மாக்களிடத்திலும் தயையை யுடையனுய் நன்மார்க்கத்தைச் சொல்லுதல்; புல்லாமை பொய்ப்புலனைப் புசியாமை தீதைப் பொருந்தாமல் சிறியருடன் - பொய்யாயிருக்கிற விஷயங்களிற் பொருந்தாமல் சாத்திரத்திலே நிஷித்த மாகச்சொன்ன பதார்த்தங்களைப் புசியாமல் அஞ்ஞானிகளுடன் கூடாம லிருக்கை; பத்தருடன் பொருந்தல் செல்லாமை தீநெறியாம் கருமத்திற் சிந்தை - சிவபக்தருடன் கூடியிருந்து பொல்லாத வழியாகிய கன்மங்களிலே புத்திசெல்லாமலிருக்கை; சிவபத்தி குருபத்தி திடமது ஆகை - சிவனிடத் திலும் குருவினிடத்திலும் பக்தி திடமாயிருக்கை என்னும் குணங்களோடு; கல்லாமை பசுநூலைச் சிவநூலே கருதிக் கற்றுணர்தல் அவ்வாறே கருமஞ் செய்திடல் - பசுசாத்திரத்தை அத்தியயனம் பண்ணுமல் சிவாகம அத்தியய னத்திலே புத்தியுடையவனுய்ச் சிவாகம அத்தியயனத்தைப் பண்ணி அதிற் பிரதிபாதிக்கும் அருத்தங்களை யறிந்து அறிந்தபடியே யுக்தாசாரங்களை அனுஷ்டிக்கிறவனுய் எ-று. (௱எஉ)

173. காமமுத லறுபகையுஞ் செற்றே யந்தக்
கரணமுந்தன் வசத்தாகுங் கருத்த னுகிச்
சேமநிதி தவமேயென் றெண்ணி நித்தஞ்
செய்கின்ற தவமுடைய செல்வ னுகிப்
பூமகனைத் திருமாலை நிந்தி யாத
புந்தியுள னுய்ப்புறம்பாஞ் சமயத்தோர்கள்
தாமருவு பெத்தமுடன் முத்தி மார்க்கஞ்
சாற்றிடுநா லுண்மையெல்லா முணர்ந்து தானே.

இ-ள்: காமம் முதல் அறுபகையும் செற்று அந்தக்கரணமும் தன் வசத்து ஆகும் கருத்தன் ஆகி - காமக் குரோத லோப மோக மத மாச்சரிய

மென்னும் ஆறுபகையும் இல்லாதவனாய், ஞானேந்திரியாந்தக் கரணங்களைச் சத்தாதி விடயங்களிற் செல்லாமல் தன்வசம் பண்ணிக்கொள்ளும் புத்தி மானாகி; சேமநிதி தவமே என்று எண்ணி நித்தம் செய்கின்ற தவம் உடைய செல்வனாகி - புதைத்திருக்கும் ஐசுவரியம் தவமேயென்று நினைத்து நித்தியஞ் செய்யாநின்ற தவமே ஐசுவரியமாக வுடையவனாகி; பூமகனைத் திருமாலை நிந்தியாத புந்தியுளனாய் - பிரம விஷ்ணுக்களிடத்திலே நிந்தை பண்ணாத புத்தியையுடையவனாய்; புறம்பு ஆம் சமயத்தோர்கள் தாம் மருவும் பெத்தமுடன் முத்திமார்க்கம் சாற்றிடும் நூல் உண்மை எல்லாம் உணர்ந்து - புறச்சமயத்தில் நின்றவர்கள் பொருந்தும் பெத்த முத்தியிலக் கணங்களைக் கிரமமாகச் சொல்லுஞ் சாத்திரங்கள் எல்லாவற்றினுடைய உண்மையையும் அறிந்திருக்கிறவனாய் எ-று. (௱எ௩)

174. முப்பொருளுஞ் சரிதாதி பாத நான்கின்
முறைமையயு முழுதுணர்ந்து முதல்வன் றன்னை
எப்பொழுது நீங்காத ஞான நிட்டை
யெய்தித்தன் பாலடைந்தார் பருவந் தன்னைத்
தப்பறவே யுணர்தற்குச் சதுர னாகித்
தாமதமாங் குணஞ்சற்றுந் தாக்கா னாகி
ஒப்பிலுயர் குணமுளனா யாக மத்தே
யோரிலக்க முணர்ந்தவனைக் குருவென்ப *ருயர்ந்தோர்.

இ-ள்: முப்பொருளும் சரிதாதி பாதம் நான்கின் முறைமையையும் முழுது உணர்ந்து - பதி பசு பாச மென்னும் பதார்த்தத் திரயங்களையும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னுஞ் சதுஷ்பாதங்களுடைய கிரமங் களையும் விரோதம் அற எல்லாவற்றையும் அறிந்து; முதல்வன் தன்னை எப்பொழுதும் நீங்காத ஞானநிட்டை எய்தி - கர்த்தாவாகிய சிவனை அனவரதமும் பிரியாமல் நின்ற ஞான நிட்டையைப் பொருந்தினவனாய்; தன்பால் அடைந்தார் பருவந்தன்னைத் தப்பு அற உணர்தற்குச் சதுரன் ஆகி - தன்னையடைந்த சிஷ்யர்களுடைய பரிபாகத்தை நன்றாக அறிதற்குச் சமர்த்தனாகி; தாமதம் ஆம் குணம் சற்றும் தாக்கான் ஆகி - தாமச குண மாய் நின்ற அதன்ம குணங்கள் சற்றும் பொருந்தாதவனாகி; ஒப்பு இல் உயர் குணம் உளனாய் ஆகமத்தே ஓர் இலக்கம் உணர்ந்தவனைக் குரு என்பர் உயர்ந்தோர் - இப்படி உவமையில்லாத உயர்ந்த சாத்துவிக குணத்தையுடையனாய்ச் சிவாகமத்திலே ஒரு இலட்சம் கிரந்தம் அத்தியயனம் பண்ணிப் பூர்வாபர விரோதம் அற யதாவத்தாக அறிந்தவனை ஆசாரிய னென்று பெரியோர் சொல்லுவர் எ-று. (௱எ௪)

* ருணர்ந்தோர் - பாடபேதம்.

அ - கை: மேல் முன் சொன்ன இலக்கணங்க ளொன்று மில்லா தவனுனாலும் சிவஞானதிக்க மிருந்தால் ஆசாரியனுவ னென்பது கூறு கின்றது.

175. கூறிடுமிக் குணமொன் றுமில்லை யேனுங்
கூறரிய சிவஞானக் கொள்கை யாலே
வீறிடுந்தன் னருணோக்கான் மாண வன்றன்
வினையனைத்து மாணவமும் விட்டு நீங்க
மாறுவமை யில்லாத ஞானு னந்த
மருவியிடச் செய்யவல்ல னுகில் மண்மேல்
ஈறில்பர ஞானகுரு வவனே யார்க்கு
மிவனவனென் றெண்ணியிடு மியல்பின் றுமே.

இ-ள்: கூறிடும் இக் குணம் ஒன்றும் இல்லையேனும் கூற அரிய சிவஞானக் கொள்கையாலே - சொல்லப்பட்ட குணங்களொன்று மில்லை யாயினும் சொல்லுதற்கரிதாகிய சிவஞானம் பொருந்தியிருக்கையினுலே; வீறிடும் தன் அருள் நோக்கால் மாணவன் தன் வினை அனைத்தும் ஆணவ மும் விட்டு நீங்க - ஆணவாதி பாசங்கள் நீங்கும்படிக்குத் தம்முடைய சிவானன்னிய சாட்சாத்காரமாய் நின்ற பார்வையினுலே சிஷ்யனுக்கும் எல்லாக் கன்மங்களும் மாயையும் ஆணவமலமும் விட்டுப்போக; மாறு உவமை இல்லாத ஞான ஆனந்தம் மருவியிடச் செய்ய வல்லனுகில் - வேறொ ருவமையில்லாத சிவஞானுனந்தானுபவம் பொருந்தப்பண்ணுவிக்கச் சமர்த் தனுகில்; மண்மேல் ஈறு இல் பரஞான குரு அவனே யார்க்கும் இவன் அவன் என்று எண்ணியிடும் இயல்பு இன்றுமே - பூமியினிடத்திலே முடி வில்லாத உத்கிருஷ்டமான ஞானுசாரியன் பரிபாகத்தையுடைய எல்லா ஆன்மாக்களுக்கும் அவனேயாகையால் இவன் சாதிமான் குணவான் அவன் சாதியீனன் குணவீனன் என்று நினைக்குந் தன்மையில்லை எ-று. (௱எரு)

அ - கை: மேல் இரண்டு விருத்தங்களினுலே ஆசாரியர் தம்மை யடைந்த சிஷ்யர்களுக்குப் பரிபாகத்தைச் சோதித்து அவர்களிடத்தில் நிகழும் பரிபாகாநுகுணமாகத் தீட்சை பண்ணுவரென்பதும் பரீக்ஷிக்கும் படியுங் கூறுகின்றது.

176. தேசிகரு மாணவர்கள் செய்தியுணர்ந் திடவே
சிறியோரைப் பெரியோர்செய் தொழிலதனிற் *செறித்தும்
ஏசிலராம் பெரியோரை யீனமாந் தொழிற்கே
யிசைத்துமடித் தும்வைது மிவ்வாறு செயவும்

* செலுத்தும் - பாடபேதம்.

கூசியிடா திட்டபணி செய்துகுரு பத்தி
குறைவிலனுய் நம்பினனுய்த் துரோக மின்றி
மாசிலனுய் மனவாக்குக் காயத்தாற் குருவின்
வாக்கியபா லனஞ்செய்யு மதிமா னுகி.

இ-ள்: தேசிகரும் மாணவர்கள் செய்தி உணர்ந்திடவே சிறியோரைப் பெரியோர் செய் தொழிலதனில் செறித்தும் - ஞானுசாரியரும் சிஷ்யருடைய குணக்கிரியைகளை அறியத்தக்கதாகச் சிறியவர்களைப் பெரியோர்கள் செய்யுங் கிருத்தியங்களிற் செலுத்தியும்; ஏசு. இலராம் பெரியோரை ஈனம் ஆம் தொழிற்கே இசைத்தும் அடித்தும் வைதும் இவ்வாறு செயவும் - பழிப்பில்லாமலிருக்கிற பெரியோரை இழிவாகிய கிரியைகளிலே பொருத்தியும் பிரகரித்தும் நிந்தையான வார்த்தைகளைச் சொல்லியும் இந்தப் பிரகாரஞ் செய்யவும்; கூசியிடாது இட்ட பணி செய்து குருபத்தி குறைவு இலனுய் நம்பினனுய்த் துரோகம் இன்றி மாசு இலனுய் - கூசாமல் ஆசாரியர் ஏவின பணிவிடைகளைச் செய்து குருவினிடத்தில் பக்தி குறைவில்லாமல் இவரே இரட்சிக்கின்றவரென்று திடபுத்தியுடையவனுய்க் குருகாரியங்களில் வஞ்சனையின்றி ஒரு குற்றமுமில்லாதவனுய்; மனம் வாக்குக் காயத்தால் குருவின் வாக்கிய பாலனம் செய்யும் மதிமான் ஆகி - மனுேவாக்குக் காயங்களினுல் ஆசாரியர் திருவுளம் பற்றின வாக்கியம் பரிபாலனம் பண்ணுநிற்கும் புத்தி உடையவனுய் எ-று. (௱எசு)

177. ஆதரவுஞ் சாந்தியுநற் பொறுமை தானு
மசத்தியமில் லாவுரையு மாசாரந் தவமும்
தீதான செயல்மறந்து நன்றியறிந் திடலும்
சிவாகமத்தைக் கேட்டதனைத் தெளித லுனும்
போதலறப் பொறிவழியி னிற்ற லாதி
புகன்றுள்ள நற்குணங்கள் பொருந்தி மேலும்
ஓதலுறுங் குணங்குற்றஞ் சோதித்தோர் வருட
முறுங்குணத்தி னளவாகத் தீக்கைசெய்வ ருயர்ந்தோர்.

இ-ள்: ஆதரவும் சாந்தியும் நல் பொறுமை தானும் அசத்தியம் இல்லா உரையும் ஆசாரம் தவமும் - சர்வ பூதங்களிடத்திலும் ஆதரவும், உபசாந்தியும், துக்கங்கள் வந்த விடத்திற் பொறுமையும், சத்தியவார்த்தையும், விதியுக்தமான ஆசாரமும், தவமும்; தீது ஆன செயல் மறந்து நன்றி அறிந்திடலும் சிவாகமத்தைக் கேட்டு அதனைத் தெளிதல் தானும் - தனக்கு நன்மை தீமை செய்யுமிடத்துத் தீமையை மறந்து நன்மையை மறவாமல் பாராட்டுதலும், குருவினிடத்தினின்றும் சிவாகமத்தைக்கேட்டு அந்த அர்த்தத்தைச் சிந்தித்தல் தெளிதலாய் நிற்கையும்; போதல் அறப்பொறி வழியில் நிற்றல் ஆதி புகன்றுள்ள நற்குணங்கள் பொருந்தி - பஞ்சேந்திரி

யங்கள் வழியாக வரும் விஷயஞான முதலாயினவும் நீங்க முன்சொல்லப் பட்ட நல்ல குணங்களைப் பொருந்தி நிற்குஞ் சிஷ்யனுக்கு; மேலும் ஓதல் உறும் குணம் குற்றம் சோதித்து ஓர் வருடம் உறுங் குணத்தின் அளவாகத் தீக்கை செய்வர் உயர்ந்தோர் - மேலுஞ் சொல்லப்பட்ட குணதோஷங்களை ஒருவருஷம் பரீக்ஷித்துப் பொருந்திநிற்குங் குணத்துக்கீடாக ஞானசாரியர் தீக்கைபண்ணுவர் எ-று. (௱எஎ)

அ - கை : மேல் மந்திரம் முதலான ஆறுக்கும் அத்துவாவென்று பெயராம் என்பது கூறுகின்றது.

178. மந்திரமும் பதவன்ன புவனதத் துவமு
மருவியிடும் கலையைந்து மத்துவா வாகும்
தந்திடுமேல் வினைகளுக்கு மார்க்க மாத
ருனுலும் விபுவாகிச் சாற்றுநிறை வறிவாய்
அந்தமிலா வான்மாவை யன்னமய முதலா
மைங்கோச மாவரிக்கு மாதலினு லந்தப்
பந்தமெலா மொன்ருென்ரு நீங்கிமே லேகிப்
பரானந்த பூரணமாம் பரிசினுலும்.

இ - ள் : மந்திரமும் பதம் வன்னம் புவன தத்துவமும் மருவியிடும் கலை ஐந்தும் அத்துவா ஆகும் - மந்திரம் பதினொன்றும், பதம் எண்பத் தொன்றும், வன்னம் ஐம்பத்தொன்றும், புவனம் இருநூற்றிருபத்துநாலும், தத்துவம் முப்பத்தாறும், இவைகள் பொருந்தியிருக்கும் கலைகள் ஐந்தும் அத்துவாவென்று சொல்லப்படும்; தந்திடும் மேல் வினைகளுக்கு மார்க்கம் ஆதல் தான் ஆலும் - மந்திரங்களை உதாத்தாநுதாத்த ஸ்வரிதப்பிரசயங்க ளுடனே தப்பாமல் உச்சரித்தால் புண்ணியமும் தப்பினுற் பாபமும், வியா கரண சாத்திரத்தையறிந்து பதங்களைப் பிரித்ததினுலே புண்ணியமும் அறியாதே பிரித்தாற் பாபமும், வன்னங்களை ஹ்ரஸ்வ தீர்க்கப் புலுதம் வழுவாமல் அந்த அந்தத் தானங்களிலே உச்சரித்தாற் புண்ணியமும் அல்லது பாபமும், புவன நாயகரைப் பண்ணின பூசாதிகளினுலே புண்ணி யமும் தத்திர வியாபகார நிந்தாதிகளினுலே பாபமும், ஞானேந்திரிய கன் மேந்திரிய அந்தக்கரணங்களினுலே பரர்க்குப் பண்ணின உபகாரத்தினு லும் விசிட்டத் திரவிய போக்கியத்தினுலும் புண்ணியமும் பிறர்க்குப்பண் ணிய அபகாரத்தினுலும் நிஷித்தத் திரவிய போக்கியத்தினுலும் பாபமும், பஞ்சகலா அபிமானிகளான பஞ்ச சத்திகளுக்குப் பண்ணின பூசாபூசை களினுலே புண்ணிய பாபமும், இப்படி மேல் பந்தமாக வுண்டாகும் புண்ணிய பாபங்களுக்கு வழியாக்குகின்ற தாகையினுலும்; விபு ஆகிச் சாற்றும் நிறைவு அறிவாய் அந்தம் இலா ஆன்மாவை அன்னமயம் முதலாம் ஐங்கோசம் ஆவரிக்கும் ஆதலினுல் - விபுவாகச் சொல்லப்பட்ட வியாபக சித்து ரூபியாய் நித்தியனுய் நின்ற ஆன்மாவை அன்னமயம் பிராணமயம் மனேமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயம் என்னும் ஐந்து

கோசமும் தடுக்குமாகையாலும்; அந்தப் பந்தம் எல்லாம் ஒன்று ஒன்று நீங்கி மேல் ஏகிப் பரானந்த பூரணம் ஆம் பரிசினாலும் - ஆன்மா அந்தப் பந்த மெல்லாவற்றையும் ஒவ்வொன்று நீங்கி ஊர்த்தமுகமாய் நின்று சச்சிதானந்த பரிபூரண சிவமா மென்னுஞ் சுபாவத்தினாலும் மந்திர முதலான ஆறுக்கும் அத்துவா வென்னும் பெயராம் எ - று. (௱௭௮)

**அ - கை:** மேல் ஐந்து விருத்தங்களினாலே மந்திராதிகள் ஒன்றிலே ஒன்று லயிக்க ஆன்மாவைச் சிவத்திலே யோசித்துப் பின்னும் பிராரத்த தேகத்திலே நிறுத்தும் முறைமையையும் பஞ்சகலைகளிலும் மந்திர பத வன்ன புவன தத்துவங்கள் * நிற்கும் முறைமையையும் கூறுகின்றது.

179. உன்னியிடு நிவிர்த்திகலை தத்துவமண் ணதனி
லுறும்புவன நூற்றெட்டக் கரமொன்ற தாகும்
மன்னியிடும் பதங்கடா மிருபத் தெட்டா
மந்திரங்க ளோரிரண்டா மாமலரோன் றேவன்
இந்நிலையே பதிட்டையினி லறையுந்தத் துவங்க
ளெழுமூன்று மிரண்டுமிதிற் புவனங்க ளெண்ணேழ்
தன்னிலுறு மந்திரங்க ளிரண்டுபத மூவேழ்
தான்வன்ன நாலாறு சாற்றிடுமா லதிபன்.

**இ - ள்:** உன்னியிடும் நிவிர்த்திகலை தத்துவம் மண் அதனில் உறும் புவனம் நூற்றெட்டு அக்கரம் ஒன்றது ஆகும் மன்னியிடும் பதங்கள் தாம் இருபத்தெட்டாம் மந்திரங்கள் ஓர் இரண்டாம் மாமலரோன் தேவன் - பஞ்சகலைகளிலும் மந்திர பத வன்ன புவன தத்துவங்கள் ஐந்தும் நிற்குந் தன்மையை விசாரிக்கில், நிவிர்த்திகலையில் நூறுகோடியோசனை அகலம் நீளத்தை யுடைத்தாய்ப் பொன்னிறமாயிருக்கிற பிருதிவி தத்துவமொன்று; அந்தத் தத்துவத்தி லிருக்கிற புவனங்கள் பத்ரகாளி, வீரபத்ரன், சுசி, வ்யோமேக்ஷணன், பிந்து, விவாஹன், ஸம்வாஹன், த்ரிதசேசுவரன், த்ர்யக்ஷன், கணுத்யக்ஷன், விபு, சம்பு, பலிப்ரியன், பூதபாலன், ஈசானன்,

---

*"இவ்வுரையிலுள்ள அத்துவா விவரங்கள் நூலாசிரியர் அருளிய க்ரியாதீபிகா என்னும் சிவாக்ரபத்ததியைக்கொண்டு சோதிக்கப்பட்டன. இங்குக் காணும் விவரங்களுக்கும், கிரணாகமம், ம்ருகேந்த்ராகமம், க்ரியாகாண்டக்ரமாவலி யென்னும் ஸோமசம்புபத்ததி, க்ரியாக்ரமத்யோதிகா என்னும் அகோர சிவாசாரியர் பத்ததி, ஸ்ரீ போஜதேவர் அருளிய தத்வப்ரகாசத்திற்கு ஸ்ரீ குமாரர் இயற்றிய தாத்பர்யதீபிகையில் எடுத்தாளப்பட்ட குருதேவபத்ததி, சிவஞான போத சிவாக்ரபாஷ்யம், சித்தாந்த ஸாராவலி வ்யாக்யாநம், தமிழ்த் தத்துவப் பிரகாச வுரை, சிவஞானபோத சிவஞானபாடியம் என்னும் நூல்களிற் காணும் விவரங்களுக்குமுள்ள பேதம் ஒப்புநோக்கிற் புலப்படும்" என்ற முற்பதிப்பாளர் அடிக்குறிப்பு ஈண்டு அறியத்தக்கது.

பிங்கேக்ஷணன், பிரபு, சிவன், ஸர்வக்ருத், ஸர்வஜ்ஞன், சர்வன், ஸர்வ வித்யாதிபன், காமரூபத்ருக், லக்ஷ்மீவாந், அப்ரகாசன், ப்ரகாசன், ஸௌம்யதேஹன், தந்யன், ரூபவாந், நிதீசன், நாநாரத்ந விபூஷிதன், ஜடாமகுடதாரி, சிபி, சோஷணன், வேகவாந், தீக்ஷ்ணன், ஸூக்ஷ்மன், வாயு, ஸர்வகந்தவாந், ஸர்வகன், மேகசஞ்சாரி, கபர்தி, பீதன், படபா முகன், ஜலாந்தகன், தீர்க்கபாகு, ஜயபத்ரன், சுவேதன், மஹாபலன், பாசஹஸ்தன், அதிபலன், பலன், தம்ஷ்ட்ராவாந், லோஹிதன், தூம்ரன், விரூபாக்ஷன், ஊர்த்வசேபன், பயாநகன், க்ரூரத்ருஷ்டி, ஹந்தா, மாரணன், நைர்ருதன், தர்மபதி, தர்மன், ரௌத்ரன், காலன், கர்த்தா, விதாதா, தாதா, ஹரன், ம்ருத்யு, யாம்யன், க்ஷயாந்தகன், பஸ்மாந்தகன், பப்ரு, தகநந், ஜ்வலநன், ஹரன், காதகன், பிங்கலன், ஹூதாசி, அக்நிருத்ரன், த்ரிதசாதிபன், பிநாகி, சாஸ்தா, அவ்யயன், விபூதி, ப்ரமர்தநன், வஜ்ர தேஹன், புத்தன், அஜன், கபாலீசன், படபாமுகன், க்ரஸநன், வீரன், வ்ருஷதரன், வ்ருஷன், விஷலோசநன், விஷாக்நி, வீரன், பாலகன், அநந்தன், ருத்ரன், விஷ்ணு, பிரஹ்மா, ஹாடகன், கூஷ்மாண்டன், காலாக்நி இப்படிப் பொருந்திநின்ற, புவனம் நூற்றெட்டு; க்ஷகாரம் என்னும் அக்கரமொன்றும்; பவபவ, பவோத்பவ, ஸர்வபூதஸுகப்ரத, ஸர்வஸாந்நித்யகர, ப்ரஹ்மவிஷ்ணுருத்ரபர, அநர்ச்சிதாநர்ச்சித, அஸ்து தாஸ்துத, பூர்வஸ்திதபூர்வஸ்தித ஸாக்ஷிஸாக்ஷி, துருதுரு, பதங்கபதங்க, பிங்கபிங்க, ஜ்ஞாநஜ்ஞாந, சப்தசப்த, ஸூக்ஷ்மஸூக்ஷ்ம, சிவ, சர்வ, ஸர்வத, ஓம் நம: சிவாய, ஓம் நமோ நம: சிவாய நமோ நம: ஓம் இப்படிப் பொருந்தியிருக்கும் பதங்கள் இருபத்தெட்டாம், ஹாம் ஸத்யோஜாத, ஹாம் ஹ்ருதய என்னும் மந்திரங்கள் இரண்டாம், இவற்றிற்குத் தேவதை பிரமா.

இந் நிலையே பதிட்டையினில் அறையும் தத்துவங்கள் எழு மூன்றும் இரண்டும் இதில் புவனங்கள் எண்ணேழ் தன்னில் உறும் மந்திரங்கள் இரண்டு பதம் மூவேழ்தான் வன்னம் நாலாறு சாற்றிடும் மால் அதிபன் • இந்த நிவிர்த்திகலையில் நின்ற பிரகாரமாகப் பிரதிட்டா கலையில் சொல்லப் பட்ட தத்துவங்களாவன ஆயிரங்கோடியோசனை அகல நீளத்தை யுடைத் தாய் வெண்மைநிறமாயிருக்கிற அப்புதத்துவம், பதினாயிரங்கோடி யோசனை அகல நீளத்தை யுடையதாய்ச் சிவப்பு நிறமாயிருக்கிற தேயு தத்துவம், இலட்சங்கோடி யோசனை அகல நீளத்தை யுடைத்தாய்ப் புகைநிறமா யிருக்கிற வாயு தத்துவம், பத்திலட்சங்கோடி யோசனை அகல நீளத்தை யுடையதாய்ப் படிக நிறமாயிருக்கிற ஆகாச தத்துவம், கந்த தன்மாத்திரை, ரச தன்மாத்திரை, ரூபதன்மாத்திரை, பரிசதன்மாத்திரை, சப்ததன்மாத் திரை, சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம், வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம், சித்தம், புத்தி, அகங்காரம், மனம் ஆகத் தத்துவம் இருபத்து மூன்று; இந்தத் தத்துவங்களி லிருக்கும் புவனங்கள் ஸ்ரீகண்டம், ஔமம், கௌமாரம், வைஷ்ணவம், ப்ராஹ்மம், பைரவம், க்ருதம், அக்ருதம், ப்ராஹ்மம், ப்ராஜேசுவரம், ஸௌம்யம், ஐந்த்ரம்,

காந்தர்வம், யாக்ஷம், ராக்ஷஸம், பைசாசம், ஸ்தூலேசுவரன், மஹாலிங்கன், மஹாதேஜன், நீலகண்டன், ஸ்ரீகண்டன், மஹாநுத்கடன், ஊர்த்வரேதஸ், கபர்தி. ஸ்தாணு, ஸஹஸ்ராக்ஷன், சிவன், மஹாபலன், ருத்ரன், த்ரிமூர்த்தி, மஹாயோகி. பாவன், மஹாபீமன், மஹாநாதன், விசுவேசன், உக்ரன், ஸ்வயம்பு, பிதாமஹன், காமரூபி, சுபகன், பைரவம், கேதாரம், ஈசாநன், மஹாகாலன், ஸூக்ஷ்மன், த்ரிசூலி, த்ரிபுரக்நன், ஹரன், லகுளீசுவரன், பாரபூதி, டிண்டிமுண்டி, ஆஷாடன், போசகந்தன், தேவதேவன் சசிபூஷணன், ஓங்காரன், ஆகப்புவனங்கள் ஐம்பத்தாறு; ஹிம் வாஜஷெவ; ஹீம் மிரவஸ என்னும் மந்திரமிரண்டு; வ்யாபிந்வ்யாபிந், அரூபிந் அரூபிந், ப்ரதமப்ரதம, தேஜஸ்தேஜ:, ஜ்யோதிர்ஜ்யோதி:, அரூப, அநக்நி, அதூம, அபஸ்ம, அநாதே, நாநாநாநா, தூதூதூதூ, ஓம் பூ:, ஓம் புவ:, ஓம்ஸுவ:, அநிதந, நிதன, நிதநோத்பவ, சிவ, சர்வ, பரமாத்மந், மஹாதேவ, ஸத்பாவேசுவர, மஹேசுவர, மகாதேஜ:, யோகாதிபதே, முஞ்ச முஞ்ச, ப்ரதமப்ரதம, சர்வசர்வ, ஆகப் பதம் * இருபத்தொன்று; ட ஂ ஊ ஊ ண த ய ஊ ய ந வ ம ஸ ஸ உ ய ர வ வ ம ஷ வ ஹ ஐ ஆக வன்னம் † இருபத்துநாலு, இதற்குச்சொல்லப்பட்ட தேவதை விஷ்ணு எ-று. (௱எகூ)

180. மேவியிடும் வித்தையினிற் றத்துவங்க ளேழாம்
விரவுமதிற் புவனங்க ளிருபத் தேழு
பாவுமோர் மந்திரங்க ளிரண்டுநா லேந்தாம்
பதங்களாம் வன்னங்க ளேழாகப் பகரும்
தாவிலுருத் திரதேவர் சாந்தி தன்னிற்
றத்துவங்க ளொருமூன்று புரங்கள்பதி னெட்டாம்
கோவிதற்கு மகேசுவரர் மந்திரங்க ளிரண்டு
கூறுபதம் பதினொன்று வன்னமொரு மூன்றே.

இ - ள் : மேவியிடும் வித்தையினில் தத்துவங்கள் ஏழாம் விரவும் அதில் புவனங்கள் இருபத்தேழு பாவும் ஓர் மந்திரங்கள் இரண்டு நாலேந் தாம் பதங்களாம் வன்னங்கள் ஏழாகப் பகரும் தாவில் உருத்திரதேவர்-வித்தியாகலையில் பொருந்தியிருக்கும் தத்துவம் மாயை காலம் நியதி கலை இராகம் வித்தை புருஷன் ஆகத் தத்துவங்கள் ஏழு; அதிலிருக்கும் புவனங்கள் கோபதி, த்ரிகாலன், மஹாவீர்யன், தசநந், ஹயன், ஹரி, அஸாத்யன், கஹநேசன், சிகேதன், ஏகவீரன், பஞ்சாந்தகன், சூரன், ஸம்வர்த்தன், ஜ்யோதி:, சண்டன், க்ரோதன், ஈசாநன், ஏகபிங்கேக்ஷணன், உத்பவன், பவன், வாமதேவன், ஏகவீரன், பஞ்சாந்தகன், பிங்கஸூரகன், ஜ்யோதி:, சண்டஸம்வர்த்தன், க்ரோதேசன், ஆகப் புவனங்கள் இருபத்தேழு;

---

* சிவாக்கிரபத்ததியில் பத எண் முப்பத்திரண்டு என்பர்.

† அப்பத்ததியில் ஐ ஒழித்து வர்ண எண் இருபத்துமூன்று உள்ளது.

பொருந்தி விசாரிக்கும் ஹாம் சுவொ ஹா, ஹீம் ஶிவா என்னும் மந்திரம் இரண்டு; ஓம் நம: சிவாய, ஸர்வப்ரபவே, சிவாய, ஈசாநமூர்த்தாய, தத்புருஷவக்த்ராய, அகோரஹ்ருதயாய, வாமதேவகுஹ்யாய, ஸத்யோஜாதமூர்த்தயே, ஓம்நமோநம: குஹ்யாதிகுஹ்யாய, கோப்த்ரே, அநிதநாய, ஸர்வயோகாதிக்ருதாய, ஜ்யோதீரூபாய, பரமேசுவராய, அசேதநாசேதந, வ்யோமிந்வ்யோமிந் ஆகப் பதங்கள் * இருபது; வ ஊ வ ஊ ஜ ஈ ஞ ஆக வன்னங்கள் ஏழாக ஆகமம் சொல்லும்; இதற்குப் பற்றில்லாத தேவன் ருத்திரன்.

சாந்தி தன்னில் தத்துவங்கள் ஒருமூன்று புரங்கள் பதினெட்டாம் கோ இதற்கு மகேசுவரர் மந்திரங்கள் இரண்டு கூறு பதம் பதினொன்று வன்னம் ஒருமூன்றே - சாந்திகலையிலிருக்கும் தத்துவங்கள் சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை என்னும் தத்துவங்கள் மூன்று; இதிலிருக்கும் புவனம் ஸதாசிவன், அநந்தன், ஸூக்ஷமன், சிவோத்தமன், ஏகநேத்ரன், ஏகருத்ரன், த்ரிமூர்த்தி, ஸ்ரீகண்டன், சிகண்டி, மநோன்மனி, ஸர்வபூததமனி, பலப்ரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்ரி, ஜ்யேஷ்டை, வாமை ஆகப் புவனம் பதினெட்டு; ஹெம் தத்புருஷ, ஹெம் கவச என்னும் மந்திரம் இரண்டு; வ்யோமவ்யாபிநே, வ்யோமரூபாய, ஸர்வவியாபிநே, சிவாய, அநந்தாய, அநாதாய, அநாசிரிதாய, த்ருவாய, சாசுவதாய, யோகபீடஸம்ஸ்திதாய, நித்யயோகிநே, த்யாநாஹாராய ஆகச் சொல்லப்பட்ட பதம் † பதினொன்று, க வ ம என்னும் வன்னங்கள் மூன்று, இதற்குக் கர்த்தா மகேசுவரர் எ - று. (ாஅ)

181. தத்துவங்க ளிரண்டாகும் புரங்கள்பதி னைந்து
சாற்றுமனு மூன்றுபத மொன்றெழுத்தீ ரெட்டாம்
சுத்தகலை சாந்தியா தீதமதி தேவன்
சொல்லியிடிற் சதாசிவராந் தொகையிதென வறிக
இத்தகைய கலைகளிலே நிவிர்த்தாதி மூன்றி
லிசைபுவனத் திருவினைக ளெவற்றினையு மொழித்தே
புத்தியினில் வித்தாகிச் செறிவினைவா தனைமேற்
பொருந்தாத வகையொழித்துப் புகன்றிடுமைங் கலைக்கே.

இ - ள்: தத்துவங்கள் இரண்டாகும் புரங்கள் பதினைந்து சாற்று மனு மூன்று பதம் ஒன்று எழுத்து ஈரெட்டாம் சுத்தகலை சாந்தியாதீதம் அதிதேவன் சொல்லியிடில் சதாசிவராம் - நின்மலமாயிருக்கிற சாந்தியாதீத கலையில் இருக்கிறவைகள் சிவதத்துவம் சத்திதத்துவங்கள் இரண்டாம், இதில் புவனங்கள் அநாசிரிதை, அநாதை, அநந்தை, வ்யோமரூபை, வ்யா

---

* சிவாக்கிரபத்ததியில் பத எண் இருபத்தொன்று என்றுள்ளது.

† அப்பத்ததியில் பத எண் பன்னிரண்டு என்பர்.

பிநி, ஊர்த்வகாமிநி, ரோசிகை, மோசிகை, தீபிகை, இந்திகை, சாந்திய தீதை, சாந்தி, வித்யை, ப்ரதிஷ்டை, நிவ்ருத்தி ஆகப் புவனங்கள் பதினைந்து; ஹௌம் ஶிவ, ஹௌம் ஶம்பாத, ஹ: ஸ்வாஹா என்று சொல்லப்பட்ட மந்திரம் மூன்று; ஓங்காரம் என்னும் பதம் ஒன்று; அ ஆ இ ஈ உ ஊ ரு ரூ லு லூ ஏ ஐ ஓ ஔ அம் அ: ஆக அக்கரம் பதினாறு; இதற்குச் சொல்லுமிடத்தில் சதாசிவர் அதிதேவராம்;

தொகை இது என அறிக இத்தகைய கலைகளிலே நிவிர்த்தாதி மூன்றில் இசை புவனத்து இருவினைகள் எவற்றினையும் ஒழித்தே - இந்த ஐந்து கலைகளிலும் மந்திரங்கள் பதினொன்றும், பதங்கள் எண்பத்தொன்றும், வன்னங்கள் ஐம்பத்தொன்றும், புவனங்கள் இருநூற்றிருபத்துநாலும், தத்துவங்கள் முப்பத்தாறும் இப்படித் தொகையாக நிற்குமெனவறிக. இந்த முறைமைகளையுடைய கலைகளிலே நிவிர்த்தி பிரதிட்டை வித்தை என்னும் மூன்றுகலைகளில் பொருந்தியிருக்கிற புவனங்களிலிருக்கும் பெரியவாகிய கன்மங்கள் எல்லாவற்றையும் நீக்கி; புத்தியினில் வித்தாகிச் செறி வினை வாதனைமேல் பொருந்தாதவகை ஒழித்துப் புகன்றிடும் ஐங்கலைக்கு - புத்தி தத்துவத்திலே பீசமாகப் பொருந்தியிருக்கும் கன்மவாதனைக்குக் காரணமான மலவாதனை நின்ற சாந்தி சாந்தியதீத கலையிலிருக்கிறவற்றையும் மேல் ஜனன மரணமாகப் பந்தியாதபடி நீக்கி இப்படிச் சொல்லப்பட்ட இந்தப் பஞ்சகலைகளில் எ - று. (௱அக)

182. மருவியிடு மந்திரங்கள்பதங்களிலே பதங்கள்
வன்னங்க டமில்வன்னம் புவனங்க டமிலே
உருவொளிரும் புவனங்க டத்துவங்க டமிலே
யோதியிடுந் தத்துவங்கள் கலைகளிலு முறவே
தருகலைகள் சத்திகளிற் சத்திகடாஞ் சிவத்தே
தானுறவே யோசித்துச் சாற்றிடும்பே ரின்றிப்
பொருவிலதாய்ப் பற்றிலதாய் நிராதார மாகிப்
போற்றுபிர மாணங்கள் பொருந்தி டாதாய்.

இ - ள் : மருவியிடும் மந்திரங்கள் பதங்களிலே பதங்கள் வன்னங்கள் தம்மில் வன்னம் புவனங்கள் தம்மிலே - பொருந்தியிருக்கும் மந்திரங்கள் பதங்களிலே, பதங்கள் வன்னங்களிலே, வன்னங்கள் புவனங்களிலே; உரு ஒளிரும் புவனங்கள் தத்துவங்கள் தம்மிலே ஓதியிடும் தத்துவங்கள் கலைகளிலும் உறவே - பிரகாச ஸ்வரூபமாய் நின்ற புவனங்கள் தத்துவங்களிலும், சொல்லியிடுந் தத்துவங்கள் கலைகளிலும் பொருந்த; தருகலைகள் சத்திகளில் சத்திகள் தாம் சிவத்தே தான் உறவே யோசித்து - தரப்பட்ட கலைகள் சத்திகளிலும், சத்திகளானவை சிவத்திலும் பொருந்த இப்படி ஒன்றிலே ஒன்று லயிக்கப்பண்ணி; சாற்றிடும் பேர் இன்றிப் பொரு இல

தாய்ப் பற்று இலதாய் நிராதாரம் ஆகிப் போற்று பிரமாணங்கள் பொருந்திடாதாய் - சொல்லப்படாநின்ற குண நாமக் கிரியைகளில்லாததாய்க் குற்றமில்லாததாய்ப் பற்றில்லாததாய் ஆதார தேக கரணுதிகளில்லாததாய்ச் சொல்லப்பட்ட பிரமாணங்களில்லாததாய் எ - று. (௱அஉ)

183. ஓதலுறுந் தத்துவங்க ளொன்று மின்றி
யொன்ருகி யுயர்பரா னந்த மாகிப்
போதமய மாயகண்ட பூரணத்தே யாற்றின்
புனல்கடலுட் புகுந்ததுவாம் பொற்ப தென்னப்
பேதமற யோசித்துச் சமரசமாய்ப் பெற்றுப்
பின்ஞகக் கடனீரவ் வாறெதிர்த்த பேருய்த்
தீதகலச் சிவபத்தர்க் கனுக்கிரகஞ் செய்யத்
திரும்பவுமப் பிராரத்த தேகத்துஞ் செறிப்பான்.

இ - ள்: ஓதலுறும் தத்துவங்கள் ஒன்றும் இன்றி ஒன்ருகி உயர் பரானந்தம் ஆகி - பொருந்தச் சொல்லிப்போந்த தத்துவங்களொன்றுமில்லாமல் ஒரு பொருளாகி மேலான பரமானந்த ரூபமாகி; போதமயமாய் அகண்ட பூரணத்தே ஆற்றின் புனல் கடலுட் புகுந்து அது ஆம் பொற்பது என்ன - ஞானஸ்வரூபமாய்க் கண்டிக்கப்படாததாய்ப் பரிபூரணமான சிவத்திலே நதிச் சலமானது சமுத்திரசலத்துடன் கூடி அந்தச் சமுத்திரசலமாக நின்றதுபோல; பேதம் அற யோசித்துச் சமரசமாய்ப்பெற்றுப்பின் ஆகக் கடல்நீர் அவ் ஆறு எதிர்த்தபேருய் - அபேத சாட்சாத்காரமாக யோசித்துச் சமாதி பாவமாகச் செய்து சமுத்திர சலத்திற் சமாதி பாவமாய் நின்ற நதிச் சலமானது பின்னேக்கி நதிமார்க்கத்தில் எதிர்த்து நின்றது போல; தீது அகலச் சிவபத்தர்க்கு அனுக்கிரகம் செய்யத் திரும்பவும் அ பிராரத்த தேகத்தும் செறிப்பான் - சிவபக்தர்க்கு ஆணவாதி பாசங்கள் நீங்க அனுக்கிரகம் பண்ணும் நிமித்தம் மீளவும் அந்தப் பிராரத்த தேகத்திலே ஆன்மாவை நிறுத்துவர் ஆசாரியர் எ - று. (௱அங)

அ - கை: மேல் ஆசாரியானுக்கிரகம் பெற்றவர்கள் நிற்கும் நிலைமையைத் திட்டாந்த பூர்வமாகக் கூறுகின்றது.

184. தேசிகனு ரருளிங்ஙன் செய்த போதே
சிதானந்த மேனியாஞ் சிவமே நோக்கி
ஆசதுவா மாணவமும் வினைமாயை யனைத்து
மகன்றிடத்தான் சிவானந்தத் தழுந்தியது வேயாய்க்
காசமிலா விழியருக்க னெளியி னேடே
கலந்துநின்றே மற்றென்றுங் காணு போல
ஏசுறுமுற் பசுகரணஞ் சிவகரண மேயா
யிசைந்திருந்து தேகாந்தத் தெங்கணுமா யிடுவர்.

இ - ள் : தேசிகனுர் அருள் இங்ஙன் செய்தபோதே சிதானந்த மேனியாம் சிவமே நோக்கி - இவ்விடத்தில் ஆசாரியர் அனுக்கிரகம் பண்ணின பொழுதே சச்சிதானந்த ஸ்வரூபமாய் நின்ற சிவத்திற் சாட்சாத்காரமாய் நின்று; ஆசு அதுவாம் ஆணவமும் வினை மாயை அனைத்தும் அகன்றிடத்தான் சிவானந்தத்து அழுந்தி அதுவேயாய் - குற்றமாகிய ஆணவம் கன்மம் மாயை எல்லாப் பந்தங்களும் நீங்கிடச் சிவானந்தத்திலே பேதம் அற அந்தச் சிவஸ்வரூபமாய் நிற்க; காசம் இலா விழி அருக்கன் ஒளியினேடே கலந்து நின்றே மற்றென்றும் காணு போல - காசாதி தோஷமில்லாத சட்சுசானது சூரியப் பிரகாசத்தோடு கூடிக் கலந்து நின்று வேறெரு விஷயத்தையும் காணுததுபோல; ஏசு உறும் முன் பசுகரணம் சிவகரணமேயாய் இசைந்திருந்து தேகாந்தத்து எங்ஙனும் ஆயிடுவர் - முன்பு குற்றமாகச் சொன்ன பசுகரணம் சிவகரணமாகவே பொருந்தி நின்று தேக நாசத்தில் சிவமாகச் சர்வவியாபியாய் நிற்பர் எ - று. (௱அசச)

அ - கை : மேல் அனுதியாய் நித்தியமான ஆணவம் எப்படி நீங்குமென்னில், சீவன்முத்தரை மறையாமல் நீங்கிநிற்கையால் கெடும் என்பதுவும், பெத்தான்மாக்களைப்பந்தித்து நிற்கையால் அனுதிநித்தியத்துக்குக் கெடுதலில்லை என்பதுவும் கூறுகின்றது.

185. அனுதியாய் விபுவாகி நித்த மான
வாணவந்தா னீங்கும்வகை யாவ தெங்ஙன்
எனுதுகொணீ செம்பினுட் களிம்ப னுதி
யிரதகுளி கையினுலே யேகப் பொன்னும்
மனுதிருடா னிறைந்திருந்தும் பூனை யாதி
மணிவிழியி னங்ஙனருண் மன்னி னேர்பால்
துனுதுகெடு மாணவந்தான் மற்றேர் தம்மைத்
துடக்கிநிற்கு மாதலினுற் சோர்வு மின்றே.

இ - ள் : அனுதியாய் விபுவாகி நித்தம் ஆன ஆணவம் தான் நீங்கும் வகையாவது எங்ஙன் - அனுதியுமாய் விபுவுமாய் நித்தியமுமாயிருக்கிற ஆணவமலமானது நீங்கும் வகை எப்படிக் கூடுமென்னில்; எனுது கொள் நீ - இப்படிச் சொல்லாதே, சொல்லுகிறேம் நீ கேள்; செம்பினுள் களிம்பு அனுதி இரத குளிகையினுலே ஏகப் பொன்னும் - செம்பினிடத்துண்டான களிம்பு அனுதியாயிருக்க இரசகுளிகா பரிசத்தினுலே களிம்பு நீங்கப் பொன்னும், அப்படிப் போல அனுதியாய் நித்தியமாய் நின்ற ஆணவம் சிவசத்தி பரிசத்தினுலே நீங்க ஆன்மாச் சிவமேயாகும்; மனுது இருள் தான் நிறைந்திருந்தும் பூனை ஆதி மணி விழியின் அங்ஙன் அருள் மன்னினேர் பால் ஆணவம் தான் துன்னுது கெடும் - இருளானது எங்கும் நிறைந்திருந்தும் பூனை முதலான சில செந்துக்களுடைய கண்மணிகளுளியை மறையாமல் நிற்கும், அப்படிப்போலச் சிவானுக்கிரகத்தைப் பெற்றவர்க

ளிடத்தில் ஆணவமலமானது மறையாமல் நீங்கும்; மற்றோர் தம்மைத் துடக்கி நிற்கும் ஆதலினுல் சோர்வும் இன்று - பெத்தான்மாக்களை ஆணவ மானது பந்தித்து நிற்குமாகையால் அனுதி நித்தியமான ஆணவத்துக்கு நாசமில்லை எ - று. (ரு அடு)

அ - கை: மேல் ஆணவாதி பந்தம் நீங்கில் ஸர்வஞ்ஞத்துவாதி குணங்கள் விளங்காமல் நிற்பானேன் என்னுஞ் சங்கைக்கு உத்தரங் கூறுகின்றது.

186. இருண்மலமு மாயைவினை யெல்லா நீங்கி
லெவ்வறிவு மெத்தொழிலு மிறைபோ லிங்கே
மருவியிடா தேனென்னி லான்மாக் கட்கு
வரம்பிகந்த சத்தியுள வவைகளையவ் வாறே
கருமலந்தன் சத்திகளாற் றடுத்து நிற்குங்
கடவுடனைக் காணுமற் றடுத்த சத்தி
குருவருளா னீங்கியிடச் சிவானு பூதி
கூடியிடு மற்றவைகள் கூறுங் காலே.

இ - ள்: இருள் மலமும் மாயை வினை எல்லாம் நீங்கில் எவ்வறிவும் எத்தொழிலும் இறைபோல் இங்கே மருவியிடாது ஏனென்னில் - இருண்ட ஆணவமலமும் மாயையும் கன்மமும் எல்லாப் பந்தங்களும் நீங்கில் சர்வஞ்ஞதையும் சர்வகிருத்தியமும் சிவனைப்போலச் சீவன் முத்தனிடத்தில் பொருந்தாமல் இருப்பானேன் என்னில்; ஆன்மாக்களுக்கு வரம்பு இகந்த சத்தி உள அவைகளை அவ்வாறே கருமலம் தன் சத்திகளால் தடுத்துநிற்கும் - ஆன்மாக்களுக்கு மட்டில்லாதசத்திகள் உண்டு, அந்தச் சத்திகளை இருண்ட ஆணவமலமானது தன்னுடைய மட்டில்லாத சத்திகளால் அந்த அந்தச் சத்திகளைப் பிரகாசிக்க வொட்டாமல் அந்த அந்தப் பிரகாரமாகத் தடுத்து நிற்கும், ஆகையால் சர்வஞ்ஞத்துவாதி விளங்கா; கடவுள் தன்னைக் காணுமல் தடுத்தசத்தி குருவருளால் நீங்கியிடச் சிவானுபூதி கூடியிடும் - சிவ சாட்சாத்காரத்தைக் காணவொட்டாமல் தடுத்துநின்ற ஆணவசத்தியானது குருவனுக்கிரகத்திலுலேநீங்கச் சிவானுபவத்தை ஆன்மாவானது பொருந்தி நிற்கும்; மற்றவைகள் கூறுங்கால் - தடைபட்டு நின்ற சத்திகளுக்குத் தடை நீங்குவதற்கு மேல் ஏதுக்கள் சொல்லுவாம் எ - று. (ரு அசு)

187. செய்திடுநற் சிவபூசை யாதிதொழி லாலுஞ்
செப்பரிய தவத்தாலுஞ் செபத்தி னாலும்
எய்திடுசீ ரட்டாங்க யோகத் தாலு
மெழிற்றீர்த்த மாடியத னுலுமணி யாலும்

பெய்துறுதா னத்தாலு மௌடதத்தி னலும்
பிரிந்திடுமா ணவசத்தி பிரிந்துபிரிந் தடைவே
மெய்தருசீர் ஞானங்கள் தொழில்கள் சத்தி
விளங்கியிடு மிவைசொரூப மலவிகற்ப மென்னே.

இ - ள் :, செய்திடும் நல் சிவபூசை ஆதி தொழிலாலும் செப்ப அரிய தவத்தாலும் செபத்தினலும் - சிவாகமங்களிற் சொன்னபடி செய்யும் உத்கிருஷ்டமான சிவபூசை முதலான கிரியைகளினலும், சொல்லுதற்கரிதாகிய தவங்களினலும், சித்திகளை அபேக்ஷித்துச் செபத்தைப் பண்ணுகையாலும்; எய்திடு சீர் அட்டாங்க யோகத்தாலும் எழில் தீர்த்தம் ஆடியதனலும் மணியாலும் - அழகு பொருந்தியிருக்கும் அட்டாங்கமாய் நின்ற யோகாப்பியாசத்தினலும், உத்கிருஷ்ட தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணியதனலும், இன்ன இயற்றினதனலே இன்ன சித்திவிளங்கு மென்பதனலும்; பெய்துறு தானத்தாலும் ஔடதத்தினலும் பிரிந்திடும் ஆணவசத்தி பிரிந்து பிரிந்து அடைவே - கொடுக்குந் தான விசேடத்தினலும் ஔஷத விசேஷங்களினலும் ஆணவசத்தியானது விட்டு நீங்கும், எந்தெந்த ஆணவசத்தி நீங்கி நின்று அந்தந்தக் கிரமத்திலே; மெய்தரு சீர் ஞானங்கள் தொழில்கள் சத்தி விளங்கியிடும் - சத்தியமாய் அழகுபொருந்தி வரும் பூத பவிஷ்ய வர்த்தமான காலீனமான ஞானங்கள், பிரமாதி தேவதைகளை வசீகரணமாக்குவது முதலான கிரியைகள் இவைகளைப் பண்ணுஞ் சத்திகள் பிரகாசிக்கும்; இவை சொரூபம் அலவிகற்பம் என்னே - இப்படிச் சித்திகளுடன் பிரகாசிதமான சத்திகள் ஆன்மஸ்வரூப மல்ல எ - று. (ாஅஎ)

அ - கை : மேல் சீவன்முத்தர் சர்வஞ்ஞத்துவாதிகளையும் சிவராகத்தையும் பொருந்தி நின்று தேகாந்தத்திலே பரமமுத்தி யடைவார்களென்பதுவும், சிவராகமாத்திரம் பொருந்திநின்று தேகாந்தத்திலே பரமுத்தி அடைவார்களென்பதுவும் கூறுகின்றது.

188. தவஞ்செபங்க ளாதியெலாஞ் செய்தே முன்னஞ்
சாற்றுசிவ ராகமுற்ருேர் தரணி மீதே
அவஞ்சிறிது மில்லாத * சிவானு பூதி
யடைந்துகுரு வாலெல்லா வறிவுதொழி † லவையும்
நவந்திகழுஞ் சித்தியுடன் முத்தி சேர்வர்
நண்ணுத் தவாதிசிவ ராகமே நண்ணில்
பவந்தொலையச் சிவானுபவ மொன்றே பெற்றுப்
பரமுத்தி தேகபா தத்தடைவர் பரிந்தே.

* ஞான நிட்டை - பாடபேதம். † லதுவும் - பாடபேதம்.

இ-ள்: முன்னம் தவம் செபங்கள் ஆதி எல்லாம் செய்தே சாற்று சிவராகம் உற்ருேர் தரணிமீது குருவால் அவம் சிறிதும் இல்லாத சிவானு பூதி அடைந்து - முற்செனனத்திலே தவம் செபம் முதலானவைக ளெல்லா வற்றையும் அனுட்டித்துச் சிவராகத்தையும் பொருந்தினவர் பூமியின்கண் செனித்துக் குருவின் அனுக்கிரகத்தைப் பெற்றுக் குற்றமில்லாத சிவானு பவத்தைப் பெற்று; எல்லா அறிவு தொழில் அவையும் நவம் திகழும் சித்தி யுடன் முத்தி சேர்வர் - சர்வஞ்ஞத்துவாதிகள் சர்வ கிருத்தியங்கள் புதுமை விளங்காநின்ற அணிமாதி சித்திகளுடன் கூடிநின்று தேகாந்தத்திலே பரம முத்தியடைவார்கள்; தவாதி நண்ணுது சிவராகமே நண்ணில் தரணிமீது பவம் தொலைய பரிந்து சிவானுபவம் ஒன்றே பெற்றுப் பரமுத்தி தேக பாதத்து அடைவர் - தவமுதலானவைகளைப் பண்ணிச் சர்வஞ்ஞத்துவாதி கள் அணிமாதி சித்திகள் பொருந்தாமல்நின்று சிவஞானமே பிரகாசித்தால் சனனமரணமென்னும் சங்காரவுபாதி நீங்கிச் சிவானுபவமாத்திரமே பெற்று நின்று தேகாந்தத்திலே சிவகிருபையாலே பரமமோட்சத்தை அடைவார்கள் என்றவாறு. (௱அஅ)

அ-கை: மேல் சிவஞானமன்றியில் சர்வஞ்ஞத்துவாதிகள் சித்தி கள் இவைகளைப் பெற்று நின்ருற் பிரயோசனமில்லை யென்பதுவும், சிவ ஞானத்தைப் பொருந்திச் சிவானுபவத்தைப் பெற்று நிற்பதே சிறப்பென் பதுவுங் கூறுகின்றது.

189. தரிப்பரிய சிவராக மின்றி மிக்க
தவமுதல்கள் புரிந்தோர்க டாரணியி லுதித்தே
பிரிப்பரிய சிவானுபவம் பெற்றி டாதே
பெற்றிருந்தும் பெரிதாய சித்திகடா மனைத்தும்
மரிப்பர்பினு முதித்திடுவர் மாயாவா ணவந்தான்
மற்றிதனு லனைத்தறிவும் வல்லமையும் பொருளோ
தெரிப்பரிய சிவானுபவஞ் சிவராகத் தாலே
தேசிகனுற் பெற்றுமுற்றுஞ் சிவமாதல் சிறப்பே.

இ-ள்: தரிப்ப அரிய சிவராகம் இன்றி மிக்க தவம் முதல்கள் புரிந்தோர்கள் தாரணியில் உதித்து - தரிக்கிறதற்கு அரிதாகிய சிவஞான மில்லாமல் மிகுந்த தவமுதலானவைகளை முன்சனனத்திலே அனுஷ்டித்த வர்கள் பூமியின்கண்ணே சனித்து; பிரிப்ப அரிய சிவானுபவம் பெற்றி டாதே பெற்றிருந்தும் பெரிதாயசித்திகள் தாம் அனைத்தும் - பிரித்தற்கு அரிதாகிய சிவானுபூதியைப் பெருமல் பெரியவாகிய அணிமாதி சித்திகள் எல்லாவற்றையும் பெற்றிருந்தும்; மரிப்பர் பின்னும் உதித்திடுவர் மாயா ஆணவந்தான் மற்று இதனுல் அனைத்து அறிவும் வல்லமையும் பொருளோ - நாசத்தை யடைவர், பின்பு செனிப்பர், ஆணவாதி பாசங்களும் நீங்கா, ஆகையால் சர்வஞ்ஞத்துவாதிகளை உடைமையும் சர்வ கிருத்தியங்களைப் பண்ணிச் சாமர்த்தியமாய் நிற்பதும் ஆன்மப் பிரயோசனமல்ல; தெரிப்ப

அரிய சிவானுபவம் சிவராகத்தாலே தேசிகனுற்பெற்று முற்றும் சிவம் ஆதல் சிறப்பு - வாக்கு மனுதிகளுக்கெட்டாத சிவானுபவம் சிவஞானத்தினுலே ஆசாரியருடைய அனுக்கிரஹத்தினுலே பெற்று ஒருகாலும் ஜனன மரண மான உபாதி வாராமல் எப்பொழுதுஞ் சிவாநன்னிய சாட்சாத்காரமாக நிற்பதே சிறப்பு எ - று. (ாஅகூ)

அ - கை: மேல் நின்மலசாக்கிராதி பஞ்சாவத்தா லக்ஷணங்களை நாலு விருத்தங்களினுலே கூறுகின்றது.

190. அகரவுக ரமகார விந்து நாத
மாமூல மனுவினையைஞ் சத்திகடம் வடிவாய்ப்
பகருமன மகங்காரம் புத்தி சித்தம்
பாவிக்கு முளமிவற்றிற் பதிந்த ளத்தே
புகவுளதாம் புற்போலத் தாமே யாகப்
பொருந்தியே பூதவுருப் பொருள்க ளெல்லாம்
நிகரில்சிவ ரூபமாய்க் கண்டு நிற்க
நிறுத்துமித யத்திலிது நின்மலசாக் கிரமே.

இ - ள்: அகர உகர மகார விந்துநாதமாம் மூலமனுவினை ஐஞ்சத்திகள் தம் வடிவாய்ப் பகரும் மனம் அகங்காரம் புத்தி சித்தம்... நின்மல சாக்கிரமே- கிரியாசத்தி ஞானசத்தி இச்சாசத்தி ஆதிசத்தி பராசத்தி என்னும் பஞ்ச சத்திகள் அகார உகார மகார விந்து நாதம் என்னும் சூக்கும பஞ்சாக் கரத்தைத் தமது ஸ்வரூபமாய்ச் சொல்லாநின்ற மனம் புத்தி அகங்காரம் சித்தம் ஞானரூபமாகிய ஆன்மஞானமான உள்ளம் என்னும் ஐந்தையும் கிரமத்திலே பஞ்ச சத்திகளும் அதிட்டித்துநின்று உப்பளத்திலே விழுந்த துரும்பு புல்லு முதலானவைகளெல்லாம் அந்த அந்த உருவங்கள் கெட்டு லவணமாதல்போலத் தமது மயமாகப் பொருந்திப் பஞ்சபூத ரூபமான விஷயங்கள் எல்லாவற்றையும் ஒப்பில்லாத சிவஸ்வரூபமாகவும் விஷய சுகங் களைச் சிதானந்தமாகவும் கண்டு இதயத்தானத்திலே நிற்கப்பண்ணும் இது நின்மல சாக்கிராவத்தை எ - று. (ாகூ0)

191. சாக்கிரகா ரணமான வகார நந் தானுஞ்
சத்தாதி யிற்பற்று மனமு நீங்க
ஊக்கமுறு மகங்கார முகார மாதி
யுடனுகக் களமதனி லுறநின் றெண்ணில்
பாக்கியமாஞ் சிவயோகம்பா வனைபற்றிப் புலன்கள்
பற்றுத சொப்பனமாப் பகரு நூல்கள்
ஆக்கியிடுஞ் சொப்பனத்தே யுகாரமகங் கார
மகன்றிடவே தாலுமூ லத்திலடைந் தாங்கே.

இ-ள்: சாக்கிர காரணம் ஆன அகாரம் தானும் சத்தாதியில் பற்றும் மனமும் நீங்க ஊக்கமுறும் அகங்காரம் உகாரம் ஆதி உடனாகக் களமதனில் உற நின்று எண்ணில் பாக்கியமாம் சிவோகம்பாவனைபற்றிப் புலன்கள் பற்றாத சொப்பனமாப் பகரும் நூல்கள் - நின்மல சாக்கிரத்துக்குக் காரணமாய் நின்ற அகாரம் உகாரத்திலும், சத்தாதி விஷயங்களைப் பற்றும் மனமானது அகங்காரத்திலும், கிரியாசத்தி ஞானசத்தியிலும் ஒடுங்கப் பலம் பொருந்திய அகங்காராதி நான்குடனும் அவற்றைப் பிரேரிப்பனவாகிய உகாராதி நான்குடனும் அவற்றிற்குப் பிராணனாகிய ஞானசத்தி முதல் நான்குடனுமாகக் கண்டத்தானத்தில் பொருந்தி நின்று மட்டில்லாத ஐசுவரிய ரூபமான சிவோகம் என்னும் பாவனையைப் பொருந்தி விஷயங்களிலே செல்லாமல் நிற்பது நின்மல சொப்பனமாகச் சிவாகமங்கள் சொல்லும்; ஆக்கியிடும் சொப்பனத்தே உகாரம் அகங்காரம் அகன்றிடவே தாலுமூலத்தில் அடைந்து ஆங்கே - சொப்பன அவத்தையை உண்டாக்கும் உகாரம் மகாரத்திலும், நானென்று கிறுகிறுக்கும் அகங்காரம் புத்தியிலும், ஞானசத்தி இச்சாசத்தியிலும் ஒடுங்கப் புத்திமுதல் மூன்றுடனும் அவற்றைப் பிரேரிக்க அகாராதி மூன்றுடனும் அவற்றிற்குப் பிராணனாகிய இச்சாசத்தி முதல் மூன்றுடனும் சுழுத்தித்தானமாகிய தாலுமூலத்திலே பொருந்திநின்ற இடத்து எ-று. (௱௯௧)

192. உன்னரிய சிவனையவ னுருவாகு ஞான
 வொளியாலே கண்டின்ப முளமுறுதல் சுழுத்தி
மன்னியிடுஞ் சுழுத்திக்குக் காரணமா மகார
 மதியுமுட னீங்கியிட மற்றவைகள் புருவம்
தன்னடுவி னின்றந்தக் கரணங்கள் விருத்தி
 தானுமறச் சிவானுபவந் தான்பெறுத றுரியம்
இந்நிலையில் விந்துவுடன் சித்தமுநீங் கிடவே
 யேகாந்த மாய்ப்பிரம ரந்திரத்தி லிசைந்தே.

இ-ள்: உன்ன அரிய சிவனை அவன் உருவாகும் ஞான ஒளியாலே கண்டு இன்பம் உளம் உறுதல் சுழுத்தி - நினைத்தற் கரிதாகிய சிவனை அவருடைய ஸ்வரூபமாகிய ஞானப் பிரகாசத்தினாலே கண்டு சிவானந்தத்தைப் பொருந்திநிற்பது சுழுத்தி; மன்னியிடும் சுழுத்திக்குக் காரணம் ஆம் மகாரம் மதியும் உடன் நீங்கிட மற்று அவைகள் புருவம் தன் நடுவில் நின்று அந்தக்கரணங்கள் விருத்தி தானும் அறச் சிவானுபவம் தான் பெறுதல் துரியம் - சுழுத்தியவத்தைக்குக் காரணமாகப் பொருந்தியிடும் மகாரம் விந்துவிலும், பகுத்து நிச்சயிக்கும் புத்தி சித்தத்திலும், இதற்குப் பிராணனாகிய இச்சாசத்தி ஆதிசத்தியிலும் ஒடுங்கச் சித்தமுதலாகிய இரண்டுடனும் அவைகளைப் பிரேரிப்பனவாகிய விந்து நாதங்களுடனும் அவற்றிற்குப் பிராணனாகிய ஆதி பரை என்னும் இரண்டுசத்திகளுடனும் புருவமத்தியத்திலே நின்று அந்தக்கரணங்கள் வியாபாரம் ஒன்றுமற்று ஆன்மா சிவானுபவத்தைப் பொருந்துதல் துரியாவத்தை; இ நிலையில் விந்துவுடன் சித்தமும்

நீங்கிட ஏகாந்தமாய்ப் பிரமரந்திரத்தில் இசைந்து - இந்தத் துரியாவத்தைக்குக் காரணமாகிநின்ற விந்துவும் ஆகத நாதமும் குடிலையிலும், சித்தம் பிரகிருதியிலும், ஆதிசத்தி பராசத்தியிலும் ஒடுங்க ஓர் உபாதிகளுமில்லாமல் பிரமரந்திரத்தில் ஆன்மாமாத்திரமே பொருந்திநின்று எ - று. (௱௯௨)

193. ஞானமுடன் ஞேயஞா துருவென்னு மூன்று
நாடாமற் றானதுவாய் நண்ணியிட றானே
ஊனமிலா வுன்மனைக்கு மேலான முத்தி
யுற்றதுநின் மலதுரியா தீதமென வுரைப்பர்
ஆனவிதே சுத்தமா முத்தி யாகு
மன்றிவே றுரைக்குமுத்தி யவைகளெல்லாம்
ஈனமா * முத்தியவை தம்மை யெல்லா
மியம்புவா † மறிந்தவற்றை யிசையா வாறே.

இ - ள்: ஞானமுடன் ஞேயம் ஞாதுரு என்னும் மூன்றும் நாடாமல் தான் அதுவாய் நண்ணியிடல்தான் ஊனம் இலா உன்மனைக்கு மேலான முத்தியுற்றது நின்மலதுரியாதீதமென உரைப்பர் - ஞாதுரு ஞானம் ஞேயம் என்னும் திரிபுடிக்கு ஞானம் பொருந்தாமல் ஆன்மா தத்பதவாச்சியமான சிவமாய் அனுபவிப்பதான குறைவில்லாத அகார உகார மகார விந்து அர்த்தசந்திரன் நிரோதி நாதம் நாதாந்தம் சத்தி வியாபினி சமனை உன்மனை சத்திகளுக்கு மேலான பரமமோட்சம் பொருந்துதலை நின்மல துரியாதீதமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்; ஆன இதே சுத்தமாம் முத்தி ஆகும் - ஆனபடியினலே அந்த மோட்சமே ஏகதேசமாகச் சொல்லும் பரவாதிகள் முத்திகளைப்போ லல்லாமல் சுத்தமான வைதிக சைவ சுத்தாத்வைத மோட்சமாகும்; அன்றி வேறு உரைக்கும் முத்தி அவைகள் எல்லாம் ஈனம் ஆம் முத்தி - இப்படியல்லாமல் வெவ்வேறாகச்சொல்லும் முத்திகளெல்லாம் குறைவான முத்திகள்; அவை தம்மை எல்லாம் இயம்புவாம் அறிந்து அவற்றை இசையா ஆறு - அந்தப் பரவாதிகள் சொல்லும் பெத்தமுத்தியிலக்கணங்களெல்லாவற்றையும் அறிந்து அவற்றைப் பரிபாகத்தையுடைய ஆன்மாக்கள் பொருந்தாதபடி சொல்லுவாம் எ - று. (௱௯௩)

அ - கை: சைவரல்லாத சமயிகள் சொல்லுகின்ற தசவித முத்திகளில் சாருவாகன், இந்திரியான்மவாதி, பஞ்சதன்மாத்திரான்மவாதி, நியாயவாதி, வைசேஷிகன், பௌத்தன், நிகண்டவாதி, ஆசீவகன் இவர்களுடைய பெத்தாவத்தை இலக்கணங்களையும் முத்தியிலக்கணங்களையுங் கூறுகின்றது.

---

* முத்தியது தன்னை - பாடபேதம். † மறிந்ததனை - பாடபேதம்.

194. சைவரல்லாச் சமயிகடா முத்தி பேதஞ்
சாற்றிடுவ ரீரைந்தாச் சாரு வாகன்
மெய்வருதல் மண்ணறல்தீ வாயு நாலு
மேவியிடுங் கூட்டத்தே யுணர்வு மங்ஙன்
செய்வனவாந் தவம்வேண்டாம் பொருளைத் தேடிச்
சிற்றிடையா ருடன்வாழ்தல் சுவர்க்கந் தேரில்
இவ்வகையி லாததுவே நரக முத்தி
யென்பதுவா யுப்பிரிய விறத்தலுணர் வென்றே.

இ - ள்: சைவரல்லாச் சமயிகள் தாம் முத்தி பேதம் சாற்றிடுவர் ஈரைந்தா - சைவசமயிகள் அல்லாத புறச்சமயிகளானவர்கள் அடையும் முத்தி பத்துவிதமாகச் சொல்லுவார்கள்;

சாருவாகன் மெய்வருதல் மண் அறல் தீ வாயு நாலு மேவியிடும் கூட்டத்தே உணர்வும் - அவருட் சாருவாகன் என்னுஞ் சமயி பிருதிவி அப்பு தேயு வாயு என்னும் நாலு பூதங்களுடைய சமுதாயத்திலே தேகம் உண்டாகும், அந்தத் தேகத்திலே ஓர் அறிவு உண்டாகுமாகையால் தேகமே ஆன்மா; அங்ஙன் செய்வன ஆம் தவம் வேண்டாம் பொருளைத் தேடிச் சிற்றிடையாருடன் வாழ்தல் சுவர்க்கம் - அவ்விடத்துச் செய்யவேண்டின தவங்கள் தேவையில்லை, திரவியங்களைத் தேடி ஸ்திரீகளுடன் கூடிப் போகத்தைப் புசித்து வாழ்தலே சுவர்க்கம்; தேரில் இவ்வகை இல்லாததுவே நரகம் முத்தி என்பது வாயுப் பிரிய இறத்தல் உணர்வு என்றே - விசாரிக்கில் இந்தப் போகம் இல்லாததே நரகம், வாயு நீங்க அறிவு கெட்டுப்போவதே மோட்சமென்று இப்படிச் சொல்லி நின்று எ - று. (௱௯௪)

195. பொருந்திடுவன் பூதங்க டமிலவன்றான் பொறிகள்
புலனறித லாலதுவே யுயிர தாகும்
அருந்திடுத லைம்புலனைப் பந்த மாகு
மவையடங்கல் முத்தியென வறைவனவன் றானும்
தருந்திகழப் பூதங்க டம்மையெது வதுவே
சாற்றியிடு மான்மாவா மெனவுணர்ந்தோன் றானும்
இருந்திடுதல் * பஞ்சதன் மாத்திரைக்கே யியல்பா
வியம்பியிடு மினிஞாய வாதியுரை யிசைப்பாம்.

இ - ள்: பொருந்திடுவன் பூதங்கள்தமில் அவன் தான் - அந்தச் சாருவாகன்தான் நாலு பூதங்களிலிருக்கும் புவனங்களிலிருப்பன்; பொறிகள் புலன் அறிதலால் அதுவே உயிரதாகும் அருந்திடுதல் ஐம்புலனைப் பந்தம்

* பஞ்சதன்மாத் திரையினியல் பாக - பாடபேதம்.

ஆகும் அவை அடங்கல் முத்தி என அறைவன் - சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்நுவை ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம் ஐந்தும் சத்தப் பரிச ரூப ரச கந்தம் என்னும் ஐந்து விஷயங்களையும் அறிவனவாகையால் அந்தப் பஞ்சேந்திரியங்களே ஆன்மாவாகும், அந்த ஆன்மாவுக்கு அந்த ஐந்து விஷயங்களையும் புசிக்கிறதே பந்தமாகும், அந்த விஷயங்களை நீங்குகிறதே மோட்சமென்று இந்திரியான்மவாதி சொல்லுவான்; அவன் தானும் - அந்த இந்திரியான்மவாதியும்; தரும் திகழ் அப்பூதங்கள் தம்மை எது அதுவே சாற்றியிடும் ஆன்மா ஆம் என உணர்ந்தோன் தானும் இருந்திடுதல் பஞ்ச தன்மாத்திரைக்கே இயல்பாக இயம்பியிடும் - பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் பஞ்சபூதங்களை விளங்க உண்டாக்கும் யாதொன்று சத்தப் பரிச ரூப ரச கந்தம் என்னும் அந்தக்கரண தன்மாத்திரையே சொல்லப் படாநின்ற ஆன்மாவாம் என்றறிந்த பஞ்சதன்மாத்திரான்மவாதியும் பஞ்ச தன்மாத்திரையிலே இயல்பாக இருக்கையைச் சிவாகமம் சொல்லும்; இனி ஞாயவாதி உரை இசைப்பாம் - மேல் நியாயவாதிகள் சொல்லுகின்ற பெத்த முத்தி இலக்கணங்களைச் சொல்லுவாம் எ - று. (௱௬௫)

196. ஆகமுட னைம்பொறியின் தொழில்க ளெல்லா
மடங்கியிடுங் கனவதனி லனைத்து முன்னிப்
போகமுறு மனமாமா லதுவே யான்மாப்
பொருந்தாது பொறிபுலனைப் புனித மாகி
ஏகமாய் நின்றிடலே முத்தி யாமென்
றியம்பிமனத் தத்துவத்தே யிசைவன் மேலும்
ஊகமுடைத் தாகியவை சேடிகன்று னுரைக்கு
முண்டனன்யா னுணர்ந்தனன்யா னெனுமுரையி னலே.

இ - ள்: ஆகமுடன் ஐம்பொறியின் தொழில்கள் எல்லாம் அடங்கியிடும் கனவத்னில் - போக்கு வரவு முதலான தேகக்கிரியைகள் சத்தப் பரிச ரூப ரச கந்தம் என்னும் விஷயக் கிராகியமான பஞ்சேந்திரியக் கிரியைகளெல்லாம் சொப்பனவத்தையில் நீங்கிநின்று; அனைத்தும் முன்னிப்போகம் உறும் மனம் ஆம் ஆல் அதுவே ஆன்மா - நீங்கி நின்ற எல்லாத் தொழிலையும் வந்தேன் போனேன் கண்டேன் கேட்டேன் என்பன முதலான கிரியைகளை விசாரித்துச் சுகரூபமான போகங்களைப் பொருந்துகிறது மனமாகையால் அந்த மனமே ஆன்மா; பொருந்தாது பொறி புலனைப் புனிதம் ஆகி ஏகமாய் நின்றிடலே முத்தியாமென்று இயம்பி மனத்தத்துவத்தே இசைவன் - அந்த ஆன்மாவானது பஞ்சேந்திரிய விஷயங்களைப் பொருந்தாமல் பரிசுத்தமாகி ஒன்றாய் நிற்கிறதே மோட்சமென்று சொல்லி நின்று மனஸ் தத்துவ புவனத்தை அடைவன்; மேலும் ஊகம் உடைத்தாகிய வைசேடிகன் தான் உரைக்கும் உண்டனன் யான் உணர்ந்தனன் யான் என்னும் உரையினல் - மேலும் விசாரமுடைத்தாகிய புத்தியையுடைய வைசேடிகன் சொல்லும்படி யான் புசித்தேன் யான் அறிந்தேன் என்னும் சொல்லினலே எ - று.

197. ஆங்கார ஞானத்துக் காசிரய மாகி
யனைத்தினையுங் கைக்கொண்டே யபிமானம் பண்ணும்
பாங்காலே யதுதனையே யான்மா வென்று
பகர்ந்திடலாஞ் சுகதுக்க பந்த மெல்லாம்
நீங்கா நின் றோருணர்வு மின்றிப்பா டாண
நேராதல் முத்தியென நிகழ்த்திக் காயம்
போங்கால மகங்கார புவனந் தன்னிற்
பொருந்திடுவன் புத்தனினிப் புகலு மாறே.

இ - ள் : ஆங்காரம் ஞானத்துக்கு ஆசிரயம் ஆகி அனைத்தினையும் கைக்கொண்டே அபிமானம் பண்ணும் பாங்காலே - அகங்காரமானது அந்த ஞானத்துக்கு ஆசிரயமாய் நின்று எல்லா விஷயங்களையும் கைக் கொண்டு தனதாக அபிமானம்பண்ணும் முறைமையாலே; அது தனையே ஆன்மா என்று பகர்ந்திடலாம் - அந்த அகங்காரத்தையே ஆன்மாவென்று சொல்லலாம்; சுக துக்க பந்தம் எல்லாம் நீங்கா நின்று ஓர் உணர்வும் இன்றிப் பாடாணம் நேராதல் முத்தி என நிகழ்த்தி - சுகதுக்க ரூபமான பந்தங்க ளெல்லாவற்றையும் நீங்கிநின்று ஓரறிவுமில்லாமல் பாடாணம் போல ஆகிறதே மோட்சமென்று சொல்லிநின்று; காயம் போம் காலம் அகங்கார புவனம்தன்னில் பொருந்திடுவன் - தேகாந்தத்தில் அகங்கார புவனத்தை அடைவன்; புத்தன் இனிப் புகலுமாறே - புத்தன் சொல்லுகிற மார்க்கத்தை மேல் சொல்லுவாம் எ - று. (௱௯௭)

198. உருவம்வே தனைகுறிப்புப் பாவனைவிஞ் ஞான
மோரைந்தின் கூட்டத்தே யுளபுத்தி யதுவே
மருவியிடுஞ் சந்தான மாய்க்கெடுதல் பந்த
மற்றவைகள் சந்தான மறக்கெடுதல் முத்தி
தருமெனவே யுரைத்துமேல் முத்தி யென்றே
தானடைவன் புத்தியினி லென்று சாற்றும்
அருகன்றன் பேதமா நிகண்ட வாதி
யறைவனுட னிறைவறிவே யான்மா வாயே.

இ - ள் : உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம் ஓரைந்தின் கூட்டத்தே உள புத்தி அதுவே - மூர்த்த பூதங்களுடைய சமூகமே ஆன்ம ரூப ஸ்கந்தம், சுக துக்க உபேட்சா புத்திகளான வேதனாஸ்கந்தம், சத்த சமூகமான குறிப்புச் சம்ஞாஸ்கந்தம், வாசனாசமூகமான பாவனை ஸம்ஸ்கார ஸ்கந்தம், ஞானசந்ததி விஞ்ஞானஸ்கந்தம், இந்தப் பஞ்சஸ்கந்தக் கூட்டத்தி லுண்டான ஞானேந்திரியபஞ்சகம் கன்மேந்திரியபஞ்சகம் இந்தத் தசேந்திரி யங்களின் ஞானசமுதாயம் புத்தி, அந்தப் புத்தியே ஆன்மா; மருவியிடும் சந்தானமாய்க்கெடுதல் பந்தம் மற்று அவைகள் சந்தானம் அறக்கெடுதல்

முத்திதரும் எனவே உரைத்து - பொருந்தியிடும் ஞானசந்ததியானது நசித்துநிற்பதே பந்தம், அந்த ஞானசந்ததியெல்லாம் கெட்டுப்போகிறதே மோட்சமுண்டாக்குமென்று சொல்லி நின்று; மேல் முத்தி என்றே தான் அடைவன் புத்தியினில் என்று சாற்றும் - தேகாந்தத்தில் புத்திதத்துவ புவனத்திலே மோட்சம் அடைவனென்று சிவாகமம்சொல்லும்; அருகன்தன் பேதம் ஆம் நிகண்டவாதி அறைவன் உடல் நிறைவு அறிவே ஆன்மா ஆய் - அருகமதத்திற் பேதமான நிகண்டவாதியானவன் தேகம் எவ்வளவு உண்டோ அவ்வளவு அறிவு வியாபித்துநிற்பது ஆன்மாவென்று சொல்லுவன் எ - று. (௱௬௮)

199. அறுதொழிலா லறம்பாவ மியற்றியதன் பயனை
யருந்துதற்குப் பிறந்திறக்கு மறுதொழிலும் விட்டே
உறுவினைக ளனைத்தினையு மொழிந்திடத்தான் புசித்தே
யுற்றிடுதல் பொன்னெயிலின் முத்தியென வுரைப்பான்
மறுவிலதோர் குணவுருவா முயிர்தான் மிக்க
மண்ணாதி நாற்பூத வணுக்களைத்தா னீங்கிப்
பெறுகுணமெட் டுடைத்தாகை முத்தி யென்று
பேசிடுமா சீவகனுங் * குணத்துறுவான் பேறே.

இ - ள் : அறு தொழிலால் அறம் பாவம் இயற்றி அதன் பயனை அருந்துதற்குப் பிறந்து இறக்கும் - அந்த ஆன்மா உழவு, தொழில்,வரைவு வாணிபம், வித்தை, சிற்பம் என்னும் அறு தொழிலினாலே புண்ணிய பாபங்களைப் பண்ணி அவற்றின் பலன்களைப் புசித்தற்காகச் சனன மரணங்களைப் பொருந்தும்; அறு தொழிலும் விட்டே உறு வினைகள் அனைத்தினையும் ஒழிந்திடத் தான் புசித்தே உற்றிடுதல் பொன் எயிலில் முத்தி என உரைப்பான் - அந்த அறுதொழிலும் பண்ணாமல் பந்தமாகப் பொருந்தியிருக்கும் வினைப்பயன்களெல்லாம் புசித்து நீங்கியிடப் பொன்னெயில் வட்டத்தில் பொருந்துதல் மோட்சமென்று சொல்லுவான் அருகர் மதத்தில் பேதமான நிகண்டவாதியும்;

மறு இலதோர் குண உருவாம் உயிர்தான் மிக்க மண் ஆதி நாற்பூத அணுக்களைத் தான் நீங்கிப் பெறு குணம் எட்டு உடைத்தாகை முத்தி என்று பேசிடும் ஆசீவகனும் - ஒரு குற்றமுமில்லாமல் குணஸ்வரூபமாய் நின்ற ஆன்மாவானவன் மிகுந்த பிருதிவிப் பரமாணுக்கள், அப்புப்பரமாணுக்கள், தேயுப் பரமாணுக்கள், வாயுப் பரமாணுக்கள் என்னும் நான்கு பூதவணுக்களை நீங்கி உண்டாயிருக்கிற அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த விரியம், அனந்த சுகம், நிர்நாமம் நிர்கோத்திரம், நிராயுஷ்யம், சம்யதா பாவம் என்னும் எட்டுக் குணங்களையுடைத்தாகை மோட்சமென்றுசொல்லும்

* குணத்துறைவான் - பாடபேதம்.

ஆசீவகனும்; குணத்துறுவான் பேறே - இந்த இரண்டு சமயிகளும் தேகாந்தத்திற் குணதத்துவ புவனங்களில் பிராப்பியத்தானமாக அடைவார்கள் என்றவாறு. (ளகூகூ)

அ - கை : மேல் மூன்று திருவிருத்தங்களால் பாஞ்சராத்திர மதத்தினுடைய பந்த முத்தி இலக்கணங்களைக் கூறுகின்றது.

200. சித்தசித்தீச் சுரமென்று மூன்ருகும் பொருள்கள்
சித்துயிர்தா னெல்வாலி னூற்ருேர் பங்கை
ஒத்தணுவா யறிவாகி யுடலந் தன்னு
ளோரிடத்தே யுறைந்துவிளக் கொளியே போலச்
சத்தமுத லருந்தியிட நாலா ருகுந்
தத்துவங்க ளுடன்கூடித் தான்வினைகள் புரிந்தே
சுத்தமலாப் பிராகிருத தேகத் தாலே
தொடக்குண்டு பிறந்திறந்து துயர்தா னெய்தும்.

இ - ள் : சித்து அசித்து ஈசுரம் என்று மூன்று ஆகும் பொருள்கள் - சித்தென்றும் அசித்தென்றும் ஈசுவரமென்றும் பதார்த்தம் மூன்று விதமாம்; சித்து உயிர்தான் நெல்வாலில் நூற்று ஓர் பங்கை ஒத்து அணுவாய் அறிவு ஆகி உடலம் தன்னுள் ஓர் இடத்தே உறைந்து - சித்தென்று சொல்லப்பட்ட ஆன்மாவானது நெல்லின் வாலினுடைய சதாமிசத்திலொரு பங்குக்குச் சமமாகச் சூக்குமமாய் ஞானரூபமாகித் தேகத்துக்குள் ஓர் தானத்தில் நின்று: விளக்கு ஒளியேபோலச் சத்தமுதல் அருந்தியிட நால் ஆறு ஆகும் தத்துவங்களுடன் கூடித் தான் வினைகள் புரிந்து - வீட்டுக்குள்ளிருக்கும் தீபப்பிரகாசம் வீடெல்லாம் பிரகாசித்தாற்போலச் சத்தாதி விஷயங்களைப் புசிக்கும்படியாகப் பிருதிவியாதி தத்துவங்களுடன் கூடித் தான் புண்ணிய பாபமாகிய கன்மங்களைப் பண்ணி; சுத்தம் அல்லாப் பிராகிருத தேகத்தாலே தொடக்குண்டு பிறந்து இறந்து துயர் தான் எய்தும் - அந்தப் புண்ணிய பாபானுகுணமாக அசுத்தமாகிய பிரகிருதி சம்பந்தமான தேகத்தாலே பந்திக்கப்பட்டுச் சனன மரணமாகிய துக்கத்தைப் பொருந்தும் எ-று. (உ00)

201. அசித்தாதல் பிரகிருதி யதுதிருமாற் காதி
யானதோர் சத்தியதி லான்மாக்க ளெல்லாம்
வசித்தாகும் பிறப்பிறப்பை மாயோன்ற னருளால்
மற்றந்தத் திருமாலம் மாயைக்கு மேலாய்
நசித்திடா வைகுண்டந் தனிலென்று மிருந்தே
நாடரிய வனந்தகலி யாணகுண நண்ணிப்
புசித்தொழியாப் பரபோகந் தனக்கொக்க வங்ஙன்
பொருந்தினர்கட் களித்துநிற்பன் புனிதநித்த வுருவோன்.

இ - ள்: அசித்து ஆதல் பிரகிருதி அது திருமாற்கு ஆதியானது ஓர் சத்தி அதில் ஆன்மாக்களெல்லாம் வசித்து - அசித்தாவது பிரகிருதி, அந்தப் பிரகிருதி ஸ்ரீமத்தான மகாவிஷ்ணுவுக்குப் பிரதானமான சடசத்தி, அந்தப் பிரகிருதியில் ஆன்மாக்களெல்லாம் இருந்து; ஆகும் பிறப்பு இறப்பை மாயோன்தன் அருளால் - கன்மானுகுணமாக உண்டாகுஞ் சனன மரணங்களை மகாவிஷ்ணுவினுடைய ஆஞ்ஞையினாலே பொருந்தும்;

மற்று அந்தத் திருமால் அ மாயைக்கு மேலாய் நசித்திடா வைகுண்டம் தன்னில் என்றும் இருந்தே நாட அரிய அனந்த கலியாண குணம் நண்ணி - ஆன்மாக்களுக்குக் கன்மானுகுணமாகச் சுகதுக்கங்களைக் கொடுக்கும் மகாவிஷ்ணுவானவர் அந்தப் பிரகிருதி மாயைக்கு மேலாய் நித்தியமாய் அப்பிராகிருதலோகமான வைகுண்டத்திலே எப்பொழுது மிருந்து நினைத்தற்கரிய எண்ணிறந்த கலியாணமான குணங்களைப் பொருந்தி: புசித்து ஒழியாப் பரபோகம் தனக்கு ஒக்க அங்ஙன் பொருந்தினர்கட்கு அளித்து நிற்பன் புனித நித்த உருவோன் - புசித்துத் தொலையாத மேலான போதத்தை இலக்குமி வெதிரித்தமாய்த் தமக்குச் சமமாக அந்த வைகுண்டத்தை அடைந்திருக்கிற ஆன்மாக்களுக்குச் சுத்தமான நித்திய ரூபத்தையுடைய மகாவிஷ்ணு கொடுத்து நிற்பர் எ - று. (உ௱க)

202. அந்தமா யோன்றனக்கே யடிமை யாகி
 யைந்துசா தனங்களணிந் தன்பி னோடே
இந்தமா நிலந்தன்னி லியற்றுமன வாக்கா
 லிருவினையு மீசருடைப் பணியென்றே யிசையச்
சிந்தமா வினையனைத்தும் பிரகிருதி நீங்கத்
 தேசுருவாம் வைகுண்டஞ் செறிந்துதிரு மால்போல்
அந்தமிலா நித்தவுருப் பெற்றிருக்கை முத்தி
 யாகுமென வேபாஞ்ச ராத்திரிதா னறைவான்.

இ - ள்: அந்த மாயோன் தனக்கே அடிமையாகி ஐந்து சாதனங்கள் அணிந்து அன்பினோடு - வைகுண்டத்திலே அடைந்த ஆன்மாக்களுக்குப் பரபோகத்தைக் கொடுத்து நின்ற அந்த மகாவிஷ்ணுவுக்கே தாசனாகி ௐ நாராயணாய நமஃ என்னுஞ் செபம் பண்ணுதல், விஷ்ணு நாமத்தைத் தரித்தல், திருநாமத்தைத் தரித்தல், துளசிமாலையைத் தரித்தல், முத்திராதானம் பண்ணுதல் என்னும் ஐந்து சாதனங்களையும் பத்தியுடனே தரித்து; இந்த மாநிலம் தன்னில் இயற்றும் மனம் வாக்கால் இருவினையும் ஈசருடைப் பணி என்றே இசைய - இந்தப் பூலோகத்தின்கண் மனவாக்குக் காயங்களாற் செய்யும் புண்ணிய பாபானுகுணமாகச் சுகதுக்கானுபவம் பண்ணுங் காலத்திற் பணியறக் கர்த்தாவாகிய மகாவிஷ்ணுவினுடைய ஆக்கினையென்று திடம்பொருந்தி நிற்க; சிந்த மா வினை அனைத்தும் பிரகிருதி நீங்கத் தேசு உருவாம் வைகுண்டம் செறிந்து திருமால்போல் -

பெரிதாகிய கன்மங்களெல்லாம் கெடப் பந்தமாகிய பிரகிருதியும் நீங்கப் பிரகாச ஸ்வரூபமாய் நின்ற வைகுண்ட லோகத்தைப் பொருந்தி ஸ்ரீமத்தாகிய மகாவிஷ்ணுவைப்போல; அந்தமில்லா நித்த உருப்பெற்றிருக்கை முத்தி ஆகும் எனப் பாஞ்சராத்திரி தான் அறைவன் - முடிவில்லாத நித்தியமான உருவத்தைப் பெற்றிருக்கிறது மோட்சமாகுமென்று பாஞ்சராத்திர சமயியானவன் சொல்லுவான் எ - று. (உ௱உ)

அ - கை : மேல் சாங்கியனுடைய பெத்த முத்தி இலக்கணங்களைக் கூறுகின்றது.

203. சாங்கியன்றான் கூறியிடும் புருட னான்மாத்
தான்கத்தா வலன்புசிப்போன் றானு மல்லன்
ஓங்கியிடும் பிரகிருதி புருடன்சன் னிதியி
லுறுவதுவாம் விகாரங்க ளோர்பதினா றாகத்
தேங்கியிடுஞ் சுகதுக்க போகங்க ளவையே
சேர்வதுவாம் விவேகித்துத் தெளிந்துபிர கிருதி
நீங்கியிடல் முத்திநிலை யெனநிகழ்த்தி மேலே
நின்றிடுவன் புருடதத் துவந்தன்னி னேரே.

இ - ள் : சாங்கியன் தான் கூறியிடும் புருடன் ஆன்மா தான் கத்தா அலன் புசிப்போன் தானும் அல்லன் - சாங்கியன் சொல்லும்படி, புருடன் என்ற ஆன்மாவானவன் கருமங்களைச் செய்யக் கருத்தாவுமல்லன், அந்தக் கன்மபலத்தைப் புசிப்பவனுமல்லன்; ஓங்கியிடும் பிரகிருதி புருடன் சன்னிதியில் உறுவதுவாம் விகாரங்கள் ஓர் பதினாறாக - ஆன்ம சன்னிதானத்திலே பிரகிருதி விகிருதியாக வளரும், பின்னும் விகாரங்கள் பதினாறாகப் பொருந்துவதாம்; தேங்கியிடும் சுகதுக்க போகங்கள் அவையே சேர்வனவாம் - சுகதுக்க போகமாகவுண்டாகும்; (இப்படி ஆன்மசன்னிதானத்திலே பொருந்துமென்று) விவேகித்துத் தெளிந்து பிரகிருதி நீங்கியிடல் முத்திநிலை என நிகழ்த்தி - விசாரித்து இதற்கும் நமக்கும் சம்பந்தமில்லை என்றறிந்து பிரகிருதி விகாரங்களை நீங்கி நிற்பதே மோட்சத்தானமென்று சொல்லி நின்று; மேலே நின்றிடுவன் புருடதத்துவம்தன்னில் நேரே - தேகாந்தத்திலே புருஷதத்துவ புவனத்திற் செவ்வையாகநிற்பன் எ - று. (உ௱௩)

அ - கை : மேல் மாயாவாதி சொல்லும் பெத்த முத்தி இலக்கணங்களை இரண்டு விருத்தங்களாற் கூறுகின்றது.

204. வாக்குமன மிறந்தபரப் பிரமந் தானே
மன்னியிடு மாயையின்ற னுபாதி யாலே
ஆக்கியிடும் விசுவன்றே சுருவன் ஞானி
யாகுமொரு மூன்றவத்தை யவைமூன்றில் விசுவன்

ஊக்கமுறு மாயாகா ரியத்தி னாலே
யுலகுடல்கள் கரணங்க ளுயிர்க ளாவான்
நீக்கமிலாத் தைசசனு மீச னாகி
நீடுலகை யாக்கியளித் தழிப்ப னின்றே.

இ-ள்: வாக்கு மனம் இறந்த பரப்பிரமம் தானே மன்னியிடும் மாயையின் தன் உபாதியாலே - வாக்கு மனத்துக்கெட்டாததாய் உபாதிரகிதமாய் மேலாயிருக்கிற பரப்பிரமம் தானே பொருந்திய மாயையினுடைய உபாதியினாலே; ஆக்கியிடும் விசுவன் தேசுருவன் ஞானியாகும் ஒரு மூன்று அவத்தை - விசுவனென்றும் தேசுருவனென்றும் ஞானியென்றும் மூன்று அவத்தையாக உண்டாகும்; அவை மூன்றில் விசுவன் ஊக்கமுறு மாயா காரியத்தினாலே உலகு உடல்கள் கரணங்கள் உயிர்கள் ஆவான் - அந்த மூன்றுக்குள் விசுவனானவன் பலம் பொருந்தின மாயையினுடைய காரியத்தினாலே உலகங்களாகவும், தேகங்களாகவும், கரணங்களாகவும், உயிர்களாகவும் நிற்பன்; நீக்கம் இல்லாத் தைசசனும் ஈசன் ஆகி நீடு உலகை ஆக்கி அளித்து அழிப்பன் நின்று - வியாபகமாய் நின்ற தேசுருபனும் ஜகத் கர்த்தாவாக நின்று விரிவாகிய பிரபஞ்சத்தை உண்டாக்கி இரட்சித்துச் சங்கரிப்பன் எ - று. (உ௱௪)

205. கண்டிடுமிவ் வுலகாதி யனைத்தும் பொய்யே
காண்பவனா னென்றிடுத றானும் பொய்யே
உண்டுயிர்தான் பிரமமன்றி வேறே யென்றே
யுரைப்பதுவும் பொய்யெனவே யுணர்ந்து மாயை
விண்டுவிடக் கருத்துளனாய் விவேகஞ் செய்ய
விமலமாம் பரப்பிரம மாமிதுவே மிகுத்த
திண்டிறல்சேர் முத்தியென மாயா வாதி
செப்பிமேற் புருடனிலே சேர்வ னின்றே.

இ-ள்: கண்டிடும் இவ் உலகு ஆதி அனைத்தும் பொய்யே காண்பவன் நான் என்றிடுதல் தானும் பொய்யே - காணப்பட்ட இந்த உலகம் முதலான பிரபஞ்சங்களெல்லாம் அசத்தியம், நான் கண்டேன் நான் கேட்டேன் நான் செய்தேன் நான் புசித்தேன் என்று சொல்லுகிறவனும் அசத்தியம்; உண்டு உயிர்தான் பிரமம் அன்றி வேறே என்று உரைப்பதுவும் பொய் என உணர்ந்து - பிரமம் அல்லாமல் வேறே ஆன்மா உண்டென்று சொல்லுகிறதும் அசத்தியம் என்றறிந்து; மாயை விண்டுவிடக் கருத்து உளனாய் விவேகஞ்செய்ய விமலமாம் பரப்பிரமம் ஆம் - மாயாவுபாதியை விட்டு நீங்க வேண்டுமென்னும் புத்தியுடையனாய் நித்தியாநித்திய விசாரம்பண்ண வாக்கு மனோதீதமாய் நின்மலமான பரப்பிரமமாம்; இதுவே மிகுத்த திண் திறல் சேர் முத்தி என மாயாவாதி செப்பி மேல் புருடனிலே சேர்வன் நின்று - இப்படிப் பரப்பிரமமாகிறதே மிகுந்த பலத்தையுடைய வெற்றி பொருந்தின

மோட்சமென்று மாயாவாதி சொல்லிநின்று தேகாந்தத்திலே புருஷதத்துவ புவனத்தை அடைவன் எ - று. (உ௱௫)

அ - கை : மேல் வாம தக்ஷிண மார்க்கத்தரானவர்கள் வேதோக்த ஆசாரம் நடவாமல் பிசாசபதத்தை அடைவர்கள் என்பது கூறுகின்றது.

206. ஓதல்செயுஞ் சிவனுக்கே யடிமை யென்றே
யுருத்திரசா தனந்தரித்து முண்மை யான
வேதநெறி வழுவுதலா லுமியினுளே யரிசி
மேவுதல்போல் வாமதெக் கணமார்க்க மேவி
ஏதமிலாத் தவம்புரியா தேயியன்ரு ரெல்லா
மீறில்பர மானந்த சிவத்துடனே யென்றும்
பேதமிலா முத்திபெரு ருருத்திரர்தங் கணமாம்
பிசாசபதத் தடைவரெனப் பேசு நூலே.

இ - ள் : ஓதல் செய்யும் சிவனுக்கே அடிமை என்றே உருத்திர சாதனம் தரித்தும் உண்மையான வேதநெறி வழுவுதலால் - ஆகம அத்தியயனம் பண்ணியும், சிவனுக்கே அடிமை என்று சொல்லியும், சிவசாதனமான பஸ்மருத்திராக்ஷங்களைத் தரித்தும் யதார்த்தமான வேதமார்க்காசாரம் நடவாதபடியால், உமியினுள்ளே அரிசி மேவுதல்போல் வாமதெக்கண மார்க்கம் மேவி - கலவுமியில் ஓரவிழ்காணும் நியாயம்போல ஒரு புண்ணிய விசேஷத்தினலே வாமதக்ஷிண மார்க்கமான சமயத்தைப் பொருந்தி; ஏதம் இல்லாத் தவம் புரியாதே இயன்ருர் எல்லாம் ஈறு இல் பரமானந்த சிவத்துடனே என்றும் பேதம் இல்லா முத்தி பெருர் - குற்றமில்லாததாயிருக்கிற வேதோக்தமான தவசுகளைப்பண்ணுமல் அந்த மதசாஸ்திர அனுஷ்டானம் பண்ணினவர்களெல்லாம் நாசமில்லாத பரமானந்த ஸ்வரூபமாய் நின்ற சிவனுடன் எப்பொழுதும் நீங்காமலிருக்கிற அத்வைத மோட்சத்தை அடையார் (பின்னை அவர்கள் அடையும் பதம் ஏதென்னில்) உருத்திரர் தம் கணமாம் பிசாசபதத்து அடைவர் எனப் பேசும் நூல் - உருத்திரர் கணப் பைசாசலோகத்தை அடைவார்கள் எ - று. (உ௱௬)

அ - கை : மேல் சமாவேசவாதி, சமுற்பத்திவாதி, சங்கிராந்திவாதி, அபிவியத்திவாதி, சிவாத்துவைதி இவ்வைந்து மதவாதிகள் சொல்லும் முத்திகளும் பரமுத்தி அல்லவென்பது கூறுகின்றது.

207. சைவநெறி தன்னையடைந்து சிவாகமங்க ளோதித்
தானுணர்ந்து முத்தியினைச் சாற்றும் பேதம்
ஐவகையாஞ் சிவகுணங்க ளான்மாவி னிடத்தே
யாவேசித் திடலுதித்தல் பூருவந்தா னுக

மெய்வகையே சங்கிரமித் திடுதலபி வியத்தி
விமலசிவ முயிராகி மேவி நின்றே
உய்வகையா ஞானத்தால் மீளவுமச் சிவமா
யுறுமென்ற லிவைபரம முத்தியல வுணரே.

இ - ள்: சைவ நெறிதனை அடைந்து சிவாகமங்கள் ஓதித் தான் உணர்ந்து முத்தியினைச் சாற்றும் பேதம் ஐவகையாம் - சைவ மார்க்கத்தை அடைந்து சிவாகமங்களை அத்தியயனம்பண்ணி அந்த அர்த்தங்களை அறிந்து ஐந்து பேதமாகச் சொல்லும் மோட்சமாவன; சிவகுணங்கள் ஆன்மாவினிடத்து ஆவேசித்திடல் - சிவனுடைய சர்வஞ்ஞத்துவாதி குணங்கள் ஆன்மாவினிடத்திலே கிரகத்தினுடைய குணம் ஆன்மாவிலே ஆவேசித்து ஆன்மாவினுடைய குணங்காணுமல் நின்றதுபோலப் பிரகாசித்து ஆன்மாவினுடைய குணங்காணுமல் நிற்குமென்று காபாலிகர் சொல்லும் ஆவேசமுத்தியும்; உதித்தல் - ஆன்மாவுக்கு மோட்சகாலத்திலே சிவசாமியம் உண்டு, அந்தச் சாமியம் சர்வ விஷயங்களையும் அறியும் ஞான முதலான ஸ்வரூபம், அது மோட்சகாலத்திலே உதிக்குமென்று மகா விரதியர்கள் சொல்லும் முத்தியும்; பூருவம் தானுக மெய்வகையே சங்கரமித்திடுதல் - கத்தூரி முதலான கந்தவஸ்துக்களிலிருக்கும் கந்தமானது வஸ்திர முதலானவற்றிலே ஏறுகிறதுபோல அனுதியான சிவனுடைய சர்வஞ்ஞத்துவாதிகள் சத்தியஞான ஸ்வரூபியான ஆன்மாவிடத்தில் ஏறுமென்று பாசுபதர்கள் சொல்லும் முத்தியும்; அபிவியத்தி - சிவனைப்போல ஆன்மாவுக்கும் சர்வஞ்ஞத்துவாதி குணங்களுண்டு, அவை சம்சார தசையில் லோகோபாதியினுலே பிரகாசிக்கவில்லை, முத்தி தசையிலே மறைப்பு நீங்குகையால் பிரகாசிக்குமென்று சைவைகதேசிகள் சொல்லும் அபிவியத்தி முத்தியும்; விமல சிவம் உயிராகி மேவி நின்றே உய்வகையாம் ஞானத்தால் மீளவும் அச்சிவமாய் உறும் என்றல் - நின்மலமாய் நின்ற சிவம் நாநா சீவனுமாகப் பொருந்தி நின்று விவேகஞானத்தால் திரும்பவும் அந்த நின்மல சிவமாகவே பொருந்தி நிற்குமென்று சிவாத்துவைதி சொல்லும் முத்தியும்; இவை பரமமுத்தி அல்ல உணர் - இப்படிச் சொல்லும் முத்திகள் பரமமுத்திகளல்லவென்றறி எ - று.

அ - கை: உபசங்காரமாக வைதிக சைவ சித்தாந்தாத்துவைத முத்தி இலக்கணம் கூறுகின்றது.

208. அறைந்தனமுன் னேசைவ சித்தாந்த முத்தி
யான்மாவின் சிற்சத்தி யனுதியா ணவத்தால்
மறைந்ததுதான் பருவத்தே சிவனருளி னுலே
மாசற்று நின்றநிலை யேசிவத்தை மன்னி
உறைந்துவே றறவுப்பு நீருடனே நன்னீ
ருற்றதுபோ லோருணர்வா யுவமை யின்றி
நிறைந்துபர மானந்த மெய்தியுது தானு
நிகழாம லதுதானுய் நிற்றலென நேரே.

இ - ள் : அறைந்தனம் முன்னே சைவசித்தாந்தமுத்தி ஆன்மாவின் சிற்சத்தி அநாதி ஆணவத்தால் - இதற்கு முன்னும் சைவசித்தாந்த முத்தி சொன்னோம், இன்னமும் ஆன்மசிற்சத்தியானது அநாதியே ஆணவமலத்தினாலே; மறைந்து அதுதான் பருவத்தே சிவன் அருளினாலே மாசற்று நின்ற நிலையே சிவத்தை மன்னி - தடைப்பட்டு நின்று அந்த ஆன்மசிற்சத்தி இருவினையொப்பும் மலபரிபாகமும் வந்த காலத்தில் சிவஞானத்தினாலே மலத்தடை நீங்கி நின்றபடியே சிவத்தைப்பொருந்தி; உறைந்து வேறு அற உப்புநீருடனே நல்நீர் உற்றதுபோல் ஓர் உணர்வாய் உவமை இன்றி நிறைந்து பரமானந்தம் எய்தி அது தானும் நிகழாமல் அதுதானாய் நிற்றல் என நேர் - ஓர் அறிவாய் உவமை சொல்லப்போகாததாய்ப் பரிபூரண பரமானந்தத்தைப் பொருந்தி அந்தப் பரமானந்தானுபவமும் காணாமல் அந்தச் சிவமாகவேநிற்பது செவ்விதான வைதிகசைவ சித்தாந்தாத்துவைத முத்தி என்றவாறு. (உ௱அ)

209. செறிவரிய ஞானநிட்டை யெய்தி னோர்கள்
சீவன்முத்த ராய்ச்சரிக்குஞ் சிவமே யாவர்
அறிவரிதா மவர்செயலைப் பிராரத்த பேத
மனேகமுள வாதலினா லவ்வுடல்வா தனையால்
பிறிவரிதாய்ச் சிற்றின்ப மனைத்தினையும் பெற்றும்
பெரிதாய விச்சைவெறுப் பினராயும் பின்னும்
நெறியான வறமறந்து மறமே செய்தும்
நீங்கியிடார் சிவன்றனையெந் நேரமுமந் நிலையே.

இ - ள் : செறிவரிய ஞானநிட்டை எய்தினோர்கள் சீவன்முத்தராய்ச் சரிக்கும் சிவமே ஆவர் - வாச்சிய வாசக ஞானத்தாற் பொருந்துதற்கரிதாயிருக்கிற ஞானானந்தானுபவமான நிஷ்டையைப் பொருந்தினவர்கள் பிராரத்த சரீரத்திற் சீவிக்கும் முத்தராய் நிற்கையால் சஞ்சாரம் பண்ணுஞ் சிவமென்று சொல்லப்பெறுவர்; அறிவு அரிதாம் அவர் செயலை - ஆகையால் அவரிடத்து நிகழுங் கிருத்தியங்களை அறிகிறது அரிது; பிராரத்த பேதம் அனேகம் உள ஆதலினால் அவ்வுடல் வாதனையால் - தீவிரம், வேகம் மந்தம், சுபுத்தம் என்னும் பிராரத்த கன்மபேதத்தால், அநேக போக முண்டாம் என்கையால் அந்தச் சீவன் முத்தருடைய சரீரத்தில் வாதனையாக நின்று தீவிரம் வேகமென்னும் பிராரத்தகன்மபெலத்தால்; பிறிவு அறிதாய்ச் சிற்றின்பம் அனைத்தினையும் பெற்றும் பெரிதாய இச்சை வெறுப்பினராயும் பின்னும் நெறியான அறம் மறந்து மறமே செய்தும் நீங்கியிடார் சிவன்தனை எந்நேரமும் அந்நிலை - நீங்குதற்கரிதாகிய விஷய சுகங்களெல்லாவற்றையும் பொருந்தி நின்றாலும், பெரிதாகிய விடய இச்சையிலே வைராக்கியம் உண்டாகி நின்றாலும், இதல்லாமல் செய்யும் கிரமமான தன்மத்தை விட்டு அதன்ம மார்க்கத்தைச் செய்தாலும் சர்வகாலமும் சிவனை நீங்காமல் அந்த அநன்னிய சாட்சாத்காரமாகவே இருப்பார்கள் எ - று. (உ௱கூ)

210. ஆதலினு லவர்செயல்கள் சிவன்செயலே யாகு
மவர்க்ககித மிதம்புரிந்தோர்க் காகுமவர் வினைகள்
வேதமுத லாகமங்கள் சிவன்மொழியா லந்த
விதிப்படியே செய்வமென விருப்புவெறுப் பின்றி
ஓதலுறும் வன்னத்தோ டாச்சிரமச் செயல்க
ளொழியாம லியற்றியே யுயர்தவஞ்செய் தோர்க்கும்
தீதெனவே முன்மொழிந்த சிற்றின்ப மாதி
செறிந்தோர்க்கும் பரமுத்தி தேகம்விடும் போதே.

இ - ள்: ஆதலினால் அவர் செயல்கள் சிவன் செயலே ஆகும் அவர்க்கு அகிதம் இதம் புரிந்தோர்க்கு ஆகும் அவர் வினைகள் - ஆகையால் அந்தச் சீவன்முத்தர் பண்ணும் புண்ணிய பாப கன்மங்கள் சிவனுடைய கிருத்தியமேயாம், அந்தச் சீவன்முத்தர்க்கு இதாகிதம் பண்ணினவர்களுக்கு அந்தச் சீவன்முத்தர் பண்ணின புண்ணிய பாப கன்ம பலன்கள் இதம் பண்ணினவரிடத்தில் புண்ணிய பலமும் அகிதம் பண்ணினவர்கள் இடத்தில் பாபபலமும் பொருந்தும்; வேதம் முதல் ஆகமங்கள் சிவன் மொழியால் அந்த விதிப்படியே செய்வம் என விருப்பு வெறுப்பு இன்றி - வேதசிவாகம சாத்திரபுராண இதிகாசங்கள் சிவனுடைய வாக்கியமாகையால் அந்தச் சாத்திரங்களிற் சொன்ன விதிப்படியே செய்வோமென்று விரும்புதலும் செய்யலாகாதென்று வெறுப்பு மில்லாமல்; ஓதல் உறும் வன்னத்தோடு ஆச்சிரமச் செயல்கள் ஒழியாமல் இயற்றியே உயர்தவம் செய்தோர்க்கும் - வன்னாச்சிரமானு குணமாகச் சாத்திரங்களில் சொல்லப்பட்ட கன்மங்களை விடாமற்செய்து உயர்ந்ததவத்தைப் பண்ணினவர்களுக்கும்; தீது எனவே முன்மொழிந்த சிற்றின்பம் ஆதி செறிந்தோர்க்கும் பரமுத்தி தேகம் விடும் போதே - முன் சனன மரண துக்க ஏதுவாகச் சொல்லப்பட்ட சிற்றின்ப முதலான விஷய சுகங்களைப் பொருந்தினோர்களுக்கும் தேகாந்தத்திலே பரமுத்தி எ - று. (உகம)

அ - கை: மேல் மோட்சோபாய மூன்றுக்குள் ஞானநெறி கூறுகிறது.

211. *முத்திதனக் குபாயங்க ளநேகமுள வவற்றின்
முதலாகு மூன்றவைகள் மொழியுங் காலை
பத்தியுடன் பிரபத்தி ஞான மென்று
பகருமிவற் றுள்ஞானப் பான்மை சொல்லில்
தத்துவரூ பங்கள்தன் தரிசனங்கள் சுத்தி
சாரும்வினை மாயைமல தத்துவங்க ளுடனே

* இவ்விருத்தம் ஓரடி மிகுந்து ஐந்தடிகளை யுடையதாய் வந்திருத்தல் கவனிக்கத் தக்கது.

இத்தகைய பாசத்தை யுடைய வான்மா
விலக்கணங்கள் தரிசனங்கள் சுத்தி யென்றும்
நித்தனுருத் தரிசனம்பின் யோக போக
நிலையென்றுந் தசவிதமா நிகழ்த்து நூலே.

இ - ள் : முத்தி தனக்கு உபாயங்கள் அநேகம் உள அவற்றின் முதலாகும் மூன்று அவைகள் மொழியுங்கால - மோட்சத்துக்கு உபாயம் அநேகவிதமுண்டு, அவற்றுள்ளே பிரதானமாக மூன்றுண்டு, அவைகளைச் சொல்லுமிடத்தில்; பத்தியுடன் பிரபத்தி ஞானம் என்று பகரும் இவற்றுள் ஞானப்பான்மை சொல்லில் - பத்தியென்றும் பிரபத்தியென்றும் ஞானமென்றும் சொல்லும் இவைகளில் ஞானஸ்வரூபத்தைச் சொல்லில்; தத்துவரூபங்கள் அதன் தரிசனங்கள் சுத்தி சாரும் வினை மாயை மலதத்துவங்களுடனே - முப்பத்தாறு தத்துவங்களுடைய ஸ்வரூபங்களும் அவைகளுடைய தரிசனங்களும் அவைகளுடைய சுத்திகளும் பொருந்தியிருக்கும் கன்ம மாயை மலதத்துவங்களுடன்; இத்தகைய பாசத்தை உடைய ஆன்மா இலக்கணங்கள் தரிசனங்கள் சுத்தி என்றும் - இந்த முறைமையான பாசத்தையுடைய ஆன்மாவினுடைய ரூபமும் தரிசனமும் சுத்தியுமென்றும்; நித்தன் உருதரிசனம் பின் யோக போகநிலையென்றும் தசவிதமா நிகழ்த்தும் நூல் - நித்தியனாய் நின்ற சிவனுடைய ஸ்வரூபமும் சிவதரிசனமும் பின்பு சிவயோகமும் சிவபோகநிலைமையும் என்றும் பத்துவிதமாகச் சிவாகமஞ் சொல்லும் எ - று.

இவ்விடத்திலே சொன்ன தசகாரியங்களைத் தசகாரியக்கட்டளையிற் கண்டுகொள்க. (உகக)

அ - கை : மேல் பிரபத்திநெறி இரண்டு விருத்தங்களாற் கூறுகின்றது.

212. இந்தவகை குருவருளா லுணர்ந்துசிவ போக
மெய்தியிட லரிதாமே லெவ்விடத்துஞ் சிவன்றான்
அந்தமற நின்றமையு மவனிடத்தே யனைத்து
மமைந்தமையு மவனருளை யன்றி யொன்றைச்
சிந்தைசெயா வென்பதையு முணர்ந்துசெயுஞ் செயறான்
சிவனேவ லெனச்செய்துஞ் சேர்பொறிக ளாலே
வந்தவிட யங்களெலாஞ் சிவனுக் காக்கி [மறைந்தே.
மருவுமிரு வினையெமக்கென் னெனச்சிவன்பால்

இ - ள் : இந்த வகை குரு அருளால் உணர்ந்து சிவபோகம் எய்தியிடல் அரிதாமேல் - இந்த ஞானமார்க்கமாகிய பத்துவகையும் ஞானசாரியர்

அனுக்கிரகத்தினுல் அறிந்து சிவபோகம் பொருந்துதல் அரிதாமாகில்; எவ்விடத்தும் சிவன்தான் அந்தம் அற நின்றமையும் அவனிடத்தே அனைத்தும் அமைந்தமையும் - சகலப் பிரபஞ்சத்திலும் சிவனுனவர் முடிவில்லாமற் பரிபூரணமாகி நின்றதையும் அந்தச் சிவனிடத்திலே சகலப் பிரபஞ்சமும் தேயமாய் நின்றதையும்; அவன் அருளை அன்றி ஒன்றைச் சிந்தை செயா என்பதையும் உணர்ந்து - அந்தச் சிவனுடைய பிரேரகமின்றி ஒரு விஷயத்தையும் அறியப்படாதென்பதையும் அறிந்து; செய்யும் செயல்தான் சிவன் ஏவல் எனச் செய்தும் - நாம் செய்யும் கிருத்திய மெல்லாம் சிவனுடைய பிரேரகமென்று செய்தும்; சேர் பொறிகளாலே வந்தவிடயங்கள் எல்லாம் சிவனுக்கு ஆக்கி மருவும் இருவினை எமக்கு என் எனச்சிவன்பால் - மறைந்து பொருந்தியிருக்கும் இந்திரியங்களினுலே வரும் விஷயங்களெல்லாவற்றையும் சிவனிடமாகப் பண்ணி அந்தவிஷயங்களினுலே பொருந்தும் புண்ணிய பாப பலன்கள் நமக்கு என்னென்று சிவனிடத்தில் தான் செயலற நின்று என்றவாறு. (உகஉ)

213. அஞ்செழுத்திற் பதிபசுபா சங்க ளுண்மை
யறிந்தவற்றுட் பாசத்தைக் கீழ தாக
விஞ்சுசிவ முன்னுகத் தந்தமாச் சிரம
விதிப்படியே யங்ககர நியாசஞ் செய்தே
துஞ்சிடுதல் கரணங்க ளுடனே சற்றுந்
தோய்ந்திடுத லறவருளே துணையாக் கொண்டே
எஞ்சலிலா வஞ்செழுத்தை மனத்தி னுலே
யெண்ணியிடல் பிரபத்தி யினிப்பத்தி யிசைப்பாம்.

இ - ள்: அஞ்செழுத்தில் பதி பசு பாசங்கள் உண்மை அறிந்து அவற்றுள் பாசத்தைக் கீழதாக - பஞ்சாட்சரத்திற் பதி பசு பாசங்கள் நிற்கும் ஸ்வபாவத்தைக் கண்டு அந்தப் பஞ்சாட்சரத்துக்குள் பாசத்தைச் சொல்கின்றதாகிய நகார மகாரங்களைக் கீழதாக; விஞ்சு சிவம் முன்னுக-சிகாரத்திற் சிவமும், வகாரத்திற் சிவசத்தியும், யகாரத்தில் ஆன்மாவுமாகச் சொல்லும் அக்கரங்களை முன்னுக; எஞ்சல் இல்லா அஞ்செழுத்தைத் தம் தம் ஆச்சிரம விதிப்படியே அங்க கர நியாசம் செய்தே - குறைவில்லாத பஞ்சாட்சரத்தை அவனவன் நிற்கும் ஆசிரமானுகுணமாகச் சாத்திரஞ் சொன்னபடியே

𑌓𑌂 𑌹𑍌𑌂 𑌯𑌂 𑌈𑌶𑌾𑌨𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍇 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑍈𑌂 𑌵𑌂 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷
𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑍂𑌂 𑌶𑌿𑌂 𑌅𑌘𑍋𑌰𑌹𑍃𑌦𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑌿𑌂 𑌮𑌂
𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑌂 𑌨𑌂 𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃, 𑌓𑌂
𑌹𑍍𑌰𑌾𑌂 𑌹𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑍍𑌰𑍀𑌂 𑌨𑌂 𑌶𑌿𑌰𑌸𑍇 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾, 𑌓𑌂 𑌹𑍍𑌰𑍂𑌂

ஓம் ஶிவாயை வஷட், ஓம் ஹௌம் ஶிம் கவசாய ஹும், ஓம் ஹ்ரௌம் வம் நேத்ரத்ரயாய வௌஷட், ஓம் ஹ: யம் அஸ்த்ராய ஃபட்

என்னும் சடாயுத்த சங்கிதையால் அங்கநியாச கரநியாசம் செய்து: துஞ்சிடுதல் கரணங்களுடனே சற்றும் தோய்ந்திடுதல் அற அருளே துணையாக் கொண்டே மனத்தினாலே எண்ணியிடல் பிரபத்தி இனிபத்தி இசைப்பாம் - விஷயங்களிற் செல்லும் இந்திரிய அந்தக் கரணங்களுடனே சற்றாகிலும் பொருந்துதல் இல்லாமல் மார்ச்சால சிசுவைப்போலத் தத்தம் செயலறச் சிவாதீனமாகநின்று மானசமாக வாச்சியார்த்தத் தியானத்துடன் செபிப்பது பிரபத்தி, மேல் பக்திமார்க்கஞ் சொல்லுவாம் எ - று. (உகங)

அ - கை: மேல் பக்தி அந்தரங்கபக்தி பாஹ்யபக்தி என இரண்டு விதமாம். இவற்றுள் அந்தரங்க பக்தி வரும் முறைமை கூறுகின்றது.

214. இருவகைத்தாம் பத்தியாந் தரங்க மென்று
மியற்றியிடும் புறம்பென்று மிவற்றிலந்த ரங்கம்
வருமுறைதா னிதயகம லத்துறையுஞ் சிவத்தை
மாசில்பளிங் கொளியுருவா மிலிங்கமாய் மதித்தே
குருபதமா மலர்மதிமண் டலத்தமுதி னாலே
குறைவிலபி டேகஞ்செய் துபசார மனைத்தும்
ஒருமைதிகழ் மனத்துடனே புரிந்துசதி பதிபோ
லுடன்பிரியா திருக்கையென்றே யுரைத்திடுமா கமமே.

இ - ள்: இருவகைத்தாம் பத்தி அந்தரங்கமென்றும் இயற்றியிடும் புறம்பு என்றும் - பத்தியானது அந்தரங்கபத்தியென்றும் பாஹ்யபத்தி என்றும் இரண்டுவிதப்படும் என்று ஆகமங்கள் சொல்லும்; இவற்றில் அந்தரங்கம் வரும் முறைதான் இதயகமலத்து உறையும் சிவத்தை மாசு இல் பளிங்கு ஒளி உருவாம் இலிங்கமாய் மதித்து - இந்த இரண்டில் அந்தரங்க பத்தி பண்ணும் கிரமமானது மூலாதாரத்திலே கூர்மத்துக்கு நடுவே ஆதார சத்தி, கூர்மத்தின் மேலே அனந்தனுக்குப் பதுமாசனம், அதன் மேலே அனந்தன், நாபிமட்டாக அனந்தனுடைய சிரத்திலே பிருதிவிதத்துவம் தாமரைக் கிழங்கு, அப்புதத்துவம் முதலாகக் காரியமாயாதத்துவ மளவும் முப்பது தத்துவம் எட்டங்குல நாளம், பஞ்சாசத் பாவம் தாமரைத் தண்டின் நூல்கள், நாளத்தின் முள்ளுகள் நூற்றுத் தொண்ணூற்றொரு புவனங்கள், தண்டுக்கும் இதழுக்கும் நடுவிசைதலை அதோமாயை, அதன்மேற் சுத்த வித்தியாதத்துவம், எட்டு இதழ் இந்திராதி திக்குப்பாலருடைய பீஜமான யகாராதி ஹகாராந்தம் எட்டும், வாயு அக்கினி இந்திரன் வருணன் யமன் குபேரன் நிருதி ஈசானன் என்னும் எண்மரும் திக்குத்தளங்களில் கிரமத்தி

லுடையதாய் அனந்தாதி மகேச்சுரர் வசிப்பதான ஈசுவரதத்துவம் கேசரங்கள், சதாசிவர் வசிக்குஞ் சாதாக்கிய தத்துவம் கர்ணிகை, சூரிய மண்டலம் சோம மண்டலம், அக்கினி மண்டலங்கள் தளாக்கிரத்திலும் கேசராக்கிரத்திலும் கர்ணிகாக்கிரத்திலும் கிரமத்திலுடையதாய் அவைகளுக்கு அதிபதிகள் அடைவே பிரமா விஷ்ணு ருத்திரர்கள் இவ்வாறுள்ள இதயகமலத்தின்மேல் களங்கமில்லாத படிகப்பிரகாச ஸ்வரூபமாகிய லிங்கமாகப் பாவித்து அதில் கன்மசாதாக்கியரைத் தியானித்து அவர் இதயத்தில் நிருவிகற்ப ஞானனந்த ஸ்வரூபியான சிவத்தைப் பாவியாநின்று;

குருபதமாமலர் மதிமண்டலத்து அமுதினலே குறைவில் அபிஷேகம் செய்து உபசாரம் அனைத்தும் ஒருமைதிகழ் மனத்துடனே புரிந்து - சடாதாரத்துக்கு மேல்குருத்தானமாகிய ஆயிரமிதழாய் நின்ற பதுமத்திலிருக்கிற சோமமண்டலத்து அமுதத்தினலே ஏகாக்கிர சித்தமான மனத்துடனே சாஸ்திரோக்தப்பிரகாரம் தப்பாமல் அபிஷேகம்பண்ணி நைவேத்திய முதலான உபசாரங்களைச் செய்து; சதிபதிபோல் உடன் பிரியாது இருக்கை என்றே உரைத்திடும் ஆகமம் - பதிவிரதையான ஸ்திரீயினுடைய மனம் புருஷனைவிட்டுப் பிரியாமல் நின்றதுபோல அந்தச் சிவத்தினுடன் பிரியாமலிருக்கையென்று சிவாகமம் சொல்லும் எ - று. (உகசு)

**அ - கை :** மேல் பாஹ்யபக்தி கூறுகின்றது.

215. ஈதுமரி தேற்சிவனை யிலிங்கத்தி னிடத்து
மெழிற்குரவர் தமதிடத்துஞ் சிவபத்த ரிடத்தும்
கோதறவே கண்டுபணிந் தேத்திப் பூசை
குறைவறவே செய்தெந்த நாளும்வழி படவே
தீதறவே சிவஞானம் விளங்கியிடு நன்ருய்ச்
சிற்றறிவெ லாநீங்கிச் சிவானுபவ முளதென்
றோதியிடுஞ் சிவாகமங்க ளாதலினு லுயிர்கட்
குறுதிசிவ பத்தியன்னே யுணர்ந்து கொள்ளே.

**இ - ள் :** ஈதும் அரிதேல் சிவனை இலிங்கத்தினிடத்தும் எழிற் குரவர் தமதிடத்தும் சிவபத்தரிடத்தும் - இந்த அந்தரங்க பக்திமார்க்கமும் அரிதாயின் சிவனை இலிங்கத்தினிடத்தும் உயர்ச்சி பொருந்திய குருவினிடத்தும் சிவபக்தரிடத்திலும்; கோது அறவே கண்டு பணிந்து ஏத்திப் பூசை குறைவு அற செய்து எந்தநாளும் வழிபடவே - குற்றமில்லாமல் தரிசித்து நமஸ்கரித்துத் துதித்துக் குறைவில்லாமல் பூசைபண்ணி எப்பொழுதும் வழிபட்டு நிற்கவே; தீது அறவே சிவஞானம் விளங்கியிடும் நன்ருய்ச் சிற்றறிவெலாம் நீங்கிச் சிவானுபவம் உளதென்று ஓதியிடும் சிவாகமங்கள் - தீதான ஆணவாதி பாசங்கள் நீங்கப் பரிபூரணமான சிவஞானம் பிரகாசிக்குமாகையால் கிஞ்சிஞ்ஞதை நீங்கிச் சர்வஞ்ஞத்துவாதி குணங்களெல்லாம்

விளங்கச் சிவாநன்னிய சாட்சாத்காரம் விளங்குமென்று சிவாகமங்கள் சொல்லும்: ஆதலினுல் உயிர்கட்கு உறுதி சிவபத்தி அன்னே உணர்ந்து கொள் - ஆகையால் ஆன்மாக்களுக்குச் சிவபத்தியே உண்மையென்று தாயே நீ அறிந்துகொள் எ - று. (உகரு)

தந்தை சிவக்கொழுந்தைத் தாள்பணிந்தே தான்றனுசை
எந்தை சிவநெறியிங் கேதென்னச் — சிந்தையால்
தேர்ந்து சிவாகமத்தைச் சேர்த்தா யிரமதனை
ஓர்ந்திடச்சொன் ஞன்றமிழா லும்.

ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் அருளிச்செய்த சிவநெறிப்பிரகாசம் மூலமும்,
இதற்கு நந்தி சிவாக்கிரயோகீந்திர சிவாசாரியர்செய்த வியாக்கியானமும்

சம்பூர்ணம்

சுபமஸ்து

ஸ்ரீ சிவாக்கிரகுரவே நம :

# பாட்டு முதற்குறிப்பு அகராதி

(எண் செய்யுள் எண்)


அகரமுத 79
அகரவுக 190
அசித்தாதல் 201
அஞ்சுமுகத் 91
அஞ்செழுத்திற் 213
அஞ்ஞான 52
அந்தணரே 167
அந்தமா 202
அருந்தியிடப் 61
அருளதனா 6
அலைகடனீ 64
அவத்தைகே 39
அறியாமை 50
அறிவரிதாய்ச் 29
அறிவிக்குந் 147
அறிவிச்சை 143
அறிவிலதாய்ச் 55
அறிவுதொழி 62
அறுதொழிலா 199
அறைந்தவிந்த 54
அறைந்தனமுன் 208
அன்னியமா 35
அனாதியாய் 185
அனாதியே 58
அனுமானந் 28
அனைத்துயிர்க்கு 159
ஆகத்தி 154
ஆகமுட 196
ஆங்கார 116
ஆங்கார 197
ஆதரவுஞ் 177
ஆதலினா 45
ஆதலினா 210
இந்தவகை 83
இந்தவகை 212
இந்தவருட் 97
இந்திரியம் 129
இப்படி 150
இப்படியே 155
இம்மையிலே 60
இரதமுரு 118
இருண்மலமு 186
இருபொருட்குச் 25
இருவகைத்தாம் 214
இருவினைகட் 36
இருவினைசேர் 57
இருள்வடிவாய் 51
இருளொழித்திட் 89
இவ்வாறிங் 135
இறந்துபிறந் 71
இன்னமுங்கே 66
இனிச்சகல 40
ஈசர்சத்தி 100
ஈசருல 93
ஈசனார் 144
ஈசனையு 43
ஈசானி 86
ஈதுமரி 215
உடம்பினி 141
உத்தமமா 8
உத்தேசம் 19
உதித்தருள்சேர் 153
உருவம்வே 198
உருவாதி 33
உருவுளதாம் 85
உரைசெய்த 81
உலகனைத்து 73
உன்னரிய 192
உன்னியிடு 179
எண்ணரிதா 126
எண்ணியிடு 171
எண்ணியோர் 152
எண்ணிலுயி 99
எண்ணெயுடன் 102
எண்போதி 69
எப்பொருட்கு 17
என்புதோ 140
எவ்வுயிர்க்கு 138
ஏகமா 46
ஏதமிலாச் 165
ஏதுக்கா 47
ஏற்றியிடு 80
ஐயமறப் 9
ஐயமுடன் 20
ஓதல்செயுஞ் 206
ஓதலுறுந் 183
கடபடங்கள் 32
கண்டிடுமிவ் 205
கரநான்குங் 5
கருதியிடும் 119
கருமசா 94
கரையிறந்த 127
கலையாதி 23
களமதனி 95
காமமுத 173
காயாதிக் 137
காயமே 142
காலந்தான் 101
காலம்போல் 34
குரவரிரு 169
குருசரண 11
குறைவிலா 26

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கூறிடுமிக் | 175 | தத்துவங்க | 181 | மண்ணதுநாற் | 120 |
| கூறிடுமிப் | 21 | தத்துவங்கள் | 123 | மண்ணுதி | 41 |
| கொல்லாமை | 172 | தந்தைதாய் | 10 | மண்ணுதி | 44 |
| சடமாக | 68 | தரிப்பரிய | 189 | மண்முதல் | 131 |
| சத்தருடைச் | 76 | தருமநெறி | 108 | மந்தமாஞ் | 160 |
| சத்திதா | 156 | தருமமிரு | 106 | மந்தமாய் | 157 |
| சத்தியஞா | 2 | தருமமுடன் | 14 | மந்திரங்கள் | 59 |
| சத்தியின்றன் | 74 | தவஞ்செபங்க | 188 | மந்திரங்கள் | 163 |
| சத்தியோ | 162 | தன்மைமுன் | 70 | மந்திரமும் | 178 |
| சத்திநிபா | 158 | தன்னியல்பும் | 18 | மந்திரமே | 31 |
| சன்னியாசத் | 42 | திடுக்கிடவோ | 149 | மருவியிடு | 182 |
| சாக்கிரகா | 191 | துருவாச | 7 | மருவுசா | 87 |
| சாங்கியன்ருன் | 203 | தேசிகரு | 176 | மனமதனிற் | 125 |
| சாத்திகத்தா | 105 | தேசிகனு | 184 | மாயையுட | 16 |
| சாம்பவமா | 164 | தொழில்செய்யு | 112 | மானதனி | 104 |
| சாற்றிய | 136 | நவமணி | 132 | மிக்கதோர் | 98 |
| சாற்றியிட | 115 | நாதமுதற் | 130 | முக்குணங்க | 107 |
| சாற்றியிடுஞ் | 67 | நாதாதி | 134 | முத்திதனக் | 211 |
| சாற்றியிடுஞ் | 168 | நிருவாண | 166 | முந்தமனம் | 110 |
| சாற்றியிடுந் | 48 | நிருவிடமும் | 65 | முப்பொருளுஞ் | 174 |
| சித்தசித்தீச் | 200 | நினைத்தபடி | 72 | முன்னையருந் | 12 |
| சிவன்சத்தி | 82 | பக்குவான் | 75 | முன்னைவினைக் | 139 |
| சிற்றறிவே | 53 | பசுக்களுக்குப் | 37 | மேவியிடும் | 180 |
| சீராருஞ் | 1 | பஞ்சசத்தி | 84 | மோகமற்றிவ் | 30 |
| சுத்தவித்தை | 128 | பரபொருளுக் | 15 | வன்னமோர் | 151 |
| சூக்குமமே | 78 | பரையாதி | 3 | வன்னியுட | 124 |
| செய்திடுநற் | 187 | பாவமே | 49 | வனத்துறைவன் | 170 |
| செறிவரிய | 209 | பிரகிருதி | 103 | வாக்குமன | 204 |
| சேர்த்திடவே | 96 | புந்திதனி | 109 | வானதுதா | 114 |
| சேர்ந்திடிற்றீ | 88 | புறக்கருவி | 24 | வானருவாய் | 117 |
| சைவநெறி | 207 | பெற்றிடிற்றீ | 161 | விஞ்ஞான | 90 |
| சைவரல்லாச் | 194 | பொருந்திடுவன் | 195 | விடயமிதற் | 13 |
| சொல்லியிடு | 27 | பொருந்தியிடும் | 113 | விந்துவதோ | 77 |
| ஞானமுட | 38 | பொறியைந்தால் | 22 | விந்துவென் | 56 |
| ஞானமுடன் | 193 | பொறியைந்தும் | 111 | விழித்தினிது | 148 |
| ஞானமே | 92 | போற்றியிடுஞ் | 122 | வினையனைத்துந் | 145 |
| தத்துவ | 133 | போற்றியிடும் | 63 | வேதசிவா | 4 |
| தத்துவங்க | 146 | மண்ணதுதான் | 121 | | |

# சைவபரிபாஷை அகராதி

( எண் செய்யுள் எண் )


அ

அசற்பிரதிபக்கத்துவம் 26
அசாதாரணதத்துவம் 130
அசாதரணானைகாந்திகன் 28
அசித்தன் ,,
அசுத்ததத்துவம் 135
அசுத்தமாயை 57
அஞ்ஞானம் 28
அத்துவா ஆறு 178
அத்துவசோதனை 160
அத்துவாவகை 3
அதிகம் 28
அதிகரணஞ்ஞாஞசித்தன் ,,
அதிகாரி 13
அந்தக்கரணம் 23
அநத்தியவசிதன் 28
அநநுபாஷாணம் ,,
அப்பிரதிபை ,,
அப்பிராப்தகாலம் ,,
அபசித்தாந்தம் ,,
அபாதிதவிஷயத்துவம் 26
அபார்த்தகம் 28
அபிவியத்திவாதி 207
அபின்ன நிமித்தோபாதான காரணத்துவம் 95
அருத்தாந்தரம் 28
அருத்தாபத்திபாதிதன் ,,
அருத்தானுமானம் 22
அருபத்திருமேனி 92
அவிஞ்ஞாதார்த்தம் 28
அன்னியதராசித்தன் ,,
அன்னுவயதிட்டாந்தம் ,,
அன்னுவயவெதிரேகி 26
அனுதிசையோகசம்பந்தம் 67
அன்னுவயானுமானவகை 28
அனுமானப்பிரமாணம் 26
அனுமானபாதிதன் 28
அனைகாந்திகன் ,,

ஆ

ஆகமப்பிரமாணம் 26
ஆகமபாதிதன் 28
ஆசிரயாசித்தன் ,,
ஆசீவகன் 199
ஆரைவம் 46
ஆதிசத்தி 71
ஆரணியாதி மூன்றுசத்தி 86
ஆன்ம அவத்தை மூன்று 39
ஆன்மதத்துவம் 135

இ

இச்சாசத்தி 71
இந்திரியப்பிரத்தியட்சம் 23
இந்திரியான்மவாதி 195
இராகதத்துவம் 101
இருவகையநுமானம் 23
இருவகையிலக்கணம் 17
இருவித அதர்மம் 106
இருவிததர்மம் ,,
இருவினையொப்பு 145
இலக்கணம் 18

ஈ

ஈசானியாதி ஐந்துசத்தி 84

உ

உத்தியுத்தர் 74

உத்திவிபரீதம் 28
உத்தேசம் 18
உபதேசகலை 23
உபயாவைகலியம் 28
உபயாசித்தன் ,,
உபஷ்டம்பம் 108
உபாசனகாண்டம் 23
உபாதானத்திரயங்கள் 3, 32
உவமானுனுமானம் 26

எ

எட்டுவகை அணிசுவரியம் 106
எண்வகைச்செல்வம் ,,

ஏ

ஏத்துவஞ்ஞானசித்தன் 28
ஏத்துவந்தரம் ,,
ஏத்துவாபாசன் ,,
ஏழுகுணங்கள் 129

ஐ

ஐந்து [இந்திரியக்] கிரியைகள் 112
ஐந்து [கரும] இந்திரியம் ,,
ஐந்து ஞானேந்திரியம் ,,
ஐயம் 25
ஐவகை அஞ்ஞானம் 106
ஐவகை ஞானம் ,,
ஐவகைப்பாசம் 46

ஔ

ஔத்திரி தீட்சை 170
ஔபாதிகவியாப்பியத்து
வாசித்தன் 28

க

கர்த்திருத்துவம் 34
கருமகாண்டம் 22
கலாதத்துவம் 101
கன்மசாதாக்கியர் 94
கன்மம் 58

கா

காபாலிகர் 207
காமிகாதி இருபத்தெட்டாகமம் 91
கார்மணம் 61
காரணுத்காரியாநுமானம் 26
காரியாத்காரணுனுமானம் ,,
காலதத்துவம் 101
காலாத்தியயாபதிட்டன் 28

கி

கிரியாசத்தி 72
கிரியாவதிதீட்சை 164
கிரியை 153
கிருகத்தாசாரியர் 169

கு

குணதத்துவம் 104
குரு 108

கே

கேவலசாக்கிரம் 146
கேவலசுவப்பனம் 147
கேவலசுழுத்தி ,,
கேவலதுரியம் 148
கேவலதுரியாதீதம் ,,
கேவலாவத்தை 143, 146
கேவலான்னுவயி 26
கேவலவெதிரேகி ,,

ச

சகலசாக்கிரம் 149
சகலசுழுத்தி ,,
சகலசொப்பனம் ,,
சகலதுரியம் ,,
சகலதுரியாதீதம் ,,

சகலர் 39
சகலாவத்தை 144
சங்கிராந்தவாதி 207
சத்தர் 74
சத்தானுமானம் 22
சத்தித்திரயங்கள் 3
சத்தி நிபாதம் 145, 155
சத்தியோ நிருவாணதீட்சை 162
சதாசிவர் பஞ்சகிருத்தியம் 87
சபக்கம் 26
சபக்கேசத்துவம் ,,
சம்பந்தம் 14
சமவாயசம்பந்தம் 67
சமாவேசவாதி 207
சமுற்பத்திவாதி ,,
சரியை 152
சலனம் 108

சா

சாங்கியன் 203
சாங்குசித்தர் 12
சாத்தியசாதனவிபரியயம் 28
சாத்தியவிபரீதவியாப்தன் ,,
சாத்தியவைகலியம் ,,
சாதகாசாரியன் 165
சாதன்மியதிட்டாந்தம் 28
சாதனவைகலியம் ,,
சாதனவிபரீதவியாப்தன் ,,
சாதாரணதத்துவம் 130
சாதாரணனைகாந்திகன் 28
சாந்திகலைக்குத்தத்துவாதி ஆறு 180
சாந்தியதீதகலைக்குத்
தத்துவாதி ஆறு ,,
சாம்பவதீட்சை 163
சாருவாகன் 195

சி

சிவதர்மிணிதீட்சை 166
சிவன் அவத்தைமூன்று 55
சிவன்பஞ்சசத்தி 71
சிவன்ஷட்குணங்கள் 88
சிவாத்துவைதி 207
சிற்சத்தி 20
சிற்பிரத்தியட்சம்:
விஞ்ஞானப்பிரத்தியட்சம் 24
சிவஞானப்பிரத்தியட்சம் ,,

சு

சுத்ததத்துவம் 133
சுத்தாசுத்ததத்துவம் 134
சுத்தமாயை 55
சுத்தாவத்தை 145
சுவார்த்தானுமானம் 27

சூ

சூக்குமபஞ்சகிருத்தியம் 75

சை

சையுத்தசமவாயசம்பந்தம் 67
சையோகசம்பந்தம் ,,
சைவசித்தாந்தமுத்தி 208
சைவைகதேசிகள் 207

சொ

சொரூபவைகலியம் 28
சொரூபாசித்தன் ,,

ஞா

ஞானகாண்டம் 22
ஞானசத்தி 71
ஞானநெறி 211
ஞானவதிதீட்சை 164
ஞானுசாரியன் 165

த

தசகாரியம் 211
தடத்தவிலக்கணம் 28

தந்திரகலை 22
தருமியனுமானம் 26
தன்மாத்திரைகள் ஐந்து 112

தா

தாத்துவிகபேதம் 131
தாதான்மியசம்பந்தம் 67

தி

திட்டாந்தவிபரியயோத்தி 28
திட்டாந்தாபாசவகை ,,
திரிவு 25
திரோதாயி 46
திரோதானசத்தி 71

தீ

தீவிரசத்தி 157
தீவிரசத்திநிபாதம் 156
தீவிரதரசத்தி 157
தீவிரதரசத்திநிபாதம் 156

தூ

தூலவுடல் 139

தே

தேகம் மூன்றுவிதம் 119

தை

தைசதவகங்காரம் 110

ந்

ந்யூனம் 28, 88

நா

நால்வகைச்சத்திநிபாதம் 156
நால்வகைப்பிராரத்தகன்மம் 209
நாலு ஆச்சிரமம் 151
நாலுவருணம் 7. 151
நாலுவாக்குகள் 55, 78
நாற்கரணங்கள் 129

நி

நிக்கிரகத்தானம் 28
நிகண்டவாதி 199
நித்தியகேவலம் 148
நியதிதத்துவம் 101
நியாயவாதி 196
நிர்ப்பீசதீட்சை 166
நிரநுயோச்சியாநுயோகம் 28
நிரர்த்தகம் ,,
நிவிர்த்திகலைக்குத்
தத்துவாதி ஆறு 179
நின்மலசாக்கிரம் 191
நின்மலசுழுத்தி ,,
நின்மலசொப்பனம் ,,
நின்மலதுரியம் 192
நின்மலதுரியாதீதம் 193

ப

பக்கதன்மத்துவம் 26
பக்கம் ,,
பஞ்சகஞ்சுகம் 102
பஞ்சகலைகள் 55
பஞ்சகிருத்தியம் 31, 68
பஞ்சகோசம் 138
பஞ்சசாதாக்கியம் 3
பஞ்சாசத்பாவம் 104, 106
பஞ்சபூதங்கள் 117
பஞ்சமலம் 62
பஞ்சீகரணம் 119
பத்திநெறி 214
பத்துவித அவைராக்கியம் 106
பத்துவிதஞானம் ,,
பத்துவிதவைராக்கியம் ,,
பதமுத்திகள் 97

பதியின் சொரூபவிலக்கணம் 29
பதியின் தடத்தவிலக்கணம் 30
பதினுறுசத்திகள் 77
பராசத்தி 71
பரார்த்தானுமானப்
பஞ்சாவயவம் :
பிரதக்கிஞை 27
ஏது ,,
உதாரணம் ,,
உபநயம் ,,
நிகமனம் ,,
பரார்த்தானுமானம் ,,
பரிக்கிரகசத்தி 55
பரிணுமசரீரம் 119
பரியநுயோச்சியோபேக்ஷணம் 28
பரீக்ஷை 19
பரையாதி பஞ்சசத்திகள் 71

பா

பாகாசித்தன் 28
பாகியேந்திரியப்பிரத்தியட்சம் 24
பாசுபதர் 207
பாஞ்சராத்திரி 200
பாதிதவிஷயன் 28
பாரிசேடப்பிரமாணம் 44
பாவாஷ்டகம் 105

பி

பிரகாசம் 108
பிரத்தியட்சபாதிதன் 28
பிரதிஞ்ஞாசன்னியாசம் ,,
பிரதிஞ்ஞாந்தரம் ,,
பிரதிஞ்ஞாவிரோதம் ,,
பிரதிஞ்ஞாஹானி ,,
பிரதிட்டாகலைக்குத்
தத்துவாதி ஆறு 179
பிரபத்திநெறி 212
பிரமாணபேதம் 20, 21
பிரமாணம் 19
பிரவாகாஞதி 61
பிரயோசனம் 13
பிரவிருத்தர் 74
பிரளயாகலர் 41
பிராகிருதர் 12
பிரேரககாண்டம் 136

பு

புத்தன் 198
புத்திதத்துவம் 104
புரியட்டகதேகம் 112
புருடதத்துவம் 102
புனருத்தி:
சத்தபுனருத்தி 28
அர்த்தபுனருத்தி ,,

பூ

பூதசாரதேகம் 119
பூததேகம் 119
பூதாதியகங்காரம் 112

போ

போகசயித்திருகாண்டம் 136
போகபோக்கியகாண்டம் ,,
போதகாசாரியன் 165

ம

மகாவிரதியர் 207
மகேசுவரர் இருபத்தைந்து
பேதம் 94
மதாநுஞ்ஞை 28
மந்தசத்தி 157
மந்த சத்திநிபாதம் 156
மந்ததர சத்தி 157
மந்ததர சத்திநிபாதம் 156
மந்திரகலை 22
மலபரிபாகம் 72, 145

மா

மாயாவாதி 205
மான் 100

மானததீக்கை 167
மானதப்பிரத்தியட்சம் 23

மு

முக்கியாத்துவிதம் (பாயிரம்)
முக்குணங்கள் 103
முதன்மையாசாரியர் நால்வர் 7

மூ

மூவகைக்கன்மம் 145
மூவகைப்பிரத்தியட்சம் 22
மூவகைப்பிரமாணம் 17
மூன்று கர்த்தாக்கள் 74

யோ

யோகம் 154

ரூ

ரூபத்திருமேனி 92
ரூபாரூபத்திருமேனி ,,

ல

லகுதை 108

லோ

லோகதர்மிணிதீட்சை 166

வ

வரணகம் 108

வா

வாமதக்ஷிணமார்க்கத்தர் 206
வாமாதிநவசத்தி 86

வி

விசேஷஞ்ஞசித்தன் 28
விசேஷியாசித்தன் ,,
விஞ்ஞானகேவலர் 42
விடயம் 13
வித்தியாகலைக்குத்
தத்துவாதி ஆறு 180
வித்தியாதத்துவம் 101
விபக்கம் 26
விபக்காத்வியாவிருத்தி ,,
விபரீதச்சொல் 28
வியாத்திவிபரியயம் ,,
வியாப்பியத்துவாசித்தன் ,,
விரத்தாசாரியர் 168
விருத்தன் 28
விக்ஷேபம் ,,

வெ

வெதிரேக அனுமானவகை ,,
வெதிரேகதிட்டாந்தம் ,,

வை

வைகரியகங்காரம் 112
வைசேடிகவாதி 196
வைதன்மியதிட்டாந்தம் 28
வைனகர் 12

ஸ்

ஸ்வரூப இலக்கணம் 28

# சைவபரிபாஷைச் சொற்பொருளகராதி

அகண்டாகாரம் - கண்டிக்கப்படாத வடிவம்.
அகத்தொண்டர் - உட்பணி செய்வோர்.
அகவிருள் - அஞ்ஞானம்
அங்கித்தம்பனை - அக்கினியின் சூட்டைத்தடுத்தல்.
அசிந்தன் - சிந்திக்கப்படாதவன்.
அசிபதம் - ஆருய் என்னும் பொருளுடையபதம்.
அணுபரிமாணம் - அணுவளவு; பாஞ்சராத்திரிகள் ஆன்மா உடம்பிலே அணுவளவாய்நிற்கும் என்பர்.
அணைந்தோர்தன்மை - சீவன்முத்தர் இயல்பு.
அதிகாரதத்துவம் - சுத்தவித்தை ஈசுரம் என்பன.
அதிகாராவத்தை - பிரபஞ்சத்தைப் படைக்கும்நிலை.
அதிசூக்குமம் - மிக்கநுண்மை.
அதிட்டிக்கப்படுதல் - நிலைக்களமாகக்கொண்டு செலுத்தப்படல்.
அதிதீவிரம் - மிக்கதீவிரம்.
அதிதெய்வம் - மேலானதெய்வம்
அதிபரிபக்குவம் - மிகுந்தபரிபக்குவம்.
அதீதாவத்தை - துரியாதீதநிலை.
அதுவதுவாய் நின்றறிதல் - சார்ந்த தன்வண்ணமாய் நின்றறிதல்.
அதோமாயை - கீழேயுள்ள மாமாயை.
அத்தாணி மண்டபம் - அரசிருக்கை மண்டபம்.
அத்தியாசவாதம் - இப்பியை வெள்ளி என்பதுபோல ஒன்றை மற்றென்ருகக் கூறும் விபரீதவாதம்.
அத்துவசுத்தி - ஆறத்துவாக்களினும் கட்டுப்பட்டிருக்கும் போகங்கள் எல்லாவற்றையும் ஏககாலத்திலே புசிப்பித்துத்தொலைத்து முத்தி கொடுத்தல்.
அத்துவிதநிலை - ஏகமாயநிலை.
அநந்நியபாவனை - அத்துவிதபாவனை.
அநந்நியம் - வேருகாமை.
அநாதி சித்தன் - அநாதியேயுள்ளவன்.
அநாதிநித்தம் - அநாதியாயிருக்கும் நித்தியம்.
அநாதிபந்தம் - அநாதியாயுள்ள பாசக்கட்டு.
அநாதி முத்தத்தன்மை - அநாதியே மலத்தினீங்கிய தன்மை.
அநித்தியானந்தம் - அழிவுள்ள ஆனந்தம்; அது சிற்றின்பம்.
அநிர்வசனம் - சொல்லொணுதது.
அநுமானவளவை - அநுமானப் பிரமாணம்.
அநுமித்தறிதல் - கருதியறிதல்.
அநேகாந்தவாதி - அநேகமுடிபைச் சொல்லுபவன்.
அநேகேச்சுரவாதி - பலகடவுளர் உண்டு என்போன்.
அந்தக்கரணம் - உட்கருவி : அவை மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன.
அந்தப்புரம் - அரசன்தேவியர் உறைவிடம்.
அந்தரியாகம் - உட்பூசை.
அந்தரியாமி - உள்ளே நின்று நடத்துவோன்
அந்நியசாதி - வேற்றுச்சாதி
அபரசாதி - குறையுடையவைகளிலே தோன்றுவது.
அபரமுத்தி - பரமுத்தியல்லாதது அது பதமுத்தி.
அபிமுகமாத்திரை - சந்நிதிமாத்திரை.
அபுத்தி பூர்வம் - அறியப்படாதது.
அயிக்கியவாதம் - நீரும் நீரும் சேர்ந்தாற்போல ஆன்மாவும் சிவமும் முத்தியில் அயிக்கியமாகும்வாதம்.
அருஞ்சுரம் - செல்லுதற்கரியபாலை நிலம்.
அருண்மயம் - கருணைவடிவம்.

அருவப்பிரபஞ்சம்-சேதனப் பிரபஞ்சம்.

அவயவப்பகுப்பு - உறுப்பு உறுப்பாய்ப் பிரிக்கப்படுதல்.

அவாந்தரகாரணம் - இடைப்பட்ட காரணம்.

அவாய்நிலை - ஒருசொல் தனக்கு எச் சொல்லின்றி வாக்கியப்பொருள் உணர்ச்சி கூடாதோ அச்சொல்லை அவாவி நிற்றல்.

அவிச்சைக்காலம் - அஞ்ஞானத்தை யுடைய காலம்.

அவிப்பாகம் - தேவருணவின் பங்கு.

அவிநாபாவம் - நீக்கமின்றி யிருப்பது: (அ - இன்மை, விநா - நீக்கம், பாவம் - இருத்தல்.) பிரிவிலதாய் உடனிகழ் வதாம்.

அவ்வளவில் அவன் மகிழ்தல் - ஒரு நியாயம் பெற்றதைக்கொண்டு பெரிதும் மகிழ்தல்.

அழிதன்மாலைய - அழியுந் தன்மையை யுடையன.

அளவிலாற்றல் - அளவிடப்படாத வலிமை.

அளவை நூல் - தருக்கசாத்திரம்.

அறிவற்றம் - அறிவின்சோர்வு.

அறிவுத்திரிவு - உணர்வு வேறுபடுதல்.

அனந்த தேவர் - அட்டவித்தியே சுரருள்ளே தலைவர், அசுத்தமாயா காரியங்களைச் செய்பவர். அழிவில் லாததேவர் என்பது பதப்பொருளாம் என்பர்.

ஆகமவளவை - ஆகமப்பிரமாணம்.

ஆகர்மியவினை - பிராரத்தம் புசிக்கும் போது வந்துகூடும் வினை.

ஆக்கச்சொல் - செயற்கையை உணர்த் தும் சொல், ஆதலை உணர்த்தும் சொல்.

ஆசான்மூர்த்தி - குருமூர்த்தி.

ஆடூஉ வறிசொல் - ஆண்பாலை உணர்த்தும் சொல்.

ஆணவமலபரிபாகம் - ஆணவமலம் தனுகரண முதலிய மாயா மலத்தோடு சேர்ந்தாற்றான் பக்குவப்படும்; சிருட்டி செய்வது அதன்பொருட்டே.

ஆதிதைவிகம் - ஒரு வாயிலானன்றித் தெய்வந்தானே காரணமாக வருவது.

ஆதிபௌதிகம் - சடம்வாயிலாக வருவது:

ஆத்தியான்மிகம் - சடத்தோடு கூடிய சேதனம் வாயிலாக வருவது.

ஆயுள்வேதம் - எல்லாம் அநுட்டித் தற்குச் சாதனமான யாக்கையை நோயின்றி நிலைபெறச்செய்வது.

ஆலயவிஞ்ஞானம் - இலயபரியந்தம் நிற்கும் ஓர் விசேட உணர்ச்சி.

ஆவேசவாதி - காபாலசமயி, சிவன் ஆவேசித்தலால் சிவன் குணங்கள் முத்தான்மாவிடத்தில் தோன்றும் என்று சொல்லுபவன். ஆவேசித்தல்- வெளிப்படுதல்.

ஆறுகோடி மாயாசத்திகள் - ஆறுபேத மான மாயா சத்திகள்: அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன.

ஆன்மசுத்தி - ஆன்மா தன்னியல்பு கெட்டு ஞானமயமாய் நிற்றல்.

ஆன்மதரிசனம் - பசுகரணம் ஒன்றும் தோன்ருது சுட்டறிவும் நீங்கித் தன்னை உள்ளவாறு காண்டல்.

ஆன்மபோதம் - உயிருணர்வு.

ஆன்மப்பிரகாசம் - ஆன்மாவின் விளக்கம்.

ஆன்மலாபம் - ஆன்மாவாலடையப் படுதல்.

இடத்திரிவு - தானம் வேறுபடுதல்.

இடையீடு - இடைவிடல்.

இதஞ்செய்தல் - பற்றுச்செய்தல்.

இந்திரசாலம் - இல்லதை உள்ளது போலக்காட்டும் ஒருவித்தை.

இயற்றுமுதியோன் - செய்யுமுதியோன்

இயைபின்மை நீக்குதல் - சம்பந்த மின்மையை நீக்குதல்.

இரட்டுறக்காண்டல் - ஐயக்காட்சி.

இரட்டுறமொழிதல் - ஒரு வாக்கியத்தை இரண்டு பொருள்படச் சொல்லுவது.

இரணியகருப்பமதம் - பிரமாவையே பரம் என்று கூறும் மதம்.

இருதிறன் - இரண்டு கூறுபாடு.

இருவகை அஞ்சவத்தை - மேல் கீழ் என்னும் இருவகையான அஞ்சவத்தை.
இருவகையியல்பு - இருவகை இலக்கணம்.
இலயதத்துவம் - சிவதத்துவம் சத்தி தத்துவம் என்பன.
இலயாவத்தை - பிரபஞ்சத்தை ஒடுக்கும் நிலை.
இல்பொருள் - ஒருகாலத்துமில்லாத பொருள்.
இல்லாவரு - புலப்படாத அருவம்.
இன்றியமையாமை - இல்லாமல் முடியாமை.
உச்சரித்தன் மாத்திரை - உச்சரித்த வளவு.
உடம்பொடுபுணர்த்தல் - ஓர் உத்தி. அஃது ஒரு பொருளைச் சொல்லத் தொடங்கிய தொடரிலே பின்னும் ஒருபொருள் தோன்றச் சொல்லுதல்.
உடலூழ் - உடம்பினுகர்ச்சி.
உடல்வினை - பிராரத்தம்.
உடற்றிரிவு - சரீரம் வேறுபடுதல்.
உடனிகழ்ச்சி - கூடநிகழ்தல்.
உடைத்தாதல் செல்லாது - உடைத்தாகாது. செல்லல் ஒரு துணைவினை. செல்லாது நிகழாது எனினுமாம்.
உட்பேதம் : அகவேறுபாடு.
உரைகாணல் - விளங்க அறிதல்.
உண்மையாற் சுட்டப்படுதல் - உள் பொருளாகச் சுட்டப்படுதல்.
உபதேசமொழி - உபதேசவாக்கியம்.
உயர்திணை - உயர்வாகிய சாதி அஃறிணை - உயர்வல்லாதசாதி.
உயிரூழ் - உயிர் நுகர்ச்சி.
உய்த்துணர்தல் - ஒரு பொருளை ஆராய்ந்தறிதல், போதந்துணர்தல்; போதந்து - கொண்டுபோய்.
உருவப்பிரபஞ்சம் - அசேதனப் பிரபஞ்சம்.
உரையளவை - ஆகமப்பிரமாணம்.
உலகானந்தம் - சிற்றின்பம்.
உளதாகச் சுடடப்படுதல் - திரிவு ஐயங்களானன்றி மெய்யாகச் சுட்டப் படுதல்.
உள்பொருள் - உள்ளபொருள்.
உறைத்துநிற்றல் - அழுந்தி நிற்றல்.
உற்பத்திவாதி - மாவிரதசமயி: சிவனுடைய குணங்கள் முத்தான்மாவிடத்தில் தோன்றுமென்று சொல்லுபவன்.
உற்றுழி - ஆபத்துவந்தவிடத்து.
ஊர்த்துவமாயை - மேல்நோக்கிய மாயை.
ஊனக்கண் - பசு அறிவு.
எஞ்சாப்பொருண்மை - மிஞ்சாமையாகிய பொருள்; ஈண்டுமைவிகுதி தன்மைப் பொருளுணர்த்தாது நின்றது.
எண்ணியறிதல் - ஆராய்ந்தறிதல்.
எதிர்மறைமுகம் : எதிர்மறுத்தலாகிய வாயில். முகம் - வாயில்.
எரிசேர்ந்தவித்து - வறுத்த வித்து.
ஏகதேசப்பொருள் - ஒருபகுதியாகிய பொருள்.
ஏகதேச உணர்வு - சிற்றறிவு.
ஏகனாகி - ஒற்றுமைப்பட்டு.
ஏகான்மவாதம் - சீவான்மா என்றும் பரமான்மா என்றும் இரண்டில்லை; ஆன்மா ஒன்றே என்னும்வாதம்.
ஏவுமுதியோன் - தொழிற் படுத்தும் முதியோன்.
ஏற்புழிக்கோடல் - ஓர் உத்தி: அது இயையும் இடம் அறிந்து பொருள் கொள்ளல்.
ஐந்துகந்தம் - உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐந்தன் சமூகம். கந்தம் சமூகம் என்னும் பொருட்டு.
ஐவகைச்சுத்தி - தானசுத்தி, பூதசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தி என்பன.
ஒருசாரன - ஒருபகுதியான.
ஒருபுடை உவமை - கருத்தாவாதலாகிய பொதுத்தன்மை பற்றி உவமையாதலன்றிச் செய்யும்வகைபற்றி உவமையாகாமையின் ஒருபுடை உவமையாயிற்று; செய்யும் வகையாவன முதல்வன் சங்கற்பத்தாற் செய்தலும் குயவன் தண்டு சக்கரம் முதலிய கருவிகளாற் செய்தலுமாம்.

ஓரோவொன்று - ஒவ்வொன்று.
கட்புலன் - கண்ணறிவு.
கணபங்கம் - கணந்தோறும் தோன்றி யழிதல்.
கணபங்கவாதி - பிரபஞ்சம் கணந்தோறும் தோன்றியழியும் என்று சொல்லுபவன்.
கண்ணழித்துரைத்தல் - பதச்சேதஞ் செய்து உரைகூறுதல். கண் - கணு. அழித்தல் - சேதம் செய்தல்.
கருடதியானம் - கருடனைத் தன்னை நினைத்தல்.
கருணைமறம் - நிக்கிரகமாகிய கருணை.
கருமகாண்டம் - கிரியைகளைக் கூறும் பாகம்.
கருமபேதவியல் - கிரியைகளின் வேறுபாட்டைக் கூறுமியல்.
கருமமலம் பரிபாகமாதல் - கன்மம் தூலமாய் ஆகாமியம் எனப்பெயர்பெற்றுச் சங்காரகாலத்தில் மாயையிலே புத்தி தத்துவம் பற்றுக்கோடாகக் கிடந்து பின் பிராரத்தமாகப் பக்குவப்படும். சங்காரத்தாலேதான் பக்குவம் வரும்.
கலாதிகள் - கலை, காலம், வித்தை, இராகம், நியதி, புருடன் என்பன.
கல்லால் - ஆலமரவிசேடம் இங்குஞான மயமான விருட்சம் என்க.
கழிபேருவகை - மிகப்பெரிய மகிழ்ச்சி.
கழிப்பித்தகாரணம் - நீங்கிய ஏது. கழிப்பித்தல் தன்வினை, காட்டிய உள்ளம் என்றாற்போல.
கறங்கோலை - காற்றாடி.
கறைமிடறு - காளகண்டம்.
காட்சியளவை - பிரத்தியட்சப் பிரமாணம்.
காட்சிவாதி - உலோகாயதன்; பிரத்தியட்சமே பிரமாணமென்று சொல்லுபவன்.
காமியப்பயன் - விரும்பிய பேறு.
காரணக்குறி - காரணப்பெயர்.
காரணமாதற்பொதுமை - பிறவற்றால் வேறுபடினும் காரணமாதன் மாத்திரையாகிய பொதுமை.
காரணவவத்தை - காரியத்திற்கு முற்பட்டநிலை.
காரணவாக்கியம் - விண்டு முதலியோரை நிமித்தகாரணர் என்று சொல்லும் வசனம்.
காரியருபப் பிரபஞ்சம் - காரியப் பிரபஞ்சம்.
காரியாவத்தை - உண்டாக்கப்பட்ட நிலை.
காலவிசேடம் - விசேடகாலம்.
கிரியாசத்தி - தொழில்வடிவாகிய சத்தி.
கிரீடாப்பிரமவாதம்-கிரீடையையுடைய பிரமம் நான் என்று சொல்லுவது.
கிளந்தெடுத்துரைதநல் - விதந்து கூறுதல்.
கீழ்நாடல் - வியாப்பியமாகக்கருதல்.
குடாகாயம் - குடத்துள்வெளி.
குணதத்துவம் - முக்குணங்களும் வெளிப்பட்டிருக்கும் தத்துவம்.
குணிப்பொருள் - குணியாகியபொருள்.
குணி - குணமுடையது.
குணிருத்திரன் - குணதத்துவத்தில் வைகும் உருத்திரன்.
குண்டலித்தானம் - மூலாதாரம்.
குறிப்பேது - வெளிப்படலின்றிக் குறிப்பாக ஏதுப்பொருள்பட நிற்பது.
கேவலஞானம் - ஞானமாத்திரை.
கைமுதிக நியாயம் - 'பூனைக்கு இத்துணை அஞ்சுவானுயின் புலிக்கு அஞ்சுதல் எத்துணை என்பது சொல்ல வேண்டியதில்லை' என்பது போன்ற ஒரு நெறி. 'துன்னியார் குற்றமுந் தூற்றும் மரபினர் - என்னைகொல் ஏதிலார் மாட்டு' என்னும் திருக்குறளும் இதற்கு உதாரணமாகும். இது 'கிமுத' (எவ்வளவு) என்பதினின்று தத்திதம்பெற்றுக் கைமுதிகம் என்றாயிற்று என்பர். மேற்குறித்த குறளிலுள்ள என்னைகொல் என்பது 'கிமுத' என்பதற்குச் சமம் ஆகும்.
கோசரமாதல் - விடயமாதல்.
சகமார்க்கம் - தோழ உரிமைக்கு உரிய நெறி.
சகலநிலை - கலை முதலியவற்றோடு கூடிய நிலை.
சகளநிட்களம் - அருவுருவம்.
சங்கமவடிவு - சிவபத்தர் வடிவம்.

சங்கமவேடம் - அடியார் திருவேடம்.
சங்கிராந்தவாதி - பாசுபதசமயி.
சச்சிதானந்தம் - உண்மை அறிவு ஆனந்தம்.
சத்ததாது - உடற்கணுள்ள ஏழு தாதுக்கள்: அவை இரசம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்பன.
சத்தப்பிரமவாதம் - சத்தமே பிரமமென்று சொல்லுவது.
சத்தி சங்கற்பம் - சத்தியாய் இஃது இங்ஙனமாகுக என்று எண்ணுதல்
சத்தி மடங்கல் - வலிகுன்றல்.
சத்திவடிவு - வெளிப்படாத உரு.
சமயதீக்கை - சமயப் பிரவேசத்தைப் பயக்கும் தீக்கை.
சமயவாதிகள் - தத்தஞ்சமயங்களே மெய்ச்சமயம் என்று சொல்லுவோர்.
சமவியாபகம் - ஒத்தவியாபகம்.
சமுதாயவாதி - புறச்சமுதாயமும் அகச்சமுதாயமுமேசகம் என்று சொல்லுபவன். புறச்சமுதாயம்: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், என்பன. அகச்சமுதாயம்: உருவம் வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்பன.
சமுதாயம் - கூட்டம்.
சம்பந்தப்படுத்தல் - தொடர்புண்டாக்கல்.
சம்பந்தவிசேடம்-ஒருவகைச்சம்பந்தம்.
சரியை முதலிய மூன்று பாதப்பொருள்-சரியா பாதப்பொருள், கிரியாபாதப்பொருள், யோகபாதப்பொருள் என்பன. பாதம் - நான்கிலொன்று.
சரீரசரீரிபாவம்-சரீரமும் சரீரமுடையனுமாந்தன்மை.
சருவவியாபி-எங்கும் நிறைந்தவன்
சர்வேதர்ம - எல்லாக் குணங்களையும் உடையது. அஃதாவது சார்ந்ததன் தன்மையாய் நிற்றல்.
சலியாது நிலைபெறுதல்-அசையாது நிற்றல்.
சவிகற்பம்-விகற்பத்தோடு கூடியது: பெயர் சாதி முதலியவற்றோடு கூடியதாம்,

சாதாரம்-ஆதாரத்தோடு கூடியது.
சாதியொருமை - ஒருசொல் ஒருமையீறு தோன்றியாவது தோன்றுமலாவது நின்று பன்மைப்பொருளை உணர்த்துவதாம்.
சாமுசித்தராவார்-சாமானியமான இஷ்டா பூர்த்தாதி தருமங்களுக்குப் பரமான விசிஷ்ட சிவதருமம் ஆகிய சரியை கிரியா யோகமியற்றி அதனால் நின்மல அந்தக்கரணராய் அந்தத் தேகம் விட்டும் அந்த ஞானம் கெடாமல் மீளவும் ஜனிக்கும்போதும் அந்த ஞானத்துடனே ஜனித்து சிவபாவனை பண்ணுமவர்.
சாந்தரூபம் - பொறுமையாயிருக்கும் தன்மை.
சாலம்பயோகம் - ஆதாரத்தோடு கூடிய யோகம்.
சிங்கநோக்கு-முன்னும் பின்னும் பார்க்கும் சிங்கத்தின் பார்வை.
சித்தபுருடர்-சித்தியுடையராகியபுருடர்.
சித்தாந்த சைவர் - சித்தாந்தமாகிய சைவத்தை அனுசரிப்போர்.
சித்தாந்த மகாவாக்கியம்-சிவத்துவமசி.
சித்தாந்தமுடிவு-ஆகமத்தின் முடிந்த பொருள்.
சித்தின்பம்-ஞானானந்தம்.
சித்தாந்தநெறி-சித்தாந்த சைவநெறி.
சித்தாந்தம்-முடிந்த முடிபு.
சிந்தித்தல்-உண்மை ஞானம் நான்கனுள் ஒன்று. அது குருமுகமாகக் கேட்ட பொருளை மனனஞ் செய்து தோஷம் நீங்குமாறு.
சிவசங்கிராந்தவாதி-சிவன் தன் குணங்களை முத்தான்மாக்களிடத்துப் பற்றச் செய்வன் என்று சொல்லுபவன்.
சிவசத்து-சித்தாகிய உள்பொருள்.
சிவசமவாதி-முத்தியிலே சிவமும் ஆன்மாவும் சமம் என்று வாதிப்போன்.
சிவதரிசனம் - பரமசுகமாகிய பேரின்பத்தில்சேர்ந்து சிவத்தினையேகாண்டல்.
சிவபோகம் - பேரின்பமாய் வாழ்ந்திருத்தல்.
சிவப்பேறு - சிவமாந்தன்மையைப் பெறுதல்.

சிவமயம் - சிவமாந்தன்மை.

சிவரூபம் - முத்தொழில்களையுஞ்செய்து பக்குவம் வருவித்துக் குருவாய்நின்று அருள்பவனாகிய சிவனுடைய தன்மையைத் தன் அறிவிலே காண்டல்.

சிவஞானம் - பரஞானம்.

சிவன்தாள் - சிவனருள்.

சிவானந்தபோகம் - சிவானந்த அனுபவம்.

சிவானுபவம் - சிவானந்தத்தை அநுபவித்தல் -

சிவார்ப்பணம்-சிவனிடத்தொப்பித்தல்.

சிவோகம்பாவனை-சிவனே நான் என்று பாவித்தல்.

சிறப்படையாளம் - விசேடசின்னம்.

சிறப்புத்திருநாமம் - சிறப்புப்பெயர்.

சிறப்புப்பாயிரம் - இருவகைப் பாயிரத்துள் ஒன்று. அது ஒன்றற்கே உரியதாய் ஆக்கியோன் பெயர் முதலிய எட்டனையும் கூறுவது. காலம், களன், காரணம் என்னும் மூன்றையும் சேர்த்துப் பதினொன்றனையும் கூறுவது என்பாரும் உளர்.

சிறப்புவகையானறிவு நிகழ்தல் - சவிகற்பமாய் அறிவுண்டாதல்.

சிறுபான்மை - ஏகதேசம்.

சிறுமையுறுத்தல் - தாழ்மைப்படுத்தல்.

சிற்சத்தி - ஞானசத்தி.

சீகண்டருத்திரன் - பிரளயாகலருள்ளே பக்குவமுடையோனாய்ப் பாசநீங்கிச் சிவனுக்குரிய நாமாதிகளைப் பெற்றுச் சைவாகமங்களை அறிவுறுக்கும் குரவன். சீ-நஞ்சு, கண்டம் - கழுத்து.

சீவன்முத்தன் - சீவிக்கும்பொழுதே பாசத்தினின்றும் விடப்பட்டவன்.

சீவான்மா - தேகத்தை அபிமானிக்கும் உயிர்.

சீற்றமிக்கெரிதல் - சுவாலித்தெரிதல்.

சுகப்பிரபை - சுகத்தின் விளக்கம்.

சுகரூபம் - மகிழ்ச்சியாயிருக்கும்தன்மை.

சுட்டியறிதல் - ஏகதேசமாயறிதல். சுட்டி அறியப்படுவது; இது பொன் இது மண் என்றாற்போல ஆன்மபோதத்தால் ஒவ்வொன்றாகக் குறித்தறியப் படுவது.

சுட்டிறந்து நின்றறியப்படுதல் - அத்து விதமாய் நின்றறியப்படுதல்.

சுதந்திரவடிவம் - சுவாதீன சரீரம்.

சுத்தசத்தை - விசேடிக்கப்படாதசத்தை. சத்தை - உண்மைத் தன்மையாகிய சாதி.

சுத்த தத்துவபுவனம் - சுத்த தத்துவங்களிலிருக்கும் புவனங்கள். சுத்த தத்துவங்கள்: சிவதத்துவம் சத்திதத்துவம் சதாசிவதத்துவம் ஈசுரதத்துவம் சுத்த வித்தியாதத்துவம் என்பன.

சுத்தமாயை - சுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமான மாயை.

சுத்தமாய் நிற்றல் - விசேடிக்கப்படாது நிற்றல்.

சுத்தாத்துவா - சுத்த மாயையிற்றோன்றிய மந்திர முதலிய ஆறத்துவாக்கள்.

சுத்தாவத்தை - பாசம் நீங்கியநிலை.

சுபக்கம் - தன்பக்கம்.

சுயம்புமூர்த்தி - தானேதோன்றிய மூர்த்தத்தை யுடையோன். மூர்த்தம் - திருமேனி.

சுருக்குச் சுருவம் - நெய்த்துடுப்புக்கள்.

சூக்குமதேகம் - காரணதன்மாத்திரைகள் ஐந்தும் சித்தமொழிந்த அந்தக்கரணம் மூன்றுமாகிய எட்டினாலும் ஆக்கப்பட்டவுடம்பு.

சூக்கும பஞ்சாக்கரம் - பிரணவம்.

சூக்குமபூதம் - தன்மாத்திரை.

சூத்திரப்பாவை - கயிற்றிற் கட்டி ஆட்டப்படும்பாவை.

சூரியகாந்தம் - சூரியன் ஒளியில் தீயைக் கக்கும் கல்.

சூனியவாதி - எல்லாம் சூனியம் என்று சொல்லுபவன்.

சூழ்ச்சித்துணைவர் - ஆலோசனைக்குத் துணையாய் உள்ளவர்.

செம்பொருள்-வெளிப்படைப் பொருள்.

செவியறிவுறுத்தல் - உபதேசித்தல்.

செறிந்தறிதல் - அழுந்தி அறிதல்.

சேதனப்பிரபஞ்சம் - சித்துப்பிரபஞ்சம்; அஃது உயிர்வர்க்கம்.

சையுத்த சமவாயம் - சையோக சம்பந்தம் உடையதில் ஒற்றுமை யுடையது. சையோக சம்பந்தம்

உடையது குடம், அதில் ஒற்றுமை யுடையது குடவுருவம்.

சையுத்த சமவேத சமவாயம்-சையோக சம்பந்தமுடையதோடுகூடியதன்கண் ஒற்றுமையுடையது. சையோக சம்பந்தமுடையது குடம், அதனோடு கூடியது குடஉருவம். அதன்கண் ஒற்றுமையுடையது அதன் தன்மை.

சொப்பனத்தானம் - கண்டம்.

சொரூபலக்கணம் - சிறப்பிலக்கணம், அஃதாவது இயற்கையாய் உள்ள இலக்கணம். ஸ்வரூபம் சொரூபம் என்றாயிற்று இஃது உண்மை என வும் பெயர் பெறும்.

சொல்லினண்மை - சொற்கள் அடுத்து நிற்றல்.

சோபானமுறை - படிமுறை.

ஞானகாண்டம் - ஞானத்தைக்கூறும் பாகம்.

ஞானக்கண் - அருட்கண், திருவடி ஞானம்.

ஞானசக்தி - அறிவுவடிவாகிய சத்தி

ஞானதிரோதகம் - அறிவைமறைப்பது

ஞானபாவம் - ஞானத்தினின்மை.

தடத்தலக்கணம் - இலக்கணவகையுள் ஒன்று. அது பிறிதொரு பொருளின் சார்புபற்றி இலக்கியப் பொருளில் இருப்பது. தடத்தமாகிய இலக்கணம் எனவிரியும், தடத்தம்- அயலிடத்திருப் பது, இலக்கணம் - இயல்பு. இது பொதுவியல்பெனவும் பெயர்பெறும்.

தத்துவஞானம் - மெய்யுணர்வு.

தருமிவாசகம் - பண்பியாகியசொல்.

தற்பதம் - அது என்னும் பொருளை உணர்த்தும் பதம்.

தற்பரம் - ஆன்மாவுக்கு அதீதமாகிய சிவம்.

தற்பொருட்டுப் பொருள் - தனக்காக என்னும் பொருள்.

தற்போதம் - ஆன்மபோதம்.

தற்றருமம் - அதன்குணம்.

தன்மையின்வைத்தோதல் - பொருளாற் கூறுது அதன் தன்மையி லேற்றிக் கூறுதல். அது மூவினை என்னுது மூவினைமை என்றது.

தன்வயம் - பிறதுணைவேண்டாது தானாக எல்லாஞ் செய்யும் தலைமை.

தன் வேதனைக்காட்சி - இன்பத்துன்பங் களை அராகம் முதலிய ஐந்து தத்து வங்களாலும் உயிரினோடு உணர்வு தெரிதல்.

தன்னியல்பு - சிறப்பிலக்கணம்.

தாதமார்க்கம் - அடிமையுரிமைக்குரிய நெறி.

தாதான்மியசத்தி-எக்காலத்தும் விட்டு நீங்காதசத்தி.

தாவரவுரு - சிவலிங்கத்திருமேனி.

தான்பணியை நீத்தல் - தனக்கொரு செயலுண்டு என்பதை நீக்குதல் அஃது எல்லாம் சிவன்செயல் எனக் கொள்ளுதல்.

திதியின் பக்கத்து - திதியினிடத்து.

திரியக்காண்டல் - விபரீதக்காட்சி.

திரிவுபுலன் - திரிவுக்காட்சி.

திரோதானசத்தி - மறைக்குஞ்சத்தி.

தினைத்துணை - தினையளவு. இது மிகச் சிறுமைக்குக் காட்டப்படும் பிரமாணம்.

துணிந்ததாகவைத்து - துணிந்து.

துணைக்காரணம் - முதற்காரணத் துக்குத்துணையாய் அது காரியப் படுமளவும் உடனிகழ்வது.

துரியநிலை - அருணிலை.

துவம்பதம் - நீ என்னும் பொருளை உணர்த்தும் பதம்.

துவாதசாந்தம்-பிரமரந்திரத்திலிருந்து பன்னிரண்டங்குலத்தின் முடிவிடம்.

துவிதபாவனை-இரண்டாகப்பாவித்தல்.

துறவறம் - உலகப்பற்றைத் துறந்தவ ருக்கு உரிய அறம்.

தூலபூதம் - பிருதிவி முதலிய ஐம்பூதம்.

தூல உடம்பு - பஞ்சபூத பரிணாமமாகிய உடம்பு.

தெளியக்காண்டல் - நிச்சயக்காட்சி.

தெளிவுபுலன் - நிச்சயக்காட்சி.

தொகுத்துஉணர்த்தல் - சுருக்கி விளக் குதல்.

தொகைநிலைச்சொல் - உருபு முதலியன தொக்குநிற்குஞ் சொல்.

தொகைப்பொருள் - பிண்டப்பொருள்.

தொழிற்படுஞ்சொல் - ஏவும் வாக்கியம்.
தொன்றுதொட்டுவருதல் - முன் தொடங்கி வருதல்.
தோற்றப்பட்ட - உண்டாக்கப்பட்ட.
நற்சார்பு - நல்லினம், உயர்குலம்.
நாண்மீன் - அசுவினி முதலிய இருபத்தேழு நட்சத்திரம்.
நால்வகை வாக்கு - நான்குவிதமான வாக்கு அவை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பன.
நாற்பாதத்துள்வைத்து - சரியை முதலிய நான்கு பாதத்துள்.
நிட்களம் - கலையற்றது, அருவம்.
நித்தப்பொருள்-என்றுமுள்ளபொருள்.
நித்தியானந்தம் - அழியாத இன்பம்.
நிமித்தகாரணம் - வினைமுதற்காரணம்.
நிரதிசயகுணம் - மிக மேலாகியகுணம்.
நிரயத்துன்பம் - நரகவேதனை.
நிரனிறையிடம் - முறைமையாக நிறுத்தப்பட்ட இடம்.
நிராதாரம் - ஆதாரமில்லாதது.
நிராலம்பம் - ஆதாரமில்லாதது
நிருவாண தீக்கை-முத்தியைப் பயக்கும் தீக்கை. நிருவாணம் - முத்தி.
நிருவிகற்பம்-விகற்பமில்லாதது. பெயர் சாதி முதலியன அறியப் படாதது.
நிருவிகாரி-விகாரமில்லாதவன்.
நிர்க்குணன்-முக்குணங்களுள் ஒன்றாக அறியப்படாதவன் மாயாகுணங்கள் இல்லாதவன்.
நிலைக்களம்-நிற்றற்குரிய இடம்.
நீக்கமின்றி நிற்றல் – சமவேதமாய் நிறறல்.
நூன்முகம்-நூலின் ஆரம்பம். நூலின் முன்னிடம்.
பகுதிப்பொருள் விகுதி-பகுதிக்கு உரிய பொருளன்றி வேறு பொருளில்லாத விகுதி.
பக்கிசைத்தல்-பிரிந்திசைத்தல்.
பக்குவவிசேடம்-சிறந்த பக்குவம்.
பங்கயம்-சேற்றிற் பிறந்தது.
பசுபதி-ஆன்மாக்களுக்குத் தலைவன்.
பசுஞானம்-நான்பிரமம் என்னும் ஞானம்.
பசுநீகாரம்-பசுவை மறைப்பது.
பசுவர்க்கம் - விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் உயிர் வருக்கம்.
பட்டாசாரியன் மதம் - சைமினி முனிவனுடைய சீடனாகிய பட்டாச்சாரியன் மீமாம்சையை அநுசரித்துச் செய்த ஒரு மதம்.
பதமுத்தி-சாலோகம், சாமீபம், சாரூபம் என்பன.
பதார்த்தம்-பதத்தாற் பெயரிட்டு வழங்கற்பாடுடையது.
பயனிலை-பொருண்முடிவு.
பரகாயம்-வேற்றுடம்பு.
பரசாதி - அதிகமானவைகளிலே தோன்றுவது.
பரதந்திரம் - பிறன்வசமுற்று அவனைத் தலைமையாகக் கொண்டு நிற்றல்.
பரபக்கம்-பிறர் பக்கம்.
பரமசுகம்-மேலான இன்பம்.
பரமாணு-மிக நுண்மையான அணு.
பரம்பரை-ஒன்றன்பின் ஒன்றாக வருதல்
பரமான்மா-பரம்பொருள்.
பரவுடம்பு-காரணசரீரம்.
பரிக்கிரகசத்தி-தொழிற்குக் காரணமாய் நிற்கும் கிரியாசத்தி. அது வேண்டுழி உபகாரமாவது.
மாயை-வைப்புச்சத்தி என்பர்.
பரிதியங்கடவுள் - சூரியன்; பரிதியாகிய கடவுள் என விரியும்.
பரியாயப்பெயர் - ஒத்த பொருளுடைய பெயர்.
பலசாங்கியம்-பல எண்ணுடையது.
பறவாக்குளவி - மலைப்பச்சை, மலைமல்லிகை.
பற்றுக்கோடு - கொழுகொம்பு.
பன்னிருபடலம் - தொல்காப்பியர் முதலிய பன்னிருவரால் பன்னிரு படலமாகச் செய்யப்பட்ட ஒரு புறப்பொருள் இலக்கண நூல்.
பாகடை - பாக்கும் வெற்றிலையும்.
பாசஞானம் - பாச அறிவு, அது வேத சாத்திரம் முதலியனபற்றி நிகழும் ஏகதேசக்காட்சி. பாசம் வாயிலாக ஆன்மாவின்கண் நிகழும் ஞானம்.
பாச்செய்யுள் - பாவாகிய செய்யுள்.

பாஞ்சராத்திரி - விஷ்ணுவே முத்தொழிலுக்கும் கர்த்தா எனக்கூறும் பாஞ்சராத்திர நூலை அனுசரிப்போன். அந்நூல் ஐந்து இரவில் செய்யப்பட்டமையால் பாஞ்சராத்திரம் எனப்பெயராயிற்று என்பர். பாஞ்சராத்திரம் இது தந்திதாந்தபதம், "அஞ்சலிளவர்புகழ்" எனக் கந்தபுராணத்து வருவது காண்க.

பாடிகாவல் - களைகணுவான் ஒருவனைக் கொண்டு வேந்தன் செய்விப்பதொரு தண்டத்தொழில் விசேடம்.

பாயாவேங்கை - பொன், வேங்கைமரம்

பாவனுதீதம் - பாவனையைக் கடந்தது.

பிடகநூல் - பௌத்தமத சாத்திரம்.

பிண்டப்பொழிப்பு - பதச்சேதமின்றிப் பொருளைத்திரட்டிக் கூறுவது.

பிரகாசரூபம் - மறைவின்றி யிருக்கும் தன்மை.

பிரகாசிக்கவேண்டுவது - அறியப்படவேண்டுவது.

பிரகிருதி புவனுந்தம் - பிரகிருதி தத்துவத்திலுள்ள புவனம்வரை.

பிரமகாண்டம் - ஞானகாண்டம்.

பிரமக்கொலை - பிராமணனைக் கொல்லுதல்.

பிரவாகாநாதி- நீர்ப்பிரவாகம் போன்ற அநாதி.

பிரவிருத்தி ரூபம் - தொழில்வடிவம்.

பிராகிருதராவார் - பூமியில் ஜனித்தபின் சொப்பனத்தின் ஞானம்போல் அறிந்தறியாமலும், கிளிஞ்சியை வெள்ளியென்று அறிவதுபோல விபரீதஞானியுமாய் அதனுலேயே தேகாதிகளையும் ஆன்மா என்றும் பிரகிருதி ஐக்கிய வஸ்துக்களையே பரமென்றும் எண்ணுமவர்.

பிராணுயாமம் - பிராணவாயுவைத் தடுத்தல்.

பிராந்திஞானம் - விபரீதஞானம்.

பிராரத்தவினை - இப்பொழுது அநுபவிக்கப்படும் முன்னைவினை.

பிரேரகவவத்தை - ஏவும்நிலை

பிள்ளைத்திருநாமம்-பிள்ளைப் பருவத்தில் இட்ட திருப்பெயர்.

பிறிதினியைபு நீக்குதல் - மற்ருென்றன் சம்பந்தத்தை நீக்கல்.

புத்திதத்துவம் - முப்பத்தாறு தத்துவங்களுள் ஒன்று. அஃது உயிர்களின் புண்ணிய பாவங்களுக்குப் பற்றுக்கோடாயும் பொருளை நிச்சயிப்பதாயும் சுகதுக்க மோக ரூபமாய்ப் பரிணமித்து விடயமாயும் இருப்பது.

புத்திபூருவம் - அறியப்பட்டது.

புத்திரமார்க்கம் - புத்திர உரிமைக்குரிய நெறி.

புத்திவிருத்தி - மனத்தின் தொழில்.

புருடதத்துவம் - ஆன்மா.

புலப்படக்காண்டல் - வெளிப்பட்டுத் தோன்றக் காண்டல்.

புலனுணர்வு - கருவிகளானுய பாச ஞானம்.

புறவிருள் - வெளியிற் காணப்படும் பூதவிருள்.

புனருற்பவம் - மீளப்பிறத்தல்.

புனைந்துரை - விதியை வழங்குவித்தற் பொருட்டு விதிப்பயனை உள்ளதனுலும் இல்லதனுலும் வருணித்துக் கூறுவது. இதனை வடநூலார் அர்த்தவாதம் என்பர்.

பூதக்கூட்டரவு - பூதங்களின் கலப்பு.

பூதசார உடம்பு - பஞ்சபூதங்களின் சாரங்களால் ஆக்கப்பட்ட தேகம்: அது தேவசரீரம்.

பூதமயம் - பூதவடிவம்.

பூரணநிலை - எங்கும் நிறைந்தநிலை.

பூருவபக்கம் - விடயமும் பிறவுமாகச் சித்தாந்த விரோதமாய்ப் பிறரால் கூறப்பட்ட வாக்கியம்.

பெத்தகாலம் - மலப்பிணிபூண்டு நிற்கும் காலம்.

பெறுவிக்கப்பட்ட-தோற்றுவிக்கப்பட்ட

பேரருள் - பெருங்கருணை.

பைமறியாப்பார்த்தல் - மறிக்கப்பட்ட பைபோலப் பார்த்தல். மறித்தல் - உள்வெளியாகத் திருப்புதல்.

பொதிந்துகொள்ளுதல் - அடக்கிக் கொள்ளுதல்.

பொதுநீக்கல் - ஒருவர்க்கே உரிமையாக்கல்.

பொதுவகையானறிவு நிகழ்தல் - நிருவி கற்பமாய் அறிவுண்டாதல்.
பொதுவியல்பு - பொதுவிலக்கணம்.
பொருட்டன்மை - பொருளியல்பு.
பொருளியல்புரைத்தல் - வருபொருளுரைத்தல்: இது மூவகை வாழ்த்துள் ஒன்று.
பொருள்படா - உண்மையாகா.
போகதத்துவம் - சதாசிவதத்துவம்.
போகரூபம் - அநுபவவடிவம்.
போகாவத்தை - பிரபஞ்சத்தைக்காக்கும் நிலை, பிரபஞ்சத்தைப் படைக்க முயன்றநிலை.
போக்கியரூபம் - அநுபவிக்கப்படும் பொருள்வடிவம்.
போந்தபயன் - பெறப்பட்டபயன்.
மகாகாயம் - பெருவெளி.
மகாருத்திரன் - பரமசிவன்.
மகேசுரமூர்த்தி - மகேசுரமூர்த்தம்: சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர் முதலிய இருபத்தைந்து கேவல வடிவம்.
மங்கல வாழ்த்து - நன்மை பயக்கும் வாழ்த்து.
மந்ததரம் - அதிகமந்தம்.
மந்த உணர்வு - கூர்மையில்லாத புத்தி.
மந்திரசாந்நித்தியம் - மந்திரத்தின் அண்மை.
மந்திரமகேசர் - விஞ்ஞானகலருள்ளே மலபரிபாகத்திற்கேற்பச் சதாசிவ மூர்த்தியாலே மந்திரருக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுச் சுத்தாத்துவாவில் இருப்போர்.
மயக்கவாசனை - திரிபறிவு.
மலவாசனை - மலப்பயிற்சி,
மனவெழுச்சி - உள்ளக்கிளர்ச்சி.
மனோவிகற்பம் - மனவேறுபாடு.
மாட்டெறிதல் - ஓர் உத்தி, அது ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணத்தை அதனைப் பெறுதற்குரிய மற்றொன்றிற்கும் மாட்டிவிடுதல்.
மாயாகாரியம் - அசித்துப் பிரபஞ்சம்.
மாறுகோளுரை - முன்பின்முரணும் வசனம்.
மானதக்காட்சி - மனத்தாலுணரும் காட்சி.
மிக்குவழங்குதல் - பரந்துநிகழ்தல்.
மித்தையுணர்வு - பொய்யறிவு.
முகந்துகொள்ளுதல் - அள்ளிக்கொள்ளுதல்.
முடிவினை - பிராரத்தவினை.
முதற்காரணம் - காரியத்தோடொற்றுமைப்பட்டு நிற்கும் காரணம்.
முதுவேனில் - முதிர்ந்த வெய்யிற் காலம் அஃது ஆனி ஆடி மாதங்கள்.
முத்திறத்தைந்தவத்தை - கேவலாதி முத்திறமுடைய ஐந்தவத்தை.
முப்பொருள் - பதி பசு பாசம்.
மும்மையணு - மூன்றுசேர்ந்த ஓர் அணு.
முற்பக்கம் - பூருவபக்கம்.
முற்றுணர்வு - எல்லாவற்றையும் தடையின்றி அறியும் அறிவு.
முனிகணம் - முனிவர் கூட்டம், அவர் சனற்குமாரர் முதலாயினோர்.
மூடரூபம் - மூடமாயிருக்கும் தன்மை.
மூலகாரணம் - முதற்காரணம்.
மூலப்பகுதி - பிரகிருதி, இருபத்து நான்காம்தத்துவமாயுள்ளது இது அசுத்தமாயையினின்றும் தோன்றி அசுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாயிருப்பது.
மூவகைப்பிரபஞ்சம் - சுத்தப்பிரபஞ்சம் மிச்சிரப்பிரபஞ்சம், அசுத்தப்பிரபஞ்சம் என்பன. மிச்சிரம் - சுத்தம் அசுத்தம் இரண்டின் கலப்பு.
மூவகைப்புறச்சமயம் - புறப்புறச்சமயம் புறச்சமயம், அகப்புறச்சமயம் என்பன
மூன்றவத்தை - கேவலம் சகலம் சுத்தம்.
மெய்கண்டான் - சத்தின் இயல்பை அறிந்தோன்.
மெய்கண்டதேவன் - மெய்ப்பொருள் உணர்ந்ததேவன்.
மெய்ஞ்ஞானம் - மெய்ஞ்ஞானமாகிய சிவசத்து, வீடுபயக்கும் உணர்வு.
மெய்ப்பொருள் - சத்தாயுள்ள சிவம்.
மேற்கோடல் - ஏது திருட்டாந்தம் முதலியவற்றால் சாதிக்கப்படும் தன்மை உண்மையின் மற்றையப் போலி நிச்சயங்களை வென்று அங்கீகாரமாய் மேற்பட்டெழுதல், மீதூரல்.

மொழிபெயர்த்தல் - ஒரு பாடையில் உள்ளபொருளை மற்றொருபாடையிலே திருப்பிச் செய்தல்.
மோகரூபம்-மோகமாய் இருக்கும் தன்மை.
யாப்புறுத்தல்-வலியாக்கல்,
யோகமதம்-பாதஞ்சல நூற்கொள்கை.
வடமொழி மதம்-வட நூற்கொள்கை.
வரம்பின்றியோடல்-எல்லையின்றிச் செல்லுதல்.
வருவாய்-வரும்வழி.
வரைந்துவைத்தல்-முடிவுபண்ணுதல்
வரையறை-எல்லைப்படுத்தல்.
வலியுறுத்தல்-பெலமுடையதாக்கல்.
வழிமொழிதல்-அநுவதித்தல்.
வாக்கியசேடம்-வாக்கியக்குறை; அஃதாவது ஒரு வாக்கியத்தை ஐயமறத்துணிதற்கு அநுகூலமாகிய குறை வாக்கியம்.
வாதனுமலம் - பயிற்சிபற்றிவந்த மலம்.
வாயிற்காட்சி-இந்திரியக்காட்சி.
வாய்பாடு - வாயிற்படுவதாகிய வாக்கியம்.
விசிட்டசத்தை-விசேடிக்கப்பட்ட உண்மைத் தன்மையாகிய சாதி.
விச்சுவரூபம்-பாரமேசுரவடிவம்,
விஞ்ஞானதீக்கை-ஞானதீக்கை.
விஞ்ஞானவாதி-ஞானமே உள்பொருள் என்று சொல்லுபவன்.
விதந்தோதுதல்-எடுத்துச்சொல்லுதல்.
விதிக்குஞ்சொல் - விதியைப் புலப்படுத்தும் சொல்; இதனைச் செய்க, இதனை ஒழிக என நியமிக்குஞ் சொல்.
விதிவாக்கியம் - இதனைச் செய்க என்று நியமிக்கும் வாக்கியம்.
விநாயகக்கடவுள் - சிவபிரானுடைய மூத்தபிள்ளையார்; தன்னினும் தலைமையானவர் பிறரிலராகப்பெற்ற கடவுள் என்பது பொருள். கடவுள் என்பதில் கடபகுதி. உள் தொழிற்பெயர் விகுதி, எனவே தத்துவாதீதர் என்பது கருத்து.
விருத்திப்படுதல் - படம் குடிலாறுற்போல விரிதல்.
விலக்கியல் - விலக்குவனவற்றைக் கூறும் இயல்.
விவகரிக்குஞ் சொல்-பொருளை அறிவிக்கும் சொல்.
விவேகித்தறிதல்-மெய்யாக உணர்தல், பகுத்தறிதல்.
விழுச்சுடர்-மிக்க ஒளி.
விள்ளற்பாலது-விடற்பாலது.
வினைக்கிடாக-வினைக்குச் சமமாக.
வினைமுதல்-வினைநிகழ்ச்சிக்குத் தலைமைப்பட்டு நிற்பது. இதனைவட நூலார் கருத்தா என்பர்.
வினைவயம் - வினையே தலைமையாக அதன்பால் அமைதல்.
வீடுபேறு-முத்திபெறுதல். முத்தியாகிய பயன்.
வெள்ளறிவு - உள்ளீடில்லாத அறிவு, பொய்யுணர்வு,
வெற்றெனத்தொடுத்தல் - ஓர்உத்தி. அது பொருள் வெளிப்படையாகத் தோன்றச் சொற்களைத் தொடுத்தல்.
வெற்றிப்பாடு - வெற்றியடைதல்.
வேதமரபுபற்றிய பெயர் - வேதத்திலே வழங்கும் முறைமைபற்றிய பெயர்.
வைதிகவினை - வேத சம்பந்தமான கிரியை,
வைநயிகராவார் - விநயசீலராய் உலகத்துக்குயர்ந்தோர் போதிக்கும் ஞானத்தினும், குருஉபதேசத்தினும், சிவசாஸ்திரத்தினும், நித்தியா நித்திய வஸ்துவிவேகிகளாய் மனோவாக்குக் காய வியாபாரங்களினல் சர்வகன்மங்களையும் துடைக்கப் பட்டவர்களாகிக் கிரமத்தின் மோக்ஷத்தை யடைபவர்.
விதிமுகம் - நிருமிக்கும் வாயில்.
உபலக்கணம் - ஒருபொருளைக் கூறுமிடத்து அதனோடு இயைபுடையதனையும் உய்த்துக் கொண்டுணர வைப்பதாம்.

# அருஞ்சொல்லகராதி

அகம் - உயிர், மனம்.
அச்சு - மெய்ப்பொருளாகிய சிவம். அது அச்சுப்போல ஆன்மாவை மலவாசனை பற்றிப் பிறழவிடாமையின் அங்ஙனம் உருவகம் செய்யப்பட்டது. உடம்பு.
அங்கி - அங்கமுடையது. அக்கினி.
அங்கம் - அவயவம்.
அங்குரம் - முளை.
அஞ்சனம் - இருளாயிருப்பது.
அடங்குதல் - உள்ளமைதல்.
அடிப்பாடு - அமைவு.
அடுக்க - சமீபமாக.
அடப்படுதல் - சமைக்கப்படுதல்.
அடைவு - முறைமை.
அணு - சூக்குமவுடம்பு.
அணை - வரம்பு.
அண்டன் - முதல்வன்.
அதிகரணம் - நிலைக்களம்.
அதிகாரம் - தலைப்பாடு.
அதிகாரி - கேட்டற்கேற்ற பக்குவமுடையோன்; சம்பந்தமுடையோன்.
அதீதம் - துரியாதீதாவத்தை.
அத்தன் - இறைவன்.
அத்துவா - வழி, அவை மந்திராத்துவா முதலியன.
அநர்த்தம் - கேடு.
அநாதி - தொடக்கமில்லாதது.
அநுகூலம் - இணக்கம்.
அநுக்கிரகம் - அருள்.
அநுபவம் - அறிந்தபொருளில் அழுந்துதல், அநுபூதி, புசிப்பு.
அநுபூதி - பிறபொருளின் துணையின்றி இயற்கையால் எல்லாவற்றையும் அளந்தறியும் அறிவு.
அந்தகாரம் - இருள்.
அந்தரம் - ஆகாயம்.
அந்ததரம் -தீவிரதரத்தில் தீவிரதரமான சத்திநிபாதம், சித்தம்.
அந்நம் - நான்காஞ் சத்திநிபாதம்.
அந்நியம் - வேற்றுமை.
அந்நியமின்மை - ஆன்மாவுக்கும் முதல்வனுக்குமுள்ள பிரிக்க முடியாது நிற்கும் சம்பந்தம்; அஃது அத்துவித சம்பந்தம் என்பர்.
அபகரித்தல் - கவர்தல்.
அபாவம் - இன்மை.
அபேதம் - பேதமின்மை.
அப்பிரமேயம் - அளவையான் அளக்கப்படாதது.
அமைச்சு - அமைச்சன்.
அமையாமை - பூரணமாகாமை.
அயராமை - மறவாமை.
அரக்கு - மெழுகு.
அரு - சூக்குமம்.
அருள் - இரக்கம், திரோதானசத்தி.
அல்லன் - வேறு.
அவசித்தாந்தம் - தோல்வித்தானங்களுள் ஒன்று. அது தன் சித்தாந்தத்திற்கு இணங்காதவைகளைச் சொல்லிச் சித்தாந்தம் தாபித்தல்.
அவதரம் - அவகாசம்.
அவத்திதன் - அவத்தையுற்றவன்.
அவயவம் - தனித்தனி பிரிக்கப்படும் தகுதியுடையன.
அவயவி - அவயவமுடையது.
அவிச்சை - அஞ்ஞானம், ஆணவம்.
அவித்தை - அஞ்ஞானம்செய்வது.
அழுந்துதல் - அமிழ்ந்துதல், நன்றாய்ப் பதிதல்.
அளவை - பிரமாணம், அளத்தற் கருவி.
அறிவு - ஆன்மஞானம், ஞாதா.

அற்புதம் - சூனியம்.
அற்று - அவ்வியல்பிற்று.
அன்மை - உடைமைக்கு மறுதலே.
அன்றல் - மாறுபடுதல்.
அன்று - அநாதி.
அன்னர் - அத்தன்மையினர்.
ஆக்குதல் - படைத்தல்.
ஆசங்கை - வினு.
ஆசங்கித்தல் - ஆட்சேபித்தல்.
ஆசரித்தல் - அநுட்டித்தல்.
ஆசாரம் - ஒழுக்கம்.
ஆச்சிரவம் - பொறிவழிச்சேறல், கன்மத்தொடர்ச்சி.
ஆணவம் - வியாபகவுயிர் அணுத் தன்மைப்படச்செய்வது.
ஆதி - தொடக்கமுடையது, முதற் கடவுள்.
ஆமா - காட்டுப்பசு.
ஆயுள் - வயசு.
ஆய்தல் - ஆராய்ந்தறிதல், நிச்சயித்தல், நுணுகுதல்.
ஆரவாரம் - வெற்ரெலி.
ஆராய்ச்சி - விசாரித்தல்.
ஆவிருதி - ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களே மறைப்பது.
ஆவேசித்தல் - வெளிப்படுதல்.
ஆள் - அடிமை.
ஆற்றல் - சொற்குப் பொருளோடு உளதாகிய சம்பந்தம்.
ஆனந்தரியம் - இவை யாய்ந்தபின் இது கேட்கற்பாற்று என்னும் யாப்பு.
ஆனுமை - நீங்காமை.
ஆன்மா - வியாபகம், சித்தசித்து.
இகலல் - பகைத்தல்.
இகல் - முரண்.
இடர்ப்படுத்தல் - ஆற்றலேக் குறைத்தல்.
இடுதல் - வைத்தல், கொடுத்தல்.
இதழ் - தளம்.
இப்பி - சிப்பி.
இயங்கல் - தொழிற்படுதல்.
இயல்பு - இயற்கை, இயல்பாயுள்ளது, தன்மை.
இருதயம் - நெஞ்சு.
இலக்கு - அவகாசம்.
இலாடம் - நெற்றி.
இழுக்கு - குற்றம்.
இறுதி - சங்காரம்.
இறுவாய் - இறுதி.
இறை - விடை.
இறைவன் - தலேவன்.
இன்மை - உண்மைக்கு மறுதலே.
ஈருதல் - சங்காரப்படுதல்.
உச்சரித்தல் - உச்சாரணம்செய்தல்.
உடங்கு - ஒருங்கு.
உடைமை - உடையராந்தன்மை.
உடையான் - பொருளேத் தனதாகக் கொண்டிருப்பவன்; வடநூலார் உடையானேச் சுவாமி என்பர்.
உணர்தல் - பாவித்தல்.
உணர்த்தல் - அறிவுறுத்தல்.
உணர்வது - அநுபவிப்பது.
உண்ணுதல் - விடயத்தில் அழுந்துதல்.
உண்மை-உளதாந்தன்மை, சிறப்பு.
உத்தியுத்தர் - விந்துவின் காரியங்களில் முயன்றவர்.
உத்தேசம் - பெயர் மாத்திரையான் எடுத்தோதல்.
உபதேசி - அறிவிக்க அறியும் தன்மைத்து.
உபாயம் - கிட்டியவழி.
உயிர்த்தல் - சுவாசித்தல்.
உரிமை - சம்பந்தம்.
உவமேயம் - உவமானத்தால் வருணிக்கப்படுவது.
உவர்ப்பு - வெறுப்பு.
உழப்பு - முயற்சி.
உளம் - உயிர், ஆன்மா, ஆன்மபோதம்.
உறவு - நட்பு.

உன்மத்தர்-சித்தமயக்கமுடையோர்.
ஊட்டல் - நுகர்வித்தல்.
ஊறு - பரிசம்.
எதிரது - வருவது.
எய்தல் - அடைதல்,
எழுப்புதல் - பிரகாசிப்பித்தல்.
ஏகாரம் - முதலையே என்புழி மற்றைய முதல்வரிலே இயையாது பிரித்தலும், சங்காரகாரணனாகிய முதலிலே இயையாமையைப் பிரித்தலும் அறிக, இயைபின்மை நீக்குதல்-இயைவித்தல், பிறிதினியைபு-மற்றொன்றிற் போய்ப் பொருந்துதல்.
ஏது - காரணம்.
ஏலாமை - இயையாமை.
ஐயப்பாடு - சந்தேகம், துணிவு பிறவாமை.
ஒருதலை - நிச்சயம்.
ஒருவுதல் - நீங்குதல்.
ஓத்து - ஓதப்பட்டவிதி.
ஓமித்தல் - ஓமஞ்செய்தல்.
கஞ்சுகம் - சட்டை.
கடல் - நீர்க்கு இடங்கொடுத்து நிற்கும் ஆகாயம்.
கடா - வினா.
கட்டு - தொடக்கு.
கணித்தல் - மானதமாகச்செபித்தல்.
கண் - அறிவு.
கண்கூடு - பிரத்தியட்சம்.
கண்ணல் - கருதல்.
கதி - பிறப்பு.
கதிர் - ஒளி.
கந்தித்தல் - நாறுதல்.
கரணம் - மனம் முதலிய கருவி.
கரு - கருப்பம்.
கருத்தா - செய்பவன்.
கருத்து-தாற்பரியம், கருதப்பட்டது.
கலை - ஒரு தத்துவம்.
களிம்பு - செம்பு முதலியவற்றில் இருக்கும் காளிதம்.
களைகண் - ஆதாரம், பற்றுக்கோடு.
கனல் - அக்கினி.
காட்சி - பார்வை.
காட்டம் - விறகு.
காட்டிற்றை - காட்டினதை.
காட்டு - காண்பிப்பது, காட்டாய கருவிகள், வியஞ்சகம்.
காணார் - உணர்தலைச்செய்யார்.
காண்டல் - ஐயுறவின்றித்தெளிதல்.
காமிகம் - சைவாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று.
காமுகர் - காமமுடையவர்.
கான்மியம் - கன்மமலம்.
குரம்பை - கூடு.
குறி - இலிங்கம்.
குறை - இன்றியமையாப்பொருள்.
கூட்டரவு - கூட்டம்.
கூவல் - கிணறு.
கேசரம் - தாமரைப்பொகுட்டின் புறத்தே தொங்குமவை.
கேட்டல் - உண்மைஞானம் நான்கனுள் ஒன்று, அது குருமுகமாக ஆகமப்பொருளைச்செவிமடுத்தல்.
கேவலம் - ஆன்மா அறிவு, செயல், குறி, குணம் ஒன்றுமின்றித் தனியே ஆணவமலத்தான் மறைந்துநிற்கும் நிலை.
கோடல் - கொள்ளுதல்.
கோடும் - கொள்ளுதும். கொள் பகுதி, தும் விகுதி.
கோட்டம்-ஒருபாற்சாய்தல், அநீதி.
சகம் - நிலவுலகம்.
சகலம் - ஆன்மா சரீரம் முதலிய வற்றைப் பெற்று நிற்கும் நிலை.
சங்கற்பித்தல் - எண்ணுதல்.
சங்கமம் - இயங்கியற்பொருள்.
சங்கிரமித்தல் - கலத்தல்.
சங்கேதம் - சொற்கும் பொருட்கும் உளதாகிய நியம ஆற்றல்.
சங்கை - சந்தேகம்.
சடிதி - சீக்கிரம்.

சட்ட - செப்பம்.
சதுரப்பாடு - சாமர்த்தியம்.
சத்தன் - விந்துவின் காரியங்களை ஒடுக்கியிருப்பவன்.
சத்து - உள்ளது, சத்தாகிய சிவம், நிலையுதலுடையது.
சந்நிதி - முன்னிலை.
சமயம் - மார்க்கம்.
சமவாயம் - அவயவம் முதலியவற்றிற்கு அவயவி முதலியவற்றோடு நீக்கமின்றி உளதாகிய இயைபு, நீக்கமில்லாமை, ஒற்றுமை.
சமுதாயம் - கூட்டம்.
சமுவரம் - பொறிவழிச் செல்லாது தடுத்து முத்திக்குக் காரணமாவது.
சம்பவம் - உண்மை.
சலம் - வஞ்சனை, கோட்டம்.
சாக்கிரம் - சாக்கிராவத்தை.
சாங்கியர்-கபிலமுனிவரால் செய்யப்பட்ட சாங்கிய நூலை அநுசரிப்போர்.
சாதகம் - கருவி.
சாதனம் - தொழிலைப் பயப்பிக்கும் முக்கியகாரணம், முடிப்பது.
சாதி - ஒரு நிகரனவாகிய பல பொருளுக்குள்ள பொதுவாந் தன்மை, குலம்.
சாதித்தல் - சாதனத்தால் நிறுத்துதல்.
சார்தல் - அடைதல்.
சார்பு - ஆதாரம்.
சாலுதல் - அமைதல்.
சித்தம் - அந்தக்கரணங்களுள் ஒன்று.
சித்து - அறிவுடைப்பொருள்.
சிந்தித்தல் - உண்மை ஞானம் நான்கனுள் ஒன்று. அது குருமுகமாகக் கேட்டபொருளை மனனம் செய்து தோஷம் நீங்குமாறு ஆராய்தல்.
சிறுமைப்படுதல் - கீழ்மைப்படுதல்.
சிறை - தடை.
சீ - புண்ணீர்.
சுதந்திரம் - தன்வயமுடைமை.
சுத்தம் - இருவினையொப்பு, மலபரிபாகம் பெற்றுச் சிவனையடைந்து நிற்கும் நிலை.
சுருதி - வேறொன்றனை அவாவாது தான் கருதிய பொருளைத் தானே தெரிவிப்பது.
சுழுத்தி - அந்தக்கரணங்களுள்ளே சித்த மாத்திரத்தோடு கூடிய நித்திராவத்தை.
சூக்குமம் - நுண்மை.
சூழ் - சூழ்ச்சி, உபதேசமொழி.
சூனியம் - பாழ்.
செயற்கை- இடையிலேதோன்றியது.
செய் - விளைநிலம்.
செய்தி - தொழில்.
செய்பவர் - உழவர்.
செய்வோர் - வினைநிகழ்த்துவோர்.
செல்லாது - சித்தியாது.
செவ்விது - வருத்தமின்றி.
சேடம் - குறை. யாதொன்று யாதொன்றன் பொருட்டாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றி நிற்கும் அஃது. அதற்குச் சேடம் எனப்படும்.
சேடன் - அடிமை.
சேட்டித்தல் - செயற்படுதல்.
சேய்மை - தூரம்.
சேர்வை - சேர்ச்சி.
சேறல் - செல்லுதல்.
சைதன்னியம் - ஆன்மா, அறிவு.
சோகம் - கூம்புதல்.
சோதகம் - ஏவுவது.
சோதிட்டோமம் - ஓர் யாகம்.
தண்டம் - ஒறுத்தல்.
தத்துவம் - உள்ளது.
தமி - தனிமுதற்பொருள்.
தருக்கம்-புத்தியினுல் சாதிக்கப்படும் ஆராய்ச்சி.

தருமி - தருமமுடையது.
தருமம் - பண்பு.
தர்ப்பணம் - கண்ணாடி.
தலை - இடம்.
தலைப்படுதல் - கூடுதல்.
தலைமைப்பாடு - மேம்பாடு, முதன்மை.
தலைவர் - உத்தமர்.
தனி - வேறு.
தன்மை - சொரூபம்.
தாக்காது - விகாரமின்றி.
தாக்குதல் - உறுத்தல்.
தாரகம் - தாங்குவது.
தாரை - நெகிழ்ச்சிப்பொருளின்கண் உள்ள இடையறுவொழுக்கு.
தார்க்கிகர் - தர்க்கநூற் கொள்கையுடையோர், தர்க்க சம்பந்தமுடையோர்.
தாவரம் - நிலையியற்பொருள்.
தாற்பரியம் - சொல்ல விரும்பிய கருத்து.
திதி - உள்பொருள்.
திருவருள் - ஈண்டுத் திரோதான சத்தி.
திவ்வியம் - தெய்வத்தன்மை.
திறம் - வகை, கூறு.
திறல் - வெற்றிப்பாடு.
தீக்கை-ஒரு நற்கிரியை. அது பாசத்தைக் கெடுத்து மோட்சத்தைக் கொடுப்பது. தீ - கொடுத்தல். க்ஷா - கெடுத்தல்.
துணிதல் - அறிதற்பொருட்டு.
துணை - அளவு.
துமிதல் - கெடுதல்
துரத்தல் - ஓட்டுதல், உந்தித் தள்ளுதல்.
துரியம்-இருவகைக் கருவிகளின் பிரவிருத்தியின்றி இருக்கும் அறிவு நிலை.
துலை - தராசு.
துவ்வாமை-அநுபவிக்கமாட்டாமை.
துழனி - ஆரவாரம்.
துறக்கம் - சுவர்க்கம்.
துனை - அதிவேகம்.
துன்னல் - செறிதல்.
தூலம் - பெரியது.
தெரிதல் - நிச்சயித்தல்.
தெரித்தல் - அறிவித்தல்.
தெருளுதல் - தெளிதல்.
தெளிதல் - உண்மைஞானம் நான்கனுள் ஒன்று. அது கேட்டபின் ஆராய்ந்து இதுவே கொளற்பாலது என்று நிச்சயித்தல்.
தைலம் - தேவனதுடைமை.
தொகுதல் - அடங்குதல்.
தொடுதல் - தோண்டுதல்.
தொழும்பு - அடிமை.
தொன்மையே - அன்றே.
தோற்றம் - தோன்றுதல்.
தோற்றப்பட்ட - உண்டாக்கப்பட்ட.
நசித்தல் - கெடுதல், நாசமடைதல்.
நட்டோர் - நண்பர்.
நண்ணல் - புகுதல்.
நண்ணுதல் - தலைப்படுதல்.
நத்தம் - நிறைதல்.
நயம் - பயன், நியாயம்.
நலிதல் - வருந்தல்.
நல்கூர்தல் - வறுமையடைதல்.
நல்லார் - கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த முதியோர்.
நள் - நடு.
நனவு - சாக்கிரம், விழிப்பு.
நன்னெறி - ஞானம்.
நாடி - ஆராய்ந்தறிக.
நாத்திகர்-கடவுளும், சுவர்க்க நரகங்களும், மறுபிறப்பும் இல்லை என்பவர்.
நாதம் - சிவதத்துவம்.
நாளம் - தண்டு.
நிகழ்ச்சி - உண்டாதல்.
நிகழ்தல் - உண்டாதல், நடத்தல் ஐயந்திரிபின்றி விளங்குதல்.

நிட்டை - உண்மை ஞானம் நான்கனுள் ஒன்று. அது கேட்டுச் சிந்தித்துத் துணிந்த பொருளுடன் பிரிவின்றி உறுதியாக நிற்றல்
நித்தம் - நித்தியம்.
நிமித்தம் - காரணம்.
நியமம் - நிச்சயம்.
நிரயம் - நரகம்.
நிலை - ஆச்சிரமம், நிற்றல்.
நீக்கம் - பிரிவு.
நீதி - நடத்துவது.
நுட்பம் - நுண்மை.
நுணுகுதல் - சிறுத்தல்.
நுதலல் - கருதல்.
நுழைதல் - பிரவேசித்தல்.
நேர் - ஒப்பு.
நொடித்தல் - அழித்தல்.
நோக்குதல் - காத்தல்.
நோன்றல் - பொறுத்தல்.
பக்கம் - துணிபொருளிருக்குமிடம்.
பக்குவம் - பருவம், முதிர்ச்சி.
பசாசம் - இரும்பு.
பசுத்துவம் - பசுவின் தன்மை.
பசு - பாசக்கட்டுடையது;
பச் - கட்டு.
படர்தல் - பரத்தல்.
பணி - தொண்டு.
பண் - பண்ணப்படும் கதிகள்.
பண்டு - அநாதி.
பண்ணுதல் - கதிப்பித்தல்.
பதி - முதல்வன், ஊர், இடம்.
பந்தம் - கட்டு.
பயிற்சி - பழக்கம், வாசனை, அழுத்தம்.
பரம் - பரம்பொருள்.
பரவல் - எல்லார்க்கும் புலனுமாறு மிக்குநிகழ்தல்.
பரிகரித்தல் - களைதல்.
பரிசம் - தீண்டுதல்.
பரிசனம் - பரிவாரம்.
பரிணமம் - இயற்கையினின்றும் திரிதல்.
பரிதல் - இரங்குதல்.
பரிபவம் - அவமானம்.
பரிபாகம் - உத்தமமானபக்குவம்.
பரியாயம் - ஒத்தபொருளுடையது.
பவம் - உண்மை, பிறவி.
பல்குதல் - பெருகுதல், விரிதல்.
பாகதம் - பிராகிருதச்சொல்.
பாகம் - பக்குவம்.
பாகுபாடு - பிரிவு.
பாசத்தார் - பாசக்கட்டுடையார்.
பாடம் - படிக்கப்பட்ட சுலோகம்.
பாடியம் - உரை.
பாவகம் . எண்ணம், மனம் முதலியவற்றோடு கூடி நின்று பாவிப்பது. பாவனை என்பதும் அது.
பாவம் - உண்மை.
பிணங்கல் - மாறுபடுதல்.
பிணிப்புண்ணுதல்-கட்டுண்ணுதல்; ஒருசொல் நீர்மைத்து.
பித்தி - சுவர்.
பிரகாசம் - சித்து, விளங்குதல்.
பிரபஞ்சம் - உலகம். விஸ்தாரமுடையது என்னும் பொருளது. உயிரும் பாசமுமே பிரபஞ்சம் எனப்படும்.
பிரமாணம் - அளத்தல்.
பிரமாதா - அளந்துகொள்பவன் - அளத்தல்.
பிரமிதி - அளவையால் உணர்ந்த மெய்யுணர்வு.
பிரமேயம் - அளவையால் அளந்து கொள்ளப்படுவது. இவைநான்கும் பிரமாண நெறிக்கு இன்றியமையாதன என்பர் அளவை நூலோர்.
பிரயோகம் - வழங்கும் முறை.
பிரவிருத்தன் - விந்துவின் காரியங்களைத்தொடங்கினவன்.
பிராமாணியம் - பிரமாணமுள்ளதாம் தன்மை.

பீசம் - வித்து.
புணர்தல் - தலைப்படல்.
புத்தி - ஒரு தத்துவம். அஃது இது இன்னதென நிச்சயித்தறிவது.
புரிதல்-எப்பொழுதும் மேற்கோடல்.
புவனம் - உடம்புக்கு ஆதாரமாகிய உலகம்.
புறம் - புறம்பு, வெளி.
புறன் - புறம்பு, புறச்சமயம்பற்றி இகழ்ந்துரைக்கும் மொழி, புறங்கூற்றுமொழி.
புனைதல் - அடங்கிநிற்றல்.
புனைந்துகோடல் - சூடுதல். ஒரு சொல் நீர்மைத்து.
பூரித்தல் - நிறைத்தல்.
பெயர்த்து - மாறி.
பெறுதல் - அடைதல்.
பெற்றி - தன்மை.
பெற்றிமை - சாதி.
பேதம் - வேறுபாடு.
பேதை - மடவோன்.
பேராமல் - பிறழாமல்.
பொகுட்டு - காய்.
பொய் - பொதுவியல்பு, செயற்கைச் சுட்டுணர்வு.
பொய்கை - குளம்.
பொருள் - உவமேயம்.
பொறி - இந்திரியம்.
பொற்பு - பொலிவு.
போகம் - அநுபவம்.
போக்கு - இறத்தல்.
போதல் - வருதல்.
போதரும் - புலப்படும்.
போதித்தல் - அறிவித்தல்.
போது - புட்பம்.
போந்தது - வந்தது.
போழ்தல் - பிளத்தல்.
பௌதிகம் - பிருதிவி முதலிய பூத சம்பந்தமுடையது.
மகவு - பிள்ளை.
மடக்கி - திருப்பி.
மடங்குதல் - முனைத்தெழாமை.
மடவோன்-அறியாமையுடையோன்.
மணத்தல் - சேர்தல்.
மதம் - கொள்கை, உடன்பட்டது.
மதுகை - வலி.
மந்திரம் - நினைப்பவனைக்காப்பது. மந் - நினைத்தல். திர - காத்தல்.
மயக்கம் - தெளிவு பிறவாமை.
மயர்வு - மயக்கவாசனை.
மலம் - அழுக்கு.
மலையற்க - மயங்கற்க.
மறுதலை - எதிர்.
மறைப்புண்ணுதல் - மறைக்கப் படுதல்.
மனம் - ஒருதத்துவம், அஃது ஒன்றை இஃது இன்னது ஆகற்பாற்று என்று சங்கற்ப விகற்பம் செய்வதறிவது, பசுஞானம்.
மாசு - அழுக்கு, காசபடலம்.
மாட்டாமை - இயலாமை.
மாணுமை - வியாபக உணர்விற்கு விடயமாகாமை.
மாந்திரிகன் - மந்திரவாதி.
மாயேயம் - மாயா காரியமாகிய தநு முதலாயின. தநு - உடம்பு.
மாறு - முரண்.
மாறுதல் - இறத்தல்.
மான் - பெரியோன்.
மிகை - வேண்டுமளவின் மிகுதிப் பாடு.
மிக்கு - அதிகம்.
மிச்சிரம் - கலந்தது.
மிருதி - முனிவரால் நினைத்துச் செய்யப்பட்ட தருமசாத்திரம்.
மிருத்தியு - மரணத்தைச் செய்வது.
மீட்சி - மீளுதல்.
மீமாஞ்சகர் - மீமாஞ்சை என்னும் நூற்கொள்கையை அநுசரிப்போர்.
மீன் - நாண்மீன்.
முகத்தல் - அள்ளுதல்.
முத்தர் - மலம் நீங்கினவர்.

முரணுதல் - மாறுபடுதல்.
முறுகுதல் - நன்குமுதிரல்.
முனைத்தல் - முற்படுதல்.
முன் - அறிவாயாக.
மூர்ச்சை - மயக்கத்தைச்செய்வது, அறிவை மயக்குவது.
மெய் - உயிர், சிறப்பியல்பு, இயற்கையுணர்வு.
மோகினி - அசுத்த மாயாதத்துவம்.
யாத்தல் - கட்டுதல்.
யாப்பு - இந்நூல் கேட்டபின் இந்நூல் கேட்கற்பாற்று என்னும் இயைபு.
யாப்புறுத்தல் - வலியாக்கல்.
வகை - கூறுபாடு.
வசீகரித்தல் - வசப்படுத்தல்.
வரம்பு - எல்லை.
வருக்கம் - ஓரினமான கூட்டம்.
வருணம் - சாதி.
வல்லி - மாயை.
வல்லுதல் - வலிமையுடைத்தாதல்.
வல்லுநர் - இயலுநர்.
வழக்கு - பிரசித்தி.
வழங்குதல் - நடைபெறுதல்.
வழி - நூல்வந்த வழி.
வளி - காற்று.
வறிது - சும்மா.
வன்னம் - நிறம்.
வாக்கியம் - அவாய்நிலை, தகுதி அண்மை என்னும் மூன்றுமுடைய சொற்களின் சமூகம். சுருதியும் இலிங்கமுமின்றிச் சொற்றொடர்பு பற்றிப் பொருளுணர வருவது.
வாக்கு - நால்வகை வாக்குக்கள்: அவை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பன. வாக்காகிய நாதமுடிவான பாசஞானம்.
வாதிகள் - தங்கொள்கையை நிறுத்திப்பேசுவோர்.
வாதித்தல் - வருத்துதல்.
வாய்தல் - கிடைத்தல்.
வார்த்திகம் - காண்டிகையுரை.
வார்த்தை - சொல்.
விகாரம் - வேறுபாடு.
விசித்திரம் - ஆச்சரியம்.
விசேடம் - சிறப்பு, ஒரு பொருட்கே உரியதன்மை.
விசேடித்தது - அடைகொடுத்துக் கூறியது.
விடயம் - பற்றப்படுவது. பொருள்.
விடயித்தல் - பற்றுதல்.
விடை - உத்தரம்.
விண் - துறக்கம்.
வித்தகம் - விசித்திரம்.
விந்து - சுத்தமாயை.
விபவம் - செல்வம்.
விபரீதம் - திரிவு.
விம்முதல் - சுரத்தல்.
வியவகாரம் - வழக்கம்.
வியாக்கியானம் - உரை.
வியாபகம் - நிறைவது.
வியாபரித்தல் - தொழிற்படுதல்.
வியாப்பியம் - வியாபிக்கப்படுவது.
வியூகம் - வகுப்பு.
விரவுதல் - கலத்தல்.
விருத்தி - தொழிற்பாடு, விரிவு.
விளக்கு - காட்டு.
விளித்தல் - அழைத்தல்.
விளையாது - உளதாதலின்றி.
விளைவிக்கப்படுதல் - உண்டாக்கப்படுதல்.
வினைமை - வினையுடைமை.
வீயாத - கேடில்லாத.
வெகுளல் - கோபித்தல்.
வெரிந் - முதுகு.
வேகம் - கதி.
வேட்கை - அவா.
வேட்டுவன் - வேட்டைவாளி; இதனை ஒருவகை வண்டு என்றும், புழு என்றும் கூறுவர்.
வேள்வி - யாகம்.
வேறு - மாறு, அந்நியம்.

# இந்நூலுக்கு உபகாரமான

# தருக்கச்சொல் அகராதி

அகம் - மனம், உள்.
அகவிந்திரியம் - மனம்.
அசமவாயி - சமவாயியல்லது.
அசம்பந்தம் - சம்பந்தமின்மை.
அசம்பவம் - சம்பவித்தலின்மை.
அசாதாரணம் - சிறப்பு.
அசித்தம் - பேறில்லது, முடிவு பெருமை.
அசுவம் - குதிரை.
அட்டில் - பாகசாலை.
அதிதேசம் - மாட்டியுணர்த்துவது.
அதிப்பிரசங்கம் - மிகைபடக்கூறல்.
அதிவியாத்தி - மேல்வியாபித்தல்.
அதீந்திரியம் - இந்திரியத்தை அதிக்கிரமித்தது.
அத்தியந்தாபாவம்- முழுதுமின்மை.
அத்தியாகாரம் - சொல்லெச்சம்.
அநவத்தை - முடிவின்மை.
அநுகதாகாரம் - அநுசரித்துள்ள வடிவம்.
அநுபசங்காரி - முடிவு பெருமை.
அநுபத்தியம் - பொருந்தாமை.
அநுபலத்தி - ஞானுபாவம்.
அநுமாபகம் - அநுமிதியை உண்டு பண்ணுதல்.
அநுமானம் - கருதல்.
அநுமிதி - கருத்துணர்வு.
அநுவியவசாயம் - பின்னிகழுணர்வு
அநைகாந்திகம் - பிறழ்வுடையது, நியமமில்லது.
அந்தரிந்திரியம் - உட்பொறி.
அந்நியதரகன்மசம் - இரண்டில் ஒன்றன் கர்மத்தான் ஆவது.
அந்நியதாசித்தி - வேருேராற்ருற் பெறப்படல்.
அந்நியவியாவிருத்தி- பிறிது நீக்கம்
அந்நியோந்நியாபாவம் - ஒன்றி ஞென்றின்மை.
அந்நுவயம் - உடம்பாடு, புணர்ச்சி.
அபகர்ஷம் - தாழ்வு.
அபரத்துவம் - பின்மை.
அபிதேயம் - பெயரிட்டுவழங்கற் பாலது.
அப்பிரதீதி - விளங்காமை.
அயதார்த்தம் - பொய்.
அருத்தாபத்தி - பொருட்பேறு.
அலௌகிகம் - லௌகிகமல்லது.
அவர்ணியம் - பழித்துரை.
அவ்வியாத்தி - வியாபித்தலின்மை.
அனுற்பத்தி - உற்பத்தியின்மை.
ஆகாரம் - உருவம்.
ஆகாங்ஷை - அவாய்நிலை.
ஆசத்தி - அண்மை.
ஆசிரயம் - பக்கம், இடம்.
ஆசிரயாசித்தம் - சார்பசித்தம்.
ஆதாரம் - தானம்.
ஆதுநிகர் - இக்காலத்தர்.
ஆதேயம் - தானி.
ஆத்தன் - உரியோன்.
ஆந்தரப்பிரத்தியக்கம் - உட்காட்சி.
ஆந்தரம் - அகத்தது.
ஆபாசம் - போலி.
ஆப்தன் - உண்மையுரைப்போன்.
ஆரணியகன் - வனவாசி.
ஆரியர் - பூசிக்கப்படுவோர்.
ஆலோபம் - தீபம்.
ஆவோபம் - இடுதல்.
இச்சை - விருப்பு.
இந்திரியம் - பொறி, ஆன்மாவின் அடையாளம்.

இலக்கணம் - சிறப்பியல்பு, அடையாளம்.
இலக்கணை - குறிப்பு.
இலக்கியம் - இலக்கணமுடையது.
இலாகலம் - குன்றக்கூறல்.
இலிங்கபராமரிசம் - குறியாராய்ச்சி.
இலிங்கம் - குறி, ஏது.
உட்டணம் - சூடு.
உதாரணம் - எடுத்துக்காட்டு.
உத்கர்ஷம் - உயர்வு.
உத்துவாபம் - குறைத்தல்.
உத்தேசம் - பிரதிபந்தகப் பிரதிபந்தகம், பெயர்மாத்திரையானே பொருளை எடுத்துரைத்தல்.
உத்தேசியம் - பக்கம்.
உபதேசம் - அறிவுறுத்தல்.
உபநயம் - சமீபத்திற்கொணர்தல் திருட்டாந்தத்தைச் சார்த்திக் கூறல்.
உபபாதகம் . சம்பாதகம்.
உபமானம் - ஒப்புமை.
உபமிதி - ஒப்புமையுணர்வு.
உபயகர்மசம் - இரண்டன் கர்மத்தால் ஆவது.
உபலத்தி - ஞானம்.
உபாதி - செய்கை, பயப்பது.
உருவம் - நிறம்.
உற்பூதம்-காட்சியைப் பயப்பதொரு தருமவிசேடம், புலப்படுதல்.
ஏகாந்தம் . நியமம்.
ஏது - காரணம், இலிங்கம்.
ஏதுகர்ப்பம் - ஏதுவைத்தன்னுள் அடக்கியிருத்தல்.
ஏத்துவாபாசம் - ஏதுப்போலி.
கங்கு - தானிய விசேடம்.
கதம்பமுகுளம் - கடம்பமொட்டு.
கதம்பமுகுளநியாயம் - ஒரேகாலத்தில் எல்லாப் பக்கமும் மலரும் மொட்டு.
கதம்பம் - கூட்டம், கடம்பு.
கபாலம் - கடத்தினவயவம்.
கரணம் - முக்கியகாரணம்.
கருமம் - தொழில்.
கவயம் - காட்டுஆ
காரணம் - இன்றியமையாதது, முன்னிற்பது.
குக்குடம் - கோழி.
குணம் - பண்பு.
குணி - பண்பி.
குணில் - குறுந்தடி.
குருத்துவம் - மேம்பாடு, கனம், திண்மை.
குருமதம்
கேவலவெதிரேகி
கேவலாந்துவயி
கோசம் - சொற்பொருள் உணர்த்து நூல்.
கோசரம் - எட்டுவது.
கௌணி - குணசம்பந்தி.
கௌரவம் - மிகைபடக்கூறல்.
சககாரி - துணை.
சக்கியம் - சத்தியுடையது.
சங்கியை - எண்.
சங்கை - எண்.
சங்கேதம் - குறிப்பு.
சசவிடாணம் - முயற்கொம்பு.
சதிருசம் - ஒப்புமை.
சத்தம் - உரை, ஒலி.
சத்தி - ஆற்றல்.
சத்தை - உண்மைத்தன்மையாகிய சாதி.
சந்நிதானம் - அண்மை.
சந்நிதி - அண்மை.
சந்நிகர்ஷம் - சம்பந்தம்.
சபக்கம் - சமபக்கம், துணிந்த பொருளுக்கு இடம்.
சமவாயம் - ஒற்றுமைச்சம்பந்தம்.
சமவாயி - உபாதானம், முதல்.
சமவேதம் - சமவாயசம்பந்தத்தான் விருத்தியாயது.
சமஸ்காரம் - வாசனை.
சம்சயம் - ஐயம்.

சம்பந்தம் - இயைபு.
சம்பவம் - உண்மை.
சரு - தேவருணவு.
சலம் - ஒரு கருத்துப்பற்றிக் கூறிய மொழிக்கு வேறு பொருள் படைத்திட்டுக்கொண்டு பழித்தல்.
சலீயம் - சல சம்பந்தம்.
சவிகற்பம் - விகற்பமுளது, விசேடணத்தோடு தோன்றும் ஞானம்.
சற்பிரதிபக்கம் - உள்ளவிரோதியுடையது, மறுதலையுடையது.
சாட்சுஜம் - சட்சுஜன்னியம்.
சாதகதர்க்கம் - கருவி.
சாதருமியம் - பொதுவியல்பு.
சாதனம் - ஏது, முடிப்பது.
சாதாரணம் - பொது.
சாதி - சாமானியம், போலியுத்தரம்.
சாதித்தல் - நிச்சயித்தல்.
சாதிருசியம் - ஒப்புமை.
சாத்தம் - உரையுணர்வு,
சாத்தியம் - முடிக்கப்படுவது.
சாமயிகாபாவம் - சமயத்திற்றோற்றும் இன்மை.
சாமானியம் - பொதுமை.
சாம்சித்திகம் - தானேயாவது.
சாவயவம் - அவயவத்தோடு கூடியது, காரியம்.
சிங்நுவை - நா.
சித்தம் - நிச்சயிக்கப்பட்டது. முடிக்கப்பட்டது.
சித்தசாதனம் - நிச்சயித்ததை நிச்சயிக்க முயறல்.
சித்தாந்தம் - முடிந்தமுடிபு
சித்தி - சாத்திய நிச்சயம்.
சித்திரம் - கலப்பு.
சித்திரக்கலிங்கம் - சித்திரபடம்
சிந்து - கடல், ஒருதேசம்.
சீதம் - குளிர்ச்சி.
சுருதி - கேட்டற்குக்கருவி.
சுவர்ணம் - பொன்.
சுவார்த்தம் - தன்பொருட்டு.
செற்பம் - சாதனம் இரண்டு உள்ள தன்கண் வெல்லும் வேட்கையுடையான்கதை.
சேய்மை - தூரம்.
சைந்தவம் - சிந்துவிலுற்பவித்தது, அசுவம், லவணம்.
சையுத்தம்- சையோகசம்பந்தத்தான் விருத்தியாவது.
சையோகம் - புணர்ச்சி, வியாபியாமலிருப்பது.
சொரூபகானி - இலக்கணபங்கம்.
சொரூபம் - ஏது, இலக்கணம்.
சொரூபாசித்தம் - ஏதுவசித்தம்.
சோத்திரம் - காது.
ஞேயம் - அறியத்தக்கது.
தத்துவஞானம் - உண்மையறிவு.
தருமம் - தன்மை.
தாதான்மியம் - அதன் வடிவு.
தாற்பரியம் - சொல்வான்குறிப்பு.
திதித்தாபகம் - நிலைபெறுத்துகை.
திரவத்துவம் - நெகிழ்ச்சி.
திரவியம் - பொருள்.
திருட்டாந்தம் - காணப்பட்ட முடிபுடையது.
தீர்க்க சூகம் - நீண்டவால்.
துல்லியம் - ஒப்புமை.
துவக்கு - தோல்.
துவம்சம் - அழிவு.
துவேஷம் - வெறுப்பு.
தைசசம் - தேயுசம்பந்தம்.
தோடம் - குற்றம்.
நவீனர் - புதியர்.
நாகரிகன் - நகரவாசி.
நிகமனம் - முடிந்தது முடித்தல்.
நிக்கிரகத்தானம்- தோல்வித்தானம்.
நிண்ணயம் - நிச்சயித்தல்.
நிமித்தம் - காரணம்.
நியதம் - இன்றியமையாமை.
நிர்விகற்பம் - விகற்பமில்லது.
நிவிர்த்தி - பிரவிருத்தியல்லது.

நிஷித்தம் - தள்ளப்பட்டது.
நைமித்திகம்-நிமித்தத்தான் ஆவது.
பகிரிந்திரியம் - புறப்பொறி.
பக்கம் - சாத்தியத்தானம், ஐயுற்றுத் துணியும் பொருட்கு இடம்.
பதனம் - வீழ்தல்.
பரத்துவம் - முன்மை.
பராமரிசம் - ஆராய்ச்சி.
பரார்த்தம் - பிறர்பொருட்டு, கோடி கோடி கோடியே.
பரிசம் - ஊறு.
பரிணமித்தல் - திரிதல்.
பரிமாணம் - அளவு.
பவிடியம் - எதிர்வு.
பாகம் - தேயுசையோகம்.
பாகியப்பிரத்தியக்கம் - புறக் காட்சி.
பாகியம் - புறத்தது.
பாசகன் - பாகம்பண்ணுவோன்.
பாசுவரம் - விளக்கம்.
பாதகதர்க்கம் - கெடுப்பது.
பாதன் - சத்தியாபாவத்தையுடைய பக்கம்.
பாதிதம் - தடுக்கப்பட்டது, மறுப்புடையது.
பார்த்திவம் - பிருதிவிசம்பந்தம்.
பாவம் - உள்ளது.
பானம் - ஞானம்.
பிடரம் - கடம்.
பிரகரணம் - சந்தர்ப்பம்.
பிரகாரம் - விசேடணம், அடை.
பிரசித்தம் - வழங்கப்பட்டது.
பிரதத்துவம் - வேற்றுமை.
பிரதி - வேறு.
பிரதிஞ்ஞை - மேற்கோள், சம்மதி.
பிரதிபந்தகம் - தடை.
பிரதிபாதித்தல் - சொல்லல்.
பிரதியோகி - எதிர்மறை.
பிரதீதி - ஞானம்.
பிரத்தியக்கம் - காட்சியுணர்வு, காண்டல்.
பிரத்தியபிக்ஞை - முன்னுணர்வின் நிகழ்வு.
பிரத்துவஞ்சாபாவம் - அழிவுபாட்ட பாவம்.
பிரமா - பிரமை.
பிரமாணம் - அளவை.
பிரமாதா - காண்பான்.
பிரமேயம் - அளவையான் அளக்கற்பாலது.
பிரமை - உண்மையநுபவம்.
பிரயோசகம் - காரணம்.
பிரயோச்சியம் - காரியம்.
பிரவிருத்தி - முயற்சி.
பிராகபாவம் - முன்னபாவம்.
பிராசீனர் - பழையர்.
பிராந்தி - மயக்கம்.
பிராமாணியம் - பிரமாத்துவம்.
பின்னம் - பேதவிசிட்டம்.
பீதம் - பொன்.
பீலு - அணு.
பீலுபாகவாதி - வைசேடிகர்.
பூதம் - இறப்பு.
பேதம் - அந்நியோந்நியாபாவம்
போதகம் - ஞானம்.
மகானசம் - அடுக்களை.
மனனம் - யுத்தியால் அநுசிந்தனை செய்தல்.
மாதா - ஞாதா.
மாற்சாரம் - பூனை.
மிதி - ஞானம்.
முமூட்சு - மோட்சவிச்சையுடையான்
மேயம் - ஞேயம்.
மௌனி - மோனமுடையான்.
யதார்த்தம் - மெய்.
யத்தனம் - முயற்சி.
யவம் - வாற்கோதுமை.
யுஞ்சானன் - யோகத்தை முயல்பவன்.
யுத்தன் - யோகத்தில் முழுகினோன்.
யோகம் - காரணக்குறி, சித்த விருத்தியை நிரோதஞ்செய்தல்.

யோகரூடி - காரணவிடுகுறி.
யோகி - யோகமுடையான்.
யோக்கியதை - தகுதி.
யோக்கியம் - தக்கது.
யௌகிகரூடி - பொதுமொழி.
வத்து - பொருள்.
வர்த்தமானம் - நிகழ்வு,
வர்ணியம் - புகழ்ந்துரை.
வளி உளரும் - காற்றுவீசும்.
வன்னி - நெருப்பு.
வாக்கியம் - தொடர்மொழி, பதங்களின் கூட்டம்.
வாக்கியசேடம் - வாக்கியக்குறை.
வாச்சியம் - கூறத்தக்கது.
வாதம் - உண்மையுணர்தல் வேட்கையோன்கதை.
வாதித்தல் - தள்ளுதல்.
வாயவ்யம் - வாதசம்பந்தமாயது.
விகற்பம் - வேறுபாடு, பேதம்.
விகிதம் - விதிக்கப்பட்டது.
விசிட்டம் - விசேடணத்தோடு கூடியது.
விசேடணம் - வேறுபடுத்துவது, அடை.
விசேடம் - சிறப்பு.
விசேடியம் - வேறுபடுத்தப்படுவது, முதல்.
விதண்டை-தன் கோட்பாட்டை நிலை பெறுத்தாத கதை.
விதேயம் - சாத்தியம்.
விபக்கம் - விஷமபக்கம், துணிந்த பொருளில்லாவிடம்.
விபரியயம் - திரிவு.
விபாகசம் - பிரிவாறுவது.
விபாகம் - பிரிவு.
விபு - வியாபகமுடையது.
வியக்தி - பிண்டம்.
வியஞ்சனாவிருத்தி - குறிப்புப்பொருளின் சம்பந்தம்.
வியபிசாரம் - பிறழ்வு, நியமமின்மை.
வியவகாரம் - வழக்கம்.
வியவசாயம் - ஞானம்.
வியாகரணம் - இலக்கணம்.
வியாத்தி - உடனிகழ்ச்சி.
வியாபகம் - அதிகதேசவிருத்தி, நிறைவு.
வியாபாரம் - தொழில்.
வியாப்பியம் - நூனதேசவிருத்தி அடங்குதல்.
வியாவர்த்தகம் - வியாவிருத்தி ஜநகம்.
வியாவிருத்தி - பிரிவு, பிரித்தல்.
வியோமம் - ஆகாசம்.
விருத்தம் - மாறுகொள்வது, முரணுவது.
விருத்தி - நிகழ்ச்சி.
விலம்பம் - காலதாமதம்.
விலக்ஷணம் - இலக்கண வேறுபாடு உடையது.
விவரணம் - வெளிப்படுத்துவது.
வீசிதரங்கநியாயம்-ஆணலை பெண் அலை.
வெதிரேகம் - இன்மை, மறை.
வைசிட்டியம்-விசிட்டத்தின் தன்மை.
வைதருமியம் - வேற்றியல்பு.

மூலம், உரைகளில் வந்த

# அருஞ்சொற்களும் சொற்றொடர்களும்

( எண் செய்யுள் எண் )

1 அவதாரிகை - தோற்றுவாய்
நிர்விக்கினம் - இடையூறின்மை
பரிசமாப்தி
சிஷ்யவசனதானுபிவியத்தி
பிரகாசிக்கை
திகழ்வு - ஒளி
அங்குசம் - தோட்டி
இலட்டுகம் - மோதகம்
நின்மலம் - மாசின்மை
நித்தன் - என்றுமுள்ளவன்
காராருங்கண்டன் - நீல கண்டன்
சோமசூரியாக்கினி - சந்திரன், சூரியன், அக்கினி.
நயனம் - கண்
சீர்பாதம் - திருவடி
பாசம் - கயிறு
நிமித்தம் - காரணம்
இச்சாஞானக் கிரியாரூபம்
ஸ்ரீகண்ட பரமேசுவரன்
தியானம் - கருதுதல்
சுவரூப தடத்தலக்கணம்
2 சத்திய ஞானனந்தமயம்
தற்பரன் - தனக்குத்தானே பரமாயுள்ளோன், ஆன்மாவுக்கு அதீதமாயுள்ள சிவன்.
சத்தன் - சிவன்
அசத்தியம் - பொய்
அசித்து - அறிவில்லாதது
அனந்தன்
அதத்வியாவிருத்தி
அவத்தாதீதன்
அசிந்திய விசுவசாதாக்கியம் - ஒரு ஆகமம்
பரையாதி பஞ்சசத்திகள் - பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, ஆதிசத்தி.
ஞானசத்தி
உத்தியோகம்
சத்தன் × சத்தி
அரூபி - உருவமில்லாதவர்
உத்தியுத்தர் - சதாசிவமூர்த்தி
அரூபம் - உருவமின்மை
பரை
கலைகள் - நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தியாகலை, சாந்தி, சாந்தியதீதகலைகள்.
சுத்தமாயை - சுத்தப் பிரபஞ்சத்துக்குக் காரணமான மாயை.
ஈசானதி பஞ்சமந்திரம் - ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதங்கள்.
அருபரூபம்
புத்திமுத்தி
பிரவிருத்திகன்
பிரளயாகலர்
பிருவிருத்தர் - மகேச்சுரர்
சமவாயசத்தி - நீக்கமில்லாத சத்தி
மன்று - கனகசபை
நடம் - நிருத்தம்
தாள் - பாதபதுமம்
வாதுளம் - ஆகமங்களில் ஒன்று
பவுஷ்கரம் - ஆகமம்
மிருகேந்திரம் - ஆகமம்
3 அக்கினிக்கு உட்டணம்
பரநாதம்

இச்சை
அறிவு
இயற்றல்
விந்து
வரையான் - இமவான்
ஆக்கி அளித்து அழித்தல்
மனோன்மனி - போகசத்தி
வாமம் - இடப்பக்கம்
விரை - வாசனை
அருணமுகிழ்த்தல்
உபாதானத்திரயம் - விந்து, மோகினி, மான்.
மலபரிபாகம் - ஆணவமலம் பக்குவப்படுதல்
மூன்று அத்துவா - சுத்தம், மிச்சிரம், அசுத்தம்.
தனு கரண புவன போகம்
அபரநாதம் - அபரவிந்து, சுத்தமாயாசொரூபம்
தாரகம் - தாங்குவது
சத்தித்திரயம் - ஜனனி, ரோதயித்திரி, ஆரணி.
பஞ்ச சாதாக்கியம் - கன்ம சாதாக்கியம், கர்த்துரு சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், சிவசாதாக்கியம்.
போகசத்தி - மனோன்மனி
மகேசுரர் - சகளர் = கவுரி
பருவதராசன் - இமவான்
பரமானந்த தாண்டவம்
வாதுளம் - ஆகமம்
சந்தானகுரவர்-குமாரக்கடவுள்
அகத்தியர்
ஆறங்கம்
வேதம் நான்கு - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.
இருபத்தெட்டு ஆகமம்
சத்திய மார்க்கம்
வித்தாரம்
ஐயம் திரிபு - சந்தேகவிபரீதம்
ஒருமைப்பாடு
சீதமதி - குளிர்ந்த சந்திரன்
முடி - சிரம்
மதிமுடியோன் - சிவபெருமான்
திருமதலை - குமரன்
செல்வன் - பரம ஐசுவரியத்தையுடையவர்
ஏதம் - ஆணவாதி மறைப்புக் குற்றம்
5 கறைமிடறு - காளகண்டம்
விரவார் - சத்துரு
சுரிகை
விறல் - வெற்றிப்பாடு
சிவசாரூப்பியம்
அபரபரமேசுவரன் - நந்தி தேவர்
திரம் - நித்தியத்துவம், திடம்.
6 திருவுலாப்புறம்
யாதனை - துன்பம்
உய்ய - பிழைக்க
இருள் நிரயம்-இருண்ட நரகம்
கிருபாளு - கருணையுடையோன்
குரு - இருஷி
திரு - ஞான ஐசுவரியம்
7 துருவாசர்
அகத்தியர்
கவுதமர்
ததீசி
கார்க்கத்தியம்
அடைவு
மதலை - சிறுபிள்ளை
கரவாத - கபடமற்ற
வாதை
பரவைநாச்சியார்
8 ஆரியதேயம் - ஆரியவர்த்தம்
தாபதர்
கிருதகாடின்னியம்
முன்னுவாம் - வேறறப்பாவிப் பாம்.
சொகுரு - ஸ்வகுரு
பரமேஷ்டிகுரு

பரமகுரு
இமவற்பருப்பதம்
வங்கிசம்
சித்தி - சிவஞானமாகிய சித்தியும், எட்டுச் சித்தியும்
சிவநெறித்தேசிகர்
சிவக்கொழுந்து சிவாசாரியர்
கோமான்
பாதாரவிந்தம் - திருவடித் தாமரை.
தீவிரதரசத்திநிபாதம்
9 கிருபாவிசேஷம்
இரகசியம் - உண்மை அடைவு.
ஆன்மஸ்வரூபம்.
தேகேந்திரியாதி - தேகம், இந்திரியம் முதலியன.
மையல் - மயக்கம்
இதாகிதம்
ஆணவம் முதலியவற்றின் தன்மை.
மலத்திரயம்-ஆணவம், கன்மம் மாயை.
நித்த வியாபக சித்துருபம்
சுத்தசைதன்னியம்
பிராரத்தம் - புசித்துத்தொலைய வேண்டுவது.
சஞ்சிதம், ஆகாமியம் தீக்கை சிவபாவனைகளால் நீங்குதல்.
அனிச்சை
பரேச்சை
சச்சிதானந்தத்துவயம்
பரிபூரணம்
சிவானன்னியானுபவம்
ஆனந்தரூபி
சிவஞானம் மணம், கருணை குளிர்ச்சி, பரமானந்தம் தேன், முத்தான்மா வண்டு, ஸ்ரீ பாதம் தாமரை: உருவக அணி.
நின்மல ஞானஸ்வரூபம்
சத்தி சிவாகாரம்

அகம் பிரமம்
10 அவையடக்கம்
ஆர்வு - சந்தோஷம்
மழலை
வியத்தம்
சிதானந்தம் - ஞானானந்தம்
முமுட்சுக்கள்
பந்தம் ஆதிகள் - இலக்கண இலக்கியங்கள்
பந்தம் - இலக்கணம்
11 புறனடை
குருசரணர்
அநுபவம் - அனுபூதி
ஓர்வகை
ஐகமத்தியம்
ஞாதா
12 அதிகாரி - நூல் கேட்டற் குரியோன்
சாங்குசித்தர் - சாமுசித்தர்
பிராகிருதர்
வைனைகர் - வைநயிகர், விநய சீலர்
13 விடயம்
பிரயோசனம் - பயன்
அதிகாரம் - அதிகரித்தல்
சம்பந்தம் - இயைபு
தொடை - தொடர்ச்சி
மடை - அணை
14 சதுவிதம் - நால்வகை
வன்னம் - சாதி
வன்னாச்சிரமம் - சாதியும் ஆசிரமமும்
தன்மபலம் - சுவர்க்கம்
ஒருவினோர் - வழுவினோர்
15 பர பொருள் - பரத்திரவியம்
பிராமணர் திரவியந்தேடல்
அரையர் திரவியந்தேடல்
வைசிகர் திரவியந்தேடல்
சூத்திரர் திரவியந்தேடல்
பகிர்ந்து - பங்கிட்டு
தென்புலத்தோர்

அருத்தம்
வனிதை
புரைவு - குற்றம்
புருஷார்த்தம்
16 புண்ணிய பாபாத்மகம்
மாசு - அழுக்கு, ஆணவம்
நித்தம் - அழிவற்றது
முத்திக்கு ஆயவேண்டும்
பொருள் மூன்று
17 பிரமாணுதீனம்
பிரமேயம்
பிரமாணம் - அளவை
உத்தேசம்
இலக்கணம்
பரீக்ஷை - சோதித்தல்
இலக்கணமும் அளவையும்
இன்றேல் பொருள் சித்தி
யாது என்னும் நியாயம்
18 தன்னியல்பு - அசாதாரணம்
பொது இயல்பு - சாதாரணம்
குட்டேறு
அண்ணுர்
19 உத்தேசம் - பொருளின் பேர்
உரைத்தல்
சித்தம் - உள்ளதாகக் கொள்
ளப்பட்டது
வாயாதல் - வாயாதாதல்
மதித்தல் - விசாரித்தல்
இத்தகை - இந்தப் பிரகாரம்
ஏது பக்க சாத்தியம்
20 சைவ சித்தாந்தத்துக்குச் சிற்
சத்தி பிரமாணம்
ஐயம் - சந்தேகம்:
திரிவு - பிராந்தி
முன்னினைவு
பிரத்தியட்சம்
அநுமானம்
ஆகமம்
வியாத்தி - வியாபித்தல்
ஞேயம் - அறியப்படுவது
புந்தி - புத்திதத்துவம்
போதம் - அறிவு
விதப்புரை
பிரமை
யதார்த்தம்
திருவுள்ளக்கிடை
சமுசயம்
புத்திவிருத்தி
தாதான்மியம்
கடம் - குடம்
பாவவிற்பத்தி
மல ஆவரணம்
விஷயசம்பந்தம்
மலநிவிர்த்தி
நையாயிகர் பஞ்சேந்திரியங்
களுமே பிரமாணம் என்பர்.
21 அபிவியத்தி
அபிவெஞ்சகம் - விளக்கத்தைப்
பண்ணுதல்.
அருத்தாபத்தி - பொருட்பேறு
உவமானம்
அபாவம்
பாரிசேடம்
சம்பவம்
ஐதியம்
இயல்பு
மாறு - குற்றம்
பிரத்தியக்ஷம் மூன்றுவகை:
பஞ்சேந்திரியம், மனம், சிவ
ஞானம் முதலியன.
22 அனுமானம் இரண்டுவகை:
அருத்தானுமானம்
சத்தானுமானம்
ஆகமம் மூன்று வகை:
தந்திரம், மந்திரம், உபதேச
கலைகள்.
தந்திரகலை - கருமகாண்டம்
மந்திரகலை - உபாசனகாண்டம்
உபதேசகலை - ஞானகாண்டம்
பெற்றிமை - தன்மை
குவித்து - சுருக்கி
வித்தாரம் - விரிவு

சங்கோசம்
23 இந்திரியப் பிரத்தியட்சம்
மானதப் பிரத்தியட்சம்
சிற்பிரத்தியட்சம்
மைக்குழம்பினுள் மணி
நேத்திரம்
அந்தக்கரணம்
பிரேரிதம்
ஈசுவர தத்துவம்-கலை, வித்தை, அராகம்
காசம்
புலன் - விஷயம்
பாகியேந்திரியம்
அலமாரும் - அமைவுபெருமை
அலமரல் - சுழலல்
பொறி - பஞ்சேந்திரியம்
அகம் - உள்
24 புறக்கருவி - சுரோத்திரம் முதலியன
உட்கருவி - மனோகங்காரபுத்தி
விஞ்ஞானப்பிரத்தியட்சம்
பரிபூரணம்
சுவானுபவம்
சிவஞானப் பிரத்தியட்சம்
ஞாதாக்கள்
25 ஐயம் - சந்தேகம்
தர்மம் - அடையாளம், குறி
விசேஷதரிசனம்
விபரியயம்
நிருவிகற்பப்பிரத்தியட்சம்
சவிகற்பப் பிரத்தியட்சம் - பேர், சாதி, குணம், கன்மம், பொருள் என்னும் ஐந்து வகையாலும் விசாரித்தல்.
26 அனுமானப்பிரமாணசொரூபம்
வியாத்தி
அநுமானம்
வன்னி - அக்கினி
தருமி - பக்கப்பொருள்
தருமம் - துணிபொருள்
தருமாத்தருமி
காரியாத்காரணானுமானம் - காரியத்தால் காரணத்தை அறிதல்
காரணாத்காரியானுமானம் - காரணத்தால் காரியத்தை அறிதல்
மேகவியந்தி
உவமானுனுமானம்
நிகர்பக்கம் - சபக்கம்
அலாப்பக்கம் - விபக்கம்
கேவலான்னுவயி
கேவலவெதிரேகி
சாத்தியதருமம்- துணிபொருள்
சந்தித்தம்
நிச்சயிதம்
அடுக்களை - அட்டில்
சாத்தியம் - துணிபொருள்
வெதிரேகவியாத்தி
விபக்கசாத்தியம்
அதிட்டித்தல்
சத்து
பிரதக்கினை
சபக்கேசத்துவம்
விபக்காத்வியாவிருத்தி
அபாதித விஷயத்துவம்
அசற்பிரதி பக்கத்துவம்
27 சுவார்த்தம்
பரார்த்தம்
வியாப்தி
பரன்
உபநயம்
நிகமனம்
பஞ்சமியந்தம்
பரதரிசிப்பித்தல்
பரமாத்தன்
28 ஏத்துவாபாசம்
அனுமானத்தின் குற்றம் ஐந்துவகை
அசித்தன் பத்துவகை
அசித்தன்பதினொருபேதம்
சொரூபாசித்தன்

பாகாசித்தன்
ஆசிரயாசித்தன்
விசேஷணுசித்தன்
விசேஷியாசித்தன்
அப்பிரமேயம்
உபயாசித்தன்
அதீந்திரியம்
ஏத்துவஞ்ஞானுசித்தன்
அதிகரணுஞ்ஞானசித்தன்
திரவியாரம்பகம்
கடாரம்பகம்
விஷயீகரித்தல்
அன்னியதராசித்தன்
வியாப்பியத்துவாசித்தன்
ஔபாதிக வியாப்பியத்துவா
சித்தன்
அருத்த ஏத்துவாபாசன்
அனைகாந்திகன்
வியபிசாரம்
அனத்தியவசிதன்
அன்னுவயானுமானம் ஐந்து
வகை
விசுவம் - உலகம்
சந்ததம் - எப்பொழுதும்
அருத்தாபத்தி பாதிதன்
பாதிதவிஷயன்
காலாத்தியாபதிட்டன்
பிரத்தியட்சபாதிதன்
அனுமானபாதிதன்
உபாதானம்
ஆகமபாதிதன்
29 சச்சிதானந்தம் - சத்துச்சித்து
ஆனந்தம்
சத்து
சித்து
நிருவிகற்பஞானம்
ஆனந்தம்
சொரூபலக்கணம் - சிறப்பிலக்
கணம்
அகண்டம்
காலதேசவஸ்துக்கள்
நித்தியம்
அநாதி
பொறி
கரணம்
குறி
குணம்
பூரணம்
அமலம்
பரிபாககாலம்
பராசத்தியோகம்
சர்வஞ்ஞத்துவம்
பஞ்சவன்னம்
சூக்குமம்
சருவவியாபி
மகத்துக்கு மகத்
சேட்டித்து
சடசிதான்மகம்
பரஞ்சோதி
சுவானுபவவேத்தியம்
30 மோகப்பிராந்தி
செகத்காரியஏது
மூத்தித்தாகம்
பரபோகம்
தடத்தலக்கணம்
31 மந்திரமே தனு
மூர்த்திகள் ஐந்து
பஞ்சகிருத்தியம்
அனவரதம்
தகைதல் - பந்தம்
பிரபஞ்சாதீதம்
இயல்பு - நித்தியசுபாவம்
பிரபஞ்சம்காரியம்
32 கடபடங்கள்
காரியகர்த்தா
குலாலன் - குயவன்
தந்துவாயன்
தரணி
சர்வஞ்ஞத்துவாதி
பிரேரிப்பித்து
பிரபஞ்சோபாதானகாரணம்
காரியகாரணம் - கன்மம்

கிஞ்சிக்ஞர்
பிரவிருத்தி
உபாதானத்திரயம் - விந்து, மோகினி, மான்.
தத்துவதாத்துவிகம்
சாதாரணம்
அசாதாரணம்
யதாவத்
கர்த்து, அகர்த்து
அந்நியதாகர்த்து
சுவதந்திரம்
சித்தம்
கர்த்திருத்துவம்
காலாதிகள் - காலமுதலியன
33 பிரகாரம்
காயாதி - காயம் முதலியன
காயாவான்
தேகி - தேகத்தையுடையான்
அவத்தைமுடிவின்று - அனவத்தை
காலம் அரூபம்
சந்நிதிமாத்திரம்
34 காய அனல் – உதராக்கினி
கன்ம சமூகம் – வினையின் கணங்கள்.
பிரேரகம் - ஏவல்
சிதசிதாத்மகம் - சித் அசித் ஆத்மகம்
சமவாயசத்தி
அந்நியோந்நியவிரோதம்
விகாரவான்
கர்த்திருத்துவம் இருவகை
சங்கற்ப கர்த்திருத்துவம் இருவகை
கதிரோன் - சூரியன்
கமலாதிகள்
ஆதிசிருட்டி
35 அமலதை
எள்ளுக்குள் எண்ணெய்
36 அன்னியோன்னியாசிரய தோஷம்
சங்காபரிகாரம்
மும்மலமும் நெல்லினுக்கு உமி, தவிடு, முளைபோல
மாயை கன்மங்கள் அநாதி
புண்ணிய பாபாத்மகம்
கொட்டை முந்தினதோ பனை முந்தினதோ
37 பசு இலக்கணம் : பொது இயல்பு, தன்னியல்பு
விருத்திஞானம்
அஞ்ஞாஞவிருதன்
நாஞகாரதை - நாஞவிதம்
புசிப்பு - போகம்
விபு
38 மானம் - அபிமானம்
இதாகிதரூபம்
வர்த்திக்க
சரித்தல் - திரிதல்
தற்பதவாச்சியம்
அவத்தை மூன்று: கேவல, சகல, சுத்தம்.
39 கேவலம் ஆணவத்தால்
சகலம் மாயையால்
சுத்தம் கிருபாசத்தியால்
கிருபாசத்தி
சகசம்
அநாதிசித்தம்
பவத்துவக்கு
மூன்றவத்தைகளும் பதினைந்து பேதம்
40 ஆன்மாக்கள் மூவகை
பிராகிருததேகம்
சகலர் இலக்கணம்
41 அசுத்தாத்துவா
மான் – பிரகிருதி
பரிகாரம் - பிராயச்சித்தம், கழுவாய்.
கலாசோதனை
பிரளயாகலர் இலக்கணம்
42 அபரமுத்தர்
தீவிரதர சத்தி நிபாதம்

விஞ்ஞானகேவலர் இலக்கணம்
விசித்திர மலபரிபாகம்
போகதத்துவம் - சதாசிவ
தத்துவம்
விசுத்தபோகம்
சிவேச்சையாதல்
காலகலாதிகள் சுத்தமாயையிலு
முண்டு; அவை விந்துவில்
உண்டாயின.
அகலர்
43 சிவனுக்கும் பிரபஞ்சத்துக்கும்
அந்நியமாக எண்ணில்லாத
உயிர்கள் உண்டு
44 பரிசேடம் - பாரிசேடம்
சித்தம் - சித்தித்தது
ஆன்மலக்கணம்
45 போதம் - சிவஞானம்
அநுபூதி - சிவானந்தானுபவம்
46 பாச இலக்கணம் இருவகை
திரோதாயிகம்
பாசம் ஐவகை
ஆணவ இலக்கணம்
திரோதாயி இலக்கணம்
மோக முதலிய ஏழ்குணம்
47 சருவஞ்ஞதை
சுதந்திரதை
மோட்சம் - விடப்பட்டது
48 ஆதிசத்தி - திரோதசத்தி
திரோதசத்தி ஆன்ம ஞானத்
தைத் தடாது
ஞானத்துக்கு ஞானம்
பகையன்று
ஆணவம் சடம், ஞானவிரோதி
கன்மமும் ஆன்மஞானத்தைத்
தடாது
49 கன்மம் புண்ணிய பாபாத்மகம்
பாபம் அஞ்ஞானரூபம்
புண்ணியம் பிரகாசரூபம்
எவ்வம் - ஏவம் - துன்பம்
50 ஆணவம் ஆன்மஞானத்தை
மறைக்கும்
அறியாமை ஆன்மகுணமன்று
ஆன்மா ஞானசொரூபி
அஞ்ஞானம் ஆணவத்தின்
குணம்
திரோதசத்தி பிரேரணை
கலாதிகள் ஒளியே
மாயை விளக்கும்
உபாதானகாரணம் மாயை;
மாயை இருள்வடிவன்று
ஒருபொருளே இருளும்
ஒளியுமாயிராது
சித்தினுக்குக்குணம் சித்தே
அஞ்ஞானம் அறியாமை
51 தீபகாரணமான வன்னி
ஒளியுடையது
கலாதிகளுக்குக் காரணம்
மாயை
அறிதொழிலை மறைப்பது
ஆணவம்
52 ஞானத்தின் அபாவம்
அஞ்ஞானமன்று
அபாவம் நான்குவகை; எஞ்
ஞான்றும் அபாவம், முன்ன
பாவம், அழிவுபாட்ட பாவம்
ஒன்றினொன்றபாவம்.
சர்வஞ்ஞதை
53 மலத்தால் ஆன்ம அறிவு
தடைப்படும்
கலாதிகளால் அற்பம் அறியும்
திருவருளால் முற்றறிவுண்டாம்
54 ஆவரிக்கும் - மூடிக்கொள்ளும்
55 பரிக்கிரகசத்தி - சுத்தமாயை.
குடிலை, குண்டலினி, விந்து,
மகாமாயை.
56 கிரியாசத்தியும் அசுத்தமாயை
யும் சர்வப்பிரபஞ்சத்துக்கும்
காரணமன்று.
விசுவம் - உலகம்
சடத்துக்குக் காரணம் சடமே
சித்து சடமாகாது
சுத்தமாயைஉபாதானகாரணம்

விந்துத் தரும் தனு முதலியன
57 அசுத்தமாயை - அதோமாயை
58 கன்மலட்சணம்
அதிட்டம்
பரிகாரம்
பிராயச்சித்தப் பிரதிபாதகம்
மனோவாக்காய சன்னியம்
கன்மம் புண்ணிய பாவ
சொரூபம்
59 மந்திரோச்சாரண முறை
ஹ்ரஸ்வ, தீர்க்க, புலுதம்
60 கன்மபலம் இருமையிலும்
பலவத்
வாசனுன்மகம்
61 தேமாவாதி
பிரவாகாறுதி - ஆற்று
நீரொழுக்கு
கன்மம் உண்டு என்பதற்குப்
பிரமாணம்
கன்மத்துக்கு மூலகாரணம்
கார்மணம்
62 பஞ்சமலங்கள்
63 பாசங்கள் ஆன்மாவைப்
பந்திக்கும்; சிவனைப் பந்தியா
பதிவிபு
64 அவகாசம் - இடம்
65 நிர்விடம் பச்சைநாவி
அரவும் விடமும்
66 இங்கு - பெருங்காயம்
67 சமவாயம் - ஒற்றுமைச்
சம்பந்தம்
தாதான்மியம் - எக்காலத்தும்
விட்டு நீங்காமை
அநாதிசையோகம்
சையுத்த சமவாயம்
68 சிவன் பஞ்சகிருத்தியம்
உபாதானகாரணம்: மாயை
துணைக்காரணம் : கன்மம்
பாரிசேடம் - ஒழிபு, எஞ்சியது
கன்மானு குணமாக
ஐந்தொழில்

69 எண்போது - கருதுமிடத்து
சிவனும் சீவனும் சரியாகார்
உயிரறிவு கண்ணொளி;
கடவுளறிவு கதிரொளி.
உயிர் காண்பது; சிவன்
காட்டுவது.
உயிரிச்சை உண்ணுதல்;
சிவனிச்சை ஊட்டுவித்தல்.
பண்ணுதல் உயிர்க்கிரியை;
பண்ணுவித்தல் சிவன்கிரியை.
70 தன்மை முதலிய மூன்றால்
உணர்த்துதல்
71 பஞ்ச சத்திகளின் தோற்றமும்
தொழிலும் (72, 73)
அங்குரித்தல் - தோன்றுதல்
பிரவிருத்தி
உபாதானத்திரயம்
74 சத்தர் - இலயர், சாந்தர்
உத்தியுத்தர் - போகர்,
சதாசிவர்
பிரவிருத்தர் - அதிகாரர்,
ஈசுவரர் சத்தர் நிட்களர்
75 சூக்கும பஞ்ச கிருத்தியம்
சத்தருடைய சமவாயசத்தி
பரிபாகம்
புவனுதாரம்
சுத்தாசுத்தப் பிரபஞ்சம்
காரியோன்முகம்
அட்சரான்மா
சத்தப்பிரபஞ்சம்
76 அதோபாகம்
யோகமாயை
பிரபஞ்சயோனி
நிமித்தம்
உபாதானம்
77 அம்பிகைபால் பதினறு
சத்திகள்
நாதம் சூக்குமை என்னும்பேர்
நாதத்தில் விந்து உண்டாம்
பைசந்தி.
78 பைசந்தி

மத்திமை
வைகரி
வன்னம்
79 அகரம் வாமை சேட்டை
ரௌத்திரியாம்
குண்டலாகாரை - வாமை
தண்டாகாரை - சேட்டை
கலைக்கொம்பு - இரௌவுத்திரி
கேகயமாய்க்கொண்டு அகரம்
பிரமமெனல்
உபாதானம்
ஆகாராதி பதினைந்து
ககாராதி முப்பத்தைந்து
சயையாதி பதினாறு சத்திகள்
மத்திமைவாக்கு
வைகரிவாக்கு
80 அகாராதி உயிரெழுத்தைச்
சிவனதிட்டித்தல்
ககாராதி முப்பத்தைந்தைச்
சத்தியதிட்டித்தல்
வாகீசர் வாகீசுவரி
தூயோன் - நின்மலர்
ஐங்கலை-நிவிர்த்தியாதி கலைகள்
81 நால்வகைவாக்குகளும் ஐங்கலை
களிலும் உள.
திரையும் கடலும்போல
பிரதமபந்தம்
ஆன்மா சிவஞானம் பெறுங்
காலத்து ஆணவபந்தத்
துடன் வாக்குகளும் நீங்கும்.
அந்தகாரம்
பரிதி முன் உடு
ஒளியும் இருளும்போல
82 அதிட்டித்திட - பிரேரித்திட
சிவன் சத்திப்பேர் நாத விந்து
களுக்காதல்.
பவன் - சிவபெருமான்
சுத்தமாயையில் சுத்தகாலம்
தாத்துவிகரூபம்
அபரமுத்தித்தானம்
அணுசதாசிவர்
சாதாக்கியம்
83 கிருத்தியம் - தொழில்
துவாரா - மூலம்
சிவன் சடத்துவவியாபி
சத்தி சத்திமான்
சுந்தரம் - மனோகரம்
84 சதாசிவத்துக்குநாயகர்
கன்மசாதாக்கியர்
பரையாதி பஞ்சசத்திகள்
பரிதி - சூரியன்
காந்தம் - சூரியகாந்தக்கல்;
சூரியகாந்தக்கல்லில் தீத்
தோன்றுதல்
கலாசத்தி ஐந்து
ஈசானாதி சத்தி ஐந்து
பஞ்சமந்திரசத்தி
தோற்றரவு
கன்மசாதாக்கியருக்குப்
பஞ்சமந்திரசத்திதிருமேனி
85 சதாசிவர் ரூபாரூபம்
சுத்தமாயையில் பரையாதி
பஞ்சசத்திகள்
பஞ்சமந்திரங்கள் ரூபாரூபம்
உத்தியுத்தர்
போகத்தர்
சதாசிவர் அநுக்கிரகம்
86 ஈசானாதி ஐந்தும் திருமேனி,
இச்சாஞானக்கிரியை அந்தக்
கரணம்
தனு - திருமேனி
அந்தக்கரணம் - உட்கருவி
ஆரணிமுதலிய மூன்று சத்தி
கள் முக்குணங்களாம்
வாசாமகோசரம்
வாமாதி நவசத்தி
மருங்கு - பக்கம்
ஆசு - அஞ்ஞானம்
பருவம் - பரிபக்குவம்
பஞ்சகிருத்தியம் - ஐந்தொழில்
87 சாதாக்கியம், ஈசுரம், சுத்த
வித்தைகளில் 18 புவனங்கள்

இருவினை - புண்ணியபாவம்
விஞ்ஞான கேவலர்
88 சத்திபாதம் - சத்திநிபாதம்
நூனம் - குறைவு
அதிகம் - மிகுதி
சத்திநிபாதம் ஐந்துபேதம்
சிவதத்துவம் அபரமுத்தித் தானம்
ஷாட்குணம்
சிவதுல்லியம்
89 இருள் - ஆணவமலசத்தி
சர்வஞ்ஞத்துவாதி குணங்கள் வியாபகம்
மட்டில்லா - அளவில்லாத
போகம் ஆர-போகம்பொருந்த
பரிபாக தாரதம்மியம்
மூன்று பேத ஆன்மாக்கள் - அணுசதாசிவர் ஈசுரர் உருத் திரர்
90 விஞ்ஞானகலருடைய தனு கரணாதிகள் பிரகாசரூபம்
விஞ்ஞானகலர் பரமோட்சம் பொருந்துதல்
மெய்ஞ்ஞானம் - சிவஞானம்
91 சதாசிவமூர்த்தி ஐம்முகங்களால் வேதாகமமாதிதோற்றுவித்தல்.
மகௌகப்பிரகாரம் பிரதிசங்கிதாப்பிரகாரம்
பிரணவாதி சிவர் பதின்மர்
அநாதி ருத்திராதி பதினெண்மர்
ஆகமங்கள் இருபத்தெட்டு
அட்டவித்தியேசுரர்
அநந்தேசுரர்
92 தியானபூசா நிமித்தம்திருமேனி கொள்ளல்
சத்தர் - அரு, ஞானம்
உத்தியுத்தர் - ரூபாரூபம்
ஞானம்-கிரியைசமம்
பிரவிருத்தர் - ரூபம்; கிரியை அதிகம்
பதி : மூன்றவத்தை
தியானபூசை-தோத்திரம்
93 பிரவிருத்தருக்குப் பிரபஞ்சமே திருமேனி; பிராணனுமாவார்
சதாசிவர் : பிரகாசரூபர்; மேலான காரணர், தியானம் பண்ணப்படுமவர்.
சத்தர் அதீதநிலை: தியானித்தற்கு அரியர்
மாசர் - அஞ்ஞானிகள்
94 ஆயிரத்தொரு வங்கிசம் - ஆயிரத்தில் ஒரு அம்சம்
மகேசர் இதயத்தில் உருத்திரர், வலத்தில் அயன், இடத்தில் மால் தோன்றுவர்
அடைவே - முறையே
சுருதி - வேதம்
வேதசிவாகமம் அபரஞானம்
காற்று - வாயுபகவான்
மகேசுரமூர்த்தம் இருபத்து ஐந்து.
95 களம் - கண்டம்; கணேசர்
இதயத்து ஆறுமுகர்
கன்னம் - கபோலம்; கீலகம் உரோமத்தில் முனிவர்
உரோமகூபம்
உதரத்துத் தேவர்கள்
உலகு - பிரபஞ்சம்
நிமித்த உபாதானம்
குலாலன் - குயவன்
அபின்ன நிமித்தோபாதானம்
காரியோன்முகவிஜ்ரும்பணம்
கடகாரியம்
மிருத்பிண்டம்
ஜனிப்பிக்கை
உபாதானதை
96 மகேசுரர்: சுத்தவித்தை
ஸ்ரீ கண்டருத்திரர் கலையில் தோற்றுவிப்பன சீகண்டர்
பிரமவிஷ்ணுக்களுக்கு அநுக் கிரகித்தல்

97 சீகண்டருத்திரர் சகலருக்குப்
பரதத்துவர்
சீகண்ட ருத்திரரே பூசாபலம்
அருளுபவர்
கன்மசாதாக்கியர் சுத்தாத்துவ
வாசி
சகலருக்குச் சுத்தாத்துவா
போகம் கூடாது
சீகண்டர் அசுத்தாத்துவா
பதியாய் நிற்றல்
98 மகேசுரர் பரமோட்சம் கொடுத்
தல்
சுத்தவித்தையில் அணுருத்திரர்
பிரபஞ்சநாசத்தில் பரமோட்சம்
99 அசாதாரணதத்துவம்
சாதாரண தத்துவம்
தாத்துவிகங்கள் உண்டாக்கு
தல்
100 மகேசுரர், சீகண்டருடைய
பிரபஞ்ச கிருத்தியங்கள்
மாயாதத்துவங்கள்
மான் தத்துவத்தின் பரியாயப்
பெயர்
101 கலாதி பஞ்சதத்துவகிருத்தியம்
102 புருடதத்துவோற்பத்தி
தொழில்கள்
அங்கி - அக்கினி, பிரகிருதி -
மான்
அவித்தை
பஞ்சகஞ்சுகம்
புருடதத்துவபந்தம்
காலருத்திரர் - காலாக்கினி
ருத்திரர்
முடவனைக் குருடன் கொண்டு
திரிதல்
103 குண அதிஷ்டிதர்
104 உரம் - திடம்
மான் பிரகிருதி: இதன்
அதோபாகம் சித்தம்.
குணதத்துவம்
புத்திதத்துவம்
நிச்சய ஆன்மா
வாசனான்மா
புத்திதத்துவபாவபேதம்
105 புத்திபாவாஷ்டகம்
தர்மம் ஞானம் வைராக்கியம்
தோன்றுதல்
ஐசுவரியத்தோற்றம்
தாமதகுணத்தால்தோன்றுவன
106 தருமம் இருவிதம்
ஞானம் ஐந்துவிதம்; பத்து
விதமுமாம்
வைராக்கியம் பத்துவிதம்
ஐசுவரியம் எட்டுவிதம்
அதர்மம் இரண்டுவிதம்
அஞ்ஞானம் ஐந்துவிதம்
அவைராக்கியம் பத்துவிதம்
அனைசுவரியம் எட்டுவிதம்;
ஆக ஐம்பதுபேதம்
பஞ்சாசத்பாவம்
107 பிரகாசம்
லகுதை
உபஷ்டம்பம்
சலனம்
குரு
வரணகம் என ஆறு குணம்
பிரேரித்தல் - செலுத்துதல்
சந்தமுறும் - சந்ததமுறும்
அகங்காரம் மூன்றுவிதம்
110 மனமும் பின்ஞானேந்திரியமும்
காகத்தின் விழி
111 குறி - ரூபம்
நயனம் - கண்
112 காரண தன்மாத்திரை
புரியட்டகதேகம்
113 புரியட்டகம் சூக்குமரூபம்
யாதாயாதம்
114 உற்பூத சத்தம்
அனுற்பூத சத்தம்
துவந்தித்தல்
115 பூதங்கள் தோன்றும் வேதக்
கருத்து

காரணத்தின் தன்மை
காரியத்தில்
116 அகங்காரம்
ஆதார இலக்கணை
சித்தில் அசித்து உதியாது
119 பஞ்சபூத பஞ்சீகரணம்
அன்னியோன்னியம்
வியாபித்தல்
பூதகாயம்
பரிணாமசரீரம்
பூதசாரதேகம்
120 பஞ்சபூதவடிவம் முதலியன
121, 122 பூதங்கள் வியாபித்து
நிற்றல் முதலியன
123 அநுப்பிரவிஷ்டர்
அநுசூதம்
பிரேரகம்
சுத்தம் - 5
சுத்தாசுத்தம் - 7
அசுத்தம் - 24
124, 125 ஞானேந்திரியதேவதை,
கன்மேந்திரிய தேவதை,
அந்தக்கரண தேவதைகள்
126 அராகதத்துவ தேவதை
முதலியன
விஷயபோக ஐகமத்தியம்
127 வியாபித்து
புரைவு அற - பின்னமற
திரை நுரை திவலை
128 சுத்தவித்தை முதலியன
129 தத்துவத்தேர் உருவகம்
130 சாதாரணம்
அசாதாரணம்
131,132 தாத்துவிகங்களின் பேதம்
133 சுத்ததத்துவங்கள் சித்து
சத்திகள் ஐந்து
பிரேரித்தல்
அதிட்டித்தல்
விஞ்ஞானகலருக்குத்தனு
134 சிவசத்தி பிரேரித்தல்
சுத்தாசுத்த தத்துவம்
பிரளயாகலருக்குத்தனு
சகலருக்குத்தனு
135 பிரேரககாண்டம்
போகசயித்துருகாண்டம்
போகபோக்கியகாண்டம்
136 உபாதானகாரணம்
சத்தி சிவம் மாதா பிதா
138 சுத்த மாயையில் பஞ்சகோசம்
,, ஆனந்தமயம் விஞ்ஞான
மயம்
அதோமாயை
மனோமயம், பிராணமயம்
அன்னமய கோசங்கள்
139 அன்னமயகோசம்
சூக்குமதேகரூபி
சூக்குமத்தில் தூலசரீரம்
சூக்குமபூதத்தில் தூலதேகம்
140, 141 சூக்கும பஞ்சபூதகாரியம்
தூல உடல்
142 அஞ்ஞானிகளுக்கு முத்தியில்லை
143, 144 கேவலாவத்தை சகலா
வத்தைகள்
145 சுத்தாவத்தை
சத்திநிபாதம்
திஷ்டசென்மபோக்கியம்
அதிஷ்டசென்மபோக்கியம்
நியதகாலபோக்கியம்
துவிசவதகன்மம்
கௌருச்சியோமம்
பலாதிக்கம்
காலாந்தரம்
துர்ப்பலம்
பிரபலம்
கேவலம் பதினைந்தவத்தை
146 தாத்திகம் பதினைந்து
கேவலசாக்கிரம்
உளம் - ஆன்மஞானம்
முகத்தானம்
சகலாவத்தை
சுத்த தத்துவங்கள் 5, மாயை
முதல் 7. பூதங்கள் 5 ஆக 17.

ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, காரணதன்மாத்திரை 5, அந்தக்கரணம் 4, பிராணாதி 10, வசனாதி 5 ஆக 34-ம் ஆன்மவிருத்தி ஞானமும் ஆக 35.
பிரேரககாண்டம்
போகசயித்துருகாண்டம்
அப்பிரதிபாசாக்கிரம்
147, 148 பிரேரகம்
ஞானேந்திரியம் - அறிகருவி
கன்மேந்திரியம் - தொழிற்கருவி
களம் - கண்டம்
கண்டத்தில் 25: சொப்பனம் காரணதன்மாத்திரை 5, அந்தக்கரணம் 4, பிராணாதி 10, வசனாதி 5, ஆன்மவிருத்தி ஞானம் 1 ஆக 25.
இதயம் 3 : சுழுத்தி சித்தம் 1, பிராணவாயு 1, ஆன்மவிருத்தி ஞானம் 1, ஆக 3.
நாபித்தானம் 2: துரியம் பிராணவாயு 1, ஆன்மவிருத்திஞானம் 1, ஆக 2.
மூலாதாரம் 1; அதீதம் ஆன்மவிருத்தி ஞானம் 1.
நித்தியகேவலம் - துரியாதீதம்
149 சகலத்தில் துரியாதீத முதலியன
கேதம் - துன்பம்
சாக்கிரமுதலியன
150 கேவல சகலங்கள்
யதாவத்தாக
வேதோக்தாசாரம்
151 வன்னம் நான்கு
ஆசிரமம் நான்கு
சிவாகமோக்ததன்மம்
சிவாகமோக்தப் பிரகாரம்
உத்தியோகிப்போம்
152 சமயதீக்கை; சமயதீக்காதிகாரம்
தாரணம் - தரித்தல்; அவனி - பூமி
அனுட்டானம்
153 விசேடதீக்கை
விசேடதீக்காதிகாரம்
ஆகமாத்தியயனம்
நூனாதிகம்
கிரியாபாதானுட்டானம்
சாமீபம் - சமீபித்தல்
புவி - பூமி
சடாமகுடம்
அட்டாங்கயோகம்
யோகபாதானுட்டானம்
சாரூபம்
154 ஆகத்தில் - சரீரத்தில்
பொன்றிடுங்கால் - நசிக்கும் காலத்து
பரஞானம் - சிவஞானம்
மலபரிபாகம்
சத்திநிபாதம் - சிவசத்திபதிதல்
பாகம் - பக்குவம்
155 இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதங்கள் உண்டாதல்
சத்திநிபாதம் நால்வகை
சரிதை - சரியை
சமன் - சமபலம்
பருவம் - பரிபக்குவம்
உத்கிருஷ்டர்
அவதரம்
முற்பிற்பாடற
சகதேக பந்து
அபிவியத்தி
அதிகாரநிவிர்த்தி
156 நிவிர்த்திசத்தி
விரத்தி - வைராக்கியம்
மந்தசத்திநிபாதம்
பதிட்டாசத்தி
முன்னில் - விசாரிக்குமிடத்து
மந்ததர சத்திநிபாதம்
தரப்புப் பிரத்தியயம்நூனத்தில்

தீவிர சத்திநிபாதம்
உபசாந்தி
தீவிரதரசத்திநிபாதம்
தரப்புப்பிரத்தியயம்அதிகத்தில்
157 தாரதம்மியம்
சிவசத்தி மந்தாதியான நாலு பெயர் பெறுதல்
158 தேகி - ஆன்மா
அணிமாதி எட்டுச்சித்தி
புத்திரமித்திரகளத்திராதி
மோசிப்பார் - விடுவிப்பார்
உத்தியோகம்
159 ஆசாரியமூர்த்தியை அதிட்டித்தல்
உக்தலட்சணலட்சிதர்
நிமலன்
விடகாரி
விடவைரியான கருடப்பார்வை
அஞ்ஞானவைரி சிவபாவனை
பரிசவேதி
சிவ அத்தம் வைத்தல்
ஔத்திரி தீக்கை
160, 161 சத்திநிபாதானுகுணம்
அத்துவாசோதனை
மந்தசத்திநிபாதர் முதலியோருக்கு முத்திக்காலம்
162 சத்தியோநிருவாணதீக்கை
சஞ்சிதம் பிராரத்தம்
அகண்டகாரதை
163 சாம்பவதீக்கை செய்யும் விதம்
நிருவாணதீக்கை இருவகை
கருடபாவனை
பாசம் நீங்கப் பார்த்தல்
பரிசத்தால் மாயாபந்தம் நீங்குதல்
போகத்தைப் பண்ணும் கன்மங்கள் நீங்க மூலமந்திரம் உபதேசித்தல்.
164 நிருவாணதீக்கை கிரியாவதி ஞானவதி என இரண்டு
நானுதிகம்
கிரியாலோபம்
உத்தப்பிரகாரம்
உதாத்த அனுதாத்தப் புலுதம்
165 மூவகை ஆசாரியர்கள்
சாம்பவதீக்கை செய்தற்குரியார் ஞானசாரியாரே.
போதகன் ஔத்திரிதீக்கை செய்து ஆகமப்பொருளைப் போதிப்பன்
சாதகன் கிரியாதீக்கை செய்து தந்திர மந்திரங்களைப் போதிப்பன்.
ஞானசாரியர் அநுக்கிரகத்தாலேயே சிவானுபவமுண்டாம்.
166 நிருவாணதீக்கை உலக தருமிணி, சிவதருமிணி என இருவகை. அவை நிர்ப்பீசம் சபீசம் என இருவகைப்படும். சிவதருமிணி தீக்கைக் குரியவர், நிர்ப்பீச தீக்கைக் குரியோர் இவரென்ல்.
167 ஔத்திரி முதலான தீக்கைக் குரியோர். சங்கர சாதியர்க் குரிய அதிகாரம். அநுலோமர் அறுவர், புரஸ்ஸரம்.
168 சைவநெறிக்குரவராவார் அபேயபானுநிரகிதர், இவர்க்கு இவர் ஆசாரியரெனல்.
169 இருவகைக்குரவர்
விரத்தாசாரியர்
கிருகத்தாசாரியர்
சிரேட்டராவார் இவர் எனல்
விரதசமாப்தி
ஆசென்மப்பிரமசாரி
உத்கிருஷ்டம்
170 அதிவன்னச்சிரமி சிறந்தோன்
அதிவன்னச்சிரமி சாம்பவ தீக்கைசெய்வான்
வானப்பிரத்தாசாரி மூவர்க்கும் குரவன்

சந்நியாசி நால்வருக்கும் குரவனுவான்
169, 170 ஆசாரியன்பேதமும் ஆச்சிரமங்கள் ஒன்றுக்கொன்று அதிகம் என்பதும் அவர்கள் செய்யும் தீட்சாக்கிரமங்களும்
171–1 ஆசாரியன் இலக்கணம் முதலியன.
175 முன்னே சொல்லப்பட்ட இலக்கணங்கள் பொருந்தாதவனுயினும் சிவஞானம் உடையவனே ஆசாரியனுவான்.
176–7 தம்மை அடைந்த சீடன் பக்குவ நிலையைச் சோதித்தறிதல். அதற்குத்தக தீட்சைபுரிதல், பரிசோதிக்கும்முறை
178–183 ஆறத்துவாக்கள் மந்திரங்கள் ஒன்றிலொன்று லயமாதல், ஆன்மாவைச் சிவத்தில் சேர்த்தல், பின்பு பிராரத்ததேகத்திலே நிறுத்துதல் ஐந்து கலைகளிலும் மந்திரம் முதலியன நிற்கும் முறைமை.
184 ஆசாரியருடைய அநுக்கிரகம் பெற்றேர் நிற்கும் நிலையை உவமை முகத்தால் விளக்குதல்
185 அநாதி நித்தியமாயுள்ள ஆணவமலம் ஆன்மாவை விட்டு எப்படி நீங்கும் என்பது.
186 ஆணவ முதலிய பந்தங்கள் நீங்கியும் சர்வஞ்ஞத்துவம் முதலிய குணங்கள் விளங்காமைக்குரிய காரணங்கள்.
187 தடைப்பட்டு நின்ற சத்திகள் நீங்குதற்குரிய ஏது.
188 சீவன்முத்தர்கள் சர்வஞ்ஞத்துவாதிகள் சிவராகம் முதலியன பொருந்திநின்று தேகாந்தத்தில் பரமமுத்தியடைதல். சிவராகமாத்திரம் பொருந்தித் தேகாந்தத்தில் பரமமுத்தியடைதல் என்பன.
189 சர்வஞ்ஞத்துவாதிகள், சித்திகள் பெற்றும் பயனில்லை. சிவஞானம் வாயிலாகச் சிவாநுபவம் பொருந்தி நிற்றலே சிறப்பு.
190 நின்மலசாக்கிராவத்தை
191 நின்மலசொப்பனம்
192 நின்மலசுழுத்தி, நின்மல துரியாவத்தை.
193 நின்மல துரியாதீதம் வைதிக சைவசுத்தாத்வைத முத்தி
194-6 சைவரல்லாதோர் கூறும் தசவித முத்திகள்
197 வைசேடிகன்
198 புத்தன்
199 நிகண்டாவாதி கூறுவ முத்தி - ஆசீவகன்
200-202 பாஞ்சராத்திர மதத்தின் பந்தமுத்திகள்
203 சாங்கியன் கூறும் பெத்த முத்திகள்
204–5 மாயாவாதி, பெத்தமுத்திகள்
206 வாமதக்ஷிண மார்க்கத்தவர் பிசாசபதத்தை அடைவர்
207 சமாவேசவாதி முதலிய ஐவர் கூறும் முத்திகள் பரமுத்தியன்று
208 உபசங்காரம்
வைதிக சைவசித்தாந்தாத்துவிதமுத்தியிலக்கணம்
சிவன் அருள் - சிவஞானம்
மாசு - மலத்தடை
உப்புநீருடன் நன்னீர் உற்றது
பரமானந்தம் - பரிபூரணம்
பரமானந்தானுபவம்
சிவமாகநிற்றல்
209 செறிவரிய - பொருந்துதற்கரிதாகிய

ஞானநிட்டை
சீவன்முத்தர்
சரிக்கும் சிவம்
சரித்தல் - சஞ்சரித்தல்
வாச்சியவாசக ஞானம்
ஞானனந்தானுபவம்
பிராரத்தசரீரம்
செயல் - கிருத்தியம்
பிராரத்தகன்மபேதம் - தீவிரம், வேகம், மந்தம், சுபுத்தம்.
வாதனை
அநன்னிய சாக்ஷாத்காரம்
சீவன்முத்தர் நிலை

210 சீவன்முத்தர்க்கு இதாகிதம் செய்தவர்பால் புண்ணிய பாபம் பொருந்தும்
வேதசிவாகம முதலியன சிவனுடைய வாக்கு
சீவன்முத்தர் தேகாந்தத்திலே பரமுத்தி அடைவர்

211 முத்திக்குரிய உபாயம் மூன்று: அவை பத்தி, பிரபத்தி, ஞானம்.
தசகாரியம்: தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி; ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி; சிவரூபம் சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம்.

212 பிரபத்திநெறி
பிரேரகம்

213 பதி பசு பாச உண்மையை ஐந்தெழுத்திலறிதல்
சிவம் முன்னுகச் செபித்தல்
அங்கநியாச கரநியாசங்கள்
மார்ச்சாலசிசு
மானசம்
வாச்சியார்த்தம்

214 பத்தி இருவகை: அந்தரங்க பக்தி, பாஹ்யபக்தி
அந்தரங்கபத்தி இன்னதென்பது
கன்மசாதாக்கியர்
சடாதாரம்
குருத்தானம்
சதி பதி

215 பாஹ்யபக்தி மார்க்கம்
உயிர்க்குறுதி பயப்பது
சிவபத்தியேயாகும்